க

கணபதி துணை.

பத்துப்பாட்டு மூலமும்

மதுரை யாசிரியர் டாரத்துவாசி

நச்சினார்க்கினியருரையும்.

இவை

சென்னை

பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்

பரிசோதித்து,

பலவகை ஆராய்ச்சிக குறிப்புக்களுடன்

சென்னை

கமர்ஷியல அச்சுக்கூடத்திற

பதிப்பிக்கப்பெற்றன.

1918.

(*Copy Right Registered.*)

இரண்டாம் பதிப்பு] [விலை ரூபா. 4-8-0

Formes 1 to 52 Printed at The Presidency Press
and
The remaining portion Printed at the Commercial Press.

இப்புத்தகத்திலடங்கியவை

பக்கம்.

க. இடம் விளங்காத மேற்கோள் முதலியவற்றின் அகராதி

உ. இரண்டாம் பதிப்பின் முகவுரை ... 1

ங. முதற்பதிப்பின் முகவுரை .. 5

ச. பாடினோர் வரலாறு .. 15

ஞ. பாடப்பட்டோர் வரலாறு ... 22

கூ. நச்சினார்க் கினியர் வரலாறு ... 29

எ. இப்பதிப்பில் வந்துள்ள நூற் பெயர்கள் முதலியவற்றின்

முதற் குறிப்பகராதி ... 35

அ. பத்துப்பாட்டு நச்சினார்க்கினியருரையடை - ஞ்ச

i திருமுரு காற்றுப்படை ... க

ii பொருநாற்றுப்படை ... ஞ்க

iii சிறுபாணாற்றுப்படை ... கூங

iv பெரும்பாணாற்றுப்படை ... கஉக

v முல்லைப்பாட்டு ... ககங

vi மதுரைக்காஞ்சி ... உகக

vii நெடுநல்வாடை ... ஙஉக

viii குறிஞ்சிப்பாட்டு ... ஙசு

ix பட்டினப்பாலை ... ஙஅக

x மலைபடுகடாம் .. சகள

கூ. மூல அரும்பதவிளக்க அகராதி ... ஞ0ஞ

க0. மூல அருந்தொடராகராதி ... ஞங

கக. உரையிற்கண்ட சொற்கள் முதலியவற்றின் அகராதிசக

கஉ. பிழையும் திருத்தமும். ஞஅங

இடம் விளங்காத மேற்கோள் முதலியவற்றின் அகராதி.

எண்கள் - பக்க எண்கள்.

அஞ்சுமுகக்தோன் றின், நிஅ.
அணியிழையார்க்கு, கஉஅ.
அமைச்சர்புரோகிதர், உகo.
அரிமாசுமந்தவமளி, கூஉ.
ஆடழிக்க, உசுக.
ஆற்றல்சால் கேள்வி, ஙஅo.
ஆறுசென்றவியர், கoசு.
ஓக்குநிரை, கஉஎ.
இடக்கண், சசஎ.
இரும்பனைக்கொண்டு, அஙு.
இன்னமொருகால், நிஎ.
உப்புறைப்ப, கசஅக.
உன்னேயொழிய, நிஎ.
எண்கோவை, உஉ.
ஏரியுமேற்றத்தினஞ்சும், கூஉ.
கிள்ளுகாண்பகலும், ககூஉ.
களமடக்க, உஎ.
காக்கக்கடவியரீ, நிஅ.
சூரவையென்பது, சடு.
குன்றமெறிந்ததுவுங், நிஎ.
குன்றமெறிந்தாய், நிஎ.
கோன்றைகருங்காலி, எஉ.
கோடேபத்தர், எஉ.
சார்பினுற்றேன்றுதி, நிசு.
சீறூணே செம்பஞ்சு, ஙசo.
சோல்லென்னும் பூம்போது, ககஙூ.
தூயிறுபட, ககக.
தென்னேயுன்னி, ஙசு.
தோமுருடும், ஙo.
நிரைதவுள்வெள்வாய், (பெரும்பொருள்விளக்கம்) உoo.
தூஉத்தீம்புகை, நிoஉ, நிoஙூ.
நக்கீரர்தாமுரைத்த, நிஅ.
கல்லம்பர்நல்ல (ஔவையார் பாடல்,) சக.
நால்விரீன் முடக்கி, சஎ.
நின்குற்றமில்லே, ஙஅo.
நெடுவரைச்சந்தன, கஉஅ.
பரங்குன்றிற், நிஅ.
பழுப்புடையிருகை, உசு. [டு), உஉ.
பெரியவரைவயிரங், (அரியவரை னேய்கணிளம்பகட்டின், ஙக.
மண்டமரட்ட, கஙo.
முச்சக்கரமும், அங, கஉ, சகசு.
முருகனே, நிஅ.
முருகுபொருநாறு, நிoசு.
வஞ்சியுங்காஞ்சியுந் (பன்னிரு படலம்,) உசக.
வண்டடைந்த, உகo.
வாடைகலிய, ஙசசு.
வீயாவீண்டும், சடுரு.
வீரவேல், நிஎ.

கணபதி துணை.

இரண்டாம் பதிப்பின்

முகவுரை.

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே மிடைந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வையை யேட்டிலே தவழ்ந்த பேதை
கெருப்பிலே கின்று சீற்றோர் நிணவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்"

பத்துப்பாட்டு, பாட்டெனவும் வழங்கும்; (தோல். செய். சூ. ரூ0 நேர்.) இவற்றுள், ஆற்றுப்படைகளாகவுள்ளவை ஐந்து; அவற்றுள் திருமுருகாற்றுப்படையானது திருமுறைகளிற் பதினோராந் திருமுறைப்பிரபந்த வரிசையிற்சேர்க்கப் பெற்றுள்ளது; இது புலவராற்றுப்படையெனவும் கூறப்படும்.

ஆற்றுப்படையென்பது, ஒருவர் ஒருகொடையாளியின்பால் தாம்பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் அங்கேசென்று தாம் பெற்றவையெல்லாம் பெறுமாறு வழிப்படுத்தல்; ஆறு-வழி; படை-படுத்தல். ஒவ்வொருவரும் இங்ஙனங்கூறுதற்கு உரியோராயினும், கூத்தர்முதலியோரே எதிர்வந்த வறியவர்களாகிய கூத்தர்முதலியவர்களுக்குக்கூறி அவர்களே வழிப்படுத்தியதாகச் செய்யுள் செய்தல் மரபு; தொல்காப்பியப்புறத்திணையியலில், ஈகை-ஆம் சூத்திரத்திலுள்ள, "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், ஆற்றிடைக் காட்சியுறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெருஆர்க் கறிவுறீஇச், சென்றுபய னெனிரச் சொன்ன பக்கமும்" என்பது இதற்குவிதி; 'ஆடுமாந்தரும் பாடற்பாணரும் கருவிப் பொருநரும் இவருட் பெண்பாலாராகிய விறலியுமென்னும் நாறபாலாரும் தாம்பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டுச்சென்று தாம் பெற்றவையெல்லாம் பெறுமாறு கூறியபாடும்' என்பது இதன்பொருள். இங்ஙனம் இயற்றப் பெற்றவைகள் கூத்தராற்றுப்படை, பாணராற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை எனப்பலவுள்ளன. பத்துப்பாட்டிலன்றி, பதிற்றுப்பத்து, புறநானூறு, புறப்பொருள்வெண்பாமாலைமுதலியவற்றிலும் பிற்காலத்து நூல்களாகிய கலம்பகங்களிலும் இவ்வாற்றுப்படைச்செய்யுட்கள் காணப்படுகின்றன. இவை தனிச்செய்யுளாகவே ஆக்கப்படும்.

பெரும்பாணிர்க்கையும்" (மதுரை. ஈசஉ; சிலப். நி: ஈஎ) என்பதனால், 'பெரும்பாணரென ஒருவகையினருளர்; அவரை ஆற்றுப்படுத்தியது பெரும்பாணாற்றுப்படை' எனவும் கூறுவதுமுண்டு.

"ஆசிரியப் பாட்டி னளவிற் கெல்லை, ஆரா மூரு மிழிபுமூன் றடியே" (தொல். செய்.) என்பதனுரையில், "ஆசிரியப்பாட்டின் அளவிற்கு எல்லையாவது சுருங்கினதாமூன்றடி; பெருமை ஆயிர மடியாக, இடைப்பட்டன எல்லா அடியானும் வரப்பெறும் எ.று. சுருங்கினபாட்டிற்கு உதாரணம் மேற் காட்டப்பட்டது; பெரிய பாட்டுப் பத்துப்பாட்டுள்ளும் சிலப்பதிகாரத்துள்ளும் மணிமேகலை யுள்ளும் கண்டுகொள்க; 'ஆசிரிய நடைத்தே' என்றதனால் வஞ்சிப் பாவிற்கும் ஆயிரமடி பெருமையாக்கிக்கொள்ளப்படும்" என இளம் பூரணரும், "ஆசிரியப்பாவின் பெருக்கத்திற்கு எல்லை ஆயிரமாகும்; சுருக்கத்திற்கு எல்லை மூன்றடியாகும் எ.று. உ-ம்; 'நீலமேனி... மூறையே' இது சுருக்கத்திற்கெல்லை: கூத்தராற்றுப்படை தலையளவிற்கு எல்லை; மதுரைக்காஞ்சியும் பட்டினப்பாலையுமொழிந்த பாட்டேழும்.....இடையளவிற்கு எல்லை; பாட்டினெல்லையெனைஞ்தும் அளவென்றதனால், அதனியற்றுகிய வஞ்சிக்கும் இவ்வாறே கொள்க...* பட்டினப்பாலை இடையளவிற்கெல்லை; மதுரைக்காஞ்சி தலையளவிற்கெல்லை" என நச்சினார்க்கினியரும் எழுதியிருப்பவை இங்கே அறியற்பாலன.

பட்டினப்பாலை வஞ்சிநெடும்பாட்டென்றுங் கூறப்படும்; இப் புத்தகத்தின் உஅக-ஆம் பக்கம்பார்க்க.

1889-ஆம் வருடத்தில், இந்நூலும் உரையும் முதன்முறை பதிப்பிக்கப்பெற்று நிறைவேறின; பின்பு, திருநெல்வேலியைச் சார்ந்த களக்காடென்னும் ஊரிலிருந்த ஸ்ரீமத் சாமிநாததேசிக ரவர்கள் உதவிய கையெழுத்துமூலப்பிரதியாலும், நாளடைவிற் கிடைத்த சில உரைப்பிரதிகளாலும், பலவகையான ஆராய்ச்சிக ளாலும் இவை சில சில திருத்தங்களையடைந்தன; முன்பு விளங் காமலிருந்தவற்றுட் சில சில விளங்கின.

அவற்றுடன், உரையாசிரியர்களால் இப்பாட்டுக்களிலிருந்து மேற்கோள்களாகஎடுத்தாளப்பட்டிருக்கும் பகுதிகளையும்இடங்களை யும் ஞாபகத்துக்குவந்த அளவு விளக்கியும், ஒத்த பகுதிகளைச் சங்கநூல்களிலிருந்தும் பிற்காலத்து நூல்களிலிருந்தும் மூல அடி யெண்களுடன் ஆங்காங்கு எடுத்துக்காட்டியும், திருமுருகாற்றுப் படைக்குமட்டும் வேறுரையொன்று கிடைத்தமையால அதிற் கண்ட விசேடமான வேறுபாடுள்ள பகுதிகளை அதனுரையில் அங்கங்கே கீழ்க்குறிப்பாகப் புலப்படுத்தியும், மூலத்திற்குரிய அடியெண்களை உரைப்பகுதியில் உரிய இடங்களில் அமைத்தும்; உரையிலுள்ள அருஞ்சொற்களுக்குப்பொருளும் விளக்கமும் எழு

* பத்துப்பாட்டினுள், உருஉ-ஆம் பாட்டுக்களில வஞ்சியடிகளை வர் திருப்பினும் உவது பாட்டில் அவ்வடிகள் சிலவாகவே வருதிருத்தல் பற்றி அவை கூறப்பட்டிலது போலும்.

பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ
விசும்பா றுக விரைசெலன் முன்னி
யுலகம் புகழ்ந்த வோங்குபர் விழுச்சீ
ரலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே யதா அன்று

[ரு.—திருவாவினன்குடி.]

சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
ஈசற விமைக்கு முருவினர் மானி
னுரிவை தைஇய வுன்கெடு மார்பி
னென்பெழுந் திபங்கு மியாக்கையர் கூ
பலவுடன் கழிந்த வுண்டிய நிகலொடு
செற்ற நீக்கிய மனத்தின ரியாவதுங்
கற்றே றறியா வறிவினர் கற்றோர்க்குக்
காம்வரம் பாகிய தலைமைபர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சிய ரிடும்பை
யாவது மறியா வியல்பினர் மேவரக
துனியில் காட்சி முனிவர் முற்பு
புகைமுகந் தன்ன மாசி றாவுடை
முகைவா யவிழ்ந்த தகைசூ ழாகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவி
னல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவல ரின்னரம் புளர

(வெ. 2.000); "கோல மார்மூ டிடியுமிழ் முழங்கென முழங்க" (சீவக. 2392); இடியார் பணிதுவைப்ப" (பு - வெ உழிஞை 27.)

122. "மணிகிற மஞ்ஞை யோங்கிய புட்கொடி" (பரி. 17); "பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய" (அகநா. 141); "மணிமயி லுயரிய மாரு வென்றிப், பிணிமுக வூர்தி யெண்செப் யோனும்" (புறநா. 56.)

125. "வரைவயிறு கிழித்த நிழதிகழ் செடுவேற், றிசழ்பூண் முருகன் தீம்புன லலவாய்", "இருமணி விளக்கி னலைபாயக் செருமிகுசேய்" (அகநா. 57, 266); "வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தி, னெடுவே ணிலைஇய காமர் வியன்றுறை" (புறநா. 55)

127. புரையென்பது மரபுபற்றிவருமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். உவம. சூ. 17. இள)

138. "புகைவிரிந் தன்ன பொங்குதுகில்" (புறநா. 398)

140 - 41: "குரலோர்த்துத் தொடுத்த சுவிர்புரிகரம்பு" (மலை. 23)

நோயின் றியன்ற யாக்கையர் மாவி
னவிர்தலிர் புரைஇ மேனிய ரவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திகலிய ரின்னகைப்
பருமந் தாங்கிய பணிர்தேந் தல்குன்
மாசின் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவொ டொடுங்கிய நூம்புடை வாலெயிற்
றழலென வுயிர்க்கு மஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோ
ளுமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனு
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரண் டேந்திய மருப்பி னெழினடைத்
தாழ்பெருந் தடக்கை யுபயர்த்த யாணை
யெருத்த மேறிய திருக்கிளர் செல்வனு
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலீஇய
வுலகங் காக்கு மொன்றுபுரி கொள்கை
பலர்புகழ் மூவருந் தலைவ ராக
வேமுறு ஞாலந் தன்னிற் றோன்றி
நாமரை பயந்த நாவி னுரிஞி
நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த், தாமரைப் பொகுட்டின்

143-4. "தேமா மேனிச் செல்வீ யாயம்" (திருப்பாண். 176)

145. கடுக்குமென்பது உருவுவமத்தின்கண்வருமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். உவம. சூ. 16. பேர்; இ - வி. சூ 642 - உரை)

150-51. "பூவைப்பூ மேனியான் பாம்புண் பறவைக் கொடி" (பு - வெ. பாடாண். 39)

151 - 2. "ஊர்தி வால்வெள் ளேறே திறந்த, சிர்கெழு கொடியு மவ்வே றென்ப" (புறநா. 1.)

153 - 4. "எண்ணர் மும்மதி லெய்த விமையா முக்கண்..... ..பிஞ்ஞக னே" (தே. திருக்கள்ளில், 3), "இமையாத முக்கண் மூவரிற் பெற்றவர்" (திருச்சிற். 14)

164 - 5. "நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த், தாமரைப் பொகுட்டின்" (பெரும்பாண். 463 - 4)

பகலிற் றோன்று மிகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதினெரு மூவரொ
டொன்பதிற் றிரட்டி யுயர்நிலே பெறீ இயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளிபிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
வுருமிடித் தன்ன குரலினர் விழுமிய
வுறுகுரு மருங்கிற்றம் பெறுமுறை கொண்மா
ரந்தரக் கொட்பினர் வந்துடன் காணக்
காவில் கொள்கை மடந்தையொடு சின்னெ
ளாவி னன்குடி யசைதலு முரிய னதனன்

[ச.—திருவேரகம்.]

றிருமூன் றெப்திய வியல்பினின் வழாஅ
திருவர்ச் சுட்டிய பல்வேறு கொல்குடி
யறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்
டாறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறிந்த முத்தீச் செல்வ
திருபிறப் பாளர் பொழுதறிந் தோவல
வொன்பது கொண்ட முன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர வுடீஇ
யுச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்
தாறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி
நாவியன் மருங்கி னவிலப் பாடி
விரையுறு நறுமல ரேந்திப் பரிதுவ
நேரகத் துறைதலு முரிய னதனன்று

---

169. "மீன்பூத்தன்னவான்கலம்"

170 - 71. "வளித்தலேஇயதீயும்" (புறநா. 2)

175. "தாவில்கொள்கைத் தக்தொழில்" (முருகு. 85)

177. "அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்" (தொல். புறத். 20)

181 - 2. "அந்தண ருவகட னிறுக்கு முத்தீ", "ஒன்றுபுரிந் தடங்கிய விருபிறப் பாளர், முத்தீ" (புறநா. 2,367)

185 "அட்டாளனே குட்டுவன், உசிகைக்கூப்பிய யெயினரென்றூர் போல் வன கடைச்சங்கதீதிற்கு ஆயினசொற்கள் இக்காலத்திற்கு ஆகாவாயின", (தொல். செய். சூ. 80. ந). விளக்குறிப்புமுற்று வினையெசசமாயிற்றென்ப தற்கு இவ்வடி மேற்கோள்; (நன் - வி. சூ. 351.)

[மு.—தன்றுதோறுடல்.]

பைங்கொடி நறைக்கா யிடைபிடுபு வேல
னம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளந் தெரிடு,ந்த கண்ணிய
னறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்விற் கொலீஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கட் டேறற்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை யயர
விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
யிணைத்த தோதை யிணைத்த கூந்தன
முடித்த குல்லை யிலையுடை நறும்பூச்
செங்கான் மராஅத்த வாலிண ரிடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகா ழல்குற் றிளைப்ப வுடீஇ

---

193. "நறுஞ்சாந் தணிந்த கேழ்கிள ரகலம்" (அகநா. 26)

195. "திருந்தமைவிளைந்த தேக்கட் டேறல்" (மலை. 522), "தும்பகம் பழுனிய நிம்பிழி" (பதிற். 81), "அம்பினைவிளைந்த தேக்கட்டேறல்" (அகநா. 368), "வாங்கமைப்பழுனியதேறல்" (புறநா. 129)

196 - 7. "தொண்டகப் பறைச்சீர் பெண்டிரொடு விரைஇ, மறிகிற்றாங் குஞ் சிறுகுடிப் பாக்கத்து" (அகநா. 118)

198 - 200. "தண்கயத் தமன்ற வொண்பூங் குவளை, யரும்பலேத்தியற் றிய சுரும்பார்கண்ணி, பின்னுப் புறந்தாழக் கொன்னே சூட்டி" (அகநா. 180), "கூருகிர் விடுத்ததோர் கோல மாலை" (சீவக. 1466)

199. "குண்டுசுனைபூத்த வண்டுபடுகண்ணி, நூலாக்கலிங்கம் வாலரைக் கொளீஇயென்பன, பூத்த பூவான் இயன்றகண்ணி நூலாதநூலான் இயன்ற கலிங்கமென ஒற்றுமைநயம்பற்றிச் செயப்படு பொருண்மேல் நின்றன" (தொல். வினை. சூ. 37. ந.) இவ்வடி, பெயரெச்சம் செய்வதாகி அறுபொருட் பெயரன்றிப் பிறபெயரெஞ்சுகின்றதற்கு மேற்கோள்; (நன் - வி. சூ. 340) "நண்டுகில், குண்டு ..... கண்ணி என்றுரற்போல ஒற்றுமை நயம்பற்றி, நுண்ணிய நூலாற் செய்த துகிலென்று கொள்க" (நச்சினை. 217 - உரை)

200. "இணைப்புறபிணையல்" (முருகு. 30)

202. "செங்கான் மராஅத்து" (நற். 148; ஐங்குறு. 381), "மராத்து வாஅன் மெல்லிணர்" (அகநா. 127; ஐங்குறு. 383.)

203. "சுரும்புணவிரிந்த பெருந்தண் கோதை" (அகநா. 131)

மயில்கண் டன்ன மடநடை மீகளிரொடு
செய்யன் சிலந்த வாடையன் செவ்வரைச்
செயலிதழ தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறுமபல் லியதகன்
நகரன் மஞ்ஞையன புகரில் சேவலங்
கொடிய னெடியன வெறுடியணி தோள
னரம்பார்த் தன்ன வின்குரற் நெருகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாபன்
மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்
முழவுமுழ் தடக்கையி னீயல வேருதி

---

205 "பீலிமஞ்ஞையினீயலி" (பெரும்பாண் 331), "நன்மாமயிலின் மென்மெல இயலி" (மது 608), "அணிமயிலனன வசைநடைக்கொடிச்சியை" (ஐங்குறு 258), "மணிமயிற்நெழில்" (பரி), "வருதல மயிலன மடநடை மலைமகள" (தே இடைமருது,), "மயிலெனப போநது" (திருக்கிற் 224), "நடைமயிலே" (பிர 42), "மயில் மகளிர" "கண்டன்ன" (இ-கோ சூ 86, 117 - உரை)

206 "பவழத தனன மேனித திகழொளிக, குனறியேய்க்கு முடுக்கை சேவலங கொடியோன" (குறுந் கடவுள), "உடையு மொலியலுஞ் செய்யை உருவமுருவததீ யொதலி" (பரி 19)

207 (முருகு 31 - ஆம அடிக்குறிப்பைப் பாரக), "ஒணபூம பிண்டி யொருகாது சென்றி" (குறிஞ் 119)

208 "கசினன கழலினன நேந்தா மாபினன" (அகநா 76)

209 "வல்லானென்னும வினைக்குறிப்புமுற்று வினையெசசமாய் நின்றது, எனனை? திருமுருகாற்றப்படையுள், குழலன் கோட்டன் குறும்பல்லியததனெனபதறகு குழலேயூதுதிக கோட்டைக குறிததப் பலலியததை ஒலிப்பித்தென முற்றுவினையை எசசமாக நசினாகினியா கூறியவுரையிற் கண்டு கொள்க" (தஞ்சை 8 - உரை)

210 - 11 "சேவலங்கொடியோன காபப" (குறுந கடவுள) "சேவற் கொடியன தொடியணிதோளன எனத் தொடர மொழியீற்றின விருதி பொருதியது" (இ - கோ சூ 117 - உரை)

212 "நரம்புமீ றிறவா தடனபுணாக தொனறிக, கடவ தறிந்த வின்கு ரல விறலியா" (மலை 535 - 6), "நரமபாத தன்ன தீஞ்குளியலே" (ஐங் குறு. 185) "

215 உறழெனபது மெயயுவமவருபாயவருமெனபதற்கு இவ்வடி மேற் கோள, (தொல். உவம. சூ. 15. பேர)

மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதொ ருடலு நின்றதன் பண்பே யதனா லன்று

[சூ.—பழமுதிர்சோலை.]

சிறுதினை மலரொடு விரைஇ மறிபறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
யூரூர் கொண்ட சீர்கெழு விழவினு
மார்வல ரேத்த மேவரு நிலையினும்
வேலன் றைஇய வெறியயர் களனுங்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பு

214-6. "மைந்த, ரெல்லாங் மகளிர் தலைக்கை தருஉந்து" (புற நா. 24.)

217. "குன்றுதொறு .. .. .. பண்பேயெனத் தொறுவென்பது தான் சார்ந்த மொழிப்பொருட்குப் பன்மையும் இடமாதலும் உணர்த்திநிற்கும்" (தொல். இடை. சூ. 48. சே. ந; இ - வி. சூ. 279 - உரை)

208 - 17. "முருகாற்றுப்படையுள், கச்சினன்கழலினன்..... பண்பே யென்புழி வந்த வினையெச்ச வினைக்குறிப்புமுற்றுக்கள் ஆக்கம்பெற்றுப் பொருளுணர்த்துங்கால், கச்சைக்கட்டிக் கழலையணிந்து கண்ணியைச்சூடிக் குழலூதுதற்கோட்டைக்குறித்துப் பல்லியங்களையெழுப்பித் தகரைப்பின்னிட்டு மயிலையேறிக் கொடியை யுயர்த்து வளர்ந்து தோளிலே தொடியையணிந்து துகிலையுடுத்து ஏந்திழை தழீஇத்தலைக்கைகொடுத்து ஆடலும் அவற்கு நிலைபின்ற பண்பைச் செய்தெனைச்சப்பொருளை உணர்த்தி நின்றவாறு காண்க" (தொல். எச்ச. சூ. 63. ந.)

218. "மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பிரீஇ" (குறுந். 263), "உரு வச் செந்தினை குருதியொடு தூஉய்" (அகநா. 22)

219. வாரணக்கொடி :(முருகு. 38,227). கோழியை வாரணமென்றற்கு இவ்வடிமேற்கோள்; (தொல். மரபு. சூ. 68 - உரை)

222. "வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்" (குறுந். 53) "களன் விழைத்து" (அகநா. 22), "வெறியயர் வெங்களத்து வேன்மகன்" (நாலடி. இளமை. 6), "வேலனர் வந்து வெறியாடும் வெங்களத்து" (சில. குன்ற.)

224. "துறைமிசை நினதிரு திருவடி தொடுகர்" (சில. குன்ற.) "துறை மிசை - நீர்த்துறையில்; நீர்த்துறையில் நின் திருவடியைச சூளுறுமவரென்க; யாறுங் குளனுமென்றராகலின்" (ஷி ஷி அரும்பத.)

225. கடம்பு மூருக்கக்கடவுளுக்கு இடம்: "கடம்பமர் நெடுவேள்" (பெரும்பாண். 75); "கடம்பமர்ந்து.....கடம்பம ரணிநிலே" (பரி. 19), "செல்வக்

மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினு
மாண்டலைக் கொடியொடு மண்ணி பமைவர
நெய்யோ டைபவி யப்பி பைதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொ ளுருவி னிரண்டுட னுடனிச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைய மாக்காட் கொழுவிடைக்
குருதி பொடு விகிர யூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
தழையற வறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பி னன்னகர் வாழ்த்தி
நறும்புகை பெடுத்துக் குழிஞ்சி பாடி
யிமிழிசை யருவியொ டின்னியங் கறங்க
வுருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகண்
முருகிய நிறுத்து முரணின நுட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு விபனக
ராடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்

கடம்பமர்ந்தான்" (ஐந். ஐம். 1); "செவ்வேள்..... ...மரா அத்தண் சாயை நின்றணங்கும்" (தஞ்சை. 132); "கடம்பமர் மன்றற் றெருங்கற் கந்தினைச் சிந்தை செய்வாம்" (திருவால. கடவுள். 18)

228. நெய்யோ டையவி யப்பி: "ஐயவி யப்பிய நெய்யணி நெடுவிலே" (நெ6. 86); "நெய்யோ டிமைக்கு மையவித் திரள்காழ்" (நற். 376); "ஐயவி யப்பிய நெய்யணி முச்சி" (மணி. 3. 134)

229. "குடந்தம் பட்டுச் சூழ்போந்து குழைந்து வழுத்தி" (கூர்ம. தக் கன்வேள்வி. 52.)

233. "குருதிச்செந்தினைபரப்பி" (முருகு. 242)

232-3. "மல்லன் மன்றத்து மதவிடை கெண்டி" (பெரும்பாண். 143); "விடையும் வீழ்மின்" (புறநா. 262)

234. "அறிதல் வேண்டுமெனப் பல்பிரப் பிரீஇ" (அகநா. 242)

232-4. "பலிகொடுத் தருவச் செந்தினை குருதியொடு தூஉய்" (அகநா. 22); "கொழுவி டைக்கறை விராவிய பலிக்குறை நிரப்பி, வழுவில் பல்பிரப் பிரீஇவெறியாட்டயர் மன்றத்து" (தணிகை. காடு. 46)

245. "வெறியயர் வியன்களம் பெலிய வேத்தி" (அகநா. 242.)

கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி
யோடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
வாண்டாண் டுறைதலுள் மறிந்த வாறே
யாண்டாண் டாயினு மாக காண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்ஞீ
பைவரு ளொருவ னங்கை யேற்ப
வறுவர் பயந்த வாறமர் செல்வ
வால்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகண் மகனே மாற்றேர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ

236-45. "களங்கண் கிழைத்துக் கண்ணி சூட்டி, வளைகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத், துருவச செந்தினை குருதியொடு தூஉய், முருகாற்றுப் படுத்த வுருகெழு நடுகாள்" (அகநா. 22.)

247. பிணிமுகம் - முருகக்கடவுளின்மார்தியானிய யானை: "சேயுயர் பிணிமுக மூர்ந்து" (பரி. 5); "பிணிமுக வூர்தி யொண்செய் யோனும்" (புறநா. 56.); "பிணிமுக மஞ்ஞை செருமுகத் தேந்திய, மூவிரு திருமுகத் தொருவே லவற்கு" (கல். 7. மயிலேறும்.)

246-7. "தடும்புசி ரின்னியங் கறங்கக் கைதொழு, துருகெழு சிறப்பின் முருகு மனைத்தரீஇக், கடம்புங் களிறும் பாடி" (அகநா. 138)

248. வேண்டுநர் வேண்டியாங் கெய்தல்: "வேண்டிய வேண்டியாங் கெய்தலால்" (குறள், 265); "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்", "மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் நீயே" (தேத. மறைசை. ஐயாறு)

251. "முகனமர்ந் தின்சொலனுக" (குறள, 92) 'முகமலர்ந் தேத்தி' எனறும் பாடம்.

253. "நிவந்தோங் கிமயத்து நீலப் பைஞ்ஞீ" (பரி. 5.)

256. ஆல்கெழு கடவுட் புதல்வ: "ஆலமர் செல்வ னணிசால் பெருவிறல்" (கலி. 81); "ஆலமர் செல்வன் புதல்வன்" (சில. குன்ற.) "ஆலமர் செல்வன் மகன்" (மணி. 3. 144).

257. மலைமகண்மகனே: "மலைமகண் மகனே" (சில. குன்ற.) "மலை மகண் மகனே மாற்றேர் கூற்றே யென்றற்றொடக்கத்தன காரணக்குறியாக் கந் தொடர்ந்தன" (நன் - வி. சூ. 275)

258. கொற்றவை சிறுவ: "சேய் பயந்த மாமோட்டுத், தணங்கையஞ் செல்விக்கு" (பெரும்பாண். 158 - 9)

விழையணி சிறப்பிற் பழஞ்சிமோள் குழவி
வானோர் வணங்குவிற் றூணைத் தலைஇ
மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருகளிறன் மிள்ள
வந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலி
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றுக் கொற்றத்து
வீண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
யரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்து மிசைபே ராள
வலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்று டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேளள்
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசி லெனப்பல
யானறி யளவையி னேத்தி யானது
நின்னளந் தறிதன் மன்னுயிர்க் கருமையி
னின்னடி யுள்ளி வந்தனெ னின்னெடு
புரையுந ரில்லாப் புலமை போயெனக்

---

261. புலவ : "புலமையோய்" (முருகு. 280)

267. "வீண்பொரு நெடுவரைப் பரிதியின்" (முருகு. 299). குறிஞ்சிக் கிழவ : "குறிஞ்சிக் கிழவனென் றேதுண் குவலயமே" (கந்தாலங்காரம், 5.)

269. பெரும்பெயர் : "பெரும்பெய ரியவுள்" (முருகு. 274); "பெரும் பெயர்ப் பிரமன்" (தேவா. 207), "பெரும்பெயர்க் கடவுளிற் கண்டு" (சிவ-போ. சிறப்பு.), "பெரும்பெய ரேபெய ராக வந்த, வொருவாய்மை தன்னே கினையினு முள்ள முருகுவதே" (பஞ்சாக்கா. 5)

271. அலந்து, இடுக்கண்பட்டென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (நற்றை. 352 - உரை)

272. "மண்டமர் பலகடந்து" (கலி. 1.)

275. "சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேற், சீர்மிகு முருகன்" (அகநா. 59)

279 - 80. நின்னெடு புரையுந ரில்லாப் புலமையோய் : "நின்னலார் பிற நின்றி நீயே யானுய்" (நே. தனித்திருத்தாண்டகம், 7.)

குறித்தது மொழியா வளவையிற் குறித்தூடன்
வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்
சாறபர் களத்து வீ றுபெறத் தோன்றி
யளியன் றானே முதுவா யிரவலன்
வன்தோன் பெருமகின் வண்புகழ் நயந்தென
னினியவு நல்லவு நனிபல வேத்தித்
தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்றோய் நிவப்பிற் றான்வந் தெய்தி
யணங்குசா லுயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் தளிநலங் காட்டி
யஞ்ச லோம்புமதி யறிவனின் வரவென
வன்புடை நன்மொழி யளீஇ விளிவின்
றிருணிற முந்நீர் வளீஇய வுலகத்
தொருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசி னல்குமதி பலவுடன்

281. "நீலெல மொழியா வளவை" (சிறுபாண். 235)

283. "சாறயர் களத்தின் வீறுபெறத் தோன்றி" (சிலப். 6. 162)

282 - 3. "சாறுகொண்ட களம்போல, வேறுவேறு பொலிவு தோன்ற" (புறநா. 22).

284. "முதுவா யிரவல" (சிறுபாண். 40.), "செல்லு முதுவா யிரவல" (பதிற். 66.)

290. "பூவந்த வுண்கண் பொறுக்கென்று - மேலித்தன், மூவா வின லலங் காட்டி" (சிலப். 9. 34 - 5.); "அறமுகமில்லே" என்றற் றொடக்கத் திற்கு இவ்வடி உதாரணமாகக் காட்டப்பெற்றது; (ஷி குன்ற. அரும்பத)

292. அன்புடை நன்மொழி: "ஈரான்மொழி", "ஆர்வ நன்மொழி" (சிறுபாண். 93, 99)

294. 'ஒருநீயாக' என்றும் பாடம்.

294 - 5. இவ்வடிகள், "இன்மை யுரைத்தாற் கதுநிறைக்க லாற்றுக் காற், றன்மெய் துறப்பான் மலே" என்பதற்கு மேற்கோள்; (கலி. 43 - உரை.)

63 - 295. "முருகாற்றுப்படையுள், புலம்பிரிக்துறையும் சேவடி யெனக் கந்தழிகூறி நின்னெஞ்சத்து இன்னசை வாய்ப்பப் பெறுதியெனவும் கூறி அவனுறையுமிடங்களுங்கூறி ஆண்டுச் சென்றால் .அவன் விழுமிய பெற லரும் பரிசில் நல்குமெனவுங்கூறி ஆண்டுத் தான் பெற்ற பெருவளம் அவனும் பெறக் கூறியவாறு காண்க. இதனேப் புலவாற்றுப் படையென்ற உய்த்துண ர்ந்து பெயர்கூறவார்க்கு முருகாற்றுப்படையென்னும் பெயரன்றி அப்பெயர் வழங்காமையான் மறுக்க. இனி, முருகாற்றுப்படையென்பதற்கு முருகன்பால் வீடுபெறுதற்குச் சமைந்தானேர் இரவலனே ஆற்றுப்படுத்ததென்பது பொரு ளாகக்கொள்க" (தொல். புறத். சூ. 36. ந.)

வேறுபஃ றுகிலி னுடங்கி யகில்சமந்
தார முழுமுத னொருட்டி வேரற்
பூவுடை யலங்குசினை புலம்ப வோங்கிண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றெடுத்த
தண்கம ழுலரிரும் பிதைய நண்பல
வாகினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமல ருதிர பூகமொடு
மாமலர் முசுக்கலை பணிப்பப் பூநுத
லிரும்பிடி குளிர்ப்பு வீசிப் பெருங்களிற்று
முதுதுடை வான்கோடு தழீஇ இத தத்துற்று
ணன்பொன் மணிகிளங் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுத றுமியத் தாழை
யிளநீர் விழுக்குலை யுதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை யிரியக் கேழலொ
டிரும்பணை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயி ரியாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

---

296. அருவிக்குத் துகில் உவமை: "அறுவைத, தாவிரி கடுப்பத துவன்றி மீமிசைத், தண்பல விழிதரு மருவி" (புறநா. 154)

297. ஆமுழுமுதல் : "வாழை முழுமுதல்" (முருகு. 307)

300. அலர்தல் - பரத்தலென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தத்தை. 269 - உரை)

304 - 5. "யானை, முத்துடை மருப்பின்" (மலை. 517 - 8)

309. "கறிக் கருந்துணர் குருப்ப" (திருவிளை. காடு. 35)

310. முருகு. 205 - ஆம் அடிக்குறிப்பைப்பார்க்க.

312 - 3. "இரும்பணை வெளிற்றின் புனசா யெனமலி மயிரி ஞக்கைக், கரும்பெருங் கரடி" (விநாயக. காடு. 26.)

315. சிலைத்தல், இசைப்பொருளே உணர்த்துமென்பதற்கு இவ்வடி மேற்கோள் (தொல். உரி. சூ. 62 - சே. உ; இ - வி. சூ. 285 - உரை)

316. "இழுமென்று வந்திங் கிழிபு மலையருவி" (சில. குன்ற.), "இழுமெ ஞெதையி னிழிதரு மருவி" (ஆசாக்கா. காடு. 14), "வெள்ளருவி யிழுமெ ஞெதையும்" (சூளாமணி. காடு. 46)

317. மலைகிழவோனே: "ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே" (பெரும்பாண். 500), "சிலைபெறு தணிகை மலைகிழ வோனே" (தணிகைபு. 417.) பெயரிடத்து னகர வீற்றயலகரம் ஒகரமாமென்பதற்கு இவ்வடி மேற்கோள் (இ. வி. சூ. 326 - உரை; நன் - வி. சூ. 353.)

இதன்பொருள்.

க.—திருப்பரங்குன்றம்.

1. உலகமென்பதுமுதற் கணவன் (6) என்னுந்தனையும் ஒருதொடர்.

1. உலகம் உவப்ப— வோன்மாக்கள் உவப்ப,

உலகமென்பது பலபொருளொருசொல்லாய் நிலத்தையும் உயிர்களையும் ஒழுக்கத்தையும் உணர்த்துநிற்குமேனும் சான்று உவப்பவென்றதனுன், மண்ணிடத்துவாழும் வோன்மாக்களே உணர்த்திற்று.

[வலனேர்பு திரிதரு:] ஏர்பு வலன் திரிதரு— எழுந்து †மகாமேருவை வலமகத்திரிதலேச்செய்யும்,

2. ‡பலர் புகழ் ஞாயிறு— எல்லாச்சமயத்தாரும் புகழும் ஞாயிற்றை,

கடற் கண்டாங்கு - கடலிடத்தே கண்டாற்போல,

இது வினையெச்சவுவமம்; §" விரவியும் வரூஉ மரபின வென்ப" என்பதனுல் தொழிலுவமமும் வண்ணவுவமமும் பற்றிவந்தது; என்னை? ஞாயிறு இருளைக்கெடுக்குமாறுபோலத் தன்னை மனத்தால் நோக்குவார்க்கு மாயையைக் கெடுத்தலிற் றொழிலுவமமும், தன்னைக் கட்புலனுல் நோக்குவார்க்குக் ¶கடலிற் பசுமையும் ஞாயிற்றின் செம்மையும்போல மயிலிற் பசுமையும் திருமேனிச செம்மையும் தோன்றலின் வண்ணவுவமமும் கொள்ளக்கிடந்தமை காண்க.

3. [ஓவற விமைக்குஞ் சேண்விளங் கலிசொனி :]

‖ஓ அற இமைக்கும் அவிர் ஒளி— இருவகையிற்திரியங்களும் தாம் செல்லுதற்குரிய பொருள்கண்மேற் சென்றுதங்குதல் இல்லையாக இமைத்துப் பார்த்தற்குக் காரணமாகும், விளங்குகின்ற ஒளி,

ஓ என்பது ஓரெழுத்தொருமொழியாகிய தொழிற்பெயர். இமைத்தல் - கண்களின் இதழ்களிரண்டினையும் குவித்தல்; அது **" நுதல நிமையா நாட்டம்" என்பதனுனுணர்க.

சேண் விளங்கு ஒளி—கட்புலனுல்நோக்குவார் கண்ணிடங்கொல்லாவற்றினும் சென்றுவிளங்குகின்ற ஒளியினையும்,

---

( ) இத்த இயையிலிசைக்குறிக்குப்பட்ட எண்ணும், இப்படியே பின்னர் ஆங்காங்குப் பதிப்பிக்கப்படும் எண்களும் தத்தம் முன்புள்ள மொழிகளையேனும், அம்மொழிகளைப் பொருளாகப் பெற்ற மொழிகளையேனுமுடைய மூலத்தின் வரியைப் புலப்படுத்தும்.

† "ஞாயிறுபோற்றுதும் ..... மேருவலந்திரிதலான்" (சில. மங்கல)

‡ "பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதை" (சிவ - போ. சிறப்பு.)

§ தொல்காப்பியம், உவமவியல், 2.

¶ "மாக்கட னிவந்தெழுதரு, செஞ்ஞா யிற்றுக் கவினே" (புறநா. 4), "உதயகிரியிடை கடவுமா கதவருண குலதரக வுபலளித கனகாத சதகோடி சூரியர்கள், உதயமென வதிகவித கலபக மயிலின்மிசை யுகமுடிவி னிருளகல வொரு சோதி வீசுவதும்" (திருவதுபட்டி, ஸ்ரீபாத.)

‖ ஓவற - ஒழிவற. இமைக்கும் - லிட்டுவினங்கும். அவிர்தல் - பாடஞ் செய்தல் (சேனாவரை.)

அகநானூறு, கடவுள்வாழ்த்து.

உலப்ப எழுந்து நிரியும் ஞாயிற்றைக் கடற்கண்டாங்கு அவிர்கின்ற ஒளி யெனத் தொழிலுவமம் கொள்ளுங்கால் வினைமுடிக்க. இனி உலப்ப எழுந்து நிரியுஞாயிற்றைக் கடற்கண்டாங்குச் சேண்விளங்கொளியென வண்ணவுவ மங் கொள்ளீங்கால் வினைமுடிக்க.

4. உறார் தாங்கிய *மதன் உடை நோன் முன்—தன்னைச்சேர்ந்தவர்கள் நீவினையைப்போக்கி அவரைத்தாங்கிய, அறியாமையை உடைத்தற்குக் காரண மாகிய வலிவினையுடையி தாளினையும்,

5. செறார் தேய்த்த †செல் உறழ் தட கை — அழித்தற்குரியாரை அழித்த இடியையொறுப்பட்ட பெருமையினையுடைய கையினையும்,

6. மறு இல் கற்பின் வாள் நுதல் கணவன்—மறக்கற்பில்லாத ‡அறத்தற் பினையும் ஒளிபொருந்திய நுதலினையுமுடைய இந்திரன்மகள் தெய்வயானையார் கணவன் ;

இப்பெயரை முற்கூறினார், படைத்தற்குங் காத்தற்கும் உரிமைதோன்ற.

கணவனென்பது ஈண்டு முருகனென்னுந் தனியாய்நின்றது.

ஒளியினையும் (3), தாளினையும் (4), கையினையும் (5) உடைய கணவ னென முடிக்க.

7. கார்கோளென்பதுமுதல் மார்பினன் (11) என்னுந்தனையும் ஒரு தொடர்.

7 கார்கோள் முகந்த கமஞ்சூல் மா மழை—கடலிலே முகந்தநீரானுண் டாகிய நிறைவினையுடைத்தாகிய சூலினையுடைய பெருமையையுடைய மழை,

கார் முகக்கப்படுதலிற் கடல் கார்கோளென்று பெயர்பெற்றது ; ஆகுபெயர்.

8. §வாள் போழ் விசும்பில் வள் உறை திதிறி—திங்களும் ஞாயிறும் இரு நீக்கும் ஆகாயத்தே பெருமையையுடைய துளியை முற்படச்சிதறி,

வான், ஆகுபெயர்.

9. தலைப்பெயல் ¶தலையிய தண் நறு கானத்து — கார்காலத்து முதற் பெயலைச் சொரிந்த தண்ணிய நறிய காட்டிடத்து,

10. இருள் பட||பொதுளிய பராரை மராத்து — இருட்சியுண்டாகத் தழைத்த பரிய அடியினையுடைய **செங்கடம்பினது,

பராரை, பண்புத்தொகைச்சந் திருமுடிபு வேற்றுமையென்றுணர்க.

11. ††உருள் பூ தண் தார் புரளும் மார்பினன்— தேருருள்போலும் பூவாற்செய்யப்பட்ட குளிர்ந்த மாலையையும் மார்பினையுடையவன் ;

---

* மதனுடை - அழகுடைய (வேறுரை)

† செல்உறழ் - மேகத்தைஒத்த (வேறுரை)

‡ அருட்கற்பென்றும் பிரதிவேறுபாடுண்டு.

§ வாள் போழ்-திங்களும் ஞாயிறும் அளவிடப்பட்டாற்போன்ற (வேறுரை.)

¶ தலையிய - தழைத்த (வேறுரை)

|| பொதுளிய - நெருங்கிய (வேறுரை)

** வெண்கடம்பினதென்றும் பிரதிவேறுபாடுண்டு.

†† உருள்பூ - தேருருள்போன்ற வட்டப்பூ (வேறுரை.)

உருன்பூ உவமத்தொகையாகலின் உருன்பூ உருட்பூவென உம்மஞ்சிமுடிபெய்தும்; இனி உருளும்பூ உருண்டபூவென வினைத்தொகையுமாம்.

மழை செதறித் தலைஇய காளத்து மாஅத்துத் தார் புரளும் மார்பினனென முடிக்க.

இது போகத்திற்குரிய தார்; இனி முற்கூறினர், வாணுதல்கணவன் (6) என்றதனாலோகி.

12. மால்வரை என்பதுமுதற் சென்னியன் (44) என்னுந்தனையும் ஒருதொடர்.

12. மால் வரை நிவந்த சேண் உயர் வெம்பில்—பெருமையையுடைய ஓங்கில்வளர்ந்த தேவருலகளவாகச் செல்வதுயர்ந்த மலையில்,

வரைகளே யுடைமையின், வரையாயிற்று; இஃது ஆகுபெயர்;* "பெரிய வரைவயிரங் கொண்டு" என்றார் பிறரும். இனித் திருமால்போலும் குவடுகளோங்கிய வெற்பென்றுமாம்; †"மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்" என்றார் பிறரும்.

13. இன்கிணி ‡கவைஇய ஒள் செஞ்சீறடி—சிறுசதங்கைசூழ்ந்த ஒள்ளிதாகிய வெந்த சிறிய அடியினையும்,

14. கனை கால்—நிரண்ட காலினையும்,

வாங்கிய நுசுப்பின்—வினைந்து நுடங்கிய இடையினையும்,

பணை தோள்—பெருமைமையுடைய தோளினையும்,

ஞாங்கில்போலும் தோனென்றுமாம்.

15. கோபத்து அன்ன தோயா பூ துகில் — இந்திரகோபத்தையொத்த நிறம்பிடியாத இயல்பான செவ்பாகிய பூத்தொழிலினையுடைய துகிலினையும்,

தெய்வத்தின் ஆணையால் தானே வெந்திருத்தலின், தோயாத்துகிலென்றார்.

16. பல் காசு நிரைத்த செல் காழ் அல்குல் — பலமணிகள்கோத்த எழுவடமாகிய மேகலையையணிந்த அல்குலினையும்,

அஃது, §" எண்கோவை காஞ்சி யெழுகோவை மேகலை - பண்கொள் கலாபம் பதினொ - கண்கொள் - பருமம் பதினெட்டு முப்பத் திரண்டு - விரிசிகை யென்றுணரற் பாற்று" ¶என்பதனுணர்க.

17. கை புனைந்து இயற்ற கவின் பெறு ||வனப்பின்—ஒருவர் கையாற் சிதப்பித்துப் பிறப்பியாத அழகைத் தமக்கு இயல்பாகப்பெறுகின்ற அழகினையும்,

---

* இஃது "அரியவரைகீண்டு" என்னும் வெண்பாவிலுள்ளது.

† நற்றிணை, 32.

‡ கவைஇய - கட்டிய (வேறுரை)

§ " எண்கோவை மேகலை காஞ்சி யிருகோவை, பண்கொள் கலாபமிரு பத்தொன்று - கண்கொள் - பருமம் பதினைஞ்சு முப்பத் திரண்டு - விரிசிகை யென்றுணரற் பாற்று" எனவும் பாடம்.

¶ இத்தச்செய்யுளின்பொருண்முறை திவாகரம், பிங்கலம், சூடாமணி என்பவற்றிலும், இதன் பாடபேதச்செய்யுளின்பொருண்முறை "எண்ணிரண்டிராட்டி" (திருவிளை. திருமண. 158) என்னும் செய்யுளிலும் காணப்படுகின்றன.

|| வனப்பு - இளமைநிறம் (வேறுரை)

என்றது : மானிடமகளிர்க்குத் தாய்பலரும் *செய்து* பிறப்பிக்கும் அழகன்றி இவர் தெய்வத்தன்மையான் இயல்பாகப்பெற்ற அழகினையுடைய ரென்ற வாறு.

18. *நாவலொடு பெயரிய பொலம் புனை அவிர் இழை—சாம்பூநதமென்னு நாவலோடுத்துப் பெயர்பெற்ற பொன்னால் இருமித்து வினங்குகின்ற பூணினையும்,

பொலம், †"பொன்னென் கிளவி" என்பதனுன்முடிக்க.

19. சேண் இகந்து விளங்கும் செயிர் தீர் மேனி—சேய்நிலத்தைக் கடந்து விளங்குகின்ற குற்றந்தீர்ந்த நிறத்தினையுமுடைய சூரமகளிர் (41) என்க.

20. துணையோர் ஆய்ந்த இணை ஈர் ஒதி—ஆயத்தார் ஒன்றென்று ஆராய்ந்த கடையொத்த நெய்ப்பினையுடைய மயிரிலே,

21-2. [செங்கால் வெட்சிச் சிறிய ழிடையீடு, பைந்தாட் குவளைத் தூவி தழ் இள்ளி :] செங்கால் வெட்சி சிறு இதழ் இடை பைந்தாள் குவளை தூ இதழ் இள்ளி இடுபு—செவ்வகாலையுடைய வெட்சியுடைய சிறிய பூக்களை விடுபூவாகத் தூவி அதற்குருடுவே பசுத்த தண்டினையுடைய குவளையினது தூய இதழ்களைக் கிள்ளியிட்டு,

23. தெய்வத்தியொடு ‡வலம்புரி வயின் வைத்து—சீதேவியென்னும் தலைக்கோலத்தடனே வலம்புரிவடிவாகச் செய்த தலைக்கோலத்தையும் வைத்தற்குரிய இடத்தே வைத்து,

24-5. §நிலகம் தைஇய தேம் கமழ் நிரு நுதல் மகரப்பகுவாய் தாழ மண்ணுறுத்து—நிலகமிட்ட மணமாறுகின்ற அழகினையுடைய நெற்றியின்கண்ணே சுரும்வினது அங்காந்த வாயாகப்பண்ணின தலைக்கோலம் தங்கப்பண்ணி,

மகரப்பகுவாய், ஆகுபெயர். மண்ணுறுத்தலை, ¶"ஆவுதி மண்ணி" என்றாற்போலக்கொள்க. இனி மண்ணுறுத்துத் துவராமுடித்தவென மேலேகூட்டி, முழி முடித்தவென்னுமாம்.

26-7. துவர முடித்த துகில் அறும் முச்சி பெரு தண் சண்பகம் ||இ—வேண்டுவனகூட்டி முற்றமுடித்த குற்றமறுகின்ற கொண்டையிலே சிய குளிர்ந்த சண்பகப்பூவைச் செருகி,

27-8. கரு தகடு ||உளை பூ மருங்கின் ஒள் இணர் அட்டி—காரிய புறவி ழினையும் மேலில் தும்பினையுமுடைய பூக்களையுடைய மருங்கினது ஒள்ளிய ற்கொத்துக்களை அதன் மேலேயிட்டு,

இது முதலாகிய பொருட்கேற்ற அடையடுத்துநின்றது.

---

* நாவற்பழத்துச்சாறுபட்டுப் பேதமானபொன்னும் (வேறுரை.)

† தொல்காப்பியம், புள்ளிமயங்கியல், 61.

‡ வலம்புரி-வலம்புரிச்சங்கின்றமுத்தின்மாலை,ராஜியாவட்டப்பூ(வேறுரை.)

§ பொட்டு ஊன்றின (வேறுரை.)

¶ மதுரைக்காஞ்சி, 494.

|| உளைப்பூ - விரிக்கப்பூ (வேறுரை). "உளைப்பூ மரீஇத்து" (ஐங். 7)

29-30. இனை கவினின்று எழுதரு கீழ்நீர் செவ்வரும்பு இணைப்பு உற் றினை யலி னினை—பச்சென்ற அரும்புகளினின்றும் மேலேமேலேபோந்து அழகுபெற்றுத் தோன்றுகின்ற நீர்க்கீழ் நின்ற சிவந்த அரும்பைக் கட்டுத்தலுறுகின்ற மாலையை வினையவைத்து,

கவினென்னும் பண்படியாக்கி கவினென்னும் தோழில் பிறந்தது. கீழ்நீர், நீர்க்கீழென்னும் இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ.

அது மிகச்சிவத்தலின் ஒப்பனைக்குக் கொள்வர்.

30-32. [தணிந்தக, வண்காது தினை நிறைந்த பிண்டி யொண்டளிர், நண்பூ ணுகந் தினைப்ப:] வள் காது தினை நிறைந்த பிண்டி ஒள் தளிர் நண் பூண் ணுகம் தினைப்ப—வளவிய காதிலே தம்மில் ஒத்தற்குப் பொருந்த இட்டு நிறைந்த பிண்டியினது ஒள்ளிய தளிர் நுண்ணிய பூணையுடைய மார்பிடத்தே அசையாநிற்க,

32-5. நிண் காழ் நறு குறடு உரிஞ்சிய பூ கேழ் தேய்வை தே கமழ் மருதம் இணர் கடுப்ப கோங்கின் குவி முகிழ் இளமூலை கொட்டி—நிண்ணிய வயிரத்தையுடைய நறிய சந்தனத்தையுரைத்த பொலிவினையுடைய நிறத்தை யுடைத்தாகிய குழம்பை மணக்காறுகின்ற மருதம்பூவை அப்பினலொப்பக் கோங் கினது குவிந்த அரும்பையொத்த இளமூலையிலே யப்பி,

மருதினர், நிறத்திற்குவமம்.

35-6. விரி மலர் வேங்கை நுண் தாது அப்பி—அவ்வீரம்புலர்வதற்கு முன் னே விரிந்த மலரையுடைய வேங்கைப்பூவினது நுண்ணிய தாதையும் அதன் மேலே அப்பி,

36-7. [காண்வர, வெள்ளிற் குறுமுறி னின்ளநு தெறியா·] வெள்ளில் குறு முறி னின்ளநு காண் வர *தெறியா—வினவினது சிறிய தளிரைக்கிள்ளி அழகு வர ஒருவர்மேல் ஒருவர் தெறித்துத் தப்பாமற் பட்டபொழுது,

38-9. [கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி, வாழிய பெரிதென் றேத்தி:] வென்று அடு விறல் கோழி ஓங்கிய கொடி பெரிது வாழிய என்று எத்தி—வஞ்சியாது எதிர்நின்று அடுகின்ற †வெற்றியையுடைய கோழிமேலாய் நின்றகொடி நெடுங்காலம் வாழ்வதாகவென்று வாழ்த்தி,

39-41. [பலருடன், சிர்திகழ் நிலம்பகஞ் நிலம்பப் பாடிக், சூர மகளி ராடுஞ் சோலை:] சூர் அரமகளிர் †பலருடன் சீர் திகழ் நிலம்பகம் நிலம்ப பாடி ஆடும் சோலை — கொடுமையையுடைய தெய்வமகளிர்பலருங்கூடிச சீர்மை விளங்குகின்ற மலையிடமெல்லாம் ஆரவாரிக்கப் பாடி ஆடும் சோலையினையுடைய,

42. ‡மஃறியும் அறியா மரன் பயில் அடுக்கத்து—மரமேறுதற்றொழிலிற் சிறப்புடைய மந்திகளும் மரங்களினீட்டத்தால் எறியறியாத மரமெருங்கின பக்க மலையிடத்து நின்ற,

உம்மை, சிறப்பும்மை.

---

* பின்னையார் சிபாதங்களே உள்ளித்தெறித்து (வேறுரை.)

† பலவுடன் - பலதோத்திரங்களினுலே (வேறுரை.)

‡ மந்தி - அருக்கன் (வேறுரை.)

43-4. சுரும்பும் மூதா சுடர் பூ காந்தள் பெரு தண் *கண்ணி நிலைஇ தசென்னியன்—தான் விரும்புதலிற் சுரும்பினமும் மொய்யாத பெருப்புப்போலும் பூவினையுடைய செங்காந்தளினது பெரியகுளிர்ந்த கண்ணியைச் சூடிய திரு முடியையுடையவன்;

அடியினையும் (13) காலினையும் நுசுப்பினையும் தோளினையும் (14) தலினையும் (15) அல்குலினையும் (16) வனப்பினையும் (17) இழையினையும் (18) மேனியினையும் (19) உடைய சூரமகளிர் (41) பலருங்கூடி (39) இடையிட்டு (21) வைத்துத் (23) தாழப்பண்ணிச் (25) சீரி (27) இரட்டி (28) வினைஇத் (30) தினையாற்றக் (32) கொட்டி (35) அப்பித் (36) தெறித்து (37) வத்திப் (39) பாடி (40) ஆடுஞ்சோலையையுடைய (41) வெற்பில் (12) அடுக்கத்துக் (42) காந்தட் கண்ணிய ர்னியனென முடிக்க.

இதனுள் அடையாளப்பூக் கூறினர். இது †"வெறியாட் டயர்ந்த காந்தளும்" என்பதனுளுணர்க.

"‡ அகன்றபொருள் கிடப்பினு மணுகிய நிலையினு, மியன்றபொருண் முடியக் தந்தன ருணர்த்தன், மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்" என்னும் §மாட்டிலக்கணத்தான் இப்பாட்டுக்கள்பத்துஞ் செய்தார்களாதலின் இவ் வாறே மாட்டிமுடித்தல் யாண்டும் வருமென்றுணர்க.

45. பார் என்பதுமுதற் சேய் (61) என்னுந்தினையும் ஒருதொடர்.

45. || பார் முதிர் பனி கடல் கலங்க உள் புக்கு—பாராகிய நிலம் முற்றுப் பெற்ற குளிர்ச்சியையுடைய கடல் தன் நிலைகுலையும்படி உள்ளேசென்று,

பார் - பாறை; மண்ணிடத்தே முதிர்ந்த கடலென்றுமாம்.

46. சூர் முதல் தடிந்த சுடர் இலை நெடு வேல்—சூரபன்மாவாகிய தலை வனைக்கொன்ற எரிகின்ற இலைத்தொழிலையுடைய நெடிய வேலாலே,

47. உலறிய கதுப்பின்—காய்ந்த மயிரினையும்,

பிறழ் பல்—நிரை ஒவ்வாத பல்லினையும்,

பேழ் வாய்—பெருமையையுடைய வாயினையும்,

48. சுழல் விழி பசு கண்—கோபத்தாற் சுழலும் விழியையுடைய பசிய கண்ணினையும்,

¶ சூர்த்த நோக்கின்—கொடுமைசெய்த பார்வையினையும்,

---

* 'கண்ணி - சூடும்பூவென்றும் வழங்கும்; (தீவக. 208 - ந.)

† தொல்காப்பியம், புறத்திணையியல், 5. ‡ தொல். செய்யுளியல், 211

§ "அகன்றவந்தமாட்டு முருகாற்றுப்படை முதலியவற்றுட்காண்க; மொழி மாற்றாவது கேட்டோர் கூட்டியுணருமாற்றான் ஈரடிக்கண்ணே வருவதென்றும், மாட்டென்னுமுறுப்பாவது இரண்டடிதந்த பலவடிக்கண்ணும் பல செய்யுட் டொடரின்கண்ணும அகன்றும் அணுகியும் வருமென்றுமுணர்க" (தொல் எச்ச. சூ. 13 - ந.)

|| "பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாட், சூர்மா தடிந்த சுட ரிலையெ வெள்வேலே" (திரு. குன்ற)

¶ சூர்த்தம் - கடுக்கம் (பீலிவளை)

49 . 50. *கழல் கண் கூகையொடு கடு பாம்பு தூங்க பெரு முலை அலைக்கும் காதின்—பிதுங்கிய கண்ணையுடைய கூகையோடே கடிய பாம்பு தூங்குகையினாலே பெரிய முலையை வருத்துகின்ற காதினையும்,

பிணர் மோட்டு—சருச்சரையையுடைய பெரிய உடலினையும்,

மோடு - வயிறுமாம்.

51. உரு கெழு செலவின்—கண்டார் உட்குதல் பொருந்தும் நடையினையுமுடைய,

அஞ்சுவரு பேய்மகள் — கண்டார்க்கு அச்சம்தோன்றுகின்ற பேயாகிய மகள்,

52-3. குருதி ஆடிய கூர் உகிர் கொடு விரல் கண் தொட்டு உண்ட கழி முடை கரு தலை — உதிரத்தையேனந்த கூரிய உகிரினையுடைய கோடியவிரலாலே கண்களைத் தோண்டி உண்ணப்பட்ட மிக்க முடைநாற்றத்தையுடைய கரிய தலையை,

இனி, தொட்டென்பதனை வினையெச்சமாக்காது தொழிற்பெயராக்கிக் கண் தோண்டுதலுண்டவென்று கூறுதலுமாம்.

54. ஒள் தொடி தட கையின் ஏந்தி—ஒள்ளிய தொடியினையுடைய பெரு மையையுடைய கையிலே எடுத்து,

54-5. வெரு வர வென்று அடு பிறங்கள பாடி— அவுணர்க்கு அச்சந் தோன்ற வஞ்சியாது எதிர்நின்று கொல்கின்ற வெற்றிக்களத்தைப் பாடி,

தோள் பெயரா—தோளையசைத்து,

56. நிணம் தின் வாயள்—நிணத்தைத் தின்கின்ற வாயினையுடையளாய், வாயள், வினையெச்சமுற்று.

† தூணங்கை தூங்க—தூணங்கைக்கூத்தாட,

‡ "பழுப்புடை யிருகை மூடக்கி யடிக்கத், துடக்கிய நடையது தூணங் கையாகும்."

கருப்பு (47) முதலியகற்றையுடைய பேய்மகள் (51) தலையை (53) ஏந்தி (54) வாளாற்பட (56) பாடித் (55) தூங்கென மூடிக்க.

57. §இரு போ உருவின் ஒரு பேர் யாக்கை—மக்கள்வடிவும் விலங்கின் வடிவுமாகிய ||இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்றுகிய பெரிய உடல்,

---

* கழல்கண் - கழன்று விழுவதுபோலும் கண். கடும்பாம்பு - கோபத்தையுடைய பாம்பு. (வேறுரை)

† சிங்கிக் கூத்து. (வேறுரை)

‡ "மூடக்கிய விருகை பழுப்புடை யொற்றத் - துடக்கிய நடையது தூணங்கை யாகும்" (சூவா. பிங்கல.) எனவும் பாடம்.

§ இரு போர் உரு - சூரனென்றும் பதுமனென்றும் இரண்டுபேராயுடைய வடிவம். (வேறுரை)

|| இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்றுகிய பெரிய வுடலென்றது, முகம் குதிரைமுகமும், உடல் மக்களுடலுமாகிய சூரபன்மாவினது உடலத்தை. இதனைக் கலாதேதாகையில், "வண்டே சாந்தம்" என்னும் மருதக்கலியில் "சூரனிக் கேற்ற வொடியாப் படிவத்துச், சூர்" என்பதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையானுணர்க.

58. அறு வேறு வகையின் அஞ்சுவர நீண்டி—ஆறுகிய வேறுபட்ட கூற்றுலே அச்சந்தோன்ற மிக்குச்சென்று,

என்றதனுல், இறைவன் உமையை வதுவை செய்துகொண்டாளிலே இந்திரன் சென்று நீ புணர்ச்சிதவிரவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவனும் அதற்கு உடம்பட்டு அது தப்பாளுகிப் புணர்ச்சிதவிர்ந்து கருப்பத்தை இந்திரன்கையிற் கொடுப்ப அதனை இருடிகளுணர்ந்து அவன்பக்கனின்றும் வாங்கித் தமக்குத்தரித்தல்அரிதாகையிலுலே இறையவன்கூறிய முத்தீக்கட்பெய்து அதனைத் தம்மனைவியர்கையிற் கொடுப்ப அருந்ததியொழிந்த அறுவரும் வாங்கிக் கொண்டு ஸ்ரீமுஞ்சிச் சூன்முதிர்ந்து சரவணப்பொய்கையிற் *பதுமப்பாயலிலே பயந்தாராக, ஆறுகூருகி வளர்கிறகாலத்து இந்திரன் தான் இருடிகளுக்குக் கொடுத்தநிலையை மறந்து ஆண்டுவந்து வசுரித்தான் எறிப அவ்வாறுவடிவும் ஒன்றுய அவனுடனே பொருது அவனைக்கெடுத்துப் பின் சூரபன்மாவைக் கொல்லுதற்கு அவ்வடிவம் ஆறுகிய வேறுபட்ட கூற்றுலே மண்டிச்சென்ற தென்று புராணங்கூறிற்று. இதனைப் †"பாயிரும் பனிக்கடல்" என்னும் பரி பாடற்பாடலுணர்க. இவ்வாறன்றி வேறு வேறு புராணங் கூறுவாருமுளர்.

இனி அவனுடல் அற்று வேறுவேறும் வகையாலென்றுமாம்.

59. அவுணர் நல் வலம் அடங்க—அவணையொழிந்த அவுணருடைய நல்லவெற்றி இல்லையாம்படி,

அடங்க என்றது, "களமடங்க" என்னுற்போலக் கொள்க.

59-61. ‡ கவிழ் இணர் மா முதல் தடிந்த—கீழ்நோக்கின பூங்கொத்துக் சுளையுடைய மாமரத்தை வெட்டின,

என்றது அவுணரெல்லாரும் தம்முடனே எதிர்த்தார்வலியிலே பரி தங்கள்வலியிலே கூடும்படி மந்திரங்கொண்டிருந்து சாதித்தொரு §மாவைவெட்டினனென்றவாறு.

மறு இல் கொற்றத்து—குற்றமில்லாத வெற்றியினையும்,

61. எய்யா நல் இசை — ஒருவராலும் அறிந்தறியவொண்ணுத நல்ல புகழினையுமுடைய,

செவேல் சேஎய்—செய்ய வேலையுடைய சேய்,

எக்காலமும் போர்செய்தலிற் செவ்வேலென்றார். செய்பவனென்பது சேயென விகாரத்தால் நீண்ட தென்றுமாம்.

---

* "பயந்தோரென்ப பதுமத்துப்பாயல்" (பரி - 5.)

† செய்யுள், 5.

‡ மாயையினுலே கீழ்நோக்கிப் பூத்த மாவாய் நிற்கும் சூரபன்மனை முதலோடேதடிந்த. (வேறுரை)

§ "மாக்கடன் முன்னி, அணங்குடை யவுண ரேமம் புணர்க்குஞ், சூடை முழுமுத றடிந்த போரைசைக், கடுஞ்சின விறல்வேள்" என்பதும், சூரவன்மாத் தனக்கு அரணுகவுடைய மாவின்முதல்' என்னும் உரையும் இங்கே அறியற்பாலன; (பதிற். 11); "சூர் நிரந்து சுற்றிய மாதபுத்த வேலாய்" (பரி. 18), "உயிர்புகுஞ்சட்டகம்" (கலி.) என்பவற்றையும்பார்க்க.

கடல் கலங்க உள் புக்குச் (45) சூர்முதலின் (46) ஒருபோர்யாக்கை (57) அறு வேறுவகையின் அஞ்சுவர மண்டிச்சென்று (58) பேய்மகள் (51) தணங்கை தூங்கும் படியாக (56) அச்சூர்முதல் தடிந்த வேலானே (46) பின்னும் அவுணர் கல்வலமடங்க (59) மாமுதல் தடிந்த கொற்றத்தினையும் (60) நல்லிசையினையு முடைய சேயென முடிக்க.

கண்வன் (6) மார்பினன் (11) சென்னியனாகிய (44) சேயென ஒரு பொருள் குறித்த வேறுபெயராய் நின்றன.

62-3. [சேவடி படரும் செம்ம லுள்ளமொடு, நலம்புரி கொள்கைப் புலம் பிரிந் துறையும் :]

* புலம் பிரிந்து உறையும் அடி—மெய்ஞ்ஞானத்தான் அறிதலேத் கைவிட்டுத் தங்குந் திருவடி,

திருவடியே வீடாயிருக்குமென்றார்; அது †"தென்னன் பெருந்துறையான், காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித், தாட்டா மரைகாட்டித் தன்னருளைத் தேனகாட்டி" என்பதனாலும் பிறரும் திருவடியைக் கூறுமாற் றாலு முணர்க

சேவடி படரும் நலம் புரி கொள்கை செம்மல் உள்ளமொடு—அத்திருவடி யிற் செல்லுதற்குக் காரணமான நல்வினைகளேப் பலபிறப்புக்களிலும் விரும்பி நிகழ்த்தின கோட்பாட்டானே நிலைமையினையுடைத்தாகிய உள்ளத்தோடே,

64. செலவு நீ நயந்தனை ஆயின்—செல்லுஞ்செலவை நீ விரும்பியேயிட் டாயாயின்,

64-6. [பலவுட, னன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப, வின்னே பெறுதிநீ முன்னிய வினையே:] நீ முன்னியவினை பலவுடன் நன்னர் நெஞ்சத்து இன் னசை வாய்ப்ப இன்னே பெறுதி—நீ முற்பிறப்பிற் கருதிச்செய்த நல்வினை யாலே வீடுபெறுவார்க்கு உரியனவாகக்கூறிய நற்குணங்கள் பலவுஞ்சேர நன் றாகிய நெஞ்சத்திலுண்டாகிய இனிய வீடுபேற்றைத் தப்பாமல் இப்பொழுதே பெறுவை;

67. செரு புகன்று எடுத்த சேண் உயர் நெடு கொடி—போரைவென்று விரும்பிக் கட்டின சேய்நிலத்தே சென்றுயர்ந்த நெடிய கொடிக்கு அருகே,

68. வரி புனை பந்தொடு பாவை தூங்க—நூலால் வரிந்துபுனையப்பட்ட பந்தும் பாவையும் அறப்பாரின்மையின் தூங்கியேயிடும்படி,

என்றது: ‡ பகைவரை மகளிராக்கி அவர் கொண்டுவினையாடுதற்குத் தூங் கின வென்றவாறு.

69. பொருநர் தேய்த்த போர் அரு வாயில்—பொருவாரை இல்லையாக்கு கையினுலே எக்காலமும் போர்த்தொழிலிதாகிய வாயிலினையும்,

70. இரு லீற்றிருந்த நீடு நிர் நியமத்த—திருமகள் வருத்தமின்றியிருந்த குற்றந்தீர்ந்த அங்காடித்தெருவினையும்,

---

* 'தேசத்தைவிட்டு' (வேறுரை) † திருவாசகம், திருவம்மானை, 6.

‡ பதிற். 53—ஆம். செய்யுளின் 6-ஆம் அடிமுதலியவற்றையும் அவற் றின் உரையையும், தணிகைப்புராணம், பேரிபூரணநாமப்படலம், 52-ஆம் செய்யுளையும் பார்க்க.

71. மாடம் மலி மறுகில் கூடல் குடவயின்—மாடங்கள்மிக்க வீதித் தெருக்களையு முடைய மதுரையின் மேற்றிசையிடத்து,

அம் சிறை வண்டின் அரி கண்ம் (76)*—அழகினையுடைத்தாகிய சிறகை யுடைய வண்டினுடைய அழகினையுடைய திரள்,

72. இரு சேறு அகல் வயல் விரிந்து வாய் அவிழ்த்த—கரிய சேற்றி னையுடைய அகன்ற வயலிலே முறுக்குகெவிழ்ந்து பின்பு தாதும் அல்லியும் தோன்றமலர்ந்த,

73. முள் தாள் தாமரை துஞ்சி—முள்ளையுடைத்தாகிய தண்டினையுடைய தாமரைப்பூவிலே இராப்பொழுது தூயில்கொண்டு,

73-4. வைகறை கள் கமழ் நெய்தல் ஊதி—விடியற்காலத்தே தேன் நாறு கின்ற நெய்தற்பூவை ஊதி,

எல் பட -- ஞாயிறு தோன்றின காலத்தே,

75-7. [கண்போன் மலர்ந்த காமர் சுனைமல, ரஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்குங், குன்றமர்ந் துறைஅ முரியன்.]

அஞ்சிறை வண்டி னரிக்கணமென்பது முன்னேகூட்டிற்று.

கண் போல் மலர்ந்த காமர் சுனை மலர் ஒலிக்கும் குன்று அமர்ந்து உறைத லும் உரியன்— *கண்ணேயொக்க விரிந்த விருப்ப மருவின சுனைப்பூக்களிலே சென்று ஆரவாரிக்குந் தீநரம்பு†ங்குன்றிலே நெஞ்சமர்ந்திருத்தலுமுரியன் ;

உம்மை, எதிரதுதழீஇய எச்சவும்மை.

கூடற்குடவயிற் குன்று; வண்டின் அரிக்கணம் துஞ்சி ஊதி ஒலிக்குங் குன்று.

அதாஅன்று—அதுவன்றி,

அதாஅன்றென அகாமிட்டெழுக. இனை †"அன்றுவரு காலே" என்ப னுனும், ‡"இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி" என்பதனுள் "தொன்றியன் குங்கின" என்பதனுனு முடிக்க.

உ.—திருச்சீரலைவாய்.

78. வைந்நுதி யென்பது முதல் அலைவாய்ச்சேறல் (125) என்னுந்தினை யம் ஒரு தொடர்.

78. வை நுதி பொருத வடு ஆழ் வரி நுதல்—கூர்மையையுடைத்தாகிய தாட்டி வெட்டின வடுவழுந்தின புகரையுடைய மத்தகத்தே,

வைந்நுதி, ஆகுபெயர்.

79. வாடா மாலை ஓடையொடு துயல்வர—பொன்னரிமாலை பட்டத்தோ டிசைய,

80 §படும் மணி இரட்டும் மருங்கின்—தாழ்கின்ற மணி மாறியொலிக் கின்ற பக்கத்தினையும்,

---

* "நீலங் கண்ணெனமலர்ந்த சுனையும்" (அகநா. 38.)
† தொல்காப்பியம், உயிர்மயங்கியல், நிசு
‡ ,, ,, கூடி.
§ ஓசைமணி. (வேறுரை)

கடு நடை—கடிய நடையினீரும்,

81. *கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பின்—கூற்றுவனேயொத்த பிற ரால் தடுத்தற்கரிய வலியினீர்முடையு,*

82. **கால் இளர்ந்தன்ன வேழம் மேல்கொண்டு—ஓடுங்காற் காற்றெழுந் தாலொத்த களிற்றை யேறி,*

மருங்கு (80) முதலியவற்றையுடைய வேழத்தை நுதலிலே மாலே பட்ட த்தோடே யசைய எறியெனமுடிக்க.

83-4. *ஐ வேறு உருவின் செய் வினை முற்றிய முடியொடு விளங்கிய முர ண் மிகு திருமணி—ஐந்தாகிய வேறுபட்ட வடிவினையுடைய (முடிக்குச்) செய் யுந் தொழிலெல்லாம் முற்றுப்பெற்ற முடியோடேகூடி விளங்கிய ஒன்றற்கொ ன்று மாறுபாடுமிகும் அழகினையுடைய மணி,*

ஐவேறுருவு: "ஞான முகுடம் பதுமராக கிம்புரி, கோடக மிலைமுடிக் கைவே றுருவே"

85. *மின் உறழ் இமைப்பின் செண்ணி பொற்ப—மின்னேடே மாறுபடு கின்ற விளக்கத்தோடே முடியிலே பொலிவுபெற,*

86. *நகை தாழ்பு துயல்வரூஉம் வகை அமை பொலங்குழை—ஒளி தங்கி அசையும் தொழிற்கூறமைந்த பொன்னாற்செய்த மகரக்குழை,*

87-8. *சேண் விளங்கு இயற்கை வாள் மதி கவலஇ அகலா மீனின் அவிர வன இமைப்ப—சேய்மிலத்தேசென்று விளங்கும் இயல்பினையுடைய ஒளியையு டைய மதியைசூழ்ந்து நீங்காத மீன்கள்போல விளங்குவனவாய் ஒளியைக்கால, மீன் - உரோகிணிமுதலியன ; விசாழமும் வெள்ளியுமாம்.*

89. *தா இல் கொள்கை தம் தொழில் முடிமார்—வருத்தமில்லாத விரதங் களையுடைய தவத்தொழிலே முடிப்பாருடைய,*

90. *மனன நேர்பு எழுதரு †வான் நிறம் முகன்—மனத்திலே பொருந்தித் தோன்றுகின்ற ஒளியையுடைய நிறத்தையுடைய முகங்களிலே,*

பொற்ப (85) இமைப்ப (88) எழுதருமுகனென்க.

முகனென்றது ஆறற்கும் பொது.

91-2. [மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப், பல்கதிர் விரிந்தன்ற ரொரு முகம்:] *ஒருமுகம் மா இருள் ஞாலம் மறு இன்றி விளங்க பல்கதிர் விரிந்தன்று - ஒருமுகம் பெருமையை யுடைத்தாகிய இருட்சியையுடைய உலகம் குற்றமின் றாய் விளங்கும்படி பலகிரணங்களையும் தோற்றுவித்தது;*

ஒருமுகமென்று முன்னே கூட்டிப் பொருள்கொள்க.

92-4. *ஒருமுகம் ‡ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகி காதலின உவந்து வரம் கொடுத்தன்று—ஒருமுகம் தன்மேல் அன்புசெய்தவர்கள் துதிக்க அதற்குப் பொருந்தி அவர்க்கு இனிதாகாடந்து அவர்மேற்சென்ற காதலாலே மகிழ்ந்து வேண்டும்பொருள்களை முடித்துக் கொடுத்தது.*

---

* "கால் இளர்ந்தன்னவூர்தி" (பதிற். "இருங்கண்யானை")

† ஒளி விடுகின்ற ஆறுதிருமுகங்களை யுடையவன்; அந்தத்திருமுகங்களு டைய படிவஞ்சொல்லின். (வேறுரை)

‡ ஏழையர் இரந்துதுதிக்க. (வேறுரை)

94-6. ஒருமுகம் மந்திர விதியின் *மரபுளி வழாஅ அந்தணர் வேள்வி
ஓர்க்கும்—ஒருமுகம் மந்திரத்தையுடைய வேதத்திற்கூறிய முறைமையிடத்துத்
தப்பாத அந்தணருடைய யாகங்களில் தீங்குவிராதபடி நினையாநிற்கும்;

அந்தத்தைத் அணவுவார் அந்தணர்; என்றது, வேதாந்தத்தையே நோக்குவா
ரென்றவாறு.

96-8. [ஒருமுக, மெஞ்சிய பொருள்களே †எழுதாடித், திங்கள்போலத்
திசைவிளக் கும்மே:] ஒருமுகம் எஞ்சிய பொருள்களே நாடி எம் உள திங்கள்
போல திசை விளக்கும்—ஒருமுகம் ஈண்டு வழங்காத வேதங்களிலும் நூல்களி
னுமுள்ள பொருள்களே ஆராய்ந்து இருடிகள் எழுதும்படி உணர்த்தித் திங்கள்
போலத் திசைகளெல்லாம் விளக்குவிக்கும்;

எமம்-இரட்சை. கேலிறைதலிற் றிங்கள் உவமையாயிற்று.

98-100. [ஒருமுகஞ், செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக், கறுவுகொ
ணெஞ்சமொடு களம்வேட் டன்றே:] ஒருமுகம் செல் சம முருக்கி கறுவு
கொள் நெஞ்சமொடு செறுநர் தேய்த்து ‡களம் வேட்டன்று—ஒருமுகம் திருவுள்
ளத்துச் செல்கின்ற நடுவுநிலைமையைக் கெடுத்து இவர்களைக் கொல்லவேண்டு
மென்று கறுவுதல் கொண்ட திருவுள்ளத்தோடே செறப்படும் அசுரர்முதலியோ
ரைப் பொன்றக் கெடுத்துக் களவேள்வியை வேட்டது;

சமம்-நடுவுநிலைமை ; அதனைக் கெடுத்தலாவது, தேவரையும் அசுரரையும்
ஒப்பக்கருதாது தேவரைக்காத்து அசுரரையழித்தல்.

100-102. [ஒருமுகங், குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின், §மடவ
ல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே;] ஒருமுகம் குறவர் மடமகள் ||கொடி போல் நுசுப்பின் வள்ளியொடு நகை
யமர்ந்தன்று—ஒருமுகம் குறவருடைய மடப்பத்தையுடையமகளாகிய வல்லி
பாலும் இடையினையுடைய வள்ளியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று;

மடவரல் நகையெனக் கூட்டித் தனக்கு ஓரறியாமைதோன்றுந் தன்மை
டைத்தாகிய நகையென்று கூறுக.

அவ்வொடு ¶நகையமர்தலின் அறியாமை கூறினர். காமநுகர்ச்சி யில்லாத
றைவன் இங்ஙனம் நகையமர்ந்தான்; உலகில் இல்வாழ்க்கை நடத்தற்கென்
மணர்க. அது **"தெண்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்" என்பதனுட்
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர், விண்பாலி யோகெய்தி வீடு
ர்காண் சாழலோ" என்பதனானுணர்க.

---

* மரபுளி : உளி, மூன்றுவதன் பொருள்படுவதோரிடைச்சொல். அந்
ணர் - அழகிய தட்பத்தினையுடையார். ஓர்க்கும் - திருவுள்ளத்து அடைக்கும்.
(வேறுரை)

† எழுதாடி - இரக்கைபொருந்த ஆராய்ந்து; எமம் கடைக்குறைபட்
தது. (வேறுரை)

‡ போர்க்களத்தை விரும்பாதிற்கும். (வேறுரை)

§ கற்பின் வரலாற்றினையுடைய வள்ளிநாய்ச்சியார். (வேறுரை)

|| வல்லிசாதக்கொடி.,(வேறுரை)

¶ 'நகையமர்தல் இன்றி யமையாமை' எனவும் பிரதி வேறுபாடுண்டு.

** திருவாசகம், திருச்சாழல்,' க.

கடு நடை—கடிய நடையினீயும்,

81. கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பின்—கூற்றுவனையொத்த பிறரால் தடுத்தற்கரிய வலியினீயுமுடைய,

82. *கால் கிளர்ந்தன்ன வேழம் மேல்கொண்டு—ஓடுங்காற் காற்றெழுந் தாலொத்த களிற்றை யேறி,

மருங்கு (80) முதலியவற்றையுடைய வேழத்தை நுதலிலே மாலே பட்டத்தோடே யசைய எறியெனமுடிக்க.

83-4. ஐவேறு உருவின் செய் வினை முற்றிய முடியொடு விளங்கிய முரண் மிகு திருமணி—ஐந்தாகிய வேறுபட்ட வடிவினையுடைய (முடிக்குச) செய்யுள் தொழிலெல்லாம் முற்றுப்பெற்ற முடியோடேகூடி விளங்கிய ஒன்றற்கொன்று மாறுபாடுமிகும் அழகினையுடைய மணி,

ஐவேறுருவு: "நாம மூகுடம் பதுமநி திம்புரி, கோடக மிலைமுடிக் கைவேறுருவே"

85. மின் உறழ் இமைப்பின் சென்னி பொற்ப—மின்னுடே மாறுபடுகின்ற விளக்கத்தோடே முடியிலே பொலிவுபெற,

86 நகை தாழ்பு துயல்வரூஉம் வகை அமை பொலங்குழை—ஒளி தங்கி அசையும் தொழிற்கூறமைந்த பொன்னாற்செய்த மகரக்குழை,

87-8. சேண் விளங்கு இயற்கை வாள் மதி கவைஇ அகலா மீனின் அவிர் வன இமைப்ப—சேய்நிலத்தேசென்று விளங்கும் இயல்பினையுடைய ஒளியையுடைய மதியைசூழ்ந்து நீங்காத மீன்கள்போல விளங்குவனவாய் ஒளியைக்கால,

மீன் - உரோகிணிமுதலியன; விளாழமும் வெள்ளியுமாம்.

89. தார் இல் கொள்கை தம் தொழில் முடிமார்—வருத்தமில்லாத வீரதங்களையுடைய தவத்தொழிலே முடிப்பாருடைய,

90. மனை நோ எழுதரு †வாள் நிறம் முகன்—மனத்திலே பொருந்திய தோன்றுகின்ற ஒளியையுடைய நிறத்தையுடைய முகங்களிலே,

பொற்ப (87) இமைப்ப (88) எழுதருமுகனென்க.

முகனென்றது ஆற்றும் பொது.

91-2. [மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப், பல்கதிர் விரிந்தன்ன ஒருமுகம்] ஒருமுகம் மா இருள் ஞால மறு இன்றி விளங்க பல்கதிர் விரிந்தன்ன - ஒருமுகம் பெருமையை யுடைத்தாகிய இருட்கியையுடைய உலகம் குற்றமின்றாய் விளங்குமபடி பலகிரணங்களேயும் தோற்றுவித்தது;

ஒருமுகமென்று முன்னே கூட்டிப் பொருள்கொள்க.

92-4. ஒருமுகம் ‡ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகி காதலின உவந்து வரம் கொடுத்தன்று—ஒருமுகம் தண்மேல் அனபுசெய்தவர்கள் துதிக்க அதற்குப் பொருந்தி அவர்க்கு இனிதாகநடந்து அவர்மேற்சென்ற காதலாலே மகிழ்ந்து வேண்டும்பொருள்களே முடித்துக் கொடுத்தது.

---

* "கால் கிளர்ந்தன்னவூர்தி" (பதிற். "இருங்கண்யானை")

† ஒளி விடுகின்ற ஆறுதிருமுகங்களே யுடையவன்; அத்தத்திருமுகங்களினுடைய படிவஞ்சொல்லின். (வேறுரை)

‡ ஏழையர் இரந்துதுதிக்க. (வேறுரை)

94-6. ஒருமுகம் மந்திர விதியின் *மரபுளி வழாஅ அந்தணர் வேள்வி
க்கும்—ஒருமுகம் மந்திரத்தையுடைய வேதத்திற்கூறிய முறைமையிடத்துத்
ாத அந்தணருடைய யாகங்களில் திங்குவீராதபடி நீனையாகிற்கும்;

அந்தத்தை அணவுவார் அந்தணர்; என்றது, வேதாந்தத்தையே நோக்குவா
ரன்றவாறு.

96-8. [ஒருமுக, மெஞ்சிய பொருள்கனே †எழுநாடித், திங்கள்போலத்
தெளிஞர் கும்மே:] ஒருமுகம் எஞ்சிய பொருள்கனே நாடி எம் உத திங்கள்
போல திசை விளக்கும்—ஒருமுகம் ஈண்டு வழங்காத வேதங்களிலும் நூல்களி
ாமுன்ன பொருள்கனே ஆராய்ந்து இருடிகள் எழுறும்படி உணர்த்தித் திங்கள்
போலத் திசைகளெல்லாம் விளக்குவிக்கும்;

எமம்-இரட்சை. கலேகிறைதலிற் றிங்கள் உவமையாயிற்று.

98-100. [ஒருமுகஞ், செறார்த் தேய்த்துச் செல்சம முருக்கிக், கறுவுகொ
ணஞ்சமொடு களம்வேட் டன்றே:] ஒருமுகம் செல் சம முருக்கி கறுவு
கொஞ் நெஞ்சமொடு செறார் தேய்த்து ‡களம் வேட்டன்ற—ஒருமுகம் திருவுள்
த்துச் செல்கின்ற நடுவுநிலைமையைக் கெடுத்து இவர்களோக் கொல்லவேண்டு
மென்று கறுவுதல் கொண்ட திருவுள்ளத்தோடே செறப்படும் அசுரர்முதலியோ
ரப் பொன்றக் கெடுத்துக் களவேள்வியை வேட்டது;

சமம்-நடுவுநிலேமை; அத்தனேக் கெடுத்தலாவது, தேவரையும் அசுரரையும்
ஒப்பக்கருதாது தேவரைக்காத்து அசுரரையழித்தல்.

100-102. [ஒருமுகங், குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின், ‖மடவ
ல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே;]

ஒருமுகம் குறவர் மடமகள் ||கொடி போல் நுசுப்பின் வள்ளியொடு நகை
அமர்ந் தன்று—ஒருமுகம் குறவருடைய மடப்பத்தையுடையமகளாகிய வல்லி
போலும் இடையினேயுடைய வள்ளியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று;

மடவரல் நகையெனக் கூட்டித் தனக்கு ஓறியாமையோன்றுந் தன்மை
¶டைத்தாகிய நகையென்று கூறுக.

அவனொடு ¶நகையமர்தலின் அறியாமை கூறினர். காமநுகர்ச்சி யில்லாத
இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தான்; உலகில் இல்வாழ்க்கை நடத்தற்கென்
றணர்க. அது **"நெஞ்சா லுகந்தாடுந் தில்லேச்சிற் றம்பலவன்" என்பதனுட்
"பெண்பா லுகந்தில்லனேற் பேதா யிருநிலத்தோர், விண்பாலி யோகெய்தி வீடு
ர்காண் சாழலோ" என்பதனுணர்க.

---

* மரபுளி: உளி, மூன்றுவதன் பொருள்படுவதோரிடைச்சொல். அந்
தணர் - அழகிய தட்பத்தினேயுடையார். ஓர்க்கும் - திருவுள்ளத்து அடைக்கும்.
(வேறுரை)

† எழுநாடி - இரக்கைபொருந்த ஆராய்ந்து; எமம் கடைக்குறைபட்
தது. (வேறுரை)

‡ போர்க்களத்தை விரும்பாகிற்கும். (வேறுரை)

§ கற்பின் வரலாற்றினேயுடைய வள்ளிநாய்ச்சியார். (வேறுரை)

‖ வல்லிசாதக்கொடி.,(வேறுரை)

¶ 'நகையமர்தல் இன்றி யமையாமை' எனவும் பிரதி வேறுபாடுண்டு.

** திருவாசகம், திருச்சாழல், க.

விரிந்தன்று (92) கொடுதன்று (94) வேட்டன்று (100) நகையமர்ந் தன்று (102) ஓர்க்கும் ((96) விளக்கும் (98) என்பன முற்றுச்சொல்.

102-3. [ஆங்கம் மூவிரு முகனு முறைநவின் றெழுகலின்:]

அ மூவிரு முகனும்—அவ்வாறுமுகமும்,

ஆங்கு முறை நவின்று ஒழுகலின்—அத்தொழில்களிடத்துச செய்யும் முறைமைகளைப் பயின்று நடத்துகையினாலே அம்முகங்களுக்குப் பொருந்த,

104-6. [ஆர் தாழ்ந்த வம்பகட்டு *மார்பிற், செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு, வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்:]

ஆரம் தாழ்ந்த அம் பகட்டு மார்பின் செம்பொறி வாங்கியதோள்—பொன் னுற்செய்த ஆரத்தங்கிய அழகையுடைத்தாகிய பெருமையையுடைய மார்பிற் கிடக்கின்ற உத்தம இலக்கணமாகிய சிவந்த மூன்றுவரியினையும் தன்னிடத்தே வந்து விழும்படி வாங்கிக்கொண்ட தோள்,

வாங்கிய வென்றார், அவ்வரி தோளளவும் வந்துகிடந்தமை தோன்ற; †"வை யையுகன் மார்பிடை வரியு மூன்றுள" என்றார் பிறரும்.

மொய்ம்பின் வண்புகழ் நிறைந்து—தம்முடைய வலியினாலே பெரிய புக ழ் நிறையப்பட்டு,

சுடர் விடுபு வசிந்து வாங்குதோள்—சுடரையுடைய படைக்கலங்களை யெறி ந்து பகைவர்மார்பைப் பிளந்து அவற்றை வாங்குதோள்,

சுடரையுடைய படைக்கலங்களைச் சுடரென்றார்; அஃது ஆகுபெயர்.

நிமிர் தோள்—பெருகு சோள்,

நிறைந்து நிமிர்தோளென்க.

வசிந்தென்பது பிளந்தென்னும் பொருட்டாகலின், செய்வதன் மேலுழிற்கும் செய்விப்பதன் மேலுழிற்கும் பொது. அசுரர்முதலியோரை அழிக்குங்காலத்துப் பல்வேறுபெயரினும் படைக்கலமேகாரணனென்றுணர்க; அஃது அறுவேறு வகை யினஞ்சுவர மண்டி (58) என்றதனாலுணர்க.

இனி மொய்ம்பினையுடைத்தாய் ஒளிவிட்டு நிறைந்து வளையவேண்டுமிடம் வளைந்து நிமிரவேண்டுமிடம் நிமிருந் தோளென்று முரைப்பர். இத்தருமமெ தென்பதனைத் தொடியொடுகொட்ப (114) மணியிரட்ட (115) எனமேலே கூட்டுக. வசிந்து - பகைவர்மார்பைப்பிளந்தென்க. வசிந்தென்பதற்குப் படைக் கலங்களால் வடுப்பட்டென்ற பொருளுரைத்தல் இறைவனுகலித் பொருந்காது.

இனி, அவை போர்செய்யாக்காலத்து இங்ஙனமிருக்குமென்று அவற்றின் இயல்பு கூறுகின்றார்.

அத்தோள்களில் ஒருவை யென்க.

107. [விண்செலன் மரபினோய்க் கேற்றிய தொருதை-] ஒருதை ‡விண் செலல் மரபின் ஞயர்க்கு ஏற்றியது—ஒருதை எக்காலமும் ஆசாரத்தே இயங்கு தன் முறைமையினையுடைய கெய்வலிருடிகளுக்குப் பாதுகாவலாக வெடுத்தது;

---

* மார்பிலே சிதேவியைக் கைக்கொண்ட வலி, ஒளிவிட்டு வளவியபுகழ் நிறைந்து வளர்ந்து நீண்டுநிமிர்ந்தசோள்கள். (வேறுரை)

† வேநெடிந்தாமணி, 1462

‡ ஆசாரத்திலே இயக்கத்தை முறைமையாகவுடைய தேரர்க்கு.(வேறுரை) "சுடரொடு நிரிதரு முளரிவரு மமரரும்" (தில. வேட்டுவ)

108. [உக்கஞ் சேர்த்திய தொருகை:] ஒருகை உக்கம் சேர்த்தியது—ஏந்தியகைக்கு இணைத்தகை மருங்கிலேவைத்தது;

என்றது: ஞாயிற்றின்வெம்மையைப்பல்லுயிரும் பொறுத்தலாற்குவென் றகருதித் தமதருளினும் சுடரொடுதிரித்து அவ்வெம்மையைப்பொறுக்கின்ற முனிவரைப்பாதுகாக்கவே உலகத்தைத்தாங்கிக் காத்ததாயிற்று. இதனானே இக்கை மாயிருண்ஞாலமதுவின்றி வினங்கப் பல்கதிர்விரித்த முகத்திற்கு ஏற்ற தொழில்செய்ததாயிற்று.* இது, *"நிலமிசை வாழ்நர் ரலமர நீரத், தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கி, காலுண வாகச் சுடரொடு கொட்கு, மவிர்சடை முனிவரு மருள" என்ற பரிபாட்டானுணர்க.

மனமும் முகமும் கையும் ஒருதொழிலேச்செய்தலின், ஏனைக்கை தொழிலின்றி மருங்கிலே கிடந்தது.

109-110. [நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை யசையிய தொருகை, யங்குசங் கடாவொருகை·] ஒருகை அங்குசம் கடாவ ஒருகை நலம் பெறு †கலிங்கத்து குறங்கின்மிசை அசையியது.—ஒருகை தோட்டியைச் செலுத்தாநிற்க மற்றைக்கை செம்மை நிறம்பெற்ற ஆடையையுடைத்தாகிய துடையின் மேலே கிடந்தது;

இஃது யானையேறுவார்க்கு இயல்பென்று கூறினார். தன்னே வழிபடுவாரிடத்து வருங்கால் யானைமேல்வந்து அருள்செய்தல் இயல்பாலின், இக்கைகள் காதலினுவந்து வரங்கொடுத்த முகத்திற்கு ஏற்றவாறுணர்க.

110-11. இருகை ‡ஐ இரு வட்டமொடு எஃகு §வலம் திரிப்ப—இரண்டுகைகள் வியப்பையும் கருமையையுமுடைய பரிசையுடனே வேலையும் வலமாகச் சுழற்ற,

இதனானே, அசுரர்வந்து வேள்வியைக் கெடாமல் அவரை ஓட்டுதற்கு இவற்றைச் சுழற்றுதலில் வேள்விஓர்க்குமுகத்திற்கு இக்கைகள் ஏற்றவாறுணர்க.

111-3. ஒருகை ||மார்பொடுவினங்க ஒருகை ¶தாரொடு பொலிய—முனிவர்க்குத் தத்துவங்களைக்கூறி உரையிடந்தபொருளே உணர்த்துங் காலத்து ஒருகை மார்போடே வினங்காநிற்க, ஒருகை மார்பின்மாலை தாழ்ந்ததனோடே சேர்ந்து அழகுபெற,

என்றது: இறைவன் மோனமுத்திரையத்தனையத் தானேயே யிருந்து காட்டாமைத்தசும்புள் நீர்நிறைந்தாற்போல ஆனந்தமயமானவொளி மானுக்கர்க்கு

---

* செய்யுள், சூ. † புடைவை (வேறுரை)

‡ ஐந்தாகிய பெருத்த பரிசை; பத்தாந் திருமுகத்தினையுடைய கேடகமெனினுமமையும். (வேறுரை)

§ வெற்றிபெறச் சுழற்ற. (வேறுரை)

|| மார்பினிடத்தே மௌனமந்திரத்தைப் பேணுறீர்க. (வேறுரை.)

¶ தார் - மார்பிலுள்ளமாலை; "வண்ண மார்பிற் றருக் கொன்றை" (புற நா. கடவுள்.)

நிறைதலின், அதற்குரிய மோனமுத்திரைகூறிற்று ; *" தன்னே யுன்னி யென்னே யாக்கிய போழ்தே பூவல ஞமினேன் " என்பதனுணர்க.

இக்கைகள் எஞ்சியபொருள்களே விளக்குமுகத்திற்கு எற்றவாறுணர்க.

113-5. [ஒருகை, கீழ்வீழ்† தொடியொடு மீமிசைக் கொட்ப வொருகை, பாடின் படுமணி யிரட்ட :] ஒருகை தொடியொடு மீமிசை கொட்ப கீழ் வீழ் ஒருகை பாடு இன் படு மணி இரட்ட—ஒருகை தொடியொடு மேலே சுழன்று களவேள்விக்கு முத்திரைகொடுப்பக் கீழேவீழ்ந்த மந்திரைக்கை ஓசையினிதா கிய ஒலிக்கின்றமணியை மாறியொலிக்கப்பண்ண,

இக்கை களவேள்வி வேட்கின்ற முகத்திற்கு எற்றவாறுணர்க.

115-7. ஒருகை ‡நீல நிற விசும்பின் மலி துளி பொழிய ஒருகை வான் அமரர்களிர்க்கு வதுவை சூட்ட—ஒருகை நீல நிறத்தையுடைய மேகத்தாலே மிக்க மழையைப் பெய்வியாநிற்க, ஒருகை தெய்வமகளிர்க்கு மணமாலையைச் சூட்ட,

என்றது : வள்ளியொடு நகையமர்ந்தமுகம் உலகிற்கு இல்வாழ்க்கை நிகழ்த்துவித்தாதலின், அவ்வில்வாழ்க்கை நிகழ்த்துதற்கு மழையைப் பெய்வித்தது ஒருகை ; ஒருகை இல்வாழ்க்கை நிகழ்த்தற்பொருட்டு மணமாலையைச் சூட்டிற் றென்றவாறு.

117-8. ஆங்கு அ பன்னிருகையும் பால் பட இயற்றி—அப்படியே அந தப்பன்னிரண்டுகையும் முகத்தின் பகுதியிலே படும்படி தொழில்செய்து,

முகங்களில் ஒருமுகம் ஓர்க்கும் (96) ஒருமுகம் விளக்கும் (98) ஒரு முகம் வேட்டன்று (100) ஒருமுகம் அமர்தன்று (102) ஒருமுகம் விரிந்தன்று (92) ஒருமுகம் கொடுத்தன்று (94) அம்மூவிருமுகனும் அத்தொழில்களிடத் துச்செய்யும் முறைமைகளைப் பயின்றுநடத்துகையினுலே (103) அம்முகங களுக்குப்பொருந்தத் தோள்களில் (106) இருகை (110) திரிப்ப (111) ஒருகை வினங்க (112) ஒருகை பொலிய (113) ஒருகை கொட்ப (114) ஒருகை இரட்ட (115) ஒருகை பொழிய (116) ஒருகை சூட்ட (117) ஒருகை ஐயர்க்கேந்தியது (107) ஒருகை உக்கஞ் சேர்த்தியது (108) ஒருகை கடாவ (110) ஒருகை அசைத்தது (101) அப்படியே பன்னிருகையும் முகத்தின்பகுதியிலே படும்படி தொழில்செய்தென இச்சொல்முடிபுக்கேற்பக் கைகளையும் முகங்களையும் மாட் டிக முடிக்க. திரிப்பவென்பதுமுதலிய சிகழ்காலச செயவெனெசகரகன் எந்தி யது சேர்த்தியதென முற்றுவினைகொண்டு முடிந்தன.

119. அந்தரம் பல்லியம் கறங்க—ஆகாயத்தினது துந்துமி ஒலிப்ப,

119-20. தின் §காழ் ||வயிர் எழுந்து இசைப்ப—திண்ணிய வயிரத்தை யுடைய கொம்பு மிக்கொலிப்ப,

---

* (குலி. 43 - மேற்)

† பாரா வினையோடே. (வேறுபா.) [(மலை. 1.)

‡ " நீனிறவிசும்பின் " (பெரும்பாண் 135), " இருணிறவிசும்பின் "

§ கரிய கொம்பு. (வேறுபா.)

|| " வயிரும் வினையு மார்ப்ப " (முல்லை..92.)

வால் வினை நூல—வெள்ளிய சங்கு முழங்க,

121. உரம் தலை கொண்ட *உரும் இடி முரசமொடு—வலியைத் தன்னிடத்தேகொண்ட உருமேற்றினது இடிப்புப்போலும் ஓசையையுடைய முரசுடனே,

122. பல் பொறி மஞ்ஞை வெல் கோடி அகவ—பலபீலியையுடைய மயில் அவனுணியினுலே வென்றெடுத்த கொடியிலேயிருந்து ஒலியாநிற்க,

பொறி, ஆகுபெயர்.

123. விசும்பு ஆர்க—ஆகாயமே வழியாக,

விரை செலல் முன்னி—விரைந்த செலவினை மேற்கொண்டு,

124. [உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர் :] ஓங்கு உலகம் புகழ்ந்த உயர் †விழுச்சீர்—நன்மையோங்கும் நன்மக்கள் புகழ்ந்த உயரும் சிரினேயுடைய புகழினேயுடைய,

125. அலேவாய் சேறலும் நிலேஇய பண்பு—நாமனுராலேவா யென்னும் திருப்பலியேறவழுந்தருளுதலும். அவற்கு நிலேபெற்றகுணம்;

குன்றமர்ந்துறைதலுமுரியன் ; அதாஅன்று (77) வேழமேல்கொண்டு (82) இயற்றிக் (118) கறங்க (119) இசைப்ப ஞால (120) அகல (122) முன்னி (123) அலேவாய்சேறலும் நிலேஇயபண் பென முடிக்க.

அதாஅன்று—அதுவன்றி,

திருவாவினன்குடி.

126. சிரை தைஇய வெண்பதுமுதல் முனிவர் முத்புக (137) என்னுந் துணேயுமொருதொடர்.

சிரை ‡தைஇய உடுக்கையர்—மரவுரியை உடையாகச்செய்த உடையினேயுடையர்,

இதற்குக் கற்றேப்த்தல் முதலியன செய்த உடுக்கையரென்பாருமுளர்.

126-7. சிரொடு வலம்புரி புரையும் வால் §நரை முடியினர்—அழகோடு வடிவாலும் நிறத்தாலும் வலம்புரிச்சங்கினே யொக்கும் வெள்ளிய நரைமுடியினேயுடையர்,

128. மாசு அற இமைக்கும் உருவினர்—எக்காலத்தும் நீரோடுதலின் அழுக்கற வினங்கும் வடிவினேயுடையர்,

128-30. மானின் உரிவை தைஇய ஊன் கெடு மார்பின் என்பு எழுந்து இயங்கும் யாக்கையர்—இருட்டிஞனெம் போர்த்த விரதங்களால் விட்ட பட்டினியால் நசைகெடுகின்ற மார்பிலெலும்புகள் கோவைதோன்றி உலவும் உடம்பினே யுடையார்,

தைஇய மார்பென்க.

---

* "உருமினிடிமுரசார்ப்ப" (பத)

† விழுமிய அழகு (வேறுரை)

‡ தைத்த (வேறுரை)

§ நரைக்கொண்டையினே யுடையார். (வேறுரை)

130-31. *நன்பகல் பல உடன கழிந்த உண்டியர்—எப்பொருளுதகர்த்தற்கு நன்றுகிய பகற்பொழுதுகள் புலவும் சேரக்கழிந்த உணவினையுடையர்,*

இது மாதோபவாசங்கூறித்து,

131-2. *இகலொடு செற்றம் நீக்கிய மனத்தினர்—மாறுபாட்டோடே நெடுங்கால நிற்கும் செற்றத்தினையும் போக்கிய மனத்தினை யுடையர்,*

பகைமை நெடுங்காலம் நிகழ்வது செற்றம்.

132-3. *[யாவதுங், கற்றே ரறியா வறிவினர்] *கற்றோர் யாவதும் அறியா அறிவினர்—பலவற்றையும் கற்றோர் சிறிதும் அறியப்படாத இயல்பான அறிவினையுடையர்,*

133-4. *கற்றோர்க்கு தாம் வரம்பு ஆகிய தலைமையர்—பலவற்றையும் கற்றோர்க்குத் தாம் எல்லையாகிய தலைமையையுடையர்,*

என்றது கல்வியைக் கரைகண்டா ரென்றவாறு.

134-5. *காமமொடு கடு சினம் கடிந்த †காட்சியர்—ஆசையோடே கடிய சினத்தையும் போக்கின அறிவினையுடையர்,*

கோபத்தின்பின்ஞகச் சிறிதுபொழுது நிற்பது சினம்.

135-6. *இடும்பை யாவதும் அறியா இயல்பினர்—தவத்தான் மெய்வருத்தம் உளவேனும் மனத்தான் வருத்தம் சிறிதுமறியப்படாத இயல்பினையுடையர்,*

மே வர—திருவுள்ளம் பொருந்துதல் வர,

137. *‡துனி இல் காட்சி முனிவர் முன் புக—ஒருவருடனும் வெறுப்பில்லாத நல்ல அறிவினையுடைய முனிவர் முன்னே செல்ல,*

உடுக்கையர் முடியினர் உருவினர் யாக்கையர் உண்டியர் மனத்தினர் அறிவினர் தலைமையர் காட்சியர் இயல்பினராகிய முனிவர் மேவர முற்புகவென முடிக்க.

138. *புகைமுகந்தன்ன* என்பதுமுதல் மேவலர் (142) என்னுந்தனையும் பாடுவாரைக் கூறிற்று.

138. *§புகை முகந்தன்ன மாசு இல் தூ உடை—புகையை முகந்தாலொத்த தெய்வத்தன்மையால் அழுக்கேறாத தூய உடையினையும்,*

139. *முகை வாய் அவிழ்ந்த தகை சூழ் ஆகத்து - ||முகை வாய்கொழிந்த மாலை சூழ்ந்த மார்பினையும்,*

கட்டுதலிற் றகையென்றார், மாலையை ; ஆகுபெயர்.

---

* யாவதும் கற்றோர்—எவ்வகைப்பட்ட பொருளினையும் கற்று வல்லுநர். (வேறுரை)

† தோற்றத்தினை யுடையார். (வேறுரை)

‡ தயாமில்லாத தோற்றம். (வேறுரை)

§ புகையைக் கையாலே முகந்தாற்போன்று கொய்யவாய. (வேறுரை)

|| மொட்டுப்பூக் கிண்கிணிவாய்க் கொண்ட. (வேறுரை)

140-41. செவி சேர்பு வைத்த செய்வு உறு நிவவின் நல் யாழ் நவின்ற - *செஞ்செவியாலே சுருதியையனாந்து ஸ்ரமப்பைக்கட்டின சுற்றுதலுமும் வார்ந்த நரம்புடைய நன்ருயிய யாழின் இசையிலே பயின்ற,

141-2. †நயன் உடை நெஞ்சின் †மென்மொழி மேவலர் இன் ஸ்ரம்ப ஸர - ஸாமுடைய நெஞ்சாலே எக்காலமும் மெல்லிய வார்த்தை சொல்லு ஆப்பொருந்திய கந்தருவர் இனியஸ்ரம்ப ஸரிக்க,

நவின்ற நயனென்க.

143. சோயின்றென்பது முதல் மகளிர் (147) என்னுந்துணையும் பாடு ஸினரைக் கூறிற்று.

143. சோய் இன்று இயன்ற யாக்கையர் - மக்களுக்குரியசோய் இல்லே ாாக நிருமித்த உடம்பினையுடையராய்,

143-4. மாவின் அவிர் தளிர் புரையும் மேனியர் - மாவினது வினங்கு இன்ற தளிரையொக்கும் நிறத்தினையுடையராய்,

144-5. அவிர்தொறும் பொன் உரை கடுக்கும் திதலையர் - வினங்குந் தோறும் பொன்னுரை வினங்கினுற்போலும் தூத்தியினையுடையராய்,

145-7. இன ஸகை ‡பரமும் தாங்கிய பணிர்து எந்த அல்குல் §மாசு இல் மகளிரொடு - கட்டினிய ஒளியினையுடைய பதினெண்கோவையாகிய மேகலே யணிந்த தாழவேண்டியவிடம் தாழ்ந்து உயரவேண்டியவிடம் உயர்ந்த அல்குலே யுடைய குற்றமில்லாத கந்தருவமகளிரோடே,

மறு இன்றி விளங்க - குற்றமின்றும் விளங்காநிற்க,

உடையினையும் (138) ஆகத்தினையுமுடைய (139) மென்மொழிமேவலர் (142) யாகவை (143) முதலியவற்றையுடையராய், மாசில்லாத மகளிரோடே மறுவின்றி விளங்க (147) இன்னரம்பினர (142) வெனமுடிக்க.

148. கடுவோடு ஒடுங்கிய தூம்பு உடை வால் எயிறு - நஞ்சுடனே உறைக் துள்ளே கிடந்த தூவியினையுடைய வெள்ளிய எயிற்றினையும்,

மிடற்றின் நஞ்சு தன்னிடத்தேதோன்றுதலின் ' கடுவோடு ' என்றார். எயிறு காளி, காளாத்திரி, யமன், யமதூதியென நானகாம்.

149. அமலென உயிர்க்கும் அஞ்சுவரு கடு திறல் - நெருப்பென்னும் படி நெட்டுயிர்ப்புக்கொள்ளும கண்டாக்கு அசசந்தோன்றும் கடிய வலியினையு முடைய,

150. பாம்பு பட புடைக்கும் - பாம்பு படும்படி அடிக்கும்

150-51. பல் வரி கொடு சிறை புள் அணி ரீள் கொடி செல்வனும் - பல வரியினையுடைத்தாகிய வினங்க சிறகினையுடைய கருடனையணிந்த ரீண்ட கொடி யினையுடைய திருமாலும்,

---

* எஃகுச் செவி - மூவகைச் செவியிலும் தலையான கூரிய செவி; " எஃகு நன் செவிகள் வீழ ;" (ஜீவக. 2718)

† மெத்தென்ற சொற்சேர்ந்தோராகிய வித்தியாதரர் (வேறுரை)

‡ அரைப்பட்டிகை. (வேறுரை)

§ தெய்வக்குறத்திகளோடே, (வேறுரை)

151-4. [வெள்ளேறு, வலயி னுயரிய பலர்புகழ் திணிதோ, ஞமை யமர்ந்து வினங்கு மிமையா முக்கண், மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனும்:]

*வலயம் வயின் வெள்ளேறு உயரிய செல்வன் - வெற்றிக்களத்தே வெள்ளிய எற்றினை வெற்றிக்கொடியாக எடுத்த உருத்திரன்,

உமை அமர்ந்து வினங்கும் செல்வன் - இறைவி ஒருபாகத்தே பொருந்தி வினங்கும் செல்வன்,

பலர் புகழ் திணி தோள் - பலரும் புகழ்கின்ற திக்கென்ற தோளினையும்,

இமையா முக்கண் செல்வன் - இதழ் குவியாத மூன்றுகண்ணினையு முடைய செல்வன்,

மூ எயில் முருக்கிய முரண் மிகு செல்வனும் - மும்புரத்தையெரித்த மாறு பாடு மிக்க செல்வனும்,

155. நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து - நூற்றைப்பத்தாகவடுக்கிய கண்ணினையும்,

என்றது ஆயிரங்கண்ணென்றவாறு.

155 - 6. நூறு பல் வேள்வி முற்றிய வென்று அடு கொற்றத்து — நூறென்னும் எண்ணுகிய பலவேள்விகளே வேட்டுமுடித்ததனாற்பெற்ற பகைவரை வென்றுகொல்கின்ற வெற்றியினையும்,

157. [சுரிதாண் டேந்திய மருப்பின் :] எஞ்சிய சுரிதாண்டு மருப்பின் - தலைகள் எஞ்சியிருக்கின்ற நான்காகிய கொம்பினையும்,

எழில் நடை - அழகினையுடைய நடையினையும்,

158. தாழ் பெரு †தட கை - நிலத்தே கிடக்கின்ற பெரிய வினையினையுடைய கையினையுமுடைய,

158-9. உயர்த்த யானை எருத்தம் ஏறிய திரு கிளர் செல்வனும் - எல்லாராலும் உயர்த்துச் சொல்லப்படுகின்ற யானையை புறக்கழுத்திலே ஏறிய திருமகள் விளங்கும் இந்திரனும்,

உயர்த்த உயர்த்தவென விகாரமுமாம்.

நாட்டத்தினையும் (155) கொற்றத்தினையுமுடைய (156) செல்வனென்க.

மருப்பு (157) முதலியவற்றையுடைய யானையென்க.

160-61. நால் பெரு தெய்வத்து நல் நகர் நிலைஇய உலகம் காக்கும் ஒன்று பரி கொள்கை - நான்காகிய பெரிய தெய்வத்தையுடைய நன்முகிய ஊர்கள் நிலைபெற்ற உலகத்தைக் காக்கும் ஒருதொழிலையே விரும்பிய கோட்பாட்டையுடைய செல்வன் (151) என முன்னேகூட்டித் திருமாலுக்கு அடையாக்குக.

---

* வலயினை உயரிய - வெற்றியினல் எறிய (வேறுரை.)

† "தடவெண்கிளவி கோட்டமுஞ் செய்யும்" (தொல். உரி. 25)

*நாற்பெருந்தெய்வமாவன : இந்திரன், யமன, வருணன், சோமனென்னுந் தெய்வங்கள்.

162. பலர் புகழ் மூவரும் தலேவராக—பலரும் புகழ்கின்ற அயன் அரி அரனென்னு மூவரும் தத்தமக்குரிய தொழில்களே முன்புபோலே நிகழ்த்திக் தலேவராகவேண்டி,

என்றது : பின்னேயார் அயனைச்சபித்தலின், அயன் படைத்தற்றொழிலேத் தவிரவே னேயிருவர்க்கும் காத்தற்றொழிலும் அழித்தற்றொழிலும் இன்ருமா கலின் மூவரும் தத்தமக்குரிய தொழில்களேப்பெற்றுத் தலேவராகவென்ருர்.

[163ஆ. எழுது ஞாலத் தன்னிற் ருேன்றித், தாமரை பயந்த தாவி னூழி, நான்முக னொருவற் சுட்டி.]

ஞாலத்தன்னில் தோன்றி †ஏம உறு நான்முக ஒருவன் சுட்டி—பின்னேயார் சபித்தலாலே மண்ணிடத்தே தோன்றி மயக்கமுறுகின்ற நான்குமுகத்தை யுடைய அபனேப் பழையகிலேயிலே நிறுத்தக் கருதி,

தாமரை பயந்த ஊழி தா இல் ஒருவன்—திருமாலுடைய திருவுந்தித்தாம ரை பெற்ற ஊழிகடோறும் தன் படைத்தற்றொழிலில் வருத்தமில்லாத ஒரு வன் (165)

இனித் தாமரையென்னும் எண்ணேத்தந்த அழிவில்லாத ஊழிக்காலத்தை யுடைய அயனுமாம்.

பயந்த ஒருவனென்க.

சாபமென்றது : பின்னேயார் அசுரரையழித்துத் தேவரைக் காத்ததற்கு இந் திரன்மகள் தெய்வயானேயாரை அவர்க்குக் கொடுத்தலிடத்தே, பின்னேயார் தம் கையில் வேலேநோக்கி, "நமக்கு எல்லாந்தந்தது இவ்வேல்" என்ன, அருகிரு ந்த அயன் "இவ்வேலிற்கு இந்நிலே என்னல் வந்தன்றே" என்ருனக, "நங் கையில் வேலுக்கு நீ கொடுப்பதொரு சத்தியுண்டோ" என்று கோபித்து, "இங் ஙனங் கூறிய நீ மண்ணிடைச்செல்வாய்" என்ற சாபத்தை.

காண் வர—அழகு தோன்ற,

166. பகலில் தோன்றும் இகல் இல் காட்சி—ஒருபொருள் பலவாமாறு பருத்துக்காண்டற்கண் வேறுபடத் தோன்றும் தம்முள் மாறுபாடில்லாத அறிவி னேயுடைய,

167. ‡நால் வேறு இயற்கை பதினெரு மூவரொடு—நான்காகிய வேறு பட்ட இயல்பினேயுடைய மூப்பத்துமூவரும்,

என்றது : ஆதித்தன், உருத்திரன், வசு, மருத்துவனென்னும் ஒரோவோர் பொருள்கள் பலவாகப் பகுக்குங்காற் பன்னிருவர் பதினெருவர் எண்மர் இருவ ராகப் பகுக்க நான்குகூறும் மூப்பத்துமூவாயினுரென்றவாறு; பதினெருவரா

---

* நாற்பெருந் தெய்வம் - அந்தணர் தெய்வம், அரயர்தெய்வம், வயிர் தெய்வம், சூத்திரர் தெய்வம்; என்பதைச் சிலபபதிகாரத்தும் கண்டுகொள்க. (வேறுரை)

† "எழுறுகடுந்திண்டேர்" (கலி. 27)

‡ நால் வேறு இயற்கை - சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் (வே றுரை)

இய மூவசென்க. அவர் ஆதித்தீ பன்னிருவரும், உருத்திரர் பதினொருவரும், வசுக்கள் எண்மரும், மருத்துவர் இருவருமாம்.

ஒடு, எண்ணொடு.

168. ஒன்பதிற்று இரட்டி உயர் நிலை பெறீஇயர்—பதினெண் வகையா இய உயர்ந்த நிலையைப் பெற்றவரும்,

என்றது, பதினெண்கணங்களே. அவர்: தேவரும், அசுரரும், தைத்தியரும், கருடரும், இன்னரரும், கிம்புருடரும், இயக்கரும், விஞ்சையரும், இராக்கதரும், கந்தருவரும், சித்தரும், சாரணரும், பூதரும், பைசாசகணமும், தாராகணமும், நாகரும், ஆகாயவாசிகளும், போகபூமியோருமெனவிவர்; இதற்குப் *பிறவாறுமுரைப்பர். பெறீஇயர், தொழிற்பெயர்.

169. மீன் பூத்தன்ன தோன்றலர் - உடுக்கள் பொலிவுபெற்றுத் தோன்றினலொத்த தோற்றத்தையுடையராய்,

169-70. மீன் சேர்பு வளி இளிர்ந்தன்ன செலவினர் - மீன்களுலாவு இன்றலிடத்தைச்சேர்ந்து காற்று எழுந்தாலொத்த செலவினை யுடையராய்,

170-71. வளி இடை தீ எழுந்தன்ன நிறலினர் = †காற்றிடத்தே நெருப் பெழுந்தாலொத்த வலியினையுடையராய்,

171-2. தீ பட உரும் இடித்தன்ன குரலினர் - நெருப்புப்பிறக்க உருமேறு இடித்தாற் போன்ற குரலினையுடையராய்,

இவை வினையெச்சமுற்று.

172-3. [விழுமிய, வுறுகுறை மருங்கிற்றம் 'பெறுமுறை கொண்மார்:] தம் விழுமிய பெறுமுறை குறை உறு மருங்கில் கொண்மார் - தம்முடைய சீரிய படைத்தல் காத்தல் அழித்தலென்னுந் தொழில்களைப் பண்டுபோலப் பெறுமுறைமையினைக் குறைவேண்டி நின்று பெறுங்கூற்றாலே முடித்துக்கோடற்கு,

174. அந்தரம் கொட்பினர் - ஆகாயத்தே சுழற்சியினையுடையராய்,

[வந்துடன் காண:] உடன் வந்து காண—சேரவந்து காணும்படியாக,

175. தா இல் கொள்கை மடந்தையொடு—வருத்தமில்லாத அருட்கற்பினையுடைய தெய்வயானையாருடன்,

175-6. [சின்னுள், ஆவினன்குடி யசைதலும் உரியன்] ஆவினன்குடி சின்னுள் அசைதலும் உரியன் - ஆவினன்குடியென்னும் ஊரிலே சிலநாள் இருத்தலுமுரியன் ;

பலர்புகழ்மூவரும் தலைவராகவேண்டி (162) அதற்குக் குறைபாடுண்டாக் இன நான்முகனொருவனைக்கருதி (165) ஒன்றுபுரிகொள்கைப் (161) புள்ளணி நீள்கொடிச்செல்வனும் (151) முரண்மிகு செல்வனும் (154) யானையெருத்தமே றிய செல்வனும் (159) மூப்பத்துமூவரும் (167) பதினெண்கணங்களும் (168) தோன்றலர் (169) செலவினர் (170) நிறலினர் (171) குரலினர்

* பிறவாறுரைத்தல், புறநானூறு, கடவுள்வாழ்த்தின் உரையிலும், சிலப் பதிகாரம், 5: 176 - ஆம் அடியுரையிலும், நிகண்டுகளிலும் காணலாகும்.

† "கான் மூளியெரி நிகழ்ந்தன்ன நிறையருஞ் சிற்றம்" (பதிற். "இருங்கண்.")

(172) கொப்பினாய் உடன்வந்து (174) தம் (173) விழுமிய (172) பெறுமுறை குறையுறுமருங்கின் முடித்துக் கோடற்கு (173) மென்மொழிமேவண் இன்ன ரம்புனர (142) முனிவர் (137) மேவர (186) மூற்புகக் (137) காணத் (174) தான் ஆவினன்குடியிலே காண்வர (165) அசைதலுறுமியனெ முடிக்க.

கந்தருவர் பாட்டான் முனிவுதீர்ப்பார்.

முனிவர் தம்மை மருமைபற்றி முன்னேசென்றார்.

இனிச் சித்தன்வாழ்வென்று சொல்லுகின்றவூர் மூற்காலத்து ஆவினன் குடியென்று பெயர்பெற்றதென் றுமாம். அது "நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன் வாழ் - வில்லங் தொறுஞ்ஞ் நெரியுடைத்து - நல்லரவப், பாட்டுடைத் துச் சோழன் வழிவந்த பாண்டியனின் - ஞட்டுடைத்து நல்ல தமிழ்" என்று ஔவையார் கூறியதனுலுணர்க; *சித்தனேன்பது பின்னேயாருக்குத் திரு நாமம்.

அ.நா அன்று—அதுவன்றி,

கூ.—திருவேரகம்.

177. இரு மூன்று எய்திய இயல்பினின் வழாஅது—†ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றலென்னும் ஆறுகிய நன்மைபொருந்திய இல க்கணத்தில் வழுவாமல்,

வழாமல், வழுவாமலெனத் திரிக்க.

178. இருவர் சுட்டிய பல் வேறு தொல் குடி—தாயும் தந்தையுமாகிய இருவர் குலத்தையும் உலகத்தார் நன்றென்றுமதித்த பலவாய் வேறுபட்ட பழை யகுடியிற் பிறந்த இருபிறப்பாளர் (182)

குடி - ‡ குண்டினர், காசிபர் என்றுற்போல்வன.

179 - 80. [அறுகான் கிரட்டி யினமை நல்லியாண், டாறினிற் கழிப்பிய:] அறுகாண்கு இரட்டி ஆண்டு நல்லினமை ஆறினில் கழிப்பிய—இருபத்தாண் கின் இரட்டியாகிய நாற்பத்தெட்டியாண்டு நல்லினமையை வேதங்கூறிய நெறியிலே போக்கிய இருபிறப்பாளர் (182),

இவர் பிரமசரிபங்களாத்த அந்தணர்.

அறன் § வில் கொள்கை—அறத்தை எப்பொழுதும் கூறுகின்ற கோட்பா ட்டினையும்,

181. மூன்று வகை குறித்த முத்தீ செல்வத்து—நாற்கதரமும் மூச்சது ரமும் வில்வடிவுமாகிய §மூன்றுவகையைக் கருதின ஆகவனீயம் தக்கிணக்கினி காருகபத்தியம் என்னும் மூன்று நியாளுண்டாகிய செல்வத்தினையுமுடைய,

* இது முருகக்கடவுள் ஆயிராமத்துள் ஒன்று.

† "ஓதல் வேட்ட லவைபிறர்ச் செய்த, லீத லேற்றலென் முறுபுரிச் தொழுகு, மறம்புரி யந்தணர்" (பதிற். 24.)

‡ குண்டலரென்றும் பிரதிவேறுபாடுண்டு.

§ இவற்றுட் பின்னைய இரண்டன் வகையும் இக்காலத்து வழங்குவனவற் றிற்கு வேறுபட்டிருத்தலின், இம்மூன்று வகையும் சாகாபேதமாக இருத்தல் வேண்டுமெனக் கூறுகின்றனர்.

182. இருபிறப்பாளர்—உபாயனத்துக்கு முன்பு ஒருபிறப்பும் பின்பு ஒரு பிறப்புமாகிய இருபிறப்பினையுடைய அந்தணர்,

பொழுது அறிந்து நவல—தாங்கள் வழிபடுங்காலமறிந்து தோத்திரங்களைக் கூற,

183. ஒன்பது கொண்ட மூன்று புரி நுண் ஞாண்—மூந்நூற்கொண்டு மூப்புரியாக்குதலின், ஒன்பதாகியநூலைத் தன்னிடத்தே கொண்ட ஒருபுரி மூன்றாகிய நுண்ணிய பூணூலையும்,

ஞாணினையும் (183) கொள்கையினையும் (180) செல்வத்தினையுமுடைய (181) இருபிறப்பாளரென்க.

184. புலரா காழகம் புலர உடீஇ—நீராடுங்கால் தோய்க்கப்பட்ட கலிங்கம் உடம்பிலே இடந்துபுலர உடுத்து,

என்றது, ஈரத்துடனேயிருந்து வழிபடுதல் கூறிற்று.

185. உச்சி கூப்பிய கையினர் தன் புகழ்ந்து—தலைமேலே வைத்த கையினையுடையராய்த் தன்னைத் துதித்து,

186. ஆறெழுத்து அடக்கிய அரு மறை கேள்வி—ஆறெழுத்தினைத் தன்னிடத்தே அடக்கியிருக்கின்ற கேட்டற்கரிய, மறைய உச்சரிக்கப்படும் மந்திரத்தை,

அது, *"நமோகுமாராய" என்பதாம்.

187. நா இயல் மருங்கில் நவில பாடி—நாப் புடைபெயரும் அளவிலே பயில உச்சரித்து,

188. விரை உறு நறு மலர் எந்தி—மணமிக்க நறிய பூவை எடுத்து,

188-9. பெரிது உவந்து ஏரகத்து உறைதலும் உரியன்—பெரிது மகிழ்ந்து ஏரகமென்கின்றவூரிலே இருத்தலுமுரியன்;

இருபிறப்பாளர் (182) புலரவுடீஇத் (184) தற்புகழ்ந்து (185) கறுமலரேந்திக் (188) கூப்பியகையராய் (185) நவிலப்பாடிப் (187) பொழுதறிந்து நவல (182) அதற்குப் பெரிதுமகிழ்ந்து (188) ஏரகத்துறைதலும் உரியனெனமுடிக்க.

ஏரகம் · மலைநாட்டகத்தொருதிருப்பதி.

அதாஅன்று—அதுவன்றி,

ரு—தன்றுரைதாறுடல்.

190. பைங்கொடி—பச்சிலைக்கொடியாலே,

எல்லாவற்றினும் பசுத்திருத்தலிற் பச்சிலையென்று பெயர்பெற்றது; பச்சிலையென்னுது சினவினைமுதன்மேலேற்றிப் பைங்கொடி யென்றார்.

நறை காய் - நறுநார்த்தத்தையுடையகாயை,

அது சாதிக்காய்

இடை இடுபு—நடுவேயிட்டு,

வேலன்—படிமத்தான்,

---

* 'நமக்குமாராய' என்னும் பிரதிபேதமுண்டு.

191. அம் பொதி புட்டில்—அழகினையுடைத்தாகிய பொதிதலையுடைய தக்கோலமென்னும் முதலின்காய்,

அது புட்டில்போறலிற் புட்டிலென்றார்.

விரைஇ—கலந்து,

* குளவியொடு—காட்டுமல்லிகையுடனே,

192. †வெள் கூதளம் தொடுத்த கண்ணியன் - வெண்டாளியையும் கட்டின கண்ணியையுடைய்ஞ்,

193. நறு சாந்து அணிந்த கேழ் கிளர் மார்பின்—நறிய சந்தனத்தைப் பூசிய நிறம்விளங்கும் மார்பினையுடைய வேலன் (190),

வேலன் பைங்கொடியாலே (190) புட்டில்வீரைஇ (191) நறைக்காய் இடையிடுபு (190) குளவியொடு (191) கூதளத்தையுங் கட்டிய கண்ணியனுய் (192),

கண்ணியன், வினையெச்சவினைக்குறிப்புமுற்று.

194. கொடு தொழில் வல் வில் கொலையுய கானவர்—கொடிய தோழிலையுடைய வலியவில்லாற் கொல்லுதலேச்செய்த குறவர்,

'குலேயிய' என்றபாடத்திற்கு வில்லேவினைத்த கானவரென்க. எனவே கோறல் பெற்றும்.

195. நீடு அமை வினேத்த தேன் கள் தேறல்—நெடுகின மூங்கிலிலே யிருந்து முற்றின தேனேத்செய்த கட்டெளிவை,

196. குன்றகம் சிறுகுடி கினேயுடன் மிழ்ந்து—மலேயிடத்துச் சிறிய ஊரிலே இருக்கின்ற சுற்றத்தோடே உண்டுமகிழ்ந்து,

197. ‡ தொண்டகம் சிறு பறை குரவை அயர — அங்ஙனத்துக்குரிய தொண்டகமாகிய சிறுபறையினது தாளத்திற்குக் குரவையாட.

கானவர் தேறலேமகிழ்ந்து குரவையாடவென்க.

198 - 9. [விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற், §குண்டுசுனே பூத்த வண்டுபடு கண்ணி:]

விரல் உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறு கான் கண்ணி—விரலதேலேப்பாலே வலிய அலர்த்தஅலர்ந்த பூவாகலின் வேறுபடுகின்ற நறியமணத்தினேயுடைய தலேயிற்சூடும் மாலேயினேயும்,

குண்டு சுனே பூத்த வண்டு படு கண்ணி—அதுதான் ஆழ்ந்த சுனேயிற்பூத்த பூவாற்செய்த வண்டுவீழ்கின்ற கண்ணி.

இஃது ஒற்றுமை நயம்பற்றிச் செயப்படுபொருண்மேல் நின்றது.

'கார்க் குண்டுசுனே' என்று பாடமாயின், கரிய ஆழ்ந்த சுனேயென்க.

200. இணைத்த கோதை—இதழ்பறித்துக்கட்டின மாலேயினேயும்,

---

* தாளியொடு (வேறுரை.)

† வெள்ளைக் கூதளப்பூவையும். (வேறுரை.)

‡ "தொண்டகச் தொடுமின் சிறுபறை தொடுமின்" (சிலப். குன்ற.)

§ "குண்டுசுனைக் குவளேயொடு" (குறுந். 59.)

பத்துப்பாட்டு

அனைத்த கூந்தல் - சேர்த்தின கூந்தலினையும்,
201. முடித்த குல்லை—இலையைத் தலையிலே யணிந்த கஞ்சங்குல்லையினை

இலை உடை நறு பூ—இலையையுடைய நறிய பூங்கொத்துக்களையும்,
202 - 3. செ கால் மாஅத்த வால் இணர் இடை இடுபு சுரும்பு உண
)த்த பெரு தண் மா தழை—செவ்விய காலினையுடைய மராத்திடத்தனவா
வெள்ளிய கொத்துக்களை நடுவேவைத்துச் சுரும்பு தேனை யுண்ணும்படி
)த்த பெரிய குளிர்ந்த அழகினையுடைய தழையை,
குல்லையையும் பூவையும் வாலிணர் இடையிட்டுத் தொடுத்த தலீழயென்க,
204. [திருந்துள முல்லை நிலைப்ப வடிஇ:] காழ் திருந்து அல்குல் நிலைப்ப
டி—வடங்கள் திருத்தும் அல்குலிடத்தே அசையும்படி உடுத்தி,
அல்குற்நிலைப்பவென்னும் வல்லொற்று விகாரமாயிற்று,
205. [மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு:]
மயில் கண்டன்ன மகளிரொடு—சாயலுண்டமையான் மயிலைக் கண்டாற்
ன்ற மகளிரொடு,
மடநடை மகளிர்—மடப்பம்பொருந்திய ஒழுக்கத்தினையுமுடைய மகளிர்.
தழையை யுடுத்து மயில்கண்டன்ன மகளிரென்க.
உடுத்தென்னும் வினையெச்சம் அன்னவென்னும் பெயரெச்சமாகிய உவம
போடு முடிந்தது.
கண்ணியினையும் கோதையினையும் சேர்த்தின கூந்தலினையும் மடநடையி
முடைய மகளிரென்க.
இம்மகளிர் தன்னைச சேவிக்கு மகளிர்.
206. செய்யன்—சிவந்தவன்,
206 - 7. சிவந்த ஆடையன் செ அரை செயலை தண் தளிர் துயல்வரும்
னன்—சிவந்த ஆடையுடுத்துச் சிவந்த அரையினையுடைய அசோகிற்
ர்ந்த தளிர் அசையுங்காது பொருந்தி,
208. கச்சினன் கழலினன் செச்சை கண்ணியன்—கசசைக் கட்டிக்
யணிந்து வெட்சிமாலையைச சூடி,
209. குழலன் கோட்டன் குறு பல்லியத்தன்— குழலூதிக் கொம்
குறித்துச் சிறிய பல்லியங்களை எழுப்பி,
210-11. தகரன் மஞ்ஞையன் புகர் இல் சேவலங்கொடியன்—இடா
பின்னிட்டு மயிலேயேறிக் குற்றமில்லாத கோழிக்கொடியை உயர்த்து,
நெடியன்—தான் வேண்டிய வடிவுகோடலிற் பிள்ளையாயிராது நெடுக
ந்து,
தொடி அணி தோளன்—தோளிலே தொடியையணிந்து,
212. நரம்பு ஆர்த்தன்ன இன் குரல் தொகுதியொடு—நரம்பு ஆரவாரித்தா
ற்ற இனிய மிடற்றையுடைய பாடுமகளிரோடே,
இவர்கள் தன்னைச் சேவித்துப்பாடுமகளிர்.

3 - 4. [குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயன், மருங்கிற் கட்டிய பு துகிலினன்:]

நங்கில் கட்டிய குறும்பொறி கொண்ட—இடையிலே இறுகக் கட்டிய கத்தின்மேலே உடுப்பதாக உட்கொண்ட,

ன் நேர்பு நறு தண் சாயல் துகிலினன்—நாகவிட்டமையால் நிலத்தைப் நி நறிய குளிர்ந்த மென்மையை உடைத்தாகிய துகிலினையுடுத்த,

5-6. [முழவுறழ் தடக்கையி னியல வேந்தி, மென்றோட் பல்பிணை தழீ ப்த்தற்று:]

ல் தோள் பல் பிணை இயல—மெல்லிய தோளினையுடைய பலவாகிய ணமோலும் மகளிர் குரவையாடி அசைய,

வர்கள் மெய்தீண்டி விளையாடுதற்குரிய மகளிர்.

முழவு உறழ் தட கையின் தழீஇ எக்தி தலேத்தந்து—தண்ணுடைய முழ ந்த பெருமையையுடைய கையிஞலே அவர்கன்கையினைத் தழீஇ எடுத் ண்டு முதற்கைகொடுத்து,

7. [குன்றுதொ ருடலு நின்றதன் பண்பே:] குன்றுதொறு ஆடலும் ற பண்பு—மலேகடோறுஞ்சென்று விளையாடுதலும் தனக்கு நிலேநி னம்;

ாணியன் ஆடையனென்பனமுதலியன விளேயெச்ச வினேக்குறிப்பு ர்—"முன்னத்தி னுணருங் கினவியு முளவே" என்னுஞ் சூத்திரவி தியால் னெச்சப்பொருளே உணர்த்தின.

ாவர் (194) குரவையயர (197) அதனேக்கண்டு மென்றோட் பல்பிணை ரவையாடியசைய (215) அதனேப்பொருதே செய்யன் (206) வேவன் தாடுத்த கண்ணியைச்சூடி (192) உடுத்தப் (206) பொருக்கித் (207) ணிந்து சூடி (208) ஊதித் குறித்து எழுப்பிப் (209) பின்னிட்டு எறி யர்த்து வளர்ந்து தொடியையணிந்து (211) துகிலேயுடுத்துத் (214) புடனே (212) மகளிரோடே(205) மலேகடோறுஞ் சென்று (217)தழீ எக்தித் (215) தலேத்தந்து (216) ஆடலும் நின்றதன்பண்பென வினை

ரவை யென்பது கூறுங் காலேச், செய்தோர் செய்த காமமும் வென் ய்தக் கூறு மியல்பிற் ரூகும்" எனவரும்.

ாஅன்று—அதுவன்றி,

கூ.—பழமுதிர்சோலே.

நிறுனே மலரொடு விரைஇ மறி அறுத்து—நிறிய நிணையரிசி களோடே கலந்து பிரப்பரிசியாகவைத்து மறியையறுத்து,

வாரணக்கொடியொடு வயின் பட நிறீஇ—கோழிக்கொடியோடே பலிடத்[illegible]நிற்கும்படி நிறுத்தி,

---

தொல்காப்பியம், எச்சவியல், 68.

அனைத்தி கூந்தல் - சேர்த்தினை கூந்தலினையும்,

201. முடித்த குல்லை—இலையைத் தலையிலே யணிந்த கஞ்சங்குல்லையினையும்,

இலை உடை நறு பூ—இலையையுடைய நறிய பூங்கொத்துக்களையும்,

202 - 3. செ கால் மராஅத்த வால் இணர் இடை இடு சுரும்பு உணத் தொடுத்த பெரு தண் மா தழை—செவ்விய காலினையுடைய மராத்திடத்தனவாகிய வெள்ளிய கொத்துக்களை நடுவேவைத்துச் சுருப்பு தேனை யுண்ணும்படி தொடுத்த பெரிய குளிர்ந்த அழகினையுடைய தழையை,

குல்லையையும் பூவையும் வாலிணர் இடையிட்டுத் தொடுத்த தனிழையென்க,

204. [திருந்துழல் முல்கு நிலைப்ப வுடீஇ:] காழ் திருந்து அல்குல் நிலைப்ப உடீஇ—வடங்கள் திருந்தும் அல்குலிடத்தே அசையும்படி உடுத்து,

அல்குற்நிலைப்பவென்னும் வல்லொற்று விகாரமாயிற்று,

205. [மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு:]

மயில் கண்டன்ன மகளிரொடு—சாயலுண்டமையான் மயிலைக் கண்டாற் போன்ற மகளிரொடு,

மடநடை மகளிர்—மடப்பம்பொருந்திய ஒழுக்கத்தினையுமுடைய மகளிர்.

தழையை யுடுத்து மயில்கண்டன்ன மகளிரென்க.

உடுத்தென்னும் வினையெச்சம் அன்னவென்னும் பெயரெச்சமாகிய உவம உருபோடு முடிந்தது.

கண்ணினியினையும் கோதையினையும் சேர்த்தின கூந்தலினையும் மடநடையினையுமுடைய மகளிரென்க.

இம்மகளிர் தன்னைச் சேவிக்கு மகளிர்.

206. செய்யன்—சிவந்தவன்,

206 - 7. சிவந்த ஆடையன் செ அரை செயலை தண் தளிர் துயல்வரும் காதினன்—சிவந்த ஆடையுடுத்துச் சிவந்த அரையினையுடைய அசோகிற் குளிர்ந்த தளிர் அசையுங்காது பொருந்தி,

208. கச்சினன் கழலினன் செச்சை கண்ணியன்—கசகைக் கட்டிக் கழலையணிந்து வெட்மொலையைச் சூடி,

209. குழலன் கோட்டன் குறு பல்லியத்தன்— குழலூதிக் கொம்பைக்குறித்துச் சிறிய பல்லியங்களை எழுப்பி,

210-11. தகரன் மஞ்ஞையன் புகர் இல் சேவலங்கொடியன்—கிடாயைப் பின்னிட்டு மயிலையேறிக் குற்றமில்லாத கோழிக்கொடியை உயர்த்து,

நெடியன்—தான் வேண்டிய வடிவுகொடலிற் பின்னியாயிராது நெடுகவளர்ந்து,

தொடி அணி தோளன்—தோளிலே தொடியையணிந்து,

212. நரம்பு ஆர்த்தன்ன இன் குரல் தொகுதியொடு—நரம்பு ஆரவாரித்தாலொத்த இனிய மிடற்றையுடைய பாடுமகளிரோடே,

இவர்கள் தன்னைச் சேவித்துப்பாடுமகளிர்.

213 - 4. [குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல், மருங்கிற் கட்டிய நிலனேர்பு துவினின:]

மருங்கில் கட்டிய குறும்பொறி கொண்ட—இடையிலே இறுகக் கட்டிய உதரபந்தத்தினிலேயே உடுப்பதாக உட்கொண்டு,

நிலன் நேர்பு நறு தண் சாயல் துவினின—நாலவிட்டமையால் நிலத்தைப் பொருந்தி நறிய குளிர்ந்த மென்மையை உடைத்தாகிய துவினினையுடுத்து,

215-6. [முழவுறழ் தடக்கையி னியல மேந்தி, மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து:]

மெல் தோள் பல் பிணை இயல—மெல்லிய தோளினையுடைய பலவாகிய மான்பிணையோடும் மகளிர் குரவையாடி அசைய,

இவர்கள் மெய்நீண்டி வினையாடுதற்குரிய மகளிர்.

முழவு உறழ் தட கையின் தழீஇ ஏந்தி தலைத்தந்து—தன்னுடைய முழ வையொத்த பெருமையையுடைய கையிலுலே அவர்கள்கையினைத் தழீஇ எடுத் துக்கொண்டு முதற்கைகொடுத்து,*

217. [குன்றுதொ றாடலு நின்றதன் பண்பே:] குன்றுதொறு ஆடலும் தன் நின்ற பண்பு—மலைகடொறுஞ்சென்று வினையாடுதலும் தனக்கு நிலைநி ன்ற குணம்;

கண்ணியன் ஆடையனென்பனமுதலியன வினையெச்ச வினைக்குறிப்பு முற்று; *"முன்னத்தி னுணருங் கினவியு முளவே" என்னுஞ் சூத்திரவிதியால் செய்திதெனச்சப்பொருளே உணர்த்தின.

கானவர் (194) குரவையயா (197) அதனைக்கண்டு மென்றோட் பல்பிணை (216) குரவையாடியசைய (215) அதனைப்பொருதே செய்யன் (206) வேண் (190) தொடுத்த கண்ணியைச்சூடி (192) உடுத்துப் (206) பொருந்தி (207) கட்டி அணிந்து சூடி (208) ஊதிக் குறித்து எழுப்பிப் (209) பின்னிட்டு எறி (210) உயர்த்து வளர்ந்து தொடியையணிந்து (211) துவினையுடுத்துத் (214) தொகுதியுடனே (212) மகளிரோடே(205) மலைகடொறுஞ் சென்று (217)தழீ இ (216) ஏந்தித் (215) தலைத்தந்து (216) ஆடலும் நின்றதன்பண்பென வினை முடிக்க.

"குரவை யென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்த காமமும் வென் றியு, மெய்தக் கூறு மியல்பிற் றாகும்" எனவரும்.

அதாஅன்று—அதுவன்றி,

கூ.—பழமுதிர்சோலை.

218. நெறுநினே மலரொடு விரைஇ மறி அறுத்து—நெய்ய நினையரிசி யைப் பூக்களோடே கலந்து பிரப்பரிசியாகவைத்து மறியையறுத்து,

219. வாரணக்கொடியொடு வயின் பட நிறீஇ—கோழிக்கொடியோடே தான் அவ்விடத்[illegible] நிற்கும்படி நிறுத்தி,

---

* தொல்காப்பியம், எச்சவியல், 63.

220. *ஊர் ஊர் கொண்ட சீர் கெழு விழவினும்—ஊர்தோறும் ஊர்தோறும் எடுத்துக்கொண்ட தலைமைபொருந்தின விழாவின்கண்ணும்,

221. ஆர்கலர் ஏத்த மே வரு நிலையினும்—தன்மேல் அன்புடையார் ஏத்துதலாலே தன்மனம் பொருந்துதல் வருகின்ற இடத்தினும்,

222. வேலன் தைஇய வெறி அயர் களனும்—படிமமதான இழைத்த வெறியாடுகளத்தினும்,

பின்னோர்வேலைத் தனக்கு அடையாளமாகக் கொண்டு நிரிதலின், வேல னென்னும்; இது †"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்" எனப் புறத்திற் கும் கூறியது.

223. காடும் காவும் கவின் பெறு திருக்கியும்—காட்டினும்பொழிலினும் அழகுபெறுகின்ற ஆற்றிடைக்குறையினும்,

224. யாறும் குளனும்—ஆறுகளினும் குளங்களினும்,

வேறு பல் வைப்பும்—முற்கூறிய ஊர்களன்றி வேறுபட்ட பலவாகிய ஊர்க ளினும்,

225. சதுக்கமும்—நாற்சந்தியினும்,

சந்தியும்—முச்சந்தியினும் ஐஞ்சந்தியினும்,

புது பூ கடம்பும்—புதிய பூக்களையுடைய கடம்பினும்,

226. ‡மன்றமும்—ஊர்க்குநடுவாய் எல்லாருமிருக்கும் மரத்தடியினும்,

பொதியிலும்—அம்பலத்தினும்,

§கந்து உடை நிலையினும்—ஆனிரண்டு குற்றியையுடைய இடத்தினும்,

227. [மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர] மாண் தலை கொடி யொடு உரு கெழு வியனகர் (244) அமைவர மண்ணி—மாட்சிமைப்பட்ட தலை மையினையுடைய கோழிக்கொடியோடே உருகெழு வியனகரை அமைவரப் பண்ணி,

ஒடு, வேறுவினை யொடு.

இனி, 'ஆண்டலைக்கொடி' எனறு பாடமாயின், பேய்முதலியன பலியை நுகராமல் தலை ஆண்மகன்றலையும், உடல் புள்ளின்வடிவுமாக எழுதின கொடி யென்க.

228. நெய்யோடு ஐயவி அப்பி - நெய்யோடே வெண்சிறு சுடுகையும் அப்பி,

‖ஐது உரைத்தது—தான் வழிபடுதற்குரிய மந்திரத்தைத் தோன்றுமல் உச்ச ரித்து,

---

* அடுக்கு, பன்மை. (வேறுரை.)

† தொல்காப்பியம், புறத்திணையியல், 5.

‡ "மன்றம் பொதியிலு மாமயில் கோ" (சூடாமணி. 34).

§ யானைத் தறியிடத்தினும்; பசுமுதலானவை உரிஞ்சுதறியெனினுமமை யும். (வேறுரை).

‖ சிறிது மந்திரங்களையுமோதி (வேறுரை.)

229. குடந்தம்பட்டு—வழிபட்டு,

ஒணக்கம் பட்டென்றும் உரைப்பர்; குடவென்பது தடவென்பதுபோல வினை உணர்த்துவதோர் உரிச்சொல்லாதலின், அதனடியாகப் பிறந்த பெயரும். *

கொழு மலர் நிதறி – அழகியமலர்களைத் தூவி,

230. முரண் கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ—தம்மிற் பகைத் தொண்ட வடிவினையுடைய இரண்டு அறுவையை உள்ளொன்றும் புறம் பொன்றுமாக உடுத்து,

231. செ நூல் யாத்து—சிவந்தநூலைக் கையிலே காப்புக்கட்டி,

நூலொழுக்கி எல்லைப்படுத்தென்றுமாம்.

வெள் பொரி சிதறி—வெள்ளிய பொரியைத்தூவி,

232. மத வலி நிலைஇய மா தாள் †கொழு விடை—மிகுதியையுடைய வலி நிலைபெற்ற பெருமையையுடைத்தாகிய காலையுடைய கொழுவிய இடபனை,

233. குருதியொடு விரைஇய தூ வெள் அரிசி—உதிரத்தோடே பிசைந்த நாய வெள்ளரிசியை,

234. சில் பலி செய்து—சிறுபலியாக இட்டு,

பல் பிரப்பு இரீஇ—பலபிரப்பும் வைத்து,

இனிப் பிரப்புக்கூடையென்பாருமூளர்.

235. ‡ சிறு பசுமஞ்சளொடு நறு விரை தெளித்து—சிறிய பசுமஞ்சளோடே நறிய சந்தனமுதலியவற்றையும் தெளித்து,

இனிச் சிறுபசுமஞ்சள் மஞ்சளில் ஒரு சாதிவிசேடமுமாம்.

விரை, ஆகுபெயர்.

236 - 7. [பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை, துணையற வறுத்துத் தூங்க நாற்றி:]

பெரு தண் கணவீரம் மாலை—பெரிய குளிர்ந்த செவ்வலரிமாலையையும்,

நறு தண் மாலை—ஒழிந்த நறிய குளிர்ந்த மாலைகளையும்,

அறுத்து—தலையொக்க அறுத்து,

§துணை அற தூங்க நாற்றி – தமக்கு ஒப்பில்லாதபடி அசையத்தூக்கி,

இனித் தம்மில் இணையொத்த அறுப்பாக அறுத்தென்றுமாம்.

---

* இதன்பின்னே, குடந்தமாவது: "கால்வீரன் மூடக்கிப் பெருவிர னிறுதி - நெஞ்சிடை வைப்பது குடந்த மாரும்" என்பது ஒரு பிரதியிலுள்ளது.

† யானைத்திரள். (வேறுரை.)

‡ காட்டு மஞ்சள். (வேறுரை.)

§ துணை உற அறுத்து - இணையொக்க நறுக்கி, தூங்காற்றி - அசைதரப் பக்கோயிலாகத் தூக்கி. (வேறுரை.)

238. *களி மலை யெம்பில் நல் ரகர் வாழ்த்தி - செறிந்த மலைப்பக்கத்தி லுள்ள கல்ல ரார்களைப் *பகையும் பிணியும் பகையும் நீங்குகவென்று வாழ்த்தி,*

கதர் - பின்னையார்கோயிலென்னுமாம்.

239. †*நறு புகை எடுத்து—நறிய தூபங்கொடுத்து,*

குறிஞ்சி பாடி - அங்கிலத்திற்கு அடைத்த குறிஞ்சிப்பண்ணைப் பாடி,

240. *இமிழ் இசை அருவியோடு இன் இயம் கறங்க - முழங்குகின்ற ஓசையினையுடைய அருவியோடே இனிய பல்லியங்களும் ஒலியாநிற்க,*

241-2. *உருவம் பல் பூ தூஉய் வெருவர ‡குருதி செந்தினை பரப்பி— செவ்வ நிறத்தினையுடைய பலபூக்களையும் தூவி அச்சம்வரும்படி உதிரமொத்த செவ்வ தினையினையும் பரப்பி,*

242 - 4. *குறமகள் §முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க ||முருகு ஆற்றுப்படுத்த உரு கெழு வியன் நகர்—குறச்சாதியாகிய மகள் முருகனுவக்கும் வாச்சியங்களை வாசிக்கப்பண்ணித் தெய்வமின்றென்றார் அஞ்சும்படியாகப் பிள் ளையார் வரும்படி வழிப்படுத்தின அச்சம் பொருந்தின அகற்சியையுடைய நக ரின்கண்ணே,*

¶"வேலன் வெறியாட் டயர்ந்த" என்புழிச் சிறுபான்மை வினையோரும் ஆடுவரென்றலின், குறமகள் வெறியாட்டுக் கூறினர்.

குறமகள் (242) மண்ணி (227) அப்பி உரைத்துப் (228) பட்டுச் சிதறி உடீஇ யாத்துச் சிதறிச் செய்து இரீஇத் தெளித்து நாற்றி வாழ்த்தி எடுத்துப் பாடிக் கறங்காநிற்கத் தூஉய்ப் பரப்பி நிறுத்து ஆற்றுப்படுத்த நகரென விவை முடிக்க.

சாந்திசெய்ய ஆற்றுப்படுத்தான்.

245. *ஆடு களம் ஞெலம்ப பாடி—அவ்வெறியாடுகின்ற களம் ஆரவாரிப்ப அதற்கு எற்பனவற்றைப் பாடி,*

245 - 6. [*பலவுடன் ‰கோடுவாய் வைத்து:*] *கோடு பல உடன் வாய் வை த்து - கொம்புகள் பலவற்றையும் சேரவூன்றி,*

கொடு மணி இயக்கி --கொடிய மணியையும் ஒலிப்பித்து,

247. *ஓடா பூட்கை **பிணிமுகம் வாழ்த்தி—கெடாத வலியினையுடைய பிணிமுகமென்னும் பட்டத்தினையுடைய யானையை வாழ்த்தி,*

---

* "பசியும் பிணியும் பகையு நீங்கி, வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி" (சிலப். 5 : 72 - 3 ; மணி. 1 : 70 - 71.)

† "குறிஞ்சிபாடுமி னறும்புகை யெடுமின்" (சிலப. குன்ற.)

‡ உதிரம் போன்ற செந்தினை (வேறுரை.)

§ முருகியம் - துடி; தொண்டகப்பறை யெனினு மமையும். (வேறுரை.)

|| பின்னையாரைத் தம்வழிப்படுத்தின. (வேறுரை.)

¶ தொல்காப்பியம், புறத்தினையியல், ரு.

‰ "கோடுவாய் வைம்மின் கொடுமணி யியக்குமின்" (சிலப. குன்ற.)

** பிணிமுகமென்பது பின்னையார் பவனிவரும் யானை. (வேறுரை.)

பிணிமுகம் - மயிலுமாம்.

248. வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட—காரியக்கனே விரும்புவோர் தாங்கள் விரும்பினகாரியங்களே விரும்பிஞற்போலப் பெற்றுபின்று வழிபட,

ஈகரிலே (244) பாடி வைத்து இயக்கி வாழத்தி வழிபட உறைதலுமுரியன் 183) என்க.

விழவின்கண்ணும் (220) கினேயின்கண்ணும் (221) கந்துடைநிலேயின்கண்ணும் (226) உறைதலுமுரியன் (183) என்க.

249. ஆண்டு ஆண்டு உறைதலும்—களனும் (222) காடும் காவும் தருத்தியும் யாறும் குளனும் வைப்பும் சதுக்கமும் சுற்றியும் கடம்பும் மன்றமும் பொதியிலுமாகிய அவ்வவ்விடங்களிலே உறைதலுமுரியனென்க.

அறிந்தவாறே - யான் அறிந்தபடியே கூறினேன்;

250. ஆண்டு ஆண்டு ஆயிலும் ஆக—யான் முற்கூறிய அவ்வவ்விடங்களிலேயாயினுமாக, பிறவிடங்களிலே பாயினுமாக,

உம்மை, ஐயவும்மை.

250 - 51. [காண்டக, முந்நீர் கண்டுழி முகனமர்ந் தேத்தி:] முந்நீர் கண்டுழி காண்தக முகன் அமர்ந்து எத்தி—மூற்பட நீர் கண்டபொழுது அழகு தக்கிருக்கும்படி முகம்விரும்பித் துதித்து,

முகனமர்ந்தென்றார், அவன் தெய்வத்தன்மையைக் கண்டபொழுது அசைவிறவாது நிற்கவேண்டுமென்றற்கு.

252. கை தொழூஉ பரவி—முன்னர்க் கையை; தலேமேலேவைத்து வாழ்த்தி,

கால் உற வணங்கி—பின்னர்த் திருவடி தலேயிலேயுறும்படி தண்டாளிட்டு,

253. ஒடு பெரு கிலயத்து *நீலம் பைஞ்சுனே—ஒடிய பெரிய இமயாலுச்சியில் தருப்பைவளர்ந்த பசிய சுனேயிடத்தே,

நீலமென்றார், அதினின்ற நீலநிறத்தையுடைய தருப்பையை. அஃது ஆகுபெயர்; என்றது சரவணப் பொய்கையென்றவாறு.

254. ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப—விசும்பும் வளியும் தீயும் நீரும் நிலனுமாகிய ஐவருள் தீத் தன்அங்கையிலே ஏற்ப,

சதாசிவனும் மயேச்சுரனும் உருத்திரனும் அரியும் அயனும் பூதங்கட்குத் தெய்வமாகலின், ஐவரென்றார்; ஐவருளொருவனென்றது உருத்திரன் தெய்வமாகிய தியை

அவன் அங்கையேற்பவென்றது: இறைவனிடத்தினின்றும் இத்திரன் வாங்கிய சருப்பத்தினே முனிவர் வாங்கித் தமக்குத் தரிக்கலாகாமையின் இறைவன்கூறிய முத்திக்குண்டத்திட்டதனேக் கூறிற்று.

* நீலப்பல முதலாவுள்ள பூக்கள் மிடைந்து கிடக்கின்ற சரவணப் பொய்கையில். (ந்வயவுரை.)

238. *நளி மலை நெம்பில் நல் நகர் வாழ்த்தி - செறிந்த மலை*
துனை நல்ல மங்கலப் பாடலையும் பிணியும் பகையும் நீங்குகவென்று
கூர் - பின்னோயர்கோயிலென் றுமாம்.

239. †*நறு புகை எடுத்து—நறிய தூபங்கொடுத்து,*
குறிஞ்சி பாடி – அங்கிலத்திற்கு அடைத்த குறிஞ்சிப்பண்ணைப் ப

240. *இமிழ் இசை அருவியோடு இன் இயம் கறங்க - முழ*
ஓசையினையுடைய அருவியோடே இனிய பல்லியங்களும் ஒலியாகிற்க,

241-2. *உருவம் பல் பூ தூஉய் வெருவர ‡குருதி செந்தினை*
வெள்ள நிறத்தினையுடைய பலபூக்களையும் தூவி அச்சம்வரும்படி உ
செவ்வ தினையினையும் பரப்பி,

242 - 4. *குறமகள் §முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க*
ஆற்றுப்படுத்த உரு கெழு வியன் நகர்—குறச்சாதியாகிய மகள் முருக
வாச்சியங்களை வாசிக்கப்பண்ணித் தெய்வமின்றென்பார் அஞ்சும்படிய
னையார் வரும்படி வழிப்படுத்தின அச்சம் பெருந்தின அகற்சியையு
ரின்கண்ணே,

¶"வேலன் வெறியாட் டயர்த்த" என்புழிச் சிறுபான்மை ஏ
ஆடுவாரென்றலின், குறமகள் வெறியாட்டுக் கூறினர்.

குறமகள் (242) மண்ணி (227) அப்பி உரைத்துப் (228) பட்
உடீஇ யாத்துச் சிதறிச் செய்து இரீஇத் தெளித்து நாற்றி வாழ்த்தி
பாடிக் கறங்காகிற்கத் தூஉய்ப் பரப்பி நிறுத்து ஆற்றுப்படுத்த நகரெ
மூடிக்க.

சாந்திசெய்ய ஆற்றுப்படுத்தாள்.

245. *ஆடு களம் நிலம்ப பாடி—அவ்வெறியாடுகின்ற களம் ப*
அதற்கு ஏற்பனவற்றைப் பாடி.

245 - 6. [*பலவுடன் ‖கோடுவாய் வைத்து:*] *கோடு பல உடன்*
த்து – கொம்புகள் பலவற்றையும் சோலுந்தி,
கொடு மணி இயங்கி –கொடிய மணியையும் ஒலிப்பித்து,

247. *ஓடா பூட்கை **பிணிமுகம் வாழ்த்தி—கெடாத வலியி*
பிணிமுகமென்னும் பட்டத்தினையுடைய யானையை வாழ்த்தி,

---

* "பகையும் பிணியும் பகையு நீங்கி, வகையும் வளனுஞ் சாக்கென
(சிலப். 5 : 72 - 3 ; மணி. 1 : 70 - 71.)

† "குறிஞ்சிபாடுமி னறும்புகை யெடுமின்" (சிலப. குன்ற.)

‡ உதிரம் போன்ற செந்தினை (வேறுரை.)

§ முருகியம் - துடி; தொண்டகப்பறை யெனினு மமையும். (

‖ பின்னோயாரைத் தம்வழிப்படுத்தின. (வேறுரை.)

¶ தொல்காப்பியம், புறத்தினையியல், 5.

\# "கோடுவாய் வைம்மின் கொடுமணி யியக்குமின்" (சிலப. ஏ

** பிணிமுகமென்பது பின்னோயார் பவனிவரும் யானை. (வேறு

பிணிமுகம் - மயிலுமாம்.

248. வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட—காரியங்களை வி
மபுவோர் தாங்கள் விரும்பினகாரியங்களை விரும்பிஞர்போலப் பெற்றுநின்
வழிபட,

நகரிலே (244) பாடி வைத்து இயக்கி வாழ்த்தி வழிபட உறைதலுமுரிய
(189) என்க.

விழவின்கண்ணும் (220) கிலேயின்கண்ணும் (221) கந்துடைகிலேயின்க
ணும் (226) உறைதலுமுரியன் (189) என்க.

249. ஆண்டு ஆண்டு உறைதலும்—களனும் (222) காடும் காவும் தரு
யும் யாறும் குளனும் வைப்பும் சதுக்கமும் சந்தியும் கடம்பும் மன்றமும் பொ
யிலுமாகிய அவ்வவ்விடங்களிலே உறைதலுமுரியனென்க.

அறிந்தவாறே - யான் அறிந்தபடியே கூறினேன்;

250. ஆண்டு ஆண்டு ஆயினும் ஆக—யான் முற்கூறிய அவ்வவ்விட
ளிலேயாயினுமாக, பிறவிடங்களிலே பாயினுமாக,

உம்மை, ஐயவும்மை.

250 - 51. [காண்டக, மூக்குரீ கண்டுழி முகனமர்ந் தேத்தி:] மூக்கு
கண்டுழி காண்தக முகன் அமர்ந்து ஏத்தி—மூற்படை கண்டபொழுது அழ
க்கிருக்கும்படி முகம்விரும்பித் துதித்து,

முகனமர்ந்தென்றார், அவன் தெய்வத்தன்மையைக் கண்டபொழுது அ
ம்பிறவாது நிற்கவேண்டுமென்றற்கு.

252. கை தொழூஉ பரவி—முன்னர்க் கையைக் தலைமேலேவைத்து வ
ழ்த்தி,

கால் உற வணங்கி—பின்னர்த் திருவடி தலையிலேயுறும்படி கண்டனிட்

253. நெடு பெரு சிமயத்து *நீலம் பைஞ்சுனை—நெடிய பெரிய இமய
னுச்சியில் தருப்பைவளர்ந்த பசிய சுனையிடத்தே,

நீலமென்றார், அதினின்ற நீலநிறத்தையுடைய தருப்பையை. அஃது ஆ
பெயர்; என்றது சரவணப் பொய்கையென்றவாறு.

254. ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப—விசும்பும் வளியும் தீயும் நீரு
நிலனுமாகிய ஐவருள் தீத் தன்அங்கையிலே ஏற்ப,

சதாசிவனும் மயேச்சுரனும் உருத்திரனும் அரியும் அயனும் பூதங்கட்கு
தெய்வமாகலின், ஐவரென்றார்; ஐவருளொருவனென்றது உருத்திரன் தெய்
மாகிய தீயை.

அவன் அங்கையேற்பவென்றது: இறைவனிடத்தினின்றும் இந்திர
வாங்கிய சரப்பத்தினை முனிவர் வாங்கித் தமக்குத் தரிக்கலாகாமையின் இை
வன்கூறிய மூத்திக்குண்டத்திட்டதனைக் கூறிற்று.

---

* நீலோற்பல முதலாவள்ள பூக்கள் மிடைந்து கிடக்கின்ற சரவண
பொய்கையில். (சேனாவ.)

238. *நளி மலை லெம்பில் நல் நகர் வாழ்த்தி - செறிந்த மலைப்பக்கத்தி னுள்ள நல்ல ஊர்களைப் *பழியும் பிணியும் பகையும் நீங்குகென்று வாழ்த்தி,*

நேர் - பின்னையார்கோமியென்னுமாம்.

239. †*நறு புகை எடுத்து—நறிய தூபங்கொடுத்து,*

குறிஞ்சி பாடி – அங்கிலத்திற்கு அடைத்த குறிஞ்சிப்பண்ணைப் பாடி,

240. *இமிழ் இசை அருவியோடு இன் இயம் கறங்க - முழங்குகின்ற ஓசையினையுடைய அருவியோடே இனிய பல்லியங்களும் ஒலியாகிற்க,*

241-2. *உருவம் பல் பூ தூஉய் வெருவர ‡குருதி செந்தினை பரப்பி— செவ்வ நிறத்தினையுடைய பலவுக்களையும் தூவி அச்சம்வரும்படி உதிரமனைந்த செவ் வ நுனையினையும் பரப்பி,*

242 - 4. *குறமகள் §முருகு இயம் நிறுத்து மூவினிளர் உடக ||முருகு ஆற்றுப்படுத்த உரு கெழு வியன் நகர்—குறச்சாதியாகிய மகள் முருகனுவக்கும் வாச்சியங்களே வாசிக்கப்பண்ணித் தெய்வமின்றென்பார் அஞ்சும்படியாகப் பிள ளையார் வரும்படி வழிப்படுத்தின அச்சம் பெருந்தின அகற்சியையுடைய நக ரின்கண்ணே,*

¶"வேலன் வெறியாட் டயர்ந்த" என்புழிச் சிறபான்மை எனையோரும் ஆடுவரென்றலின், குறமகள் வெறியாட்டுக் கூறினர்.

குறமகள் (242) மண்ணி (227) அப்பி உரைத்துப் (228) பட்டுச் சிதறி உடீஇ யாத்துச் சிதறிச் செய்து இரீஇத் தெளித்து நாற்றி வாழ்த்தி எடுத்துப் பாடிக் கறங்காகிற்கத் தூஉய்ப் பரப்பி நிறுத்து ஆற்றுப்படுத்த நகரென விஃ முடிக்க.

சாந்திசெய்ய ஆற்றுப்படுத்தாள்.

245. *ஆடு களம் நிலம்ப பாடி—அவ்வெறியாடுகின்ற களம் ஆரவாரிப்ப அதற்கு ஏற்பனவற்றைப் பாடி,*

245 - 6. [*பலவுடன் ‡கோடுவாய் வைத்து:*] *கோடு பல உடன் வாய் வை த்து – கொம்புகள் பலவற்றையும் சேரவூன்றி,*

கொடு மணி இயக்கி –கொடிய மணியையும் ஒலிப்பித்து,

247. *ஓடா பூட்கை **பிணிமுகம் வாழ்த்தி—கெடாத வலியினையுடைய பிணிமுகமென்னும் பட்டத்தினையுடைய யானையை வாழ்த்தி,*

---

* "பழியும் பிணியும் பகையு நீங்கி, வழியும் வளனுஞ் சாக்கென வாழ்த்தி" (சிலப். 5 : 72 - 3 ; மணி. 1 : 70 - 71.)

† "குறிஞ்சிபொருமி னறும்புகை யெடுமின்" (சிலப. குன்ற.)

‡ உதிரம் போன்ற செந்தினை (வேறுரை.)

§ முருகியம் - தழி; தொண்டகப்பறை யெனினு மமையும். (வேறுரை.)

|| பின்னையாரைத் தம்வழிப்படுத்தின. (வேறுரை.)

¶ தொல்காப்பியம், புறத்தினையியல், 5.

‡ "கோடுவாய் வைம்மின் கொடுமணி யியக்குமின்" (சிலப. குன்ற.)

** பிணிமுகமென்பது பின்னையார் பவனிவரும் யானை. (வேறுரை.)

பிணிமுகம் - மயிலுமாம்.

248. வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட—காரியங்களை விரும்புவோர் தாங்கள் விரும்பினகாரியங்களை விரும்பினபோலப் பெற்றுநின்று வழிபட,

நகரிலே (244) பாடி வைத்து இயக்கி வாழ்த்தி வழிபட உறைதலுமுரியன் 187) என்க.

விழவின்கண்ணும் (220) கிலேயின்கண்ணும் (221) கந்துடைநிலையின்கண்ணும் (226) உறைதலுமுரியன் (193) என்க.

249. ஆண்டு ஆண்டு உறைதலும்—எனவும் (222) காடும் காவும் திருத்தியும் யாறும் குளனும் வைப்பும் சதுக்கமும் சுற்றியும் கடம்பும் மன்றமும் பொதியிலுமாகிய அவ்வவ்விடங்களிலே உறைதலுமுரியனென்க.

அறிக்தவாறே - யான் அறிந்தபடியே கூறினேன்;

250 ஆண்டு ஆண்டு ஆயினும் ஆக—யான் முற்கூறிய அவ்வவ்விடத்தேயாயினுமாக, பிறவிடங்களிலே பாயினுமாக,

உம்மை, ஐயவும்மை.

250-51 [காண்டக, முத்தீ கண்டுழி முகனமர்ந் தேத்தி:] முத்தீ கண்டுழி காண்தக முகன் அமர்ந்து எதனி—முற்பட நீ கண்டபொழுது அழகு உண்டாகும்படி முகம்விரும்பித் துதித்து,

முகனமர்ந்தென்னூர், அவன் தெய்வத்தன்மையைக் கண்டபொழுது அச்சம்பிறவாது நிற்கவேண்டுமென்றற்கு.

252. கை தொழூஉ பரவி—முன்னர்க் கையைத் தலைமேலேவைத்து வாழ்த்தி,

கால் உற வணங்கி—பின்னர்த் திருவடி தலையிலேயுறும்படி கண்டனிட்டு,

253. ஒடு பெரு நிலயத்து *நீலம் பைஞ்சுனை—ஒடிய பெரிய இமவானுசரியில் தருப்பைவளர்ந்த பசிய சுனையிடத்தே,

நீலமென்னூர், அதனின்ற நீலநிறத்தையுடைய தருப்பையை. அஃது ஆகுபெயர்; என்றது சரவணப் பொய்கையென்றவாறு.

254 ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப—விசும்பும் வளியும் தீயும் நீரும் நிலனுமாகிய ஐவருள் தீத் தன்அங்கையிலே ஏற்ப,

சதாசிவனும் மயேச்சுரனும் உருத்திரனும் அரியும் அயனும் பூதங்கட்குத் தெய்வமாகலின், ஐவரென்றார்; ஐவருளொருவனென்றது உருத்திரன் தெய்வமாகிய தியை

அவன் அங்கையேற்பவென்றது: இறைவனிடத்தினின்றும் இந்திரன் முதலாகிய கருப்பத்தினை முனிவர் வாங்கித் தமக்குத் தாரிக்கலாமையின் இறைவர் கூறிய முத்தீக்குண்டத்திட்டதனைக் கூறிற்று.

* நீலோற்பல முதலாவுள்ள பூக்கள் மிடைந்து கிடக்கின்ற சரவணப் பொய்கையில். (தேவுமாபா)

255. அறுவர் பயந்த ஆதி அமர் செல்வ — அருந்ததியொழிந்த அறுவராலே பெறப்பட்ட ஆறுவடிவுபொருந்திய செல்வ,

என்றது: *அங்ஙனம் அங்கியின்கணிட்டுச் சத்திருறைந்த கருப்பத்தை முனிவரெழுவரும் வாங்கித் தம்மனைவியர்க்குக்கொடுப்ப அருந்ததியொழிந்தோர் விழுங்கிச் சூன்முதிர்ந்து, சரவணப்பொய்கையிற் பதுமப்பாயலிலே பெற ஆறுவடிவாக வளர்ந்தமை கூறிற்று.

ஏற்கையிலுலே அறுவராற் பைஞ்சினையிலே பயக்கப்பட்ட செல்வவென்க; இது பரிபாடலிற் †"பாயிரும் பனிக்கடல்" என்னும் பாட்டானுணர்க.

256. ஆல் கெழு கடவுள் புதல்வ — கல்லாலின் கீழிருந்த தடவுளினுடைய புதல்வ,

கடவுளரென உயர்திணையாய் நில்லாது கடவுளென்பது தெய்வமென்னும் பொருட்டாய் அஃறிணைமுடிபுகொள்ளும் உயர்திணையாய் நிற்றலின், அஃறிணைப்பாற் பட்டு ‡"உணரக்கூறிய" என்னும் புறனடையான் முடிந்தது.

256-7. §மால் வரை மலை மகள் மகனே — பெருமையையுடைய மலையாகிய மலையரையன் மகளுடைய மகனே,

வரை - மூங்கிலுமாம்.

மாற்றேர் கூற்றே — பகைவர்க்குக் கூற்றுவனே,

258. [வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ:]

வெற்றி கொற்றவை சிறுவ — வெற்றியை உலகத்திற்குக் கொடுக்கும் வனதுர்க்கையினுடைய புதல்வ,

வெல் போர் கொற்றவை — தான் வெல்லும்போரைச் செய்யுங் கொற்றவை,

என்றது: மகிடனைச் செற்றதனை.

259. இழை அணி நெறப்பிற் பழையோள் குழவி — பூணணிந்த தலைமையினையுடைய காடுகாளுடைய குழவி,

நாடுகிழாளென்பது இக்காலத்துக் காடுகாளென மருவிற்று. அவளும் இறைவனுடைய சத்தியாகலின், அவளுடைய குழவியென்றார்.

260. [வானோர் வணங்குவிற் றுணைத் தலைவ:]

வானோர் தானை தலைவ — தேவர்கள் படைத்தலைவ,

என்றது: தேவசேனாபதி என்றதாம்.

வணங்கு வில் — வளையும் வில்லையும்,

வில்லையும், தேவராகிய தானையையுமுடைய தலைவனென்க.

261. மாலை மார்ப — இன்பத்திற்குரிய மாலையணிந்த மார்ப,

---

* 58-ஆம் அடியின் விசேடவுரையாலும் இது விளங்குகின்றது.

† பாட்டு, 5 ‡ தொல்காப்பியம், புள்ளிமயங்கியல், 110.

§ மால்போலும் வரைபினையுடைய மலையரசன் திருமகனார் மகனே. (வேறுரை)

நூல் அறி புலவ—எல்லா நூல்களையும் அறியும் புலவ,
புலவன் - அறிவுடையவன்.

262. செருவில் ஒருவ—போர்த்தொழிலில் ஒருவனுகி நிற்பாய்,
பொரு விறல் மள்ள—பொருகின்ற வெற்றியினையுடைய மள்ள,
மள்ளன் - இளமைப்பருவத்தோன்.

263. அந்தணர் வெறுக்கை—அந்தணருடைய செல்வமாயிருப்பாய்,
அறிந்தோர் சொல் மலே—சான்றோர் புகழ்ந்து சொல்லப்படும் சொற்களின் ஈட்டமாயிருப்பாய்,

264. மங்கையர் கணவ—தெய்வயானையாரும், வள்ளிநாய்ச்சியாருமாகிய மகளிர்க்குக் கணவ,
மைந்தர் ஏறே—வீரர்க்கு இடபமே,

265. வேல் கெழு தட கை சால் பெரு செல்வ—வேல்பொருந்தின பெருமையையுடைய கையானமைந்த பெரிய செல்வ,
என்றது: வேல் வெற்றியாற்பெற்ற அச்செல்வத்தை.

266-7. [குன்றங் கொன்ற குன்ருக் கொற்றத்து, விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ:]

குன்றம் கொன்ற குன்று கொற்றத்து கிழவ—குருகாற் பெயர்பெற்ற மலையைப்பிளந்த குறையாத வெற்றியையுடைய கிழவ,

விண் பொரு நெடுவரை குறிஞ்சி கிழவ—தேவருலகைத் தீண்டும் நெடிய மலையையுடைய குறிஞ்சிநிலத்துக்கு உரிமையுடையாய்,

அதற்கு உரியனுதல் *"சேயோன் மேய மைவரை யுலகமும்" என்பதனுல் உணர்க.

268. பலர் புகழ் நல் மொழி புலவர் ஏறே—பலரும் புகழ்ந்துசொல்லும் நன்மையிய சொற்களையுடைய பரசமயத்தினுள்ளார்க்கு எற்றின்றன்மையை யுடையவனே,

என்றது: கல்விமகத்தையுடைய யானைபோல்வார்க்கு இங்கவேறு போல் வாயென்றதாம்.

269. [அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக.] பெறல் அரு மரபின் பெரும்பெயர் முருக—பிறர்க்குப் பெறலரிய முறைமையினையுடைய பெரும் பொருளையுடைய முருக,

பெயர் - பொருள். †"பெற்ற பெரும்பெயர் பலர்கை யிரீஇய" எனவும், ‡"சொற்பெயர் நாட்டம்" எனவும் வரும். பெரும்பொருளென்றது - வீட்டினை.

270. [நசையுநர்க் கார்த்து மிசைபே ராள:] நசையுநர்க்கு ஆர்த்தும் போர் நசை ஆள—அவ்விட்டைப் பெறவேண்டுமென்று நசையுள்ளார்க்கு அவனை நகர்லிக்கும் பெரியபுகழை ஆளுதலையுடையாய்,

போரிசையென்று மாறுக.

---

* தொல்காப்பியம், அகத்திணையியல், 5.
† பத்துப்பாட்டு, 90. ‡ பத்துப்பாட்டு, 21.

271-2. [அலர்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய், மண்டமர் கடந்த நின் வென்ற டகலத்து:]

அலர்தோர்க்கு அளிக்கும் சேஎய்—பிறரால் இடுக்கட்பட்டு வர்தோர்க்கு அருள்பண்ணும் சேய்,

மண்டு அமர் கடந்த வெண்ணு ஆடு நின் அகலத்து பொலம் பூண் சேஎய் மிக்குச்செல்கின்ற போர்களோமுடித்த வென்றடுகின்ற நினதுமார்பிடத்தே பொலஞ்செய்த பேரணிகலங்களேயணிந்த சேயென்க.

273. பரிசிலர் தாங்கும் உரு கெழு கெடு வேள்—இரந்துவர்தோரை வேண்டுவன கொடுத்துப் பாதுகாக்கும் உட்குதல் பொருந்திய கெடியவேளே,

274. பெரியோர் எத்தும் பெரும்பெயர் இயவுள்—தேவரும் முனிவரும் எத்தும் பெரிய திருநாமத்தையுடைய தலைவனே,

இயவுள்=கடவுளுமாம்.

275-6. [சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி, போர்மிகு:] போர் மிகு மொய்ம்பின் சூர் மருங்கு அறுத்த மதவலி—போர்த்தொழிலிலே மிகுகின்ற மொய்ம்பாலே சூரபன்மாவின்குலத்தை இல்லையாக்கின மதவலியென்னும் பெயரையுடையாய்,

பொருந—உவமிக்கப்படுவாய்,

பொருவப்படுமவன், பொருவனென நினைது.

குரிசில்—தலைவன்,

276-7. [எனப்பல, யானறி யளவையி னேத்தி யானுது] எனயான் அறி அளவையின் ஆனது பல எத்தி—என்று யானறிந்து நினக்குக்கூறிய அளவாலே நீயும் அமையாதே பலவற்றையும் கூறிப் புகழ்ந்து,

278. நின் அளந்து அறிதல் மன் உயிர்க்கு அருமையில—நின் தன்மையெல்லாம் முற்ற அளவிட்டறிதல் பல்லுயிர்க்கும் அரிதாகையினாலே,

279. நின் அடி உள்ளி வந்தினென்—நின் திருவடியைப் பெறவேண்டுமென்று நினைந்துவந்தேன்;

279-80. நின்னெனடு புரையுநர் இலர்ா புலமையோய்—நின்னோடு ஒப்பாரில்லாத மெய்ஞ்ஞானத்தை உடையோய்,

280-81. என்குறித்தது மொழிபா அளவையில்—என்றுசொல்லி கருதிய வீடுபேற்றினை விண்ணப்பஞ் செய்வதற்கு முன்னே,

முத்தீகண்டுழி முகனமர்ந்து (251) மகனே கூற்றே (257) குழவி (259) வெறுக்கை சொன்மலையாயிருப்பாய் (263) மைந்தரேறே (264) புலவேறே (268) சேஎய் (271) வேளள் (273) இயவுளே (274) மதவலி (275) புலமையோய் (280) என்றுமுனைவர் எதிர்முகமாக்கி எத்தி (251) யென மைவிளியல்லாதனவற்றை முன்னர்க்கூட்டிமுடிக்க, அங்ஙனம் எதிர்முகமாக்கியத்திப் பின்னர்ப்பரவி வணங்கிச் (252) செல்வ (255) புதல்வ (256) கிழவ (258) தலைவ (260) மார்ப புலவ (261) ஒருவ மன்ன (262) கணவ (263) செல்வ (265) கிழவ (267) முருக (269) இசைபோளன (270) பொரு

76) என்று அண்மையாகவிளித்து, மன்னுயிர்க்கருமையின் (278) யானறி
வகையினேற்றி (277) நின்னடியுள்ளிவந்தனென் (279) என்று தீ குறித்தது
மொழியாவனையினென முடிக்க

281.2. [குறித்துடன், வேறுபல் லூருலிற் குறும்பல் கூளியர்:] வேறு
பல் உருவில் குறு பல் கூளியர் உடன் குறித்து—வேறுவேறுகிய பலவடிவினை
யு கிறிய பலராகிய சேவித்துநிற்பார் சேரக்கருதி,

*"நின், கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்" என்னுர் பிறரும்.

283. சாறு அயர் கனத்து வீறு பெற தோன்றி—விழாவெடுத்தகளத்தே
ஊக்கன் பொலிவுபெறத் தோன்றி,

284. [அளியன் றூனே முதுவா யிரவலன்:] முது வாய் இரவலன் தான்
வளியன்—அறிவுமுதிர்ந்த வாய்மையையுடைய புலவன்ருன் அளிக்கத்தக்கான்.

285-6. [வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென, வினியவு நல்லவு
நனிபல வேத்தி:] பெரும நின் வள் புகழ் நயந்து இனியவும் நல்லவும் நனி பல
ஏத்தி வந்தோன் என—பெரும, நினது வளிய புகழினைக்கூற விரும்பிக் கேட்
டோர்க்கு இனியனவும் உறுதிபயப்பனவுமாக மிக்க பலவற்றை வாழ்த்தி வந்
தோனென்றுகூற,

கூளியர் (282) குறித்துத் (281) தோன்றி (283) அளியன் (284) பெரும
நின் வண்புகழைக் கூறயந்து (285) இனியவும் நல்லவுமாக ஏத்தி (286) வந்
தோன் (285) என்று கூறவென முடிக்க.

287. தெய்வம் சான்ற திறல் விளங்கு உருவின்—தெய்வத்தன்மைய
மைந்த வலிவிளங்கும் வடிவினையும்,

288. வான் தோய் நிவப்பின் தான் வந்து எய்தி—வானேத்தீண்டும் வளர்ச்
சியினையுமுடைய தான் அவையை வந்ணுகி,

289. அணங்கு சால் உயர் நிலை தழீஇ—வருத்தமமைந்த தெய்வத்தன்
மையை உள்ளடக்கிக்கொண்டு,

289-90. [பண்டைத்தன்மணங்கமழ் தெய்வத் தினலங் காட்டி:]மணம்
கமழ் தெய்வத்து பண்டை தன் இளமைக் காட்டி—மணம் நாறுகின்ற தெய்வத்
தன்மையையுடைய முன்புண்டாகிய தன் இளையவடிவைக்காட்டி,

291. [அஞ்ச லோம்புமதி யறிவனின் வரவென:] நின் வரவு அறிவல்
அஞ்சல் ஓம்புமதி என—நீ வீடுபெற நினைத்துவந்த வாவை யான் முன்னேயுறி
வேன்; அது நினக்கு எய்துவலரிதென்று அஞ்சுதலைப் பரிகரியென்று,

292. அன்புடை நன்மொழி அளைஇ—நின்மேல் அன்புடைத்தாகிய நல்ல
வார்த்தைகளைப் பலகாலும் அருளிச்செய்து,

292-4. [விளிலின்று, இருணிற மூங்கீர் வினைய வுலகத், தொருநீ யாகி
நோன்ற:] இருள் நிற மூங்கீர் வினைய உலகத்து ஒருநீயாகி விளிவு இல்
லோன்ற—இருண்ட நிறத்தையுடைய கடல் சூழ்ந்த உலகத்திடத்தே நீ
வணங்கி பிறர்க்கு வீடளித்தற்கு உரியையாய்க் கேடின்றித் தோன்றும்படி,

* புறநானூறு, 23.

294-5. விழுமிய பெறல அரு பரிசில் கல்கு மதி—சிரிய பிறரால் பெறு தற்கரிய வீடுபேற்றினைத் தருவன்;

*"இருமுந் சின்னு மேனி யிடத்தொடு, தருகில யுடைய வென்மனூர் புலவர்" என்றதனுனுதல் †"அஞ்வச் சொல்லிற்கு" என்னும் புறனடையதனுலு தல் மதி படர்க்கைக்கண்வருதல் கொள்க.

இனி மதிபலவுடனெனக் கூட்டி, அறிவுகள்பலவுடனே பரிசில் கல்கு மென்று கூறுவாருமுளர்.

295-6. [பலவுடன், வேறுபஃ துகிலி னுடங்கி:] வேறு பல் துகிலின் பல உடன் நுடங்கி—வேறுபட்ட பலவாகிய துகிற்கொடிகளைப்போலத் தாம் பலவும் கூடவசைந்து,

296-7. அகில் சுமந்து ஆரம் முழு முதல் உருட்டி—அகிலை மேற்கொண்டு சந்தனமாகிய பெரிய மரத்தைத் தள்ளி,

297-8. வேரல் பூ உடை அலங்கு சினை புலம்ப வேர் கீண்டு—சிறுமூங்கி லினது பூவுடைத்தான அசைகின்ற கொம்பு தனிப்ப வேரைப்பிளந்து,

299-300. வீண் பொரு நெடு வரை பரிதியின் தொடுத்த நண் கமழ் அலர் இருல் சிதைய—தேவருலகத்தைத் தீண்டுகின்ற நெடிய மலையிடத்தே ஞாயிற்றின் மண்டிலத்தைப்போல ஈ வைக்கப்பட்ட தண்ணியவாய் மணக் கின்ற விரிந்த தேன்கூடு கெட,

300.301. நல் பல ஆனினி முது சினை கலாவ—கன்றுகிய பல ஆனினங் களினுடைய முற்றிய சினை தன்னிடத்தே கலக்க,

301-2. மீ மிசை நாக நறு மலர் உதிர—மலையினுச்சியிலுண்டான சுர புன்னையின் நறிய மலர்கள் உதிர,

302-3. யூகமொடு மா முக முசு கலை பனிப்ப—கருங்குரங்கோடே கரிய முகத்தையுடைய முசுக்கலைகளும் நடுங்க,

‡"கலையென் ளாட்சி யுழைக்கு முரித்தே." §"கலையிற் றப்பெயர் முக வின்கண்ணும்" என்றார்.

303-4. பூ நறல் இரு பிடி குளிர்ப்ப ஈ சி—புகையணைத்த மத்தகத்தை யுடைய பெரிய பிடி குளிரும்படி வீசி,

304-5. பெரு களிறு முத்து உடை வான் கோடு தழீஇ—பெரிய யானையினுடைய முத்தையுடையவாகிய வெள்ளிய கொம்புகளை உள்ளடக்கி,

305-6. [தத்துற்று, நன்பொன் மணிக்றல் இனர:] நல் பொன் மணிகளை யொத்த தத்துற்று—நல்ல பொன்னும் மணியும் நிரம்பினாற்போல மேலே கொண் டுருவித்து,

தத்துற்று - தத்துக்கேயுற்று.

---

* தொல்காப்பியம், இடைச்சொல்லியல், 27.

† " " 17.

‡ " மரபியல், 45.

§ " " 46.

பொன் கொழியா—பொடியான பொன்னைத் தெள்ளி,

307-8. வாழை முழு முதல் தடிய தாழை இளநீர் விழு குலை உதிர தாக்கி—வாழையினது பெரிய முதல் தணியத் தெங்கினது இளநீரைபுடைய சிரிய குலை உதிர அவ்விராண்டினையும் மோதி,

309. கறி கொடி கரு துணர் சாய—மிளகினது கொடியின் கரியகொத் தக்கன்சாய,

309-11. [பொறிப்புற மடாஅை மஞ்ஞை பலவுடன் வெரிஇக், கோழி வயப்பெடை யிரிய:] பொறி புற மட அடை மஞ்ஞை கோழி வயம் பெடை வெரிஇ பலவுடன் இரிய—நீலியையுடைத்தாகிய இடத்தினையும் மடப்பத்தை யுடைத்தாகிய,ஒழுக்கத்தினையுமுடைய மயில்களோடே கோழியினுடைய வலி யையுடைய பெடை வெருவிப் பலவும் சேரக்கெட,

311-4. [கேடிலொ, டிரும்பிணி வெளிற்றின் புன்சா யல்ல, குரூஉமயிர் ாக்கைக் குடாவடி யுளியம், பெருங்கல் விடரளை செறிய:] கேழலொடு வெளிற்றின் இரு பினை புல்சாய் அன்ன குரூஉ மயிர் யாக்கை *குடாவடி ளியம் பெரு கல் விடர் அளை செறிய—ஆண்பன்றியுடனே உள்ளே வெளிர் தினையுடைத்தாகிய கரிய பினையினது புல்லிய சேறும்பைபொத்த கரியநிறத்தை யுடைத்தாகிய மயிரினையுடைய உடம்பினையும். வினைந்த அடியினையுமுடைய ரடி பெரிய கல்வின்ட முழைஞ்சிலே சேர,

314-5. கரு கோடு ஆமா ல்ல ற்ற சிலம்ப—கரிய கொம்பினையுடைய ஞமாவினுடைய கன்றுகிய வறுகன் முழங்க,

315-6. சேண் சென்று இழுமென இழிதரும் அருவி—மலையின் உச்சியி ன்றும் இழுமென்னும் ஓசைபடக் குரிக்கும் அருவியையுடைய,

317. பழம் முதிர் சோலை †மலை கிழவோனே—பழம் முற்றின சோலை ஊரையுடைய மலைக்கு உரிமையையுடையோனே.

நடங்கிச் சுமந்து உருட்டிக் கீண்டு கிளைக் கவாஅ உரிப் பனிப்ப வீசிக் ரீஇத் தந்தூதைக் கொழியாத் தடிய உரைத்தூங்கி காய இரிய செறியச லிப்ப இழிதரும் அருவியைஉடைத்த.

கிழவோனென்றபெயர், உடம்பொடுபுணர்த்தலாற் கொள்க

ணவன் (6) மார்பினன் (11) சென்னியஞ்சிய (44) சேவலை (61) ாடியபடரும் உள்ளத்தோடே (62) செல்லுஞ்சேவலை சேவற்றினோயின்(64) ள்ளா செஞ்சுத்த இன்னசைவாய்ப்ப (65) இன்னேபெறுதி (66); அது பெற ற்கு அவன்பாண்டுறையுமென்னில் குவ்உமர்த்துறைத்துமுரிபன்; அதுவன்றி 77)அலைவாய்ச்சேறலும் நிலையுடையன்பு; அதுவன்றி (125) ஆவினன்குடி அசை முமுரியன்; அதுவன்றி (176) வசைத்துறைத்துமுரியன்; அதுவன்றிச் (189) ற்றதொருடலும் என்றதன் பண்பு; அதுவன்றி (217) விழவின்கண்ணும் 220) மலையின்கண்ணும் (221) கற்றலியல்கண்ணும் (226) உரைத்து

* குடமுழவுபோன்ற அடி. (வேறுரை) † 292 - 317: (நூல் ட. சூ - 27 - ர; 317: நன். சூ. 164. மயிலை மேற்)

முரியன்; (189) கனலும் (222) காடு (223) முதலியன ஆண்டாண்டுறைதலும் (249) உரியன்; (189) காரிலே (214) பாடி (245) வைத்து இயக்கி (246) வாழ்த்தி (247) வழிபட (248) உறைதலுமுரியன்; (189) இஃதியானறிந்தபடியே கூறினேன் (249); இனி ஆண்டாண்டாயினுமாக, பிறவிடங்களிலேயாயினுமாக (250) மூக்குறீக்கண்டுழிமுகனமர்ந்து முன்னர் எதிர்முகமாக்கி எத்திப் (251) பரவி வணங்கிப் (252) பின்னர் அண்மையாகவிளித்து யானறியாவையினேத்தி (277) கின்னடி புள்ளி வந்தேனென்று (279) * குறித்தது மொழிவதற்குமுன்னே (281) கூவியர் (282) குறித்துத் (281) தோன்றிப் (283) பெரும (285) இரவலன் * அளிக்கத்தக்கான் (284) வந்தோனென்றுகூற (285) மேலிழிவோனெய (317) குரிசிலும் (276) தான்வந்தெய்தித் (288) தழீஇக் (289) காட்டி (290) அருஞ்சேம்புமதியென்று (291) அன்புடை நன்மொழி யினஇ (292 ஒரு யோகித்தோன்றும்படி (294) பெறலருப்பரிசில் வல்லுவனென (295) மீடு பெறக் கருதிய இரவலனோக்கி மீடுபெற்றுளெருவன் ஆற்றுப்படுத்தலாகவினைமுடிக்க.

இது புறத்திணையியலுள் *"நாவினல்லிசை" என்னுஞ் சூத்திரத்துள் "ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெருஅர்க் கறிதீஇச், சென்றுபய னெரிச் சொன்ன பக்கமும்" என்பதனுள் மூற்கூறிய கருமுறியைப் பெற்றுளெருவன் அதனைப் பெருதாளெருவனுக்குப் பெறுமாறு கூறி அவனை வழிப்படுத்துக் கூறுவானென்பது பற்றிச் செய்யுள் செய்தாரையிற்று.

கற்பழியாவது ஒருபாற்றுமத்து அருவாய்த் தானேயிற்கும் சத்துவகுணம். பொருள்: அது †"சார்பினுற் றோன்றாது தானருவாய் * * மைதீர் சுடர்" என்பதாகும்: இனை ‡"உற்றவாக்கையி னுறுபொரு ணாடல மொழருரு, நற்பேர்-பற்றலவதோர் நிலையிலாப் பரம்பொருள்" என அதனை உணர்ந்தோ கூறியவாற்று ணுணர்க.

முருகாற்றுப்படையென்றதற்கு மீடுபெறுதற்குச் சமைந்தானெரு வலனை மீடுபெற்று ளெருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்தென்று பொருள கூறுக.

தமாவேஹ மதுரைக் கணக்காயனார்மகனர் கக்கீரனார்பாடிய திருமுகாற்றுப்படைக்கு மதுரை ஆசிரியர் நாக்கீரனார்க்கு யாம் செய்தவுரை முற்றிற்று.

---

* தொல்காப்பியம், புறத்திணையியல், 36.

† வெண்பா. "சார்பினுற் றோன்றாது தானருவா பெய்பொருட்குச் சார்பெனின் றெஞ்ஞான்று மீசன் றனைத்தோ - வாய்மொழியான் மெய்யாக் மனத்தா னறிவிறக - தப்மையதா மைதீர் சுடர்." (தொகை. புறத்திணை சூ. 33 - க. மேற்.)

‡ திருவாசகம், அதிசயப்பத்து, 9.

வேலுமயிலுத்துணை.

அடியிலுள்ள பாடல்கள், பத்துப்பாட்டும் சேர்த்துள்ள பழைய எட்டுப்பிரதி களிலிருந்தும் திருமுருகாற்றுப்படைமட்டுமுள்ள புதிய எட்டுப்பிரதிகளிலும் வச்சப் பிரதிகளிலும் இருத்தமையால் தனியே பதிப்பிக்கப்பெற்றன; திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் 44 - ஆம் திருவிளையாடல் 27 - ஆம் திருவிருத்தம் முதலியவற்றை நோக்குங்கால், "குன்ற மெறிந்தாய்" என்னும் வெண்பா அத்தலாசிரியர் காலத்தே வழங்கிவந்ததாகத் தெரிகின்றது.

நேரிசைவெண்பா.

1. குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்மலைப பூதப் பெருபடையா—யென்று
மிளையா யழியா யேதுரைத்தா னேறே
யுளையாயென் னுள்ளத் துறை.

2. குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவு
மன்றங் கமரிடர் தீர்த்ததுவு—மின்றெனக்கை
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காந்ததுவு
மெய்விடா வீரன்கை வேல்.

3. வீரவே ரூரவேல் விண்ணோர் சிறைமீட்ட
நீரவேல் செவ்வே டிருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவே லுண்டே துணை.

4. இன்ன மொருதா லெனதிடும்பைக் குன்றுக்குங்
கொன்னவில்வேற் கூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலே வாங்கத் தரும்.

5. உன்னி யெழுபிய வொருவையு கம்புகேலேன்
பின்னி யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வாறைக் கொடியபின்னி நீர்த்தாருஞும்
வேலப்பா செந்திலப்பு வே.

அ

6. அஞ்ச முகங்கோன்றி னறு முகங்கோன்றும்
வெஞ்சமரி லஞ்சலென வேறுன்று—நெஞ்சி
லொருகா னினைக்கி லிருகாலுந் தோன்று
முருகாவென் றேத்துவார் முன்.

7. முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுது
நம்பியே கைதொழுவே னான்.

8. காக்கக் கடவியாங் காவா திருந்தக்கா
லார்க்குப் பரமா மறுமுகவா—பூக்குங்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
விடங்கா னிரங்கா யினி.

9. பாங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதங்
காங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சருங்காம
லாசையா னெஞ்சே யணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்.

10. நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல காடோறுஞ் சாற்றினான்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த வெல்லாந் தரும்.

---

8. 'கடம்பாவே' 'படங்கா னறுமுகவா' 'குமரா கதிர்வேலா' எனவும் பாடம்.

இரண்டாவது

பொருநாற்றுப்படை.

அரும்அ யாண ரகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாட் சோறுகடை யுருது
வேறுபுல முன்னிய விரகறி பொருந
குளப்புவழி யன்ன கவடுபடு பத்தல்
விளக்கழ அருவின் வியுறு பச்சை
யெய்யா விளஞ்சூர் செய்போ லல்லவிற்
றைதுமயி ரொழுகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை
யமைவா முலைவன் கண்கச் டன்ன
துவைவாய் தார்ந்த துரப்பமை யாணி
யெண்ணட் டிங்கள் வடிவிற் றூங்கி
யண்ண லில்லா வமைவாந வறுவாப்ப்
பாம்பணைத் தன்ன வோங்கிரு மருப்பின்
மாயோண் முன்கை பாய்தொடி கடுக்கும்
கண்கூ டிருக்கைத் திண்பிணிக் கிவவி
னைப்திரை யரிசி யுவைய லன்ன
வேப்பவை போகிய விரலுளார் கரம்பிற்

1-248. பொருநாற்றுப்படைக்கு இந்நூலே மேற்கோளாகக் காட்டுவர்; தொல். புறத்திணையியல், சூ. 36 - உ.

1-2. "கல்லெனக் கலின்பெற்ற விழவாற்றுப் படுத்தபிற், புல்லென்ற பூசலப் புலம்புகொண்டு" (கலி. 5.)

5. "விளக்கழ தூதுத்த போலும் வியுறு போர்வை" (சீவக. 559.)

வள்—தொல்; விளக்கழ ல ....பச்சை' (தொல். "வண்ணை" மயிலை.)

7. 'ஒழுகிய' என்றும் பாடம்.

8. "பழையதோர் பொல்லம் பொத்திய" (திருவிளை. விறகு. 13.)

10-11. "சொளத்தகு நிவவுக நிங்கட் சோணிசைத் தீனிய வாணி" சீவக. 559.)

11. "பிறைபிறந்தன்ன பின்னேர்த் கலைக்கை" (பெரும்பாண். 11.)

12. "சினவுதற்றன்ன விருந்தெரு வுறுவாய்" (பெரும்பாண். 16.)

14-5. "செம்பினைத் திரிபோன் மடந்தை முன்கைக், குறுந்தொடி மகளிர்க்கு மெலித்து மீந்து நிவவு" (பெரும்பாண். 12-3.)

கேள்வி போகிய நீள்விசித் தொடையன்
மணங்கமழ் முதுசை மண்ணி யன்ன
வணங்குமெய்ப் நின்ற வனமலர் காட்சி
யாறில் கன்வர் பணைமிட லருளின்
மாறுதலை பெயர்க்கு மருளின் பாலை
வாரியும் வடித்து முந்நீர் முறைந்துஞ்
சேருடை கன்மொழி சீரொடு சென்றி
யறல்போற் கூந்தற் பிறைபோற் நிருநுதற்
கொலைவிற் புருவத்துக் கொழுங்கடை மழைக்க
னிலவிதழ் புரையு மின்மொழித் துவர்வாய்ப்
பலவுறு முத்நிற் பழிதீர் வெண்பன்
மயிர்குறை கருவி மான்கடை யன்ன
பூங்குழை யூசற் பொறைசால் காதி
ணுண்டச் சாய்ந்த நலங்கிள ரெருத்தி
னுடைமைப் பணைத்தோ ளரிமயிர் முன்கை
நெடுவரை மிசையிய காந்தண் மெல்விரற்
கினிவா யெப்பி ஞெளிவிடு வள்ளுகி
ரணங்கென வுருத்த சுணங்கணி யாகத்
தீர்ச்சைப் போகா வேரிள வனமுலை
நீர்ப்பெயர்ச் சுழியி னிறைந்த கொப்பூ
ழுண்டென வுணரா வுயவு கடுவின்

19-20. "மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்தி" (சிலப். கானல்)

21. 'பணையிட' என்றும் பாடம்.

23. "வார்தல் வடித்த நூல்த லுறழ்தல்" (சிலப். கானல்.)

16-24. "ஆய்தினை யவைய வினையா கரம்பாங் கணிபெற வாரியும் வடித்து, மேயுற முறையே புரிந்து முறழ்ந்து மியைந்நீ ரோடுன் மொழிக, டேய்வற வெடுத்துச் தெறியும் பலசாற் நேனுற முன்னிகை யெழுப்பி" (இலிங்க. சாதாரக்கரை. 24.)

29-30. "மயிரெறி சுத்நிரிகை யினையவாய்" (சீவக. 168); "மயிரெறி கருவி வன்னே" (கந்த. மாலை. 46); "மயிரெறி கருவி தனதிழி தொழிலே மதித்தமஞ் ஞெறை தாங்க" (ஆனைக்கா. அகிலாண்ட. 38.)

36. "இடையீர் போகா வினமுலை யானே." (தே. திருவோத். 2); "சாக் கிடை போகா வினமுலை மாதர்" (திருவா. போற்றி. 34.); "சாக்கிடை புகாத வடிபரர் தோங்கு மேரின வனமுலை" (தைலநம். சயம்வரப். 77.)

வண்டிருப் பன்ன பல்கா ழல்கு
லிரும்பிடித் தடக்கையிற் செறிந்துதிரள் குமுங்கிற்
பொருந்துமயி ரொழுகிய திருந்துதாட் கொப்ப
வ்ருந்துகாய் காவிற் பெருந்தகு சீறடி
யரக்குருக் கன்ன செங்கில ஞெகுங்கலிற்
பரம்பகை யுழுத்த கோயொடு வெணி
மாற்பழுத் தன்ன மறுகுரீர்'மொக்கு
ணன்பக லந்தி நடையிடை விலங்கலிற்
பெடைமயி ரூருவிற் பெருந்தகு பாடினி
பாடின பாணிக் கேற்ப நாடொறுங்
களிறு வழங்குதர்க் கானத் தல்கி
யிலேயின் மராத்த வெல்வங் தாங்கி
வலேவலந் தன்ன மென்னிழல் மருங்கிற்
காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றைப்
பீடுகெழு திருவிற் பெரும்பெயர் நோன்றுண்
முரசுமுழங்கு தானை மூவருங் கூடி
யரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅற்
கோடியர் தலேவ கொண்ட தறிந

39. "பாடுவண்டிருந்தவன்ன பல்லேயகல்குல்" (தீவத. 1996)

42. "உயங்குகாய் நாலி னல்லெழி லசைஇ, வயங்கிழை யுலறியவடி" (சிறுபாண். 17-8); "மதக்துடு ருமலி காலினன்ன, துளங்கியன் மெலிந்த கல் பொரு சீறடி" (மலேபடு. 42-3); "முயல்வேட் டெழுந்த முடுகுவிசைக் கதாய், ன்னுப்புரையுஞ் சீறடி" (நற். 252); "காய்காச் சீறடி" (தீவத. 2691); வருத்துகாய் காலி னணிகொள் சீறடி", "வருத்துகாய்' காலினன்ன மலரடி" கூர்ம. இராமன்வனம். 15; ஷே. இராமன்வைருத்த. 28); "வருத்தயினது காலினே வாட்டித், திருத்து வெண்மை யெழில் சேர்த்த மலர்த்தாள்" (இலிங்க. அம்பரீடனே. 37.)

43. "அரக்கு விரித்தன்ன செல்லிம்" (மலேபடு. 507); "அரக்கத் ன்ன செல்லிப் பெருவழி" (அகநா. 14.)

44-5. இஃது இடத்திற்கு ஏற்ற உவமைக்கு மேற்கோள்; (இ-வி. கு. 19 - உரை.)

47. செய்புட்கண் பலதொகையும் விராய் வந்து ஒருசொல் கடைய தற்கு இது மேற்கோள். (தொல். எச்ச. கு. 24 - உ.)

54. "மூசுமுழங்கு தானை மூவருள்ளும்" (பெரும்பாண். 39; புறநா. (தொல். செவி. கு. 33 - சே. உ.)

54-5. முரசுதித்தற்கு மேற்கோள். (தொல். புறத்தினே. கு. 31 - உ.)

54-7. இவை தெய்ப்பபற்றிவந்த உவமத்திற்கு மேற்கோள். (தொல். வர. கு. 4 - இளம். உ; இ - வி. கு. 639)

கேள்வி போகிய நீள்விசித் தொடையன்
மணங்கமழ் மார்பிரை மண்ணி யன்ன
வணங்குமெய்ப் நின்ற வமைவரு காட்சி
யாறலி னல்லா பலவுடன் வருளின்
மாறுதலி பெயர்க்கு மருவின் பாலி
வாரியும் வடித்து மூக்கியு மூறழ்ந்துஞ்
சிருடை நன்மொழி நீரொடு சிதறி
யறல்போற் கூந்தற் பிறைபோற் நிருநுதற்
கொலிவிற் புருவத்துக் கொழுங்கடை மழைகஉ
னிலவிதழ் புரையு மின்மொழித் துவர்வாய்ப்
பலவுறு முத்திற் பழிதீர் வெண்பன்
மயிர்குறை கருவி மாண்கடை யன்ன
பூங்குழை யூசற் பொறைசால் காதி
ணுண்டச் சாய்ந்த நலங்கிள ரெருத்தி
னுடைமைப் பணீத்தோ ளரிமயிர் முன்கை
கெடுவரை மிசையிய காந்தண் மெல்விரற்
கினிவா யொப்பி னெனினிவிடு வள்ளுகி
ரணங்கென வருத்த சுணங்கணி யாகத்
நீர்க்கிடைப் போகா வேரிள வனமுலை
நீர்ப்பெயர்ச் சுழியி னிறைந்த கொப்பூ
ழுண்டென வுணரா வுயவு கடுவின்

19-20. "மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்தி" (சிலப். கானல்)

21. 'படைமிட' என்றும் பாடம்.

23. "வார்தல் வடித்த வார்த வுறழ்தல்" (சிலப. கானல்.)

16-24. "ஆய்நிலை யாலைய லங்கியவா நரம்பாய கணிபெற வாரியும் வடித்து, மேயுற மூறையே புக்கியு முறழ்ந்து மியைந்தீ ரோடுன் மொழிக, டேய்வற வெடுத்துச் தெறியும் பலகாற் றேனுற மிழ்னிசை யெழுப்பி" (இலிங்க. சாதர்கூகை. 24.)

29-30. "மயிரெறி கத்திரிகை யினையவாய்" (சீவக. 168); "மயிரெறி கருவி வல்லோ" (கந்த. மாலை. 46); "மயிரெறி கருவி தனதிழி தொழிலே மதித்தமைஞ் செறுறை தங்க" (ஜீவகக்கா. அலிலண்ட. 38.)

36. "இடைமீர் போகா வினமுலை யானே." (தே. திருவோத். 2); "சாக் போகா வினமுலை மாதர்" (திருவா. போற்றி. 34.); "சுர்க்கிடை புகாம ஸ்ம் தோங்கு மேரிள வனமுலை" (நைடதம். சுயம்வரப். 77.)

வண்டிருப் பன்ன பல்கா ழுல்கு
இரும்பிடித் தடக்கையிற் செறிக்குதிரள் சூறைக்கிற்
பொருந்துமயி ரொழுகிய திருந்துதாட் கொப்ப
வ்ருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி
யரக்குருக் கன்ன செங்கில ஞெகிழ்களிற்
பரற்பகை யுழந்த கோயொடு சிவணி
மரற்பழுத் தன்ன மறுகுகீர் மொக்கு
ணன்பக லந்தி நடையிடை விலங்கலிற்
பெடைமயி லூருவிற் பெருந்தகு பாடினி
பாடின பாணிக் கேற்ப நாடொறுங்
களிறு வழங்குதர்க் கானத் தல்கி
யிலையின் மராத்த வெவ்வக் தாங்கி
லிலைவலந் தன்ன மென்னிழல் மருங்கிற்
காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றைப்
பீடுகெழு திருவிற் பெரும்பெயர் நோன்றுண்
முரசுமுழங்கு தானை மூவருங் கூடி
யரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅற்
கோடியர் தலைவ கொண்ட தறிந

---

39. "பாலிவண்டிருத்தலன்ன பல்கலேயகலல்குல்" (சீவக. 1996)

42. "உயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ, வயங்கிழை புலறியவடி" (நற்றிணை. 17-8); "மதர்த்து ளுமலி நாவினன்ன, துளங்கியல் மெலித்த கல்லாரு சீறடி" (மலைபடு. 42-3); "முயல்வேட் டெழுந்த முடுகுவிசைச் சுத்தம், ன்னுப்புரையுஞ் சீறடி" (நற். 252); "நாய்நாச் சீறடி" (சீவக. 2691); "ருத்துநாய் நாவி னணிகொள் சீறடி", "வருத்துநாய் நாவினன்ன மலரடி" (கம்ப. இராமன்வனம். 15; ஷே. இராமன்வைகுந்த. 28); "வருத்த யினது நாவினை வாட்டித், திருத்தி வெண்மை யெழில் சேர்த்த மலர்த்தாள்" (விநாயக. அம்பரீடனை. 37.)

43. "அரக்கு விரித்தன்ன செங்கிலம்" (மலைபடு. 507); "அரக்கத் = செங்கிலப் பெருவழி" (அகநா. 14.)

44-5. இஃது இடத்திற்கு ஏற்ற உவமைக்கு மேற்கோள்; (இ-வி. சூ. 39 - உரை.)

47. செய்யுட்கண் பலதொகையும் விரவ வந்து ஒருசொல் கடையதற்கு இது மேற்கோள். (தொல். எச்ச. சூ. 24 - ச.)

54. "முரச முழங்கு தானை மூவருள்ளும்" (பெரும்பாண். 33; புறநா. (தொல். வெளி. சூ. 33 - சே. உ.)

54-5. முரசுடைத்தற்கு மேற்கோள். (தொல். புறத்திணை. சூ. 31 - ச.)

54-7. இவை நெய்ப்பற்றிவந்த உவமத்திற்கு மேற்கோள். (தொல். வுவ. சூ. 4 - இளம். உ; இ - வி. சூ. 639)

வறியா மையி னெறிதிரிந் தொராஅ
தாற்றெதிர்ப் படுதலு நோற்றதன் பயனே
போற்றிக் கேண்மதி புகழ்மேம் படுஉ
வாடுபசி யுழந்தகின் னிரும்பே ரொக்கலொடு
நீடுபசி பொரா அல் வேண்டி னீடின்
றெழுமதி வாழி யேழின் கிழவ
பழுமர முள்ளிய ப்றவையின் யாணுமவ
னிழுமென் சும்மை யிடனுடை வரைப்பி
னசையுநர்த் தடையா நன்பெரு வாயி
லிசையேன் புக்கென் னிடும்பை தீர
வெப்புத்த மெய்யே னெய்யே ஞெகிழ்
பைத்த பாம்பின் றுத்தி யேய்ப்பப்
கைக்கச டிருந்தவென் கண்ணகன் றடாரி
யிருஞிமிர்ப் பாணிக் கேற்ப விரிகதிர்
வெள்ளி முளைத்த நள்ளிருள் விடிப
லொன்றியான் பெட்டா வளவையி னென்றிய
கேளிர் போலக் கேள்கொள வேண்டி
வேளாண் வாயில் வேட்டக் கூறிக்

---

59 : மலைபடு. 65 - 6.

61. நன். சூ. 397-மயிலை; நன் - வி. சூ. 398. மேற்.

64. "பழந்தேர் வாழ்க்கைப் பறவைபோல" (முதுகா. 576); "பழு மரந் தேரும் பறவைபோல" (பெரும்பாண். 20); "தாஅவஞ்சிறை நெய் பறை வாவல், பழுமரம் படரும்" (குறுந். 172); "யாணர்ப் பழுமரம் புள்ளி மிர்ந் தன்ன" (புறநா. 173); "மாக்களாற், புட்பயில் பழுமரப் பொலிவிற்று", "பார்கெழு பழுமரப் பறவை" (தேவா. 93, 828); "மரஞ்சேர் பறவையுந், தொக்குட னீண்டிச் சூழ்ந்தன விடாஅ, பழுமரத் தீண்டிய பறவையி னெழுஉம்" (மணி. 14: 24-7); "பாயதொன்மரப் பறவைபோல்" (திருவிளை. திருநகரப். 67.)

66-7. 'நசையுநர்க் கடையா.....இசையெனப் புக்கு' என்னும் பாடம். "பொருநர்க் காயினும் புலவர்க் காயினு, மருமறை ஈவி னந்தணர்க் காயினும் .....அடையாவாயில்" (சிறுபாண். 208-6); "நசையுநர்க் கடையா நன்பெரு வாயில்" (கூர்ம. சூரியன்மரபு. 13; நன். சூ. 457 - மயிலை; நன். வி. சூ. 458. மேற்.)

68. நன். சூ. 451 - மயிலை மேற்.

72. "வெள்ளி மூளைத்த விடியல்" (1 - வே பாடாண். 18)

73. "ஒன்றியான் பெட்டா வளவை யன்றே." (புறநா. 399)

கண்ணிற் காண நண்ணுவழி யீரீஇப்
பருகு வன்ன வருகா நோக்கமோ
டுருகு பவைபோ லென்பு குளிர்கொளீஇ
யீரும் பேணு மிருந்திறை கூடி
வேரொடு நீண்ந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி
நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்
தீரவுரி யன்ன வறுவை நல்கி
மழையென மருளு மகிழ்செய் மாடத்
திழையணி வனப்பி னின்னகை மகளிர்
போக்கில் பொலங்கல நிறையப் பல்கால்
வாக்குபு தரந்தர வருத்தம் வீட
வார வுண்டு பேரளர் போக்கிச்

---

76. "கண்ணிற் காண நண்ணுவழி யிருந்து" (குறுந். 203)

77. "பருகு வன்ன காத லுள்ள மொடு" (அகநா. 399); "பருகுவான் போல நோக்கும்", "பருகுவனள் போனேக்கி" (பாகு. 4: திருவன்பதம். 35; ஷி. 10: சகடமுதைத்த. 21); "மலர்த்தடங் கண்ணே வாயாப், பருகுவான் போல நோக்கி" (கூர்ம. திருக்கல்யாண. 61.)

79. 'இமிர்ந்திறைகூடி' என்றும் பாடம்.

80. "தொன்றுபடு துளியொடு பருவீழை போகி" (புறநா. 376.)

81. "துன்னற் சிதாஅர் நீக்கி" (பொருந. 154)

80-81. "அரையது, வேற்றிழை நுழைந்த வேர்நீண சிதாஅ ரோம்பி" (புறநா. 69.)

82. 'நோக்குநுழைவேலா' என்றும் பாடம்.

83. "குரவ மெல்லரும் பன்னெய் கூரெயிற் றரவின், உரிவை யன்னவா னுண்டுகில்" (பாகு. 10: கோவியர்துகில். 9); "பாழிவா யரவி னுரிஞ்ச சாடை" (இலிங்கு. அம்பரீடனே. 56); "பையர வுரியி னன்ன கடைப் படாம்" (திருவிளை. திருமண. 147.)

84. "மலையென மழையென மாட மோங்கி" (மலைபடு. 484); "சேறு செய் மாரியி னளிக்குநின் சாறுபடு திருவி னனைமகி ழானே" (பதிற். 65.)

85. "இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகி" (சிறுபாண். 220.)

84-8. "வினங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய, மணங்கமழ் தேறல் மடுப்ப நாளு, மகிழ்ந்தினி துறைமதி பெரும" (மதுரை. 779-81); "தண் கமழ் தேறல், பொன்செய் புனைகலத் தேந்தி நாளு, மொண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்நிறைந்து" (புறநா. 56)

86-8. பகரவுகரம் இறந்தகால வினையெச்சமாக வருமென்பதற்கு இவ் வடிகள் மேற்கோள்; (தொல். வினை. சூ. 31-ஈ; இ-வி. சூ. 246)

செருக்கொடு நின்ற காலே மற்றவன்
திருக்கினர் கோயி லொருசிறைத் தங்கித்
தவஞ்செய் மாக்க டம்மூடம் பிடாஅ
தந்தபய மெய்திய வளவை மான
வாறுசெல் வருத்த மகல நீக்கி
யனந்தர் நடுக்க மல்ல தியாவது
மனங்கவல் பின்றி மாழாந் தெழுந்து
மாலே யன்னமேதார் புன்மையுங் காலேக்
கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலேயுங்
கனவென மருண்டவென் னெஞ்சே மாப்ப
வல்லஞர் பொத்திய மனமகிழ் சிறப்பக்
கல்லா வினேஞர் சொல்லிக் காட்டக்
கதுமெனக் கரைந்து வம்மெனக் கூஉ
யதன்முறை கழிப்பிய பின்றைப் பதனறிந்து
தூராஅய் தற்றிய தூருவையம் புழுக்கின்
பராரை வேவை பருவெனத் தண்டிக்
காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை
யூழி னூழின் வாய்வெப் தொற்றி
யவையவை முனிகுவ மெனினே சுவைப
வேறுபல் லுருவின் விரகு தங்கிரீ இ

91-2. "இடம்படு புகழ்ச்சனகர் கோனினிது பேண .....உடம்டெ துறக்கசுக ருற்றவரை யொத்தார்", "இறைவன் சொல்லெனு மில்லை வர்ந்தினர் யாரும்.....உறையும் விண்ணக முடலொடு மெய்தின ரொத்தார் (கம்ப. கடிமண. 1; ஷே மந்திர. 75)

94. "தழந்தடு கள்ளின் றேப்பியுண் டயர்ந்து, பழஞ்செருக் குற் வனந்தர்ப் பாணியும்" (மணி. 7: 71-2); "அரிய லார்ந்த வனந்தர்" (தணி காடு. 100.)

96. "ஆடாவக் கிண்கிணிக்கா லன்னஞர் சேடனே" (தே. ஆட் திருநா.)

96-7. "பண்டறி வாரா வருவோடு" (புறநா. 376.)

98. "கனவிற் கண்டாங்கு வருந்தாது கிற்ப, நனவி னல்கியோ வ றேன்றல்", "கனவென மருள வல்லே நனவி, னல்கி யோனே றேன்றல்" (புறநா. 356, 387.)

107-8. "ஊனு மூணு முணையி னினிதெனப், பாலிற் பெய்தவும் கொண்டவும், மனவுபு கலந்த மெல்லியது பருகி" (புறநா. 381.)

மண்ணமை முழவின் பண்ணமை சிறியா
தொண்ணுதல் விறலியர் பாணி தூங்க
மகிழ்ப்பதம் பண்ணுட் கழிப்பி யோருநா
ளவிழ்ப்பதங் கொள்கென் றிரப்ப முகிழ்த்தகை
முரவை போகிய மூரியா வரிசி
விரலென நிமிர்ந்த நிரலமை புழுக்கல்
பால்வறைக் கருணை காடியின் மிதப்ப
வயின்ற காலைப் பயின்றினி திருந்து
கொல்லே யுழுகொழு வேப்பப் பல்லே
யெல்லீயு மிரவு மூன்றின் மழுங்கி
யுயிர்ப்பிடம் பெறுஅ தூண்முனிந் தொருநாட்
செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய
செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கிளந்தன மாக வல்லே
யகறி ரோவெம் மாயம் விட்டெனச்
சிறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு
துடியடி யன்ன தூங்குநடைக் குழவியொடு
பிடியுணர் வேழம் பெட்டவை கொள்கெனத்
தன்னறி யளவையிற் றரத்தர யாணு
மென்னறி யளவையின் வேண்டுவ முகந்துகொண்
டின்மை தீர வந்தனென் வெல்வே
னுருவப் பஃறே ரினேயோன் சிறுவன்

113-5. "முரவை போகிய மூரிலில்வான் மூரல்பால் வ்றையல், கருணை" (திருவிளை. குண்டோதரனுக்கு. 14.)

121-2. "செல்வேர் நில்லெவெர் தொல்பதிப் பெயர்ந்தென, மெல்லெனக் கூறி விடுப்பின்" (மலைபடு. 567-8.)

125. 'துடியுரையடிய' என்றும் பாடம். "துடியடிக் கயந்தலே" (கலி.11).

126-7. யானைகொடுக்கப்படுகிலைப் புறநானூறு, 12), 130, 131, 135, 151 - ஆம் பாட்டுக்கள் முதலியவற்றாலுணர்க; "குன்றுகிய பொன்னும் வேழக் குழாமுங் கொடை புகழ்ந்து, சென்றார் முகக்கும்" (தஞ்சை. 145.)

129. 'வென்வேல்' என்றும் பாடம்.

119-129. பரிசிலன் யான் போகல் வேண்டுவெனக் கூறி, விடுத்தபின் அவன் தந்த வளனே யுயர்த்துக் கூறியதற்கு இது மேற்கோள்; (தொல். புறத். இனை. சூ. 36 - உ.)

130. 'உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி அழுந்தூர்வேளிடை மகட் கோடலும், அவன் மகனிய கரிகாற் பெருவளத்தான் நாங்கூர்வேளிடை மகட் கோடலும்' (தொல். அகத்திணை. சூ. 30 - உ.)

முருகற் சிற்றத் துருகெழு குருசி
ருப்வயிற் றிருந்து தாய மெய்தி
யெய்யாத் தெவ்வ ரேவல் கேட்பச்
செய்யார் தேஎந் தெருமரல் கலிப்பப்
பெளவ மீமிசைப் பகற்கதிர் பரப்பி
வெவ்வெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்குப்
பிறங்குதவழ் கற்றதற் றொட்டுச் சிறந்தநன்
னூடுசெறிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப
வாளி நன்மா ணணங்குடைக் குரூஉ
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
மூஇக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டங் களிறட் டாஅங்
கிரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
யரவாய் வேம்பி னங்குழைத் தெரிய
மோங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
விருபெரு வேந்தரு மொருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்முட்
கண்ணுர் கண்ணிக் கரிகால் வளவன்
ருணிழன் மருங்கி லணுகுபு குறுகித்
தொழுதுமுன் னிற்குவி ராயிற் பழுதின்
றீற்ரு விருப்பிற் போற்றுபு நோக்கிதுங்

---

131. "முருனென்னசிற்றத்து" (அகநா. 158); "முருகற் சிற்றத் துருகெழு குருசில்" (புறநா. 16.)

132. "உருகெழுதாய மூழினெய்தி" (பட்டினப். 227.)

137. 'கற்றது தொட்டுஞ் சிறந்த' என்றும் பாடம். "கரியவன்றவழ் கற்றனன்" (பாக. 10 : சகடமுதைத்த. 11.)

141. "அரவாய்க் கடிப்பகை" (மணி. 7 : 73.); "அரசிகரிலை நிம்பத் தார்" (திருவிளை. அன்னக்குழியும். 21.)

147. 'வெண்ணிற்முக்கிய' என்றும் பாடம்; (புறநா. 66.)

137-48: "மூலேமுத முறந்த வன்றே மூரித்தா ளாளி யாணைத், தலேலிலம் புரள வெண்கோ டுண்டதே போன்று தன்கைச், சிலேயிடம் பிடித்த ஞான்றே தெவ்வரைச் செகுத்த நம்பி, நிலவுமிழ் குடையி னீழற் றுஞ்சுக வையு மென்பார்." (சீவக. 2554.)

148. "கண்ணுர் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்" (சிறுபாண். 65.)

149. 'மருங்கினணுகுபு' என்றும் பாடம்.

151. 'போற்றுவனஞெக்கி' என்றும் பாடம்.

கையது கேளா வளவை யொயியெனப்
பாசி வேரின் மாசொடு குறைக்க
துன்னற் சிதாஅர் நீக்கித் தூய
155 கொட்டைக் கரைய பட்டுடை நல்கிப்
பெறலருங் கலத்திற் பெட்டாங் குண்கெனப்
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர
வைகல் வைகல் ஞகஈவி பருகி
யெரியகைத் தன்ன வேடி முமரை
160 சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி
நூலின் வலவா நுணங்கரின் மாலை
வாலொளி முத்தமொடு பாடினி யணியக்
கோட்டிற் செப்த கொடிஞ்சி நெடுந்தே
ரூட்டுளே துயல்வர வோரி நடங்கிட்
165 பால்புரை புரவி நால்கூடன் பூட்டிக்
காலி னேழடிப் பின்சென்று கோலின்
முறுகளேக் தெறென் றேற்றி வீறுபெ றுபு
பேர்யாழ் முறையுளிக் கழிப்பி நீர்வாய்த்
தண்பணே தழீஇய தளரா விருக்கை
170 நன்பல லூர நாட்டொடு நன்பல

152. ‘கையதுகொள்ளா’ என்றும் பாடம்.

153. ‘மாசொடுமிடைந்த’ எனறும் பாடம்.

153-1. “பாசியன்ன சிதர்வை” (பெரும்பா. 168); “முதுசீர்ப்பாசி யனனவுடை”, “பகட்டிலேப்பாசி, வேர்புரை சிதாஅர்” (புறநா. 390, 392.)

159. “எரியகைத்தன்ன தாமரை” (அகநா. 106, 116)

159-62. “ஞள்ளழற் புரிந்த தாமரை, வெள்ளி காசாற் பூப்பெற் றிலினே”, “அழல்புரிந்த வட்டதாமரை, யைதடர்ந்த நறும்பெய்து, புனலிணைப் பொலிந்த பொலனறுங் கெரிபல், பாறுமயி ரிருந்தலே பொலியச் சூடி”, “இள்ளிவளவற் படர்குவையாயின் .. .. . ஆம்பவண் டிமிரா தாமரை, சூடா யாகலதனினு மிலேயே”, “பாடினி மாலேபணிய, வாடா தாமரை சூட்டுவ னினக்கே”, ‘வாடாமாலே பாடினி யணியப், பாணன் சென்னிக் கேணி பூவா, வெறிமரு டாமரைப் பெருமலர்தயங்க” (புறநா. 11, 29, 69, 319, 364.)

163. “கோட்டினிற்புரி கொடிஞ்சியங்தேர்”, “யானேக்கோட்டினிலிய ற்றுதிண்டேர்” (பாக. 1. தன்மபுதிரன்அரச. 18; மெ. 10. திருவவதார. 18.); (தொல். வேற்றுமை. சூ. 17 ந. மேற்.)

165. “நால்கு பண்ணினர் நால்வரு மேறினர்” (சீவக. 1774. மேற்.)

168. ‘முறையுளிகழிப்பி’ என்றும் பாடம்.

வெரூஉப்பறை துவலும் பரூஉப்பெருந் தடக்கை
வெருவரு செலவின் வெகுளி வேழந்
தாவிடைத் தங்கலோ விலனே வரவிடைப்
பெற்றவை பிறர்பிறர்க் கார்த்தித் தெற்றெனச்
செலவுகடைக் கூட்டுதி ராயிற் பலபுலந்து
நில்லா வுலகத்து நிலைமை தூக்கிச்
செல்கென விடுக்குவ னல்ல னெல்லெனத்
திரைபிறழிய விரும்பௌவத்திக்
கரைசூழ்ந்த வகன்கிடக்கை
மாமாவின் வயின்வயினெற்
றுழ்தாழைத் தண்டண்டலைக்
கூடுகெழீ இய குடிவயினுற்
செஞ்சோற்ற பலிமாந்திய
கருங்காக்கை கவவுமுனையின்
மனைநொச்சி நிழலாங்க
ணீற்றி யாமை தன்பார்ப் போம்பவு
மீளேயோர் வண்ட லயரவு முதியோ
ரவைபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவு
மூடக்காஞ்சிச் செம்மருதின்
மடக்கண்ண மயிலைலப்
பைம்பாகற் பழந்துணரிய
செஞ்சூளைய கனிமாந்தி
யறைக்கரும்பி னரிநெல்லி

---

172. 'வெருவருஞ்செலவின்' என்றும் பாடம்.

171-2. "நிறையழி கொல்யானை நீர்க்குரிட் டாங்குப், பறையறைந் தல்லது செல்லற்க." (கலி. 56.); "பறைநிறை கொல்யானை", "அறைபறை யானை" (முத்.); "முரசதிர்ந் தானைமுன் னேடை முன்பணிர் தன்பர்களேத்த" (தே. ஆதர்.)

176. 'நிலைமைதூக்கி' என்றும் பாடம். "நில்லாவுலகத்து நிலைமை தூக்கி" (பெரும்பாண். 466.)

180. 'வயின்வயினின்' என்றும் பாடம்.

181. வெண்பாவுரிச்சோல் தூங்கலோசை பிறந்ததற்கு இவ்வடிமேற் கோள்; (தொல். செய். சூ. 22.)

182. 'கூடு குழீஇய' என்றும் பாடம்.

183-4. கருத்து : தூது. 210; திருச்சிற் 235.

188. 'பகைமுரண் செலவும்' என்றும் பாடம்.

191-2. (சிலப். 16 : 24. மேற்.)

னினக்களம ரிசைபெருக
வறளடும்பி னிவர்பகன்றைத் .
தளிர்ப்புன்கின் முழ்காவி
னணைஞாழலொடு மரங்குழீ இய
வவண்முணியி னகன்றுமாறி
யவிழ்தளவி னகன்றேறன்றி
நகுமுல்லை யுகுதேறுவீப்
பொற்கொன்றை மணிக்காயா
நற்புறவி னடைமுணியிற்
சுறவழங்கு மிரும்பௌவத்
திறவருந்திய வினநாரை
பூம்புன்னைச் சிணைச்சேப்பி
னேங்குதிரை யொலிவெரீ இத்
தீம்பெண்ணை மடற்சேப்பவுங்
கோட்டெங்கின் குலைவாழைக்
கொழுங்காந்தண் மலர்நாகத்துத்
துடிக்குடிஞைக் குடிப்பாக்கத்
திபாழ்வண்டின் கொளைக்கேற்பக்
கலவம்விரித்த மடமஞ்ஞை
நிலவெக்கர்ப் பலபெயரத்
தேனெப்யொடு கிழங்குமாறியோர்
மீனெப்யொடு நறவுமறுகவுங்
கீங்கரும்போ டவல்வகுத்தோர்
மான்குறையொடு மதுமறுகவுங்
குறிஞ்சி பரதவர் பாட நெய்த
னறும்பூங் கண்ணி குறவர் சூடக்
கானவர் மருதம் பாட வகவர்
நீனிற முல்லைப் பரீறிணை குவலக்
கானக்கோழி கதிர்குத்த
மணைக்கோழி திணைக்கவர

202. ' மூணையின் ' என்றும் பாடம்.

210. " உருமிடி மகுளியிற் பொருடொரிக் கிசைக்குங், கடுங்குரற் குடி ஞய தெடும்பெருங் குன்றம் " (அகநா. 19); " கடுந்துடி, புலிதுஞ்சு தெடு ரைக் குடிஞையோ டிரட்டு மலை " (புறநா. 179.)

213. " நிலவுமணல் வியன்கானல் " (புறநா. 17.)

வரைமன்னி கழிமூழ்கக்
கழிநாரை வரையிறுப்பத்
தண்வைப்பிற் றுடுகுழீஇ
மண்மருங்கினுன் மறுவின்றி
யொருகுடையா ணெஞ்றுகூடப்
பெரிதாண்ட பெருங்கேண்மை
யறனெடு புணர்ந்த திறனறி செங்கோ
லன்னேன் வாழி வெல்வேற் குருசின்
மன்னர் நடுங்கத் தோன்றிப் பன்மா
ணெல்லே தருநன் பல்கதிர் பரப்பிக்
குல்லே கரியவுங் கோடெரி நைப்பவு
மருவி மாமலே நிழத்தவு மற்றக்
கருவி வானங் கடற்கோண் மறப்பவும்
பெருவற னுகிய பண்பில் காலையு
நறையு நரந்தமு மகிலு மாரமுந்
துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி
நரைத்தலேக் குரைப்புனல் வரைப்பகம் புகுதொ றும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடைபக்
கூனிக் குபத்தின் வாய்நெல் லரிந்து
சூடுகோ டாகப் பிறக்கி நாடொறுங்
குன்றெனக் குவையிய குன்றுக் குபடை
கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்குஞ்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
யாயிரம் விளேயுட் டாகக்
காவிரி புரக்கு நாடுகிழ வோனே.

---

226. 'நாடு கெழீஇ' என்னும் பாடம்.
234. "பரந்துபடு கூரெரி கானகைப்ப, மரந்தியுற்ற" (நற். 177.)
238. "நறுவீ நாகமு மகிலு மாரமும்" (திருப்பாண். 116.)
242. (சிலப். 16: 30 - மேற்)
241. "குடகாற்றெறிந்த குப்பை வடபாற், செம்பொன் மலேயிற் சிறப்பத் தோன்றும்" (பெரும்பாண். 240-41.)
246-7. "வேலியாயிரம் விளேகதின் வயலே" (புறநா. 391; சிலப-6: 30 - மேற்.); "வாலிதாமுளே யொருபுறம் வளர் செறு வொருசார், பாலி னெல்லொரு சாரொரு சாரிப் பறம்பு, சாலிவேலே யோர் சாரிவைதலே மயக்குற லால், வேலியாயிரம் விளேயு ளென்பது மிதன்மேற்றே" (தீகாழ்த்-திருநகர். 9.) (தொல். விளே. சூ. 24. ந. மேற்.)
248. (நன். சூ. 182 - மயிலே. மேற்; நன் - வி. சூ. 183 - மேற்)
246-8. (இ - வி. சூ. 102 - மேற்)

இதன்பொருள்.

1. அருஅ யாணர் அகல் நலே பேர் ஊர்—இடையருத செல்வ வரு வாயினையுடைய் அகன்ற இடத்தையுடைய பெரிய ஊர்களிடத்து,

2. சாறு கழி வழி நாள் சோறு நசை உருது—விழாக்கழிந்த பின்ஞ ளில் ஆண்டுப் பெறுகின்ற சோற்றை விரும்புதல் செய்யாது,

3. வேறு புலம் முன்னிய வீரகு அறி பொருந—விழாக்கொண்டாடும் வேற்றுப்புலத்தைக் கருதிய * விரகையறிந்த பொருந,

இஃது அண்ண வினி.

4. குனப்பு வழி அன்ன கவடு படு பத்தல்—மானகுளம்பழுத்திய இடத் தையொத்த இரண்டருகும்தாழ்ந்த நடுவுயர்ந்த பத்தலினையும்,

5. விளக்கு அழல் உருவின் விசி உறு பச்சை—விளக்கினது எரிகின்ற நிறத்தையுடைய விசித்துப் போர்த்தலுற்ற தோல்,

6. எய்யா இள சூல் செய்யோள் அ வயிறு—மிக அறியப்படாத இளைய சூலையுடைய சிவந்த நிறத்தையுடையோளது அழகினையுடைய வயிற்றின்,

செய்யோளென்றூர், மயிரொழுங்கு விளங்கித் தோற்றுதற்கு.

7. ஐது மயிர் ஒழுகிய தோற்றம் போல—ஐதாகிய மயிர் ஒழுங்குபடக் கிடந்த தோற்றரவுபோல,

8. பொல்லம் பொத்திய பொதி உறு போர்வை—இரண்டுதலையுங் கூட் டிதைத்த மாத்தைப்பொதிதலுறும் போர்வையினையும்,

9-10. அரை வாழ் அலவன் கண் கண்டன்ன துளை வாய் தூர்ந்த துரப்பு அமை ஆணி—முழையிலே வாழ்கின்ற ஞெண்டின்கண்ணைக் கண்டாலொத்த பத்தலிரண்டுஞ்சேர்த்தற்குத் திறந்த துளைகளின் வாய் மறைதற்குக்காரண மாகிய மூடுக்குதலமைந்த ஆணியினையும்,

தோல் ஞெகிழாமல் மூடுகின்ன ஆணியென்றுமுரைப்பர்; அன்ன ஆணி யென்க.

11-2. எண்ணுன் நிங்கள் வடிவிற்றுஆகி அண்ணு இல்லா அமை வரு வாயால்—உவாவிற்கு எட்டாநாளில் நிங்களின்வடிவை உடைத்தாய் உண் ணுக்கில்லாத பொருந்துதல்வந்த வறிய வாயினையும்,

13. பாம்பு அணந்தன்ன ஒங்கு இரு மருப்பின—பாம்பு தலையெடுத்தா லொத்த ஓங்கின கரிய தண்டினையும்,

14. மாயோன் முன்கை ஆய் தொடி கடுக்கும் நிவவின (15)—கரிய நிறத்தையுடையோளுடைய முன்கையில் அழகினையுடைய நேர்ந்த தொடியை யொக்கும் வார்க்கட்டினையும்,

15. கண்கூடு இருக்கை நிண பிணி நிவவு—ஒன்றோடொன்று நெருங் கின இருப்பையுடைத்தாகிய நிண்பிணிப்பினையுடைய நிவவு.

இது நரம்புதுவக்கப்படுவது.

---

* விரகு - உபாயம்.

16-8. ஆய் நினை அரிசி அவையல் அன்ன வேய்வை போலிய உளர் நரம்பின் கேள்வி போலிய மீன் விரி தொடையல்—அழகினையுடைய யாழிசையிற் குத்தலரிசியைபொத்த குற்றம்போலிய விரலாலசைக்கும் நரம்பினையுடைய இசைமுற்றுப்பெற்ற நீண்ட விசித்தலேயுடைய தொடர்ச்சியினையும்,

19. மணம் கமழ் மாதரை மண்ணி அன்ன காட்சி (20)—மணம் செய்தமை தோற்றுகின்ற மாதரை ஒப்பித்தாலொத்த அழகினையுமுடைய,

20. அணங்கு மெய் கின்ற அமை வரு காட்சி—*யாழிற்குரியதெய்வம் தன்னிடத்தேகின்ற இலக்கணம் அமைதல்வரும் அழகு.

21. ஆறு அலை கள்வர் படைவிட—வழியையலைக்கின்ற கள்வர் கையிற் படைக்கலங்களைக் கைவிடும்படி,

21-2. அருளின் மாறு தலை பெயர்க்கும் மருவு இன் பாலை—அருளின மாறுகிய மறத்தினை அவர்களிடத்துகின்று பெயர்க்கும் மருவுதலினிய பாயாழை,

பாலை, ஆகுபெயர்.

"கோடே பத்த ராணி நரம்பே, மாடக மெனவரும் வகையின தாகும் என்றதனால் மாடகமொழித்தன கூறினர்

பத்தலினையும் (4), பொல்லம்பொத்தினிய (8) பசையினிய (5) போர்யினையும் (8), ஆணியினையும் (11), வறுவாயினையும் (12), மருப்பினையும் (13), வார்க்கட்டினையும் (15), நரம்பின்றெடர்சியினையும் (18), காம்பினையும் (20) உடைய பாலையாழென முடிக்க.

"கொன்றை கருங்காலி குமிழ்முருகுத தணக்கே" எனபதனால் தேடிற்கு மரம் கொன்றையும கருங்காலியுமாம்; குமிழும், முருக்கும், அணக்கு பத்தற்குமரம்.

23. வாரியும—நரம்புகளைக் கூடத் தழுவியும,

வடித்தும—உருவியும்,

உந்தியும—தெறித்தும்,

உறழ்த்தும—ஒன்றைவிட்டு ஒன்றைத்தெறித்தும்,

வடித்தல்—நரம்பெறிதலென்றுமுரைப்பர்.

24. சீர் உடை நல் மொழி நீரொடு சிதறி—சீரையுடைத்தாகிய †தேபாணினீர்மையுடன் பரக்கப்பாடி,

‡ சீரெனவே பாணியும் தூக்கும் உளவாயின.

25. அறல் போல் கூந்தல்—ஆற்றறல்போலும் கூந்தலினையும,

பிறை போல் திரு நுதல்—பிறைபோல அழகினையுடைய §நுதலினையும்

---

* யாழிற்குரிய தெய்வம் மாதங்கி; (சீவக. 411, 550 - ந.)

† தேவபாணி - தெய்வங்களைத் துதிக்கும்பாட்டு; (சிலப். கடலாடு. 85 ந.)

‡ சீர் முதலியவை தாளவிசேடங்கள்; சீர் முடியுங்காலத்தைத் தன்னிடத்தே உடையது; பாணி எடுக்குங்காலத்தைத் தன்னிடத்தே உடையது; தூக்கு முங் காலத்தைத் தன்னிடத்தே உடையது; (கலி. கடவுள். ந.)

§ நுதல் - நெற்றி.

26. கொலை வில் புருவத்து—கொலைத்தொழிலையுடைய வில்போலும் புருவத்தினையும்,

கொழு கடை மழை கண்—அழகிய கடையினையுடைய குளிர்ச்சியை யுடைய கண்ணினையும்,

27. இலவு இதழ் புரையும் இன் மொழி துவர் வாய்—இலவினது இதழையொக்கும் இனிய சொல்லையுடைய செம்மையுடைத்தாகிய வாயினையும்,

28. பல உறு முத்தின் பழி நீர் வெள் பல்—புலவுஞ்சேர்ந்த முத்துக்கள் போற் குற்றந்நீர்ந்த வெள்ளிய பல்லினையும்,

பணைத்தோள் தன்னூர், ஒருகோவ்வையாயிருத்தலின்; இனிப் பலவினையுற்ற முத்தென்றுமாம்.

29-30. [மயிர்குறை கருவி மாண்கடை யன்ன, பூங்குழையுசற் பொறை சால் காதின்:]

மயிர் குறை கருவி மாண் கடை அன்ன காதின்—மயிரைவெடுங்கின்ற கத்தரிகையினுடைய மாட்சிமைப்பட்ட குழைச்சையொத்த காதினையும்,

பூ குழை ஊசல் பொறை சால் காது—பொலிவினையுடைய மகரக்குழையி னுடைய அசைவினைப் பொறுத்தலமைந்த காது.

31. காண் அட சாய்ந்த நலம் இனா எருத்தின்—காணும் வருத்தலாற் பிற சோர்காதுகவிழ்ந்த நன்மைவினங்குகின்ற கழுத்தினையும்,

32. ஆடு அமை பணை தோள்—அசைகின்ற மூங்கில்போலும் பெருத்த லையுடைய தோளினையும்,

அரி மயிர் முன்கை—ஐம்மைமயிரினையுடைய முன்கையினையும்,

33. நெடு வரை மிசையிய காந்தள் மெல் விரல்—நெடிய மலையின் உச்சி யிடத்தனவாகிய காந்தள்போலும் மெல்லிதாகிய விரலினையும்,

34. கிளி வாய் ஒப்பின் ஒளி கிடு வன் உகிர்—கிளியினது வாயோடு ஒப் பினையுடைய ஒளிவிடுகின்ற பெருமையையுடைத்தாகிய உகிரினையும்,

35. அணங்கு என உருத்த சுணங்கு அணி ஆகத்து முலை(36)—பிறர்க் குவருத்தமெனத் தோற்றின சுணங்கணிந்த மார்பிடத்து முலையினையும்,

36. ஈர்க்கு இடை போகா எர் இன வனம் முலை—ஈர்க்கும் நடுவேபோ காத எழுச்சியையுடைய இனைய அழகினையுடைய முலை.

37. நீர் பெயர் சுழியின் நிறைந்த கொப்பூழ்—நீரிடத்துப் பெயர்தலை யுடைய சுழிபோல உத்தமலிலக்கணங்கள் நிறைந்த கொப்பூழினையும்,

38. உண்டென உணரா உயவும் நடுவின்—உண்டென்று பிறருணரப் படாத வருத்தமிடையினையும்,

உயலினென்று பாடமாயின், வருத்துதலையுடையவென்க.

39. வண்டு இருப்பு அன்ன பல் காழ் அல்குல்—பல வண்டினங்களின் இருப்பையொத்த பல மணிகோத்த வடங்களையுடைய * மேகலையணிந்த அல் குலையும்,

---

* "எண்கோவை மேகலை" (பக். 22.)

காழ், ஆருபெயர்.

40. இரு பிடி தட கையின் செறித்த நிரன் குறங்கின்—பெரிய பிடியுடைய பெருமையையுடைய கைபோல ஒழுகவந்து மெல்லிதாகத் தம்மிருங்கி ஒன்றித்திரண்ட * குறங்கினையும்,

41. பொருத்து மயிர் ஒழுகிய திருத்து தாட்கு ஒப்ப — வீணைக்காரி இலக்கணமென்றற்குப் பொருந்தின மயிர் ஒழுங்குபட்ட வீணையிலக்கணங்கிருந்தின வீணைக்காலுக்குப் பொருத்த,

42. [வருத்தாய் நாவிற் பெருத்தகு சீறடி :]

வருத்து நாய் நாவின் சிறு அடி—ஓடியிளைத்த நாயினது நாப்போலச் சிறு அடியினையும்,

41-2. தாட்கு ஒப்ப பெரு தகு அடி—தாளுக்குப்பொருந்தப் பெருகு தக்கிருக்குமடியென்க.

† பெருவெண்ணுமுதனிலே பெருமையுணர்த்திநின்றது.

43. அரக்கு உருக்கு அன்ன செ நிலன் ஒதுங்கலின்—சாதிலிங்கத்தை உருக்கினதன்மையொத்த செய்யநிலத்தே நடக்கையினாலே,

44. பரல் பகை உழந்த நோயொடு சிவணி—சக்கான்கல்லாகிய பரையாலே வருந்தின நோயோடேபொருந்தி,

45. மரல் பழுத்தன்ன மறுகு சீர் மொக்குள்—மாம்பழுத்தாற்போன்ற நுளம்புநீரையுடைய சொப்புளம்,

46. நல் பகல் அந்தி நடை இடை விலங்கலின்—நன்மையுடைய உச்சிக்காலமான சந்தியிலே நடத்தலே நடுவே தவிர்தலாலே,

47. பெடை மயில் உருவின் பெரு தகு பாடினி—பெடைமயிலருகின் மயில்போலும் சாயலினையுமுடைய கல்விப்பெருமை தக்கிருக்கின்ற பாடினி,

கூந்தலினையும் நுதலினையும் (25) புருவத்தினையும் கண்ணினையும் (26) வாயினையும் (27) பல்லினையும (28) காதினையும் (30) எருத்தினையும் (31) தோளினையும் கையினையும் (32) விரலினையும் (33) உகிரினையும் (34) மூலையினையும் (36) கொப்பூழினையும் (37) நடுவினையும் (38) அல்குலினையும் (39) குறங்கினையும் (40) சீறடியினையும் (42) உருவினையுமுடைய பாடினியென்க.

இங்ஙனம் சீறடிபுங்கூட்டி எண்ணுக்கால் தலைமுதல் அடியீறின்ருகக் கூறற்ரும்.

48. பாடின பாணிக்கு ஏற்ப—பாடின தாளத்திற்குப் பொருந்த,

48-9. நான் தொறும் களிறு வழங்கு அதர் கானத்து அல்கி—காடோறும் யானையுலாவரும் வழியையுடைய காட்டிடத்தே தங்கி,

---

* குறங்கு - துடை.

† "கருவார் பொழில்" (தே. பிரமபுரம்), "கருக்கொள் சோலை" (தே ஆரூர்) என்பவற்றில், கருவெண்ணுமுதனிலே கருமையையுணர்த்தி நின்றமை காண்க.

50-51. [இலேயின் மாரத்த வெல்வர் தாங்கி, வலேவலர் தன்ன மெ னிழன் மருங்கின்:]

இலே இல் மாரத்த வலே வலர்தன்ன மெல் னிழல் மருங்கில்—இலேயி லாத மார்திட்டத்தனவாகிய வலேயை மேலேகட்டிஞலொத்த மெல்லியநிழே னிடத்தே,

எல்வம் தாங்கி—கொப்புளால்வந்த வருத்தந்தாங்கி,

இனி ஞாயிற்றின் வெம்மையில் தனக்குவந்த எல்வத்தைத்தாங்கி இலே யில்லாத மாமரமென மாமரத்தின்மேல் ஏற்றுதலுமாம்.

52. காடு உறை கடவுள் கடன் கழிப்பிய பின்றை—காட்டின்கண்ணே தங்குகின்ற தெய்வத்திற்கு மனமகிழ்ச்சியாகச்செய்யும் முறைமைகளேச் செய்து விட்டபின்பு,

பொருந (3), பாடினி (47) செம்பிலஞெதுங்கலின் (43) அவளடிகள் (42) பரம்பகையுழந்த நோயொடுவெணிற் (44) தம்மிடத்தேகொண்ட மொக்குளரில் (45) தனக்குவந்த வருத்தத்தைத் தாங்கித் (50) தால் தடையைத்தவிர்தலாலே (46) கானத்தின் (49) மென்னிழன் மருங்கிற் (51) றங்கிப் (49) பாலேயாழை (22) வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்த்தும் (23) வாசித்து, பாடின பாணிக்கேற்பச் (48) சீருடைநன்மொழி நிரொடுதெதிக் (24) காடுறைகடவுட் கடன் கழிப்பியபின்றையெனமுடிக்க.

கடன்கழித்தல் - தடாரியைவாசித்தல்.

53-4. பீடு கெழு திருவின் பெரு பெயர் நோன் தான் மூரசு முழங்கு தானே மூவரும் கூடி—பெருமைபொருந்தின செல்வத்தையும் பெரிய பெயர்களே யும் வலியையுடைய மூயற்சியையும் வெற்றிமுரசமுழங்கும் படையினேயு முடைய சேர சோழபாண்டியர் தம்மிற் பகைமைநீங்கிச் சேர்ந்து,

55. அரசு அவை இருந்த தோற்றம் போல செல்வக்குறைபாடின்றி அரசிருத்தற்குரிய அவையாகவிருந்த தோற்றரவுபோல,

தோற்றம்போல இன்மைநீரவர்தனென் (129) என மேலேகூட்டுக.

இனி அரசவையிருந்த தோற்றம்போல வலிவும் மெலிவும் சமனுமாகப் பாடுதலேப் பற்றியவென்று பாட்டின்மேலேற்றிப் பொருள்கூறின், குலமும் செல்வமும் வீரமுமுதலியவற்றுற் றம்மில்ஒத்தாரை உவமித்தலின், அவர்க் கும் வலிவும் மெலிவும் சமனுமென்னுங்குணங்கள் எய்துமாதலின், அங்ஙனங் கூறல் பொருந்தாமையுணர்க; அன்றியும் பயனே ஈண்டு உவமை யென்று உணர்க.

இனிப் பாட்டு கருதுகிதவாசியத்தை யுடைமையின், அரசரோடு உவ மித்தாரென்பாருமுளர்.

56-7. பாடல் பற்றிய பயன் உடை யெழாஅல் கோடியர் தலேவ—மிடற் றுப்பாடலேத் தொடங்கியெழுந்திருந்த பயன்களேத் தன்னிடத்தேயுடைத்தாகிய யாழையுடைய கூத்தர்க்குத் தலேவனே,

காழ், ஆருபெயர்.

40. இரு பிடி தட கையின் செறிந்த நிரின் குறங்கின்—பெரிய பிடியி னுடைய பெருமையையுடைய கைபோல ஒழுகவந்து மெல்லிதாகத் தம்மில் நெருங்கி ஒன்றித்திரண்ட * குறங்கினையும்,

41. பொருந்து மயிர் ஒழுகிய நிருந்து தாட்கு ஒப்ப — கணைக்காற்கு இலக்கணமென்றற்குப் பொருந்தின மயிர் ஒழுங்குபட்ட எனையிலக்கணங்கள் திருந்தின கணைக்காலுக்குப் பொருந்த,

42. [வருந்துநாய் காவிற் பெருந்தகு சீறடி :]

வருந்து நாய் காவின் சிறு அடி—ஓடியினைத்த நாயினது காப்போலச் சிறிய அடியினையும்,

41-2. தாட்கு ஒப்ப பெரு தகு அடி—தாளுக்குப்பொருந்தப் பெருமை தக்கிருக்குமடியென்க.

† பெருவெண்ணுமுதனிலே பெருமையுணர்த்திநின்றது.

43. அரக்கு உருக்கு அன்ன செ நிலன் ஒதுக்கலின்—சாதிலிங்கத்தை உருக்கினதன்மையொத்த செய்யநிலத்தே நடக்கையினாலே,

44. பரல் பகை உழந்த நோயொடு ஞெமிர—சுக்கான்கல்லாகிய பகை யாலே வருந்தின நோயோடேபொருந்தி,

45. மரல் பழுத்தன்ன மறுகு சீர் மொக்குள்—மரற்பழுத்தாற்போன்ற துளும்புநீரையுடைய கொப்புளம்,

46. நல் பகல் அந்தி நடை இடை விலங்கலின்—நன்றாகிய உச்சிக்கால மான சுக்தியிலே நடத்தலே நடுவே தவிர்தலாலே,

47. பெடை மயில் உருவின் பெரு தகு பாடினி—பெடைமயிலருகுரின்ற மயில்போலும் சாயலினையுமுடைய கல்லிப்பெருமை தக்கிருக்கின்ற பாடினி,

கூந்தலினையும் நுதலினையும் (25) புருவத்தினையும் கண்ணினையும் (26) வாயினையும் (27) பல்லினையும் (28) காதினையும் (30) எருத்தினையும் (31) தோளினையும் கையினையும் (32) விரலினையும் (33) உகிரினையும் (34) முலையினையும் (36) கொப்பூழினையும் (37) நடுவினையும் (38) அல்குலினை யும் (39) குறங்கினையும் (40) சீறடியினையும் (42) உருவினையுமுடைய பாடினியென்க.

இங்ஙனம் சீறடியுங்கூட்டி எண்ணுக்கால் தலைமுதல் அடியீறின்ருகக் கூறி ற்ரும்.

48. பாடின பாணிக்கு ஏற்ப—பாடின தானத்திற்குப் பொருந்த,

48-9. நாள் தொறும் களிறு வழங்கு அதர் கானத்து அல்கி—நாடோறும் யானையுலாவரும் வழியையுடைய காட்டிடத்தே தங்கி,

---

* குறங்கு - துடை.

† "கருவார் பொழில்" (தே. பிரமபுரம்), "கருக்கொள் சோலை" (தே. ஆரூர்) என்பவற்றில், கருவெண்ணுமுதனிலே கருமையையுணர்த்தி நின்றமை காண்க.

50-51. [இலையின் மாத்த வெவ்வர் தாங்கி, வலிவலம் தன்ன மென் னிழன் மருங்கின்:]

இலை இல் மாத்த வலி வலம்தன்ன மெல் நிழல் மருங்கில்—இலையில் லாத மாத்திட்டத்தனவாகிய வலிவலய மேலேகட்டினுலொத்த மெல்லியநிழலி னிடத்தே,

எவ்வம் தாங்கி—கொப்புளால்வந்த வருத்தந்தாங்கி,

இனி ஞாயிற்றின் வெம்மையால் தனக்குவந்த எவ்வத்தைத்தாங்கி இலை யில்லாத மாமரமெனை மாமரத்தின்மேல் ஏற்றுதலுமாம்.

52. காடு உறை கடவுள் கடன் கழிப்பிய பின்றை—காட்டின்கண்ணே தங்குகின்ற தெய்வத்திற்கு மனமகிழ்ச்சியாகச்செய்யும் முறைமைகளைச் செய்து விட்டபின்பு,

பொருந (3), பாடினி (47) செங்கிலஞெதுங்கலின் (43) அவளடிகள் (42) பரற்பகையுழந்த நோயொடுவெணிச் (44) தம்மிடத்தேகொண்ட மொக்குளரில் (45) தனக்குவந்த வருத்தத்தைத் தாங்கித் (50) தான் நடையைத்தவிர்தலாலே (46) கானத்தின் (49) மென்னிழன் மருங்கிற் (51) தங்கிப் (49) பாலியாழை (22) வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்த்தும் (23) வாசித்து, பாடின பாணிக்கேற்பச் (48) சிருடைநன்மொழி நீரொடுகிதறித் (24) காடுறைகடவுட் கடன் கழிப்பியபின்றையெனமுடிக்க.

கடன்கழித்தல் - தடாரியைவாசித்தல்.

53-4. பீடு கெழு இருவின் பெரு பெயர் சோன் தான் மூசு முழங்கு தானை மூவரும் கூடி—பெருமைபொருந்தின செல்வத்தையும் பெரிய பெயர்களை யும் வலியையுடைய முயற்சியையும் வெற்றிமுசமுழங்கும் படையினையு முடைய சேர சோழபாண்டியர் தம்மிற் பகைமைநீக்கிச் சேர்ந்து,

55. அரசு அவை இருத்த தோற்றம் போல செல்வக்குறைபாடின்றி அரசிருத்தற்குரிய அவையாகவிருந்த தோற்றரவுபோல,

தோற்றம்போல இன்மைநீரவந்தனென் (129) என மேலேகூட்டுக.

இனி அரசவையிருத்த தோற்றம்போல வலிவும் மெலிவும் சமனுமாகப் பாடுதலைப் பற்றியவென்று பாட்டின்மேலேற்றிப் பொருள்கூறின், குலமும் செல்வமும் வீரமுமுதலியவற்றுற் றம்மில்ஒத்தாரை உவமித்தலின், அவர்க் கும் வலிவும் மெலிவும் சமனுமென்னுங்குணங்கள் எய்துமாதலின், அங்ஙனங் கூறல் பொருந்தாமையுணர்க; அன்றியும் பயனே ஈண்டு உவமை யென்று உணர்க.

இனிப் பாட்டு திருத்திதவாச்சியத்தை யுடையின், அரசரோடு உவ மித்தாரென்பாருமுளர்.

56-7. பாடல் பற்றிய பயன் உடை யெழாஅல் கோடியர் தலைவ—யிடற் றுப்பாடலைத் தொடங்கியெழுந்திருந்த பயன்களைத் தன்னிடத்தேபொருட்டாகிய பாழையுடைய கூத்தர்க்குத் தலைவனே,

இவன் போர்க்களம்பாடும் பொருளுந்தலானும், *கூத்தரில் இவனிற்கிறந்த கூத்தர் இன்மையானும் இஞ்ஞனம் கூறினர்.

57. கொண்டது அறிக—பிறர் மனத்துக்கொண்டதினைக் குறிப்பால்அறியவல்லாய்,

58. அறியாமையின் வேறு கிரிக்கு ஓராகாது—வழியறியாமையினாலே இவ்வழியைத்தப்பி வேறொருவழியிற் போகாதே,

59. ஆறு எதிர் படுதலும் தோற்றுதன் பயனே—இவ்வழியிலே என்னைக்காண்டலும் நீ முற்பிறப்பிற்செய்த நல்வினைப்பயன்,

60. [போற்றிக் கேண்மதி புகழ்மேம் படுக:] புகழ் மேம்படுக போற்றி கேண்மதி—புறத்தார்புகழை அரசவைகளிலே மேம்படுத்தவல்லாய், யான்கூறுகின்றவற்றை விரும்பிக்கேட்பாயாக;

61-2. ஆடு பசி உழக்கத்தின் இரு பேர் ஒக்கலொடு நீடு பசி ஓராஅல் வேண்டின்—அடுகின்ற பசியாலேவருந்தின தின்னுடைய கரிய பெரியசுற்றத்தோடே தொன்றுதொட்டுவந்தபசி தின்னைக் கைவிடுதல் விரும்புவையாயின்,

62-3. நீடு இன்று எழுமதி—நீட்டித்தலின்றி எழுந்திருப்பாயாக;

வாழி—நீவாழ்வாயாக;

63. எழின் நிழவ—குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரமென்னும்நரம்பு எழின்கண்ணும் உரிமையுடையாய்,

64. [பழுமர முள்ளிய பறவையின் யானும்:

யானும் பழுமரம் உள்ளியபறவையின்—செல்வமெய்தியயானும் முன்பு பழுத்தமரத்தை நினைத்துச் செல்கின்ற புட்போல.

64-5. அவன் இழுமென் சுற்மை இடன் உடை வரைப்பின்—அவனுடைய இழுமென்றெழும் ஓசையினையுடைய அலவுமுடைத்தாகிய மதிலில்,

66. நசையுநர் தடையா நல் பெரு வாயில்—நச்சிவந்தார்க்குத் தடையில்லாத நன்றாகிய பெரிய கோபுரவாயிலின் கண்ணே,

67. இசையேன் புக்கு—வாயிலோனுக்குக் கூறுமற்புகுந்து,

என் இடும்பை தீர—என்னுடைய மிடிதீர்தல் காரணமாக,

68. எய்த்த மெய்யேன் எய்யேனுகி—முன்பு இனைத்தஉடம்பையுடையேனாகிய யான் அவ்வாயிற்குள்ளேசென்ற உவகையாலே பின்பு இனைப்புத்தீர்ந்து,

69-70. பைத்த பாம்பின் துத்தி எய்ப்ப கை கடிபு இருந்த என் கூர்ம் அல் தடாரி—படம்விரித்த பாம்பினது பொறியையொப்பக் கையினது வடுப்பட்டுக்கிடந்த எனது கண்ணகன்ற உடுக்கையிற் றேற்றுவித்த,

71-3. [இருசீர்ப் பாணிக் கேற்ப விரிகதிர், வெள்ளி மூனைத்த ஈள்ளிருள் விடிய, லொன்றியான் பெட்டா வளவையின்:]

இருசீர் பாணிக்கு ஏற்ப ஒன்று யான் பெட்டா அளவையின்—இரட்டைத்தாளத்திற்குப் பொருந்த ஒருபாட்டினை யான் பேணிப்பாடுவதற்கு முன்னே,

---

* 'பொருநரும் வர்க்களம்பாடுநரும் போர்க்களம்பாடுநரும் பரணிபாடுநருமெனப் பலராம்' (தொல். புறத்திணை. சூ. 36-ந)

விசி கதிர் வெள்ளி முளைத்த ஈன் இருள் விடியல்—விரிகின்ற கிரணங்களையுடைய வெள்ளியெழுந்த செறிந்த இருளையுடைய விடியற்காலத்தே,

73-4. ஒன்றிய கேளிர் போல கேள் கொளல் வேண்டி—முன்பே தன்னோடொருங்கிய நட்டாரைப்போல என்னுடன் உறவுகொள்ளுதலேவிரும்பி,

75. வேணாண் வாயில் வேட்ப கூறி—தான் உபகரித்தற்கு வழியாகிய இரப்பினையே யான் எப்பொழுதும் விரும்பும்படி உபசாரங்களைக்கூறி,

76. கண்ணில் காண நண்ணு வழி இரீஇ—தன்கண்ணிலெல்லாரும்படி தனக்குஅண்மிதானஇடத்திலே என்னை இருத்தி,

77. பருகு அன்ன அருகா நோக்கமோடு—தன்னைக் கண்ணுற்பருகுந் தன்மையையொத்த கெடாத பார்வையாலே,

78. [உருகு பவைபோ லென்பு குளிர்கொளீஇ:] என்பு உருகுபவைபோல் குளிர்கொளீஇ—என்பை உருகும் மெழுகுமுதலியனபோல் நெகிழும்படி குளிர்ச்சியைக்கொளுத்தி,

நோக்கத்தாலே (77) கொளுத்தியென்க.

79. ஈரும் பேனும் இருத்து இறைகூடி—ஈரும்பேனும் கூடியிருந்து அரசாண்டு,

80-81. [வேரொடு ஈனொந்து வேற்றிழை நுழைந்த, துன்னற் சிதாஅர் தூவர கீக்கி:] வேரொடு ஈனொந்து வேறு இழை நுழைந்த துன்னல் சிதாஅர் நீக்கி—வேர்ப்பாலேயீனொந்து சிறுகுகள் உள்ளேஒடுதற்குக் காரணமாகிய தைத்தற்றொழிலையுடையனவாகிய சீலையை என்னிடத்தினின்றும் போக்கி,

82-3. நோக்கு நுழைகல்லா நுண்மைய பூ களிந்து அரவு உரி அன்ன அறுவை தூவர (81) ஈக்கி—கண்ணிற்பார்வை இல்லாது இழைபோனவழியென்று குறித்துப்பார்க்கவாராத நுண்மையையுடையவாய்ப் பூத்தொழில் முற்றுப் பெற்றதன்மையிற் பாம்பினது தோலையொத்த துகிலை மிகைகளி,

தூவரவென்பதனை இதனெடுகூட்டுக.

84-5. [மழையென மருளும் மகிழ்செய் மாடம், நிழையணி வனப்பி னின்னகை மகளிர்:] இழை அணி வனப்பின் இன் நகை மகளிர்—இழைகளையணிந்த அழகினையுடைய பாட்டாலும்கூத்தாலும்வார்த்தையாலும் அரசனுக்கு இனியமகிழ்ச்சியைச்செய்யுமகளிர்,

இதனை, "இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகி" (220) என்பூர், சிறுபாணாற்றுள்ளும்.

86-7. [போக்கில் பொலங்கல நிறையப் பல்கால், வாக்குபு தரத்தர:] 84-7. மருள் செய்யும் மகிழ் மழையென மாடத்து பல்கால் வாக்குபு—உண்டார் மயங்குதலேச்செய்யுங் கள்ளை மழையென்னும்படி மாடத்திடத்தே பல்காலும் வார்த்து,

மகிழ், ஆகுபெயர்.

86-7. போக்கு இல் பொலங்கலம் நிறைய தாத்தர—ஓட்டமற்ற பொற் ஞற்செய்த வட்டில்நிறையத் தாத்தர,

87-8. வருத்தம் வீட் ஆ உண்டு பெரு அளுர் போக்கி—வழிபோன வருத்தம் போம்படி நிறையவுண்டு கள்ளுண்ணப்பெறுமிலேமென்று நெஞ்சிற் கிடந்த பெரிய வருத்தத்தையும்போக்கி,

89. செருக்கொடு நின்ற காலே—மகிழ்ச்சியுடனே நான்நின்ற அந்தக் காலத்தே,

89-90. மற்று அவன் திரு கிளர் கோயில் ஒருசிறை தங்கி—இங்ஙனம் மிடிதீர்ந்தபின்பு அவனுடைய செல்வம்விளங்குகின்ற கோயிலில் ஓர்பக்கத்தே கிடந்து,

அவனைச் சேவித்துநிற்கின்ற நங்குலத்திலுள்ள மகளிர் (85) பொலங்கல நிறைய (86) மகிழை (84) வார்த்துத் தாத்தர (87) உண்டு போக்கிக் (88) கோயிலில் ஒருசிறைத் தங்கியென முடிக்க.

91-2. தவம் செய் மாக்கள் தம் உடம்பு இடாஅது அதன் பயம் எய்திய அளவை மான—மிக்க தவத்தைச்செய்கின்ற மாக்கள் தம்முடைய தவஞ்செய்த உடம்பைப் போகடாதேயிருந்து அத்தவத்தாற்பெறும் பயனைப்பெற்ற தன் மையையொப்ப,

மக்களென்னுது மாக்களென்னூர், வீடுபேறு குறியாது, செல்வத்தைக் குறித் தலின்.

93. ஆறு செல் வருத்தம் அகல நீக்கி—வழிபோனவருத்தத்தை என் னிடத்துச் சிறிதும் நில்லாமற்போக்கி,

94-5. [அனந்தர் நடுக்க மல்ல தியாவது, மனங்கவல் பின்றி மாழாந் தெழுந்து:]

அனந்தர் நடுக்கம் அல்லது மனம் கவல்பு யாவதும் இன்றி எழுந்து—கள் ளின் செருக்காலுண்டான மெய்நடுக்கமல்லது வேறுமனக்கவற்சி சிறிதுமின் றித் தியலுணர்ந்து,

கவல்பு, கவற்சியெனப் பெயராய் நின்றது.

96. மாலே அன்னதோர் புன்மையும்—யான் அவனைக் காணபதற்கு முன் ஞளின் மாலைக்காலத்தில் என்னிடத்தில்நின்ற சொல்லிற்கெட்டாத மிடியையும், அன்னது, நெஞ்சறிசுட்டு.

96-7. காலே கண்டோர் மருளும் வண்டு சூழ் கிலேயும் மாழாந்து (95)—அவனைக்கண்டமற்றைநாட்காலத்தில் என்னைக்கண்டவர் நெருங்கல்வந்தவனல்ல னென்று மருளுதற்குக் காரணமான வண்டுகள் இடையறாதுமொய்க்கின்ற தன்மையையும் யான்கண்டுமயங்கி,

மாழாந்தென்பதனை இதிலுமுடன் கூட்டுக.

பல நறுமாற்றங்களும் தானுடைமையின், வண்டுசூழ்நிலேயென்றான்.

98. கனவு என மருண்ட என் நெஞ்சு ஏமாப்ப—இது கனவாயிருக்கு மென்று கலங்கிய என்னுடையநெஞ்சு தானவென்று தணிய,

99. வல் அளுர் பொத்தியை மனம் மிழ் நெப்ப—வலிய மிடியாளுண்டா யெ வருத்தம் பொதிந்த கூட்டத்தார் மனம் முழ்ச்சி மிக,

100. கல்லா இனேஞர் சொல்லி காட்ட—அவற்குரியயுகழ்களேத் தாங் ஸ் முற்றக்கற்று என்பினின்ற இனேயகீர் அவற்றைச் சொல்லிக்காட்ட, கல்லாவென்பது, செய்யாவென்னுமெச்சம். இனித் தத்தம் சிறுதொழி லற்றி வேருென்றுங்கல்லாத இனேஞர் நெருங்கல்வர்தவன் இவனென்று அரச னுக்குச் சொல்லிக்காட்ட வென்றுமாம். என்றது - இவன்வேறுபாடுகூறிற்றும்.

101. கதுமென கரைத்து, வம்மென கூஉய்—அதுகேட்டு அவர்களேக் ழுகவழைத்துவாருமென்று வாயிலோர்க்குக்கூறி யாங்கள்சென்றபின் தான் அணுகவாருமென்று அழைக்கையினுலே,

*" எனேருந் தம்மென " என்புழித் தம்மென்பது தாருமெனகின்றற் போல வம்மென்பது வாருமென்னும் பொருட்டாய்கின்றது.

102. அதன் மூறை கழிப்பிய பின்றை—அக்காட்சியிடத்தச் செய்யும் முறைமைகளே யாங்கள் செய்து முடித்தபின்பு,

பதன் அறிந்து—காலமறிந்து,

103-4. தூஅய் துற்றிய திருவை அம் புழுக்கின் பாரை வேவை பருகு என தண்டி—அறுகம்புல்லாற்றிரித்த பழுதையைத்தின்ற செம்மறிக் டாயினது அழகினேயுடைய புழுக்கினற் பரிய மேற்குறங்கு நெகிழவெங் தத்தனே விழுங்கென்று பலகாலலேத்து,

105-6. [காழிற் சுட்ட கோழுன் கொழுங்குறை, பூழி னூழின் வாய்வெய் தொற்றி:] காழின் கொழு ஊன் சுட்ட தொழு குறை வெய்து வாய் ஊழின் ழின் ஒற்றி—இருப்பு நாராசத்தே கொழுத்த இறைச்சிகளேக் கோத்துச் ட்ட கொழுவிய பெரியதசைகளின் வெம்மையை வாயிடத்தே இடத்தினும் ஏத்தினும் சேர்த்தி ஆற்றித்தின்று,

107. அவை அவை முனிருவம் எனினே—புழுக்கின இறைச்சியையும் சூட்டிறைசியையும் யாங்கள் இனி வேண்டேமென்கையினுலே,

107-8. சுவைய வேறு பல் உருவின் விரகு தந்து இரீஇ—இனிமையுடை பவாய் வெவ்வேருகிய பலவடிவினேயுடைய †பண்ணிபாரங் கொண்டுவந்து அவற்றைத் தின்னுப்படி எங்களேயிருத்தி,

உபாயங்களாற் பண்ணுதலின், விரகென்றார்; ஆகுபெயர்.

109-10. [மண்ணமை முழவின் பண்ணமை சீறியா, ழொண்ணுதல் விற லியர் பாணிதாங்க:] பண் அமை சிறு யாழ் ஒள் நுதல் விறலியர் மண் அமை முழவின் பாணிதாங்க - பண்குறைவற்ற சிறிய யாழையுடைய ஒள்ளிய நுதலி னையுடைய ‡விறல்படப் பாடியாடுவார் மார்ச்சனேயமைந்த முழவினது தாளத் தின்கு ஆடும்படி,

---

* மதுரைக்காஞ்சி, 747.

† பண்ணிகார மென்றும் பிரதிபேதமுண்டு.

‡ விறலே வடநூலார் சத்துவமென்பர்.

111. மகிழ் பதம் · பல் நாள் கழிப்பி—மகிழ்ச்சியையுடைய கள்ளுண்டலிலே பலநாள் போக்கி,

இனிப் பதம், காலமுமாம்.

111-2. ஒருநாள் அவிழ் பூதம் கொள்க என்று இரப்ப—ஒருநாள் சோறுகியஉணவையும் கொள்வாயாகவென்று வேண்டிக்கொள்கையினாலே,

112-4. முகிழ் தகை முரவை போகிய முரியா அரிசி விரலென நிமிர்ந்த நிரல் அமை புழுக்கல்—முல்லைமுகையின் · தகைமையினையுடைய வரியற்ற இடைமுறியாத அரிசி விரலென்னும்படி நெடுகின ஒன்றோடொன்றசோராத சோற்றையும்,

பழுத்தவரிசியை ஆக்கினமைதோன்ற நிரலமை புழுக்கலென்றார்.

115-6. பால் வறை கருனை *காடியின் மிதப்ப அயின்ற காலை – பாலைப் பொரித்ததனோடேகூட்டிய பொரிக்கறியினையும் கழுத்திடத்தேவந்து நிரம்பும் படி விழுங்கினகாலத்தே,

இனிக் காடியைப் புளிங்கறியாக்கிப் புளிங்கறியோடே நிரம்ப வீழுங்கின காலையென்றுமுரைப்பர்.

116. பயின்று இனிது இருத்தல்—அவனிடவாதே இனிதாகவிருத்தல்,

117-8. [கொல்லே யுழுகொழு லேய்ப்பப் பல்லே, யெல்லேயு மிரவு மூண் றின்று மழுங்கி:] பல்லே கொல்லே உழுகொழு வய்ப்ப எல்லேயும் இரவும் ஊண் றின்று மழுங்கி—எம்முடையபற்கள் கொல்லேரிலுத்தேயுழுத † கொழுவையொப்பப் பகலும்இரவும் இறைச்சியைத்தின்று மூணேமழுங்கி,

119. உயிர்ப்ப இடம் பெருஅது ஊண் முனிந்து—இளைப்பாற இடம் பெருதே இவ்வுணவுகளே வெறுத்து,

மூற்கூறியனவெல்லாம் உண்டற்றொழிற்கு உரிமையுடைமையின், ஊண் முனிந்தென்றார்.

119-22. [ஒருநாட், செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய, செல்வ சேறுமெங் தொல்பதிப் பெயர்த்தென, மெல்லெனக் கினந்தன மாக:]

செயிர்த்து எழு தெவ்வர் திறை துறை போகிய செல்வ – குற்றத்தைச செய்தெழுந்த பகைவரைத் திறைகொள்ளும் கூறுபாடுகளெல்லாம் முடியப் போன செல்வா,

பெயர்ந்து எம் தொல் பதி சேறும் என மெல்லென ஒருநாள் கினந்தனமாக—இனி மீண்டு எம்முடைய பழைய ஊரிடத்தே செல்வேமென்று மெத்தென ஒருநாளிலே சொன்னேமாக,

தொல்பதியென்றார், இதுவும் தமக்குப்பதியென்பது தோன்ற.

122-4. [வல்லே, யகறி ரோவெம் மாயம் விட்டெனச், செறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு:] சிறியவன்போல் செயிர்த்த நோக்கமொடு எம் ஆயம்

---

* காடி. கழுத்தென்பதை, ' காடியிழந்தகவர்தம்தாய் " என்பதனுணீ முணர்க; (குந்த. சூரபன்மன்வதை. 136)

† " முரம்புழுவார் நாஞ்சிற்கொழுவெனத்தேய்ந்து " (குற்றலப்பட. கவுற் சன. 28.)

விட்டு வல்லே அகறிரோ என—அதுகேட்டுக் கோபித்தாற்போல எமக்குவருத் தத்தைச் சொல்லி பார்வையுடனே எம்மிரண்டைக் கைவிட்டு விரைந்துபோகின்றீ ரோவெனச் சொல்லி,

125-6. [தூஉடி யன்ன தூங்குரடைக் குழலியொடு, பிடிபுணர் வேழம் பெட்டவை வினவினை]

வுள்ளரக் கெறிந்த வுருக்குறு போர்வைக்
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி
யூர்ந்துபெயர் பெற்ற வெழினடைப் பாகொடு
மாசெல வொழிக்கு மதணுடை கோண்மூன்
வாண்முகப் பாண்டில் வலவனெடு தோ
யன்றே விடுக்குமவன் பரிசில் மென்றோட்
டுகிலணி யல்குற் றுளங்கியன் மகளிர்
ரகிலுண விரித்த வம்மென் கூந்தலின்
மணிமயிற் கலாப மஞ்சைடைப் பரப்பிய
தூணிமழை தவழுந துயல்கழை நெடுங்கோட
டெறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னிக்
சூழ்ஞெக் கோமான் கொய்தனிர்க் கண்ணிச்
செல்லிசை நிலை இய பாண்பி
னல்லியக் கோடணீ நபந்தனிர் செலினே.

இதன்பொருள்.

1-2. [மணிமலைப் பணை தோள மாநில மடக்கை, பணிமுலைத் துயல் வருஉ மாரம் போல:] பணை தோள் மா நிலமடந்தை மணி மலை அணி மூலை துயல்வருஉ ஆரம் போல — மூங்கிலாகிய தோளையுடைய பெருமையினை யுடைய மணமகளுடைய மணிகள்தங்கின மலைபோல்கிய அழகினையுடைய மூலையிற் கிடக்கையும் முத்துவடம்போல,

3-4. [செல்புன ழழுந்த சேய்வரற் கான்யாற்றுக், கொல்கரை நறும்பொ ழில்:] சேய் வரல் நரை கொல் கான்யாறு செல் புனல் உழந்த நறு பொழில்— *மலைத்தலையினின்றும் வருதலையுடைய கரையைக் குத்துகின்ற கட்டாற் றிடத்து ஓடுகின்ற புனலாலே வருத்தின நறிய பொழிலிடத்து,

இரண்டுமலையினின்றும் வீழ்ந்து இரண்டு ஆற்றிடைக்குறையைச் சூழ் வர்து பின்னர்க் கூடுதலின், முத்துவடம் உவமையாயிற்று; இது மெய்யுவமம். பெருக்காற் கோடுகள் வருத்துதலின், உழந்தவென்றார். இதனுற்பயன்: †ஆம் றிடைக்குறையில் நின்றமரம் இனவேனிற்காலத்து மிகவும் பூத்ததாயிற்று.

263-4: இப்பாட்டின், 14 . 15 ஆம் அடிக்குறிப்பைப் பார்க்க.

268. "சங்கிலைச் தம்வயி னிறுமார் வல்லேவல், வானவரம்ப வணங்குட் டும்பர்" (அகநா. 389.)

* "மலைத்தலைய கடற்காவிரி" (பட். 6.)

† "நிலம்பூத்த மரம்" (கலி. 27.)

4-8. [குயில்குடைத் தகிர்த்த, புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைகெதித் துக், கதுப்பு வியர்த் தன்ன காழக நணங்கற, லயிலுருப் பிணைய வாகி யைது நடந்து, வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப:]

காழ் அகம் நணங்கு அறல் குயில் குடைந்து உதிர்த்த புதி பூ செம்மல் சூடி புடை நெரித்து கதுப்பு வீரித்தன்ன வேனில் கின்ற (9)—கருமையை இடத்தேயுடைய தண்மையையுடைய அறல் குயில்கள் அலகாலுளர்ந்து உதிர் த்த புதியபூக்களாகிய வாடலேச்சூடித் தம்மிடமெல்லாம் அறல்பட்டு மயிரை வியர் த்தாலொத்த தண்மையவாக இனவேனில்கின்றவென்க.

பொழிலிடத்ததவென்க.

வெயில் உருப்பு உற்ற வெம்பால்—வெயிலால் வெம்மையுற்ற வெவ்விய பருக்கை,

அயில் உருப்பு அனைய ஆகி கிழிப்ப சரன் மாரத்த வரி கிழல் முதல் அசைஇ (12) ஐது நடந்து—வேல் காய்ந்த தன்மையவாய் அடியைக் கிழிக் கையினலே அருக்கானகத்துகின்ற கடம்பினுடைய செறியாத கிழலேடைத் தாகிய அடியிலே இளேப்பாறிப் பின்பு போகவேண்டுதலின் மெத்தென நடந்து,

9-11. [வேனி னின்ற வெம்பத வழிகாட், காலெரு யிற்றுக் கதிர்கடா வுதுப்பப், பாலை கின்ற பாலை நெடுவழி:] வேனில் கின்ற காலை வழிகாள் ஞாயிறு கதிர் கடாவுதுப்ப வெம்பதம் பாலை கின்ற பாலை நெடு வழி—இளவேனில் கிலேபெற்ற காலத்திற்குப் பின்ஞகிய காளிலே ஞாயிற்றினுடைய கதிர் வெம் மையைச் செலுத்தலைச் செய்கையினலே வெய்ய செல்வியையுடைய *பாலேத் தன்மை கிலேபெற்றமையாற் பிறந்த பாலேயிலமாகிய தோலேயாத வழியினே புடைய சுரனென்க; (12)

† "நடுவுகிலேத்தினேயே" என்னுஞ் சூத்திரத்துரையாற் பாலேத்தன்மை கூறினும்; அதனொன்று உணர்க. பாலேகின்ற பாலேவழி, "ஆறுசென்றவியர்" போல்கின்றது.

12. [சரன்முதன் மராஅதத வரிகிழ லசைஇ] என்பதனே முன்னே கூட்டுக.

13-4. [ஐதுவீ ழிருபெய ழழருகொண் டருளி, செய்களிர் திருளிய கதுப்பின்:] அருளி ஐது வீழ் இரு பெயல் அழரு கொண்டு செய் களிந்து இரு ளிய கதுப்பின்—உலகிற்கு அருளுதலேச்செய்து மெல்லிதாய் வீழ்ந்து தாழ் கின்ற மழையினது அழகைத் தன்னிடத்தே கொண்டு ‡எண்ணெயிலே மூழ் துப்பெற்று இருண்ட மயிரினேயும்,

14-6. [கதுப்பெண, மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன், மயின்மயிற் குளிர்குஞ் சாயல்:] மயில் பலவுடன் மணி வயின் கலாபம் கதுப்பு என பரப்பி

---

* பாலேத்தன்மையாவது காலேயும்மாலேயும் சன்பகலன்ன கடுமைகூரச் சோதேம்பிச் சுவல்மாறி நீரும்நிழலுமின்றி நிலம்பயந்தநந்த புன்னும் மாவும் புலம்புற்ற இன்பமின்றித் துன்பம்பெறுவதொருகாலம். (தொல். அகத். 9 - ந.)

† தொல்காப்பியம், அகத்திணையியல், 9.

‡ "எண்ணெய் சான்ற மிலைமழிஇ" (நீலகே. 164)

மயில் குளிர்க்கும் சாயல்—மயில்கள் பலவுங்கூடி நீலமணிபோலுங் *கண்ணினையுடைய தோகைகளே மகளிர் மயிரைவிரித்தாற்போல விரித்துப்பார்த்து இவர் கன்சாயற்கு ஒவ்வேமென்று பேட்டிற்குள்ளே சென்று மறைதற்குக் காரணமாய †கட்புலனுடைய மென்மையினையும்,

16-8. சாஅய் உயங்கு காய் நாலின் நல் எழில் அசைஇ வயங்கு இழை உலறிய அடியின்—ஓடியினைத்து வருந்துகின்ற நாயினது நாக்கினுடைய நல்ல அழகைவருத்தி வறுமையாலே விளங்குகின்ற நிலம்புமுத்லியனவின்றிப் பொலிவழிந்த அடியினையும்,

18-9. [அடிதொடர்ந், தீர்ந்துநிலம் தோயு மிரும்பிடித் தடக்கையின் :] சார்ந்து நிலம் தோயும் இரு பிடி தட கையின் அடி தொடர்ந்து—இழுக்கப்பட்டு நிலத்தேசெறியும் கரிய பிடியினது பெருமையையுடைய கைபோலத் தாமும் அடியோடே தொடர்புபட்டு முறையாற் பருத்து,

20-21. [சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென, மால்வரை யொழுகிய வாழை :]

மால் வரை ஒழுகிய வாழை என சேர்ந்து—பெருமையையுடையமலையிலே ஒழுங்குபடவளர்ந்த வாழையென்க. இரண்டு,

‡ சேரென்னு முரிச்சொல் முதனிலேபாகச் சேர்ந்தென்னும் வினையெச்சம் வந்தது.

குறங்குடன் செறிந்த குறங்கின்—ஒருகுறங்குடனே ஒருகுறங்கு நெருங்கியிருக்கின்ற குறங்கினையும்,

21-2. வாழை பூ என பொலிந்த ஓதி—வாழையினது பூவென்னும்படி அழகு பெற்ற §பனிச்சையினையும்,

22-4. [ஓதி, நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக், களிச்சுரும் பரற்ற ஞ் சுணங்கிற் சுணங்குபிதிர்ந்து] களி சுரும்பு நளி சினை வேங்கை நாள் மலர் நசி ஓதி அரற்றும் சுணங்கின் சுணங்கு பிதிர்ந்து—களிப்பினையுடைய சுரும்பு நெ செறிவினையுடைத்தாகிய கொம்பினையுடைய வேங்கையினது காட்காலத்து லரென்று விரும்பிப்பாடி ஆரவாரிக்கும் ஓரிடத்திற்றேன்றிய சுணங்குடனே ரிடத்திற்றேன்றிய சுணங்கு பிதிர்பட்டு,

25-6. யாணர் கோங்கின் அவிர் முகை எள்ளி பூண் அகத்து ஒடுங்கிய வம்முலை—புதிதாகப் பூத்தலையுடைய கோங்கினது விளங்குகின்ற முகையை கெழ்ந்து மெல்லிய பணிகள் இடையிலேகிடக்கின்ற விருப்பத்தையுடைய முலை னையும்,

---

* கண் - பீலியிடத்ததாகியகண்.

† 'சாயலென்னுஞ்சொல், மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம்பொறியானு நகரும் மென்மையை உணர்த்தும்.' (தொல். உரி. சூ. 27. ந); 'சாயன் மென்மை" என்று பொதுப்படச சூத்திரஞ்செய்தது ஐம்பொறியானு ருமென்மையெல்லாம் அடங்குதற்கு; (தீவக. 8. ந.)

‡ "சேரேநிரோட்சி" (தொல். உரி. சூ. 65.)

§ பனிச்சை - மகளிர்கூத்தலின் ஐம்பால்களுள் ஒன்று.

26-8. [குலையென, வண்கோட் பெண்ணை வளர்த்த நங்கை, னின்சே றிருதரு மெயித்தின்:] வன் கோள் பெண்ணை முலையென வளர்த்த நங்கின் றின் சேறு இருதரும் எயித்தின்—பெரிய குலையினையுடைய பனை முலையென் னும்படி வளர்த்த நங்கினது இனிய செறிந்தநீர் தன்னீர்மையாற் ருழும் எயித் தினைவும்,

28-30. [ஈயிறெனக், குல்லையம் புறவிற் குவிமுகை யவிழ்ந்த, முல்லை சான்ற கற்பின்:] குல்லை அம் புறவில் குவி முகை எயிறென அவிழ்ந்த முல்லை சான்ற கற்பின் — கஞ்சங்குல்லையையுடைய அழகிய காட்டகத்தே குவிந்த அரும்பு எயிறென்னும்படி நெகிழ்ந்த முல்லை குடுகற்கமைந்த கற்பினையும்,

கற்பின் மிகுதிதோன்ற *முல்லை குடுதல் இயல்பு. கற்புப்பின் கதுப்பென் பதுமுதல் இத்தனையும் இயைபுத்தொடை நிரந்து வந்ததென்றறிக. †" இது வாயொன்றல் " என்னுஞ் சூத்திரத்துட் கூறினும்.

30-31. மெல்லியல் மடம் மான் நோக்கின் வாள் நுதல் விறலியர்—மெல் லிய இயல்பினையும், மடப்பத்தினையுடைய மான்போலும் பார்வையினையும், ஒளியையுடைத்தாகிய நுதலினையுமுடைய ‡விறல்பட ஆடுமகளிர்,

கதுப்பினையும் (14) ஒதியினையும் (22) நுதலினையும் நோக்கினையும் (31) எயிற்றினையும் (28) முலையினையும் (26) குறங்கினையும் (20) அடியினையும் (18) சாயலினையும் (16) மெல்லிய இயல்பினையும் கற்பினைய (30) முடைய விறலியரென்க.

32-3. கடை மெலிந்து அசைஇய நல் மெல் சிறு அடி கல்லா இளையர் மெல்ல தைவர —கடையால் இளைத்து ஒய்ந்த நன்மையையுடைய மெல்லிய சிறிய அடிபைத் தம்தொழிலெயொழிய வேறுசில்லாத இளையர் மெத்தென்று வருட,

34-5. பொன் வார்ந்தன்ன புரி அடங்கு நரம்பின் இன் குரல் சிறு யாழ் இடம் வயின் தழீஇ—பொற்கம்பியினைபொத்த முறுக்கடங்கின நரம்பினை இனிய ஓசையையுடைய சிறிய யாழை இடப்பக்கத்தே தழுவி,

36-7. கைவலம் §பழுமிய நயம் தெரி பாலை கை வல் பாண்மகன் கடன் அறிந்து இயக்கு—ட்பாடையென்னும் பண் முற்றுப்பெற்ற இனிமை தெரி கின்றபாலையாழை வாசித்தலேவல்ல பாணனுகியமகன் வாசிக்குமுறைமையை அறிந்து வாசிக்க,

38. இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇ—வள்ளியோரின்மையிற் பரிசில் செல்லாத உலகத்தே பரிசில்தருவாரை விரும்பி,

இனி இயங்குவையம் சகடமாகலின், உலகத்திற்கு இயங்காவையமென வெளிப்படை கூறிற்றுமாம்.

---

* "முல்லையந்தொடை யருந்தகி" (பிரபு. கைலாய. 27.); "முல்லைசான் மணியுலோபா முத்திசை" (நீகாளத்தி. பொன்முகரி. 21.)

† தொல்காப்பியம், செய்யுளியல், 96.

‡ விறல் - சத்துவம்; வேய்புதின்ஞர்க்குத் தலைநின்றுவதுபோல அஞ்ச, தக்கது முதலியவற்றைக்கேட்டவிடத்துப் பிறந்த உள்ளகிளர்ச்சியால் தானே தோன்று நடுக்குமுதலாயின.

§ 'பழுனிய' என்றும் பிரதிபேதமுண்டு.

39. நின்னி கூர் எல்லைமொடு துயர் ஆற்றப்படுப்ப—நின்னை வேற்றத்தில் மிக்க வருத்தத்தோடே கூடின வறுமை நின்னைக் கொண்டுபோகையினாலே,

40. முனிவு இகந்த இருந்த முதி வ்ர்ய் இரவல—வழிவருத்தம் தீர்ந்திருந்த பேரறிவுவாய்த்தற்றொழிலையுடையையாய இரவல,

துயர் ஆற்றப்படுக்கையினாலே போக்கு (39) விறலியர் தம்முடைய (31) நிறமிலை (32) வெம்பரல் (8) அயிலுருப்பினையாகிக் (7) கிழிக்கையினாலே(8) வரிநிழலசைஇப் (12) பின்னும் ஆற்றுவர்தன்னைபெற ஐதாடத்து (7) அந்தடையால் இனைத்து ஓய்ந்த அடியை (32) இனியர் தைவரப் (33) பாண்மகன் (37) பாலையை (36) இயக்க (37) வள்ளிபோர் நகைஇச் (38) சிறியாழ் இடவயிற்ற நீஇ (35) முனிவிலகந்திருந்த இரவலவென முடிக்க.

41-2. கொழு மீன் குறைய ஒதுங்கி வள் இதழ் கழுநீர் மேய்ந்த கய வாய் எருமை—கொழுவிய மீன் தினியாடந்து வளவிய இதழையுடைத்தாகிய செங் கழுநீர்ப்பூவைத் தின்ற பெரிய வாயையுடைய எருமை,

43-4. பைங்கறி நிவந்த பலவின் நீழல் மஞ்சள் மெல் இலை மயிர் புறம் தைவர—பசிய மினுகுகொடி படர்ந்த பலாவின் நீழலிலே மஞ்சளினது மெல்லிய இலை தனது மயிரையுடைய முதுகைத்தடவ,

45. வினையா இன கள் நாற மெல்கூ பெயரா—முற்றுத இனையதேன் நாற மென்று அசையிட்டு,

46. குளவி பள்ளி பாயல் கொள்ளும்—காட்டுமல்லிகையாகிய படுக்கை மிலே துயில்கொள்ளும்,

47. சூட புலம் காவலர் மருமான்—மேற்றிசைக்கணுள்ள நிலத்தைக் காத்தற்றொழிலையுடைய சேரர் குடியிலுள்ளோன்,

எருமை, நீழலிலே தைவரப் பெயராக் கொள்ளும் சூடபுலமென முடிக்க.

47-9. ஒன்னூர் வடபுலம் இமயத்து வாங்கு வில் பொறித்த எழு உறழ் திணி தோள் இயல் தேர் சூட்டுவன்—பகைவருடைய வடக்கின்கண் உள்ளதாகிய நிலத்திடத்தே நிற்கும் இமவானின்கண்ணே வளையும் வில்லேவைத்த கோடியத்தையாறுபடும் திணிந்த தோளினையுடைய சூட்டாரட்டை யுடையோன்,

50. வரு புனல் வாயில் வஞ்சியும் வறிது—பெருகுகின்ற நீரையும், கோபுரவாயிலையுமுடைய வஞ்சியெனுமூரும் தரும்பரிசில் சிறிதாயிருக்கும்;

மருமான் (47) சூட்டுவன் (49) அவனுடைய வஞ்சியும் வறிதெனமுடிக்க.

50. அதாஅன்று—அவ்வூரன்றி,

51-2. நறவு வாய் உறைக்கும் நாகு முதிர் நுணவத்து அறை வாய் குறு தினி—தேனைப் பூக்கள் தம்மிடத்தினின்று தளிக்கும் இளமைமுதிர்ந்த நுணமரத்தினது வெட்டின வாயையுடைய குறியகுறட்டை,

52-3. [அயிலுளி பொருத, கைபுனை செப்பம் கடைத்த மார்பின்:] அயில் உளி கடைத்த கை புனை செப்பம் பொருத மார்பின் மன்னி (56)—கூர்மையையு

டைய உளிகள் உள்ளேசென்றடைத்த சாதிலிங்கம் தோய்ந்த *சேப்புச்சேர்ந்த மார்பின் மன்னி,

54. செய் பூ கண்ணி செவி முதல் திருத்தி—மிடேச்சையார்செய்த பூவினையுடைய மாலையைச் செவியடியிலே கெற்றிமாலையாகச் கட்டி,

55. சோன் பகடு உமணர் ஒழுகையொடு வந்த மன்னி (56)—வலியினையுடைத்தாகிய எருத்தினையுடைய உப்புவாணிருடைய சகடவொழுங்கோடே கூடவந்த மன்னி,

56. மகாஅர் அன்ன மன்னி—அவர்கள் வளர்த்தலின் அவர்கள் பிள்ளையினையொத்த மன்னி,

56-8. மடவோர் மகாஅர் அன்ன களி நீர் முத்தம் வாள் வாய் எருத்தின் வயிற்றகத்து அடக்கி—அவ்விடத்து மடப்பத்தையுடைய மகளிருடைய எயிற்றையொத்த செறிந்த நீர்மையையுடைய முத்தை வாள்வாய்போலும் வாயையுடைய இளிஞ்சிலின் வயிற்றிடத்தே இட்டுப் பொதிந்து,

59-60. [தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பி, ஞனிய லம்பா லுமட்டிய சீன்ற :]

நுசுப்பின் நல்கூர் †புறம் தோள் மறைக்கும் உமட்டியர்—நுசுப்பினது நல்கூர்ந்த †புறத்தைத் தோள் மறைக்கும் உமட்டியர்,

என்றது:—இடை தனது நுண்ணுமையால் கெழிமுமயங்குகாலத்து ஊற்றின்பம்பெருது மிடிப்பட்ட புறத்தினைத் தோள் இறகுமுயங்கி அவ்வின்பத்தைக் கொடுத்தற்குக் காரணமான உமட்டியரென்றவாறு.

ஊற்றின்பம் பெற்றறியாதென்னும் புறங்கூற்றையென்றுமாம்.

உளர் இயல் ஐம்பால் உமட்டியர் சுன்ற—அசைகின்ற இயல்பினையுடைய ஐந்துபகுதியாகிய மயிரினையுடைய உப்புவாணித்தியர்பெற்ற,

61. கிளர் பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும்—விளங்குகின்ற பூணையுடைய பிள்ளைகளுடனே தானும் கிலுகிலுப்பை கொண்டு வினையாடும்,

62. தத்து நீர் வரைப்பின் கொற்கை கோமான்—முறிகின்ற நீரைக் தனக்கு எல்லையாகவுடைய கொற்கையென்னும் ஊர்க்கு அரசன்,

மன்னி முத்தையடக்கி உமட்டியரீன்ற புதல்வரோடே ஆடுங் கொற்கை யென முடிக்க.

63. தென் புலம் காவலர் மருமான்—தெற்கின் கண்ணதாகிய நிலத்தைக் காத்தற் றொழிலேயுடையார் குடியிலுள்ளோன்,

63-5. [ஒன்னார், மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக், கண்ணுர் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்:]

ஒன்னார் மண் மாறு கொண்ட செழியன்—பகைவர்நிலத்தை மாறுபாட்டாலே கைக்கொண்ட பாண்டியன்,

மாலை வெண்குடை கண் ஆர் கண்ணி கடு தேர் செழியன்—மூத்தமாலையையுடைய கொற்றக்குடையினையும் கண்ணிற்கு அழகு நிறைந்த கண்ணியினையும் கடிய தேரினையுமுடைய செழியன்,

---

* சேப்பு - செம்மைநிறம்; "கழற்கால் சேக்குஞ், சேப்புடையார்" (திருவாப்பனூர்ப்புராணம், பாயிரம், 3.) † புறம் - இடம்.

66-7. [தமிழ்நிலைபெற்ற தாங்கரு மரபின், மிழ்ஞாலை மறுவின் மதுரையும் வறிதே:] ஞாலை மிழ் தாங்கரு மரபின் தமிழ் நிலைபெற்ற மறுவின் மதுரையும் வறிது—தன்னிடத்துத் தோன்றிய மண்மிழ்ச்சி பொறுத்தற்கரிய முறைமையினையுடைய தமிழ் வீற்றிருந்த தெருவினையுடைய மதுரையும் வறிது;

ஞாலமிழ்—ஞாலத்தொகை.

கோமான் (62) மருமான் (63) செழியன் (65) அவனுடைய மதுரையும் தரும் பரிசில் நிதியாயிருக்கும்.

67· அதாஅன்று—அவ்வூரன்றி,

68. *[ஈரநீர்ப் பொய்கை யிடைகரை நிவர்ந:] பொய்கை நறு நீர் அடைகரை நிவர்ந— *பொய்கையிடத்து நறிய நீரடைகரையிலே நின்று வளர்ந்த,

69. துறு நீர் கடம்பின் தூணை ஆர் கோதை—நெருங்குகின்ற தன்மையையுடைய கடம்பினுடைய இணைதல்லிறைந்த மாலை,

கோதைபோலப் பூத்தலிற் கோதையென்றார்.

70-71. [ஓவத் தன்ன வுண்டுறை மருங்கிற், கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்:] கோவத்து அன்ன கொங்கு உறைத்தலின் சேர்பு ஓவத்து அன்ன உண் துறை மருங்கின்—தன்னிடத்து இற்றிரகோபத்தையொத்த தாதையுதிர்த்தலின் அத்தாதுசேர்ந்து சித்திரத்தையொத்த உண்ணும் துறையிடத்தே நின்ற,

72-3. வரு முலை அன்ன வன் முகை உடைத்து நிரு முகம் அவிழ்த்த தெய்வம் தாமரை—எழுகின்ற பெரியமுலையையொத்த பெரிய முகைகளெழுந்து அழகினையுடைய முகம்போல மலர்ந்த தெய்வத்தன்மையையுடைய தாமரையிடத்தி,

† "பொருளே யுவமஞ் செய்தனர்" என்னுஞ் குத்திரத்தாற் பொருளே உவமஞ்செய்தார்.

74-6. ஆசு இல் அகம் கை அரக்கு நோய்தன்ன செ இதழ் பொதிர்த செ பொன்கொட்டை ஏமம் இன் தூணை தமிழ—குற்றமில்லாத அங்கையைச் சாதிலிங்கந்தோய்ந்தாலொத்த வெந்த இதழ்சூழ்ந்த செம்பொன்னூற் செய்தாலொத்த ‡ பீடத்திலே தன்னுயிர்க்குக் காவலாகிய இனிய பெடையைத் தழுவித்துயில்கொண்டு,

76-8. இறவு உளர்ந்து காமர் தும்பி காமரம் செப்பும் §தண் பணை தழீஇய தனாஅ இருக்கை—அத்துயிலெழுந்து விருப்பமருவினதும்பி கோழிமென்னிம்பணைப்பாடும் மருதநிலஞ் சூழ்ந்த அசையாத குடியிருப்பினையுடைய,

---

* பொய்கை—மாஞ்சிட சாக்காத நீர் நிலை. (தீவகு. 337-உ.)

† தொல்காப்பியம், உவமவியல், 9.

‡ "பதுமபீடத் தன்னகர்" (கம்ப. மையுடை.

§ இதுபோன்றவடி., பெரும்பாணரு, 242 - ஆம் அடியாகவும் காணப்படுகின்றது; "தண் பணை தழீஇய விருக்கை": "கதமறிவனை", "குருகுகாளை பொ", என்னுஞ்செய்யுட்களினுள்ளது; (யா-வி. மேற்)

79. ஞாணபுரம் காவலர் மருமான்—இழக்கின்கண்ணதாகிய நிலத்தைக் ஞாத்தற்றெழிலே புடையார் குடியிலுள்ளோன்,

79-81. [ஒன்ஞர், ஒங்கெயிற் கதவ முருமுச் சுவல் சொறியுந், தூங்கெயி லெறிந்த தொடிவினைஞரு மென்று எயில் உருமுச் சுவல் சொறியும் *ஒன்ஞர் தூங்கு எயில் எறிந்த தொடி வினைஞரு மென்று—கதவத்தை யுடைய உயர்ந்த மதிற்றலையிலே உருமேறு தன்முழுத்தைத் தினவாற்றேய்க்கும் பகைவர் தூங்கெயிலை அழித்த தொடி வினைஞரும் பெருமையையுடைய கையினையும்,

82. காடா நல் இசை நல் தேர் செம்பியன்—ஐயுற்று ஆராய்ப்படாத உல கறிந்த நல்லபுகழினையும் நல்ல தேரினையுமுடைய சோழனது,

83. ஓடா பூட்கை உறத்தையும் வறிது—தன்னிடத்திருந்தோர் ஓடா மைக்குக் காரணமாகிய மேற்கோளினையுடைய உறத்தையென்னும் ஊரும் தரும்பரிசில் சிறிதாயிருக்கும்;

அது †"முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய, புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென" என்பதனுணர்க.

அதாஅன்று—அவ்வூரன்றி,

84-5. வானம் வாய்த்த வளம் மலை கவாஅன் காணம் மஞ்ஞைக்கு கலிங் கம் நல்கிய—மழை பருவம்பொய்யாமற் பெய்கையினுலே உண்டான செல்வத் தையுடைய மலைப்பக்கத்திற் காட்டிடத்தேதினிரிபுமயில் கூவியதற்குக் குளிர்ந்து கூவிற்றென்று அருள்மிகுதியாற் போர்வையைக்கொடுத்த,

86. அரு நிறல் அணங்கின் ஆலியர் பெருமகன்—பெறுதற்கரிய வல் லையுடைத்தாகிய வடிவினையுடைய ‡ஆலியர்குடியிற் பிறந்த பெரியமகன்,

87. §பெரு கல் நாடன் பேகனும்—பெரிய மலைநாட்டையுடைய பேக னெண்ணும் வள்ளலும்

நல்கிய பெருமகனுகிய பேகனுமெனமுடிக்க.

87-8. சுரும்பு உண நறு நீ உறைக்கும் காகம் நெடு-வழி—சுரும்புண்ணும் படி கறியையுஞ் தேனைத் துளிக்கும் சுரபுன்னையை யுடைத்தாகிய நெடிய வழியி னின்ற,

89. சிறு வீ முல்லைக்கு பெரு தேர் நல்கிய—சிறிய பூக்களையுடைய முல்லைக்கொடி தடுத்தற்கு அது வேண்டிற்றுகக்கருதிப் பெரிய தேரைக்கொடுத்த,

---

* செம்பியன் பகைவருடைய தூங்கெயிலெறிந்தமை பின்வருவனவற் றாலும் விளங்கும்: "ஒன்ஞருட்குந் தூன்னருங் கடுந்திறற், தூங்கெயி லெறிந்த நூங்கைவேந்தே" (புறநா. 34); "வீங்குதோட் செம்பியன் சினந்தம் விசம்பிற், தூங்கு மெயிலுந் தொலைத்தலால்" (பழ. 41); "தூங்கெயின் மூ வெறிந்த சோழன்கா ணம்மானே" (சில. வாழ்த்து); "தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்" (மணி. 1 : 4.)

† சிலப்பதிகாரம், நாடுகாண்காதை, 247-8.

‡ "அதமனெம் பரிசி லாவியர் கோவே" (புறநா. 147)

§ வெளிரதிகளில், பெருக்கடனுட னென மூலத்தும பெரிய கடனுட னென உரையிலும் வேறுபாடுண்டு.

90-91. பிறங்கு வெண் அருவி வீழும் சாரல் பறம்பின் கோமான் பாரியும்—மிகுகின்ற வெள்ளிய அருவிகளிக்கும் பக்கத்தினையுடைய பறம்பென்னும் மலைக்கரசனுகிய *பாரியென்னும் வள்ளலும்,

91-3. கறங்கும் மணி வால் உளை புரவியொடு வையகம் ஈரம் நல் மொழி மருள இரவலர்க்கு ஈந்த காரி (95)—ஒலிக்கும் மணியினையும் வெள்ளிய தலையாட்டத்தினையுமுடைய குதிரையோடே தனது நாட்டினையும், அருளினையுடைய நன்றுகிய மொழியினையும் ஒன்றேயோர்கேட்டு வியக்கும்படி இரவலர்க்குக் கொடுத்த காரி,

ஈராட்மொழிமருள வென்றுமாறுக.

94-5. அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சு வரு நெடு வேல் கழல் தொடி தட கை காரியும்—†தன்னிடத்துறையும் கொற்றவையுடைய கோபத்தின்மிகுதியினுலே தான்வினங்கும் அச்சந்தோன்றும் நெடியவேலினையும் உழலுந்தொடியினை யணிந்த பெருமையையுடைய கையினையுமுடைய காரியென்னும் வள்ளலும்,

95-7. [நிழறிகழ், நீல நாக நல்கிய கலிங்க, மாலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த:] நாகம் நல்கிய நிழல் திகழ் நீலம் கலிங்கம் ஆல் அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த ஆய் (99)—பாம்பு ஈன்றுகொடுத்த ஒளிவிளங்கும் நீலநிறத்தையுடைய உடையினை ஆலின்கீழிருந்த இறைவனுக்கு நெஞ்சுபொருந்திக் கொடுத்தஆய்,

98-9. சாவம் தாங்கிய சார்து புலர் திணி தோள் ஆர்வம் நல் மொழி ஆயும்—வில்லையெடுத்த சந்தனம் பூசிப்புலரும் திண்ணிய தோளினையும் ‡கேட்டோர்க்கு விருப்பக்கைச்செய்யும் நன்றுகிய சொல்லினையுமுடைய ஆயென்னும் வள்ளலும்,

99-101. மால் வரை கமழ் பூ சாரல் சனியிய செல்வி அமிழ்து விளை தீ கனி§ஒளவைக்கு ஈந்த அதிகன் (103)— பெருமையையுடைய மலையிற் கமழ்பூக்களினையுடைய பக்கமலையிலேகின்றழகுபெற்ற கருநெல்லியினது அமிழ்தின் நன்மை தன்னிடத்தேயுண்டான இனிய பழத்தைத் தான் நுகர்ந்து உடம்புபெருத்தே ஒளவைக்குக்கொடுத்த அதிகன்,

---

* "கொடுக்கிலாளாளைப் பாரியேயென்றுகூறினுங்கொடுப் பாரிலே" (தே. புகழூர். சுந்தர)

† 'அழல்' என்பதற்கு ரண்டு உரை எழுதப்பட்டிருத்தல்போல, இந்நூல் 102 - ஆம் அடியிலுள்ள 'சினம்' என்பதற்கும் பொருள் எழுதப்பெற்றுள்ளது.

‡ திருக்குறள், 643 - ஆம் செய்யுளையும் அதனுரையையும் பார்க்க.

§ 100 - ஆம் திருக்குறளின் விசேடவுரையைப்பார்க்க. ஒளவை அதிகமானிடத்து நெல்லிக்கனி பெற்றமையைப் பின்வருஞ்செய்யுளானுமுணர்க. "வலம்படு வாய்வா ளோதி யொன்னர், களம்படக் கடந்த கழறெடித் தடக்கை, யார்கலி நறவி னதிகர் கோமான், போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி, பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி, நீல மணிமிடற் றொருவன் போல, மன்னுக பெரும நீயே தொன்னிலைப், பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட, நெய்யிலை நெல்லித் தீங்கனி குறியா, தாதனினகத் தடக்கிச், சாத லீங்க வெமக்கீத் தினையே" (புறநானூறு. 91.)

102-3. உரவு சினம் கனலும் ஒளி திகழ் நெடு வேல் அரவம் கடல் தானை அதிகனும்—தன்னிடத்தையும் கொற்றவையது வலியினையுடைய சினம் கின்றெரியும் ஒளிவிளங்கும் நெடிய வேலினையும் ஆரவாரத்தையுடைய கடல்போலும் படையினையுமுடைய அதிகமானென்னும் வள்ளலும்,

103-5. கரவாது நட்போர் உவப்ப கடை பரிகாரம் முட்டாது கொடுத்த கள்ளியும் (107)—தன்மனத்து நிகழ்கின்றனவற்றை மறையாதிகூறி நட்புச் செய்தோர் மனமகிழும்படி அவர்கள் இல்லழம் நடத்துதற்கு வேண்டும்பொருள் சோ நாடோறும் கொடுத்த கள்ளியும்,

105-7. மூசு வினங்கு தட கை தீளி மழை பொழியும் வளி தஞ்ச நெடு கோடு களி மலைகாடன் கள்ளியும்—பகைப்புலத்தே கொலைத்தொழிலான் வினங்கும்பெருமையையுடைய கையினையும் தளியையுடையமழை பருவம் பொய்யாது பெய்யும் உயர்ச்சியாற் காற்றத்தங்கும் நெடிய கொங்களினையுடைய செறிந்த மலைகாட்டையுமுடையஞகிய கள்ளியென்னும் வள்ளலும்,

107-9. களி சினை கறு போது களுலிய காகு முதிர் காகத்து குறு பொறை கல் காடு கோடியர்க்கு ஈந்த ஓரி (111)—செறிந்த கொம்புகளிடத்தே கறிய பூக் கள் கெருங்கின இளமையையுடைய முதிர்ந்த சுரபுன்னையையும், குறிய மலை களினையுமுடைய கன்ருகிய காடுகளைக் கூத்தாடுவோர்க்குக்கொடுத்த ஓரி,

110-11. காரி குதிரை காரியொடு மலைந்த ஓரி குதிரை ஓரியும்—காரி யென்னும் பெயரையுடைத்தாகிய குதிரையையுடைய காரியென்னும் பெயரை புடையவனுடனே போர்செய்த ஓரியென்னும் பெயரையுடைத்தாகிய குதிரை யையுடைய ஓரியென்னும் வள்ளலும்,

காரி கரியகுதிரையென்றும் ஓரி பிடரிமயிரென்றும் கூறுவாருமுளர்.

111-13. [எனவாங்கு, கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோ, னெழுவர் பூண்ட வீகைச் செந்நகம்:]

என எழுவர் ஆங்கு பூண்ட ஈகை செ நகம்—என்றுசொல்லப்பட்ட எழு வரும் அக்காலத்தே மேற்கொண்ட கொடையாகிய செவ்விய பாரத்தை,

எழு சமம் கடந்த எழு உறழ் திணி தோள் எழுவர்—தம்மேலே வருகின்ற போர்களைக்கடந்த கினையத்தோடு மாறுபடுகின்ற திணிந்த தோளினையுடைய எழுவர்,

114-26. [விரிகடல் வேலி வியலகம் விளங்க, வொருதான் முங்கிய வுர னுடை நோன்முர, னறுநீ காகமு மகிழ மாரமுஞ், துறையாடு மகளிர்க்குத் தோட் பூணி யாகிய, பொருபுன நாடெம் போக்கரு மரபிற், நிறன்மா விலங்கைக் கரு வொடு பெயரிய, நன்மா விலங்கை மன்ன ருள்ளும், மறுவின்றி விளங்கிய வடு வில் வாய்வா, ளுறுபுலித் தப்பி னெலியர் பெருமகன், களிற்றுத்தழும் பிருந்த கழறுபங்கு திருந்தடிப், பிடிக்கணஞ் சிதறும் பெயன்மழைத் தடக்கைப், பல்லியக் கோடியர் புரவலன் போரிசை, நல்லியக் கோடனை யகந்த கொள்கையொடு:]

விரி கடல் வேலி வியலகம் விளங்க ஒரு தான் தாங்கிய நல்லியக்கோடனை சபர்தனிர் செலின் (263)—பரந்த கடலாகிய வேலியையுடைய உலகமெல்லாம்

விளங்கும்படி ஒருவஞியதானே பொறுத்த நல்லியக்கோடனே விரும்பிச் செல்லின்,

மறு இன்றி விளங்கிய உரன் உடை நோன்ருள் வடு இல் வாய் வாள் உறு புலி தப்பின் ஓவியர் பெருமகன்—குற்றமின்றி விளங்கிய அறிவையுடைத் தாகிய வலியையுடைய முயற்கியினேயும் பகைவர்முகத்தினும் மார்பினும்விட்டின வாய்த்தவாளேயும் மிக்க புலிபோலும் வலியினேயுமுடைய ஓவியருடைய குடியிலுள்ளோன்,

நறு வீ காகமும் அகிலும் ஆரமும் துறை ஆடும் மகளிர்க்கு தோள் புணே ஆகிய பொரு புனல் தரூஉம் இலங்கை—நறிய பூக்களேயுடைய சுரபுன்னேயையும் அகிலேயும் சந்தனத்தையும் குளிக்குந்துறையிலே புனலாடுமகளிருடைய தோள்களுக்குத் தெப்பமாகக் கரையைக்குத்துகின்ற நீர்தருநிலங்கை,

கருவொடு போக்கரு மரபின் இலங்கை—*கருப்பதித்த முகூர்த்தத்தாலே ஒருவராலும் அழித்தற்கரிய முறைமையினேயுடைய இலங்கை,

†தொல் மா இலங்கை பெயரிய நல் மா இலங்கை—பழையதாகிய பெரு மையினேயுடைய இலங்கையினது பெயரைப்பெற்ற நன்ருகிய பெருமையையுடைய இலங்கை,

மன்னருள்ளும் ஓவியர் பெருமகன்—அவ்விலங்கைக்குரிய அரசர் பலருள்ளும் ஓவியர்குடியிற் பிறந்தோன்,

களிறு தழும்பு இருந்த கழல் தயங்கு திருந்து அடி—யானேயைச்செலுத் துதலாலுளதாகிய தழும்புகிடந்த வீரக்கழல் கிடந்தசையும் பிறக்கிடாத அடி யினேயும்,

பிடி கணம் சிதறும் கை—பிடித்திரிளேப் பலர்க்குங் கொடுக்குங்கை,

பெயல் மழை தட கை—பெய்தற்குரிழிலேயுடைய மழைபோன்ற பயனே யுடைய பெரியகையினேயுமுடைய,

பல் இயம் கோடியர் புரவலன்—பல வாச்சியங்களேயுடைய கூத்தரைப் புரத்தலே வல்லவன்,

பெரு இசை நல்லியக்கோடனே மயந்த கொள்கையொடு—பெரிய புகழை யுடைய நல்லியக்கோடனேக் காண்டற்குவிரும்பிய கோட்பாட்டுடனே,

பெருமகன் புரவலஞிய நல்லியக்கோடனெனமுடிக்க.

127. தாங்கரு மரபின் தன்னும்—பிறராற் பொறுத்தற்கரிய குடிப்பிறக் தோர்க்குரிய முறைமைகளேயுடைய தன்னேயும்,

127-8. தந்தை வான் பொரு நெடு வரை வளனும் பாடி—அவன்றக்தை யுடைய தேவருலகத்தைத்தீண்டும் நெடிய மலேயிற் செல்வத்தையும்பாடி,

129. முன் நாள் சென்றனம் ஆக— ‡நாலுபத்துநாளேக்குமுன்னே போனேமாக,

---

* கருப்பதித்தமுகூர்த்தம் - இங்ஙகரை அமைக்கத்தொடங்கியகாலம்.

† தொன்மாவிலங்கையென்றது இராவணனது இராசதானியாகிய இலங் கையை.

‡ நாலுபத்துநாள் - நெல்நாள்.

இஃளன்—இற்றைநாள்,

130. நிறவா கண்ண சாய் செவி குருளை—விழியாத கண்ணையுடைய வாயிய வினைந்த செவியினையுடையகுட்டி,

*"நாயே பன்றி புலிமுய ஞன்கு, மாயுங் காலைக் குருளை யென்ப."

131. கறவா பால் முலை கவர்தல் தோனுது—பிறராற் கறக்கப்படாத பாலினையுடைய முலையையுண்ணுதலைத் தன்பிழிருதியாற் பொறுத்தலாற்றாது,

132. புனிறு நாய் குரைக்கும் புல்லென் அட்டில்—ஈன்றணிமையையுடைய நாய்கூப்பிடும் பொலிவழிந்த அடுக்களையில்,

133. காழ் சோர் அட்டில் (132)—கீழிளள் †ஆக்கையற்றுவீழுகின்ற அட்டில்,

முது சுவர் கணம் சிதல் அரித்த அட்டில் (132)—பழைய சுவரிடத்தெழுந்த நிரண்ட கறையான்தின்ற அட்டில்,

134. [பூழி பூத்த புழற்கா ளாம்பி:] பூழி புழல் ‡காளாம்பி பூத்த அட்டில்—(132) வினைந்தபுழுதி உட்பொய்யாகிய காளாம்பூத்த அட்டில்,

135-6. [ஒல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல், வினைக்கைக் கினை மகள்:] ஒடுங்கு பசி உழந்த ஒல்கு நுண் மருங்குல் வினை கை §கினைமகள்—ஒடுங்குதற்குக் காரணமான பசியாலே வருத்திய நுடங்கும் நுண்ணிய இடையினையும் வினையிலையணிந்த கையினையுமுடைய §கினைவனுடையமகள்,

136-7. வள் உகிர் குறைத்த குப்பை வேளை உப்பிலி வெந்ததை—பெரிய உகிராற்கிள்ளின குப்பையினின்ற வேளை உப்பின்றும் அட்டிலிலே (132) வெந்ததனை,

138-9. மடவோர் காட்சி ஈணி கடை அடைத்து இரு பெரு ஒக்கலொடு ஒருங்கு உடன் மிசையும்—வறுமையுறுதலும் இயல்பென்றறியாது புறங்கடவோர் காண்டற்கு ஈணித் தலைவாசலையடைத்து மிடியாற் கரிய பெரிய சுற்றத்தோடே கூடவிருந்து அடையத்தின்னும்,

140. அழி பசி வருத்தம் வீட—‖அறிவுமுதலியன அழிதற்குக் காரணமான பசியாலுளதாகிய வருத்தங்கள் விட்டுப்போம்படி,

---

* தொல்காப்பியம், மரபியல், 8.

† ஆக்கை - கழிகின்றக்கட்டும் கயிறுமுதலியன.

‡ "ஆகனி மறற்ற கோடிய ரடப்பி, ஞம்பி பூப்ப" (புறநா. 164); "சாம்பல் கண் டறியா வாம்பி பூத்த, வெலிதுயி லடுப்பு" (காசிக்கலம்பகம், 57.)

§ கினைவன்மகள் - கினைப்பறைகொட்டுவோனுடைய மனைவி; மகன் மனைவி; (மணி, 21: 30)

‖ பசி அறிவுமுதலியவற்றை அழிக்குமென்பதை, "அறிவுகெடவந்த கல் கூர்மையே" (புறநா. 266), "தொல்வரவுவர் தோலுங் கெடுக்குந் தொகையாக, நல்குர வென்னு நசை" (குறள், 1043), "குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும், பிடித்த கல்விப் பெருந்துணை விடூஉம், ராணனி னியு மாணைழில் னைதக்கும், ... பசிப்பிணி யென்னும் பாவி" (மணி. 11: 76 - 80) என் பவற்றாலும், "மானங் குலக்கல்வி" என்னும் நல்வழிச்செய்யுளாலும் உணர்க.

140-43. பொழி கவுள் தறுகண் பூட்கை மணி தயங்கும் மருப்பின் நெ
கண் யானையொடு பெரு தேர் எய்தி யாம் அவண் நின்றும் வருதும்—மதம் வீழ்
இன்ற கதப்பினையும் கடுக்கொல்லுதலையிய மேற்கோளினையும் மணியசை
யும் பக்கத்தினையும் தெரியகண்ணையுமுடைய யானையுடனே பெரியதேரையும்
பெற்று யாம் அவ்விடத்தினின்றும் வாராதின்றேம்,

இது நிகழ்காலத்து வருதல், *"உம்மொடு வருஉங் கடதற" என்புழிக்
கூறினும்.

143-5. நீயிரும் ஈயத்து இலண இருந்த இரு பெரு ஒக்கல் செம்மல்
உள்ளமொடு செல்குவீர் ஆயின் — நீங்களும் ஆவேந்தர்பாற்பெறும் பரிசில்
லிரும்பி இவ்விடத்திருந்த வறுமையாற் கரியவாகிய பெரிய சுற்றத்தினது தலை
மையையுடைத்தாகிய நெஞ்சுடனே அவனிடத்தே போவீராயின்,

146-50. [அலேர்த் தாழை யன்னம் பூப்பவுந், தலைநாட் செருந்தி தம
னிய மருட்டவுங், கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழாஅலவு, நெடுங்காற்
புன்னை நித்திலம் வைப்பவுங், கானல் வெண்மணல் கடலுளாய் நிமிர்தர:]

கடல் உளாய் நிமிர்தர அலை நீர் கானல் வெள் மணல்—கடல்பாற்று எற்றிப்
பொருதலாலே அலையுநீரையுடையகரையில் வெள்ளிய மணலிடத்தினின்ற,

தாழை அன்னம் பூப்பவும் - தாழை அன்னம்போலப் பூக்கையினுமும்,

தலை நாள் செருந்தி தமனியம் மருட்டவும்—இளவேனிற்காலர் தொடங்
குகின்ற நாளிலே †செருந்தி தன்னைக்கண்டாரைப் பொன்னென்று மருளப்
பண்ணுகையினுமும்,

கடு சூல் முண்டகம் கதிர் மணி கழாஅலவும்—முதற் சூலையுடைய கழி
முள்ளி ஒளியையுடைய நீலமணிபோலப் பூக்கையினுமும்,

‡கன்னியாய்கின்று அரும்புதலிற் கடுஞ்சூல்.

கழாஅல—கழற்ற,

நெடு கால் புன்னை நித்திலம் வைப்பவும்—நெடிய தாளினையுடைய புன்னை
நித்திலம்போல அரும்புகையினுமும்,

151. பாடல் சான்ற செய்தல் நெடு வழி பட்டினம் (153) -புகழ்தலமை
ந்த செய்தனிலத்து நெடியவழியிற் பட்டினம்,

152. மணி நீர் வைப்பு பட்டினம் (153)—நீலமணிபோலும் கழிருழ்ந்த
ஊர்களையுடைய பட்டினம்,

மதிலொடு பெயரிய பட்டினம் (153)—மதிலோடே பெயர் பெற்ற பட்
டினம்,

என்றது எயிற்பட்டின மென்றதாம்.

153. பனி நீர் படுவின் பட்டினம் படின்—குளிர்ச்சியையுடைய நீரை
யுடைய குளங்களையுடைத்தாகிய எயிற்பட்டினத்தே செல்வீராயின்,

---

* தொல்காப்பியம், வினையியல், 5.

† "செருந்திபொன்சொரிதருந்திருச்செல்வேலியுறைசெல்வர்" (தே. திரு ஞான)

‡ 'கன்னியாய்' என்றும் பிரதிபேதமுண்டு.

பழ - மழுவுமாம்.

154. ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன—உயர்ந்த தன்மையையுடைய ஒட்டகம் உறக்கத்தேகிடந்தாலொத்த,

155. வீங்கு நிரை கொணர்ந்த விரை மரம் விறகின்—மிகுகின்ற நிரை கொண்டுவந்த மணத்தையுடைய அகிலாகிய விறகாலே,

156. கரு புகை செ நீ மாட்டி—கரிய புகையையுடைய சிவந்த நெருப்பை யெரித்து,

156-8. பெரு தோள் மதி *எக்கமும் மாசு அறு திரு முகத்து நுதி வேல் நோக்கின் நுளைமகள் அரித்த—பெரிய தோளினையும் மதி இத்தன்மை பெற்றிலேமேயென்று விரும்புதற்குக் காரணமான மறுவறுகின்ற அமைதியினையுடைய முகத்தினையும் மூனையினையுடைத்தாகிய வேல்போலும் பார்வையினையுமுடைய நுளைச்சாதியிற்பிறந்த மகளாலே அரிக்கப்பட்ட,

159. பழ படு தேறல் பரதவர் மடுப்ப—பழைதாகிய களிப்புமிகுகின்ற கட்டெளிவைப் பரதவர் எடுத்துவந்து வாயிடத்தே வைக்க,

160-61. ஓரை மலர் படப்பை இடங்கில் நோமான் நீளை அவிழ் தெரியல் தகையோன் பாடி—தொத்திலெழுந்த பூக்களையுடையவாகிய தோட்டங்களையுடைய இடங்கிலென்னும் ஊர்க்காரனுகிய அரும்புவிரிந்த மாலையினையுடைய அழகையுடையோனைப் பாடி,

162. அறல் குழல் பாணி தூங்கியவரொடு—தாளவறுதியையுடைய குழலோசையின் தானத்திற்கொப்ப ஆடின மகளிரோடே,

163. வறல் குழல் சூட்டின்—உலர்தலையுடைய குழன்மீனைச் சுட்டதனோடே,

வயின் வயின் பெறுகுவிர்—மனைதோறும் மனைதோறும் பெறுகுவிர் ;

பட்டினம் படரிற் (153) இடங்கிற்நோமானுகிய (160) தகையோனைப் பாடி (161) ஆடினமகளிரோடே (162) நீங்களும் சூட்டோடே (163) தேறலைப் பரதவர்மடுப்ப (159) அவற்றை வயின்வயிற் பெறுகுவிரென முடிக்க.

164. பைனை அவரை பவழம் கோப்பவும்—பசுத்த அரும்புகளையுடைய அவரை பவழம்போலப் பூக்களை முறையே தொடர்ந்திற்கவும்,

165. கரு நனை காயா கணம் மயில் அழிவும்—கரிய அரும்பினையுடைய காயாக்கள் நிரண்ட மயிலின் கழுத்துப்போலப் பூவாகிற்கவும்,

166. கொழு கொடி முசுண்டை கொட்டம் கொள்ளவும்—கொழுவிய கொடியினையுடைய முசுண்டை †கொட்டம்போலும் பூவைத் தன்னிடத்தே கொள்ளாகிற்கவும்,

கொட்டைநுற்கின்ற கொட்டையுமாம்.

167. செழு குலை கார்தன் கைவிரல் பூப்பவும் — வளவிய குலையினையுடைய கார்தன் கைவிரல்போலப் பூவாகிற்கவும்,

---

* "கடைக்க ணோக்கற" (தீவந. 1622)

† கொட்டம் - பணங்குருத்தாற்செய்விக்கப்படும் தெரியபெட்டி.

168. கொல்லே றெடு வழி கோபம் ஊரவும்—கொல்லேயிடத்து செடிய வழிகளிலே இக்திரகோபம ஊராகிற்கவும,

இச் செயவெனெச்சமெல்லாம் சண்டு நிகழ்கால முணாதகியே கின்றன ; ஞாயிறுபட வந்தானென்றூற்போல.

169. முல்லே சானற *முல்லே அம புறவின—இவைகாலமுணாதகி இங் ஙனம் நிகழ்தகாகிற்கவும கணவன கூறிய சொற்பிழையாது இல்லிருகது நல்ல றஞ்செய்து ஆற்றியிருந்த தனனமயமைந்த முல்லேகொடிபடர்ந்த அழகினே யுடைய காட்டிடத்து,

இது, †" மாயோன மேய " எனனும சூத்திரதகானுணாக

170-71. விடா கால அருவி லியல மலே சுடா சூழகி கானமாறிய செவ்வி நோகில—முழைஞ்சுகளிலே குதிகரும அருவியினேயுடைய பெரிய அத்தகிரியிலே ஞாயிறுமறைகது அவன கிரணஙகளபோன அகதிகாலதகைப் பார்,

172-3 [கிறல்வே னுதியிற பூத கேணி, விறலவேல வெனறி வேலு, ரெயினி] திறல வேல நுதியின கேணி பூத கிறல் வேல வெனறி வேலூர எயினி—முருகனகையில வலியினே புடைதாகிய வேலினுதிபோலே கேணி பூக்கப்பட்ட வெற்றியையுடைய வேலாலே வெறறியையுடைய வேலூரைச சேரின,

எனறது நலலியகோடன தனபகைமிருக்கு அஞ்சி முருகனேவழிபட்ட வழி அவன இககேணியிறபூவைவாஙகிய பகைவரையெறியெனறு கனவிறகூறி அதிற பூவைத தனவேலாக நிருமிதகதொரு கதைகூறிறது. இதனுனே வேலூ ரெனறு பெயராயிறது.

174. உறு வெயிறகு உலறிய உருபபு அவிர குரமபை—மிகுகினற வெயி லுககு உளஞறைகினறோ வருநதபபட்ட வெபப விளஙகுகினற குடிலிலிருக கினற,

175 எயிறறியா அட்ட இன புளி வெ சோறு — எயினகுலதகின மகளிராலே அடபபட்ட இனிய புளிஙகாயிட்டபபட்ட வெவவியசோறறை,

புளி - ஜிதத்திபபுமாம.

176. தேமா மேனி சிலவாலே ஆயமொடு—நேமாவின தளிராபோலும மேனியையும †சிலவாகிய வளேயினேயுமுடைய நடமகளி நுடைய நிரளுனே

177. ஆமான சூடினன—ஆமானினது சூடிறைசசியை யுடைய,

அமைவர பெறுகுவிர—பரிடபட பெறுகுவிர,

வேலூரெயிறற (173) சூடினேயுடைய (177) சோறறை (175) ஆயத தோடே (176) அமைவரப பெறுகுவிரெனமுடிக

---

* "முல்லேசானறமுறவு" (மதுரை 255) எனபதும அதனுரையும இஙகே அறிதறபாலன.

† தொல்காப்பியம், அகததிணையியல,

‡ 'சிலவாலேவிறலியெனறது பலவளேயிடுவது பெதுமபை பருவததாக லின, அஃதனறிச சிலவளேயிடும பருவததாளென அவள ஆடலமுதலியதறை களுரியனாதல கூறியவாறு' (பத்.ப. 57 - 6 உரை)

முல்லையும் குறிஞ்சியும் சேர்ந்திருத்தலிற் சேரக்கூறினர்; *இரண்டுங்கூடியல்லது பாலைத்தன்மை பிறவாமையின்.

178-9. [கறும்பூங்கோதை தொடுத்த காட்சியைக், குறுங்காற் காஞ்சிக் கொம்ப ரேறி :] நாள் கோதை தொடுத்த நறு பூ சினை குறு கால் காஞ்சி கொம்பர் ஏறி—நாட்காலத்தே மாலைகட்டினஞ்போல இடையறுமற் றொடுத்த நறிய பூக்களையுடைய சிறிய கொம்புகளையும் குறிய தாளினையுமுடைய காஞ்சிமரத்தின் பெரியகொம்பரிலேயேறி,

180. நிலை அரு குட்டம் நோக்கி நெடிது இருந்து — ஒருகாலத்தும் நிலைப்படுதல் அரிதாகிய ஆழத்திற்றிரள்வதன்ற மீன்களை எடுக்குங் காலத்தைக் கருதி நெடும்பொழுதிருந்து,

181-2. புலவு கயல் எடுத்த பொன் வாய் மணி சிரல் வள் உகிர் கிழித்த வடு ஆழ் பசு அடை—புலாஞற்றத்தையுடைய கயலை முழுகியெடுத்த பொன்னிறம்போலும் வாயையுடைய நீலமணிபோன்ற சிச்சிலியினது பெரிய உகிர் கிழித்த வடுவழுந்தின பசிய இலையினையுடைய,

183. மூள் அரை தாமரை முகிழ் விரி நாள் போது— மூன்னையுடைத்தாகிய தண்டினையுடைய வெண்டாமரையினது அரும்புவிரிந்த நாட்காலத்திற் பூவை,

184. கொங்கு கவர் நீலம் செ கண் சேவல்—தேனை நுகர்கின்ற நீலநிறத்தினையும் சிவந்த கண்ணினையுமுடைய வண்டொழுங்கு,

பூவைத் தேனையென்றது, †"தெள்ளிது" என்றதனைமுடிக்க.

185. மதி சேர் அரவின் மான தோன்றும் — திங்களைச் சேர்கின்ற கரும்பாம்பை யொப்பத் தோன்றும்,

186. மருதம் சான்ற மருதம் தண் பணை — ஊடியுங்கூடியும் போகநுகருந் தன்மை யமைந்த மருதநிலத்திற் குளிர்ந்த வயலிடத்து,

187-8. [அந்தண ரருகா வருங்கடி வியனக, ரந்தண் கிடங்கினவ ஞரு செய்தின்:] அம் தண் கிடங்கின் அரு கடி வியன் நகர் அந்தணர் அருகா அவல ஆஅர் எய்தின்—அழகினையுடைய குளிர்ந்த கிடங்கினையும் அரியகாவலையும் அகற்சியையுடைய அகங்களையுமுடைய அந்தணர்சுருங்காத அவனுடைய ஆஅரைச் சேர்வீராயின்,

189-90. [வலம்பட நடக்கும் வலிபுணை ருருத்தி, னூரன்கெழு நோன் பகட் டுழவர் தங்கை:] வலி புணர் எருத்தின் வலம் பட நடக்கும் நோன் பகடு உரன் கெழும் உழவர் தங்கை—இழுத்தற்குரிய வலிபொருந்தின கழுத்தினுலே வெற்றியுண்டாக நடக்கும் மெய்வலியினையுடைத்தாகிய எருத்தினையுடைய அறிவுபொருந்தின உழவருடைய தகுதியாகிய,

---

* "முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து, நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப், பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்" (சிலப. காடுகாண. 64 - 6.)

† "முதன்மு னேவிற் கண்ணென் வேற்றுமை, யினைமுன் வருந் தெள்ளி தென்ப" என்பது தொல்காப்பியம், வேற்றுமைமயங்கியல், 5.

உரன் - அறிவு; *"உரவோ ரெண்ணினும் மடவோ ரெண்ணினும்" என்றாற்போல.

191-2. பிடி கை அன்ன பின்னு வீழ் சிறு புறத்து தொடி கை மகடூஉ—பிடியினது கையை யொத்த பின்னினமயிர் வீழ்ந்து கிடக்கின்ற நெய்ய முதுகினையும் தொடியணிந்த கையினையுமுடைய மகள்,

192. மக முறை தடுப்ப—உழவர்தங்கையாகிய (190) மகடூஉ (192) தான் உள்ளே யிருந்து தன்பிள்ளைகளைக்கொண்டு நும்மை அடைவே எல்லாரையும் போகாது விலக்குகையினாலே,

இனிம்பிள்ளைகளை உபசரிக்குமாறுபோல உபசரித்து விலக்கவென்றுமாம்.

193-4. இரு காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த அவைப்பு மாண் அரிசி அமலை வெள் சோறு – காரிய வயிரத்தையுடைய உலக்கையினது பூணினையுடைய முகத்தைத் தேயப்பண்ணின குற்றுதல்மாட்டிமைப்பட்ட அரிசியாலாக்கின் கட்டியாகிய வெள்ளியசோற்றை,

195. கவை தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்—கவைத்த காலினையுடைய ஞெண்டும் பீர்க்கங்காயுங்கலந்த கலப்புடனே பெறுகுவிர்;

தண்பணையின் (186) ஆரெரிப்பின் (188) உழவர் தங்கையாகிய (190) மகடூஉத் தடுக்கையினாலே (192) சோற்றைக் (194) கலவையொடு பெறுகுவிரெனமுடிக்க.

196-201. [எரிமறித் தன்ன நாவி னிலங்கெயிற்றுக், கருமறிக் காதிற் கவையடிப் பேய்மக, ணிணனுண்டு சிரித்த தோற்றம் போலப், பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பிணத்தா, ளண்ணல் யானை யருவிதுக ளவிப்ப நீறுபடங்கு தெருவின வன் சாறயர் மூதூர்:]

எரி மறித்தன்ன நாவின் – மேலேக்கியெரிகின்ற நெருப்புச் சாய்ந்தாலொத்த நாவினையும்,

கரு மறி காதின் - வெள்ளாட்டுமறிகளை அணிந்த காதினையும்,

† கவை அடி பேய் மகள்—கவைத்த அடியினையுமுடைய பேய்மகள்,

ணிணன் உண்டு சிரித்த இலங்கு எயிறு தோற்றம் போல—ணிணத்தைத் தின்று சிரித்த விளங்குகின்ற எயிற்றினது தோற்றரவு போல,

பிணன் உகைத்து சிவந்த பெரு உகிர் பிணை தாள் அண்ணல் யானை அருவிதுகள் அவிப்ப நீறு படங்கு தெருவின் ஊர்—தாம் கொன்ற பிணங்களின்தலைகளைக் காலாலேதள்ளிச் சிவந்த பெரிய உகிரினையும் பெருமையையுடைய கல்லாயுமுடைய தலைமையையுடையவாகிய யானைகளின் மதவருவி எழுந்ததுகளை அவிக்கையினாலே புழுதியடங்கின தெருவினையுடைய ஊர்,

அவன் சாறு அயர் மூதூர் – அவனுடைய விழாவாடுகின்ற பழைய ஊர்.

202. சேய்த்தும் அன்று சிறிது ணணியதுவே—தூரிய இடத்ததுமன்று; சிறிதாக அண்ணிய இடத்ததே.

மூதூர் ணணியதென்க.

---

* ப்திற்றுப்பத்து, 73.

† "இரும்பே ருவகையி னெழுந்தோர் பேய்மகள், *** கண்டொட் டுண்டு கவையடி பெயர்த்துத், தண்டாக் களிப்பி னூடுங் கூத்துச், கண்டனன்" (மணி. 6: 121-7.)

203-6. [பொருநர்க் காயினும் புலவர்க் காயினு, மருமறை நாவி னந்தண ர்க் காயினுங், கட்வுண் மால்வரை கண்விடுத் தன்ன, வடையா வாயிலவ னருங் கடை குறுகி:]

பொருநர்க்கு அடையாஅயினும் புலவர்க்கு அடையாஅயினும் அரு மறை நாவின் அந்தணர்க்கு அடையாஅயினும் அரு கடை வாயில் குறுகி—இணைப் பொருநர்க்கு அடைக்கப்படாவாயினும், அறிவுடையோர்க்கு அடைக்கப்படாவா யினும், அரியவேதத்தை யுடைத்தாகிய நாவினையுடைய அந்தணர்க்கு அடைக் கப்படாவாயினும் வேனையோர்க்கு உள்ளே சேறற்கரிய தலைவாயிலையுடைய,

அடையாவென்றபன்மை நான்குவாயிலுங்கருதியது.

கடவுள் மால் வரை சண் விடுத்தன்ன அவன் வாயில்—அதுதான் தெய்வ ங்களிருக்கின்ற பெருமையையுடைய மேரு ஒரு கண்ணை விழித்துப்பார்த்தா லொத்த அவனுடைய கோபுரவாசல்.

அன்றிப் பொருநர்க்காயினும் புலவர்க்காயினும் அருமறைநாவி னந்தணர்க் காயினும் அடையாவாயிலென்றுற் பொருளின்மையுணர்க.

207. செய் நன்றி அறிதலும்—பிறர் தனக்குச்செய்த நன்றியை யறிந்து அவர்க்குத் தானும் நன்மைசெய்தலையும்,

*சிற்றினம் இன்மையும் — அறிவும் ஒழுக்கமுமில்லாத மாக்கள் திரள் தனக்கு இல்லாமையையும்,

208. இன் முகம் உடைமையும்—நோக்கினர்க்கு இனியமுகத்தை எக்கா லமும் உடையனுதலையும்,

இனியன் ஆதலும்—†முகத்தி னினிய நகாஅ அகத்து இன்னுதவனுகா மல் நெஞ்சு முகத்திற்கேற்ப இனியனுதலையும்,

209. செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர் எத்த—எக்காலமும் தன் னுடனே செறிந்து விளங்குகின்ற தலைமையினையுடைய பலகலேஞரையுணர்ந் தோர் புகழ,

210. அஞ்சினர்க்கு அளித்தலும்—தன்னீரத்தைக்கண்டு அஞ்சிவந்து ‡அடிவீழ்ந்தார்க்கு அருள்செய்தலையும்,

வெ கினம் இன்மையும்—கொடிய சினமில்லாமையையும்,

கோபம் வீட்டித்து நிற்கின்றது சினம்.

211. ஆண் அணி புகுதலும்—வீரர் நின்ற அணியிலேசென்று அவ்வணி யைக் குலைத்தலையும்,

§ "ஆண்பா லெல்லா மாணைநற் குரிய" என்றுகூறி, ||"பெண்ணு மாணும் பிள்ளேயு மவையே" என்றதனுல் ஆணென்றது ஆண்பாலேயே யுணர் த்துமேனும் அணி புகுதலென்றதனுல் ஈண்டு வீரரையுணர்த்துகிற்று.

---

* 'சிறியவினமாவது நல்லவர்களாலும் தீயதன்மையும் இல்லென்போ ரும் விடரும்தூர்த்தரும் நடருமுள்ளிட்டகுழு; அறிவைத்திரித்து இருமையுங் கெடுக்குமியல்பிற்று' என்பர் பரிமேலழகர்; திருக்குறள், 46 - ஆம் அதி. அவ.)

† "முகத்தி னினிய நகாஅ வகத்தினு, வஞ்சுவர் யஞ்சப் படும்." (திரு க்குறள், 824.)

‡ புறநானூறு, 10, 73 - ஆம் பாட்டுக்களேப்பார்க்க.

§ தொல்காப்பியம், மரபியல், 50.

|| ,, ,, 69.

அழி படை தாங்கலும் – தனது கெட்ட படையிடத்தே தான்சென்று பகை வரைப் பொறுத்தலேயும்,

212. வாள் மீ கூற்றத்து வயவர் ஏத்த – வாள்வலியாலே மேலாகிய சொல்லேபுட்பை வீரர் புகழ,

213. கருதியது முடித்தலும் — தன்னெஞ்சு கருதிய புணர்ச்சியைக் குறைவிடவாமல் முடிக்கவல்ல தன்மையையும்,

நுகர்தற்குரிய மகளிரை நுகர்ந்து பற்றறுக்கார் பிறப்பருமையிற் கருதியது முடிக்கவேண்டுமென்றார்.

காமமூ படுதலும் – அங்ஙனம் தானே இன்பமுருதே அம்மகளிரும் தம் மாலே மிக்கவின்பத்தைப்பெறும் தன்னே விரும்பப்பட்டிருத்தலேயும்,

214. ஒரு வழி படாமையும் – அவர்கள் அங்ஙனம் விரும்பினர்களென்று அவர்கள் வசத்தனுகாமையும்,

ஒடியது உணர்தலும் – தான் அவர்வசத்தனுகாமையின் அவர் வருந்திய தன்மையையுணர்ந்து அவரைப்பாதுகாத்தலேயும்,

இனி அவர்கள் கெஞ்சில் நிகழ்ந்ததனேயுணர்ந்து அவர் குறைமுடித்தலென் றுமாம்.

215. அரி ஏர் உண் கண் அரிவையர் ஏத்த - செவ்வரிபொருந்தின மையுண்கண்ணினேயுடைய மளிர்புகழ,

216. அறிவு மடம் படுதலும் – தான்கூறுகின்றவற்றையுணரும் அறிவில் லாதார்மாட்டுத் தான் அறியாமைப்பட்டிருத்தலேயும்,

அறிவு நன்கு உடைமையும் – தன்னேப்போல அறிவுடையார்மாட்டு நன் முக அறிவுடையனுயிருத்தலேயும்,

*"ஒளியார்மு னெளிளிய ராதல் வெளியார்முன், வான்சுதை வண்ணங் கொளல்" என்றார்பிறரும்.

217. வரிசை அறிதலும் – பரிசிலருடைய நாமறிந்து அவர்பெறுமுறை மையே கொடுத்தலேயும்,

கொடுத்தல் இற்றுங்கூட்டுக.

வரையாது கொடுத்தலும் – அங்ஙனம் கல்லிமிருசிலில்லாத பரிசிலர்க்குக் கொடாதிருத்தலே மேற்கொள்ளாதே அவர்களவிரும்பக் கக்கனவற்றைக் கொடுத்தலேயும்,

இனித் தனக்கென ஒன்றும் வரைந்துவையாமற் கொடுத்தலென்றுமாம்.

218. பரிசில் வாழ்க்கை பரிசிலர் ஏத்த – பிறர்கையிலேற்ற பொருளால் இல்வாழ்க்கை நடத்துதலேயுடைய பாணர் கூத்தர் முதலியோர் புகழ,

219. பல்மீன் நடுவண் பால்மதிபோல பலபிரகளுக்கு நடுவிருந்த பால் போலும் ஒளியையுடைய கலேநிறைந்த மற்போல,

220. இன் நகை ஆயமோடு இருந்தோன் குறுகி - இயலிசைகூடத் தாலும், இனிய மொழிகளாலும் இனியபழக்கத்தையைச் செய்யும் சிரனோடே இருந்தவினேயனுகி,

கலேகள் நிறைந்திருந்தமைபற்றித் தலேவற்கு ஈண்டு மத உவமையாயிற்று.

221-2. பைங்கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன அம் கோடு செறிந்த அவிழ்ந்து வீங்கு இவலின் — பசியகண்களேயுடைய கரியகுரங்கு பாம்பின் தலே

---

* திருக்குறள், 714.

யைப் பிடித்தகாலத்து அப்பாம்பு ஒருகாலிறுகவும் ஒருகால் நெகிழவும் அதன் கையைச் சுற்றுமாறுபோன்ற அழகினையுடைய தண்டிடத்தே செறியச் சுற்றின நெகிழவேண்டுமிடத்து நெகிழ்த்தும் இறுகவேண்டுமிடத்து இறுகியும் நரம்பு துவக்கும் வார்க்கட்டினையும்,

223. [மணிகிரைத் தன்ன வனப்பின்வா யமைத்து:]

மணி கிரைத்தன்ன வனப்பின்—இரண்டுவிளிம்புஞ் சேரத்தைத்துமூடுக் கின ஆணிகளாலே மணியை கிரைத்துவைத்தாலொத்த அழகினையும்,

வாயமைத்து—பொருந்தப்பண்ணி,

224. வயிறு சேர்பு ஒழுகிய வகை அமை அகளத்து—வயிறுகூர்ந்து ஒழுங்குபட்ட தொழில்வகை யமைத்த பத்தரினையும்,

வயிறு - பத்தரினது. தாழிபோலப் புடைபட்டிருத்தலின், அகளமென்றார்.

225-6. கானம் குமிழின் கனி நிறம் கடுப்ப புகழ் வினை பொலித்த பச்சையொடு—காட்டிடத்துக் குமிழினுடைய பழத்தினது நிறத்தையொப்பப் புகழப்படுந் தொழில்களை கைத்தாழிலாற் பொலிவுபெற்ற போர்வையோடே,

226-7. [தேம்பெய், தமிழ்தூபொதிக் திலிற்று மடங்குபுரி நரம்பின் :]

தேம் பெய்து புரி அடங்கு நரம்பின்—தேனெழுகுகின்ற தன்மையைத் தன்னிடத்தே பெய்துகொண்டு முறுக்கடங்கின நரம்பினையுமுடைய,

அமிழ்து பொதிந்து இலிற்றும் நரம்பு—அமிழ்தத்தைத் தன்னிடத்தே பொதிந்து ஒழுகிக்கும் நரம்பு,

இஃது ஓசையினிமைக்குக் கூறிற்று. *"தீந்தே, ணணிபெற வொழுகியன்ன வமிழ்துறழ் நரம்பி னல்யாழ்" என்றார் பிறரும்.

228. பாடு துறை முற்றிய—நீர் பாடுந்துறைகளெல்லாம் முடியப்பாடுதற்கு,

முற்றிய - செய்யியவென்னும் வினையெச்சம்

228-9. படன் தெரி கேள்வி கூடு கொள் இன் இயம்—தனது பயன் விளங்குகின்ற இசைகளைத் தான் கூடுதல்கொண்ட இனியயாழை,

பச்சையோடே (226) வாயமைக்கப்பட்டு வனப்பினையும் (223) நிவவினையும் (222) அகளத்தினையும் (224) நரம்பினையுமுடைய (227) இன்னியமென முடிக்க.

229-30. [குரல்குரலாக, நூனெறி மரபிற் பண்ணி:] நூல் நெறி மரபின் குரல் குரல் ஆக பண்ணி—இசைநூல் கூறுகின்ற முறைமையாலே செம்பாலையாக வாசித்து,

பாடு துறை முற்றுதற்கு இன்னியத்தைக் குரல் குரலாகப் பண்ணியென முடிக்க.

230-31. [ஆனாது, முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவும்:] முதுவோர்க்கு ஆனாது முகிழ்த்த கையினை எனவும்— †அரசன் உவாத்தியாயன்

---

* சீவகசிந்தாமணி, 722.

† அரச னுவாத்தியான் முய்ந்தை தம்மு, னிகரில் குரவ ரிவரிவரைத், தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே, யாவருங் கண்ட நெறி." (ஆசாரக்கோவை, 17)

தாய் தந்தை தம்முன்முதலியோர்க்குப் பலகாலுங் குவித்த கைகளையுடையை யென்றும்,

232. இனையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்—வீரரெறிதற்கு மன மிழ்ந்து கொடுத்த மார்பினையுடையையென்றும்,

*"விருந்தாயினை யெறிதியென விரைமார்பகங் கொடுத்தாற், கரும்பூணற வெறிந்தாங்கவ னினதாழினி யெனவே" என்றார் பிறரும்.

இனையோர் மகளிருமாம்.

†"வணங்குசில பொருதகின் மணங்கம ழகல, மகளிர்க் கல்லது மலர்ப் பறி யலையே", ‡" மகளிர் மலைந்த வல்லது மள்ளர், மலைதல் போகிய சிலைத் தார் மார்ப" என்றார்.

233. எரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்—ஏரினையுடைய குடிமக்க ளுக்கு நிழல் செய்த செங்கோலையுடையையென்றும்,

234. தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும்—தேரினையுடைய அரசர் க்கு வெம்மை செய்த வேலையுடையை யென்றும்,

235. நீ சில மொழியா அளவை—§ சிலபுகழினைக் கூறுதற்கு முன்னே,

235-6. [மாஇல், காம்புசொலித் தன்ன வறுவை யுடீஇ.] காம்பு சொலி த்தன்ன மாசு இல் அறுவை உடீஇ—ஆங்கில் ஆடையையுரித்தாலொத்த மாசில் லாத உடையினை உடுக்கப்பண்ணி,

இனி ஆங்கின்முளியீற் பட்டையுமாம்.

237. பாம்பு வெருண்டு அன்ன தேறல் கல்கி—§பாம்பேறி மயக்கினுற் போல மயக்கின கட்டெளிவைத் தந்து,

238-10. [காவெரி யூட்டிய கவர்கணை தூணிப், பூவிரி கச்சைப் புக ழோன் றன்முன், பனிவரை மார்பன் பயந்த] கா எரி ஊட்டிய கணை கவர் தூணி பூ விரி கச்சை புகழோன் தன்முன் பனிவரை மார்பன் பயந்த—சாண்டவ னைத்தை நெருப்புண்ணும்படியெய்த கணையை உள்ளடக்கின ஆவாதிகை யினையும் பூத்தொழில் பரந்த கசசையினையுமுடைய அருச்சுனன் தமையனுகிய இமவான்போலுமார்பனை வீமசேனன் கண்ட,

240-41. நுண் பொருள் பலவலின் வழாஅ பல் வேறு அடிநிலை—கூரியபொருளினையுடைய மடைதானெறியிற் றப்பாத பலவேறுபாட்டையுடைய அடிநிலை,

242-4. [வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த, வினங்கதிர் ஞாயி றெள் ளுந் தோற்றத்து, வினங்குபொற் கலத்தில்:] விசும்பில் வாள் நிறம் கோள் மீன் சூழ்ந்த இள கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து வினங்கு பொன் கலத்தில்—ஆகாயத்தில் ஒளியையுடைத்தாகிய நிறத்தினையுடைய கோளாகிய மீன்கள் சூழ்ந்த இனைய கிரணங்களையுடைய ஞாயிற்றை இகழுந் தோற்றரவையுடைய வினங்குகின்ற பொற்கலத்திடத்தே,

விரும்புவன பேணி—நீவிரும்புவனவற்றை விரும்பியுட்கொண்டு,

245. ஆனு விருப்பின் தான் நின்று ஊட்டி—நும்மிடத்து மிகுகின்ற விருப்பத்தாலே தான் நின்று உண்ணப்பண்ணி,

---

* சீவகசிந்தாமணி, 2265. † பதிற்றுப்பத்து, 63.
‡ புறநானூறு, 10. § பாம்பு - பாம்பின்விடம்.

ஆனமரபினென்றும் பாடம்.

நீ லிலமொழியாவளவை(235) விரும்புவன பேணி(244) உடனி (236) நல்கி (237) அடிஉலேக் (241) கலத்தேயிட்டுத் (214) தான்கின்று ஊட்டியென்க.

246. திறல் சால் வென்றியொடு தெவ்வு புலம் அகற்றி :—வலியமைந்த வெற்றியோடே பகையைத் தத்தம் நிலத்தைக் கைவிட்டுப் போகப்பண்ணி,

247. விறல் வேல் மன்னர் மன் எயில் முருக்கி – வெற்றியையுடைத் தாகிய வேலினையுடைய முடிவேந்தர்மன்னும் அரண்களே யழித்து,

248. நயவர் பாணர் புன்கண் தீர்த்தபின் — அவ்விடங்களிற்பெற்ற பொருளாலே விரும்பிவந்தவர் புன்கண்மையையும், பாணர் புன்கண்மையையும் போக்கினபின்பு,

249. வயவர் தந்த வான் கேழ் நிதியமொடு – தன்படைத்தலைவர் மிக்கன வாய்க் கொண்டுவந்துதந்த நன்றாகிய நிறத்தினையுடைய பொருட்டிரளுடனே,

தன்படைத்தலைவர், குறுநிலமன்னரையும் அரசரையுமழித்து நயவர்க்கும் பாணர்க்குங்கொடுத்து மிக்குக்கொண்டுவந்த நிதியமென்க.

250-51. [பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி, யுருவ வான்மதி யூர்கொண் டாங்கு:] பருவ வானத்து உருவ வான் மதி பால் கதிர் பரப்பி ஊர்கொண் டாங்கு—கூதிர்க்காலத்தையுடைய வானிடத்தே வடிவுநிறைதலையுடைய வெள் ளிய மதி பால்போலுங்கிரணங்களைப் பரப்பிப் பரத்தலைக் கொண்டாற்போல,

252-3. கூர் உளி பொருத வடு ஆழ் தோன் 'குறடு ஆரம் சூழ்ந்த அயில் வாய் நேமியொடு – கூரிய சிற்றுளிகள் சென்று செத்தின உருக்களமுழுந்த வலியினையுடைய குறட்டிடத்திற்றைத்த ஆர்களைச்சூழ்ந்த சூட்டினையுடைய உருளையோடே,

குறடு - அச்சுக்கோக்குமிடம். அயில்வாய் - கூரியவாய்; என்றது சூட் டிற்கு ஆகுபெயர்.

254-5. [நிதர்னை முருக்கின் சேணெங்கு நெடுஞ்சினைத், ததர்பிணி யலிழ்ந்த தோற்றம்போல:] முருக்கின் சேண் ஒங்கு நெடு சினை ததர் னை நிதர் பிணி அலிழ்ந்த தோற்றம் போல—முருக்கினுடைய விசும்பிலே செல்ல வளர்ந்த நெடியகொம்பிற் செறிந்த அரும்புகள் வண்டிற்குப் பிணியவிழ்ந்த தோற்றவுபோல,

ததர் - கொத்துமாம். நிதர் - நெருங்குதலுமாம்; நிச்சிலியுமாம்.

256-8. [உள்ளரக் கொறிந்த வுருக்குறு போர்வைக், கருந்தொழில் வினை ஞர் கைவினைமுற்றி, யூர்ந்துபெயர் பெற்ற வெழினடைப் பாகரொடு:]

கரு தொழில் வினைஞர் கை வினை முற்றி உருக்குறு அரக்கு உள் எறிந்த போர்வை பாகர்—வலிய தொழிலைசெய்யுந் தச்சருடைய கையாற்செய்யும் உருக்களெல்லாம் முற்றுப்பெற்று உருக்கப்படுஞ் சாதிலிங்கம் உள்ளேரிம்ப வழித்த பலகையையுடைய பாகர்,

தேர்த்தட்டுவெளி மறையப் பாவின பலகையைப் போர்வையென்றார். அதன் மேலே சுற்றுச்சுவராகப் பலகைபாற்செய்த சுவரைப் பாகரென்றார். பாக ரையுடைப்பதேரைப் பாகரென்றார், ஆகுபெயரால்.

ஊர்ந்து பெயர் பெற்ற எழில் நடை பாகரொடு—ஏறிப்பார்த்து உண்மை யாக ஓட்டமுண்டென்று பெயர்பெற்ற அழகினையுடைத்தாகிய நடையினை யுடைய தேரோடே,

நேமியோடே (253) போர்வையையுடைய (256)) பாகரெனமுடிக்க.

259-60. மா செலவு ஒழிக்கும் மதன் உடை நோன்முரள் வாள் முகம் பாண்டில்—தன்சடுமையாற் குகரையின்செலவைப் பின்னேநிறுத்தும் வனப் புடைத்தாகிய வலியினையுடைய தாளினையும், ஒளியினையுடைத்தாகிய முகத் தினையுமுடைய நாரையெருதையும்,

260. வலவனெடு—அதனேச்செலுகதும் பாகனேடு,

260-61. [தரீஇ, யன்றே விடுக்குவன பரில்] பரில் தரீஇ அவன் அன்றே விடுக்கும் — யானை குதிரை அணிகலமுதலியபரில்களேயுந்தந்து அவன் அன்றேவிடுக்கும்.

நிதியத்தோடே (249) பாகரோடே (258) வலவனேடே பாண்டிலேயும் (260) பரிசிலேயுந் (261)தரீஇ (260) அவன் அன்றேவிடுக்குமென முடிக்க.

261-3. மெல் தோள் துகில் அணி அல்குல் துளங்கு இயல் மகளிர் அகில் உண விரிந்த அம மெல் கூந்தலின—மெல்லிய தோளினேயும், துகில் சூழ்ந்த அல்குலினேயும், அசைந்த இயல்பினேயுமுடைய மகளிர் அகிற்புகையை உண்ணும்படியாக விரிந்த அழகையுடைய மெல்லிய கூந்தல்போலே,

264-5. [மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பித், துணிமழை தவழுக் துயல்கழை நெடுங்கோட்டு]

துணி மழை மணி மயில் கலாபம் இடை மஞ்சு பரப்பி தவழும் கோடு—தெளிந்தமேகம் நீலமணிபோலும் மயிலினுடைய விரிந்த தோகைக்கு நடுவே தனது மஞ்சைப்பரப்பி, தவழுமலே,

சிறிதுநீர் உட்கொண்டு பக்கம் வெள்ளியமாசாயிருத்தலின், மேகம் மஞ் சைப்பரப்பியென்றார்.

இனி 'மணிமயில் கலாபம்' என்று பாடமாயின, மயில் தன்கலாபத்தை மஞ்சிடையிலே பரப்புதலேசெய்து துயல்கோடெனக. துயலல் - ஆடுதல்.

துயல் கழை நெடு கோடு—அசைகின்ற மூங்கிலேயுடைய நெடிய மலே யிடகுதையுடைய குறிஞ்சி (267)

266. [எறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னி] ஏற்று அரு உரும் எறிந்து இறந்த சென்னி கோடு (265)—ஏறுதற்கரிதாகிய உருமேறு தான் ஏறுதற்காக இடித்து வழிபாக்கிப்போன சிகரத்தையுடையமலே

இக்குதிரையேற்றரிதென்ப.

267. குறிஞ்சி கோமான்—குறிஞ்சியாகிய ஒழுக்கதையுடைய நிலத தின்கு அரசன்,

267-9. கொய் தளிர் கண்ணி செல் இசை நிலேயிய பண்பின் கல்லியக் கோடனே—கொய்யப்பட்ட தளிர்வீரவின மாலையினேயும், பிறரிடத்து நில்லாமற் போகின்ற புகழ் தன்னிடத்தே நிற்றற்குக் காரணமான குணத்தினேயுமுடைய கல்லியக்கோடனே,

269. நயந்தனிர் செலின் —விரும்பிச்செல்லின்,

முதுவாயிரவல (40) பெருமகன் (122) புரவலனுகிய (125) நல்லியக் கோடனை நயந்துகொள்கையோடே (126) முன்னுட்சென்றனமாக, இற்கால் (129) அழிபிவருத்தம்வீட (140) யானையோடே தேரெய்தி (142) யாம் அவணின்றும்மருங்கினேம்; இனி நீயிரும் (143) மூவேந்தரிடத்துச் செல்குவிராயின் (145) வஞ்சியும் வறிது; அதுவன்றி (50) மதுரையும்வறிது; அதுவன்றி (67) உறந்தையும் வறிது; அதுவன்றி (93) எழுவர்பூண்ட ஈகைச்செந்நுகம் (113) ஒருநான்குருவிய (115) குறிஞ்சிக் கோமானுகிய (267) நல்லியக்கோடனை நயந்தனிர்செலின் (269) வழியிற் பெறுமவற்றை யாங்கூறக்கேண்மின்; பட்டினம்படரின் (153) வயிண் வயிற்பெறுகுவிர் (163); அதன்பின்னர் வேலுசெய்திற் (173) அமைவரப் பெறுகுவிர் (177); அதன்பின்னர் அவண் *ஆரஞ செய்திற் (188) கலவையொடுபெறுகுவிர் (195); அவற்றைப்பெற்றபின், அவண் மூதூர் (201) செய்த்துமன்று; சிறிது ணணியதுவேயாயிருக்கும் (202); ஆண்டுச் சென்று முன்னர் அவண் கடைவாயிலேக்குறுகிப் (206) பின் அறிந்தோரேத்த (209) வயவரேத்த (212) அரிவையரேத்தப் (215) பரிசிலரேத்த (218) இருந்தோனையணுகிப் (220) பாடுதுறைமுற்றுதற்கு (228) இன்னியத்தைப் (229) பண்ணிச் (230) சையினேபென்றும் (231) மார்பினேயென்றும் (232) கோலினேயென்றும் (233) வேலினேயென்றும் (234) சிலமொழியா அளவை (235) அவன் (261) கீவிரும்புவனபேணி (244) உடீஇ (236) கல்கி (237) அடிநிலேக் (241) கலத்தேயிட்டுத் (241) தான்கின்று ஊட்டி (245) கிதியத்தோடே (249) பாகரோடே (258) வலவனேடே பாண்டிலேயும் (260) பரிசிலேயும் (261) தரீஇ (260) அன்றேவிடுக்கும் (261) என வினைமுடிவுசெய்க.

*ஒய்மாநாட்டு நல்லியக்கோடனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனூர்பாடிய சிறுபாணாற்றுப்படைத்து மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினர்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

வெண்பா.

1 அணியிழையார்க் காரணங் காகிமற் றந்தோய்
தணிமருந்துந் தாமேபா மென்ப—மணிமிடைபூ
ணிம்மென் முழவி னெயிற்பட் டினநாடல்
செம்மல் சிலேபொருத தோள்.

2 நெடுவரைச் சந்தன நெஞ்சங் குளிர்ப்பப்
படுமடும் பாம்பேர் மருங்கு—*லிடுகெனத்
யோடிய †மார்ப னுயர்ந்லியக்கோடன்
சூடிய கண்ணி சுடும்.

* 'ஏறுமாகாடு' என்றும் பிரதிபேதமுண்டு.
† 'இடுகிடையாய்' என்றும் பாடம். ‡ 'மார்பின்' என்றும் பாடம்.

தானைகாவலது

பெரும்பாணாற்றுப்படை



இருநிலந் விசும்பிற் பாயிருள் பருகிப்
பனைகான் றெழுதரு பல்கதிர்ப் பருதி
காய்சினக் திருகிய கடுந்திறல் வேனிற்
பாலிலை யொழிதத பராஅரைப் பாதிரி
5 வன்னிதழ் மாமலர் வயிற்றிடை வகுத்தத
னுள்ளகம் புரையு மூட்டுறு பச்சைப்'

---

* பெரும்பாணர் - குதலர் பாணர்முதலாய பெரிய இசைக்காரர்; (சில. 5 37. அடியார்.); "பெரும்பாணிருக்கையும்" (மது 342.)

1. காற்சிடி பதின்மூன்றெழுத்தால்வந்ததற்கும் (தொல் செய். சூ 50 - இன), சேரும் நிரையுமொன்றி நேரொன்றுசிரியத்தினி நிரைபொன்றுசிரியத்தினுமுயதற்கும் (வெ. வெ. வெ. 56 - பேர். உ) இவ்வடி மேற்கோள்.

2. "பகலுங்கியதுபோலப் படுசுடர் கல்சேர" (கலி. 119 - உ.) என்பதற்கும், 'கதிர் காற்றியும் - நிரணங்களைக் கக்கியும்' (கல். செய் "கண்ணியபாதி" யியலை.) எ - ம், 'கான்று என்னுமிடக்கர் அணிகுறிகதுப் பிறிதொரு பொருண்மேல் கிற்றலின் மறைக்கப்படாது; தன்பொருண்மேல் கின்றுழி மறைக்கப்படும்' (தொல். எச்ச. சூ. 47 - சே. உ, நன் - வி சூ 267; இ - வி. சூ. 168; நன். சூ. 267 - இராமானுச) எ - ம் இது மேற்கோள்

1 - 2. அடியெதுகைக்கும் வழக்கொடுபட்ட மரபு பிறழவும் செய்யுளின் பம்படின் அவ்வாறு செய்க (தொல். செய். சூ 93, வெ மர சூ 1 - உரை.) எ - ம், செய்தென்னும்வாய்பாடு செய்யாதினதெனச தெறபான்மை நிகழ்காலப் பொருளிலும் வரும் (தொல். வினை சூ 31 - உ; இ - வி. சூ 246· கல். செய். "பாய்நிரை", "கண்டகாட்சி" மயிலேறும்.) எ - ம், கட்டளையடிச்சிர்வஞையடி தொடுத்த அடியெதுகைக்கும் (தொல். செய் சூ. 93 - உ.) சமாநிபென்னுமலங் காரத்திற்கும். (தண்டி. பொது. 25; இ - வி சூ. 635) இவ்வடிகள் மேற்கோள். "வெயில்கான் றிருஞ்சித்தெழுவெங்கதிர்ச்செல்வன்" (கூர்ம. இராவண வதை. 17). வீட்டெம்பெருமானுடைக்கைக்கு இவ்வடிகள் உதாரணமாக்காட்டப் பறும்; (நன். சூ. 269 - இராமானுச)

பாடபேதம். ஒழிந்தபனைசை.

பாடவிரித்தல்

பாலைத்தலனுளம.

பாட

பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக்
கருவிருந் தன்ன கண்கூடு செறிதுனை
யுருக்கி யன்ன பொருத்துறு போர்வைச்
சுனைவறந் தன்ன விருடூங்கு வறுவாய்ப்
பிறைபிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை
நெடும்பணைத் திரடோண் மடந்தை முன்கைக்
சூறுங்தொடி யேய்க்கு மெலிந்துவிங்கு நிவவின்
மணிவார்ந் தன்ன மாயிரு மருப்பிற்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
நெடையமை கேள்வி யிடவயிற் றழீஇ
வெற்றெறற் கனலியொடு மதிவலந் திரிதருந்
தண்கடல் வரைப்பிற் சுங்குகர்ப் பெருது
பொழிமழை துறந்த புகைவேப் குன்றத்துப்
பழுமரந் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண
பெருவறங் கூர்ந்த கானங் கல்லெனக்
கருவி வானந் துளிசொரிந் தாங்குப்

---

7. பா. பாளையின்பசும்பூ, பாளையின்பசுங்காய்.

8. பா. சிறுதனை.

7 - 8. அன்ன, மெய்யுவமவுருபு; (தொல். உவம. சூ. 13 - இன. மேற்.)

9. 'வியியுறுபோர்வை' என்பதற்குத் தெரியாமற் போர்த்தபோர்வை யெனப் பொருள்கூறி இவ்வடியைமேற்கோள்காட்டினார்; (தீவகு. 559 - ந.)

10. வறுவாய்: பொருந. 12.

13. ஏய்க்குமென்பது, உவமவுருபு (தொல். உவம. சூ. 17 - இள) எ - ம், வினையுவமவுருபு (ஷி ஷி ஷி 12 - பேர்.) எ - ம் இது மேற்கோள்.

12 - 3. பொருந. 14 - 5; மலை. 21.

15 - 6. சிறுபாண். 34 - 5 ஆம் அடிகளின்குறிப்பைப்பார்க்க.

17. பா. வெங்கதிர்க்கனலி, வெந்திறற்கனலி.

18. பா. தண்கடல்வையத்து.

17 - 8. முக்காலத்துமுள்ள இயல்பையுடையபொருளை நிகழுங்காலத்து மெய்ம்மிலைப்பொதச்சொல்லாற்சொல்லவேண்டும் (தொல். வினை. சூ. 43 - ந; இ - வி. சூ. 303.) என்பதற்கு இவை மேற்கோள்.

20. பொருந. 64 - ஆம் அடிக்குறிப்பைப்பார்க்க.

24. பா. தளிசொரிந்தாங்கு.

பழம்பகை கூர்ந்தவெம் மிரும்பே ரொக்கலொடு
வழங்கத் தவாஅப் பெருவள னெய்தி
வாலுளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்
டியாமவ னின்றும் வருது நீயிரு
மிருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்த்
திரைதரு மரபி னுரவோ னும்பன்
மலிர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கு
மூவருமுழங்கு தானை மூவ ருள்ளு
மிலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பி
னல்லது கடிந்த வறம்புரி செங்கோற்
பல்வேற் றிரையற் படார்குவி ராயிற்
கேளவ னிலையே கெடுகின் னவல
மத்தஞ் செல்வோ ரலமத் தாக்கிக்
கைப்பொருள் வெளவுங் களவோர் வாழ்க்கைக
கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புல
முருமு முரறு தரவுந் தப்பா
காட்டுமாவு முறுகண் செப்பா வேட்டாங்
கசைவுழி யசைஇ நசைவுழித் தங்கிச்
செல்மோ விரவல சிறக்கநின் னுள்ளங்
கொழுஞ்சூட் டருந்திய திருந்துநிலை யாரத்து
முழவி னன்ன முழுமர வுருளி
யெழூஉப்புணர்ந் தன்ன பருஉக்கை நோன்பார்
மாரிக் குன்ற மழைசுமந் தன்ன
வாரை வேய்ந்த வறைவாய்ச் சகடம்

---

25. பா. என்னிரும்பேர்.
28. மு. சிறுபாண். 143; மலை. 53.
27 - 8. சிறுபாண். 142 - 3 ஆம் அடிகளின்குறிப்பைப்பார்க்க.
30. பா. புறங்கடை.
33=பொருந. 54; மு. புறநா. 35 - அடி 4.
36. பா. அல்லவை.
38=மது. 208.
39 - 44. சருத்த: மலை. 17 - 8; கலி. 12. 5 - 13.
50=மு. அகநா. 301 - அடி. 7. பா. வார்வைவேய்ந்த.

வேழன் காவலர் சூரம்பை யேய்ப்பத்
கோழி சேக்குங் கூடுடைப் புதவின்
முனைபெயிற் றிரும்பிடி முழங்கா னோக்குஞ்
தினையரைச் சிறுர னாங்கத் தூக்கி
நாடக மகளிர் ராடுகளத் தெடுத்த
விசிவிக் கின்னிய கடிபபக் கயிறுபிணித்துக்
காடி வைதத கலனுடை மூக்கின்
மாவுடை மகடூஉப் பகடுபுறங் ஞரப்பக்
கோட்டிணர் வேம்பி னேட்டிலை மிடைந்த
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த தினிதேர்ண்
முடலை பாகதை முழுவலி மாக்கள
சிறுதினைக கொடுதை நெறிபட நிரைதத
பெருங்கயிற் றெழுதை மருங்கிற் காப்பச்
சில்பத வுணவின் கொள்ளை சாற்றிப்
பல்லெருத துமணர் பதிபோகு நெடுநெறி
யெலலிடைக கழியுகர்க் கேம மாக
மலியவுங் கடலவு மாண்பயக தரூஉ
மரும்பொரு ளருததுங் திருதுதொடை நோன்ரு
ளடிபுதை யரண மெய்திப படம்புக்குப்
பொருகணை தொலைசெய புண்டீர் மார்பின்
விரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாள்
வரையூர பாம்பிற் பூண்டுபுடை தூங்கச
சுரிகை நுழைநத சுற்றுவிங்கு செறிவுடைக
கருவி லோசிய கண்ணக னெழ்தோட்
கடம்பமா நெடுவே ளன்ன மீளி
யுடம்பிடித தடகைை யோடா வம்பலா
தடவுநிலைப் பலவின் முழுமுதற் கொண்ட

---

52. பா. கூட்டுடை.

60 - 61. மு நெடுஞல். 31 - 2.

63 - 5. ஒழுகையும் உமணரும் · நிறபாண். 55.

69. படம்புகுதல். மூல்லை. 66.

73. "சுரிகையம்பூகசநிடைக்கோததவாங்கி" (நீவந. 698. மேற்.)

75. கடம்பமர்நெடுவேள்: முருகு. 225 - ஆம அடிக்குறிப்பைப்பார்க்க.

75 - 6. உவமையிற் பால்மயங்கியதற்கு இலை மேற்கோள் (தொல் உவம. சூ. 6 · பேர்.)

இருவரைப் பெரும்பழங் கடுப்ப நெரிபத்
புளிர்ப்பொறை தாங்கிய வடுவரை நோன்புறத்
தினர்ச்செகிற் கழுதைச் சாத்தொடு வழங்கு
மூல்குடைப் பெருவழிக் கவலைக் காக்கும்
வில்லுடை வைப்பின் வியன்காட் டியவி
னீளரை யிலவத் தலர்குவினை பயந்த
பூளையம் பசுர் ிரிர் தன்ன
னிப்புற வணிலொடு கருப்பை யாடா
தியாற்றறல் புரையும் வெரி நடைக் கொழுமடல்
வேற்றலே யன்ன வைக்றதி நெடுந்தக
ரீத்திலே வேய்ந்த வெர்ப்புறக் குரம்பை
மான்றேற் பள்ளி மகவொடு முடங்கி
ரீன்பிணை வொழிப்ப ோகி நோன்கா
முரும்புகலே யாத்தி ருந்துகணை விழுக்கோ
ணுளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
யிருநிலக் கரம்பைப் படுநீ ருடி
றண்பு லடக்கிய வெண்ப லெயிற்றியர்

---

78. பாடுடுப்பதெறியல், கடுப்பமிரியல்.

79 - 80. பா. நோன்புறக்கணர்ச்செலி.

83. பா. நீள்வரை.

83 - 5. இலவங்காய் அணிலுக்கு உவமை· (சீவக. 1701.)

87. "கருவிநிறிகொணெறியிலெயிற்தி" (கல். செய். "பொருப்பு")

88. தொல். மரபு. சூ. 87 - உரை, மேற்.

87 - 8. பா. நெடுந்தோட்டீர்லே, நெடுந்திடீர்நிலே

85 - 8. "ஈந்துமேய்ந்நிடைக், கருப்பையாடாக்குடில்களுல்வ" (ஆனைக் காப்பு. காடு 102.)

83 - 8. (தொல். உவம. சூ. 34 - உரை, மேற்.)

89. மான்றேற்பள்ளி: "வரியதட் படுத்த சேக்கைத் தெரியிழை" (அகநா. 58 - 4.) மகவென்பது மக்களில் ஆண்பாலினமைப்பெயர்: (தொல். மரபு. சூ. 23 - உரை, மேற்.)

88 - 9. சுத்திலேவேய்ந்தகுரம்பை, தோற்பள்ளி: (மது. 310.)

90. பிணை உயர்திணைப்பெண்பான் மரபுப்பெயர்: (தொல். மரபு. சூ. 61 உரை, மேற்.)

93. பா. இலிலைக்கரம்பை.

94. பா. கண்புலர்க்கிய.

95 பார்வை யாத்த பறைதாள் விளவி
னீழன் மூன்றி னிலவுமர் பெய்து
குறுங்கா ழுலக்கை யோச்சி நெடுங்கிணைற்று
வல்லூற் றுவரி தோண்டித் தொல்லே
முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி
100 வாரு தட்ட வாடுன் புழுக்கல்
வாடாத் தும்பை வயவர் பெருமக
னோடாத் தானை யொண்டொழிற் கழற்காற்
செவ்வரை நாடன் சென்னிய மெனினே
தெய்வ மடையிற் றேக்கிலைக் குவையிறும்
105 பைதீர் கடும்பொடு பதமிகப் பெறுகுவிர்
மானடி பொறித்த மயங்குதர் மருங்கின்
வான்மடி பொழுதி னீர்நசைஇக் குழித்த
வகழ்சூழ் பயம்பி னகத்தொளித் தொடுங்கிப்
புகழா வாகைப் பூவி னன்ன
110 வீளமருப் பேனம் வரவுபார்த் திருக்கு
மரைநாள் வேட்ட மழுங்கிற் பகனட்
பசுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித்
தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி
மூள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையு
115 நெடுஞ்செவிக் குறுமுயல் போக்கற வீளை
கடுங்கட் கானவர் கடறுகூட் டுண்ணு
மருஞ்சுர மிறந்த வம்பர்ப் பருந்துபட

---

95. பா. பறைத்தாள்.

89 - 96. தொழிற்றன்மையணி : (தண்டி. பொருளணி. சூ. 3 மேற்.)

97. ஓச்சி - குத்தி; (பெரும்பாண். 118.)

100. பா. ஆறுதட்ட.

102. ஓடாதத்தானே : "ஓடாததானேயுருமுக்குரலோடையானே" (ஜீவக. 7); "ஓடாததானே ளனெனன் முளனெருவன்" (நள. சுயம். 18.) பா. ஒண் பொறிச்.

104. இலே - மரத்துறுப்பினைச்சொல்லும்வாய்பாடு ; (தொல். மரபு. சூ. 87 - உரை. ஈ. மேற்.)

103 - 5. ஒத்தகருத்து : மலே. 164 - 9.

107. பா. 'வானமடி' என்றும் கொள்ள இடமுண்டு:

110. பா. வினையெயிற்றேனவரவு.

117. பா. இறத்தவம்பர்.

வொன்னுத் தெவ்வர் நடுங்க வோச்சி
வைவ்நுதி மழுங்கிய புலவுவா யெஃகம்
வடிமணிப் பலகையொடு நிரைஇ முடிநாட்
சாபஞ் சார்த்திய கணைதுஞ்சு வியனக
ரூகம் வேய்ந்த வுபர்நிலை வரைப்பின்
வரைத்தேன் புரையுங் கவைக்கடைப் புதையொடு
கடுந்துடி தூங்குங் கணைக்காற் பந்தர்த்
தொடர்நா யாத்த தூணராங் கடிநகர்
வாழ்முளை வேலிச் சூழ்மினைப் படப்பைக்
கொடுதுகந் தழீஇய புதவிற் செங்நிலை
நெடுநுதி வபக்கழு நிரைத்த வாயிற்
கொடுவி லெயினர் குறும்பிற் சேப்பிற்
களர்வள நீக்கின் காழ்கண் டன்ன
கவல்வினை நெல்லின் செவ்வழிச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சு அடும்பின்
வறைகால் யாத்தது வயின்றொறும் பெறுகுவிர்
யானை தாக்கினு மரவுமேற் செலினு
நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினுஞ்
சூன்மகண் மாறு மறம்பூண் வாழ்க்கை
வலிக்கூட் டுணவின் வாட்குடிப் பிறந்த
புலிப்போத் தன்ன புல்லணற் காளை
சென்னி யன்ன கருவிற் சுற்றமொடு
கேளா மன்னர் கடிபுலம் புக்கு
ஞாளா தந்து நறவுநொடை தொலைச்சி

---

121. பா. சாத்திய.

132. "மனவனைய மென்சூன் மடவுடும்பு" (சீவக. 2781.) ஞமலி, திசைச்சொல்: (தொல். மொழி. சூ. 31 - ந; இ - ஸி. சூ. 27 - மேற்.)

135. நீனிறவிசும்பு: (முருகு. 116; மலை. 1.)

134 - 6 அணங்கும் விலங்கும் பொருளாக அச்சம்பிறத்தல் இயல்பென் பதற்கு இவ்வடிகள்மேற்கோள்; (தொல். மெய்ப்பாடு. சூ. 8 - உரை.)

138. போத்தென்னும்பெயர் இளமைக்கும் ஆண்பார்க்கும்முறையேயுரித் து: (தொல். மரபு. சூ. 24, 41 - உரை, மேற்.) பா. அணர்ச்சினை.

139. பா. செச்சாய்.

141, ஞாளா: "ஞாளித்தண்பவர் ஞாளாமேயும்" (குறுந். 104.)

பில்லறி கள்ளின் றேம்பி பருகி
மல்லன் மன்றத்து மதவிடை கெண்டி
மடிவாய்த் தண்ணுமை கடுவட் கிலிப்பச்
சிலைவி லெறும்த்தோ ளோச்சி வலஞ்சினோடூஉப்
பகன்மெழ் தூங்கூர் தூங்கா வீருக்கை
முரண்டலை கழிந்த பின்றை மறிய
குணகரை யாத்த குறுங்காற் குரம்பைச்
செற்றை வாயிற் செறிகழிக் கதவிற்
கற்றை வேப்ப கழிதலைச் சாம்பி
னதனோன் றுஞ்சுங் காப்பி னுதள
நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றிற்
கொடுமுகத் தருமைபொடு வெள்ளே சேக்கு
மிடுமுள் வேலி யெருப்படு வரைப்பி
னள்ளிரு ளிடியப் புள்ளெழப் போகிப்
புலிக்குரன் மதத மொலிப்ப வாங்கி
யாம்பி வான்முனி முன்ன கூம்புமுகை
புறையமை தீர்த்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகாவாப் குழிசி பூநெசுமட் டிரீஇ

---

142. தோப்பி "தோப்பிக்கள்ளொடுஞரூஉப்பலி கொடுக்கும்" (அகநா. 35 - அடி 9.) பா தொப்பியென்றுங்கொள்ள இடமுண்டு

143 மத (இ - வி. சூ 282 - மேற்) விடை (முருகு. 232.) பார் விடைதெண்டி.

142 - 3. "நறவுந் தொடுமின விடையும் வீழ்மின" (புறநா. 262, 1). செக்கண் மழவிடை கெண்டிச சிலைமறவர். வெயரண மகிழ்ந்து விழவயர" (பெரும்பொருள்.)

146. பா. முனைதலேயிருகை.

134 - 46 மறங்கடைகூட்டிய குடிநிலையென்னும் புறத்திணைத்துறைக்கு இவை மேற்கோள்; (தொல் புறத்திணை. சூ. 4 - இள.)

151 - 2. உதள் (தொல் மரபு சூ. 47 - உரை, மேற்.)

155. "புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின" (மலை. 448.)

156. "கடையலகு சுரல வான்னரி யுழுவை" (அகநா. 277 - 5); "இரும் புலிக் கிரிச கருங்கட் செந்தொடு, காட்டயிர் கடைகுரல் கேட்டொறும் வெரூஉம்" (தொல். அகத் சூ. 41 - உ; நற்றி. சூ 182 - மேற்.); "தயிர்கடையுமோசை, கொல்புலிமுதுக்குறையின்னவயின்றொறுங்குளிரும்" (நைடதம், காட்டுப். 15.)

157 - 8. தயிர்க்குஞ்சி: "அயினெதிரியபோற், கிடந்தனவாழியிர்" (கல். செய். "கலியாட்டாலை")

160 வானமாரி மாறு மன்மா மேனிச்
தேனிருஞ் சுழல் துவல்வரும் காந்திப், பணைத்தோட்
குறுகெறித் தொண்ட கூந்த லாய்மக
னலினமே யுணவிற் கினையுட னருத்தி
செங்கிலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளா
165 னொருமை நல்லான் கருநாகு பெறூஉ
மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பி
னிருங்கிளை ஞெண்டின் னிறுபார்ப் பன்ன
பசுஞ்சினை மூரல் பாலொடும் பெறுகுவிர்
தொடுதோன் மீஇய விவிவாழ் நோனடி
170 விழுத்தண் டேன்றிய மழுத்தின் வன்கை
யுறிக்கா லூர்ந்த மறுப்படு மயிர்ச்சுவன்
மெம்பா வுரைத்த வோரி யோங்குமிசைச்
சேட்டவுங் கொடியவும் விரைஇக் காட்ட
பன்மு மிடைந்த படலைக் கண்ணி
175 பொன்றம ருடுக்கைக் கூழா ரிடையன்
கன்றமர் நிரையொடு கானத் தல்கி
யந்து ணனிர்புகை கமழக் கைம்முயன்று
ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெமிழிச்
செந்தித் தொட்ட கருந்தினைக் குமுலி
180 னின்தீம் பாலி முணியிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை யினைசெத் தோர்க்கும்
புல்லார் வியன்புலம் போகி முள்ளுடுத்
185 தெழுகா டோன்றிய தொழுவடை வரைப்பிற்
பிடிக்கணத் தன்ன குரிசுடை முன்றிற்
களிற்றுத்தாள் புரையுங் கிரிமரப் பந்தர்க்

164, "செங்கிலைப்பசும்பொற்றேரும்" (சீவக. 488.)

165. நாகு : தொல். மரபு. சூ. 26, 62 - உரை, மேற்.

166. அகநா. 274; சேக. 120.

174. பா. பன்மலைடுத்திய, பன்மலர்மிடைந்த.

177. பா. புகையிறப்ப.

179. 'தொட்ட' என்றும் கொள்ள இடமுண்டு.

183. பின்னர்ப்பதனை: "மழலைப்பல்காற்பறவை" (புறத். கொளியமை.28.)

குறுஞ்சாட் டெருளொடு கலப்பை சார்த்தி
நெடுஞ்சுவர் பறைந்த புன்கரும் கொட்டில்
பருவ வானத்துப் பாமழை கடுப்பக்
கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்
நெடுங்குரற் பூளைப் பூவி னன்ன
குறுந்தாள் வரகின் குறளவிழ்ச் சொன்றிப்
புகரினர் வேய்கை வீகண் டன்ன
வவலை வான்புழுக் கட்டிப் பயில்வுற்
றின்சுவை மூரற் பெறுகுவிர் ஞாங்கர்க்
குடிநிறை வல்சிச் செஞ்சா அழுவர்
நடைநவில் பெரும்பகடு புகவிற் பூட்டிப்
பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சி
ஓடுப்புமுக முழுக்கொழு.மூழ்க வுன்றித்
தொடுப்பெறிந் தழுத வுளர்படு தடவை
யரிபுகு பொழுதி னிரியல் போகி
வண்ணக் கடம்பி னறுமல ரன்ன
வளரிளம் பிள்ளை தழீ இக் குறுங்காஞ்
சறையணற் குறும்பூழ் கட்சி சேக்கும்
வன்புல மிறந்த பின்றை மென்றோள்
மிதியுலக் கொல்லன் முறிகொடிற் றன்ன
கவைத்தா ளவல னளற்றவள் சிதையப்
பைபஞ்சாய் சொன்ற மண்படு மருப்பிற்
காரேறு பொருத கண்ணகன் செறுவி
னுழாஅ துண்டொளி நிகழிய விணைஞர்

---

188. பா. சாட்டுருளி.
190. பா. பாயமழை.
192. பா. செடுங்காற்.
194 - 5. மலை. 434 - 6.
195 - 6. பா. அட்டிப் பயற்றின் மீஞ்சுவை மூரற்.
199. "வேழம், வறனுழாஞ்சில்போன் மருப்பூன்றிலஞ்சே" (கலி. 8); "தும்புடைத் தடக்கை வாயொடு தமிந்து, நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரளு" (புறநா. 19.)
200. "உடுப்புமுகத்த கூர்ங்கொழுவி னுழாஅற்செயல்" (கூர்ம. வருணச். 15.)
209. பா. பைஞ்சாய்.
211. ம. உழுதுண்.

முடிநா றணிந்திய கெடுநீர்ச் செறுவிற்
கனைஞர் தந்த கணைக்கா னெய்தல்
கட்சமழ் புதுப்பூ முனையின் மூட்டினை
முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளின்
கொடுங்கான் மாமலர் கொய்துகொண் டவண
பஞ்சாய்க் கோரை பல்லிற் சுவட்டிப்
புணர்கார்ப் பெய்த புனலின் கண்ணி
யீருடை யிருக்கலி யாரச் சூடிப்
பொன்காண் கட்டளை கடுப்பக் கண்பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பி
னிரும்புவடித் தன்ன மடியா மென்றோற்
கருங்கை விளைஞர் காதலஞ் சிறுஅர்
பழஞ்சோற் றமலை முனை இ வரம்பிற்
புதுவை வேய்ந்த கவிகுடின் முன்றி
லவலெறி யுலக்கைப் பாடுவிறந் தயல
கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉ
நீங்கா யாணர் வாங்குகதிர்க் கழனிக்
கடுப்புடைப் பறவைச் சாதி யன்ன
பைதற விளைந்த பொருஞ்செங் கெல்லின்
றாம்புடைத் திரடா டுமித்த விளைஞர்
பாம்புறை மருதி னேங்குவிண் ணீழற்
பலிபெறு வியன்களை மலிய வேற்றிக்
கணங்கொள் சுற்றமொடு கைபுனைந் தாடுக்
தினங்கையம் பூகந் திகிலடுத் தவைசோற்
றிலம்பி வானூல் வலந்த மருங்கிற்

---

220. கண்பு : மது. 172. பா. சண்பின்.

220 - 21. இரட்டைக்கினவி இரட்டைவழித்தாகுதற்கு மேற்கோள்; (தொல். உவம. சூ. 22 - உரை)

226. விறத்த : (தொல். உரி. சூ. 50 - சே. ந; இ. வி. சூ. 283 - மேற்.)

226 - 7. உவக்கையிடிக்குப் பறவைகள் அஞ்சல்; "பாசவலிடித்த பெரு ங்காழுலக்கைக், கடிதிடிவெரீஇய கமஞ்சூல்வெண்குருகு" (அகநா. 141.)

230. பா. நெய்தெல்லின்.

229 - 30. "மென்செல்லெல்லி, னம்பணவனவை யுறைகுவித்தன்ன, வெண்கூவிளை வெரிந்ணை யுஞ்சம்" (பதிற். 71)

234. பா. கைவினைச்து.

குழுமுளிப் பொரிவின் மூழுரூஉ நெல்லிற்
பலரோ பிழிந்த பின்றைத் தடைஇய
வையுங் குரும்பு நீக்கிப் பைதறச்
சுடகாற் றெறிந்த சுப்பை வடபாற்
செம்பொன் மலையிற் றெப்பத் தோன்றுந்
தண்பணை தழீஇ யதளா விருக்கைப்
பகட்டா னீன்ற கொடுநடைக் குழவிக்
கவைத்தாம்பு தொடுத்த காழூன் றல்கு
லேனி வெப்பா நீணெடு மார்பின்
முகடுதமித் தடுக்கிய பழம்பன் னுணவிற்
குமரி மூத்த கூடோங்கு நல்லிற்
றச்சர் செருவர் நச்சப் புனைந்த
வூசா றற்றே ருருட்டிய புதல்வர்
தளர்நடை வருத்தம் வீட வலர்முலைச்
செவிலியம் பெண்டிர்த் தழீஇப் பாலார்ந்
தமலித் தஞ்சு மழகுடை நல்லிற்
றொல்பதி யறியாத் தளங்கா விருக்கை
மல்லற் பேரூர் மடியின் மடியா
வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவா ழுளின் வாட்டொடும் பெறுகுவிர்
மழைவிளை யாடுங் கழைவள ரடுக்கத்
தணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன்
கணஞ்சால் வேழங் கதழ்வும் முடங்
கெஞ்சிரஞ் சிலைக்குந் தஞ்சாக் கம்பலை

---

239. பா. தருப்போல்வி.

240 - 41. பொருந. 244.

242. மு. பொருந. 169.

243. பா. தளர்நடை.

243 - 4. முல்லை. 12.

248 - 9. "தச்சன்செய்த தொலையை, மூர்ற்றின்புரூஅ ஈ
ரீர்த்தின்புரூஉ மினையோர்" (குறுந். 61.)

256. அரசு - சேழி: (நெரீ. மரபு. சூ. 56 - உரை, மேற்.) பா. மினை யுங்கை.

259 - 60. "கரும்பினெல்லெளிற்றெதிரிளிரித்தம்" (நற்றிணை. 55), இரும்பினன்ன ..... குரலெள்ளெல்லை" (திருமுரு. திருமுரு. 11.)

வியை மறுகம் புகைசூ ழாவிதொறும்
கரும்பின் நீஞ்சாற விரும்பினிர்ப் மிசைமின்
வேழ மிசைத்த வெண்கோடி மிசைஇத்
தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
சூறியிறைக் குரம்பைப் பதியுடை முன்றிற்
கொடுங்காற் புன்னைக் கோடுதுமித் தியற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்தர்
மினையரு முதியருங் கினையுடன் றுவன்றிப்
புலவுதினைப் பகழியுஞ் சிலையு மானச்
செவ்வரிக் கயலொடு பச்சிருப் பிறழு
மையிருங் குட்டத்து மகவொடு வழங்கிக்
கோடை நீடினுங் குறைபட லறியாத்
தோடார் குளத்த கோடுகாத் திருக்குங்
கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேப்பி
னவையா னிசி யங்களித் தழவை
மலர்வாய்ப் பிழாவிற் புலா வாற்றிப்
பாம்புறை புற்றிற் குரும்பி யேய்க்கும்
பூம்புற நல்லடை பகர இத் தேம்பட
வெல்லீயு மிசவு மிருமுறை கழிப்பி
வல்வாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த
வெங்கா ரரியல் விரலி னறும்பிழி
தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவிர்
பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோற்
கோள்வல் பாண்மகன் றலைவளித் தியாத்த
நெடுங்கழைத் தூண்டி னடுங்க நாண்கொளீஇக்
கொடுவா யிரும்பின் மடிதலை புலம்பப்
பெறுபிசை கதுவிய போழ்வாய் வானை
சீர்நணிப் பிரம்பி னடுங்குழல் வெரூஉ
நீத்துடை நெடுங்கயந் தீப்பட மலர்ந்த
கடவு ளொண்பூ வடைத லோம்பி
யுறைகான் மாறிய வோங்குயர் நனந்தலை

268. பா. இனையுடன்குழீஇ.
286. பா. வருதலை.
290. ஐங். 51 - ஆ. மேற்.

யகலிரு வானத்துக் குறைவி லேய்ப்ப
வரக்கிதழ்ன் ஞலனொடு நீல மீடி
முரட்பூ மலிந்த முதுநீர்ப் பெய்கைக்
குறுக ரிட்ட கூம்புவிடு பன்மலர்
பெருநா ளமயத்துப் பிணையினிர் கழிமின்
செழுங்கன் றியாத்த திறுதாட் பந்தர்ப்
பைஞ்சேறு மெழுகிய படிவ னன்னகர்
மணியுறை கோழியொடு ஞமலி துன்ஞுது
வளவாய்க் கிள்ளை மறைவினி பயிற்று
மறைகாப் பாள ருறைபதிச் சேப்பிற்
பெருகல் வானத்து வடவயின் விளங்குஞ்
சிறுமீன் புரையுங் கற்பி னறுதுதல்
வளக்கை மகடூ வயினறிந் தட்ட
சுடர்க்கடைப் பறவைப் பெயர்ப்படு வத்தஞ்
சேதா நறுமோர் வெண்ணெயின் மாணனத்
தருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி யளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்
வண்ட லாயமொ டுண்டுறைத் தலீஇப்
புனலாடு மகளி ரிட்ட பொலங்குழை
யிரைதேர் மணிச்சிர லிரைசெத் தெறிக்தெனப்
புள்ளார் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது
கேள்வி யந்தண ருங்கட னிறுத்த
வேள்வித் தூணத் தசைஇ யவன
ரோதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனிற் பைபயத் தோன்று
நீர்ப்பெயற் நெல்லைப் போகிப் பாற்கேழ்
வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉ
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாட மோங்கிய மணன்மலி மறுகிற்
பரதர் மலிந்த பல்வேறு தெருவிற்

292 - 4. பலவிதமலர்களுக்கு இந்திரவில்; "வில்தார்" (புறநா.10, 36.)
305. பா. பெயர்ப்படுத்தம்.
318. பா. வையத்தோன்றும்.
319. பா. நீர்ப்பெயர்நெல்லை போகிப்பாற்கேழ்.

நிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பி
நெல்லுமு முகட்டொடு கறவை தின்ஞ
மேழகத் தகரோ டெனைஞங் கொட்குங்
கூழுடை நல்லிற் கொடும்பூண் மகளிர்
கொன்றை மென்சினைப் பனிதவழ் பலவோர்
பைங்கா ழல்கு னுண்டுகி னுடங்க
மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறக் தாஅம்
பீலி மஞ்ஞையி னியலிக் கால
தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்சிலை
வான்றேய் மாடத்து விரிப்பந் தசைஇக்
கைபுனை குறுக்கொடி தத்தப் பைபய
முத்த வார்மணற் பொற்கழங் காடும்
பட்டின மருங்கி னசையின் முட்டில்
பைங்கொடி நுடங்கும் பலர்புகு வாயிற்
செம்பூத் தாய செதுக்குடை முன்றிற்
கள்ளுடு மகளிர் வள்ள நுடக்கிய
வார்ந்துகு சின்னீர் வழிந்த குழம்பி
னீர்ஞ்சே றுடிய விரும்பல் குட்டிப்
பன்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது
நெண்மா வல்சி தீற்றிப் பண்ணட்
குழிநிறுத் தோம்பிய குறுந்தா ளேற்றைக்
கொழுநிணத் தடியொடு கூர்நரப் பெறுகுவிர்
வான மூன்றிய மதலை போல
வேணி சாத்திய வேற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேபா மாடத்
திரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி
யுரவுநீ ரழுவத் தோடுகலங் கரையுங்
துறைபிறக் கொழியப் போகிக் கறையடிக்

---

325. பா. தின்ஞது.

331. மகளிர் கடைக்கு மயில்களை· முருகு. 205 - ஆம் அடிக்குறிப் பைப்பார்க்க.

334. பா. கைப்புனை. பைப்பய.

335. "மகளிர், பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்" (புறநா. 36.)

346. சிவக 1895 - மேற்.

349 - 51. "இலக்குநீர் வரைப்பிற் கலம்கரை யினச்சமும்" (சிலப். 6. 141.)

குன்றமர்ந் யானை மருங்கு லேய்க்கும்
வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த
மஞ்சண் முன்றின் மணநாறு படப்பைத்
தண்டலை யுழவர் தனிமனைச் சேப்பிற்
சூழ்கோட் பலவின் சுஞ்சுளைப் பெரும் பழம்
வீழி நுழைக் குழவித் தீநீர்க்
கவைமுலை யிரும்பிடிக் கவுண்மருப் பேய்க்குங்
குலிமுதிர் வாழைக் கூனி வெண்பழம்
இரளைப் பெண்ணை நுங்கொடு பிறவுந்
தீம்பலி நுகர முனியிற் சேம்பின்
முளிப்புற முதிர்கிழங் கார்குளிர் பகற்பெயன்
மழைவீழ்ந் தன்ன மாத்தாட் கமுகின்
புடைசூழ் தெங்கின் முப்புடைத் திரள்கா
யாதுசெல் வம்பலர் காய்பசி தீரச்
சோறடு குழிசி யிளக விழுஉம்
வியா யாணர் வளங்கெழு பாக்கத்துப்
பன்மர நீளிடைப் போகி நன்னகர்
விண்டோய் மாடத்து விளங்குசுவ ருடுத்த
வாடா வள்ளியின் வளம்பல தருஉ
நாடுபல கழிந்த பின்றை நீடுகுலைக்
காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னுங்கண்
வெயிலுழை பறியாக் குயிலுழை பொதும்பர்க்
குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்
பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூக்
காரகற் கூவியன் பாகொடு பிடித்த

---

357. குழவி ஓரறிவுயிரின் இளமைப்பெயர். (தொல். மரபு. சூ. 24 - உரை, மேற்.)

363. "மேகமேய்க்கு மினங்கமுகம்பொழில்" (தே. பிரமபுரம், செப். "விளங்கயனூர்")

370. "வாடாவள்ளியங்காடு" (குறுந். 216); "வாடாவள்ளிவயவர்" (தொல். புறத்திணை. 5.)

374. (மு. மணி. 4 : 5); "கதிர்தழைகல்லா மரம்பயில்கடமிசை" (புறநா. 21.)

377. லெவி. 5 : 24 - அடியார். மேற்.

வினைசூழ் வட்டம் பால்கலந் தவைபோ
னிழறூம் வார்மண னீர்முகத் துறைப்பப்
380. புனல்கால் கழீஇய பொழிறொறுங் திரள்காற்
சோலைக் கமுகின் சூல்வயிற் றன்ன
நீலப் பைங்குடங் தொலைச்சி நாளும்
பெருமலி முருக்கை மரீஇச் சிறுகோட்டுக்
குழவித் திங்கட் கோணேர்ந் தாங்குச்
385 கீறவுவா யமைகத சுரும்புசூழ் சுடர்முக
னறவுபெயர்த் தமைத்த நல்லெழிலின் மழைக்கண்
மடவரன் மகளிரொடு பகல்வீளை யாடிப்
பெறற்கருங் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைச்
390 செவ்விகொள் பவரோ டசைஇ யப்பயி
னருந்திறற் கடவுள் வாழ்த்திச் சிறிதுநங்
கருங்கோட் டின்னிய மிபரினிர் காதிலிர்
காழோ ரிகழ்பத நோக்கிக ழீஇ
நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளங்
395 கடுஞ்சூன் மந்தி கவருங் காவிற
களிறுகத னடக்கிய வெளிறில கந்திற்
றிண்டேர் சூழித்த சூண்டுநெடுந் தெருவிற்
படைதொலி பறியா மைந்துமலி பெரும்புகழ்க்
கடைகால் யாத்த பல்குடி கெழீஇக்
400 கொடையுங் கோளுங் வழங்குகர்த் தகிதக
வடையா வாயின்·மிளைசூழ் படப்பை
நீனிற வருவி னெடிபோன் கொப்பூழ
நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த்த
தாமரைப் பொகுட்டிற் காண்வர்த தோன்றிச

---

380. "புனல்கால் கழீஇய மணல்வா புறவு" (மலை. 48.)

390. *பா. கொள்பவரொடும்

392. கன். சூ. 350 - மயிலை; கன் - னி சூ 351 - மேற்.

394. "செய்ம்மலி கவளங்கொள்ளா" (கீவக 1076.); "செய்ம்மிதி கவ னன் தெவிட்டினின் றடாக்கு நிழல்சுளி தறுகண்மால் யானை". "கைம்முகச் செடுத்த செய்ம்மிதி கவளங் களித்தெறி மும்மதக் களிறு" (கூர்ம. சூரியன் மரபு. 8, 22) பா. செய்மிதி.

402. "கீனிறவுருவினேமியோனும்" (பதிற். 58 - 15.)

402 - 4. முருகு. 164 - 5.

சுடும ணெங்கிய நெடுநகர் வரைப்பி
னிழுமென் புள்ளி னீண்டுகொளைத் தொழுதிக்
கொழுமென் சினைய கோளி யுள்ளும்
பழுமீக் கூறும் பலாஅப் போலப்
புலவுக் கடலுடுத்த வானஞ் சூடிய
மலர்தலை யுலகத் துள்ளும் பலர்தொழ
விழவுமேம் பட்ட பழவிறன் மூதூர்
ரவ்வாய் வளர்பிறை சூடிச் செவ்வா
யந்தி வானத் தாடுமழை கடுப்ப
வெண்கோட் டிரும்பிணங் குநுதி யீர்ப்ப
வீரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப்
போரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தே
ராராச் செருவி னீவர் போல
வடங்காத தாணோ டுடன்றுமேல் வந்த
வொன்னுத் தெவ்வ ருலவிடத் தார்த்துக்
கசஞ யோனே கைவண் டோன்ற
னச்சிச் சென்றோர்க் கேம மாகிய
வளியுந் தெறலு மெளிய வாகலின்
மலிந்தோர் தேள மன்றம் பாழ்பட
நயந்தோர் தேள நன்பொன் பூப்ப
நட்புக்கொளல் வேண்டி நயந்திசி னோருந்
துப்புக்கொளல் வேண்டிய துணையி லோருங்

405. பா. நெடுமதில்வரைப்பு.

102 - 5. "மாயோன் கொப்பூழ் மலர்த்த தாமரைப், பூவொடு புரையுஞ் சீறூர் பூவி, னிதழகத் தினைய தெருவே யிதழகத், தரும்பொகுட் டினையதே யண்ணல் கோயில்" (பரிபாடல்); இராசகிரியகரத்தைத் தாமரைமலராகவும அந்தகரின் உறைப்புக்களே அம்மலரின் உறைப்புக்களாகவும் (பரிகேகையிற் 50 - அடிகளாற் கூறியிருத்தல் இங்கே அறிந்து மகிழத்தக்கது; (3 - மகத காண்டம், 3 - இராசகிரியம்புக்கது.)

407. பா. சினைய.

415. "சுரைம் பதின்மரும் பொருதுகளத் தொழிய" (புறநா. 2.)

419. மு. மலை 386.

421. பா. எமமாக.

422. பா. அளியுந்தெறலுந்தனக்கெளிய.

423 - 4. கருத்து: "நீ உடன்றுநோக்கும் வாபெரிதவழ, நீ நயந்து நோக்கும் வாய்பொன்பூப்ப" (புறநா. 38.)

கல்வி முருவி கடற்படார்ந் தாங்குப்
பல்வேறு வகையிற் பணிந்த மன்ன
ரிமையவ ருறையுஞ் சிமையச் செவ்வரை
வெண்டிரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப்
பொன்கொழித் திழிதரும் போக்கருங் கங்கைப்
பெருநீர் போகு மிரியன் மாக்க
ளொருமரப் பாணியிற் றூங்கி யாங்குத்
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇச்
செவ்வி பார்க்குஞ் செழுநகர் முற்றத்துப்
பெருங்கை யரணைக் கொடுந்தொடி படுக்குங்
கருங்கைக் கொல்ல னிரும்புவிசைத் தெறிந்த
கூடத் திண்ணிசை வெரீஇ மாடத்
திறையுறை புறவின் செங்காற் சேவ
லின்றுயி லிரியும் பொன்றுஞ் வினைகர்க்
குணைகடல் வரைப்பின் முந்நீர் நாப்பட்
பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு
முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்குஞ்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி
யிடைத்தெரிந் துணரு மிருமூர் காட்சிக்
கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத்
துரும்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகிப்
பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான்
கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப்
புலவர் பூண்கட னுற்றிப் பகைவர்
கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும்

428. மலை. 52.

429. பா. இமையோர்.

432. பா. கீர்ப்போகும்.

443 - 5. "முறைவேண்டினோர்க்கும் குறைவேண்டினோர்க்கும் காண்டற் கெளியனுய்" (குறள், 386 - பரி); "முறைவேண்டுபொழுதிற் பதனெளியோர்" (புறநா. 35 - 15.)

445. பா. இடைதெரிந்து.

446. "கொடைக்கடனிறுத்தசெம்மலோய்" (மலை. 543); "கொடைக் கடனிறுக்குமிக்குவாகுப்பெயர்ப்பெரியோன்" (கூரீம. குரியன்மபு. 8.)

447. "உரும்பில்கூற்றத்தன்ன" (பதிற். 26 - 13.)

வென்றி யல்லது வினையுடம் படிஇ
மொன்றல் செல்லா வுரவுவாட் டடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக
மன்னர் மன்ன மறவர் மறவ
செல்வர் செல்வ செருமேம் படுந
வெண்டிரைப் பரப்பிற் கடுஞ்சூர் கொன்ற
பைம்பூட் சேஎய் பயந்தமா மோட்டுத்
தாணங்கையஞ் செல்விக் கண்ணுருதொடித் தாங்குத்
தண்டா வீகைநின் பெரும்பெய ரேத்தி
வந்தேன் பெரும வாழிய நெடிதென
விடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பிக்
கின்னரி மரபிற் கைதொழூஉப் பழிச்சி
நின்னிலை தெரியா வளவை யங்நிலை
காவலர் தண்பொழில் வீவின்று விளங்க
நில்லா வுலகத்து நிலைமை தூக்கி
யங்நிலை யணுகல் வேண்டி நின்னரைப்
பாசி யன்ன சிதர்வை நீக்கி
யாவி யன்ன வவிர்நூற் கலிங்க
மிரும்பே ரொக்கலொ டொருங்குட னுடீஇக்
கொடுவாள் கதுவிய வடுவாழ் நோன்கை
வல்லோ னட்ட பல்லான் கொழுங்குறை
யரிசெத் தணங்கிய பெருஞ்செங் கெல்லின்
றெரிகொ ளரிசித் திரணெடும் புழுக்க
லருங்கடித் தீஞ்சுவை யமுதொடு பிறவும்
விருப்புடை மரபிற் கரப்புடை யடிஇன்

---

455 - 6. இடையினவெதுகை : (தொல். செய். சூ 63 - உரை, மேற்.)

457. கடலிற்சூர்கொன்றமை : (பதிற். 11 - பார்க்க.)

454 - 8. 'தொண்டையோர்மருக ..... சேஎய்' என்றாற்போல்வன ஏகாரத்தாற்பொருள்கூறுமாறு உணர்க; (தொல். வினை. சூ. 34 - ந. மேற்.)

459. "பெருங்காட்டுக்கொற்றிக்குப் பேய்மொடித்தாங்கு" (கலி. 89.) பா. கொடித்தாங்கு.

458 - 9. முருகு. 259.

461 முருகு. 285. பா. வாழியபெரிதென.

466. மு. பொருள. 176. பா. நிலைமைகோக்கி.

468 - 70. பொருள. 153 - 5.

475. பா. அயிரொடுபிறவும்.

மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை மகமுறை நோக்கி முதனமர்ந்
தானு விருப்பிற் றுனியின் மாட்டி
மங்குல் வானத்துத் திங்க ளேய்க்கு
மாடுவண் டிமிரா வழலவிர் தாமரை
சீடிரும் பித்தை பொலியச் சூட்டி
யுரவுக்கடன் முகந்த பருவ வானத்துப்
பூநற்பெயற் றுளியின் மீன்னுமிழ்ந் தாங்குப்
புணரிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்
றொடையமை மாலை விறலியர் மலைய
நாலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல்
வீளிக்கண் டன்ன வாலுளைப் பூரவி
தூணிபுணர் தொழில கால்குடன் பூட்டி
யரித்தேர் நல்கியு மமையான் செருத்தொலைத்
தொன்னுத் தெவ்வ ருலவிடத் தொழித்த
விசும்புசெ லிவுளியொடு பசும்படை தரீஇ
யன்றே விடுக்குமவன் பரிசி லின்சிர்க்
கின்னர மூரலு மணங்குடைச் சாரன்
மஞ்ஞை யாலு மரம்பயி றிறும்பிற்
கலைபாய்ந் துதிர்த்த மலர்வீழ் புறவின்

---

478 - 9. மகமுறை · நெடுபாண். 192 மலைபடு. 185.

479. மு நெடுபாண். 245.

481. "ஆடுவண் டிமிராத் தாமரை" (புறநா. 69.)

481 - 2. "வாடாமிருநிமிராமுடிமாலை" (தக்க. 557) எனபதற்கு இவை மேற்கோள். பா அழலிவர். பிரதிகளிவப்பசருடி

483. பா. புலவுக்கடல்.·

486. பா. விறலியர்வேய.

485 - 6. "வடாமாலை பாடினிய ணிய" (புறநா. 364 - 1.)

489. கால்கு - கான்கு; "கால்குபண்ணினர்" (நீவத. 1774.)

491. பா. ஒழித்த.

492. பா. விசும்புதோயிவுளி.

490 - 92. நெடுபாண். 246 - 8.

494. "பாடுவின்றனின்னாமிதனங்கள்பாராய்" (கம்ப. சித்திரகூட. 12.)

496. பா. மலர்ஞ்.

மன்றி சிக்கு மாதுஞ்சு முன்றிற்
செஞ்சிப் பேணிய முளிவர் வெண்கோட்டுக்
கனிறுதரு விறகின் வேட்கு
500 மொளிநிலங் கருவிய மலைகிழ வோனே.

இதன்பொருள்.

1. அகல் இரு விசும்பில் பாய் இருள் பருகி—தண்ணெயொழிந்த நான்கு பூதமும் தன்னிடத்தே அகன்ற விரிதிரைக் காரணமாகிய பெரிய ஆகாயத் திடத்தே தோன்றிப் பரந்த *இருளை விழுங்காகின்று,

அகலிருவிசும்பென்பது. †"நோய்தீருமருந்து" போனின்றது. பருகியென்னுஞ் செய்தெனெச்சம் நிகழ்காலம் உணர்த்திநின்றது.

2. பகல் கான்று எழுதரு பல் கதிர் பருதி—மறைந்த பகற்பொழுதை உலகத்தேதோற்றுவித்து எழுதலைசெய்யும் பலகிரணங்களையுடைய கனலி.

3. காய் சினம் திருகிய கடு திறல் வேனில்—கோபிக்கின்ற சினமுறுகிய கடிய வலியையுடைய முதுவேனிற்காலத்தே,

4. பசு இலை ஒழித்த பரு அரை பாதிரி—பின்பனிக்காலத்தே பசிய இலைகளையுதிர்த்த பரிய தாளினையுடைய பாதிரியினது,

5 - 6. வள் இதழ் மா மலர் வயிறு இடை வருந்தத்தன் உள் அகம் புரையும் ஊட்டுறு பச்சை—பெருமையையுடைய இதழையுடைத்தாகிய வண்டையுடைய பூவினுடைய வயிற்றிடத்தைப்பிளந்த ‡புலாலினுடைய உள்ளிடத்தையொக்கும் கிறமூட்டுதலுற்ற தோல்.

7 - 8. பரிய அரை கமுகின் பாளை அம் பசு பூ கரு இருந்தன கண் கூடு செறி துனை—பரிய தாளினையுடைய கமுகினது பாளையாகிய அழகினையுடைய பசியபூ விரியாமற் கருவாயிருந்தாலொத்த இரண்டுகண்ணுங்கூடின செறிந்த துனை,

9. உருக்கி அன்ன பொருத்துறு போர்வை—உருக்கி ஒன்றுக வார்த்தாற்போன்ற தோல்களின் வேறுபாடுதெரியாமல் இசைத்தலுறும் போர்வையினையும்,

பச்சைப்போர்வை; பொருத்துறுபோர்வை; தோலினையுடையபோர்வை.

---

500. மலைகிழவோன்: முருகு. 317 - ஆம் அடிக்குறிப்பைப்பார்க்க. **கன்.** கு. 104 - மயிலை. மேற்.

497 - 500. "யானை தந்த முளிமர விறகிற், கானவர் பொத்திய ஞெலிர் விளக்கத்து, மடமான் பெருநிரை வைகுதுயி லெடுப்பி, மன்றி சிக்கு மணங்குடை முன்றில்", "கானயானை தந்தவிறகின், கடுந்தெறற் செந்தீவேட்டு" (புறநா. 247. 251.)

* பி - ம். இருளைமறைத்து.

† கலித்தொகை, 60.

‡ பி - ம். பூவினுடைய.

10. சுனை வற்றன்ன இருள் தூங்கு வறு வாய்—சுனை வற்றி உள்இருண் டாலொத்த இருள்செறிந்த உண்ணுக்கினையில்லாத வாயினையும்,

11. பிறை பிறர்தன்ன பின் ஏந்து கவை கடை—முதற்பிறை பிறர்து ஏந்தியிருந்தார்ப்போன்ற பிறப்பு ஏந்தியிருக்கின்ற கவைத்தலையுடைய கடை யினையும்,

12 - 13. நெடு பணை இரள் தோள் மடந்தை முன்கை குறு தொடி எய்க்கும் மெலிந்து வீங்கு நிவலின்—நெடிய மூங்கிலேபொத்த இரண்ட தோளினையுடைய மகளுடைய முன்கையிற் குறிய தொடியையொக்கும் நெகிழ வேண்டியவழிநெகிழ்ந்து இறுகவேண்டியவழியிறுகும் வார்க்கட்டினையும்,

14. மணி வார்ந்தன்ன மா மருப்பின்—நீலமணி ஒழுகினலொத்த கருமைநிறத்தையுடைய பெரிய தண்டினையுமுடைய,

15 - 6. பொன் வார்ந்து அன்ன புரி அடங்கு ஞரல் பின் தொடை அமை கேள்வி—பொன் கம்பியாய் ஒழுகினலொத்த முறுக்கடங்கின நரம்பின் கட் டமைந்த யாழை,

கேள்வி, ஆகுபெயர்.

போர்வையினையும் (9) வாயினையும் (10) கடையினையும் (11) நிவவினை யும் (13) மருப்பினையுமுடைய யாழையெனமுடிக்க.

16. இடம் வயின் தழீஇ--இடத்தோட்பக்கத்தே அணைத்து,

17. வெந்தெறல் கனலியொடு மதி வலம் திரிதரும்—வெய்ய தெறுதற் றொழிலையுடைய ஞாயிற்றோடே திங்களும் மேருவை வலமாகத் திரிதலைச் செய்யும்,

18. தண் கடல் வரைப்பில் தாங்குநர் பெருது—குளிர்ந்த கடல்சூழ்ந்த உலகில் நின்னைப் புரப்பாரைப் பெறுமல்,

19. பொழி மழை துறந்த புனை வேய் குன்றத்து—பெய்கின்ற மழை துறத்தலால் நிலத்தின்கண்ணெழுந்த ஆலிசூழ்ந்த மலையிடத்தே,

20. *பழு மரம் நேரும் பறவை போல—பழுத்த மரத்தைத் தேடித் திரியும்பறவைகளேப்போல,

21. கல்லென் சுற்றமொடு கால் இளர்ந்து திரிதரும்--பசிமிகுதியால் அழுகின்ற சுற்றத்தாருடனே ஓரிடத்திராமற் பயனின்றி ஒடித் திரிதலைச் செய்யும்,

22. புல்லென் யாக்கை புலவு வாய் பாண—பொலிவழிந்த வடிவினையும் †ற்ற கல்லிலை வெறுத்துக்கூறுகின்ற வாயினையுமுடைய பாண,

† "கில்செலித் தாகிய கேன்மி தொல்லு" என்ருர் பிறரும்; புலால் நாறுகின்ற வாயுமாம்.

கேள்வியைத்தழீஇத் (16) தாங்குநர்ப்பெறுது (18) குன்றத்தே (19) கடுந்திறல் வேனிற்காலத்தே (3) பறவைபோலத் (20) திரிதரும் பாணவென முடிக்க.

---

* "புட்பயில் பழுமரப் பொலிவிற்று" (தீவத. 93.)

† புறநானூறு, 68.

23 - 4. பெரு வறம் கூர்ந்த காலம் கல்லென் பருவி னின்னும் துளி சொரிந்தாங்கு — பெரிய *வற்கடமிக்க காடு உழவுத்தொழில் முற்றியதற் கும் ஆரவாரமிகும்படி தொகுதியையுடைய மேகம் துளியைச் சொரிந்தாற் போல,

25 - 6. பழ பகை கூர்ந்த னம் இரு பெரு ஒக்கலொடு வழங்கு தலாஅ பெரு வளன் வய்தி — தொன்றுதொட்ட பகைமிக்க எம்முடைய கரிய பெரிய சுற்றத்தோடே யாங்கள் பிறர்க்குக்கொடுக்கவும் மாளாத பெரிய செல்வத்தைப் பெற்று,

27 - 8. வரல் உலா புரவியொடு வய் களிறு முகந்துகொண்டு யாம் அவனிடும் வருதிம்—வெள்ளிய தலையாட்டத்தையுடைய குதிரையோடே வலியினையுடைய யானைகளையும் வாரிக்கொண்டு யாம் அவனூரினின்றும் வரா நின்றேம்;

28. மீயிரும்—நீங்களும்,

29 - 37. [இருநிலங் கடந்த திருமறு மார்பின், முந்நீர் வண்ணன் பிறங் கடை யந்நீர்த், திரைதரு மாபி னுமரவோ னும்பல், மலர்தலை யுலகத்து மன னுயிர் காக்கு, முரசுமுழங்கு தானை மூவ ருள்ளு, மிலங்குநீர்ப் பரப்பின் வினமீக் கூறும். வலம்புரி யன்ன வசைநீங்கு நிறப்பி, னல்லது கடிந்த வறம்புரி செங் கோற், பல்வேற் றிரையற் படார்குவி ராயின் :]

மலர் தலை யுலகத்து மன் னுயிர் காக்கும் முரசு முழங்கு தானை மூவருள் ளும்—அகன்ற இடத்தையுடைய உலகத்தில் நிலைபெற்ற உயிர்களைப்புரக்கும் முரசுமுழங்குகின்ற நாற்படையினையுமுடைய சேரசோழபாண்டியரென்னுமூவ ரிலும்,

இலங்கு நீர் பரப்பின் வினை நீங்கு வலம்புரி அன்ன வசை நீங்கு நிறப் பின்—விளங்குகின்ற நீரையுடைய கடலிடத்துப்பிறந்த சங்கில் மேலாக உல கங்கூறும் வலம்புரிச்சங்கையொத்த குற்றமில்லாத நிலைமையினையும்,

அல்லது கடிந்த அறம் புரி செங்கோல்—மறத்தைப்போக்கின அறத்தை விரும்பின செங்கோலினையுமுடைய,

இரு நிலம் கடந்த †திரு மறு மார்பின் முந்நீர் வண்ணன் பிறங்கடை உரவோன் உம்பல்—பெரிய நிலத்தையளந்த திருவாகிய மறுவையணிந்த மார் பினையுடைய கடல்போலுநிறத்தையுடையவன் பின்னிடத்தோனுகிய சோழன் குடியிற்பிறந்தோன்,

மூவருள்ளுஞ் சிறப்பினையும் செங்கோலினையுமுடைய உரவோனென்க.

‡ திருமால்குடியிற்றோன்றிய உரவோன்.

அ நீர் நிறை தரு மாபின் பல் வேல் நிரையன் — அக்கடலின் நிறை கொண்டுவந்து ஏறவிட்டமரபாற் பலவேற்படையினையுடைய நிரையனென் னும் பெயரையுடையவன்,

---

* பி - ம். வறட்காலமிக்க.

† "திருமதுமார்பீ மருள்வேண்டும்" (பரிபாடல், 1.)

‡ திருமாலென்றது, இராமபிரானை.

என்றதனால், நாடுபட்டினத்திச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னியைப்புணர்ந்தகாலத்து அவள் யான்பெற்றபுதல்வனே என்செய்வேனென்றபொழுது, தொண்டையை அடையாளமாகக்கட்டிக் கடலிலேவிட அவ்வள்ளு கரையேறின் அவற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பலென்று அவன்கூற, அவனும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரைதருதலின், திரையனென்று பெயர்பெற்றகதை கூறினர்.

திரையன் படர்குவிராயின் நின் உள்ளம் நிறக்க.—திரையனே நினைப்பீராயின் அவனைநினைத்தலின், நின் நெஞ்சு நிறப்புக்களைப்பெறுக;

நிறக்கின்னுள்ள (45) மென மேல்வருவதனை இதனோடுங்கூட்டுக.

38. [*கேளவ னிலேயே கெடுகின் னவலம்:*]

நின் அவலம் கெடுக—நினதுமிடி கெடுவதாக;

*அவன் நிலே கேள்—அங்ஙனம் அவனை நினைத்துப்போன்றீ *அவன் தன்மையைக் கேட்பாயாக;*

39 - 41. [*அத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக், கைப்பொருள் வெளவுங் களவோர் வாழ்க்கைக், கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புலம்:*] *அவன் கடி உடை வியல் புலம் அத்தம் செல்வோர் அலற தாக்கி கை பொருள் வெளவும் களவு ஏர் வாழ்க்கை கொடியோர் இன்று—அவனுடைய காவலியுடைத்தாகிய அகலத்தையுடைய நிலம், வழிப்போவாரைக் கூப்பிடும்படி வெட்டி அவர்கள் கையிலுள்ள பொருள்களைக் கைக்கொள்ளும் களவே உழவு போலும் இல்வாழ்க்கைப் பொருளாகவுடைய கொடுமையையுடையோரில்லை;*

42 - 3. *உருமும் உரறுது அரவும் தப்பா காடு மாவும் உறகண் செய்யா—உருமேறும் இடியாது; பாம்புகளும் கொல்லுதலேச்செய்யா; காட்டிடத்துப் புலிமுதலியனவும் வருத்தஞ்செய்யா; ஆகலின்,*

இஃத அவனேன †கூறிற்று.

43 - 5. [*வேட்டாங், கசைவுழி யசைஇ நசைவுழிப் தங்கிச் சென்மோ:*]

ஆங்கு அசைவுழி அசைஇ—அக்காட்டின்கண் இளைத்தவிடத்தே இளைப்பாறி.

நசைவுழி வேட்டு தங்கி சென்மோ — எங்களிடத்தே தங்கிப்போக வேண்டுமென்று நச்சினவிடத்தே நீயும் அதற்கு விரும்பித் தங்கிச் செல்வாயாக.

45. *இரவல—இரத்தற்றொழிலை வல்லோய்.*

45 - 7. [*நிறக்கின் னுள்ளம், கொழுஞ்சூட் டருந்திய திருந்துகிலே யாரத்து, முழவி னன்ன முழுமரா வருளி:*]

---

* பி - ம். *அவ்வழியை அவன் தன்மையை.*

† பி - ம். *கூறினன்.*

முழவின் அன்ன முழுமரம் நிரந்து நிலை ஆர்த்த கொழு குட்டி அருங்கிய உருளி — மத்தளத்தையொத்த குறட்டிடத்தேதைத்த செக்கென்ற தன்மையையுடைய ஆரிடத்தே நன்றாகி வினைத்தமரம் சூழ்ந்த பிடக்கப்பட்ட உருளையையும்,

அச்சுக்கோக்கின்ற இடமுமாம். அக்குறட்டிலே தைத்துக்கிடக்கின்றது ஆர். குட்டி - வில்லிம்பில் வைத்த வினைத்த மரம்.

48. எழுஉ புணர்த்தன்ன பருஉ கை நோன் பார்—கணையமரம் இரண்டு சேர்த்தாலொத்த பருத்த கைகளையுடைய வலிய பாரையுமுடைய,

அச்சுமரத்தின்மேலே நெடியவாய் இரண்டு பக்கத்தும் நெடுகக்கிடக்கின்ற பருமரங்களைப் பருஉக்கை யென்றார். அம்மரங்களிரண்டினையும் கெருக்கத் தூணித்தக் குறுக்கே எணிபோலக் கோத்ததனைப் பாரென்றார்.

49 - 50. [மாரிக் குன்ற மழை சுமந்தன்ன, வாரை வேய்ந்த வரை வாய்ச் சகடம்;]

குன்றம் மாரி மழை சுமந்தன்ன ஆரை வேய்ந்த அறை வாய் சகடம்—மலை மாரிக்காலத்து மேகத்தைச் சுமந்துநின்றாற் போன்ற *தொத்துளிப்பாயாலே வேய்ந்த ஒலிக்கின்ற வாயையுடைய சகடம்,

'ஆரை வேய்ந்த' என்று பாடமாயின் நிறைந்த வரகுவைக்கோலாலே வேய்ந்த வென்க.

அந்த இரண்டு மரத்திலும் கால்களைகட்டுக் குடிலாகக்கட்டி மேலே வசம்பு முதலியனவற்றைக் கயிற்றாலே கோத்தபாயெடுத்தலேக்கூறினர்.

உருளியையும், பாரையுமுடைய சகடமென்க.

51 - 52. வேழம் காவலர் குரம்பை எய்ப்ப கோழி சேக்கும் கூடு உடை புதலின்—யானையைப் புனத்தில் இன்னமும் காக்கின்ற தொழிலேயுடையார் இதண்மேலே கட்டின குடிலேயொப்பச் சிறகக்கட்டின கோழியிடக்குங் கூட்டையுடைத்தாகிய குடிலின் வாசலிலே.

53 - 4. மூவா எயிறு இரு பிடி முழந்தாள் எய்க்கும் தூவா அரை சிறு உரல் தூங்க தூக்கி—மூவாவில் மூவாபோலும் கொம்பினையுடைய கரிய பிடியினது முழந்தாளையொக்குந் தூவையைத் தன்னிடத்தேயுடைய சிறிய உரலே அசையும்படி தூக்கி,

கோத்து காற்றுதற்குத் தூவையிடுதலின், 'தூவையரைச் சிறுரல்' என்றார்

55 - 6. காடகம் மகளிர் ஆடு களத்து எடுத்த விசி வீங்கு இன் இயம் கடுப்ப—காடகமாடுமகளிர் ஆடுங்களத்தே கொண்டுவந்த வாரால்பிணித்தலிறு இன இனிய முழவை யொப்ப,

56 - 7. கயிறு பிணித்து காடி வைத்த கலன் உடை மூக்கின்—தகராத படி கயிற்றாலே வரிந்து காடிவைத்த மிடாவையுடைய அப்பாரிற்றலையிலே,

* பி - ம். தொத்தளி, கொத்தளி.

புளிங்காய் செல்லிக்காய் மூதலியன ஊறலிட்டு வைத்தனினைக் காடி யென்றார்; இனிக்காடி செய்வென்பாருமுளர்; இனிப் பாரிற் கழுத்தானவிடத் தேனைத்த மிடாவென்றுமாம்.

58. மக உடை மகடூ பகடு புறம் திரப்ப—குழவியைக் கைக்கொண்ட மகளிருந்து பூண்ட எருத்தை முதுகிலேயடிப்ப,

சகடப் (50) புதவின் (52) மூக்கின்கண்ணே (57) வேப்பிலைமிடைந்த (59) மகடூ இருந்து திரப்பவெனமுடிக்க.

59. கோடு இணர் வேம்பின் எடு இலை மிடைந்த மகடூ (58)—கொம பிடத்தே பூங்கொத்தையுடைய வேம்பினுடைய மேன்மையையுடைய இலை யைப் பின்னைக்குக் காவலாகக்கொணடிருக்கினற மகடூ,

60. *படலை கண்ணி—தழைவிரவின மாலையையும்,

பரு ஏர் எறழ் திணி தோள்—பரிய அழகினையும வலியினையுமுடைய, இறுகின தோளினையும்,

61. முடலை யாக்கை—முறுகுண்ட உடம்பினையும,

முழு வலி மாக்கள்—நிரபிய மெய்வலியினையுமுடையமாகன்,

62 - 3 [சிறு தினைக் கொடுநக பெறிபட நிரைத்த பெருங்கயிற் றொழுகை:] சிறு தினை கொடு நகம் பெரு கயிறு பெறிபட நிரைத்த ஒழுகை—சிறிய தினையினையுடைய கொடிய நுகத்தின்கணணே பெரியகயிற்றாலே எருது களை ஒருவழிப்பட நிரைத்துக்கட்டின சகடவொழுங்கினை,

தினைகளிற் செருகினகழிகள் கழுத்தசையப் பட்டுநிற்றலின, கொடுநக மெனறார். ஒருசகடத்திற் பலபூட்டுதல் கூறினர்

63. மருங்கில் காப்ப—எருதுகள்திருகாமல் அசசுமுறியாமற் பகலத்தே சாத்துக்செல்ல,

64. இல் பத உணவின்—இடப்படும பொருள்களுக்குச் சிறியவாக இடப படுமுணவினது.

என்றது உப்பை. பதம் - பக்குவம.

கொள்ளை சாற்றி—விலைசொல்லி,

65. பல் எருது உமணர் பதி போகு நெடு நெறி—இனைத் சாற்றுபூட்டுதற் கு பல எருத்தையும்அடித்துக்கொண்டுபோம் உப்புவாணிகா ஊர்களதோறும செல்லும் நெடிய வழியினையும்,

பதிபோலப் போகுமென்றுமாம்.

மகடூஉத்தரபப மாக்கள்தாப்பச சாற்றிப்போம் நெடுநெறியையுமென்க.

66. 'ஐல் இடை கழியுரர்க்கு ஏமம ஆக—பகற்பொழுதுபோவார்க்கு இனைப்புத்தீரை,

---

* "முதி மிடை படலை மாலை" (தீவத. 1889.)

67 - 76. [மலையவுங் கடலவு மாண்பயன் தரூஉ, மரும்பொரு ளருத்
துந் திருந்துதொடை நோன்று, எடியுதை யாண மெய்திப் படம்புக்குப், பொருகணை தொலைச்சிய புண்டீர் மார்பின், வீரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாள், வரையூர் பாம்பிற் பூண்டுபுடை தாங்கச், சுரிகை நுழைந்த சுற்று வீங்கு செறிவுடைக், கருவி லோச்சிய கண்ணக னெறுழ்த்தோட், கடம்பமர் நெடுவே லன்ன மீளி, யுடம்பிடித் தடக்கை யோடா வம்பலர் :]

மலையவும் கடலவும் மாண் பயன் தருஉம் அரு பொருள் அருத்தும் ஓடா வம்பலர்—மலையிலுள்ளனவும் கடலிலுள்ளனவுமாகிய மாட்சிமையையுடைய பயனைக் கொடுக்கும் பெறுதற்கரிய பொருள்களை உலகத்தோரெல்லாரையும் நுகரப்பண்ணும் பிறக்கிடாத புதியோர்,

என்றது - மாணிக்கமும், முத்தும், சந்தனமுமுதலியன கொண்டுபோய் விற்றுத் திரிவாரைக்கூறிற்று.

பொரு கணை தொலைச்சிய புண் தீர் மார்பின்—பொருகின்ற அம்புகள் தசையைப்போக்கின புண்கள் தீர்ந்த மார்பினையும்,

சுரிகை நுழைந்த சுற்று வீங்கு செறிவு உடை—பத்திரம் செருகப்பட்ட கட்டுதலிறுகும் சேலையினையும்,

கரு வில் திருந்து தொடை ஒச்சிய கண் அகல் எறுழ் தோள்—கொடிய வில்லைத் தப்பாததொடையிலே கிரம்பவாங்கின இடமகன்ற வலியினையுடைத் தாகிய தோளினையுமுடைய,

கடம்பு அமர் நெடு வேள் அன்ன வம்பலர்—கடம்பிடத்தேயிருந்த கொடிய முருகனையொத்த வம்பலர்.

மீளி உடம்பிடி தட கை ஓடா வம்பலர்—கூற்றுவனையொத்த வேலைப் பெருமையையுடைய கையிலேயுடைய பிறக்கிடாதவம்பலர்,

மார்பினையும், உடையினையும், தோளினையுமுடைய வம்பலர்.

வரை ஊர் பாம்பின் வெள் கை ஒள் வாள் வீரவு வரி கச்சில் பூண்டு புடை தாங்க—மலையிடத்தே யூர்கின்ற பாம்புபோலே யானைக்கொம்பாற் கடைத்திட்ட வெள்ளிய ஆனையுடைய ஒள்ளியவாள் தன்னிடத்தில்வீரவின வரியையுடைய கச்சினுலே தோளிலேகோக்கப்பட்டு ஒருபக்கத்தே தூங்காநிற்க,

நோன் தாள் அடி புதை அரணம் எய்தி—நடந்து வலியையுடையவாகிய காலில் அடியையறைக்கின்ற செருப்பைக்கோத்து,

படம் புக்கு—சட்டையிட்டு,

வம்பலர் (75) தூங்க (72) எய்திப் புக்கு (69) வழங்கும் (80) பெரிய வழி (81) என்க.

77 - 8. தடவு நிலை பலவின் முழுமுதல் கொண்ட நிறு சுளை பெரு பழம் கடுப்ப—பெருமையையுடைய நிலையினையுடைய பலாவினடியிலே குலை கொண்ட *நிலவாகிய சுளையினையுடைய பெரிய பழத்தையொப்ப,

* பி - ம். நிறியவாகிய.

நல்லபழம் சுளைமிக இராதென்றார்.

78 - 80. [நெரியம், புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத், தணர்ச்செவித் கழுதை:]

நெரியல் புணர் பொறை தாங்கிய கழுதை மிளகினது ஒத்தகனமாகச் சேர்த்த பாரத்தைத் தாங்கிய கழுதை,

வடு ஆழ் நோன் புறத்து அணர் செவி கழுதை – வடுவழுந்தின வலியினையுடைய முதுகினையும் எடுத்தசெவியினையுமுடைய கழுதை,

80 - 81. கழுதை சாத்தொடு வழங்கும் உல்கு உடை பெரு வழி கவலை காக்கும்—கழுதையிலே மிளகெடுத்துக் கொண்டுபோகின்ற திரளோடே வம் பலர் (76) வழங்கும் பெரியவழியில் கவர்த்தவழிகளையும் காத்திருக்கும்,

உல்கு - சுங்கம்.

82. வில்லுடை வைப்பின்—வில்படையிருக்கின்ற ஊர்களில்,

மியல் காடு இயவின்—அகன்ற காட்டுவழிகளில்.

83 - 5. நீர் அரை இலவத்து அலங்கு சினை பயந்த பூளை அம் பசு காய் புடை விரிந்தன்ன வரி புற அணிலொடு—நீண்ட தாளினையுடைய இலவத்தினது அசைகின்ற கொம்பு காய்த்த பஞ்சியினையுடைய அழகினையுடைத்தாகிய பசிய காயினது முதுகு விரிந்து பஞ்சுதோன்றிஞலொத்த வரியை முதுகிலேயுடைய அணிலோடே,

85. கருப்பை ஆடாது—எலியும் திரியாதபடி,

86 - 8. [யாற்றறல் புரையும் வெரிதுடைக் கொழுமடல், வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தகை, நீத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை:]

யாறு அறல் புரையும் வெரிந் கொழு மடல் உடை நெடு தகர் ஈந்து—யாற்றினது அறலையொக்கும் முதுகினையும் கொழுவிய மடலினையுமுடைய நெடிய மேட்டு நிலத்தினின்ற ஈந்து,

மடலினடி தன்னிடத்தேநிற்க மேலறுப்புண்டஈந்து அறல் போன்றிருக்குமாறு உணர்க.

வேல் தலை அன்ன வை நுதி ஈந்து இலை வேய்ந்த எய் புறம் குரம்பை—வேலின்முனையையொத்த கூர்மையினையுடைய முனையினையுடைய ஈந்திலுடைய இலையாலேவேய்ந்த *எய்ப்பன்றிமுதுகுபோலும் புறத்தினையுடைய குடிலில்,

89 - 90. [மான்ரேற் பன்னி மகவொடு முடங்கி, மீன்பிண வொழியப் போகி:] ஈன் பிணவு மான் தோல் பன்னி மகவொடு முடங்கி ஒழிய போகி—பின்னையைப்பெற்றவயிற்றி மான்ரேலாகிய படுக்கையிலே அப்பின்னையோடே முடங்கிக்கிடக்க ஒழிந்தோர் போய்,

* பி - ம். எய்ப்பன்றிபோலும்.

* பெண்ணும் பிணவு மக்கட் குரிய?' என்பதனுள் வந்த பிணவென்னும் ஆளாளீறு அல்வழிக்கண் வன்கணமன்மையிற் †குறியதன் இறுதிக்கண்ணே கெட்டு உகரம் பெருதினின்றது.

90 - 92 [சோன்சாழ், இரும்புதலை யாத்த திருத்துணை விழுக்கோ, துளிவாய்ச் சரையின் மிளிர மிண்டி;] இரும்பு தலை யாத்த திருத்து ணை சோன்சாழ் விழு கோல் உளி வாய் சரையின் மிளிர மிண்டி—பூண் தலையிலே அழுத்தின ன்றுகிய நிரட்சியையும் வலியையுமுடைத்தாகிய வயிரத்தினையு முடைய சிரிய கோல்சேருகின உளிபோலும் வாயினையுடைய பாரைகளாலே சட்டிகள் கீழ்மேலாகக் குத்தலையினுலே.

கோல்சேருகப்படுகின்ற சரையையுடைமையிற் சுரையென்றார்; ஆகு பெயர். சுரை - குழைச்சு.

93. இரு நிலம் கரமபை படு நீறு ஆடி—கருநிலமாகிய கரம்பைநிலத்தி லுண்டாகிய புழுதியையணிந்து,

94. தண் புல் அடக்கிய வெள் பல் எயிற்றியர் – மெல்லிய புல்லரிசியை வாரியெடுத்துக்கோண்ட வெள்ளிய பல்லையுடைய எயிற்குடியிற்பிறந்த மகளிர்,

போகி மிண்டுகையினுலே ஆடி அடக்கிய எயிற்றியரென்க.

மிகவிரோத்து உதிர்த்தபுல்லை எறும்பிழுத்துச் சோவிட்டுவைத்த இடமறிந் தெடுத்தல் அக்கிலப்பண்பு.

95 - 6. பார்வை யாதத பறை தான் வினவின் கீழல் முன்றில் நில உரல் பெய்து பார்வைமான்கட்டினை தேய்த்தாளினையுடைய வினவினது விழுமையுடைய முற்றத்திடத்தத தோண்டின நிலவுரலிலே அப்புல்லரிசியைச சொரிக்து,

97. குறு காழ் உலக்கை ஓசை – குறிய வயிரமாகிய உலக்கையாலே ‡குதலை,

97 - 8. தெடு வினை வல் ஊற்று உவரி தோண்டி—ஆழ்ந்த வினைற்றிற் கில்லூற்றுகிய உவரிகீரை முகந்துகொண்டு,

98 - 9. தொல்லை முரவு வாய் குழிசி முரி அடுப்பு எற்றி – பழைய §நறுவாய்போன பானையிலே வார்த்தவுலையை முரிந்த அடுப்பிலேவைத்து,

100. [வாரு தட்ட வாடை புழுக்கல்.]

வாருது அட்ட புழுக்கல்—அரியாது ஆக்கின சோற்றை,

எயிற்றியர் (94) பெய்து (96) ஓச்சி (97) தோண்டி (98) எற்றி (99) அட்ட புழுக்கலெனமுடிக்க.

வாடு ஊன்—உப்புக்கண்டத்தோடே,

---

* தொல்காப்பியம், மரபியல், 61.

† ,, வீரசோழியம், 32.

‡ பி - ம். குத்து.

§ பி - ம். வெறுவாய்.

101 - 2. [நெடாத் தும்பை வடவர் பெருமக, ஜெடாத் தாவில்] ஓடா நாண் மலடா தும்பை ஒப்வர் பெருமகன்—முதலிடாதபடியினுடைய செ டாத தும்பையுடன சோழனல்ல வீரருடைய தலைவனிய

102 - 3. ஒள் தொழில் கழல் கால் செ வரைகாடன் சென்னியம் எனின்—ஒன்னிய தொழில்களையுடைத்தாகிய வீரக்கழலணிந்த காலினையுடைய செவ்விய மலைகாட்டையுடையவனுடைய *பாணச்சாதியேமென்ற கூறுவீராயின்,

104. தெய்வம் மடையின் தேக்கிலே குவைஇ - தெய்வங்களுக்குச் சோ இட்டுவைத்த பலிபோலே புழுக்கலையும் வாடினையும் (106) தேக்கிலையிலே குவிக்கையிலே,

104 - 5. [நும் பைதீர் கடும்பொடு பதமிகப் பெறுகுவிர் :] பதம் நும் பைதீர் கடும்பொடு மிக பெறுகுவிர்—அவ்வுணவை நம்முடைய பசுமைதீர்ந்த சுற்றத்தோடே மிகப்பெறுகுவிர்;

வியன்காட்டியவுகளில் (82) உல்குடைத்தாகிய (81) நெடுநெறியையும (65) வம்பலர் (76) கழுதைச்சாத்தொடுவழங்கும் (80) உல்குடைப்பெருவழிக் கவலையையும் காத்திருக்கும் (81) வில்லுடைவைப்பின் (82) குரம்பையில் (88) எயிற்றியர் (94) தாங்களட்டபுழுக்கலையும் வாடினையும் (100) எல்லிடைக்கழியுர்க்கு எமமாகச்-(66) தேக்கிலையிலே குவிக்கையிலே (104) அப்பதத்தைப் (105) பெருமகனுடைய (101) வரைகாடன் சென்னியமெனின் (103) நும் (104) கடும்பொடு மிகப்பெறுகுவிர் (105) எனமுடிக்க.

உல்கு - இரண்டுவழிக்குங்கொள்க. குவைஇயென்னும் செய்தெனெச்சம் காரணகாரியப்பொருட்டு.

106. [மானடி பொறித்த மயங்கதர் மருங்கின் :] மயங்கு மான் அடி பொறித்த அதர் மருங்கின்—நீரின்மையின் மயங்கித்திரியும் மானடி அழுந்திக் கிடக்கின்ற வழியிடத்திலே,

107 - 8. வான் மடி பொழுதில் நீர் நசைஇ குழித்த அகழ்—மழை பெய் நலத்தவிர்ந்த காலத்தே நீர்நிற்கவேண்டுமென்று நசசுதலாலே குழித்தகுளம்,

அகழப்படுதலின் அகழென்றது ஆகுபெயர்.

108. சூழ் பய்ம்பின் அகத்து ஒளித்து ஒடுக்கி—அதனைச் சூழப்பறித் துக்கிடக்கின்ற மட்டுக்குழிகளினுள்ளே முறைத்தொதுங்கி,

நண்ணீர்குடிக்கவருமென்று சூழ்ந்தைச்சூழப்பறித்தகுழி.

109 - 10. புகழா வாகை பூவின் அன்ன வீழ் மருப்பு எனம் வாவு பார்த்தி இருக்கும்—அகத்திப்பூவினையொத்த வீழ்ந்த கொம்பினையுடைய பன்றியினது நீருண்ணவரும் வரவைப்பார்த்திருக்கும்.

111. அரை நான் வேட்டம் அழுங்கின் - நடுயாமத்து வேட்டை ஒழிர்ந்தார்களாயின்,

---

* பி - ம். பாண்சாதியேம்.

பகல் கான்—அதன் பிற்றைஞாளிலே,

112 - 5. [*பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித், தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி, மூன்னரைத் தாமரைப் புல்லிதழ் புரையு, நெடுஞ் செவிக் குறுமுயல் போக்கற வளைஇ :*]

மூன் அரை தாமரை புல் இதழ் புரையும் நெடு செவி குறு முயல் போக்கு அற — மூன்னேத் தண்டிலேயுடைய தாமரையினது புறவிதழையொக்கும் நெடிய செவியினையுடைய குறிய முயல்களே ஓரிடத்தும்போக்கில்லாதபடி,

*தொகு வாய் வேலி தொடர் வலை மாட்டி வளைஇ — குவிந்த இடத்தை யுடைய வேலியிடத்தே ஒன்றேடொன்றுபிணைத்த வலைகளே *மாட்டிவளைத்து,*

பகு வாய் ஞமலியொடு பைம்புதல் எருக்கி — அங்காந்த வாயையுடைய நாய்களுடனேசென்று பசியதூறுகளேயடித்து அவற்றிற்கிடவாமலோட்டி,

116 - 7. [*கடுங்கட் கானவர் கடறுகூட் டுண்ணு, மருஞ்சுரம் :*]

கடறு கூட்டுண்ணும் அரு சுரம்—காட்டிலுள்ள முயல்களைக் கொள்ளே கொண்டுண்ணும் அரிய பாலேநிலம்.

கடுங்கண் கானவர்—தறுகண்மையையுடைய கானவர்,

கானவர் (116) *பயம்பின் ஒடுங்கிப்* (108) *பார்த்திருக்கும்* (110) *இரா வேட்டமழுங்கிற் பகஞளிலே* (111) *முயலேப் போக்கறவளைத்து* (115) *எருக் கிக்* (112) *கூட்டுண்ணும்* (116) *அருஞ்சுரமென முடிக்க.*

117. *அரு சுரம் இறந்த †அம்பர் குறும்பில் சேப்பின் — இவ்வரியநிலத் தைக் கைவிட்ட மற்றைநிலத்திற் குறும்பிற்றங்கில்,*

குறும்பிற்சேப்பின் (129) *என்பதனே இவ்விடத்துக்கூட்டுக.*

இதனுல் ஈண்பகலும் வேனிலுமாகிய பாலேநிலங்கூறி அத்னேக்கலந்தநில மும் கூறினர்.

இனி நீங்கள் அருஞ்சுரத்தைக்கடந்தபின்னரென்றுமுரைப்பர்.

117 - 8. [*பருத்துபட, வொன்னுத் தெவ்வர் நடுங்க வோச்சி :*] *ஒன்னு தெவ்வர் நடுங்க பருத்து பட ஓச்சி —பொருந்தாதபகைவர் அஞ்சப் பருத்தகள் ‡படியக் குத்தி,*

119 - 20. *வை நுதி மழுங்கிய புலவு வாய் எஃகம் வடி மணி பலசை யொடு நிரைஇ—கூர்மையையுடைய முனைமழுங்கின புலாஞறும் வாயையுடைய வேலே வடித்த மணிகட்டின பலகைகளோடே நிரைத்துவைத்து,*

120 - 21. *முடி நாண் சாபம் சார்த்திய கணை துஞ்சு வியல் நகர்—தலே யிலே முடிந்த நாணேயுடைய வில்லேச்சார்த்திவைத்த அம்புதங்கும் அகற்சியை யுடைய வீடுகளேயும்,*

---

* பி - ம். மூட்டிவளேத்து.

† பி - ம். உம்பர், அம்பல்.

‡ பி - ம். மடிய.

122. ஊகம் வேய்ந்த உயர் நிலை வரைப்பின்—ஊகம்புல்லாலேவேய்ந்த உயர்ந்த நிலைமையினையுடைய மனையும்,

123 - 4. வரை தேன் புரையும் கலை கடை புகையொடு கடு துடி தூங்கும் கணை கால் பந்தர்—மலையிற்றேனிறுவிலையொக்கும் குதையினையுடைத் தாகிய அடியினையுடைய அம்புக்கட்டுகளுடனே ஓசைகடிய துடியுந்தூங்கும் நிரண்ட காலையுடைய பந்தரினையும்,

125. தொடர் நாய் யாத்த துன் அரு கடி நகர்—சங்கிலிகளாலே நாய் களைக்கட்டிவைத்த நெட்டுதற்கரிய காவலையுடைய வீட்டினையும்,

126. [வாழ்முன் வேலிச் சூழ்மனைப் படப்பை:] முள் வாழ் வேலி சூழ் மனை படப்பை—முள்ளையுடைய வாழ்வேலியினையும் அதனைச்சூழ்ந்த காவற் காட்டினையுடைத்தாகிய பக்கத்தினையும்,

127. கொடு நுகம் தழீஇய புதவின்—கொடிய கணையமரம் ஏறட்ட உட் கதவையுடைய வாயிலினையும்,

127 - 8. செ நிலை நெடு நுதி வய கழு நிரைத்த வாயில்—செவ்விய நிலை யினையும் நெடிய மூனையினையுமுடைய வலியையுடைய கழுக்கள் நிரைத்த ஊர் வாசலினையுமுடைய.

பகைவரைக்குத்துதற்குக் கழுவைத்தார்.

129. கொடு வில் எயினர் குறும்பில் சேப்பின்—கொடிய வில்லையுடைய எயினச்சாதியிலுள்ளாருடைய அரணிலேதங்கின்,

கணை துஞ்சுவியனகர் (121) முதலியவற்றையுடைய குறும்பென்க.

130 - 31. களர் வளர் ஈந்தின் காழ் கண்ணின்ன சுவல் மிளை நெல்லின் செ அவிழ் சொன்றி—களர்நிலத்தேவளர்ந்த ஈந்தினதுவிதையைக் கண்டாற் போன்ற மேட்டுநிலத்தேவிளைந்த நெல்லினது சிவந்த அவிழாகியசோற்றை,

132 - 3. ஞமலி தந்த பனவு சுவல் உடும்பின் வறை கால்பாத்தது வயின் தொறும் பெறுகுவிர்—நாய்கடித்துக்கொண்டுவந்த அக்குமணிபோலும் முட்டை களையுடைய உடும்பினது பொரியல்மேலே மறைத்தகோன மனைகடோறும் பெறு குவீர்;

சேப்பிற் பெறுகுவிரென்க.

134 - 6. யானை தாக்கினும் அரவு மேல் செலினும் நீல் நிறம் விசும்பின் வல் ஏறு நிலைப்பினும் சுவல் மகள் மாறு மறம் பூண் வாழ்க்கை—யானை தன் எதிரே செல்லினும் பாம்பு தன்மேலே செல்லினும் நீலநிறத்தையுடைய மேகத் திடத்தே வலிய உருமேறு இடிப்பினும் சூழ்கொண்டமகள் அலையிற்றிற்கு அஞ்சி மீளா மறத்தைப்பூண்ட வாழ்வினையும்,

137. வலி கூட்டுணவின் வாள் குடி பிறந்த—தமது வலியாம் கொள்ளை கொண்டுண்ணும் உணவினையுமுடைய வாட்டொழிலேசெய்யுங் குடியிற்பிறந்த,

138. புலி போர்த்த அன்ன புல் அணல் காளை—புலியினது போர்த்தை யாத்த புல்லென்ற தாடியையுடைய அச்சிலைத்தத்தலேவன்;

பகல் கான்—அதன் பிற்றைஞாளிலே,

112 - 5. [பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித், தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி, மூள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையு, மெடுஞ் செவிக் குறுமுயல் போக்கற வளைஇ :]

மூன் அரை தாமரை புல் இதழ் புரையும் நெடு செவி குறு முயல் போக்கு அற — மூள்ளரைத் தண்டிலேயுடைய தாமரையினது புறவிதழையொக்கும் நெடிய செவியினையுடைய குறிய முயல்களை ஓரிடத்தும்போக்கில்லாதபடி,

தொகு வாய் வேலி தொடர் வலை மாட்டி வளைஇ — குவிக்த இடத்தையுடைய வேலியிடத்தே ஒன்றோடொன்றுபிணைக்த வலைகளை *மாட்டிவளைத்து,

பகு வாய் ஞமலியொடு பைம்புதல் எருக்கி — அங்காக்த வாயையுடைய நாய்களுடனேசென்று பசியதாறுகளையடித்து அவற்றிற்கிடவாமலோட்டி,

116 - 7. [கடுங்கட் கானவர் கடறுகூட் டுண்ணு, மருஞ்சுரம் :]

கடறு கூட்டுண்ணும் அரு சுரம் — காட்டிலுள்ள முயல்களைக் கொள்ளை கொண்டுண்ணும் அரிய பாலைநிலம்,

கடுங்கண் கானவர் — தறுகண்மையையுடைய கானவர்,

கானவர் (116) பயம்பின் ஒடுங்கிப் (108) பார்த்திருக்கும் (110) இரா வேட்டமழுங்கிற் பகனுளிலே (111) முயலேப் போக்கறவளைத்து (115) எருக்கிக் (112) கூட்டுண்ணும் (116) அருஞ்சுரமெனமுடிக்க,

117. அரு சுரம் இறந்த †அம்பர் குறும்பில் சேப்பின் — இவ்வரியநிலத்தைக் கைவிட்ட மற்றைநிலத்திற் குறும்பிற்றங்கில்,

குறும்பிற்சேப்பின் (129) என்பதனை இவ்விடத்துக்கூட்டுக.

இதனுல் நண்பகலும் வேனிலுமாகிய பாலைநிலங்கூறி அத்னைக்கலத்தில மும் கூறினர்.

இனி நீங்கள் அருஞ்சுரத்தைக்கடந்தபின்னரொன்றுமுரைப்பர்.

117 - 8. [பருந்துபட, வொண்ணுத் தெவ்வர் நடுங்க வோச்சி :] ஒன்னு தெவ்வர் நடுங்க பருந்து பட ஓச்சி —பொருந்தாதபகைவர் அஞ்சப் பருந்துகள் ‡படியக் குத்தி,

119 - 21. வை நுதி மழுங்கிய புலவு வாய் எஃகம் வடி மணி பலரையொடு நிரைஇ — கூர்மையையுடைய முனைமழுங்கின புலாலுறும் வாயையுடைய வேலை வடித்த மணிகட்டின பலகைகளோடே நிரைத்துவைத்து,

120 - 21. முடி நாண் சாபம் சார்த்திய கணை துஞ்சு வியல் நகர் — தலையிலே முடிந்த நாணையுடைய வில்லைச்சார்த்திவைத்த அம்புதங்கும் அகற்சியையுடைய வீடுகளையும்,

---

* பி - ம். மூட்டிவளைத்து.

† பி - ம். உம்பர், அம்பல்.

‡ பி - ம். மடிய.

122. ஊகம் வேய்ந்த உயர் நிலை வரைப்பின்—ஊகம்புல்லாலேவேய்ந்த உயர்ந்த நிலைமையினையுடைய மதிலையும்,

123 - 4. வரை தேன் புரையும் கவை கடை புதையொடு கடி தூடி தூங்கும் கணை கால் பந்தர்—மலையிற்றேனிறூசியொக்கும் குதையினையுடைத் தாகிய அடியினையுடைய அம்புக்கட்டுகளுடனே ஒசைபடிய தூடியுத்தூங்கும் நிரண்ட காலையுடைய பந்தரினையும்,

125. தொடர் நாய் யாத்த துன் அரு கடி நகர்—சங்கிலிகளாலே நாய் களைக்கட்டிவைத்த கிட்டுதற்கரிய காவலையுடைய வீட்டினையும்,

126. [வாழ்முள் வேலிச் சூழ்மினைப் படப்பை:] முள் வாழ் வேலி சூழ் மினை படப்பை—முள்ளையுடைய வாழ்வேலியினையும் அதனைச்சூழ்ந்த காவற் காட்டினையுடைத்தாகிய பக்கத்தினையும்,

127. கொடு நுகம் தழீஇய புதவின்—கொடிய கணையமரம் ஏறட்ட உட் கதவையுடைய வாயிலினையும்,

127 - 8. செ நிலை செடு நுதி வய கழு நிரைத்த வாயில்—செவ்விய நிலை யினையும் செடிய முனையினையுமுடைய வலியையுடைய கழுக்கள் நிரைத்த ஊர் வாசலினையுமுடைய.

பகைவரைக்குத்துதற்குக் கழுவைத்தார்.

129. கொடு வில் எயினர் குறும்பில் சேப்பின்—கொடிய வில்லையுடைய எயினசாதியிலுள்ளாருடைய அரணிலேதங்கின்,

கணை துஞ்சுவியனகர் (121) முதலியவற்றையுடைய குறும்பென்க.

130 - 31. களர் வளர் ஈந்தின் காழ் கண்டன்ன சுவல் மிளை செல்லின் செ அவிழ் சொன்றி—களர்நிலத்தேவளர்ந்த ஈந்தினதுவிதையைக் கண்டாற் போன்ற மேட்டுநிலத்தேவிளைந்த செல்லினது சிவந்த அவிழாகியசோற்றை,

132 - 3. ஞமலி தந்த பனவு சூல் உடும்பின் வறை கால்பாத்தது வயின் தொறும் பெறுகுவிர்—நாய்கடித்துக்கொண்டுவந்த அக்குமணிபோலும் முட்டை களையுடைய உடும்பினது பொரியலிலே மறைத்துத்தின மினைகளோடும் பெறு குவிர்;

சேப்பிற் பெறுகுவிரென்க.

134 - 6. யானை தாக்கினும் அரவு மேல் செலினும் நீல் நிறம் விசும்பின் வல் ஏறு சிலப்பினும் சூல் மகள் மாறு மறம் பூண் வாழ்க்கை—யானை தன் எதிரே செல்லினும் பாம்பு தன்மேலே செல்லினும் நிலநிரத்தையுடைய மேகத் திடத்தே வலிய உருமேறு இடிப்பினும் சூற்கொண்டமகள் அவையிற்றிற்கு அஞ்சி மீளா மறத்தைப்பூண்ட வாழ்வினையும்,

137. வலி கூட்டுணவின் வாள் குடி பிறந்த—தமது வலியாற் கொள்ளை கொண்டுண்ணும் உணவினையுமுடைய வாட்டொழிலேசெய்யுங் குடியிற்பிறந்த,

138. புலி போத்து அன்ன புல் அணல் காளை—புலியினது போத்தை யொத்த புல்லென்ற தாடியையுடைய அங்கிலத்தத்தலைவன்,

139 - 40. *செல்நாய் அன்ன கரு வில் கதிறமொடு கோள மன்னர் கடி புலம் புக்கு—தான் குறித்தவிலங்கின்மேலே செல்கின்றநாய் அதனைத் தப்பாமற் கொள்ளுமா றுபோன்ற கொடியவில்லையெடுத்த காவலாளருடனே தன் வார்த்தைகேளாத பகைவருடைய காவலியுடைய நிலத்தேசென்று,*

141. *காள் ஆ தந்து நறவு கொடை தொலைசி—விடியற்காலையிலே அவர்கன்பசுக்களைஅடித்துக்கொண்டுபோந்து அவர்தைக் கள்ளுக்கு விலையாகப் போக்கி,*

142. *இல் அடு கள் இன் தோப்பி பருகி—அதற்குப் பின்பாதுத் திமத இல்லிலே சமைத்த கள்ளுக்களில் இனிதாகிய செல்லாற்செய்த கள்ளையுண்டு,*

143. *'மல்லல் மன்றத்து மத விடை கெண்டி—வளப்பத்தினையுடைய ஊன்றிலே வலியையுடைய ஏற்றை அறுத்துத்தின்று,*

144. *மடி வாய் தண்ணுமை ஒலிவண் சிலேப்ப—தோலே மடித்துப் போர்த்த வாயையுடைய மத்தளம் தங்களுக்குரூடுவே முழங்காநிற்ப,*

145 - 7. [*சிலேகவி லெறுழ்த்தோ ளோச்சிவலன் வளையூஉப், பகன் மலிழ் தூங்கு தூங்கா விருக்கை, முரண்டலே கழிந்த பின்றை :] சிலே கவில் எறுழ் தோள் ஓச்சி வலன் வளையூ பகல் மலிழ்தூங்கும் தூங்கா முரண் தலே இருக்கை கழிந்த பின்றை—வில்லுப்பயின்ற வலியையுடைய இடத்தோளே யெடுத்து வலப்பக்கத்திலேவளேந்து பகற் பொழுதிலே மலிழ்ச்சியுடனே யாடும் அசையாப்பொருதலேயுடைய குடியிருப்பினைக் கடந்தபின்பு,*

இதனுற் குறிஞ்சிநிலம் முற்கூறி அதன்பகைப்புலமும் பிற்கூறினர்.

147 - 8. *மறிய குளகு அரை யாத்த குறு கால்—ஆட்டுமறிகள் தின்று தின்னுந் தன்மையையுடைய தழைகளேத் தம்மிடத்தேசட்டின குறிய கால்களேயும்,*

148 - 9. [*குரம்பைச், செற்றை வாயிற் செறிகழிக் கதவின் :]*

செற்றை வாயில்—சிறுதூற்றையுடைய வாயிலினையும்,

குரம்பை—குரம்பையினையும்,

கழி செறி கதவின்—கழிகளாற் கட்டப்பட்ட கதவினையும்,

150. [*கற்றை வேய்ந்த கழித்தலேச்சாம்பின் :]. கழித்தலே கற்றை வேய்ந்த சாம்பின்—வரிந்த கழிகளிடத்தே வாருகற்றைகளாலே வேய்ந்த சேக்கையையும்,*

151. [*அதளோன் முஞ்சங் காப்பி னுதள :] உதள அதளோன் அஞ்சும் காப்பின்—ஆடாயினுடைய தோல்களேப் பாயலாகவுடைய முதியோன் தூயில் கொள்ளுங் காவலியுமுடைய,*

* "மோத்தையுந் தகரு மூதளு மப்பரும், யாத்த வென்ப யாப்பின் கண்ணே" என்றுர்மரபியலில்.

---

* தொல்காப்பியம், மரபியல், 47.

னையினையும் (148) வாயிலினையும் கதவினையும் (149) சாம்பினையும் (150) காப்பினையு (151) முடைய குரம்பை (148) யென்க.

152. தெடு தாம்பு தொடுத்த குறு தறி முன்றில்—தாமணிதொடுத்த நெடிய தூம்புகள்கட்டின குறியமுனேவினையுடைய முற்றத்தினையும்,

153 - 4. கொடு முகம் தூவையொடு வெள்ளே சேக்கும் இடு முன் வேலி ஈரு படு வரைப்பின்—வளைந்த முகத்தினையுடைய செம்மறியாட்டுடனே வெள்ளாடுகிடக்குங் கட்டுமுள்ளாகிய வேலியினையுமுடைய எருமிகுகின்ற ஊரிடத்து,

குரம்பையினையும் (148) முன்றிலினையும் (152) வேலியினையுமுடைய வரைப்பென்க.

155. [நள்ளிருள் விடியற் புள்ளெழப் போகி.]

நள் இருள் விடியல் புள் எழ—செறிந்த இருள்போகின்ற காலத்தே பறவைகள் துயிலெழாநிற்ப,

போகியென்பதனை மேலேகூட்டுக.

156. புலி குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி—புலியினது முழுகுமபோலும் முழக்கத்தையுடைய மத்தை ஆரவாரிக்கும்படி கயிற்றைவலித்து,

157 - 8. ஆம்பி வால் முகிழ் அன்ன கூம்பு முகை உறை அமை தீ தயிர் கலக்கி—குடைக்காளானுடைய வெள்ளிய முகைனேயொத்த குவிந்த முகிழ்களேயுடைய உறையாலே இறுகத்தோய்ந்த இனிய தயிரைக்கடைந்து,

முகை - மொட்டு. முகிழ் - ஆடையின்மேல் புடைத்துநிற்பது.

158. நுரை தெரிந்து—வெண்ணெயையெடுத்து,

159. புகர் வாய் குழிசி பூ சுமடு இரீஇ போகி (155)—தயிர் புள்ளியாகத்தெறித்த *வாயையுடைய மோர்ப்பானையைப் பூவாற்செய்த சுமட்டைத் தலையிலேவைத்து முற்கூறிய குறிஞ்சிநிலத்தேதெறப்போய்,

160. நாள் மோர் மாறும்—காலையிலே மோரைவிற்கும்,

நல் மா மேனி—நன்றாகிய மாமையாகிய நிறத்தினையும்,

161. சிறுகுழை தயல்வரும் காதின்—தாளுருவியசையும காதினையும

பணை தோள்—மூங்கில்போலும் தோளினையும்,

162. சுறு நெறி கொண்ட கூந்தல்—குறிதாகிய அறலைத்தன்னிடத்தே கொண்ட மயிரினையுமுடைய,

ஆய் மகள்—ஆய்ச்சாதியிற்பிறந்தமகள்,

மேனி முதலியவற்றையுடையமகள்.

163. அரிவி வில்லை உணவின் இனோ உடன அருந்தி - மோர்விற்றதனாலுண்டாகிய நெல் முதலியவற்றாலே சுற்றத்தாரெல்லாரையும் உண்ணப்பண்ணி;

---

* பிரதி. நிறத்தையுடைய.

164. செய் வினை கட்டி பசு பொன் கொள்ளான்—பின்பு தான் செய்யை விற்கின்றவினைக்குக் கட்டியாகப் பசும்பொன்னை வாங்காளாய்,

165. எருமை நல் ஆன் கரு ராகு பெறூஉம் குடி (166)—பாலெருமையையும், நல்லபசுவையும், கரிய எருமைராகினையும் செய்க்கு ஒப்பாகச்சொல்லி வாங்குங்குடி,

* அட்டியென்றுபாடமோதி வார்த்தென்றுகூறுதலுமாம்.

குறிஞ்சிநிலத்தே செய்யைவிற்று அவர்கள் அடித்துக்கொண்ட எருமை முதலாயவற்றை விலையாகவாங்கினரென்க.

166. மடி வாய் கோவலர்—சீழ்க்கைபிடித்தலாலே மடித்த வாயையுடைய இடையர்.

குடி வயின் சேப்பின்—குடியிருப்பிலே தங்குவீராயின்,

167 - 8. [இருங்கினை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன, பசுங்கினை மூரல் பாலொடும் பெறுகுவிர் :] ஞெண்டின் இரு கினை சிறு பார்ப்பு அன்ன பசு கினை மூரல் பாலொடும் பெறுகுவிர்—கண்டினது பெரிய சுற்றமாகிய சிறிய பார்ப்பையொத்த செவ்வித்தினையரிசியொலாக்கின சிலுத்தசோற்றைப் பாலுடனேபெறுகுவிர் ;

புன்னெழாகிற்க (155) வாங்கிக் (156) கலக்கித் தெரிந்து (158) இரீஇப் (159) போகி (155) மாறும் (160) ஆய்மகள் (162) என்க.

மடிவாய்க்கோவலர் (166) வரைப்பிடத்து (154) ஆய்மகள் (162) அருத்திக் (163) கொள்ளாளாய்ப் (164) பெறூஉங் (165) குடிவயிற்சேப்பின் (166) மூரல் பாலொடும்பெறுகுவிரெனமுடிக்க.

169. தொடுதோல் மரீஇய வடு ஆழ் தோன் அடி—செருப்புவிடாமற் கிடந்த வடுவழுந்தின வலியையுடைய அடியினையும்,

170. விழு தண்டு ஊன்றிய கை—பசுக்களுக்கு வருத்தஞ்செய்யும் தடியையூன்றின கை,

மழு தின் வல் கை—மாங்களை ஒடியெறிந்து கொடுக்கும் கோடாரியால் தழும்பிருந்த வலிய கையினையும்,

171. உறி கா ஊர்ந்த மறு படு மயிர் சுவல்—இரண்டுதலைகளிலும் உறியினையுடைய காக்கள் மேலேயிருந்ததனால் உண்டாகிய தழும்புமிக்க மயிர் சொழுந்த தோட்கட்டினையும்,

172. மேம் பால் உரைத்த ஓரி—எல்லாமணமும் பொருந்தும் பசுக்கறந்த பாற்கையைத் தடவின மயிரையும்,

172 - 4. [ஓங்குமிசைக், கோட்டவுங் கொடியவும் விரைஇக் காட்ட, பல்பூ மிடைந்த படலைக் கண்ணி :] காட்ட ஓங்கு மிசை கோட்டவும் கொடியவும் பல் பூ விரைஇ மிடைந்த படலை கண்ணி—காட்டிடத்தனவாகிய உயர்

* 'செய்விலைக்கட்டி' (164) என்பதை செய்விலைக்கு அட்டியெனப்பிரிக்க.

ன்ற உச்சியினையுடைய கொம்புகளிலுள்ளவும் கொடிகளிலுள்ளவுமாகிய பல பூக்கள் கலந்திருந்துங்கிய கலம்பகமாகிய மாலையினையும்,

175. ஒன்று அமர் உடுக்கை—ஒன்றுய்ப்பொருந்திய உடையினையுமுடைய,

கூழ் ஓர் இடையன்—பாற்சோற்றையுண்கின்ற இடையன்,

அடிமுதலியவற்றையுடையஇடையன்.

176. கன்று அமர் நிரையொடு கானத்து அல்கி—கன்றுகள்பொருந்தின பசுத்திரளோடே காட்டிலேதங்கி

177 - 9. [அந்து ணவிர்புகை கமழக் கைம்முயன்று, ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச், செந்தீத் தொட்ட கருந்துளைக் குழலின் :]

ஞெலிகோல் அம் நுண் அவிர் புகை கமழ கை முயன்று கொண்ட செ நீ ஞெகிழி தொட்ட கரு துளை குழலின்—நீக்கடைகோலாலே அழகிய நு ணியதாய்விளங்கும் புகை முற்படப்பிறக்கும்படி கையாலேகடைக்தகொண்ட கிவந்த நெருப்பினையுடைய கடைக்கொள்ளியால் துளையிட்ட கரிய துளையினையுடைய குழலாலெழுப்பின,

பெருவிறலென்பதனை இடையனென்பதனெடு முன்னேகூட்டியெண்ணுக.

இனி, ஞெலிகோல் படுத்தகோல், ஞெகிழி கடைகின்றகோலென்று முரைப்பர்.

180. இன் நீ பாலை முனையின்—மிகவுமினிய பாலையென்கின்ற பண்ணைத் தான் வெறுக்கில்,

180 - 82 [குமிழின், புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின், வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சி :] குமிழின் புழல் கோடு தொடுத்த மரல் புரி விரல் எறி நரம்பின் வில் யாழ் இசைக்கும் குறிஞ்சி—குமிழினது உட் பொய்யாகிய கொம்பிடத்தே வளைத்துக்கட்டின மரற்பெயிறுகிய விரலாலேதெறித் தவாகிக்கும் நரம்பினையுடைய வில்லாகிய யாழொலிக்குங் குறிஞ்சியென்கின்ற பண்ணை,

183. பல் கால் பறவை இனை செத்து ஓர்க்கும்—பலகாலினையுடைய வண்டுகள் தம் சுற்றத்திற்னேயைாகக்கருதிச் செவிகொடுத்துக்கேட்கும்.

* "ரண்டுந்தும்பியும்" என்னுஞ் சூத்திரத்திற் செவிப்பொறியான் இவை யுணர்தல்கூறினும்.

184. புல் ஓர் வியல் புலம் போகி—புல்லுகிறைந்த அகற்சியையுடைய நிலத்தைக்கடந்துபோய்,

முன்னர் இடையர்குடியிருப்புக்கூறிப் பின்னர் அவர்பசுக்கள்முதலியன கிற்கின்ற முல்லைநிலமுங்கூறினர்.

* தொல்காப்பியம், மரபியல், 31.

184 - 5. முள் உடுத்து எழு காடு ஒங்கிய-தொழு உடை வரைப்பின்—முன்னுந் தன்னிடத்தேசூழ்ந்து எழுகின்ற * விடத்தேதொடரி முதலிய கற்று சன்னுமவர்ந்த தொழுக்களையுடைய ஊர்களில்,

இது, பசுக்கன்முதலியனமேயாமற் காக்கின்ற இனங்காட்டையுடைய படைத்திலைவரிருப்புக்கூறிற்று.

186. பிடி கணத்து அன்ன குரும் உடை முன்றில்—பிடித்திரள்கின்றற் போன்ற வரகுமுதலியனகிற்குங குரிர்களையுடைய முன் றிலினையும்,

187. களிறு தான் புரையும் நிரிமரம் பன்தர் — யானையினது காலை யொக்கும் வரகுநிரிகை நட்டுநிற்கும் பந்தரினையும்,

188 - 9. குறு சாடு உருளையொடு கலப்பை †சாதனி நெடு சுவர் பறைத்த புகை சூழ் கொட்டில்- குறிய சகடத்திலுருளைகளோடே கலப்பையையும சார்த்திலைவக்கையினுலே நெடிய சுவரிடத்தில் தேய்ந்த புகைசூழ்ந்த கொட்டி னையுமுடைய,

நெடுகக்கட்டி ஒருபக்கத்திலே அடுப்பெரிதது ஒருபக்கத்திலே தொழிலொ ழிந்த காளில் சகடையிலுருளையையும கலபையையுஞ்சார்த்தி எருதுகளுங் கட்டிநிற்றலிற் கொட்டிலெனறார்.

190 - 91. பருவ வானத்து பா மழை கடுப்ப கரு வை வேய்ந்த கவின குடி சிறு ஊர—மாரிக்காலத்தையுடைய விசும்பிடத்தே பரந்த மேகத்தையொப்ப வரகுவைக்கோலாலேவேய்ந்த அழகினையுடைய குடியிருப்பினையுடைய சிறிய ஊர்களிலே,

சோர். அம்முல்லேலிலத்து உழுதுணபாரிருப்பு.

192 - 3. நெடு சூரல் பூவை பூவின அன்ன குறு தாள் வரகின குரல அவிழ் சொன்றி—நெடிய கொத்தினையுடைய சிறுபூனையினது பூவையொத்த குறிய தாளினையுடைய வரகினது சிறிய அவிழ்களாகிய சோற்றை

194 - 5. புகர் இணர் வேங்கை வீ கண்டன்ன அவரை வால் புழுக்கு அட்டி—நிறத்தையுடைய கொத்தினையுடைய வேங்கைப்பூவைக் கண்டா லொத்த அவரைவிதையினது கன்றுகியபருப்பை மிகவிட்டு,

வேங்கைப்பூ வரிகளையுடைய விதைக்கு உவமை புழுக்கு - புழுங்கவொ தது; கும்மாயமுமாம்; பருப்புச்சோறுமென்ப.

195 - 6. ‡ [பயில்வுற், றின்சுவை சூழற் பெறுகுவீர்.]

இடையன் (175) அல்கிப் (176) பாலையைத தான்முனையின் (180) அதை னைக் கைவிட்டு வீரலாலே வாசிக்குங்குறிஞ்சியைப் (182) பறவையோர்க்கும

---

* விடத்தே தொடரி - ஒருவகை மூன் மரம்; விடத்தி, விடத்தேரை, விடத்தேரென இப்பெயர வழங்கும்,

† பி - ம். சாத்தி.

‡ இதற்கு ஒருபிரதியிலும் உரையிடைததிலது. கலத்தலினுலே இனிய சுவையினையுடைத்தாகிய சூரலேபோலே பெறுகுவிரென்க.

(182) புரையுறைத்தம் போகி (184) யுரைப்புக்களின் (185) முன்றில் (186) முத லியவற்றையுடைய நிறுர்களிலே (191) வரின்சொன்றியைப் (193) புகுச்சை யட்டி (195) நமாலோடே பெறுகுவிரெனமுடிக்க.

196. ஞாங்கர்—அந்நிலத்திற்குமேல்,

197. குடி நிறை வல்லி செ சால் உழவர்—அக்குடியிருப்புநிறைத்த உண வினையுடைய செவ்விய சீலாகவமுகின்ற உழவுத்தொழிலையுடையோர்,

ஒருசார் இருசாலென்றல் உழவுத்தொழிற்குமரபு.

198. கடை நவில் பெருங் பகடு புதவில் பூட்டி—உழவுத்தொழிலிலே பயின்ற பெரிய எருதுகளை வாயிலிலே நகத்தைப் பூட்டிச் கொண்டுசென்று,

199 - 200. பிடி வாய் அன்ன மடி வாய் நாஞ்சில் உடும்பு முகம் முழு கொழு மூழ்க ஊன்றி—பிடியினது வாயையொத்த வளைக்தவாயையுடைய கலப் பையினுடைய உடும்பினது முகத்தையொத்த பெருங்கொழு மறைய அமுக்கி

201. தொடுப்பு எறிந்து உழுத துஞர் படு திடவை—முற்பட வளைய வுழுது விதைத்தபின்னர் இடையே உழுத கிளைகளைக் களைக்கொட்டுச்செத்திய தோட்டத்தை,

202. அரி புரு பொழுதின—அறுக்கும்பருவம் வருங்காலத்தே,

202 - 5. [இரியல் போகி, வண்ணக் கடம்பி னறுமல ரன்ன, வளரிளம் பிள்ளை தழீஇக் குறுங்காற். கறையணற் குறுப்பூழ் கட்சி சேக்கும்:]

குறு கால் கறை அணல் குறும்பூழ்—அதன்கட்டங்குங் குறுங்காலினையும் கருமையையுடையகழுத்தினையுமுடைய குறும்பூழ்,

வண்ணம் கடம்பின் நறு மலர் அன்ன வளர் இள பிள்ளை தழீஇ—வெள் ளிய நிறத்தையுடைய கடம்பினது நறுகாற்றத்தினையுடைய பூவையொத்த வள ருகின்ற இளையபிள்ளைகள் மிகவும் பறதலாற்றுதனவற்றையும் கூட்டிக் கொண்டு,

*"பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றினமை" என்றார்.

இரியல் போகி கட்சி சேக்கும்—அவர்களாரவாரத்திற்கஞ்சிக் கெடுதற்றன் மையையுடையவாய் ஆண்டுநின்றும்போய்க் காட்டிடலேதங்கும்,

206. வல் புலம் இறந்த பின்றை—முல்லைநிலத்தைப் போனபின்பு,

இதனுல், முற்றுங்குடிச்சிறாருழவரால் உழுதற்குரிய முல்லைநிலமுங்கூறி னர். இது மருதநிலத்தைச்சேர்ந்த முல்லைநிலம்.

உழவர் பூட்டி ஊன்றி உழுத்தடவை அரிபுருபொழுதில் குறும்பூழ் பின்னை தழீஇப் போகிச் சேக்கும் வன்புலமென்க.

206 - 7. மெல் தோல் மிதி உலை கொல்லன் முறி கொடிறு அன்ன மெத்தென்ற திருத்தியை அமுக்கி ஊதுகின்ற உலையில் தொற்றொழில்செய் கின்றவனுடைய முறித்த கொடித்தையொத்த,

* தொல்காப்பியம், மரபியல், 4.

208: கவை தான் அலவன் அளறு அனை இதைய—கப்பித்த காலையுடைய ஞெண்டினது சேற்றின்கண்உண்டாகிய முழைகெடும்படி,

209 - 10. பை சாய் கொன்ற மண் படு மருப்பின் கார் ஏறு பொருத கண் அகல் செறுவின்—பசியகோரையை அடியிலே குத்திஎடுத்த மண்டிடக் கின்ற கொம்பையுடைய கரிய கடாக்கள் தம்மிற்பொருத இடமகன்ற செய் யின்கண்,

211. உழாஅ நுண் தொளி நிரவிய வினைஞர்—தாம் உழப்படாத அந்த நுண்ணிய சேற்றை ஒக்கமிதித்தஉழவர்,

212. முடி நாறு அழுத்திய நெடு நீர் செறுவில் — முடியாகக்கிடக்கின்ற நாற்றைநட்ட செடியநீரையுடைய செய்களில்,

இதையக் கொன்ற மருப்பின் ஏறுபொருத செறுவில் தொளியைநிரவிய வினைஞர் நாற்றையழுத்திய செறுவென்க.

213 - 4. களைஞர் தந்த கணை கால் நெய்தல் கள் கமழ் புது பூ முனை யின்—அச்செய்யில் களைகளைப்பறிப்பார் பறித்து ஏறட்ட திரண்டதாளினை யுடைய செய்தலினது தேனுறுகின்ற புதியபூவை வெறுத்தாராயின்,

214 - 6. [முட்சினை, முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிக், கொடுங் காண் மாமலர் கொய்து கொண்டு:] முகை சூழ் முள் சினை முள்ளி தகட்ட கொடு கால் பிறழ் வாய் மா மலர் கொய்து கொண்டு—அரும்புகள் சூழ்ந்த முள் ளையுடைய கொப்புகளையுடைய முள்ளியின் இதழையுடையவாகிய வளைந்த காலையும் மறிந்தவாயையும் கருமையையுமுடைய பூவைப்பறித்துக்கொண்டு,

216 - 8. அவண பஞ்சாய் கோரை பல்லின் சவட்டி புணர் நார் பெய்த புனைவு இன் கண்ணி—அங்ஙனத்திலுண்டாகிய தண்டாஞகிய கோரையைப் பல்லாலே மென்றுமென்று கிழித்து முடிந்த நாராற்கட்டின புனைதற்கினிய மாலையை,

219. ஈர் உடை இரு தலை ஓர சூடி—ஈருடைத்தாகிய கரிய தலைகளை யும்படி சூடி,

220. பொன் காண் கட்டளை கடுப்ப *சண்பின்—பொன்னையுரைத்து மாற்றுக்காணும் உரைகல்லையொப்பச் சண்பினது,

221. புல் காய் சுணங்கம் புடைத்த மார்பின்—புல்லிய காயிற்றேன்றின தாதை அக்கினிரைமுறித்து அடித்துக்கொண்ட மார்பினையும்,

தாதுநீனக்கிடந்தது உரைத்தாற்போன்றது.

222. இருப்பு வடித்தன்ன மடியா மெல் தோல்—இரும்பைத் தகடாக் கினலொத்த நிரையாத மெல்லிய தோலினையுமுடைய,

223. கரு கை வினைஞர் காதல் அம் சிறு அர்—வலிய கையால் தொழில் செய்வாருடைய விருப்பத்தையுடைய அழகிய சிறுபின்னைகள்,

* பி - ம். கணப்பின், சணப்பின்.

224. பழ சோறு அமலை முனைஇ — பழைய சோற்றினது கட்டியை வெறுத்து,

224 - 6. வரம்பில் புது வை வேய்ந்த கழி குடில் முன்றில் அவல் எறி உலக்கை பாடு லிறந்து —வரம்பிடத்துப் புதிய வைச்சோலவேய்ந்த கலித்த குடிலினுடைய முற்றத்தே அவலிடிக்கும் உலக்கையினது ஓசை செறிகை தினலே,

குடில்கள், பன்றி முதலியனவற்றைக் காத்தற்குச் கட்டினவை.

226 - 7. அயல கொடு வாய் வின்னர் படு பகை வெரூஉம் —அதற்கு அயலிடத்தனவாகிய வினைத்த வாயையுடைய வில்லர்கள் தமக்குண்டாகின்ற பகையாக நினைத்து அஞ்சும்,

228. நீங்கா யாணர் வாங்கு கதிர் கழனி —இடையறுதத புதுவருவாயினையுடைய வளையுங்கதிரினையுடைத்தாகிய கழனியிடத்து,

229. கடுப்பு உடை பறவை சாதி அன்ன —எறியப்பட்டார்க்குக் கடுக்குர் தன்மையைக் கொடுத்தலே யுடைய குளவித்திரளையொத்த,

230. பைது அற வினைத்த பெரு செ செல்லின் — பசுமையறும்படி முற்றின பெரிய செச்செல்லினுடைய,

231. தும்பு உடை நிரள் தாள் துமித்த வினைஞர் —உள்ளுப்பொப்பை யுடைத்தாகிய நிரண்டதாளையறுத்த தொழில்செய்வார்,

232. பாம்பு உறை மருதின் ஓங்கு சினை நீழல் —பாம்புகிடக்கின்ற மருதினது உயர்ந்த கொம்பாலுண்டாகிய நிழலிலே,

பழையமரமாதலிற் பாம்புகிடக்குமென்றார்.

233. பலி பெறு கியல் களம் மலிய எற்றி —ஆண்டுறையுந்தெய்வங்கள் பலிபெறுகின்ற அகன்ற களங்களிலே மிகவுநிறையப் போராகவிட்டு.

234 - 5. [கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந் தாடும், துணங்கையம் பூசல் தணிலுடுத்தவைபோல்:] கணம் கொள் சுற்றமொடு கை புணர்த்து துணங்கை ஆடும் அம் பூசல் தணில் உடுத்தவைபோல் —நிரட்கொண்ட தம்முடைய சுற்றத்தோடே ஒழுங்காகச்செறிந்துநின்று துணங்கைக்கூத்தாடுகின்ற அழகினையுடையபூசங்கள் வெள்ளிய தகிலையுடுத்தினதவைபோல,

என்றது, தமில் வினையாடுவதற்குத்திரண்ட பூசமென்றவாறு.

236 - 7. சிலம்பி வால் நூல் வலந்த மருங்கின் குழுமு லிலை *போரின் முழு முதல் தொலைச்சி — லெங்கியினது வெள்ளியநூல்சூழ்ந்த பக்கத்தினையுடைய பலவாகத்திரண்ட தன்மையினையுடைய போர்களினுடைய பெரிய அடியை வாங்கிவிரித்து,

238. பகடு ஊர்பு இழிந்த பின்றை —எர்கள் கடாவிட்டுப் போனபின்பு,

238 - 9. தகன் தப வையும் திரும்பும் நீக்கி —குற்றமறும்படி வைக்கோலையும் கூளத்தையும் அதனிடத்தினின்றுநீக்கி,

---

* பி - ம். போர்பின்.

239. வெற்றி அற—தோல்வி உண்டாகித்த,

240. குடகாற்று எறிந்த குப்பை—மேல்காற்றாலே கையாலே தூவித்தூற்றின தொழி,

240 - 41. வடபால் செம்பொன் மலையின் நெடிய தோன்றும்—வட திசைக்கணுள்ளதாகிய மேருவாகிய மலைபோலே மிகும்படி தோன்றும்,

242. தன் பணை தழீஇய தனா இருக்கை—மருதநிலஞ்சூழ்ந்த அரசியாதகுடியிருப்புக்களில்,

மார்பினையும் (221) தோளினையுமுடைய (222) வினைஞர்ஓர் (223) மூன்றி (224) அவலெறியுலக்கைப்பாடுவிதக்கையாலே (226) வென்ற வெறுமை (227) கழனிகளில் (228) வினைத்த செல்லினைத் (230) தும்பித்த வினைஞர் (231) ஏற்றித் (233) தொலைச்சி (237) நீக்கி (239) எறிந்தகுப்பை (240) தோன்றும இருக்கை யெனக்கூட்டுக.

243 - 4. பகடு ஆ ஈன்ற கொடு கடை குழவி கவை தாம்பு தொடுத்த காழ் ஊன்று அல்குல்—பெருமையையுடைய பசுக்களீன்ற வினைத்த அடியையுடைய கன்றுகளைக் கட்டின தாமணியையுடைய தொடியாற்புகள் கட்டிக் கிடக்கின்ற தறிகளாட்ட பக்கத்தினையும்,

மூழுவலி தழும்பு தோய்தபு நோன்றொடை, நுண்கொடி யுழிஞை வெல்போ ரரசை" என்றார்பிறரும். கவை-ஆகுபெயர்.

245. [ஏணி யெய்தா நீணெடு மார்பின் :] நீள் எணி எய்தா நெடு மார்பின்—நீண்ட எணிக்கு எட்டாத நெடிய வடிவினையும்,

246. முகடு தமித்து அடுக்கிய பழ பல் உணவின்—தலையைத்திறந்து உள்ளே சொரியப்பட்ட பழையவாகிய பல செல்லினையுமுடைய,

பல்லுணவெண்ணூர், செங்கொன்முதலிய சாதிப்பன்மைகருதி.

247. குமரி மூதத கூடு ஓங்கு நல் இல்—அழியாத்தன்மையவாய் முதிர்ந்த கூடுகள் வளர்ந்த நல்ல இல்லினையும்.

அல்குலினையும், மார்பினையும், உணவினையுமுடைய கூடென்க.

248 - 9. தச்சச்சிறுஅர் நச்ச புனைந்த ஊசா நல் தேர் உருட்டிய புதல்வர்—தச்சச்சாதியிற்பிறந்த தொழில்செய்தற்குரிய சிறியோர் பிறர்விரும்பும்படி பன்னிண பிறராலே எறப்படாத நல்ல சிறுதேரை உருட்டிக்கொண்டுதிரிந்த பின்னைகள்,

250. தனூர் கடை வருத்தம் வீட தமது தனர்கடையாலுண்டானவருத்தம் தம்மைவிட்டு நீங்கும்படி,

250 - 52. அஞர் மூலை செவிலி அம் பெண்டிர் தழீஇ பால் ஊர்ந்து அமளி தஞ்சும் அழகு உடை நல் இல்—பால்சுரந்த முலையினையுடைய செவிலித் தாயாகிய அழகினையுடைய மகளிரைத் தழுவிக்கொண்டு அம்முலையிற் பாலை

* பதிற்றுப்பத்து, 44.

நின்றியுண்டு நிலைபெறுகாலையே நிலையிலொருவனும் அழுக்காறுபுண்டதோயில்லை யென்னும்,

செவ்வியம் பெண்டிரென்பது ஒருமைபன்மைமயக்கம்.

253 - 4. தொல் பலி அறியா தளாகா இருக்கை மல்லல் பெரு ஊர் மடியின்—ஏனோர்க்கிடற்குரியவல்லாயிய பழையமிடியையறியாத அசையாத குடிபிருப்பினையுமுடைய வளப்பத்தையுடைத்தாயிய பெரிய ஊரின்கண்ணே தங்கின்,

254 - 5. மடியா விளைஞர் தந்த வெள் செல் வல்சி மனை வாழ் அல்கின் வாட்டோன்றும் பெறுகுவிர்—தொழிலொழிந்திராத தொழில்செய்விர் கொண்டு வந்த வெள்ளிய நெற்சோற்றினை மனையின்கண்ணேவாழும் கோழிப்பெண்டையினுற் சமைத்த பொரியலோடு பெறுகுவிர்;

*"கோழி கூகை யாயிரண் டல்லவை. குழுங் காலை யனனென லமைய" என்றார்.

செறுவிற் (212) புதுப்பூமனையின் (211) மாமலர் கொய்துகொண்டு (216) சுவட்டிப் (217) பெய்தகண்ணியைச (218) சூடித் (219) தளராவிருக்கைகளிற் (242) கூடோங்கு கல்ல இல்லையும் (247) அழனெயுடைய கல்ல இல்லையும் (252) தினைகிளரிருக்கை யினையுமுடைய (253) பேரூரிலே தங்குவிரினின் (254) வல்லியை (255) வாட்டொடும்பெறுகுவிரெனச் கூட்டுக.

257 - 9. [மழலினின் யாடுங் கழைவன மாடுக்கத், தணங்குடை யாளி தாகலின் பலவுடன், கணஞ்சுல் வேழங் கதழ்வுற் றுதங்கு:] மழை விளையாடுமிடமாகிய கழை வின்கண்ணே அணங்கு உடையாளி தாக்கலின் கணம் சால் வேழம் பல உடன் கதழ்வு உற்றாங்கு—மேகங்கள் வீனையாடித்திரியும் சூழ்ந்திவ்வுலகின்கண்ற பக்கமலையிலே தம்மைவருத்துதலேபுடைய யாளிபாய்தலினாலே நிரட்சியமைந்த யானைபலவுங்கூடிக் கலங்கிக் கூப்பிட்டாற்போல.

260 - 61. எந்திரம் நிலைக்கும் துஞ்சா கம்பலை விசயம் அடுக்கம் புகைசூழ் ஆலதொறும்—ஆலையாரவாரிக்கும் மாறாதவொசையையுடைய கருப்பஞ்சாற்றைக் கட்டியாகக் காய்ச்சும் புகைசூழ்ந்த கொட்டில்தோறும்,

ஆலை ஆருெயர்.

262. கரும்பின் நீ சாறு விரும்பினிர் மிசைமின்—கரும்பின்றி இனிய சாறுடை முற்படக்குடித்துப் பினனர் அக்கரும்பின் கட்டியைத் தின்பிரீர்.

† "மூங்கின் மிசைந்த முழர்தா ளிரும்பிடி," ‡ "வீழ்னிழ மிசையாப் புலியினும்" என மிசைதல் தின்றற்றொழிலின் மேனின்றது.

263 - 5. [வேழ வினரத்து வெண்கோடு விளரித், தாழ்ந்து முடித்துத் தருப்பை வேய்ந்த, குறியிறைக் குரம்பை:] வெள் கோடு விளரிறி வேறும் நிரைத்து தாழை முடித்து தருப்பை வேய்ந்த குறியிறை குரம்பை—வஞ்சிமா

* தொல்காப்பியம், மரபியல், 55.

† கலித்தொகை, 50. ‡ அகநானூறு, 29.

மும் காஞ்சிமரமுமாகிய வெள்ளிய கொம்புகளைக் கைகளுக்குடுவே கலக்து காற்றி வேழக்கோலை வரிச்சாகவிரைத்துத் தாழைநாராற்கட்டித் தருப்பைப் புல்லாலே வேயப்பட்ட குறிய இறப்பையுடைய குடிலினையும்,

முடிதந்து முடித்தெனவிகாரம். குறியிறை பண்புத்தொகையாதலின், மருவின்பாத்தியதாய் நின்றது.

265. பறி உடை முன்றில்—மீனைவாரியெடுக்கும் பறிகளையுடைய முற்றத்தினையுமுடைய,

266 - 7. கொடு கால் புன்னை கோடு துமித்து இயற்றிய பைங்காய் தூங்கும் பாய் மணல் பந்தர்—வளைந்த காலையுடைய புன்னைகளினது கொம்புகளை வெட்டியிட்ட பசியகாய்கள்காலும் பரந்த மணலையுடைய பந்தரிலே,

பைங்காய் - சுரைக்காய்முதலியன; புன்னங்காயுமாம்.

268. இளையரும் முதியரும் இளையுடன் தூவன்றி—இளையவர்களும் முதிர்ந்தவர்களும் சுற்றத்துடனே நிறைந்திருந்து பின்பு,

269 - 71. புலவு நீனை பகழியும் சிலையும் மான செவரி கயலொடு பசு இரு பிறழும் மை இரு குட்டத்து மகவொடு வழங்கி—புலாலுறுநீனையினையுடைய அம்பையும்வில்லையுமொப்பச் சிவந்தவரியினையுடைய கயல்களோடே பசியஇருப் பிறழும் கருமையையுடைய பெரிய ஆழ்ந்த குளங்களைப் பிள்ளைகளோடேயுலாவி மீனைப்பிடித்து,

272 - 3. கோடை நீடினும் குறைபடல் அறியா தோள் தாழ் குளத்த கோடு காத்திருக்கும்—கோடைக்காலம் நீட்டித்துநின்றதாயினும் வற்றுதலேயறியாத கையை மேலே கூப்பிமுழுகி நீர்நிலைகாட்டுங்காலத்துக் கையமிழ்த்துங் குளங்களினுடைய கரையைக்காத்திருக்கும்,

* "வெளிற்றுடம் குருதிவெள்ள நிலேயித வெண்ப வேபோற், களிற் றுரிப்ப பிறழ்பற் பேய்கள் கைகளே யுச்சிக் கூப்பி, யளித்தவை பாடி யாட" என்றுபிறரும்.

274. கொடு முடி வலைஞர் குடி வயின் சேப்பின்—வளைந்த முடியினையுடைய வலையை வீசுவாருடைய குடியிருப்பிலே தங்குவீராயின்,

பந்தரிலே (267) தூவன்றி (268) வழங்கிக் (271) காத்திருக்கும் (273) வலைஞரொடுமுடிக்க.

குரம்பையினையும், முன்றிலினையு (265) முடைய குடி (274) யென்க.

275. அவையா அரிசி அம் களி தழவை—குற்றாத கொழியலரிசியை அழகினையுடைய களியாகத் தழாவி யட்ட கூழை,

276. மலர் வாய் பிழாவில் புலா ஆற்றி—அகன்ற வாயையுடைய தட்டுப் பிழாவிலே உலரவார்த்து,

277 - 8. பாம்பு உறை புற்றின் குரும்பி வய்க்கும் பூ புறம் கல் அடை அனில—பாம்புகிடக்கின்ற புற்றின்கட்கிடக்கும் புற்றும்பழஞ்சோற்றையொக்

* சீவகசிந்தாமணி, 804.

கும பொலிவுபெற்ற புறத்தினையுடைய கல்ல முளையையிடித்துச் சோ அதனை அதிலேகலத்து,

செல்லுடையும பாடம

278 - 9 [தேமபட, எல்லையும இரவும இருமுறை கழிப்பி] தேம பட இரு எல்லையும இரு இரவும முறை கழிப்பி—இனிமையிறக்குமபடி இரண்டு பகலும இரணடிரவும அரியாமல் வைத்து,

280 - 81 [வல்வாயச சாடியின வழைசசுற வீளாத, வெங்ரீ ரியல் விரலலே றமபிழி]

வல வாய சாடியின வழைசசு அற வீளாத—வலியவாயினையுடைய சாடி யினகண்ணே இளமையறுமபடி முறறின,

விரல் அலை அரியல் வெ நீர நறு பிழி—விரலாலே அலைத்து அரிக்குச் சுணமையையுடைத்தாகிய வெவ்விய ரசமையையுடைய நறியகள்ளை,

282 தண மீன சூடடொடு ளாத்தலும பெறுகுவிர—மிகவும உவராத மீனைசசுடடகளேடே இளை தவளவிலே பெறுகுவிர,

ஆறறி (276) அளைஇக (278) கழிபபி (271) வீளாத (280) பிழியெனக குடிவயிற சேபபின (271) பிழி யப பெறுகுவிரெனமுடிக்க

283 பசு ரான பெயத சுவல பிணி பைபதோல—செவவியான இறைசசி யிடடுவைத்த தோளிடதேத் தோத்து நாறறின பசியதோலினையுடைய,

எனறது தூணடிலிற்கோகுரு இரையிடடுவைக்குர தோறபையை

284 கோள வல பாண ம னை மீனைத தபபாமறபிடிக்கவல பாணசாதி யிறபிறரதவன,

281 7 [தலைவலித் தியாத்த, நெடுங்கழைத் தூணடி னடுங்க நாண தொளீஇக, கொடுவா யிருமபின மடிதலை புலமபப, பொறியிரை கதுவிய போழ வாய வாளை]

நெடு கழை தலை வலிதது யாத்த நாண தூணடில கொளீஇ பொறி இரை—நெடிய மூங்கிறகோலைத தலையிலேவலித்துக்கடடின கயிறறிடததே தூணடிலைக கொளுத்தில் அதனை மறையப பொதிந்த இரையை

கொடு வாய இருமபின மடி தலை புலமப நடுங்க கதுவிய போழ வாய வாளை—வளைந்த வாயினையுடைய தூணடிலினது மடிதத்தலே இரையினறித தனிகருமபடியாகக கயிறடுங்க அவவிரையைக் கௌவி அகபபடாதபோன அங்கார்தலையையுடையவாளைமீன,

288 - 9 நீர நணி பிரமபின நடுங்கு நிழல வெருஉம நீ்தது உடை நெடு கயம—நீரகருகணித்தாயினறு பிரமபினது காறறுலசையுநிழலை நீரிற்கணடஞ சும பெருகலினையுடைய நெடியகுளத்திலே,

289 - 90 நீ பட மலாந்த கடவுள ஒள பூ அடைதல ஓமபி—நெருப்பின றனமை நீரிலே யுணடாகபபூத்த கடவுள்ளுடற்குரிய ஒள்ளிய தாமரைப் பூவைப்பறித்துமுடித்தலைப் பரிகரித்து,

291 - 2. [உறைகால் மாறிய வோங்குயர் ணன்தலை, யயிரு வானத்துக் குறைவில் லேய்ப்ப :]

ஓங்கு உறை கால் மாறிய உயர் அகல் இரு வானத்து குறை வில் ஏய்ப்ப—ஓங்குகின்ற துளி காண்டிமுதல்தவிர்ந்த உயர்ச்சியையுடைய அகன்ற பெரிய வானத்திடத்துக் குறைவில்லாகிய இந்திரவில்லேபோப்ப,

293 - 4. [அரக்கெதழ்க் குவளேயொடு நீல நீடி. முரட்பூ மலிர்த முதுநீர்ப் பொய்கை :] அரக்கு இதழ் குவளேயொடு நீலம் நீடி முரண் பூ மலிர்த முதுநீர் ன தலே (291) பொய்கை—சாதிலிங்கம்போன்ற இதழையுடைய ஞ குவளே யோடே நீலப்பூவும்வளர்ந்து ஒன்றற்கொன்று நிறம் மாறுபடுதலேயுடைய எண்ப் பூக்களுமிக்க முதிய நீரையுடைத்தாகிய அகன்ற இடத்தையுடைய பொய்கை களிடத்தே,

295 - 6. குறுகர் இட்ட கூம்பு விடு பல் மலர் பெரு காள் அமபத்து பிணையினிர் கழிமின்—பறிப்பார் நுங்களுக்கிட்ட குவிதல்செய்த பலபூக் களேப் பெரிதாகிய காட்காலத்தேருடிப் போமின் ;

வானே (287) வெரூஉம் (288) கயத்திலே மலர்ந்த (289) பூவை ஓம்பிக் (290) குறைவிலேய்ப்பப் (292) பூமலிர்த பொய்கைகளிடத்தே (294) குற காரிட்டமலரைப் (295) பிணையினிர்கழிமினெனமுடிக்க.

297. செழு கன்று யாத்த சிறு காள் பர்தர்—வளைய கன்றைக்கட்டின சிறியகால்களேயுடைய பர்தரினேயும்,

298. [பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர் :]

பைஞ்சேறு மெழுகிய நல் நகர்—ஆப்பியான் மெழுகிய நன்முகிய அகங் களேயும்,

படிவம்—தாம் வழிபடுக்தெய்வங்களேயுமுடைய உறைபதி (301) யென்க.

299. மனே உறை கோழியொடு ஞமலி துன்னுதல்—மனேகளிலேதங்குங் கோழிகளுடனே நாயுஞ்சேராமல்,

300. வனே வாய் கின்னே மறை விளி பயிற்றும்—வனேந்தவாயினேயுடைய இளிக்கு வேதத்தின் ஓசையைக் கற்பிக்கும்.

301. மறை காப்பாளர் உறை பதி சேப்பின்—வேதத்தைக் காத்தற் றெழிலேச் செய்வார் இருக்கின்ற ஊரிடத்தே தங்குவீராயின்,

துன்னுமல் (299) உன்றையும்படியென்க.

302. பெரு கல் வானத்து வடவயின் வினங்கும்—பெரிய நன்முகிய வீசம்பிடத்து வடதிசைக்கண்ணே கின்றவினங்கும்.

303. தெறுமீன் புரையும் கற்பின்—அருந்ததியையொக்குக் கற்பினேயும்,

நறு நுதல்—நறிய நுதலினேயுமுடைய,

304. வனே கைமகடூ வயின் அதிர்து அப்ப—வனேயையுடையவாகிய கையையுடைய பார்ப்பினி பதமறிந்தட்டனவற்றை,

என்றது பார்சோறு பருப்புச்சோறுமுதலியவற்றை.

305. சூர் ஞை—ஞாயிறுபட்ட காலத்தே,

பறவை பெயர் படு வத்தம்—பறவையினது பெயரைப்பறைசெல்லு,

என்றது-இராஅன்னமென்னும் பெயர்பெறுகின்ற செல்வென்றவாறு. ஆருகி பண்ணுதற்கு இந்தச்செல்லுச்சோறே சிறந்ததென்று இதனைக்கூறினர். இனி மின்மினி செல்லென்பாருமுளர்; இப்பெயர் வழக்கின்மையும் ஆருகிக்குச் சிறவாமையுமுணர்க.

306 - 8 [சேதா நறுமோர் வெண்ணெயின் மாதளத், திருப்புற பசுங் காய்ப் போழொடு கறிகலத்து, கஞ்சக நறுமுறி யீஇ:] மாதளத்து பசு காய் கறி கலந்து கஞ்சகம் நறு முறி அளைஇ சேதா நறு மோர் வெண்ணெயின் உருப்பு உற போழொடு—கொம்மட்டிமாதுளையினுடைய பசியகாய் மிளகு பொடிகலக்கப்பட்டுக் கருவேம்பினது நறியஇலை அளவுப்பட்டுச் சிவந்தபசு வினது நறியமோரின்கணெடுத்த வெண்ணெயின்கண்ணேயிட்டு வேகலின் வெம்மையுறுகின்ற வதிரோடே,

308 - 10. [பைந்துணர். நெடுமரக் கொக்கி னறுவடி வீதிர்த்த. தகை மாண் காடியின்:] நெடு மரம் கொக்கின் பைந்துணர் நறு வடி வீதிர்த்த தகை மாண் காடியின்—நெடிய மரமாகிய மாவினது பசியகொத்திடத்து நறிய வடு வினைப் பலவாகப்போகட்ட அழகுமாட்சிமைப்பட்ட ஊறுகறியோடே.

310. வகைபட பெறுகுவிர்—சோற்றின்கூறுகளுண்டாகப் பெறுகுவிர்; ப்பின் (301) மகடூஉ (304) வத்தத்தானுண்டான அரிசியை (305) அட்டனவற்றைச் (304) சுடர்க்கடையிலே (305) போழோடே (307) காடி போடே பெறுகுவிரென்ச.

311 - 2. வண்டல் ஆயமொடு உண்துறை தலைஇ புனல் ஆடும் மகளிர் இட்ட பொலங்குழை—விளையாட்டினையுடைய நிரள்களோடே நீருண்ணுந் துறையிலேகூடி நீராடுகின்றமகளிர் போகட்டுப்போன பொன்னாற்செய்த மகரக்குழையினை,

313. இரை தேர் மணி சிலம் இரை செத்து எறிந்தென—இரையைத் தேடுகின்ற நீலமணிபோலும்சிச்சிலி தனக்கு இரையாகக்துணிந்தெடுத்தாக,

314. புள் ஓர் பெண்ணை புலம்பு மடல் செல்லாது—பறவைகள் நிறைந்திருக்கின்ற பனையில் தனித்தமடலிற்போகாமல்,

315 - 6. கேள்வி அந்தணர் அரு கடன் இறுத்த வேள்வி தூணத்து அசைஇ—நூற் கேள்வியையுடைய அந்தணர் செய்தற்கரிய சடங்குகச் செய்து முடித்த யாகசாலையிடத்துநாட்ட யூபத்தின்மேலேயிருந்து.

316 - 7. [யவன, ரோதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட·] யவனர் உயர்மிசை கொண்ட ஒதிம விளக்கின்—சோனகர் கூம்பின்மேலிட்ட அன்ன விளக்குப்போல,

ஈண்டுக் *காரன்னமென்றுணர்ச.

---

* காரன்னம் இனஞ்சுட்டியபண்பென்பர்; (தீவக. 930 - உரை.)

318. வைகுறும் மீனின்—இராக்காலம் விடிதற்குக்காரணமான *வெள்ளியாகிய மீன்போல,

பைபய தோன்றும்—ஒளி விட்டுவிளங்காது தோன்றும்,

319. நீர்ப்பெயற்று எல்லே போகி—நீர்ப்பெயற்றென்னும் ஊரினெல்லையிலேபோய்,

அசைஇ வீளக்கின் மீனிற்றேன்றும் நீர்ப்பெயற்றென்க.

319 - 21. பால் கேழ் வால் உளை புரியொடு வடவளம் தரூஉம் காவாய் சூழ்ந்த களி நீர் படப்பை—பால்போலும் வெள்ளியநிறத்தினையும் வெள்ளி தாகிய தலையாட்டத்தினையுமுடைய மேற்றிசைக்கணுளவாகிய குதிரைகளுடனே வடதிசைக்கணுளவாகிய நுகரப்படும்பொருள்களைக் கொண்டுவந்துதரும் மரக்கலங்கள்சூழ்ந்துதொடக்கப்பட்ட பெருமையையுடைய கடற்பக்கத்தினையும்.

322 - 4. [மாட மோங்கிய மணன்மலி மறுகிற், பரதர் மலிந்த பல்வேறு தெருவிற், சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பின் :]

மணல் மலி மறுகின் சிலதர் காக்கும் சேண் உயர் வரைப்பின்—மணல் மிக்க தெருவுகளில் தொழில்செய்வார்காக்கப்படும் மிகவுமுயர்ந்த பண்டசாலைகளையும்,

தொழில்செய்வார் - கம்மகாரர்.

பரதர் மலிந்த மாடம் ஓங்கிய பல் வேறு தெருவின்—பரதவர்மிக்க மாடங்களுயர்ந்த பலவாய்வேறுபட்ட தெருக்களையும்,

325 - 7. நெல் உழு பகட்டொடு கறவை †துன்னு மேழகம் தகரோடு எனைம் கொட்கும் கூழ் உடை கல் இல்—நெல்லினைப் பெறுதற்குஉழுகின்ற எருதுகளுடனே பசுக்கள்நெருங்காவாய் மேழகக்கிடாயோடே ஈயும் சுழன்று நிரியும் சோறுடைய நன்ருனகங்களையுமுடைய பட்டினம் (336).

இது திமிலர்முதலியோரிருப்புக்கூறிற்று.

327. [கொடும்பூண் மகளிர் :]

உயர் நிலை (332) வான் தோய் மாடத்து (333) கொடு பூண் மகளிர்—உயர்ந்தநிலைமையையுடைய தேவருலகத்தைத்தீண்டும் மாடத்தையும் வளைந்த பேரணிகலங்களையுடைய மகளிர்,

328 - 9. கொன்றை மெல் சினை பனி தவழ்பவை போல் பைங்காழ் அல்குல் நுண்துகில் நுடங்க—கொன்றையிடத்து அரும்புகளையுடைய மெல்லிய கொம்புகளிலே பனிமாசுவிடர்த்து தவழ்கின்றவைபோலப் பசிய மணிகள்கோத்த வடங்களையுடைய அல்குலிற்கிடக்கின்ற மெல்லியதுகிலசைய.

330 - 31. மால் வரை நிலம்பின் மலிழ்கிறந்த ஆலும் பீலி மஞ்ஞையின் இயலி—பெருமையையுடைய பக்கமலையிலே மனவெழுச்சிமிக்கு ஆரவாரிக்கும் தோகையையுடையமயில்போலே உலாவி,

---

* வெள்ளிதாகிய மீனென்றும் பிரதிபேதமுண்டு.

† பி - ம். துன்னு தேழகத் தகரோடு.

331 - 3. [கால, தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை, வான்றோய் மாடத்து *வரிப்பந் தசைஇ:]

தமனியம் கால பொன் சிலம்பு ஒலிப்ப வரி பந்து அசைஇ—பொற்பூண் களையுடைய கால்களிடத்தனவாகிய பொன்னுஞ்செய்த சிலம்புகளாரவாரிப்ப நூலால்வரிதலையுடைய பந்தையடித்து இளைத்து,

334 - 5. [கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய, முத்த வார்மணற் பொற்கழங்கு காறும்:] முத்தம் வார் மணல் பைபய கை புனை குறு தொடி தத்த பொன் கழங்கு ஆறும்—முத்தையொத்த வார்த்தமணலிலே மெத்தென மெத்தெனக் கையிற்புனைந்த குறுந்தொடியசையப் பொன்னுஞ்செய்த கழலுக்கொண்டு வினையாடும்,

மாடத்து (333) மகளிர் (327) நுடங்க (329) இயலி (331) ஒலிப்ப (332) அசைஇப் (333) பின்னர்க் கழங்காடும் (335) பட்டின (336) மென்க.

இது வணிகரிருப்பைக்கூறிற்று.

படப்பையினையும் (321) வரைப்பினையும் (324) தெருவினையும் (322) இல்லினைய (327) முடைய பட்டின (336) மென்க.

336. பட்டினமருங்கின் அசையின்—பட்டினத்திடத்தே இளைப்பாறுவீராயின்,

மூட்டு இல்—மூட்டில்லாமைப் பெறுகுவி (315) ரெனமேலே கூட்டுக.

337. †பைங்கொடி நுடங்கும் பலர் புகு வாயில்—பசியகொடிகளைபும் கள்ளுண்பார்பலரும் புகுகின்ற வாயிலிடத்து,

338. [செம்பூத் தூய செதுக்குடை முன்றில்:] தூய செ பூ ‡செதுக்கு உடை முன்றில்—தெய்வத்திற்குத்தூவின செய்யபூவாடலையுடைய முற்றத்தில்,

339 - 40. கள் அடு மகளிர் வள்ளம் நடக்கிய வார்ந்து உகு நிலை நீர் வழிந்த குழும்பின்—கள்ளைச்சமைக்கின்றமகளிர் வட்டில்களுழுவின வடிந்துகின்ற நிலைநீர் பலகால்வடிதலின் நிறைந்துவழிந்த குழம்பிடத்து,

341 - 2. §ஈர்ஞ்சேறு ழுடிய இரு பல் குட்டி பல் மயிர் பிணவொடு—ஈரத்தையுடைய சேற்றையினைந்த கரிய பலவாகிய குட்டியினையுடைய பலவாகிய மயிர்களையுடைய பெண்பன்றிகளுடனே,

வாயிலிடத்து (337) முற்றத்துக் (338) குழம்பிடத்துச் (340) சேறு (341)

342. §பாயம் போகாது—புணர்ச்சியைக் கருதுங்கருத்தாற் போகாமல்.

---

* "வரிப்பந்துகொண்டோடி" (கலி. 51.)

† கள்விற்போர் கடைவாயிலிற் செம்பூச்சிதறிக் கொடிகட்டுதல், பட்டினப் பாலையின் 178 - ஆம் அடிமுதலியவற்றாலும், "கட்கொடி நுடங்கு மாவணம்" (பதிற். 68) என்பதனாலும் அறியலாகும்; மதுரை. 372.

‡ "செதுகுறுமணந்தார்" (தே. திருப்பூந்துருத்தி.)

§ பாயம் - மனத்திற்கு விருப்பமானதென்ற பொருளைமுதலுவர்; (குறி. 58.)

என்றது புணரிற் கொழுப்பின்ருமென்றவாறு.

343. நெல் மா வல்சி நீற்றி—நெல்லேயிடித்த மாவாகிய உணவைத் தின்னப்பண்ணி,

343 - 5. பல் நாள் குழி நிறத்த ஒம்பிய குறு நாள் ஏற்றை கொழுநிணம் தடியொடு – பலநாள் குழியிலேநிறுத்திப் பாதுகாத்த குறியகாலேயுடைய ஆண்பன்றியின் கொழுவிய நிணத்தையுடைய தசையோடே,

*"ஆற்றலொடு புணர்ந்த வாண்பால்" ஆதலின் ஏற்றையென்ருர்.

345. கூர் நரு பெறுகுவிர்—களிப்புமிக்க கள்ளேப் பெறுகுவிர்;

போகாமற் (342) குழிநிறுத்து (344) என்க.

அசையிற் (336) பெறுகுவிரென்க.

346 - 8. [வான மூன்றிய மதலே போல. வேணி சாத்திய வேற்றருஞ் சென்னி, விண்பொர நிவந்த வேயா மாடத்து:]

வானம் ஊன்றிய மதலே போல விண் பொர நிவந்த மாடம்— ஆகாயத்தே நிரிகின்ற தேவருலகுக்கு மூட்டுக்காலாக ஊன்றிவைத்த ஒருபற்றுக்கோடு போல விண்ணேத்தீண்டும்படி ஓங்கினமாடம்,

சாத்திய வேணி ஏற்று அரு சென்னி மாடம்—தன்னிடத்துச்சாத்திய வேணியால் ஏறுதற்கரிய தலேயினேயுடையமாடம்,

வேயா மாடத்து—கற்றைமுதலியவற்றுல் வேயாது சாத்திட்ட மாடத்திடத்தே.

349. இரவில் மாட்டிய இலங்கு சுடர்—இராக்காலத்தேகொளுத்தின விளங்குகின்ற வினக்கு.

349 - 51. [ஞெகிழி. யுரவுநீ ரழுவத் தோடு†கலங் கரையுந், துறை:] உரவு நீர் அழுவத்த ஞெகிழி ஒடு கலம் கரையும் துறை— உலாவுகின்ற கடற் பரப்பிலேவந்து நாம்சேரும் துறையன்றென்று நெகிழ்ந்து வேருருதுறைக் கண் ஓடுங்கலங்களே இது நம்துறையென்று அழைக்குந் துறை.

இனி, ஞெகிழியைக் கடைக்கொள்ளியாக்கி அதனேஎரித்துக்கொளுத்தின இலங்குசுடரென்றுமுரைப்பர்.

351. பிறக்கு ஒழிய போகி—பின்னேயிடக்கப்போய்,

351 - 3. [கறையடிக். குன்றுறழ் யானை மருங்கு லேய்க்கும், வண்டோட்டுத் தெங்கின்:]

குன்று உறழ் கறை அடி யானை மருங்குல் ஏய்க்கும் தெங்கின்—மலேயோடு மாறுபடுகின்ற உரல்போன்ற அடியினேயுடைய யானேயினுடம்பையொக்கும் சருச்சரையையுடைத்தாகிய தெங்கினுடைய,

353. [வாடுமடல் வேய்ந்த:]

---

* தொல்காப்பியம், மரபியல், 49.

† கலங்கரைவினக்கமென்னும்பெயர் ஈண்டு அறியற்பாலது.

வள் தோட்டு (353) வாடு மடல் வேய்ந்த—வளைய இலையினையுடைய உலர்ந்த *பழுதலை முடைந்துவேய்ந்த தனிமனை (355) யென்க.

354. மஞ்சள் முன்றில்—மஞ்சளையுடைய முற்றத்தினையும்,

மணம் மாறு படப்பை—மணமாறுகின்ற பூந்தோட்டங்களையுமுடைய,

355. தண்டலை உழவர் தனி மனை சேப்பின—தோப்புக்குடிகளுடைய ஒப்பில்லாத மனைகளிலேதங்கின

356. [தாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெருமபழம]

தாழ் கோள் பலவின் பழம—தாழ்ந்த குலைகளையுடைய பலாவினதுபழம்,

சூழ் சுளை பெரு பழம—தினபா விருமபிசசூழும சுளையையுடைய பெரிய பழத்தையும,

357. †வீழ் இல் தாழை ‡குழலி தீ ரீர—விழுதில்லாத தாழையாகிய தெங்கின இனிதாய இனியநீரையும,

§"பிளவே குழலி னதே போதெனக கொளவு மமையு மோரற் வுயிர்க்கே" எனறதனும் குழலித்தீரெனறார.

358 கவை முலை இரு பிடி கவுள மருபப ஏய்க்கும—கவைத்த முலையையுடைய பெரிய பிடியினுடைய கவுளிடத்துக கொமபுகளையொக்கும,

359 [சூலைமுதிர் வாழைக கூனி வெண்பழம] சூலை கூனி முதிர் வாழை வெள் பழம்—சூலைகள தமபெருமையாலே கிலத்தே தாழவளைந்து முற்றின வாழையினது வெள்ளிய பழத்தையும

360 - 61 நிரள அரை பெண்ணை நுங்கொடு பிறவும தீ பல் காரம முனையின—நிரண்ட அடியையுடைய பனையினது நுங்கோடே வேறு இனிய பலபண்டஙகளையும வெறுக்கின.

361 - 2. [சேமபின் முளைப்புறம] முளை புறம சேமபின—முளையை இடத்தேயுடைய சேமபினது இலையோடே

362 முதிர கிழஙகு ஆகுவிர—முறறின வளளிமுதலிய கிழஙகுகளைத தினபீர,

சேப்பித் (355) பழத்தையும (356) நீரையும (357) பழத்தையும (359) நுங்கோடே (360) பலபண்டஙகளையுமுனையிற் (361) கிழங்காகுவிரெனக

362 - 4. பகல் பெயல் மழை வீழாதன்ன மா நாள் கமுகின புடை சூழ் தெஙகின—பகற்பொழுதிலே பெய்தலையுடைய மழை கால்விழாதாலொத்த பெரிய தண்டினையுடைய கமுகுகளின் பகக்கத்தேசூழ்ந்த தெஙகினுடைய,

---

* பழுதல் - பழுபபு; கீழ்ந்து இதனால் முடையப்பட்டது கீற்று

† வீழில்தாழையெனபது தென்னைக்குவெளிப்படை, மற்றொனறு "வீழ் தாட் டாழை" (நற் 78) "வீழ்தாழ் தாழை யூழுறு கொழுமுகை" (குறு 228), "தாழை வீழாயிற்றால்" (அகநா 20) எனக் கூறப்படுதல்காண்க

‡ குழலித்தீர் - இளநீர.

§ தொல்காப்பியம், மரபியல், 24.

364. மூப்புடை நிரள் காய்—மூன்றுபுலைப்பிணியுடைய நிரண்டகாய், பழுத்தால் அடி மூன்றுசப்புடைத்தல் அதற்கெல்லை. இனி மூப்புடை நிரள் காயும் பாடம்.

365 - 6. ஆறு செல் வம்பலர் காய் பசி நீர சோறு அடு குழிசி இனை விழுமம்—வழிச்செல்கின்றபுதியோர் தமது மிக்கபசிதீரும்படி சோற்றை ஆக்குகின்றபானை அடுப்பினின்றும் அசைந்துவிழும்படி மிகத்தேலிழும்,

367. வீயா யாணர் வளம் கெழு பாக்கத்து—விடாத புதுவருவாயினையுடைய செல்வம்பொருந்தின பாக்கத்திடத்து,

368. பல் மரம் நீள் இடை போகி—பலமரங்கள்வளர்ந்த இடத்திலேபோய்,

368 - 9. [ரன்னகர், விண்டோய் மாடத்து விளங்குசுவ ருடுத்த] விளங்கு சுவர் உடுத்த விண் தோய் மாடத்து நல் நகர்—விளங்குகின்ற மதில் சூழ்ந்த விண்ணைத்தீண்டும் மாடங்களையுடைய நன்றாகிய ஊர்களிலே,

370 - 71. வாடா வள்ளியின் வளம் பல தரூஉம் காடு பல கழிந்த பின்றை—வாடுங்கொடியினையுடைய வள்ளியல்லாத வள்ளிக்கூத்தின் வளப்பம்பலவற்றையுந் தருதற்குக்காரணமாகிய புறநாடுபலவற்றையும் போனபின்பு.

வளம்பலவென்றார், இக்கூத்து ஆண்பாற்கும்பெண்பாற்கும் பொதுவாய் வருதலின்.

என்றது-சிறப்புடையநாடுகளேப்பாடித் தாழ்சடிபெற்ற இழிகுலத்தோருறையும் புறநாடுகளேப் பாடாமல்தொகுக்கின்றார், அவைபுறமாடென்பதுதோன்ற அவர்கள் காண்டற்குரிய வள்ளிக்கூத்தினைக்கூறி அதனைவெளிப்படுத்தினரு இது. புறத்தினையியலில் * 'வெறியறிசிறப்பு" எனனுஞ்சூத்திரத்து, 'வாடாவள்ளி' என்பதனாலும். †' மண்டமரட்ட மறவர் குழாத்திடை" என்னு மூதாணைத்தானும உணர்க.

371 - 2. நீடு சுலே காந்தள் அம் சிலம்பில் களிறு படிந்தாங்கு—நீண்டபூங்கொத்துக்களேயுடைய காந்தளேயுடைய அழகிய பக்கமலையிலே யானைகிடந்தாற்போல.

373. பாம்பு அணை பள்ளி அமர்ந்தோன ஆங்கண்—பாம்பணேயாகிய படுக்கையிலே துயில்கொண்டோனுடைய ‡திருவெக்காவிடத்து.

காந்தளென்றதற்கேற்பப் பாம்பணேயென மெலித்தார்.

374. [வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்:]

வெயில் நுழைபு அறியா பொதும்பர்—ஞாயிற்றின்கதிர் தோன்றியகாலத்தும் படுகின்றகாலத்தமுட்படச் நிறிதும் செல்லுதலறியாத பொதும்பர்,

---

* தொல்காப்பியம், புறத்திணையியல், 5.

† "மண்டமரட்ட மறவர் குழாத்திடைக் - கண்ட மூருகனுங் கண்களிக்கு தான் - பண்டே - குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப் - பீறமகள் சோற்றுள் பெரிது."

‡ திருவெக்காவென்பது திருமாலிலுடைய நாற்பெட்டுத் திருப்பதியுள்ளொன்று. இது காஞ்சிப்பதியிலுள்ளது.

குயில் தழை பொதும்பர்—இலவிருக்கத்தாலே குயில்கள் தழைத்துசெல் லும் இளவேனிற்காலில்,

375 - 6. குறு கால் காஞ்சி சுற்றிய செடு கொடி பசு இலை குருவின் புன் புறம் வரி பூ—குறிய காலினையுடைய காஞ்சிமரத்தைச்சூழ்ந்த செடியகொடி யினையும் பசிய இலையினையுமுடைய குருக்கத்தியினுடைய *புற்கென்றபுறத் தினையும் வரிகளையுமுடைய பூக்கள் உறைப்ப (373) வேன்க.

377 - 8. கார் அகல் கூவியன் பாகொடு பிடித்த இழை சுழ் வட்டம் பால் வற்றை போல்—கரிதாகியசட்டியிலே அப்பவாணிகன் பாகுடனே வேண்டுவனகூட்டிச் சேர்க்கப்பட்ட நூல்போலச் சுழ்ந்துகிடக்கின்ற அப்பம் பாலிலே கிடந்தவைபோல,

சட்டியிலே கிடந்த அப்பம் பின்பு பாலிலேகிடந்தவைபோலவென்க.

பிடித்தவட்டமென்க.

379. நிழல் தாழ் வார் மணல் நீர்முகத்து உறைப்ப—நிறங்கொள்கின்ற வார்ந்த மணலிடத்துக் குழிகளினின்றூறிடத்தே மிகவிழும்படி,

உறைப்பவென்றதனைத் தூளிப்பவென்றல் சண்டு ஒப்பன்மையான், உப் புறைப்ப என்றூர்போலக்கொள்க.

380. புனல் கால் கழீஇய பொழில் தொறும்—நீர பெருகியகாலத்தே ஏறிய இடத்தைத் தம்மாக்கிப்போன பொழில்களோறும்,

என்பதனால், முன்பு நீர்நின்றுபோகலிற் பூத்தவென்றார்.

381 - 82. நிரள் கால் சோலை சுமுகின் சுல் வயிறு அன்ன நீலம் பைங் குடம் தொலைச்சி—நிரண்ட தண்டினையுடைய சோலையிடத்துநிற்குங் கமுகி னுடைய சூர்கொண்ட வயிற்றையொத்த பச்சைக்குப்பியினை உண்டு போக்கி,

382 - 3. நாளும் பெரு மலிழ் இருக்கை மீஇ நாடோறும் பெரிய மகிழ்ச்சியையுடைய இருப்பைமருளி,

383 - 4. செறு கோடு குழலி நிங்கள் கோள் நோக்காகுக—சிறிய கோட் டையுடைய †இனைதாகிய பிறையைச் செம்பாம்பு நீண்டிஞற்போல,

இஃது இல்பொருளுவமை.

385. சுறவுவாய் அமைத்த சுருப்பு சூழ் சுடர் நுதல் ‡மகரவாயாகிய வேலைக்கோலத்தைச் சேர்த்தின சுருப்புகளுஞ்சூழும் ஒளியையுடைய நுதலினையும்,

386. நறவு பெயர்த்து அமைத்த கல் எழில் மழை கண் கள்ளினை உண்டுபொருந்திய கன்முகை அழகினையுடைய குளிர்ச்சியையுடைத்தாகிய கண் ணையுமுடைய,

---

* புற்கென்ற - அழகில்லாத; (சீவக. 2823.)

† இனைதாகிய - இனியதாகிய; "இனைதாக முண்மரங் கொல்க" (நீநெறி நெறி, 873.)

‡ "மகரப் பருவாய் தாழமண நுறைத்த" (முருகு. 25.)

வள்ளத்தினறவைத் தம்முள்ளே ஆகினமையிற் பெயர்த்தென்னூர்.

387. **மடவரல் மகளிரொடு பகல் வினையாடி—மடப்பம் தோற்றுதலே யுடைய மகளிரோடே பகற்பொழுது விளையாடி,*

388 - 9. *பெறற்கு அரு தொல் சீர் துறக்கம் எய்க்கும் பொய்யா மரபின் பூ மலி பெரு துறை—பெறுதற்கரிய பழமையையுடைத்தாகிய புகழினையுடைய துறக்கத்தையொக்கும் தப்பாமல் நீர்வருமுறைமையினையுடைய பூ மிகுகின்ற பெரிய துறையிடத்தே,*

துறை, நகர்பொருள்குறைவின்மையின், துறக்கமேய்க்குமென்னூர்.

390. *செவ்வி கொள்பவரோடு அசைஇ—இளவேனிற்செவ்வியை நுகர்வாரோடு இளைப்பாறி,*

390 - 91. *அவ்வயின் அரு நிறல் கடவுள் வாழ்த்தி—அத்திருவெஃகா வினையில் அரியநிறலினையுடைய திருமாலெலாழுத்தி,*

391 - 2. [*நிறுதிதுங், கருங்கோட் டிணர்நி மியக்கினிர் கழிமின்:*] *நும் கரு கோடு இன் இயம் நிறுதி இயக்கினிர் சாழிமின்—நும்முடைய கரிய தண் டினையுடைய இனியபாலைச் நிறுதுவாங்கித்து அவ்விடத்துண்ணும் போமின்;*

ஆங்கட் (373) பொதும்பர்க் (374) குருகின்பூ (376) உறைப்பச் (379) கழீஇயபொழி றோறும் (380) மகளிரோடேபகல்லினையாடிப் (387) பெருந் துறைச் (389) செவ்விகொள்பவரோடசைஇ (390) நிலப்பைங்குடன் தொலைச்சி (382) மரீஇக் (383) கடவுள்வாழ்த்தி (391) இயக்கினிர்கழிமினெனமுடிக்க.

393 - 6. [*காழோ நிரம்பத நோக்கிக் கீழ, நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளங், கடுஞ்சூன் மகளிர் கவரும் காலிற், களிறுகத னடக்கிய வெளிறில் கந்தின்:*]

†*வெளிறு இல் கந்தின் சதன் அடக்கிய களிறு கீழ நெடு கை யானை * * * களுந்தின்கின்ற:*

நெய் மிதி கவளம்—நெய்யைவார்த்து மிதித்த கவளங்களை,

‡*கடு சூல் மந்தி காழோர் இகழ் பதம் நோக்கி கவரும் காவின்—முற்பட்ட சூலையுடைய மந்தி பரிக்கோலையுடையோர் செகிழ்த்தசெவ்வியைப்பார்த்து எடுத் துக்கொண்டுபோய்த தின்னும் சோலையினையும்,*

397. *திண் தேர் குழித்த குண்டு நெடு தெருவின் திண்ணியதேர்கள் பலகால் ஓடிக்குழித்த தாழ்ச்சியையுடைய நெடியதெருவினையும்,*

---

* "மடவரல்வள்ளி யொடு" (ஞாந. 102); மடவரலென்பதற்கு மடப்ப மென்று பொருள்கூறுவாருமுண்டு; (புறநா. 89.)

† இந்தப்பாகத்துக்கு எந்தப்பிரதிகளிலும் உரைகிடைத்திலது. வலி முள்ளகந்திரை கோபத்தையடக்கிய ஆண்யானைகளும், கீழேதாழ்ந்த நெடிய கையையுடைய பெண்யானைகளுந்தின்றின்றவென்க.

‡ "கடுஞ்சூன் மகளே" (ஐங்குறு. 386.)

398 - 400. [படை தொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்க், கடை கால் யாத்த பல்குடி கெழீஇக், கொடையுங் கோளும்:]

தொலைவு அறியா மைந்து மலி பெரு புகழ் படை—கெடுதலறியாத வலி மிகுன்ற பெரிய புகழினையுடைய படையினையும்,

*கொடையும் கோளும் கெழீஇ கால் யாத்த பல் குடி கடை—பண்டங்களை விற்றலும் கொள்ளலும்பொருந்தி அவ்விடத்து இருந்தின பலகுடிகளையுடைய கடையினையுமுடைய மூதூர் (111.)

409 - 401. †வழங்குநர் தீதுதீர்த்த அடையா வாயில்—உலகத்துக் கொடுப்பாரைக் கொடாமல் தடுத்த பரிகிலர்க்கு அடையாத வாசலினையும்,

இவன் கொடைப்பெருமையாற் பிறர்தவிர்த்தாரென்னார்.

401. மீளி சூழ் படப்பை—காவற்காடுசூழ்ந்த பக்கத்தினையும்.

402 - 4. [நீனிற வுருவி னெடியோன் கொப்பூழ். நான்முக வொருவர் பயந்த பல்லிதழ்த், தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றி:] நான்முக ஒருவன் பயந்த நீல நிற உருவின் நெடியோன் கொப்பூழ் பல் இதழ் தாமரை பொகுட்டின் காண் வர தோன்றி—நான்குமுகத்தையுடைய ஒருவனைப்பெற்ற நீலநிறத்தையுடைத்தாகிய வடிவினையுடைய திருமாலுடைய திருவுந்தியாகிய பலஇதழையுடைய தாமரையினது கொட்டைபோலே அழகுவினங்கத்தோன்றி,

இதனும் ‡பழமையும் சிறப்பும் தூய்மையுங் கூறினர்.

405. §சுடுமண் ஓங்கிய நெடு நகர் வரைப்பின்—செங்கலாற்செய்யப்பட்டு உயர்ந்த புறப்படைவீட்டைச்சூழ்ந்த மதிலினையும்,

406 - 7. [இழுமென் புள்ளி னீண்டுகிளைத் தொழுதிக், கொழுமென் சினைய கோளியுள்ளும்:] கொழு மெல் சினைய இழுமென் புள்ளின் நீண்டு கிளை தொழுதி கோளியுள்ளும்—கொழுவிய மெல்லிய கொம்புகளிடத்தனவாகிய இழுமென்னும் ஓசையையுடைய புறவினுடைய சிறகுகின்ற சுற்றத்திரட்சியையுடைய பூவாமற் காய்க்கு மரங்களில் விசேடித்தும்.

408. பழம் மீ கூறும் பலா போல—பழத்தின் இனிமையால் மேலாகச்சொல்லும் பலாமரத்தையொக்க,

409 - 10. புலவு சுடல் உறுதரு வானம் சூடிய மலர் தலை உலகத்துள்ளும்—புலால்நாற்றத்தையுடைய கடல்சூழ்ந்த ||ஆகாயகங்கையிற் அகன்ற இடத்தையுடைய உலகத்து ஈகரில் விசேடித்தும்,

---

* "கொன்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைபடாது" (பட். 210.)

† இதன் பொருள்நயம்பாராட்டத்தக்கது.

‡ பெருமையுமென்றும் பிரதிபேதமுண்டு.

§ "சுடுமணேங்கியநெடுநிலைமனை" (மணி. 3. 127.)

|| "வான்கலிக்த வையகமெல்லாம்" (நாலடி. பொறை. 10.)

410 - 11. *பகல் தொழு விழவு மேம்படும் பரந்த வீதிகளுடன்— பலவகைப் தானும் தொழும்படி எடுத்த விழாக்களாலே வினாகரிகளின் மேலான பழைய வெற்றியினையுடைய பழைய ஊராகிய,*

412 - 3. *அ வாய் வளர் பிறை சூடி செவ்வானத்து அந்தி வாய் ஆடும் மழை கடுப்ப — அழகிய இடத்தையுடைய வளரும்பிறையைத் தன்மேலேசூடிச் செக்கர்வானமாகிய அந்திக்காலத்தே உலாவுகின்ற மேகத்தையொப்ப,*

கொம்பும் யானையும் குருதியும் உவமிக்கப்படும்பொருள்.

414 - 7. [வெண்கோட் டிரும்பிணங் குருதி சோர்ப்ப, வீசைம்புலின் மரும் பொருதனைத் தலியப், பேரமர்க் கடந்த கொடுஞ்சி செற்றோன், ராசச செருவினவர் போல :]

வெள் கோடு இரு பிணம் குருதி சோர்ப்ப பொருது—வெள்ளிய கொம்பினையுடைய கரியயானைப்பிணத்தைக் குருதியாகிய ஆறு இழுத்துக்கொண்டுபோம் பொருதி,

சுரைம்பதினன்மரும் களத்து அலிய பெரு அமர் கடந்த ஐவர் போல—தரி யோதனன் முதலிய நூற்றுவரும் களத்திலே படும்படி பெரியபோரைவென்ற தருமன் முதலியோரைப்போல,

கொடுஞ்சி நெடு தேர் ஆரசெருவின் ஐவர்—முன்னே தாமரை முகையினையுடைய செழியதோளினையும் தோலியாத போரினையுமுடைய ஐவர்,

418. *அடங்கா தானையோடு உடன்று மேல் வந்த—ஓரொண்ணின்கண் அடங்காத படையுடனே கோபித்துத் தன்மேல்வந்த,*

419. *ஒன்னு தெவ்வர் உலவிடத்து ஆர்த்து—தன்னேவலைப் பொருந்தாத பகைவர் தோற்றவிடத்தே வெற்றிக்களிப்புத்தோன்ற ஆரவாரித்து,*

420 - 21. [கச்சி யோனே கைவண் டோன்றல் நச்சிச் சென்றோர்க் கேம மாகிய :] *கை வள் தோன்றல் நச்சி சென்றோர்க்கு எமம் ஆகிய கச்சி யோனே—கைவளப்பத்தையுடைய தலைவன் தன்பாலிலிருந்தித் தன்பாற் சென்றோர்க்குப் பாதுகாவலாகிய காஞ்சிபுரத்தையிருக்கின்றோன்.*

படப்பையினையும் (401) காவினையும் (395) வரைப்பினையும் (405) அடையாவாயிலினையும் (401) தெருவினையும் (397) கடையினையும் (399) மனையினையு (398) முடைய மூதூர் (411) என்க.

காண்வரத்தோன்றிப் (404) பலஅப்போல (408) விழவுமேம்பட்ட (411) மூதூரென்க.

கைவண்டோன்றல் (420) ஐவர்போலச் (417) குருதிசோர்ப்பப் (414) பொருது (415) ஆர்த்து (419) எமமாகிய (421) மூதூராகிய (411) கச்சியிடத்தேயிருக்கின்றோனென்க.

---

* பலசமயதெய்வங்களுக்கும் காஞ்சி இடமாகஇருத்தலின், பலரென்பதற்குப் பலசமயத்தாரென்று பொருள் செய்தனர்; "புகலவன் தத்தி குமரர்மால் புறத்தோர் பலரும்வீற் றிருப்பவப் பதியே" (தத்த. கா. 90.)

423 ஈ. [அளியும் தெறலு மெளிய வாகலின், மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்படினும்]

மலைந்தோர் தேஎம் மன்றம் பாழ்பட தெறலும்—தன்னுடனே பொருதார் தேயத்திலுள்ளோரின்மன்னுகள் மக்களின்மூப்ப் பாழாரம்படி அழித்தலும்,

424. [ரயர்தோர் தேஎ ரன்பொன் பூப்ப:] ரயர்தோர் தேஎம் ரன் பொன் பூப்ப அளியும் (422)—தன்னே விரும்பியிருந்தோர் தேயம் திரு மடந்தை பொலிவுபெற்றிருப்ப அளித்தலும்,

422. எளிய ஆலின்—தனக்கு எளியவாய் நடக்கையினாலே,

425. ரட்பு கொளல் வேண்டி ரயர்திரினேரும்—மலையலாகாதென்று உறவுகொள்ளுதலேவேண்டி அவன்றனேவிரும்பினவர்களும்,

426. தப்பு கொளல் வேண்டிய தீனையிலோரும்—அவன் பகையைத் தெறும் வலியைத் தமக்குப்பெறவேண்டின வேறோர் உதவியில்லாதவர்களுமாய்,

427. கல் வீழ் அருவி கடல் படர்ந்தாங்கு—மலையினின்றும்விழுகின்ற அருவி அம்மலையிலுள்ளபண்டங்களே வாங்கிக்கொண்டு கடலுக்குக்கொடுப்பதா கச் சென்றாற் போல,

428. பல் வேறு வகையின் பணிந்த மன்னர்—பலவாகிய வேறுபட்ட திறைகளின் கூறுபாட்டோடே சென்று வணங்கின அரசர்,

429 - 31. [இமையவ ருறையுஞ் சிமையச் செவ்வரை, வெண்டிரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப், பொன்கொழித் திழிதரும் போக்கருங் கங்கை:]

இமையவர் உறையும் சிமையம் செ வரை விளங்கு சுடர் நெடு கோடு—தேவர்களிருக்கும் உச்சியையுடைய சிவந்த மேருவினது விளங்குகின்ற ஒளி யையுடைய பெரிய கொற்றினின்றும்,

பொன் கொழித்து இழிதரும் போக்கு அரு கங்கை—பொன்னைக்கொழித் துக் குவிக்கும் மாக்கட்குக் கடத்தலரிதாகிய கங்கையாகிய ஆற்றிலே,

வெள் நிரை கிழித்த கங்கை—நடலிடத்து வெள்ளியநிரையைக் கிழித் துச்சென்ற கங்கை,

432. பெரு நீர் போரும் இரியல் மாக்கள்—பெரிய நீரைக்கடந்துபோம் நெடுதலையுடையமாக்கள்,

நெடுபட்டுப்போவார் ஒருவர்க்குமுன்னே ஒருவர் விரைந்துபோதலைக் கருதுவர்.

433. ஒருமரம் பாணியில் தங்கியாங்கு—விடுகின்ற தோணியாலையிலு லே அது வருங்காலம் பார்த்திருந்து தங்கினாற்போல,

434 - 5. தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇ செவ்வி பார்க்கும் செழு நகர் முற்றத்து—கெடாத யானைமுதலிய செல்வங்களோடே நெருங்கா கின்ற நிரண்டு அலம்பார்த்திருக்கும் வளைய நகரின்முற்றத்தினையுடைய விய னகர் (440),

எளியவாகலின் (422), நயந்திசினேனும் (425) தூணியிலோருமாய்ப் (426) பணிந்தமன்னர் (428) தூங்கியாங்குச் (433) செவ்விபார்க்குமுற்றமென்க.

436 - 7. பெருகையாணை கொடு தொடி படுக்கும் கருகை கொல்லன் — பெரிய கையினையுடைய யானைக்கு வளைத்துவிடக்கும் பூணைச்சேர்க்கும் வலிய கையினையுடைய கொல்லன்,

437 - 8. இருப்பு விசைத்து எறிந்த கூடம் திண் இசை வெரீஇ—இரும்பைக் கையை உரத்துக்கொட்டின கூடத்தெழுந்த திண்ணியதூசையை வெருவி,

438 - 10 [மாடத், திறையுறை புறவின் செங்காற் சேவல் லின்றுயி லிரியும் பொன்றுஞ் வியனகர் :]

மாடத்து புறவின் செ காற் சேவல் இன் துயில் இரியும் நகர்—மாடத்திடத் தப் புறவினுடைய சிவந்த காலையுடையசேவல் இனிய துயிலே நீங்குநகர்.

இறை உறை நகர்—இறைவனிருக்கு நகர்,

பொன் துஞ்சு வியல் நகர்—திருத்தங்குகின்ற அகலத்தையுடைய கோயிற் கண்ணே இருந்தோன் (417)

441 - 2. குணகடல் வரைப்பில் மூன்நீர் நாப்பண் பகல் செய் மண்டிலம் பாரித்தாங்கு—கீழ்கடலாகிய எல்லையிடத்து நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்றுதொழிலையுடைய கீர்க்ராவே *பசுபதியைத் செய்யுளாயிறு தன்கிரணங்களைப்பரப்பித் தோன்றினற்போல,

443 - 50. [முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும், வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி, யிடைத்தெரிந் துணரு மிருடீர் காட்சிக், கொடைக்கடனிறுத்த கூம்பாவுள்ளத், துரும்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகிப். பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான், கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப். புலவர் பூண்கட னுற்றி :]

இடை தெரிந்து உணரும் இருள் தீர் காட்சி—கடுவகியிலையை ஆராய்ந்தறியும் மயக்கந்தீர்ந்த அறிவாலே,

†முறை வேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும் வேண்டுப வேண்டுப அருளி—முறைப்பாட்டைவிரும்புவரிர்க்கும் காரியங்களேவிரும்புவார்க்கும் அவரவர் விரும்புவனவற்றை விருப்புவனவற்றை அருளிச்செய்து.

புலவர் பூண் கடன் உற்றி—புலவர்க்குப் பேரணிகலங்களேயும் கொடுத்தற்குரிய பிரகலங்களேயுங் கொடுத்து,

வேண்டினர்க்கு கொடை கடன் இறுத்த கூம்பா உள்ளத்து உரும்பு இல் சுற்றமோடு இருந்தோன் குறுகி—வேண்டிவந்த பரிசிலர்க்குக் கொடையாகிய கடனே முடித்த குவியாத நெஞ்சத்தோடே தொடுமையில்லாத ‡மந்திரச்சுற்றத் தோடே இருந்தோனையணுகி,

---

* "பகற்செய்யுஞ்செஞ்ஞாயிறும்" (மதுரை. 7.)

† முறைவேண்டுநர் - வறியரால் கலிவெய்தினர்; குறைவேண்டுநர் - வறுமையுற்றிரந்தார்; 386 - ஆம் திருக்குறளுரையைப்பார்க்க.

‡ "மந்திரச் சுற்றத்தாரும்" (கம்ப. கும்ப. 5.)

ஞாயிறுபோல இருளைக்கடிந்த முறைவேண்டுநர்க்கும் குறைவேண்டுநர்க் கும் வேண்டுவன வேண்டுவன முடித்துக்கொடுத்தலின், அதனை உவமித்தார்.

கடலைச் சுற்றத்திற்குச் உவமையாக்கலுமொன்று.

*பொறி வரி புகர்முகம் தாக்கிய வயமான் கொடுவரி குருளை கொள வேட் டாங்கு—ஒளியினையும் வரியினையுமுடைய யானையைப்பாய்ந்த வலியையுடைய சிங்கத்தினுடைய வளைந்தவரியினையுடைய குருளை அவ்வியானையின் மத்தகத் தைக் கொள்ளவிரும்பினற்போல,

450 - 52. பகைவர் கடி மதில் எறிந்து குடுமி கொள்ளும் வென்றி அல் லது—பகைவரது காவலையுடைய மதிலைனையழித்து ஆண்டிருந்த அரசருடைய முடிக்கலமுதலியவற்றை வாங்கிக்கொண்டு வீரமுடியினையும் வெற்றியினை விரும்புதலல்லது,

இதனுல் †"இகன்மதிற் குடுமி கொண்ட மண்ணுமங்கலம்" என்னுந் தறை கூறினர்; ‡குடுமிகொள்ளும் வென்றியெனவே மண்ணுமங்கலமாயிற்று

452 - 4 வினை உடம்படினும் ஒன்றல் செல்லா உரவு வாள் தட கை கொண்டி உண்டி தொண்டையோர் மருக—அம்மதிலரசர் §சந்துசெய்தற்கு உடம்பட்டாராயினும் அதற்கு மனம்பொருந்துதல் நிகழாமைக்குக்காரணமாகிய உலகெங்கும்பரக்கும் வானையுடைத்தாகிய பெருமையையுடைய கையினையும் பகைப்புலத்துக் கொள்ளையாகிய உணவினையுமுடைய தொண்டையைச்சூடி னேருடைய குடியிலுள்ளவனே,

455. மன்னர் மன்ன—வீரர்க்கு வீரதலைக்கொடுக்கின்றவனே,

மறவர் மறவ—கொடியோர்க்குக் கொடியவனே.

456. செல்வர் செல்வ—செல்வமுடையோர்க்குங் கொடுத்தலிலிருடு பவனே,

செரு மேம்படுந—போர்த்தொழிலிலே மிக்கவனே.

பெருமை (461)—பெருமானே,

457 - 8. வெள் திரை பரப்பில் கடு சூர் சொன்ற பைம்பூண் சேஎய் பயந்த மா மோடு—வெள்ளிய திரையினையுடைய கடலிலேசென்று கடியசூர னைக்கொன்ற பசிய பூணினையுடைய முருகனைப்பெற்ற பெருமையையுடைய வயிற்றினையும்,

459. தணங்கை அம் செல்விக்கு அணங்கு தொடித்தாங்கு—பேய்களா டுகின்றதணங்கைக்கூத்தினையும் அழகினையுமுடைய இறைவிக்குப பேய்மக்கள் லை தொடிசொன்றற்போல,

* பொறி - ஒளி; (புறநா. 161)

† "தொல்லிலங்கை குடுமிகொண்டு" (கூர்ம, சுவேத. 5.)

‡ "குடுமிகொள்ளு மண்ணுமங்கலம்" (கூர்ம 27 - 5.)

§ சந்துசெய்தல் - பொருத்துதல்.

‖ தணங்கை: (முருகு. 56.)

மாட்சிய தினை புணர் தொழில மால் கடல் வினை கண்டன்ன *வால் உளை புரவி
கான்கு உடன் பூட்டி—குதிரைநூல்கற்றோர்புகழ்ந்த அழகினையுடையவாய்த்
தனித்துத்தொழில்செய்யாமல் இனங்களோடேகூடுந் தொழிலையுடையவாய்க்
கருமையையுடையகடலிற் சங்கைக்கண்டாற்போன்ற வெள்ளிய †கழுத்தின்
மயிரையுடைய குதிரைகள்கான்கைச் சேரப்பூட்டி.

கான்கு கால்கெனப்பெயர்த்திரிசொல்.

490. அரி தேர் கல்லியும் அமையான்—பொன்னுற்செய்த தேரைத்தந்
தும் கொடை மேல் விருப்பத்தவிராளனும்,

490 - 92. செரு தொலைத்து ஒன்னு தெவ்வர் உலைவிடத்து ஒழித்த
விசும்பு செல் இவுளியொடு பசு படை தரீஇ—தர்முடன்வந்து பொருதோரு
டைய போர்களே மாளப்பண்ணித் தன்னேவலைப்பொருந்தாத பகைவர்முத
கிட்டலிடத்து விட்டுப்போன ஆகாயத்தேசெல்கின்ற குதிரைகளுடனே பகிய
பொன்னைச்செய்த ‡பக்கரைகளேயுந்தந்து,

493. [அன்றே வீடுக்குமவன் பரிசில்:] அவன் அன்றே பரிசில் விடுக
கும்—அவன் நீசென்ற அற்றைநாளே இவையெலாந்தரும் பரிசில்களேயுந்தரும்;

493 - 4. இன் சீர் இன்னரம் முரலும் அணங்குடை சாரல்—இனிய தா
னத்திலே இன்னரமென்னும் பறவைகள்பாடுந் தெய்வங்களேயுடைய சாரலி
டத்தி,

495. மஞ்ஞை ஆலும் மரம் பயில் இறும்பின்—மயில்களாரவாரிக்கு
மரம்செருங்கின இளமரக்காட்டினேயுமுடைய,

496. கலே பாய்ந்து உதிர்ந்த மலர் ஸ்ழ் புறவின்—மானுக்கலைகள்பாய்ந்து
உதிர்த்த மலர்கள்சிந்தின காட்டினேயுப்,

497. மந்தி சிக்கும் மா துஞ்சும் முன்றில்—மந்திகள் அவ்விடத்துக்
கிடந்த §தூளாலேவாரும் மானும்புலியுந் தூயில்கொள்ளும் முற்றத்தே,

புறவினேயும் (496) இறும்பினேயு (495) முடைய சாரலிடத்து (494)
முன்றிலிலே (497) வேட்கு (499) மென்க.

498. செ தீ பேணிய முனிவர்—சிவத்தீயைக் கைவிடாமற்காத்துப்
போந்த இருடிகள்,

498 - 9. வெள் கோடு களிறு தரு விறகின் வேட்கும்—வெள்ளிய
கொம்பினேயுடைய களிறு முறித்துக்கொண்டுவந்த சமிதையாலே வேள்வி
னேயைச்செய்யும்.

மந்தி சித்தலும், மாத் துஞ்சலும், களிறு விறகுதருதலும் இருடிகளாலே
யால் நிகழ்த்தனவென்றுணர்க.

500. [ஒளிறிலங் கருவிய மலேமிழ வோனே:]

ஒளிறு மலே—இவற்றால்விளங்குமலே.

இலங்கு அருவிய மலே—விளங்குகின்ற அருவிகளேயுடையமலே.

மலே மிழலோன்—இச சிறந்த மலேயையாளும் உரிமையையுடையோன்.

---

* பொரு. 165. ‡ பக்கரை - சேணம்.
† கழுத்தின்மயிர் தலேபாட்டமெனவும்வழங்கும். § தூல் - செத்தை.

223 - 4. பு-வெ. பாடாண். 18 - ஆம் செய்யுளோப்பார்க்க.
224. கருத்து: சிறுபாண். 142.
231. "பருந்திருந் தகக்கும் பன்மா ணல்லில்" (மதுரை. 502) "பருந்துயிர்த், திடைமதிற் சேக்கும் புரிசை" (புறநா. 343); பார்வல்: "பார்வற் பாசறை" (பதிற். 84); "பார்வ லிருக்கை" (புறநா. 3.)

படுகண் முரசங் காலை யியம்ப
வெடிபடக் கடந்து வேண்டுபுலத் திறுத்த
பணிகெழு பெருந்திறற் பல்வேன் மன்னர்
கரைபொரு திரங்குங் கனைஇரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே யுரைசெல
மலர்தலை யுலக மாண்டுகழிந் தோரே
அதனால், குணகடல் கொண்டு குடகடன் முற்றி
யிரவு மெல்லையும் விளிவிட னறியா
தவலு மிசையு நீர்த்திரள் பீண்டிக்
கவலையங் குழும்பி னருவி யொலிப்பக்
கழைவளர் சாரற் களிற்றின நடுங்க
வரைமுத லிரங்கு மேருழு வான்ஞெமிர்ந்து
சிதரற் பெரும்பெயல் சிறத்தலிற் றுன்காது
குணகடற் கிவர்தருங் குரூஉப்புன லுள்கி
நிவந்துசெ னீத்தங் குளங்கொளச் சாற்றிக்
களிறுமாய்க்குங் கதிர்க்கழனி
யொளிறிலஞ்சி யடைநிவந்த
முட்டாள சுடர்த்தாமரை
சுட்கமழு நறுநெய்தல்
வள்ளித ழுவிழ்நீல
மெல்லிலை யரியாம்பலொடு
வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கைக்

---

232. "தழங்குரன் முரசங் காலை யியம்ப" (ஐங்குறு. 448); "கோயி லிற், காலை முரசங் கனைகுர லியம்பும்" (சிலப். 17.)

235. "கரைகொன் றிரங்குங் கடல்" (தீவக. 1063.)

235 - 7. "தொல்லோன் பிறவி யெண்ணிற் றொகுகடன் மணலு மாற்று" (தீவக. 270.)

244. பா. சிதரற்பெயல்கான் றழிதலிற்.

247. மாய்தல் மறைதலென்பதற்கு இவ்வடி மேற்கோள். (சிலப். 9 : 2. அடியார்; தீவக. 453); "களிறுமாய் சுழனி", "களிறுமாய் கதிர்ச் செருெற் கழனி" (தீவக. 54. 1617); "களிறு மாய்க்குஞ் செய்கொல்குலே" (நைடதம். சுயம்வர. 138); "யானை மறையக் கதிர்த்தலைச் சாலிநீடி" (பிரபு. மாயையுத். 11); "களிறு மாய்ப்ப கதழ்ந்தெழு பூம்பயிர்" (தணிகை. காட்டு. 114.)

248 - 9 "அடையிறர் தவிழ்ந்த வள்ளிதழ்த் தாமரை" (பரி. 13.)

249 - 53. முருகு. 78 - 6.

கம்புட் சேவ லின்றுயி லிரிய
வள்ளே நீக்கி வயமீன் முகக்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
வேழப் பழனத்து நாழி லாட்டுக்
கரும்பி னெக்திரங் கட்பி னேனை
யள்ளற் றங்கிய பகடுறு விழுமம்
கள்ளார் களமர் பெயர்க்கு மார்ப்பே
யொலிந்த பகன்றை வினேந்த நழுனி
வண்கை வினேஞ ரரிப்பறை யின்குரற்
றளிமழை பொழியுங் கண்பரங் குன்றிற்
கலிகொள் சும்மை பொலிகொ வாயக்
தகைந்த கோதை தாரொடு பொலியப்
புணர்ந்துட னுடி மிசைமேய் யினதது
மகலிரு வானத் திமிழ்ந்தினி திசைப்பக்
குருகுரல மணிமரத்தான்
மீன்சிவும் பாண்சேரிபொடு
மருதஞ் சான்ற தண்பணை சுற்றி யொருசார்ச்
சிறுதினே கொய்யக் கவ்வை கறுப்பக்
கருங்கால் வரகி னிருங்குரல் புலர
வாழ்ந்த குழும்பிற் றிருமணி கிளர
வெழுர்ந்த கடற்றி னன்பொன் கொழிப்பப்

---

255 - 7. நாழில் கொன்றுகுவித்தலென்னும் பொருளில் ஒருமொன பதற்கு இவ்வடிகள் மேற்கோள் ; (தொல். புரத். 17. உ.)

259 - 60. "அள்ளற் பட்டுத் தள்ளுபு தாப்ப, நல்லெருது மூயலு மனறு போகு விழுமதத, சாகாட் டாளர் கம்பலே" (பத்தும். 27 அடி 12 - 4); "ஆரை சாகாட் டாழ்ச்சி போக்கு, முரணுடை சோன்பகட் டன்ன வெங்கோன்", "அச சொடு தாக்கிய பாரும் றியங்கிய, பண்டச் சாகாட் டாழ்ச்சி சொலிய, வரி மணன் ஞெமரக் கற்பக நடக்கும். பெருமிதப பகட்டுக்குத் துறையு முண்டோ" (புறநா. 60, 90); "மடித்தவா யெல்லாம் பகடன்ஞன்" (குறள். 624); "நிரம்பாத நீரியாற் நிடுமணலு ளாழ்ந்து, பெரும்பார வாடவர்போல் ..... புல்லுண்ணு பொன்றும்" (நீவத. 2784); "குண்டுதுறை யிடுமணற் தோடுற வழுத்திய, பண்டிதுறை யேற்றும் பகட்டினேப்போல" (பெருங்கதை, பிடிவீழ்ந் கதி, 53 - 4.)

263 - 4. கலி செருக்கினேயுணர்த்துதற்கும் (தொல். உரி. 51. உ), சும்மை ஆரவாரமாகிய இசைப்பொருண்மையை உணர்த்துதற்கும் இவ்வடிகள மேற்கோள் ; (தொல். உரி. சூ. 51 - உ ; இ - வி. சூ. 235 - இ.)

பெருங்கலின் பெற்ற சிறுதினை நெளவி
மடக்கிட் பிணியொடு மறுகுவன வுகளச்
சுடர்ப்பூங் கொன்றை தாஅய நீழற்
பாஅ யன்ன பாறை யணிர்த்து
நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும்
வெள்ளி யன்ன வொள்வீ யுதிர்ந்து
சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய்
மணிமரு ணெய்த லுறழக் காமர்
துணிநீர் மெல்லவற் றெய்யிலொடு மலர
வல்லோன் றைஇய வெறிக்களங் கடுப்ப
முல்லை சான்ற புறவணிர் தொருசார்
நறுங்காழ் கொன்று கோட்டின் விக்கிய
குறுங்கதிர்த் தோரை நெடுங்கா லேயலி
யைவன வெண்ணெலொ டரில்கொள்பு நீடி
யிஞ்சி மஞ்சட் பைங்கறி பிறவும்
பல்வேறு தாரமொடு கல்லகத் தீண்டித்
தினைவிளை சாரற் கிளிகடி பூசன்
மணிப்பூ வவரைக் குரூஉத்தளிர் மேயு
மாமா சடியுங் கானவர் பூசல்
சேணோ னகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்
வீழ்முகக் கேழ லட்ட பூசல்
கருங்கால் வேங்கை யிருஞ்சினைப் பொங்கர்
நறும்பூக் கொய்யும் பூச லிருங்கே

---

275 - 6. முல்லை. 99; பட். 245.

278. "படுத்துவைத்தன்னபாறை" (மலைபடு. 15.)

279. "நீலத் தன்ன விதைப்புனம்" (மலைபடு. 102.)

281. "சுரிமுகிழ் முசுண்டை" (அகநா. 235.) பா. சுரிமுக.

282. "மணிக்கலத் தன்ன மாயிதழ் நெய்தல்" (பதிற். 30.)

279 - 84. "பல்லிதழ் தாஅய், வெறிக்களங் கடுக்கும் வியலறை" (மலைபடு. 149 - 50.)

296 - 7. "தலைசாட் பூத்த பொன்னினர் வேங்கை, மலைமா ரிருடோ மேய்ப் பூசல்" (மலைபடு. 305 - 6); "ஓலிசினை வேங்கை கொய்குவஞ் சென் மழிப், புலிபுலி யென்னும் பூச றோன்ற", "இளர்த்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப், பொன்னேர் புதுமலர் வேண்டிய மகளி, ரின்ன விசைய பூச்சல் பயிற் றலின்" (அகநா. 48, 52.)

297 - 8. பா. இருங்கேழ்வேலு.

மேறடு வயப்புலிப் பூசலொ டணைத்து
மிலங்குவெள் ளருவியொடு சிலம்பகத் திரட்டக்
கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிந்
தருங்கடி மாமலை தழீ இ யொருசா
ரிருவெதிர்ப் பைந்தூறு கூரெரி கைப்ப
நிழத்த யாணை மேய்புலம் படரக்
கலித்த வியவ ரியங்தொட் டன்ன
கண்விடு புடையூஉத் தட்டை கவினழிந்
தருவி யான்ற வணியின் மாமலை
வைகண் டன்ன புன்முளி யங்காட்டுக்
கமஞ்சூழ் கோடை விடாக முகந்து
காலுறு கடலி னெலிக்குஞ் சும்மை
யிலைவேய் குரம்பை யுழையதட் பள்ளி
யுவலைக் கண்ணி வன்சொ லிளைஞர்
சிலையுடைக் கையர் கவலை காப்ப
நிழலுரு விழந்த வேனிற்சூன் றத்துப்
பாலை சான்ற சுரஞ்சேர்ந் தொருசார்

முழங்குகட றந்த விளங்குகதிர் முத்த
மரம்போழ்ந் தறுத்த கண்ணே ரிலங்குவளைப்
பரதர் தந்த பல்வேறு கூல
மிருங்கழிச் செறுவிற் றீம்புளி வெள்ளுப்புப்
பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய துடிக்கட் டுணியல்
விழுமிய நாவாய் பெருநீ ரோச்சுநர்
கணந்தலைத் தேளத்து நன்கல னுய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொ டணைத்தும்
வைக றோறும் வழிவழிச் சிறப்ப
நெய்தல் சான்ற வளம்பல பயின்றுங்

---

300. தொல். அகத். சூ. 5 - ந. மேற்.

303. நிழத்தலென்பது நுணுக்கமாகிய குறிப்பை யுணர்த்துமென்றற்கு இவ்வடி மேற்கோள். (தொல். உரி. சூ. 34, 32. சே. ந; இ - வி. சூ. 281.)

310. உழையதட்பள்ளி: "மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி" (பெரும்பாண். 89.)

314. பாலைத்திணைக்கும் நிலமுணர்த்தலென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (நம்பி. சூ. 6 - உரை; இ - வி. சூ. 382.)

கைம்பாற் றிணையுங் கவினி யமைவர
முழவிமிழு மகலாங்கண்
விழவுநின்ற வியன்மறுகிற்
றுணங்கையந் தழூஉவின் மணங்கமழ் சேரி
யின்கலி யாணர்க் குழூஉப்பல பயின்றுங்குப்
பாடல் சான்ற நன்ஞட்டு நடுவட்
கலிதாய வுபசிமையத்து
முயிலகவு மடைபொங்கர்,
மந்தி யாட மாவிசும் புகந்து
முழங்குகால் பொருத மரம்பயில் காவி
னியங்குபுனல் கொழித்த வெண்டலைக் குவவுமணற்
கான்பொழி றழீஇய வடைகரை தோறுங்
தாதுசூழ் கோங்கின் பூமலர் தாதுப்ப்
கோதையி னெழுகும் விரிநீர் நல்வர
லலிரறல் வையைத் துறைதுறை தோறும்
பல்வே றுபூத்திரட் டண்டலை சுற்றி
யழுந்துபட் டிருந்த பெரும்பா ணிருக்கையு
நிலனும் வானுங் கண்டமை கல்லா
விளங்குபெருந் திருவின் மான விறல்வே
ளழும்பி லன்ன நடிமழுந் தனருங்
கொழும்பல் பதிய குடியிழுந் தனருங்
தொன்றுகறுத் துறைபுந் துப்புத்தர வந்த
வண்ணல் யாவ யடுபோர் வேந்த
ரின்னிசை முரச மிடைப்புலத் கொழியப்

---

328. மதுரை. 98.

339 - 40. "கோதைபோற் கிடந்த கோதாவிரி" (கம்ப. ஆறுசெல். 27.)

342. "அழுந்துபட் டலமரும்" (மலைபடு. 219.)

341. மானவிறல்வேள் · (மலைபடு. 161.) பா. வானவிறல்வேள்.

345. அழும்பில் · —' பெருஃபூட் சென்னி. யழும்பி லன்ன வுருஅ பாணர்" (அகநா. 44); "அறைபறை யென்றே யழும்பில்வே ளுரைப்ப" (சிலப். 25 : 177.) பா. அழும்பி னன்ன.

349. (மதுரை. 129.) பகைவருடையமுரசை வெளவல் : "வேந்தரை, யணங்குகரும் பறந்தலை யுணங்கப் பண்ணிப். பிணியுறு முரசங் கொண்ட காலை", "அரசுபட வமருழக்கி, யுரைசெல முரசவெளவி", "சிறுசொற் சொல்லிய தினவுதெழு வேந்தரை, யருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ, டொருங் ககப் படேஎ னுயின்", "மலைந்தோர், விசிபிணி முரசமொடு மண்பல தந்த ..... பாண்டியன்" (புறநா. 25, 26, 72, 179.)

பன்மா மோட்டிப் பொர்புறம் பெற்ற
மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்ணுற வோங்கிய பல்படைப் புரிசைத்
தொல்வலி நிலைஇய வணங்குடை நெடுநிலை
நெய்ப்படக் கரிந்த நிண்பூர்க் கதவின்
மழையாடு மலியி னிவந்த மாடமொடு
வையை பன்ன வழக்குடை வாயில்
வகைபெற வெழுந்து வான மூழ்ஞிச்
சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில்
யாறுகிடந் தன்ன வகனெடுந் தெருவின்
பல்வேறு சூழ்அத் திசையெழுந் தொலிப்ப
மாகா லெடுத்த மூங்நீர் போல
முழங்கிசை ஞன்பணி யறைவனர் றுவலக்
கயங்குடைந் தன்ன வியன்தொட் டிமிழிசை
மகிழ்ந்தோ ராடுங் கலிகொள் சும்மை
யோவுக்கண் டன்ன விருபெரு நியமத்துச்
சாறயர்ந் தெடுத்த வுருவப் பல்கொடி
வேறுபல் பெயர வாரெயில் கொளக்கொள
நாடோ றெடுத்த நலம்பெறு புணிகொடி
நீரொளித தன்ன நிலவுவேற் றுணியொடு
புலவுப்படக் கொன்று மிடைதோ லோட்டிப்
புகழ்செய் தெடுத்த விறல்சா னன்கொடி

---

351. "மணிமரு டெண்ணீர்" (மலைபடு. 250.)

353-4. "புரைதிர்ந், தையலி யப்பிய செய்யணி நெடுவிலே" (நெடுநல். 86), 'செய்யோ டிமைக்கு மையலித் நிரன்காழ், வினங்குராசர் வினங்க" (நற். 370.)

354. போர்க்கதவு : (பட். 40.)

355. மலைபுரை மாடத்து (மதுரை. 406)

358. பா லில்காற்றசைக்கும்.

359. மு. நெடுநல். 30; நற். 200; "யாறெனக் கிடந்த தெரு" (மலைபடு. 481); "நீத்தியாற் றன்ன நெடுங்கண் வீதி" (பெருங்கதை. 5.7.23.)

363. "குடைதொறுங், தெரியிழிழ் கொண்டதும் மியம்போ லின்னிசை" (மலைபடு. 295 - 6); "தண்ணுமை முழவ மோர்தை தருணிச்சம் பிறவு மோசை, யெண்ணிய விரலோ டங்கை புறங்கையி னிசைய வாசித், தின்னிதிற் றெறித்து, மோவார் கொட்டியுங் குடைந்து மாடி" (சீவக. 965.)

369 - 71. "வேண்டுபுலங் கவர்ந்த வீண்டுபெருந் தானையொடு, விசயம் வெல்கொடி யுயரி" (முல்லை..90 - 91.)

கள்ளின் களிகளில் கொடியொடு கன்பல
பல்வேறு குழூஉக்கொடி பதாகை நிலைஇப்
பெருவரை மருங்கி னருவியி னுடங்கப்
375 பணிமீன் வழங்கும் வகுமேய் பரப்பின்
வீங்கு நோன்கயி றரீஇயிதை புடையூக்
கூம்புமுதன் முருங்க வெற்றிக் காய்ந்துடன்
கடுங்காற் றெடுப்பக் கல்பொரு துரைஇ
நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல
380 விருதலைப் பணில மார்ப்பச் சினஞ்சிறந்து
கோலோர்க் கொன்று மேலோர் வீசி
மென்பிணி வன்றொடர் பேணுது காழ்சாப்பதற்
கந்துநீத் தழிதருங் கடாஅ யானையு
மங்கண்மால் விசும்பு புதைப வளிபோழ்ந்
385 தொண்கதிர் ஞாயிற் றுறளவாத் திரிதருந்
செங்கா லன்னத்துச் சேவ லன்ன
குரூஉமயிர்ப் புரவி யுராலிற் பரிதிமிர்ந்து
காலெனக் கடுக்குங் கவின்பெறு தேருங்
கொண்ட கோலன் கொள்கை நவிற்றலி
390 னடிபடு மண்டிலத் தாதி போகிய
கொடிபடு சுவல விடுமயிர்ப் புரவியும்
வேழத் தன்ன வெருவரு செலவிற்
கன்னார் களம ரிருஞ்செரு மயக்கமு
மரியவும் பெரியவும் வருவன பெயர்தலிற்
395 றீம்புழல் வல்சிக் கழற்கான் மழவர்
பூந்தலை முழவி னேன்றலை கடுப்பப்
பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர்
பலவ்வகை விரித்த வெதிர்பூங் கோதையர்
பலர்தொகு பிடித்த தாதகு சுண்ணத்தர்
400 தகைசெய் தீஞ்சேற் றின்னீர்ப் பகங்காய்

---

372. பெரும்பாண். 337 - ஆம் அடி உரையின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.
373 - 4. "வேறுபன்மணிலி னுடங்கி ..... இழிசருமருவி" (முரு. 206 - 316.)
376. பா. வீக்குபிணிநோன்கயிறு.
360 - 83. பொருந. 171 - 2 - ஆம் அடிகளின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.
385. பா. ஞாயிறுளவா.
398 - 9. "சாந்தினர் புகையினர் தயங்கு சோதையர், ... இடித்த சுண்ணத்தர்" (சிலப். மங்கலவாழ்த்.)
400. சிலப். 31 - ச, மேற்கோள்.

நீடுகொடி யிலையினர் கோடுசுடு நூற்றின
நிருதலை வந்த பகைமுனை கடுப்ப
வின்னுயி ரஞ்சி யின்ன வெய்துயிர்த்
தேங்குவன நிருந்தவை நீங்கிய பின்றைப்
பல்வேறு பண்ணீப் தழீஇத்திரி விலஞர்
மலிபுரை மாடத்துக் கொழுநிழ லிருத்தர
விருங்கடல் வான்கோடு புரைய வாரும்றுப்
பெரும்பின் னிட்ட வானரைக் கூந்தலர்
நன்னர் நலத்தர் தொல்முது பெண்டிர்
செந்நீர்ப் பசும்பொன் பூணிந்த பாவை
செல்சுடர்ப் பசுவெயிற் றோன்றி யன்ன
செய்யர் செயிர்த்த நோக்கினர் மடக்க
ணிணைய கழுமு மாமையர் வையெயிற்று
வார்ந்த வாயர் வணங்கிறைப் பணிந்தோட்
சோர்ந்தகு வன்ன வபக்குறு வந்திகைத்
தொய்யில் பொறித்த சுணங்கெதி ரிளமுலை
மையுக் கன்ன மொய்யிருங் கூந்தன் ,
மயிலிய லோரு மடமொழி யோருங்
கைஇ மெல்லிதி னெதுங்கிக் கையெறிந்து
கல்லா மாந்தரொடு நகுவனர் நிலைப்பப்
புடையமை பொலிந்த வகையமை செப்பிற்
காம ருருவிற் றும்வேண்டும் பண்ணியங்
கமழ்நறும் பூவொடு மணமண மறுக
மழைகொளக் குறைபாது புனல்புக மிகாது
கரைபொரு திரங்கு மூங்கீர் போலக்
கொளக்கொளக் குறைபாது கரத்தர மிகாது
கழுநீர் கொண்ட வெழுநா ளந்தி
யாடுதுவன்று விழவி னுடார்த் தன்றே
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூட
ஞளங் காடி நனந்தலைக் கம்பலை
வெயிற்கதிர் மழுங்கிய படர்கூர் ஞாயிற்றுச்

406 - 7. "வலம்புரி புரையும் வானரை முடியினர்" (முருது. 127.)
410. "செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த" (புறநா. 9 அடி 9.)
411. சிலப். 4: 5 - 8. அடியார். மேற்.
419, பா. தைஇமெல்லிதின்.

செக்க ரன்ன சிவந்துதணங் குருவிற்
கண்பொரு புகூஉ மொண்பூங் கலிங்கம்
பொன்புனை,வாளொடு பொலியக் கட்டித்
திண்டேர்ப் பிரம்பிற் புரளுந் தாணைக்
கச்சக் தின்ற கழறபங்கு திருந்துகடி
மொய்ம்பிறந்து திரிதரு மொருபெருந் தெரிபன்
மணிதொடர்க் தன்ன வொண்பூங் கோதை
யணிகிளர் மார்பி னுரிடை டளைஇக்
காலியக் கன்ன கதழ்பரி கடைஇக்
காலோர் காப்பக் காலெனக் கழியும்
வான வண்கை வளங்கெழு செல்வர்
நாண்மகி ழிருக்கை காண்மார் பூணைடி
தெள்ளரிப் பொற்சிலம் பொலிப்ப வொள்ளழற்
ருவற விளங்கிய வாப்பொ னவிர்மிசை
யணங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர்
மணங்கமழ் நாற்றக தெநவுடன் கமழ
வொண்குழை திகழு மொளிகெழு திருமுகந்
திண்கா ழேற்ற விபலிரு வி லொநக
தெண்கடற் றிரையி னரைவளி புடைப்ப
நிரைநிலை மாடத் தகமியற் தோறு
மழைமாய் மதியிற் றிருன்றபு மறைய
நீரு நிலனுங் தீயும் வளியு
மாக விசம்போ டைந்துட னிபற்றிய
மழுவா ணெடியோன் நலிவு னுக
மாசற விளங்கிய யாக்கையர் நிற்கடர்
வாடாப் பூவி னிமைபா நாட்டத்து
நாற்ற வுணவி னுருகெழு பெரியோர்க் கு
மாற்றரு மரபி னுயர்பலி சொடுமா
ரங்கி விழவிற் றாரியங் கறங்கத்
திண்கதிர் மதாணி பொண்குறு மாக்களை
யோம்பினர்த் தழீ இத் தாம்புணர்ந்து முபங்கித்
தாதணி தாமரைப் போதுபிடித் தாங்கு

448. பா. குழையிருந்தவொளிகெழு

456. "மாசற விளமைக்கு முருவினா" (புநாது. 128.)

461 - 3. குழந்தைகளுக்குத் தாமரைப்போது: "நீரு, னடைமறை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட, குடைநிழற் றேன்றுணின் செம்மலே" (கலி. 84); "பொய்கையுண் மலரென வளர்ந்து" (சீவக. 2756.)

தாமு மவரு மோராங்கு விளங்கக்
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்
பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்
சிறந்துபுறங் காக்குங் கடவுட் பள்ளியுஞ்
சிறந்த வேதம் வினங்கப் பாடி
விழுச்சீ ரெய்திய வொழுக்கமொடு புணர்ந்து
நிலமமர் வையத் தொருதா மாகி
யுயர்நிலை யுலக மிவணின் றெய்தி
மறநெறி பிழையா வன்புடை நெஞ்சிற்
பெரியோர் மேஎ யினிதி னுறைபுங்
ஞன்றுகுயின் றன்ன வன்தணர் பள்ளியும்
வண்டுபடப் பழுகிய தேனர் தோற்றத்துப்
பூவும் புகையுஞ் சாவகர் பழிச்சச்
சென்ற காலமும் வரூஉ மமயமு
மின்றிவட் டோன்றிய வொழுக்கமொடு நன்குணர்ந்து
வானமு நிலனுந் தாமுழு துணருஞ்
சான்ற கொள்கைச் சாயா யாக்கை
யான்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார்
கல்பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண்டைப்
பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவரக்
கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்
செம்பியன் றன்ன செஞ்சுவர் புணீந்து
நோக்குவிசை தவிர்ப்ப மேக்குயர்ந் தோங்கி
யிறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையுங்
குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற

---

470. பா. ஒருநிரைமை.

455 - 74. "நுதல்விழி நாட்டத் நிறையோன் கோயிலு, முவணச் சேவ லுயர்த்தோ னியமமு, மேழிவல னுயர்த்த வெள்ளே காமுங், கோழிச் சேவற் கொடியோன் கோட்டமு, மறத்தறை விளங்கிய வறவோர் பள்ளியும்" (சிலப். 14: 7 - 11); "நுதல்விழி நாட்டத் நிறையோன் முதலாப், பதிவாழ் சதுக்கத் தத் தெய்வமீ ருக" (மணி. 1: 54 - 5.)

485. "செம்பியன் றன்ன செய்வுறு தெடுஞ்சுவர்" (நெடுநல். 112); "செம்புறழ் புரிசை" (அகநா. 375); செம்புறழ் புரிசை", "செப்புபுனைந் நியற்றிய சேணெடும் புரிசை" (புறநா. 37, 201); "செம்பைச்சேரிஞ்சி" (தே. பிரம. ஞான.)

வச்சமு மவலமு மார்வமு மீக்கிச்
செற்றமு முவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்
சிறக்க கொள்கை யறங்கூ ரவையமு
நறுஞசாந்து வீசிய கேழ்கிள ரகலத்
தாவுதி மண்ணி யயிர்துகின் முடித்து
மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல
நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி
யன்பு மறனு மொழியாது காத்துப்
பழியொரீ இ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்களு
மறநெறி பிழையா தாற்றி னெழுஞிக்
குறும்பல் குழுவிற் குன்றுகண் டன்ன
பருந்திருந் தகக்கும் பன்மா னல்லிற்
பல்வேறு பண்டமோ டுண்மலிந்த கனிணி
மலியவு நிலத்தவு நீரவும் பிறவும்
பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நரு
மழைபொழுக் கருஅப் பிழைபா வீளையுட்
பழைபன் மோகூ ரவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன
தாமேளங் தோன்றிய நாற்பெருங் குழுவங்
கோடுபோழ் கடைநரும் திருமணி குயினருஞ
சூடுறு நன்பொன் சுடரிழை புனைநரும்
பொன்னுரை காண்மரும் கலிங்கம் பகர்நருஞ
செம்புநிறை கொண்மரும் வம்புநிறை முடிநரும்
பூவும் புகையு மாயு மாக்களு

---

489 - 92. "காய்த லுவத்த லகற்றி யொருபொருட்க ணுய்த லறி வுடையார் கண்ணதே - காய்வதன்க, ணுற்றகுணந் தோன்ற தாகு முவப்ப தன்கட், குற்றமுந் தோன்ற கெடும்" (அறநெறி. 22.)

493. கெழுவென்னும் உரிச்சொல் நிறப்பண்பை உணர்த்துமென்ப தற்கு இவ்வடி மேற்கோள். (தொல் உரி. சூ. 5 - உ; இ - வி. சூ. 283.)

494. மண்ணுதல் என்பதற்குப் பண்ணுதல் எனப் பொருள்கூறி இவ் வடியை மேற்கோளாகக்காட்டினர்; (தீவக. 202, 735, 1808.)

502. இத்தல் 231 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

மெல்வகைச் செப்திபு முவமங் காட்டி
றுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் விணைஞரும் பிறருங் கூடித்
தெண்டிரை யவிரறல் சுடுப்ப வொண்பல்
குறியவு நெடியவு மடிதரூஉ விரித்துச்
சிறியரும் பெரியருங் கம்மியர் குழீஇ
நால்வேறு தெருவினுங் காலுற நிற்றரக்
கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்துங்
தண்கட ணுட ணெண்பூங் கோதை
பெருநா ளிருக்கை விழுமியோர் குழீஇ
விழைவுகொள் கம்பலை கடுப்பப் பலவுடன்
சேறு நாற்றமும் பலவின் சுளையும்
வேறுபடக் கவினிய தேமாங் கனியும்
பல்வே றுருவிற் காயும் பழனுங்
கொண்டல் வளர்ப்பக் கொடிவிடுபு கவினி
மென்பிணி யவிழ்ந்த குறுமுறி யடகு
மமிர்தியன் றன்ன நீர்சேற்றுக் கடிதையும்
புகழ்படப் பண்ணிய பேரூன் சோறுங்
கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு பிறவு
மின்சோறு தருநர் பல்வயி னுகர
வாலிதை யெடுத்த வளிதரு வங்கம்
பல்வேறு பண்ட மிழிதரும் பட்டினத்
தொல்லெ னிமிழிசை மானக் கல்லென
நனந்தலை விணைஞர் கலங்கொண்டு மறுகப்
பெருங்கடற் குட்டத்துப் புலவுத்திரை போத
மிருங்கழி மருவிப் பாய்பெரிகெழுஉ
தருகெழு பானுள் வருவன பெயர்தலிற்
பல்வேறு புள்ளி னிசைபெழுந் தற்றே
யல்லங் காடி யழிதரு கம்பலை
பொண்சுட ருருப்பொலி மழுங்கச் சினந்தணிந்து
சென்ற ஞாயிறு நன்பகற் கொண்டு

---

516. பா. எண்வகைச்செய்தியும்.

524. பா. தெண்கடனுடன்.

531. பா. குறுமுறியடகும்.

குடமுதற் குன்றஞ் சேரக் குணமுத
ஞண்முதிர் மதியந் தோன்றி நிலாவிரிபு
பகலுரு வுற்ற விரவுவர நயந்தோர்
காத லின்றுணை புணர்மா ராயிற்
தண்ணறுங் கழுநீர் துணைப்ப விழைபுணையூ
நன்னெடுங் கூந்த னறுவிரை குடைய
நரந்த மரைப்ப நறுஞ்சாந்து மறுக
மென்னூற் கலிங்கந் தம்முதை மடுப்பப்
பெண்மகிழ் வுற்ற பிணைகோக் கு மகளிர்
நெடுந்தடா விளக்கந் கொளீஇ நெடுநக
ரெல்லே யெல்லா நோபொடு புகுந்து
கல்லென் மாலை நீங்க நாணுக்கொள
வேம்புணர் சிறப்பி னின்னை முடைச் சீறியாழ்
தாழ்பெயற் கணைகுரல் கறிப்பப் பண்ணுப்பெயர்த்து
வீழ்துணை தழீஇ விபல்விடப்பு கமழ
நீர்திரண் டன்ன கோதை நிறக்கிட்
டாரப்போ லவிர்தொடி விளங்க வீசிப்
போதவிழ் புதுமலர் தெரிவுடன் கமழ
மேதகு தகைய மிகுகல மெற்றிப்
பெருமம்பல் குவளை சுருப்படு பன்மலர்
திறந்துமோர் நன்ன நிறந்தகமழ் நாற்றத்
கொண்டல் மலர்ப்புதன் மாலைப்பூ வேய்ந்து
துணுகு ணகைம யுக்கொள முயங்கி
மாயப் பொய்ப்பல கூட்டிக் கவவுக்கரந்து
சேயரு ணணிய நலனாயந்து வந்த
விளம்பல் செல்வர் வரக்கண வாங்கி
நுண்டா துண்டு வறும்பூத் துறைசு
மென்சிறை வண்டி னமானப் புணர்ந்தோர்
நெஞ்சே மாப்ப விவ்வுறுபி னுறைத்து

560. "திருமழை தலைஇய விருணிற விசுமபின், விண்ணகரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்து" (மலைபடு. 1 - 2; நாலடி. புள்ளி. சூ 11. உ. மேற்.) பா. தாழ்பயல்.

562. "மார்விற்றுர்கோலிமழை" (பு - வெ பாடாண். 16.)

572 - 5. "நறுந்தா துண்டு கயனில் காலை, வறும்பூத் துறைக்கும் வண்டு போல்குவம்", "பயன்பல வாகுவி வண்டிற் றுறைக்கும், கொண்டி மகளிரை" (மணி. 18 : 19 - 20, 108 - 9.)

பழந்தேர் வாழ்க்கைப் பறவை போலக்
கொழுங்குடிச் செல்வரும் பிறரு மேனய
மணம்புணர்ந் தேர்ங்கிய வணங்குடை கல்லி
லாய்பொன் னவிர்தொடிப் பாசிழை மகளிர்
சொண்சுடர் விளக்கத்துப் பலருடன் றுவன்றி
நீனிற விசும்பி லமர்ந்தன ராடும்
வானவ மகளிர் மானக் கண்டோர்
நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்
யாம நல்யாழ் நரப்ப ணின்ற
முழவின் மகிழ்ந்தன ராடிக் குண்டுநீர்ப்
பனிதுறைக் குவவுமணல் முன்னி இ மென்றளிர்க்
கொழுங்கொம்பு கொழுதி நீர்ஞெ மேவர
நெடுந்தொடர்க் குவளை வடிம்புற வடைச்சி
மணங்கமழ் மனைதொறும் பொய்த லயரக்
கணங்கொ ளவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய வோண நன்னாட்
கோணந் தின்ற வடுவாழ் முகத்த
சாணந் தின்ற சமந்தாங்கு தடக்கை
மறங்கொள் சேரி மாறுபொரு செருவின்
மாரு துற்ற வடுப்படு கெற்றிச்
சுரும்பார் கண்ணிப் பெரும்புகன் மறவர்
கடுங்களி ரேட்டலிற் காணுந ரிட்ட
நெடுங்கரைக் காழக நிலம்பர வுருப்பக்
கடுங்கட் டேறன் மகிழ்சிறந்து திரிதரக
கணவ ருவப்பப் புதல்வர்ப் பயந்து
பணைதோள் திளமுலை யமுத மூறப்
புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு
வளமனை மகளிர் குளநீ ராயத்

---

576. பொருந. 64 - ஆம் அடியின் கீழ்க் குறிப்பைப்பார்க்க. "வள்ளி யோர்ப்படர்ந்துள்ளிற்போலி" (புறநா. 47.)

584. யாமநல்யாழ்: "வீரல்கவர்ந் தழந்த கவர்வி னல்யாழ், யாமமுய யாமை" (நற். 335 ; பரி. 14.) "யாமயாழ் மழலையாள்" (கம்ப. காடவிட்ட. 31)

602 - 3. "புதல்வரைப் பயந்த புனிறுதீர் கயக்கர், தீர்வினை மகளிர் குளநீ டாவமும்" (மணி. 7 : 75 - 6 - ஆம் அடிகளையும் அவற்றின்குறிப் பையும் பார்க்க.)

நிவவுமெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணிக்
குரல்புணர் நல்பாழ் முழவோ டொன்றி
நுண்ணீ ராகுளி பிரட்டப் பலவுட
ஞெண்சுடர் விளக்க முந்துற மடையொடு
நன்மா மயிலின் மென்மெல விபலிக்
கடுஞ்சூன் மகளிர் பேணிக் கைதொழுது
பெருந்தோட் சாலினி மடுப்ப வொருசா
ருருங்கடிற் வேலன் முருகொடு வீஇ
யரிக்கூ டின்னியங் கறங்கநோர் நிறுத்துக்
கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேட் பேணித் தழூஉப்பிணையூஉ
மன்றுதொறு நின்ற குரவை சேரிதொறு
முரையும் பாட்டு மாட்டும் விரைஇ
வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கிப்
பேரிசை ஈன்ன பெறும்பெயர் நன்னாட்
சேரி விழவி னுரிப்பெழுந் தாங்கு
முந்தை யாமஞ் சென்ற பின்றைப்
பணிலங் கலியவிக் கடங்கக் கூழ்சாப்த்து
கொடைநவி னெடுங்கடை யடைத்து மடமுத
ரொள்ளிழை மகளிர் பள்ளி யயர
நல்வரி யிரும்அல் புரையு மெல்லடை
யயிருருப் புற்ற வாடமை விசயங்
கவவொடு பிடித்த வகைபமை மோதகங்
நீஞ்சேற்றுக் கூவியர் தூங்குவன ருறங்க
விழவி னுடும் வயிரியர் மடியப்
பாடான் றவிந்த பனிக்கடல் புரையப்
பாயல் வளர்வோர் கண்ணினிது மடுப்பப்
பானாட் கொண்ட கங்கு லிடையது
பேயு மணங்கு முருவுகொண் டாப்கோற்

---

604. புறநா. 149 - ஆம் பாடல் பார்க்க.

605 - 6 "நல்யா ழாகுளி பதலியொடு சுருக்கி" (புறநா. 64.)

608. முருது. 205 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

618. பா. பெரும்பெயர்.

624. அடைக்கு இருல்: "தேனி ருலன நீஞ்சுவை யின்னடை" (சீவக. 2674.)

கூற்றக் கொள்ளேறர் கழுதொடு கொட்ப
விரும்பிடி மேஎந்தோ லன்ன விருள்சேர்பு
கல்லு மரனுந் துணிக்குங் கூர்மைத்
தொடலே வாளர் தொடுதோ லடியர்
குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச்
சிறந்த கருமை நுண்வினை நுணங்கற
னிறங்கவர்ப் புனைந்த நீலக் கச்சினர்
மென்னர லேணிப் பன்மாண் கற்றினர்
நிலனக ழுளியர் கலனசைஇக் கொட்குங்
கண்மா ருடவ ரொடுக்க மொற்றி
வயக்களிறு பரிக்கும் வபப்புறி போலத்
துஞ்சாக் கண்ண ரஞ்சாக் கொள்கைய
ரறிந்தோர் புகழ்ந்த வாண்மையர் தெறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்குநுண் டேர்ச்சி
யூர்காப் பாள ரூக்கருங் கூனியர்
தேர்வழங்கு தெருவி னீர்திரண் டொழுக
மழையமைக் தற்ற வரைநர ளமபமுழ
மசைவில செழுந்து நபம்வந்து வழங்கலிற்
கடவுள் வழங்குங் கையறு கங்குலு
மச்ச மறியா தேம மாகிய
மற்றை யாமம் பகலுறக் கழிப்பிப்
போதுபிணி விட்ட கமழ்நறும் பொய்கைத்
தாதுண் டும்பி போது முரன்றுங்
கோத லந்தணர் வேதம் பாடச்
சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி

---

635 - 6. "குன்று தூவலாக்குங் கூர்நுனேயான்" என்பது பாரம்; (தொல். புறத். சூ 21 - ந. மேற்); 'வேறிரண் டனவும் வில்லு மிடைந்தவும வெற்பென் றாலுங், கூறிரண் டாக்கும் வாட்டைக் குழுவையுங் குணிக்க லாற்றேம்" (கும்ப சுக்தர. பாக. 6.)

639 - 42. "நிலனக ழுளிய னீலப் தானையன், கலனசை வேட்கையிற் கடும்புலி போன்று" (சிலப். 16: 204 - 5 அடியார். மேற்.)

653. பகலென்பதற்கு, அரையாமம் எனப் பொருள்கொண்டு இவ்வடியை மேர்கோள் காட்டினர்; (சிலப். 4: 81 - அரும்பத. அடியார்.)

655. சீவக. 893 - ந. மேற்.

யாழோர் மருதம் பண்ணைக் காழோர்
கடுங்களிறு கவளங் கைப்ப நெடுந்தேர்ப்
பணிகிலைப் புரவி புல்லுணாக் கெவிட்டப்
பல்வேறு பண்ணியக் கடைமெழுக் குறுப்பக்
கள்ளோர் களிகொடை நுவல வில்லோர்
நபக்க காதலர் கவவுப்பிணிக் துஞ்சிப்
புலர்ந்துவிரி விடிய லெய்த வினம்பிக்
கண்பொரா வெறிக்கு மின்னுக்கொடி புரைய
வொண்பொ னவிரிழை தெரிப்ப விபவிக்
திண்சுவர் நல்லிற் கதவங் கரைய
வுண்டுமகிழ் தூட்ட மழலை நாவிற்
பழஞ்செருக் காளர் கழங்குரூ றேந்தச்
சூநர் வாழ்த்த மாகநர் நுவல
வேதா ளிகரொடு நாழிசை யிசைப்ப
விமிழ்முர சிரங்க வேறுமாறு சிலைப்பப்
பொறிமயிர் வாரணம் வைகறை யியம்ப
யாணெயங் குர்ந்நின் சேவலொடு காம
ரன்னங் கரைப வணிமயி லாவப்
பிடிபுணர் பெருங்களிறு முழங்கு முழுவமிசைக்
கூட்டுறை வயமாப் புலிபொடு குழுமம
வான நீங்கிய நீனிற விசும்பின்
மின்னுநிமிர்ந் தனைய ராகி நறவுமகிழ்ந்து
மாணிழை மகளிர் புலந்தனர் பிரிந்த
பருவுக்கா ழாரஞ் சொரிந்த முத்தமொடு
பொன்சுடு நெருப்பி னிலமுக் கென்ன
வம்மென் குரும்பைக் காப்பதிபு பிறவுங்

---

658. புறநா. 119 - ஆம் பாடல் பார்க்க

659. "கல்லா வினஞர் கவளங் கைப்ப" (முல்லை 35.)

666. பா. தெளிர்ப்பவியலி. 670. பா. சூதேத்த.

671. பா. வேதாளியர்

670 - 71. சிலப் 5 : 10. அடியார் மேற்

673 - 4. 'யானைபல குருதின் கானலம் பெருந்தோடு" (குறுந். 34); "களிமயில், குஞ்சரக் குரல குருதிகா டாலும்" (அகநா 115); "இகுகிசென் தெருகுயானைச்சாத்துங்கலத்து" (திருப்பாவை. 7.)

678. நீனிறவிசும்பு: (மதுரை. 581.)

திருமணன் முற்றத் தரிஞிமி ழார்ப்ப
மென்பூஞ் செம்மலொடு நன்கலஞ் சிப்ப
விரவுத்தலைப் பெயரு மேம வைகறை
மைபடு பெருந்தோண் மழவ ரோட்டி
யிடைப்புலத் தொழிந்த வேந்துதோட் டியாரினை
பகைப்புலங் கவர்ந்த பாய்பரிப் புரவி
வேல்கோ லாக வாள்செல நூறிக்
காய்சின முன்பிற் கடுங்கட் கூளிய
ரூர்சுடு விளர்ஞிற் றந்த வாயமு
நாடுடை நல்லெயி லணங்குடைத் தோட்டி
நாடொறும் விளங்கக் கைதொழூஉப் பழிச்சி
நாடர வந்த விழுக்கல மனைத்துங்
கங்கையம் பேரியாறு கடற்படர்ந் தாஅங்
களந்தகடை யறிபா வளங்கெழு தாரமொடு
புத்தே ளுலகங் கவினிக் காண்வர
மிக்குப்புக ழெய்திய பெருமம்பெயர் மதுரைச்
சினைநலி மணங்க ளருமம்புபடு செந்நீ
யொண்பூம் பிண்டி யவிழ்ந்த காவிற்
சுடர்பொழிந் தேறிய விளங்குகதிர் ஞாயிற்
றிலங்குகதி ரிளவெயிற் றோன்றி யன்ன
தமனியம் வளைஇ தாவில் விளங்கிழை
நிலம்விளக் குறுப்ப மேதகப் பொலிந்த
மயிலோ ரன்ன சாயன் மாவின்
தளிரே ரன்ன மேனிந கவிர்ப்புறத்
தீர்க்கி னரும்பிய திதலைப் கூரெயிற்
றெண்குழை புணரிய வண்டாழ் காதிற்
கடவுட்கயத் தமன்ற சுடரிதழ்த் தாமரைத்
தாதுபடும் பெரும்போது புரையும் வாண்முகத்
தாப்தொடி மகளிர் நறுந்தோள் புணர்ந்து
கோகையிற் பொலிந்த சேக்கைத் துஞ்சித்
திருந்துதுயி லெடுப்ப வினிதி னெழுந்து

---

695 - 7. மலைபடு. 526 - 9.
706. பா. மயிலோடன்ன.
707 - 9. "சுன்றவ டிதலைபோ லீர்ப்பெய்யுர் தளிரொடு" (கலி. 32.)

திண்கா ழாரந் தீவிக் கதிர்விடு
மொண்கா ழாரங் கவைஇய மார்பின்
வரிக்கடைப் பிரச மூசுவண மொப்ப்ப
வெருத்தற் தாழ்ந்த விரவுப்பூந் தெரியற்
பொலஞ்செயப் பொலிந்த நலம்பெறு விளக்கம்
வலிகெழு தடக்கைத் தொடியொடு சுடர்வரச்
சோறமை வுற்ற நீருடைக் கலிங்க
மூடையணி பொலியக் குறைவின்று கவைஇ
வல்லோன் றைஇய வரிப்புனை பாவை
முருகியன் றன்ன வுருவிணை யாகி
வருபுனற் கற்சிறை கடுப்ப விடையறுத்
தொன்னு ரோட்டிய செருப்புகன் மறவர்
வாள்வலம் புணர்ந்தின் முள்வலம் வாழ்த்த
வில்லேக் கவைஇக் கணைதாங்கு மார்பின்
மாதாங் கெறுழத்தோண் மறவர்த தம்பின்
கல்லிடித் தியற்றிய விட்டுவாய்க் கிடங்கி
னல்லெயி லிரிந்த செல்வர்த் தம்பின்
கொல்லேற்றுப் பைந்தோல் சிவாது போர்த்த
மாக்கண் முரச மோவில கறங்க
வெரிநிமிர்ந் தன்ன தாணை நாப்பட்
பெருநல் யாணை போர்க்களத் தொழிய
விழுமிய வீழ்ந்த குரிசிலர்த் தம்பின்
புரையோர்க்குத் தொடுத்த பொலம்பூந் தும்பை
நீர்யா ரென்னது முறைகருதி சூட்டிக்
காழ்மண் டெஃகமொடு கணையலேக் கலங்கிப்
பிரிபிணை யரிக்த நிறஞ்சிதை கவயத்து

---

715 - 6. "இருபே ராரமு மெழில்பெற வணியுந். திருவீழ் மார்பிற் தென்னவர்." (அகநா. 13.)

727. பா. தான்வலம்பழிச்ச.

726 - 7. சிறுபாண். 211 - 2

731. கலி. 92; சீவக. 906 - ந மேற்.

732 - 3. "ஓடாநல் லேற்றுரிவை தைஇய, பாடுகொண் முரசம்" (அகநா. 334); "வாளுங் குடையு மயிர்க்கண் முரசும்" (சிலப். 5 · 91.)

734. பா. (க) எரிபரந்தன்ன (உ) எரிகிளர்ந்தன்ன.

வானத் தன்ன வளநகர் பொற்ப
நோன்குறட் டன்ன வூன்சாப் மார்பி
னுயர்ந்த வுதவி யூக்கலர்த் தம்மி
னிவந்த யாணைக் கணநிரை கவர்ந்த
புலர்ந்த சாந்தின் விரவுப்பூந் தெரியற்
பெருஞ்செ யாடவர்த் தம்மின் பிறரும்
யாவரும் வருக வேனோரு தம்மென
வரையா வாயிற் செறுஅ திருந்து
பாணர் வருக பாட்டியர் வருக
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருகென
விருங்கிளை புரக்கு மிரவலர்க் கெலலாங
கொடிஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் விசிக
களந்தோறும் கள்ளரிப்ப
மரந்தோறு மைவிழ்ப்ப
நிணவூன்சுட் டுருக்கமைய
நெய்கனிந்து வறையார்ப்பக்
கூரூஉக்குப்ப்புகை மழைமகருயிற்
பரந்துதோன்று வியனகராற்
பல்சாலை முதுகுடுமியி
னல்வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால சிறப்பி
னிலந்தரு திருவி னெடியோன் போல
வியப்புஞ சால்புஞ செமமை சானறோர்
பலர்வாய்ப் புகாறு சிறப்பிற் றோன்றி
யரியதறிது குடியகற்றிப்
பெரியகற் றிசைவிளகிக்
மூக்கீர் நாப்பண் ஞாயிறு போலவும்

---

742. "எல்லா னோக கடுபபமெய் நிதைத்து" (பதிற். 67 17.)

747. பொருந. 101 - அடி மேற்.

760. "பாற்சேள்வித்துறைபோய பைந்தா மாபண" (சீவக. 717)

760 - 761. பட். 169 - 170.

763. "நிலந்தரு திருவிற் பாண்டியன்" (தொல். பாயிரம்.)

பண்மீ னடுவட் டிங்கள் போலவும்
770 பூத்த சுற்றமொடு பொலிர்தினிது விளங்கிப்
பொய்யா நல்லிசை நிறுத்த பூனைதார்ப்
பெரும்பெயர் மாறன் தலைவ னுகக்
கடந்தடு வாய்வா ளிளம்பல் கோச
ரியனெறி மரபினின் வாய்மொழி கேட்பப்
775 பொலம்பூ ணிவள புட்படப் புகழ்ந்த
மறமிகு நிறப்பிற் குறுங்கில் மன்ன
ரவரும் பிறருங் தவன்றிப்
பொற்புவிளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த
விலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
780 மணங்கமழ் தேறன் மடுப்ப நாளு
மகிழ்ந்தினி தறைமதி பெரும
வரைந்துநீ பெற்ற நல்லா ழியையே.

இதன்பொருள்.

இப்பாட்டிற்கு மாங்குடிமருதனர் மதுரைக்காஞ்சியென்று மதுரைப்பெய ரானன்றித் தினைப்பெயராற் பெயர்கூறினர். இத்தினைப்பெயர் பன்னிருபடல முதலிய நூல்களாற்கூறிய தினைப்பெயரன்று; நொல்காப்பியனுர்கூறிய தினைப்பெயர்ப்பொருளே இப்பாட்டிற்குப் பொருளாகக் கோடலின். வஞ்சி போற்செல்லானுர், காஞ்சி எஞ்சாதெதிர்சென்றூன்றலானும் "வஞ்சியும் காஞ் சியுந் தம்முண் மாறே" எனப் பன்னிருபடலத்திற்கூறிய தினைப்பெயர் இப் பாட்டிற்குப் பொருளன்மையுணர்க. அவர் முதுமொழிக்காஞ்சிமுதலியவற் றைப் பொதுவியலென்று ஒருபடலமாக்கிக்கூறலின், அவை தினைப்பெயராகா மையுணர்க.

இனி, மதுரைக்காஞ்சியென்றதற்கு மதுரையிடத்து அரசற்குக் கூறிய காஞ்சியென விரிக்க. இஃது உருபும்பொருளும் உடன்றொக்கது. *"காஞ்சி சானே பெருந்தினைப் புறனே" என்பதனுற் காஞ்சி பெருந்தினைக்குப் புறனு

---

769 - 70. சிறுபாண். 219 - 20 ஆம் அடிகளின கீழ்க்குறிப்பைப்பார்க்க. "பண்மீ னுப்பட் டிங்கள் போலப், பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலே" (பத்.பா. 90 : 17 - 8.)

775. பா. உளப்பட.

779 - 81. பொருந. 85 - 7 ஆம் அடிகளின் கீழ்க்குறிப்பைப்பார்க்க; "வண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய, தண்கமழ் தேறன் மடுப்ப மகிழ் ர், தாங்கினி தொழுகுமதி பெரும." (புறநா. 24.)

* தொல்காப்பியம், புறத்திணையியல், 22.

யிற்று. அது, *"பாங்கருஞ் நெப்பித் பல்லாற் றாணு, நில்லா வுலகம் புல்லிய நெறித்தே." என்பதாம். இதன்பொருள்: பாங்கு அரு நெப்பின் - தனக்குத் தீணையில்லாத வீடுபேறுமித்தமாக, பல் ஆற்றாலும் - அதம் பொருள் இன்பமென்னும் பொருட்பகுதியாலும், அவற்று உட்பகுதியாகிய உயிரும் யாக்கையும் செல்வமும் இளமையுமுதலியவற்றாலும், நில்லா உலகம் புல்லிய நெறித்து - நிலேபேறில்லாத உலகியற்கையைப்பொருந்திய நான்னெறியிலே உடைத்து அக்காஞ்சியென்றவாறு. எனவே வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலேயாமை சான்றோரையுங்குறிப்பினது காஞ்சித்தினேயென்பதுபொருளாயிற்று.

இச்செய்யுட்புலவர் இப்பொருளேகோடலின், யாம் இப்பொருளேதா உரைகூறுகின்றும்.

1 - 2. [ஓங்குநிரை வியன்பரப்பி, ஞெலிமுக்நீர் வரம்பாக:] வியல் பரப்பின் ஓங்கு நிரை ஒலி முந்நீர் வரம்பு ஆக—அகலத்தையுடைத்தாகிய நீர்ப்பரப்பின்கண்ணே ஓங்குநிரையொலிக்குங்கடல் எல்லேயாக,

3 - 4. தேன் தூங்கும் உயர் சிமையம் மலே நாறிய வியல் ஞாலத்த—தேனிறுல் தூங்கும் உயர்ந்த உச்சியையுடைய மலேகள்தோன்றிய அகலத்தையுடைய ஞாலத்தின்கண்ணே,

5. வலம் மாநிரத்தான் வளி கொட்ப—வலமாக ஆகாயத்தின்கண்ணே காற்றுச்சுழல,

6. வியல் நாண்மீன் நெறி ஒழுக—அகலத்தையுடைய நாண்மீன்களாம் ரடக்கு நெறியில்கண்ணே ரடக்க,

7. பகல் செய்யும் செ ஞாயிறும்—பகற்பொழுதை உண்டாக்கும் சிவந்த பகலோனும்,

8. இரவு செய்யும் வெள் நிங்களும்—இராப்பொழுதை உண்டாக்கும் வெள்ளிய மதியும்.

9. மை தீர்ந்து இளர்ந்து விளங்க—குற்றமற்றுத் தோன்றிவிளங்க,

10. மழை தொழில் உதவ—மேகம் தானே பெய்தற்றொழிலே வேண்டுங்காலத்தேதான,

†உழவுத்தொழிற்கு உதவவென்றுமாம்.

மாநிரம் கொழுக்க—நிசைகளெல்லாம் தழைப்ப,

மலேகள் வீளேந்தகொழுக்கவென்றுமாம்.

11. [தொடுப்பி ஞயிரம் வித்தியது வினேய:] தொடுப்பின் வித்தியதி ஞயிரம் வினேய—ஒருவிதைப்பின்கண்ணே விதைத்தவிதை ஆயிரமாக வினேய,

12. நிலனும்—வினேநிலங்களும்,

---

* தொல்காப்பியம், புறத்திணேயியல், 23.

† "காலமாரிபெய்துதொழிலாற்றி" (பதிற். 84.)

மகனும்—மாங்களும்,

பயன் எதிர்பு நந்த — பல்லுயிர்க்கும் தம்பயன்கொடுத்தலே ஏறட்டுக் கொண்டு தழைப்ப,

13. *நோய் இகந்து நோக்கு விளங்க—மக்கட்குப் பகையும்பிணியுநீங்கி அழகுவிளங்க,

14 - 5. [மேதக மிகப்பொலிந்த, வோங்குலே வயக்களிறு:] மிக பொலிந்த ஓங்கு நிலே வய களிறு மே தக—அறவும்பொலிவுபெற்ற உலகத்தைத்தாங்குதல் வளருந்தன்மையையுடைய வலியையுடையவாகிய திக்கயங்கள் இவர் தாங்குதலின் வருத்தமற்று மேம்பாடுதக.

சூருளும் படியுமாகப் பண்ணினவிடத்துப் பண்ணிநிற்கும் யானேயென் றுரைப்பாருமுளர்.

16 - 7. [கண்டுதண்டாக் கட்கின்பத், துண்டுதண்டா மிகுவளத்தான் :]

உண்டு தண்டா மிகு வளத்தான்—உண்டு அமையாத உணவுமிகுகின்ற செல்வத்தோடே.

கண்டு தண்டா கட்கு இன்பத்து—நோக்கியமையாத †கட்கு இனிமை யினேயும்,

18. உயர் பூரிமம் விழு தெருவில்—உயர்ந்த ‡நெருகுனேயுமுடைய சிரியதெருவிலிருக்குமார்த் (20).

பூரிமம் - சார்திட்ட தொட்டிகளென்பாருமுளர்.

19 - 20. [பொய்யறியா வாய்மொழியாற், புகழ்நிறைந்த நன்மாந்தரொடு:] வாய் மொழியால் புகழ் நிறைந்த பொய் அறியா நல் மாந்தரொடு - §மெய்ம் மொழியே எக்காலமும் கூறுதலாற்பெற்ற புகழ்நிறைந்த ||பொய்யைக் கேட்டறி யாத நல்ல அமைச்சருடனே,

21. நல் ஊழி அடி படர—நன்றுகிய ஊழிக்காலமெல்லாம் தமக்கு அடிப் பட்டுநடக்க,

22. பல் வெள்ளம் மீ கூற—பல¶வெள்ளமென்னும் எண்ணேப்பெற்ற காலமெலலாம் அரசாண்டதன்மையை மேலாகச்சொல்லும்படி,

---

* "நோயொடு பகையிகந்து", "நோயிகந்தொரீஇய ..... நாடு" (பதிற். 13, 15.) "பகையும் பிணியும் பசையு நீங்கி" (சிலப். 5: 72; மணி. 1: 70.)

† கட்கு - கண்ணுக்கு.

‡ நெருகு - தெருவின் இருபுறத்தும்முள்ள வீடுகளின் வரிசை; வழக்கு.

§ "பொய்யாமை யன்ன புகழில்லே" (குறள். 296.)

|| "பொய்க்சொற் கேளா வாய்மொழி மன்னன்" (கும்ப. கைலேசி சூழ் லினே. 31.)

¶ வெள்ளம் - ஒருபேரெண்.

28. உலகம் ஆண்ட உயர்தோர் மருக—உலகத்தையாண்ட உயர்ச்சி பெற்றோர் குடியிலுள்ளவனே,

மாநிரம் கொழுக்க (10) விசித்திரவிளைய (11) நிலனும் மானும் ஈர்த்த (12) வளிகொட்கையினுலே (5) மழை தொழிலுதவ (10) எனமுடிக்க.

வியன்ஞாலத்திடத்தே (4) மழைதொழிலுதவ (10) நாண்மீன் தெறியொழுக (6) ஞாயிறும் (7) திங்களும் (8) விளங்க (9) நோக்குவிளங்கக் (13) களிறு (15) மேதக (14) நன்மாத்தரோடே (20) ஊழி அடிப்பட்டு நடக்கும் படி (21) மீக்கூற (22) முந்நீர்வரம்பாக (2) உலகமாண்ட உயர்தோர்மருக (23) எனமுடிக்க.

*இவர்கள் தருமத்தில் தப்பாமல் நடத்தவே இக்கூறியவையும் தெரிதப்பாமல் நடக்குமென்றார்.

24 - 5. பிணம் கோட்ட களிறு குழும்பின் நிணம் வாய்ப்பெய்த பேய்மகளிர்—பிணங்களேயுடைய கொம்புகளேயுடையனவாய்ப் பட்ட ஆனையினுடைய திரளின் நிணத்தைத்தின்ற பேய்மகளிருடைய தினங்கை (26),

26. இணை ஒலி இமிழ் †தணங்கை சீர்—இணைத்த ஆரவாரம் முழங்குகின்ற தணங்கைக்கூத்தின் சீர்க்கு,

27. பிணை யூபம் எழுந்து ஆட—செறிந்த குறைத்தலேப்பிணம் எழுந்து நின்று ஆடுகையினுலே,

28. அஞ்சு வந்த போர்க்களத்தான்—அஞ்சுதலுண்டான போர்க்களத்திடத்தே,

29. ஆண் தலை அணங்கு அடுப்பின்—ஆண்மக்கள் தலையாகிய நோக்கினாலருத்தும் அடுப்பின்கண்ணே,

30 - 31. மய வேந்தர் ஒள் குருதி சினம் தீயின் பெயர்பு பொங்க—வலி மிஞையுடையவேந்தருடைய ஒள்ளிய குருதியாகிய உலை சினமாகிய தீயின் மறுகிப் பொங்குகையினுலே,

32 - 8. [தெறலருங் கடுந்துப்பின். விறல்வினங்கிய விழுச்சுர்ப்பிர், நெடித்தோட்கை துடுப்பாக, வாடுற்ற வூன்சோறு. நெரியறிந்த கடிவாலுவ, னடிபொதுங்கிப் பிற்பெயராப், படையோர்க்கு முருகயர.]

தொடி தோள் கை துடுப்பு ஆக ஆடு உற்ற ஊன் சோறு—வீரவளையை உடையவாகிய தோளேயுடையகைகள் துடுப்பாகக்கொண்டு திமிலி அடுதலுற்ற ஊனினுயிசோற்றை,

நெரி அறிந்த கடி வாலுவன்—இடுமுறைமையறிந்த பேய்‡மடையன்.

---

* "இயல்புளிக் கோலோச்சு மன்னவ னுட்ட, பெயலும் விளேயுஞ் தொக்கு" (குறள். 545.) மணி. 7 : 8 - 10; சீவக. 255 பார்க்க.

† தணங்கையினியல்பு இப்புத்தகம் 26 - ஆம் பக்கத்தால் அறியலாகும

‡ மடையன் - சோருக்குவோன்.

தெறல் அரு கடு துப்பின் விறல் வினங்கிய விழு சூர்ப்பின் அடி ஒதுங்கி பின் பெயரா படையோர்க்கு முருகு அயர—பகைவராற் கோபித்தற்கு அரிய கடிய வலியினையும் வெற்றிவினங்கிய சிரிய கொடுந்தொழிலினையுமுடையராய் இட்ட அடிவாங்கிப் பின்போகாத வீரர்க்கு வேள்விசெய்யும்படி,

39. அமர் கடக்கும் வியல் தானை—போரைவெல்லும் அகலத்தையுடைய படையினையுடைய,

போர்க்களத்தே (28) ஆடுற்றசோர்றை (35) வாலுவன் (36) அடிபெயரா (37) வீரர்க்கு முருகயரச் (38) கடக்குந்தானையென்க.

40 ஃ 42. [தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற், றொன்முது கடவுட் பின்னர் மேய, வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந:]

வரை தாழ் அருவி பொருப்பின் கடவுள்—பக்கமலையிலே விழுகின்ற அருவியினையுடைய பொதியின்மலையிலிருக்கும் கடவுள்,

தென்னவன் பெயரிய துன் அரு துப்பின் தொல் முது கடவுள் பின்னர் மேய பொருந—*இராவணனைத் தமிழ்நாட்டையாளாதபடிபோக்கின கிட்டுதற் கரிய வலியினையுடைய பழமைமுறிர்ந்த அகத்தியன்பின்னே எண்ணப்பட்டுச் சான்றோனுயிருத்தற்கு மேலின ஒப்பற்றவனே,

† இசைநிலைக் கிளவியி னஅ குறவும்' என்றதனுல், இராவணன் தென் நிசையாண்டமைபற்றித் ‡தென்னவனென்றார்; இப்பெயர் பாண்டியற்கும் கூற்றுவற்கும் ஏற்றுகின்றதேபோல. அகத்தியனைத் தென்றிசையுயர்ந்த கொய்ம் மைபோக இறைவனுக்குச் சிரோப்பஇ நர்நானென்பதுபற்றிக் கடவுளென் றார். இராவணனுந்தல் பாயிரச்சூத்திரத்து உரையாசிரியர்கூறிய உரையாலு முணர்க.

இனி, §"மூத்தோர் முறைவலாய் நாமணம் புக்கோ, லிப்போழ்துபோழ் தென் றதனவாய்ப்பக் கூறிய, வெக்கடவுண் மற்றக் கடவுள்" என ||இருடிகளே யும கடவுளென்ற கூறியவாற்றாலும் காண்க.

---

* அகத்தியமுனிவர், பொதியின்மலை உருகும்படி இசைபாடி இராவண னைவென்றுபோக்கினரென்பது பண்டைஉரலாறு; அவர் இசையில் வல்லுற ரென்பது முதலியவற்றைப் பின்னுள்ளவற்றாலும். இசையிலக்கணநூலாசிரிய ரென்பதனாலுமுணர்க;—"மன்னு மகத்தியன் யாழ்வா சிப்ப"(குறுந்தொகையாய ஞானவுலா), 'இராவணனைக் கந்தருவத்தாற்பிணித்த' (தொல். பாயிரம், உரையாசிரியருரை), "இனிய பைந்தமிழின் பொதியமல் வரைபோ லிசைக் குரு காது", (சோணசைல. 26), "மலை, முன்னு ளுருக்கு முனிவர்க்கவை - இக்காள், அசையா தடுத்த பழமலையை யன்ன, மிசையா லுருக்குவா யென்ன" (வேங்கையுலா, 319), 'இசைக்குருகப்படுதலை - இராவணனைப்பிணித்தக் குறு முனிபாடும் இசைக்கு உருகிய பொதியின்மலை' (தஞ்சை. 345 - உரை.)

† தொல்காப்பியம், எச்சவியல், 53.

‡ "தென்னவன் மலையெ டுக்கச் சேமிழை நடுங்கக் கண்டு, மன்னவன் சிலா ஞான்ற ... ... .மேற் றளியி னுரே" என்புழியும் தென்னவன் இரா வணனுதல்காண்க; (தருக்கசிகாமணி, திருஞா. தே.)

§ கலித்தொனக, 93.

|| " கந்தன் பள்ளிக் கடவுளர்க் கெல்லாம்" (சிலப். 11: 5) என்பதும் இதனை வலியுறுத்தும்.

இதனால், அகத்தியனுடன் தலைச்சங்கத்துப் பாண்டியனிருந்து தமிழாராய்ந்த நெற்புக்கூறினர்.

கூற்றுவனையுதைத்தகடவுளென்று இறைவனுக்கு, அவன்பின்னரென்றது அகத்தியனையென்று பொருள்கூறின், இறைவனுக்குத் தம்பியென்றல் சாலாமையானும், அப்பொருடருங்காலத்து, முன்னவன் பின்னவன், முன்னேன் பின்னேனென்றல்லது அச்சொல் நில்லாமையானும் அது பொருந்தாது. *"முன்னரே சாரான் முனிதக்க மூப்புள. பின்னரும் பீடழிக்கு நோயுள" எனப் பிறுண்டும் முன்னர் பின்னரென்பன இடமுணர்த்தியே நிற்குமென்றுணர்க.

பொருகனென்றது †தான் பிறர்க்கு உவமிக்கப்படுவானெனலுமாம்.

43. லிழு சூழிய—சிரியமுகபடாத்தையுடையவாய்,

வினங்கு ஓடைய—விளங்குகின்ற பட்டத்தையுடையவாய்,

44. கடு னெனித்த—கடிய நெஞ்சையுடையவாய்,

44-5. கமழ் கடாத்து அளறு பட்ட நறு சென்னிய—‡கமழுகின்ற மதத்தாலே சேறுண்டான நறிய நலியினையுடையவாய்,

46 வரை மருளும் உயர் தோன்றல—வரையென்றுமருளும் உயர்ந்த தோற்றத்தினையுடையவாய்,

47. வினை கலின்ற பேர் யானை—§போர்த்தொழிலிலேபயின்ற பெரிய யானை,

இச் செய்தியெல்லாம் நிற்பாகிய வினையெச்சமுற்றுக்கள் அடுக்கிவந்தன வற்றை கலின்றவென்னும் பெயரெச்சத்தோடு முடிக்க.

48. னெம் சிறந்து ளன் உழக்கவும்—னெமக்குக் களந்துவீரைக் கொன்றுதியவும்,

1)-51. மா எறித்த மலி குரூஉ துகள் அகல் வானத்து வெயில் கரப்பவும் குதிரைத்திரள் பாகைவர்மேற் செல்லுதலுண்டானமிக்கதிறத்தையுடைய வாயிருளினி ||அதனுதற்குக் காரணமான ஆகாயத்திடத்தே வெயிலைமறைக்கவும்,

51-2. வாம் பரிய கடு நிண் தேர் காற்று என்ன கடிது கொட்பவும்—தாவும் குதிரைகளையுடைய செலவுகடிய நிண்ணியதேர் காற்றுக்சுற்றியடித்தென்னக் கடிதாகச்சுழலவும்,

---

* நாலடியார், ஈகை, 2.

† "பிறர்க்குநீ வாயி னல்லது னினக்குப், பிறருவம மாகா வொருபெரு வேந்தே" (பதிற். 73.)

‡ யானைமதம்கமழுதல், "தன்னருகிறற் கமழ்கடாஅத்து", "மிஞி றார்க்குங் கமழ்கடாஅத், தயறு சோறு மிருஞ் சென்னிய .... களிறு" (புறநா. 3, 22) என்பவற்றாலும், காஞ்சிப்புராணம், கடவுள்வாழ்த்து, 5-ஆம் செய்யுள் முதலியவற்றாலும் அறியலாகும்.

"தொழினவில் யானை" (பதிற். 84.)

"அலரிருவிகம்பு" (பெரும்பாண். 1) என்பதன்பொருள் பார்க்க.

53 - 4. [வாண்மிகு மறமைந்தர், தோண்முறையான் வீறுமுற்றவும்:] வாள் மிகு மறம் மைந்தர் தோள் வீறு முறையான் முற்றவும் – வாட்போரான் மிகுகின்ற மறத்தையுடைய வீரருடையதோள் வெற்றி முறையாகவெட்டுதலான் முற்றுப்பெறவும்,

* "விருந்தாயினை யெறிகேயென விரைமார்பகங் கொடுத்தாற், கருப்பூணற வெறிந்தாங்கவ னினதுழினி யெனவே" என்றார் பிறரும்.

55 - 6. இரு பெரு வேந்தரொடு வேளிர் சாய பொருத அவரை செரு வென்றும்—சேரன்சோழனுடைய இருவராகிய பெரிய அரசருடனே †குறுநில மன்னரீம் இனக்கும்படி பொருது அவரைப் போரைவென்றும் அமையாமல்,

உம்மை சிறப்பும்மை.

57 - 9. [இலங்ருவிய வரைநீத்திச், சுரம்போழ்ந்த விகலாற்ற, லுயர்ந் தோங்கிய விழுச்சிறப்பின்:]

உயர்ந்து இலங்கு அருவிய வரை நீத்தி ஒங்கிய விழு சிறப்பின்—உயர்ந்து விளங்குகின்ற அருவிகளையுடைய மலையிற் குறிஞ்சிநிலமன்னரையெல்லாம் வென்று உயர்ந்த சிரிய தலைமையினாலே,

இகல் ஆற்றல் சுரம் போழ்ந்த சிறப்பின்—மாறுபாட்டை நடத்துதலையுடைய பகைவர்காடுகளைப் பலவழியாகப்பிளக்க சிறப்பினாலே,

60. நிலம் தந்த பெரு உதவி—காட்டிலிருக்கின்ற அரசர்நிலங்களையெல்லாம்கொண்ட பெரிய உதவியையும்,

‡மலையும் காடும் அரணுகஇருந்தஅரசரை அழித்தவலியாலே காட்டிலிருக்கின்ற அரசர் தத்தம் நாடுகளைவிட்டாரென்றதாம்.

61. பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல் — பொன்னாற்செய்த தாரையணிந்தமார்பினையுமுடைய §வடிம்பலம்பநின்றபாண்டியன் வழியில் வந்தோனே,

யானை (47) களைழக்கவும் (48) தேர்கள் (49) வெயில்கரப்பவும் (50) தேர் (51) கொட்பவும் (52) மைந்தர் (53) முற்றவும் (54) பொருது செருவென்றும் அமையாமல் (56) விழுச்சிறப்பின் (59) நிலந்தந்த உதவியினையும் (60) மார்பினையுமுடைய நெடியோனென்க.

---

* வீரசுசிந்தாமணி, 2265.

† குறுநிலமன்னர் - நிறையன்முதலானோர்; இந்நூல் 128 - 9 ஆம் அடிகளின் லீசேடவுரையைப்பார்க்க.

‡ "உண்டாகிய வுயர்மண்ணுஞ், சென்றுபட்ட விழுக்கலனும், பெறல் கூடுமிவ னெஞ்சுறப்பெறின்" (புறநா. 17) என்பதன்கருத்து இவ்விசேடவுரையுடன் ஒப்புநோக்கற்பாலது.

§ "அடியிற் றன்னை வரசர்க் குணர்த்தி" (சிலப். 11 · 17), "ஆழிவடிம் பலம்பினொருனி" (நள. சுயம். 137) என்பனவும், "வென்றிபட", "மாலை முடியோன்" (திருவால. 21: 6 - 7) என்னும் செய்யுட்களும், "கடல்வடிம் பலம்ப நின்ற கைதவன்" (வி - பாரதம். 15 - ஆம் போர். 18) என்பதும் இங்கே அறியத்தக்கன.

62 - 3. மரம் தின்னூஉ வரை உதிர்க்கும் கரை உருமின் ஏறு அனை—மரங்களைச்சுட்டு மலைகளைநீருக்கும் பெருமையினையுடைய உருமேற்றை ஒப்பை,

*"கருங்கைக்கொல்லேறு" என்றார்பிறரும். இன். அசை.

64. அரு குழு மிளை—பகைவர்சேர்தற்கரிய திரட்சியையுடைய காவற் காட்டினையும்,

குண்டு கிடங்கின்—ஆழத்தினையுடைய கிடங்கினையும்,

65. உயர்ந்து ஓங்கிய நிரை புதவின்—உயர்ந்துவளர்ந்த கோபுரங்களிடத்து வாயில்களையும்,

நிரை, ஆகுபெயர். உயர்ச்சி ஒங்குதலெனவிசேடித்துரைத்தது.

66. நெடு மதில்—நெடிய மதிலினையும்,

நிரை ஞாயில்—நிரைத்த சூட்டினையுமுடைய,

அஃது எய்தால்மறைத்தற்கு உயரப்படுப்பது.

67. [அம்புமி ழயிலருப்பம்:] அயில் †அம்பு உமிழ் ‡அருப்பம்—கூர்மையையுடைய அம்புகளையுமிழும் அரண்களை,

மிளை (64) முதலியவற்றையுடைய அருப்பமென்க.

68 - 9. தண்டாத தலை சென்று கொண்டு நீங்கிய வீழ் நிறப்பின்—அமையாமல் அவ்விடங்களிலேசென்று கைக்கொண்டு அவ்விடங்களினின்றும் போன சீரிய தலைமையினையுடைய கொற்றவர் (71),

70 - 71. [தென்குமரி வடபெருங்கல், குணகுட கடலெல்லை:] தென் குமரி எல்லை ஆ வட பெரு கல் எல்லை ஆ குண குட கடல் எல்லை ஆ—தென்றிசைக்குக் குமரி எல்லையாக வடதிசைக்குப் பெரியமேரு எல்லையாகக் கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்கும் கடல் எல்லையாக இடையில் வாழ்வோரெல்லாம்,

72. தொன்று மொழிந்து தொழில் கேட்ப—தம்முடன் பழமையைச் சொல்லி ஏவல்கேட்கும்படி,

73. வெற்றமொடு வெறுத்து ஒழுகிய—வெற்றியோடே செறிந்துகடந்த,

74. கொற்றவர்தம் கோன் ஆகுவை—வெற்றியுடையோர்தம்முடைய தலைவனுன தன்மையையுடையை,

75 - 6. வான் இயைந்த இரு §முந்நீர் பேஎம் கிலெஇய இரு பெளவத்து—மேகம்படிந்த பெரிதாகிய மூன்றுநீர்மையையுடைய அச்சம்கிலேபெற்ற கரியகடலிடத்து,

---

* குறுந்தொகை, 317.

† "அம்புமிழ்வ வேலுமிழ்வ" (ஜீவக. 103.)

‡ "அவரருப்பம் வெளவி" (மதுரைப். 143.)

§ 'முந்நீர்' என்பதன்பொருள், "முந்நீர்ப்பிறந்த" (ஜீவக. 5) என்பதன விசேடவுரையாலும், புறநானூறு, 9 - ஆம் செய்யுளுரையாலும், "முந்நீர் ஞாலத்துள்புக்கு" (சிலப். ஆய்ச்சியர்) என்பதனுரையாலும் வினங்க அறியலாகும்.

77 - 9. [கொடும்புணரி விலங்குபோழக், கடுங்காலொடு கைசேர, தெடு ங்கொடிமிசை யிதையெடுத்து:]

கடு காலொடு கொடு புணரி விலங்கு போழ இதை எடுத்து—கடிய காற் றாலே வளைகின்றதிரையைக் குறுக்கே பிளர்ந்தோடும்படி பாய்விரிக்கப்பட்டு.

80. இன்னிசைய *முரசம் முழங்க—இனிய ஓசையையுடைய முரசம் முழங்காநிற்க,

81 - 2. பொன் மலிந்த வீழ பண்டம் நாடு ஆர—பொன்மிகுதற்குக் காரணமாகிய சிறிய சரக்குக்களே நாட்டிலுள்ளார் நுகரும்படியாக,

[நன்கிழிதரும்:] கரை சேர (79) நன்கு இழிதரும் — கரையைச்சேர வாணிகம்வாய்த்துவந்து இழிதலைச்செய்யும்.

83. [ஆடியற் பெருநாவாய்] நெடு கொடி மிசை (79) ஆடு இயல் பெரு நாவாய்—நெடியகொடி பாய்மரத்தின்மேலே ஆடும் இயல்பினையுடைய பெரிய மரக்கலம்.

இதையெடுத்து (79) முழங்க (80) ஆர இழிதரும் (82) நாவாயென்க.

81 - 5. மழை முற்றிய மலை புரைய துறை முற்றிய துளங்கு இருக் கை—கருமேகஞ்சூழ்ந்த மலைபோலக் கடல்சூழ்ந்த அகைஇன்ற இருப்பினையும்,

துறை ஆகுபெயர். சரகுதப்பறித்தற்குக் கடலினின்றமரக்கலங்கள் அக் கடல்சூழ்கின்றதற்கு மழைமுற்றியமலை உவமமாயிற்று.

நாவாய் துளங்கிருக்கையென்க.

86 தெள் கடல் குண்டு அகழி—தெளிந்த கடலாகிய ஆழ்தலையுடைய கிடங்கினையுமுடைய,

87 - 8. நீர் சான்ற உயர கெல்லின் †ஊர் கொண்ட உயர் கொற்றவ—நீலமையமைந்த உயர்ந்த நெல்லின் பெயரைப்பெற்ற சாலியூரைக்கொண்ட உய ர்ந்த வெற்றியையுடையவனே,

இதனால், தனக்குடலாதநேர் ஊர்கொண்டானென்றார்.

இன்னே அரைபாக்கி நெல்லூரென்பாருமுளர்.

இருக்கையினையும் (85) கிடங்கினையும் (86) உடைய ஊரென்க.

89 - 92. [நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர், பாடுநிலம்பு மிசையேற்றத், தோவலுங்கு மலாம்பியிற், கயமகைய வயனிறைக்கும் :]

வயல் அகைய நிறைக்குங் கயம் நீர் †தெவ்வும் நிரை ‡தொழுவர் பாடு நிலம் புமிசை — வயல் தழைத்தற்படி நீரை நிறைத்தற்குக்காரணமான குளங்களில்

---

* "கோடுபறையாப்ப" (தீவத. 501.)

† 'தெவ்வு' என்றபாடமே நேரானது; 'எதிதல் படுத்தல்" (பிர யோத. 10) என்பதன் உரையைப்பார்க்க; "கோணுதெவ்வுதலும்" என்னூர், ஸ்ரீ கதியபபரிவரும்; (நாஞ்சி. நகரேற்று. 112.)

‡ தொழில் செய்வாரென்னும் பொருளில் தொழுவரென்பது, (மது. 122.) "செல்லரியு மிருந்தொழுவர்", "செல்லரிதொழுவர்" (புறநா. 24, 209) என் றுழியும் வந்துள்ளது.

நீரை *இடாவான்முகந்துகொள்ளும் நிலைபோகின்றுதொழில்செய்வாரிடத்தே ஒலிக்குமோசை,

ஏற்றத்தோடு வழங்கும் அகல் ஆம்பியின் இசை—ஏற்றத்திடனே உலாவும் அகன்ற பன்றிப்பத்தலின்ஓசை,

93. மெல் தொடை வல் நிழாஅர் இசை (95)—மெத்தென்ற கட்டுகளையுடைய வலிய †பூட்டைப்பொறியினோசை,

94. அதரி கொன்பவர் இசை (95)—கடாவிடுகின்றவரோசை,

பகடு பூண் தெண் மணி இசை (95)—எருதுகள்பூண்ட தெள்ளிய மணியினோசை,

95. இரு புள் ஒப்பும் இசையே—பயிர்களிற் பெரியவிளிமுதலியவற்றை ஓட்டுமோசை,

ஏகாரம் ஈற்றசை.

என்றும்—எக்காலமும்.

96 - 7. மணி பூ முண்டகத்து மணல் மலி கானல் பரதவர் மகளிர் குரவையொடு ஒலிப்ப—நீலமணிபோலும் பூக்களையுடையவாகிய கழிமுள்ளிகளையுடைய மணற்குன்றுகள்மிக்க கடற்கரையிலிருக்கும் பரதவருடைய மகளிராடும் குரவைக்கூத்தின் ஓசையோடேகூடி ஆரவாரியாநிற்ப,

98. ஒருசார் விழவு நின்ற வியல் ஆவணம்—ஒருபக்கம் விழாக்கொண்டாடுதலாற் பிறந்த ஓசைகள் மாறுமனின்ற அகலத்தையுடைய ஊர்களிடத்தேயிருத்தி,

பாடுஇல்†பூமிசை (90) முதலியன குரவையொடு (97) என்றும் (95) ஒலிப்ப ஒருசார் விழவுகின்ற ஊரென்க.

99. முழவு தோள் முரண் பொருசர்க்கு—முழவுபோலும் தோளினையுடையராய்க் கல்வியால் மாறுபடுதலையுடைய ‡தடாரிப்பொருசர்க்கு,

100 - 102. உரு கெழு பெரு சிறப்பின் இரு பெயர் பெரு ஆயமொடு இலங்கு மருப்பின் களிறு கொடுத்தும்—அச்சம்பொருந்திய பெரிய தலைமையையுடைய §கன்றும்பிடியுமென்னும் இரண்டுபெயரையுடைய பெரியதிரளுடனே விளங்குகின்ற கொம்பினையுடைய களிறுகளைக்கொடுத்தும்.

---

* இடா - இறைகூடை; "பேரிடாக்கொள்ளமுன்கவித்து" (பெரும்பாண்.குடி. 17.)

† "காலே யங்கதிர் பூட்டையங் கடமதொன் றமிழ, மேலெ ழுந்தெல்லின்றதோர் கடமென மேலே, வேலை வெகுகதி ரமிழ்த்துற முழுமதி வின்னின், பாலெ ழுத்தது விரிகதி ருலகெலாம் பரப்பி" (தீகாணத்தி. கண்ணிபா. 119.) என்பதனுள், பூட்டைப்பொறியினியல்பை அறிந்துகொள்க. இது காஞ்சீபுரத்தின் பக்கத்துள்ள ஊர்களிற் பெரும்பாலும் காணப்படும்.

‡ தடாரி - இசைப்பறை. (பு - வெ.)

§ "கன்றொடு, கறையடி யானை யிரியல் போக்கும், ... ஆப்" (புறநா. 135), "கன்று டைப்பிடி சீக்கெ களிற்றினம், வன்றொடர்ப் படுக்கும் வனவாசி" (சிந்த. சுட்டி. 32) என்பன இங்கே ஆராயத்தக்கவை.

இருபெயர்க்கு ஆகும் மாடமெண்பாருமுளர்.

103. பொன்தாமரை பூ சூட்டியும் — பொன்னுற்செய்த தாமரைப் பூவைச் சூட்டியும்,

104 - ம். [கலஞ்சான்ற கலஞ்சிதறும். பல்சூட்டுவர் வெல்கோவே.]

நலம் சான்ற கலம் சிதறும் கோவே—நன்மையமைந்த பேரணிகலங்களை எல்லார்க்குங்கொடுக்குங்கோவே,

ஊர்களிடத்தே யிருந்து (98) பொருநர்க்குக் (99) கொடுத்தும் (102) சூட்டியும் (103) அமையாது கலஞ்சிதறுங்கோவேயென்க.

பல் சூட்டுவர் வெல் கோவே—பலவாகிய சூட்டாட்டியுள்ளாரை வெல்லுங்கோவே.

என்பது. அடை.

இதனால், தன்னூட்டியூர்களிலிருந்து கொடுக்கின்ற சிறப்புக்கூறினர்.

106. கல் காயும் கடு வேனிலொடு—*மலைகள் காய்தற்குக்காரணமாகிய கடிய முதுவேனிலாலே,

107. இரு வானம் பெயல் ஒளிபபினும்- பெரியமேகம் மழையைத் தன்னிடத்தே மறைத்துக்கொள்ளினும்,

108. [வரும்வைகன் மீன்பிறழினும் :] வைகல் வரும் மீன் பிறழினும்—தான் தோன்றுதற்குரியு நாளிலேதோன்றும் †வெள்ளி தென்றிசையிடல எழினும்,

109. வெள்ளம் மாறாது வினையுள் பெருக—யாறுகள் வெள்ளமாறாமல் வந்து வினைதல் பெருகுகையினாலே.

110. செல்லின் ஓதை—முற்றினசெல்லுக் காற்றடித்து அசைதலாலே எழுந்த ஓசை,

அரிநர் கம்பலே—அதனை அறுப்பாருடைய ஓசை

111. புள் இமிழ்ந்து ஒலிக்கும் இசை -டற்றலைன் கத்துகையினாலே ஆரவாரிக்கும் ஆரவாரம்,

---

* "மலிவெம்ப" (கலி. 13.)

† வெள்ளிக்கோள் தென்றிசையிடத் தெழுதல் நியமித்தார்; இது, "வகை மிலிழ்ந் வபங்குவெண்மீன், றிசையிரிந்து தெற்கேகினும், உற்பாடிய தளி புணலிற், புட்டேம்பப்பு புயன்மாறி, வானபொய்ப்பினு தானபொய்யா, மலைத் தலேய கடற்காவிரி" (பட். 1 - 6), "வறிதுடைக் கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி, பயங்கெழு பொழுதோ டாகிய கிற்ப", "நிலம்பயம் பொழியச் சுடர்கினெர் தணியப், பயங்கெழு வெள்ளி யாகிய கிற்ப" (பதிற். 24, 69), "மைமீன் புகை பினுந் தமக் தோன்றினுர். தென்றிசை பருவுகின வெள்ளி யேடினும், ... பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே", "வெள்ளி தென்புலத் தறைய வினையும், பன்னம் வாடிய பயனில் காலை" (புறந. 117, 388), "சரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும், விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும், ... சுவரிப் புதுநீர்க் டுவரல் வாய்த்தலே" (சிலப். 10: 102 - 8.) எனபனவற்றுல் அறியலாகும்.

என்றும்—எக்காளமும்,

112 - 3. சலம் புகன்று சுறவு கலித்த புலவு நீர் வியல் பௌவத்து—தம்முன் மாறுபாட்டைவிரும்பிச் சுறுக்கள் செருக்கித்திரிகின்ற புலாஞற்றத்தையுடையதாகிய நீரையுடைய அகற்சியையுடைய கடலிடத்தத் துவலே(115),

114 - 5. நிலவு கானல் முழவு தாழை குளிர் பொதும்பர் நளி தூவல்—*நிலாப்போலும் மணலேயுடையகையினிற் குடமுழாப்போலுங் †காயையுடையதாழையை வேலியாகவுடைய குளிர்ச்சியையுடைய இளமரக்காவின்கண்ணே வந்து செறிதலேயுடைய துவலேபிஞ்ஞை,,

116. நிரை ‡நிமில் வேட்டுவர் கரை சேர் கம்பலை—நிரைத்த மீன்படாலே வேட்டையாடுவார்வந்து கரையைச்சேரும் ஆரவாரம்,

117. இரு கழி செறுவின் வெள் உப்பு பகர்குரொடு—பெரியகழியிடத்து உப்புப்பாத்தியிலே வெள்ளிய உப்பைவிற்கும் §அளைகொலியோடே,

118 - 24. [ஒலியோவாக் கலியாணர், முதுவெள்ளிலே மீக்கூறும், வியன் மேவல் விழுச்செல்வத், திருவகையா னிசைசான்ற, சிறுகுடிப் பெருந்தொழுவர், குடிகெழீஇய நானிலவகொடு. தொன்றுமொழிந்து தொழில் கேட்ப :]

சிறு குடி பெரு தொழுவர் ஒலி ஓவா கலி யாணர் முதுவெள்ளிலை—சிறிய குடிகளாய்ப் பெரியதொழில்களைச் செய்வாருடைய ஆரவாரமும் ஒழியாத பெருவிளையுடைத்தாகிய புதுவருவாயினையுடைய முதுமெள்ளிலையென்னும்,

இது குறுநிலமன்னரிருப்பு

பகர்குரொலியோடே (117) நெல்லிஞ்ஞை (110) முதலியஞலி என்றும் (111) ஓவாத முதுவெள்ளிலையென்க,

மீ கூறும் இரு வகையான் வியல் மேவல் விழு செல்வத்து இசை சான்ற குடி கெழீஇய நானிலவகொடு—உலகத்தத்தொழில்களில் மேலாகச்சொல்லும உழவு வாணிகமென்கின்ற இரண்டுகூற்றுலே அகலம்பொருந்துதலேயுடைய சிரியசெல்வத்தாலே புகழ்நிறைந்த குடிமக்கள் பொருந்தின நான்குநிலத்தி வாழ்வாருடனே,

தொன்று மொழிந்து தொழில் கேட்ப—பழமைகூறினின்று ஏவலைக்கேட்கும்படியாக,

125 - 7. கால் என்ன கடிது உரா அய் நாடு கெட எரி பரப்பி ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து—காற்றென்னும்படி கடிதாகப்பாய்துசென்று பகை

---

* "நிலவுக்குவித்தன்ன வெண்மணல்" குறுந். 123); "நிலாவினிலங்கு மணல்" (அகநா. 200.)

† பி - ம். தாளையுடைய.

‡ "பண்மீன் வேட்டத் தென்னையர் நிமிலே", "கொடுந்நிமிற்பரதவர்" (குறுந். 123, 304.) "நிமில்வாழ்நர்" (நிலப். 7 : 11.)

§ அளைவர் - நெய்தனிலமாக்களுள் ஒருவகையார்.

வர்நாடுகெடும்படி நெருப்பைப்பரப்பித் *தலையாலங்கானமென்கின்ற ஊரிலே பகைவர்க்கு அச்சந்தோன்றும்படி †விட்டு.

‡" வரிபாந்தெடுத்தல் " என்னும் துறைகூறிற்று.

128 - 9. அரசு பட அமர் உழக்கி மூசுகொண்டு களம் வேட்ட—நெடு நிலமன்னரிருவரும் குறுநிலமன்னரைவரும் படும்படி போரிலேவென்று அவர் மூசைக் கைக்கொண்டு களவேள்விவேட்ட,

எழுவராவார்:—§சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநனென்பார்

130. அடு நிறல் உயர் புகழ் வேந்தே—||கொல்லுகின்ற வலியுயர்ந்த புகழையுடைய வேந்தனே.

நானிலவரசரோடே (123) முதுவெள்ளிலை (113) தொழில் கேட்பத் (124) நிறலுயர்ந்த வேந்தேயென்க.

இது ¶தலையாலங்கானத்து வென்றமைகூறிற்று.

131. $கேட்டவர் குடி உயர்க்குவை நின்னுடனே நட்புக்கொண்டவருடையகுடியை உயர்த்தலேச்செய்வை,

132. செற்றவர் அரசு பெயர்க்குவை நீசெறப்பட்டவர் அரசுரிமையை வாங்கிக்கோடலேச் செய்வை,

133 - 4. பெரு உலகத்து மேஎந்தோன்றி நீர் உடைய விழு நிறப்பின்—பெரிய நன்மக்களிடத்தே மேலாய்த்தோன்றுகையினுலே புகழையுடைய விழுமிய தலைமையினேயும்,

---

* இவ்வூர் தலையாலங்காடென்று வழங்கும்; இது தேவாரம்பெற்ற ஒரு சிவதலம்; சோழநாட்டிலுள்ளது; இவ்வூரிற் பகைவருமுவரையும் வென்றது பற்றியே தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனென்று இப் பாண்டியன் கூறப்படுவான்; சிலபடத்காரத்திற் கூறப்படுபவன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்.

† விட்டு - தங்கி; விடுதலெனபது பகைமேற்சென்றோர்தங்குவதற்கே பெரும்பாலும் வழங்கும்; (பு - வெ.)

‡ தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 8.

§ இத்தூல் 55, 56 - ஆம் அடிகளின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

|| "மறம்வீங்குபல்புகழ்" (பத்துப். 12 - 8) என்பதும் அதனுரையும் ஈண்டு அறிதற்பாலன.

¶ நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துச் செருவென்றமை பின்னுள்ள செய்யுட்களாலும் விளங்கும். "காலிய னெடுந்தேர்க் கைவண் செழிய, ஞலங் கானத் தமர்கடந் துயர்த்த, வேலினும் பல்வாழ் மின்னி", "தென்னர் கோமா, னெழுவுயர் நிணிதோ ளரியரோச் செழிய, னேரா வெழுவ ரடிபடக் கடந்த, வாலிய கானத் தார்ப்பினும் பெரிது" (அகநா. 175, 209.)

$ (பெரும்பாண். 423 - 4); "செற்றோரை வழிதபுத்தன, னட்டோரை யுயர்புகழினன்" (புறநா. 23); "நட்டாரை யாக்கிப் பகைதணித்து" (சிலப்பதி. 18.)

135. *மிளைந்து மூதிர்ந்த வீழு முத்தின்—குல்மூற்றி ஒளிமுதிர்ந்த சிய முத்தினையு*

136. *மீன் இரு சேரி—மீனங்குகின்ற சங்கினையுமுடைய பெரிய சங்குருளிப்பாரிருப்பினையும்,*

முத்தினையும் சங்கினையுமுடைய சேரியென்க.

137. *கள் கொண்டி குடி பாக்கத்து—கள்ளாகிய உணவினையுடைத்தா கிய இழிந்த குடிகளையுடைய சிறார்களையுமுடைய,*

கொண்டி - கொள்ளப்படுதலின் உணவாயிற்று; கொள்ளையெனப்ப.

138. *நல் கொற்கையோர் கதை பொருந—என்றுகிய கொற்கையென னும் ஊரிலுள்ளோர் கச்சுதலைச்செய்யும் பொருளே.*

இதனைக் கொற்கைக்குரியோனென்றார்.

நெய்தினையும் (134) சேரியினையும் (136) பாக்கத்தினையு (137) முடைய கொற்கை.

139 - 40. *செற்ற தெவ்வர் கலங்க தலை சென்று *அஞ்சு வர தட்கும அணங்கு உடை துப்பின்—தாங்களெதிரப்பட்ட பகைவர்மனங்கலங்கும்படி அவர்களிடத்தேசென்று அவர்க்கு அச்சந்தோன்றத்தங்கும் வருத்தத்தையுடைத் தாகிய வலியினையும்.*

141. *கொழு ஊன்குறை கொழு வல்சி—கொழுத்த †இறைச்சியை புடைய கொழுத்திருக்கின்ற சோற்றினையும்,*

இதனைக் கூடவிட்டு ஆக்குதலிற் கொழுவல்சியென்றார். கொழுவல்சி— கொழுவினாலாகிய வல்சியென்றுமாம்; இஃது ஆகுபெயர்.

142. *புலவு வில்—எய்த அம்புதன்னை மீண்டும் தொடுத்தலிற் புலாலுற் றதையுடைய வில்லினையும்,*

பொலி கூவை—பொலிந்த ‡கூவைக்கிழங்கினையும்,

கூவை - நிலவுமாம்.

143. *§ஒன்றுமொழி—வஞ்சினங்கூறுதலையும்,*

ஒலி இருப்பின்—ஆரவாரத்தையுடைய குடியிருப்பினையுமுடைய,

144. *தென்பரதவர் போர் எறே—தென்றிசைக்கண்வாழும் பரதவர்க்குப் போர்த்தொழிலைச்செய்யும் எருமையனே,*

இதனைப் பரதவரைத் தனக்குப் படையாக அடிப்படுத்தினமை கூறினர்.

---

* அஞ்சு - அஞ்சுதல்; (மதுரை. 28)

† "ஊன்சோற்றமலை", "வைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் ளமலை (புறநா. 33, 177), "ஊன்சோடவைபதல்செய்ய" (கந்த. சுகப்பு. 29.)

‡ மலைபடு. 137; புறநா. 29.

§ "ஒன்றுமொழிக்கோசர்" (குறுந். 73.)

திப்பு (140) முதலியவற்றையுடைய பாதவரென்க

பாதியர் - தென்றிசைக்கட்குறுநிலமன்னர். அது * "தென்பாதவர் மிடல் சாய, வடவடுகர் வாளோட்டிய" என்னும் புறப்பாட்டானுமுணர்க.

145. அரிய எல்லாம் எளினின் கொண்டு—பிறர்க்கு அரிய நுகர்பொருள்களெல்லாம் எளிதாக இன்னரிடத்தேயிருந்து †மனத்தாற்கைக்கொண்டு,

146. உரிய எல்லாம் ஒம்பாது வீசி—அப்பொருளையெல்லாம் இனக்கெனறு பாதுகாவாது ஊரிடத்தே §ஏற்று பிறர்க்குக்கொடுத்து,

என்றது:—‡ "கொள்ளார் தேஎங் குறித்த கொற்றம்" கூறிற்று.

147. ரனி புகன்று உறைதும் என்னது எற்று எழுந்து—மிகவிரும்பி ரின்கண்ணேயிருந்து உறையக்கடவேமென்றருளாதே பகைவர்மேற்செல்லுதலே §ஏறட்டுக்கொண்டு போக்கிலே ஒருப்பட்டு,

இது ‖வஞ்சிகூறிற்று.

148. பனிவார் சிமையம் கானம் போகி—பனியொழுகுகின்ற மலையிடதனவாகிய காடுகளைக்கடந்து,

சிமையம் - ஆகுபெயர்.

149. அகம் நாடு புக்கு—அவர்களுணணுகுகளிலே புகுந்து,

இதனால் ¶"தொல்லெயிற்கிவர்தல்" கூறினர்.

அவர் அருப்பம் வெளவி—அப்பகைவராரண்களைக் கைக்கொண்டு அதனுலுமையாமல்,

இது $குடுமிகொண்ட மண்ணுமங்கலங கூறிற்று. இதனால் அரசாண்களை அழித்தமை கூறினர்.

150. [யாண்டுபல கழிய வேண்டுபுலத் திறுத்து:] வேண்டு புலத்து பல யாண்டு கழிய இறுத்து—கீஅழித்தநாடுகளிற் கொள்ளவேண்டும் கிலங்களிலே பலபாண்டுகளும் போம்படி தங்கி,

151. மேம்பட மீஇய வெல் போர் குரிசில்—அர்நிலங்கள் பண்டையின் மேலாதற்கு அடிப்படவிருந்த வெல்லுஞ்போரினையுடைய தலைவனே,

இது பகைவர்நாட்டைத் தன்னுடாக்கினமைகூறிற்று.

---

* புறநானூறு, 378.

† "ஒன்னு, ராரெயி லவர்கட் டாகவு நமதெனப், பாண்கட னிறுக்கும் வள்ளியோய்" (புறநா. 203.)

‡ தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 12.

§ ஏறட்டுக்கொள்ளல் - மேற்கொள்ளல்.

‖ வஞ்சி - மண்ணாசையாற் பகைமேற்சேறல்.

¶ தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 12.

$,, ,, ,, 13.

152. உறு செறுநர் புலம் புக்கு—தொன்றுதொட்டுவந்த பகைவர்நிலத் தே விட்டு.

152 - 3. அவர் *கடி காவின் நிலே தொலேச்சி—அவர் காவலேயுடைய பொழில்களின் நிற்கின்ற நிலேகளேக் கெடுத்து,

என்றது வெட்டியென்றவாறு.

154 - 5. இழிபு அறியா பெரு தண் பணே குரூஉ கொடிய எரி மேய— வளப்பங்குன்றுதலே ஒருகாலத்துமறியாத பெரிய மருதநிலங்களே நிறத்தை யுடைய ஒழுங்கினேயுடைய நெருப்புண்ண,

156. காடு எனும் பேர் காடு ஆக—காடென்னும்பெயர்போய்க் காடென் னும் பெயரைப்பெற,

157. ஆ சேர்ந்த வழி மா சேப்ப—பசுக்கள் தங்கின இடமெல்லாம் புலி முதலியனதங்க,

158. ஊர் இருந்த வழி பாழ் ஆக—ஊராயிருந்த இடங்களெல்லாம் பாழாய்க்கிடக்க,

ஊராரிருந்த இடமென்றுமாம்.

159 - 160. இலங்கு வளே மடம் மங்கையர் துணங்கை அம் சீர் தழூஉ மறப்ப—விளங்குகின்ற வளேயினேயும் மடப்பத்தினேயுமுடையமகளிர் துணங் கைக்கூத்தினேயும், அழகினேயுடைய தாளஅறுதினேயுடைய †குரவைக்கூத் தினேயுமறப்ப,

தழூஉ, ஆகுபெயர்.

161 - 3. அவை இருந்த பெரு ‡பொதியில் §கவை அடி கடு நோக்கு தபேய் மகளிர் பெயர்பு ஆட—||சான்ரோரிருந்த பெரிய அம்பலங்களிலே இரட் டையான அடிகளேயும் கடியபார்வைகளேயுமுடைய பேயாகியமகளிர் உலாவி யாட,

164. அணங்கு வழங்கும் அகல் ஆங்கண்—இல்லுறைதெய்வங்கள் உலா வும் அகன்ற ஊரிடத்து,

---

* "காவுதொறும், கடிமரம் தடிய மோசை", "கடிமரந்தடிதலோம்பு' (புறநா. 36, 57.)

† குரவை - மகளிர் எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணேந்தாடுங்கூத்து, (சிலப 3: 12 - உரை.)

‡ திருமுருகாற்றுப்படை, 226.

§ (சிறுபாண். 197) "கவையடி பெயர்த்துத், தண்டாக் களிப்பி னுடுவ கூத்து" (மணி. 6: 125 - 6.)

|| சான்ரோர் - குடிப்பிறப்புமுதலிய எண்குணங்களமைந்தோர்; "எட்டி வகை நூதலிய அவையத் தானும்" (தொல். புறத்திணே. சூ 21) எனபத் னுரையாலும், "குடிப்பிறப்புக்கல்வி" (பு - வெ. வாகை. 19 - மேற்) எனபத் னுலும் அறியலாகும்.

165. நிலத்து ஆற்றும் குடிஇ புதலின்—நிலத்திலுள்ளாரையெல்லாம் போக்கும் வாசல்காப்பாரையுடைய வாசலின்கண்ணேயிருந்து,

குழூஉ. ஆகுபெயர். இனிக் *குடுமிதேய்த்துபோதலின் மண்ணைக் கொழி கதவருமென்பாருமுளர்.

166. அரந்தை பெண்டிர் இனைந்தனர் அகவ—மனக்கவற்சியையுடைய பெண்டிர் வருந்திக் கூப்பிட,

167 - 8. கொழு பதிய குடி தேம்பி செழு கேளிர் நிழல் சேர—வளவிய ஊர்களிடத்தனவாகிய குடிகளெல்லாம் பகிரார்லுலர்ந்து புறநாட்டிலிருக்கும் வளவியு சுற்றத்தார் தமக்குப் பாதுகாவலாகச் சென்றுசேர,

169 - 70. நெடு நகர் மீழ்ந்த கரி குதிர் பன்னி †குடுமி கூளை குரா லொடு முரல—பெரியமாளிகைகளிலே வெற்றுவீழ்ந்த கரிந்த குதிரிடங்களிலே சூட்டினையுடைய கூகைச்சேவல் பேட்டுடனேயிருந்து கதற,

171 - 2. கழுநீர் பொலிந்த கண் அகல் பொய்கை ‡களிறு மாய் செருக்கு யொடு §கண்பு அமன்று ஊர்தா—செங்கழுநீர்மிக்க இடமகன்ற பொய்கைகளிட த்தே யானைகின்றல்மறையும் வாட்கோரையுடனே சண்பங்கோரையும் செருங் கிவளர,

செருக்கி - செட்டிக்கோரையுமாம.

173 - 4. நல் எர் நுடங்த நசை சால் வினை வயல் பல் மயிர் பிணவொடு கேழல் உகள—நன்றாகிய எருதுகளுழுத நச்சுதலமைந்த வினைகின்ற வயலிட த்தே பலமயிரினையுடைய பெண்பன்றியுடனே ஆண்பன்றி ஓடித்திரிய,

பிணவென்னும் அகரவீற்றுசொல் வசாவுடம்படுமெய்பெற்றது; ||"பன்றி புவ்வாய் நாயென மூன்று, மென்றிய வென்ப பிணவென் பெயர்க்கொடை" ன்றார்.

175. [வாழா மையின் வழிதவக் கெட்டு:] தவ வழி வாழாமையின கெட்டு—மிக ¶நின் ஏவல்செய்து வாழாமையிலே கெட்டு,

இனித் தவக்கெட்டெனக்கூட்டி மிகக்கெட்டென றலுமாம்.

176. பாழ் ஆயின—பாழாய்விட்டன,

நின் பகைவர் தேஎம்—நின்னெடு பகைத்தலைச்செய்தவருடைய நாடுகள்,

---

* குடுமி - கதவைத்தாங்கிநிற்பதாயுள்ள ஒருறுப்பு; "திருகுகு குடுமி விடி வுந் தேயுங் கபாடம்" (கலிங்.த. கடைதிறப்பு, 10.)

† "துய்த்தலைக் கூகை, கவலை கவற்றுங் குராலம் பறந்தலை" (பதிற். 44.)

‡ மதுரை. 247.

§ கண்பு: (பேரும்பாண். 220; மலைபடு. 154); "கண்பகத்தின் வார மே" (திருத்தோணிபுரம், திருஞான. தே.)

|| தொல்காப்பியம், மரபியல், சூ. 58.

¶ "தொன்று மொழிந்து தொழில்கேட்ப" (மதுரை. 72) என்பது இங்கே பதம்பாலது.

177 - 9. [எழாஅத்தோ வியலிழுமுழக்கின், மாஅத்தா னுயர்மருப்பிற், கடுஞ்சினத்த களிறுபரப்பி:]

இயலிழ் முழக்கின் மா தான் உயர் மருப்பின் *கடு சினத்த களிறு பரப்பி—முழங்குகின்ற ஓசையையும் பெருமையையுடைய கால்களையும் தலைகளேர்ந்த கொம்புகளையுமுடைய கடியசினத்தவாகிய யானைகளே எங்கும்பரப்பி,

180. [விரிகடல் வியன்ருணையொடு:] †எழா தோன் (177) விரி கடல் வியல் தானையொடு—முதுகிட்டார்மேற் செல்லாத தோளினையுடைய விரிகின்ற ‡கடல்போலும் அகற்சியையுடைய படையோடே,

181. முருகு உறழ பகை தலை சென்று—முருகன் பகைவர்மேற் செல்லுமாறுபோலத் தடையறப் பகைவரிடத்தே சென்று,

முருகு - தெய்வத்தன்மை; ஆகுபெயராய்நின்றது.

182. அகல் விசும்பின் ஆர்ப்பு இமிழ—அகன்ற ஆகாயத்தின்கண்ணே படையெழுந்த ஆரவாரமொலிப்ப,

விசும்பெனவே ஆகுபெயராய்த் தேவருலகையுணர்த்திற்று.

183. பெயல் உறழ வேல் எறிந்து—§மழையோடே மாறுபடும்படி அம்பு களைத்தூவி,

184. பல புரவி நீர் உகைப்ப—‖பலகுதிரைத்திரள் ஓடுகின்ற விசையால் தகன்னே எழுப்ப,

185. வேல் கரல—சங்கமுழங்க,

வயிர் ஆர்ப்ப—கொம்பு ஒலிப்ப,

186. பீடு அழிய கடந்து அட்டு—பெருமைகெடும்படி வென்று கொன்று.

186 - 7. அவர் நாடு அழிய எயில் வெனவி—அவருடைய நாடுகளழியும் படியாக அவரிருக்கின்ற மதிலேக்கொண்டு,

188. சுற்றமொடு தா அறுத்தலின்—அவர்களுக்கு உதவிசெய்யும் சுற்றத் தாரோடேகூட அவர்கள்வலியைப் போக்குதலாலே,

189. செற்ற தெவ்வர் பின்வழி நடப்ப—பின்னும் நிறுதிசெறப்பட்ட பகைவர் பின் வெல்கேட்டு நடக்கையினாலே,

---

* "கடுங்கணண கொல்களிறு", "கடுஞ்சினத்த கொல்களிறு" (புறநா. 14, 55.)

† "எழாஅத் தூணேத்தோள்" (பதிற். 90 - 27) என்பதும் அதனுரையும் இதனோடு ஒப்பிடத்தக்கன.

‡ "தெவ்வர்தேஎத்துக், கடற்படைகுளிப்பமண்டி." (புறநா. 6.)

§ "ஒடுங்கா ருடன்றவன் றூவே லில்லிசை, விடுங்கணே மொப்பித் தந் முறை தெறூஉ" (பரி. 22: 5 - 6); சீவக. 451 - ஆம் செய்யுளும் இதனுடன் ஒப்புநோக்கற்பாலது.

‖ "மழைவெடித்த மலிகுரூஉத்தேர்" (மதுரை. 49.)

190. *வியல் கண் முது பொழில் மண்டிலம் முற்றி—அகலத்தை இடத் தேயுடைய பழைய காவலர் நீவின் கனுளவாகிய சோழமண்டலம் தொண்டை மண்டல மென்கின்றமண்டலங்களே னினவாக வினைத்தக்கொண்டு,*

மண்டலம் மண்டிலமென மருவிற்று.

191. *அரசு இயல் பிழையாது — நூல்களிற்கூறிய அரசிலக்கணத்தில் தப்பாமல்,*

191 - 2. [*அறநெறி காட்டிப், பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது:*] பெரியோர் சென்ற அடி வழி பிழையாது *அறநெறி காட்டி—கின்குலத்திற் *பெரியோர்கடந்த அடிப்பாட்டின்வழியைத் தப்பாமல் அறநெறியிருக்கும் படி இதுவென்று அவர்களுக்கு விளக்கி,*

னளியுகன்றறைதுமென்னுத எற்றெழுத்து (147) *களிறுபரப்பித்* (179) *தானேயோடே* (189) *தலேச்சென்ற* (181) *அரசமண்டிலமுற்றிச்* (190) செற்ற தெவ்வர் கின்வழிநடக்கையினலே (183) *நீ நட்டவர்குடியையுயர்க்குவை* (131) யாகையினலே அவர்களுக்கு அறநெறிகாட்டிப் (191) பின்னர் அம்மண்டலங் களேச் சூழலிருத்த குறுகிலமன்னர் அரண்களிலுள்ளனவற்றை எளிதிற்கொண்டு (145) வீசிப் (146) போகிப் (148) புக்கு அவாருப்பங்களேவெளவிப் (149) பின்னர் உறுசெறார் (152) கின்வழிவாழாமையினலே (175) அவர்புலம் புக்கு (152) நீகரையுருமேறனேயை (63) யாகையினலே அரசியல் பிழையாமல் (191) ஆர்ப்பிமிழ (182) நீறுகைப்ப (194) காவ ஆர்ப்ப (185) வீணேதிறத் (183) தோலேச்சி (153) அவரைக்கடந்து அட்டு (186) அவரெயிலேவெளவி (187) அவரைத் தூவறத்தலின் (188) அப்பகைவர்தேசம் (176) எரிமேயச் (155) காடாக (156) மா சேப்பப் (157) பாழாக (158) மறப்ப (161) ஆட (163) அக வச் (166) சேர (168) முரல (170) ஊர்தர (172) உகளக் (174) கெட்டுப் (175) பாழாயின (176); அங்ஙனம் பாழாயினபின்பு நீ செற்றவரசு பெயர்க்கு வை (132) யாகையினலே வேண்டுபுலத்திறுத்த (150) அர்காடுகள் மேம்படு தற்குமருவின குருசில் (151) என வினைமுடிக்க.

193 - 4. [*குடமுதற் றேன்றிய தொனறுதொழு பிறையின், வழிவழிச் சிறக்கின் வலம்படு சொற்றம்:*] *குடமுதல் தோன்றிய தொன்று தொழு பிறை யின் கின் வலம் படு கொற்றம வழிவழி சிறக்க—மேற்றிசைக்கட்டோன்றிய கின்குலத்திற்குப் பழை மாகிய எல்லாரும் தொழும்பிறை காடோறுஞ்சிறக்குமா போல கின்னுடைய வெற்றியாலே கின்பின்னுள்ளோர்க்குண்டாங்கொற்றம் அவர்கள் வழிவழியாக மிகுவதாக;*

195 - 6. [*குணமுதற் றேன்றிய வாரிருண் மதியிற், றெய்வ கெடுக கின் றெவ்வ ராக்கம்:*] *குணமுதல் தோன்றிய ஆர் இருள் மதியின் கின் தெவ்வர் ஆக்கம் தெய்வ கெடுக—மேற்றிசைக்கட்டோன்றிய கிறைந்த †இருணீத்தரு*

---

* "முன்றிணை முதல்வர்போலகின்று" (பதிற். 85), "தொல்லோர் சென்ற நெறிய போலவும்" (புறநா. 58.)

† "குணமுமிக் கதிரொளி மாய்க வென்றவும்" (கந்த. மார்க்கண்டேய. 59.)

மதி நாடோறும் தேயுமாறுபோல நின்பகைவருடையஆக்கம் நாடோறும் தேய்வனவாய்க் கெடுவனவாக;

197 - 8. உயர் நிலை உலகம் அமிழ்தொடு பெறினும் பொய் சேண் நீங்கிய வாய் நட்பினையே—*ஒருபொய்யாலே உயர்ந்தநிலைமையையுடைய தேவருலகை அவர்நுகரும் அமுதத்தோடே பெறுவையாயினும் அவற்றைத்தரு கின்றபொய் நின்னைக்கைவிட்டுநீங்க மெய்புடனே நட்புச்செய்தலேயுடையை;

இனி, 'பொய்சே ணீங்கிய வாய்நடப் பினையே' என்று பாடமாயின், மெய்யை நடத்தலேச் செய்தனையென்க.

199 - 201. முழங்கு கடல் எணி மலர் தலை உலகமொடு உயர்ந்த தேவத்து விழுமியோர் வரினும் பகைவர்க்கு அஞ்சி பணிந்து ஒழுகலையே—முழங்குகடலாகிய எல்லையையுடைய அகன்றஇடத்தையுடைய உலகத்துள்ளாருடனே உயர்ந்த தேவருலகத்துத்தேவரும் பகைவராய்வரினும் †பகைவர்க்கு அஞ்சித் தாழ்ந்து ஒழுகலேச்செய்யாய்;

202 - 4. தென்புலம் மருங்கின் விண்டு நிறைய வாணன் வைத்த விழு நிதி பெறினும் பழி நமக்கு எழுக என்னும்—தென்றிசைகிலத்திற் மலைகளெல்லாம் நிறையும்படி வாணனென்னுஞ்சூரன்வைத்த ‡சீரிய பொருட்டிரள்களினைப் பெறுவையாயினும் பிறர்கூறும்பழி நமக்கு வருவதாகவென்று கருதாய்;

204 - 5. §விழு நிதி நாதல் உள்ளமொடு இசை வேட்குவையே—சீரிதாகியபொருளைக் கொடுத்தலேயுடைத்தாகிய நெஞ்சனே புகழை விரும்புவை;

206. அன்னுய்—அத்தன்மையையுடையாய்.

[நின்னெடு முன்னிலே யெவனே·] முன்னிலே நின்னெடு எவனை—ஐம்பொறிகளுக்கும் நுகரப்படுவனவாய் முன்னிற்கப்படுவனவாகிய இத்தாபொருள்சட்கு நின்னெடு என்ன உறவுண்டு;

நின்னென்றது சேவான்மாவை. முன்னிலே ஆகுபெயர்.

207 - 8. [கொனெனென்று கிளக்குவ லடுபோ ரண்ணல், கேட்டிசின் வாழி கெடுகநின் னவலம்:]

நின் அவலம் கெடுக—நினவிடத்தண்டாகியமாயை இனிக்கெடுவதாக;

அடு போர் அண்ணல் அம்மாயையைக்கொல்கின்ற போர்த்தொழில்வல்ல தலைவனே,

கொன் ஒன்று கிளக்குவல் —பெரிதாயிருப்பதொருபொருளே யான் கூறுவன்; அஃது என்னுற்காட்டுதற்கரிது;

---

* நாலடி. பொறையுடைமை, 10.

† "வலியரென வழிமொழியலன்" (புறநா. 239.)

‡ "புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி, னுலகுடன் பெறினுங் கொள்ளலர்" (புறநா 182); "வங்கப்போழ் மூக்கீர் வளர்பெறினும் வேருமோ, சங்கம்போல் வான்மையார் சால்பு" (பு - வே. வாகை. 31.)

§ நிருக்குறள், 231.

என்றது *கர்தழியினே.

கேட்டிஙின்—அதனைத் †தொல்லாணை நல்லாசிரியரிடத்தே கேட்பாயாக;

வாழியென்பதனைச் சுற்றமொடுவினங்கி (770) என்பதன்பின்னேகூட்டுக.

209. [கெடாத நிலேஇயர்கின் ‡சேண்விளங்கு நல்லிசை·] சேண் விளங்கு கின் நல் இசை கெடாத நிலேஇயர்—சேட்புலமெல்லாம் சென்றுவிளங்கும் கின்னுடைய நல்லபுகழ் ஒருகாலமும் கெடாதே நிலேபெறுவதாக;

210 - 216. [தவாப்பெருக்கத் தருயாண, ரழித்தாளுக் கொழுந்திற்றி, யிழித்தாளுப் பலசொன்றி, யுண்டாஞக் கூர்நறவிற், றின்ருஞ வினவைக, னில னெடுக் கல்லா வொண்பல் வெறுக்கைப், பயனற வறியா வனங்கெழு திருநகர்:]

தவா பெருக்கத்து §அரு யாணர் வளம் கெழு திருநகர்—கெடாத பெருக் கத்தினேயுடைய நீங்காத புதுவருவாயாலே செல்வம்பொருந்தின திருமகளே யுடைய நகர்,

அழித்து ஆஞ கொழு நிற்றி இன்று அழிக்கப்பட்டு விருப்பு அமை யாத கொழுவிய தசையைத்தின்று,

"ஆடழிக்க" வன்ப.

ஆஞ பல சொன்றி இழித்து ஆஞ கூர் நறவின் உண்டு - விருப்பமையாத பலவகைப்பட்ட சோர்றைத் தினேன்றுகூறிக் களிப்பமையாத மிக்க கள்ளே உண்டு.

ஆஞ இனம் பாணர் (219)—அவ்விரண்டிலும் விருப்பமையாத நிரட் சியையுடைய பாணரென்க.

தின்று உண்டு ஆஞ இனப் பாணரென்க.

வைகல் - நாடோறும்.

நிலன் எடுக்கல்லா ஒள் பல் வெறுக்கை—நிலஞ்சுமக்கமாட்டாத ·ஒள்ளிய பலவாகிய பொருட்டிரள்களேயும்.

என்றது பூண்களேயும் பொன்னேயும்.

பயன் அறவு அறியா நகர் - எக்காலமும் பயன்கெடுதலறியாத நகர்,

217 - 8. நரம்பின் மூலும் நயம் வரும் முரற்சி விறலியர் வறு கை சூறு தொடி செறிப்ப — யாழ்வாசித்தாற்போலப் பாடும் நயப்பாடுதோன்றும் ||பாட்டினேயுடைய விறல்பட ஆடுதலேயுடையார் தம்முடைய பூணணியாத கைகளிலே சூறிய தொடிகளேயிட,

¶"நரம்பொடு வீணை நாவி னவின்றதோ வென்று கைந்தார்" என்ருர் பிறரும்

---

* இப்புத்தகம் 56 - ம் பக்கம்பார்க்க.

† மதுரை. 761; பட். 170.

‡ "சேணுர் நல்லிசைச் சேமிழை கணவ" (பதிற். 88); "விண்பொரு புகழ்" (புறநா. 11), "வானேற நீண்ட புகழான்" (சீவக. 6.)

§ Gபொருந. 1.

|| "பாடனல் விறலியர்" (பரி. 17: 15.)

¶ சீவகசிந்தாமணி, 658.

219. பாணர் உவப்ப களிறு பல தரீஇ—பாணர்மகிழும்படி யானைகள் பலவற்றையுங்கொடுத்து,

களிலே யிருத்து (216) ரோடோறும் (214) விரலியர் தொடிசெறியாரிப் பப் (218) பாணருவப்ப (219) வெறுக்கையையும் (215) யானையையுங் கொடுத் தென்க.

தரீஇ' என்றதனைச் *"செலவினும் வரவினும்" என்னும் பொதுக்குத் திரத்தாற்கொள்க.

220. கலந்தோர் உவப்ப எயில் பல கடைஇ—தம்முடன் சுழ்ந்கொண் டோர் மனமகிழும்படி அழித்த †அரண்களிற்கொண்ட பலபொருள்களையும் அவர்க்குச் செலுத்திக்கொடுத்து,

என்றது - அவர் ‡வேண்டாவென்றுமறுக்கவும் தாம் வலியப்போகவிட் டென்றவாறு.

221. மறம் கலங்க தலை சென்று—பகைவர்மறம் கிலுகுலையும்படி அவ களிடத்தேசென்று,

222. வாள் வழங்து அதன் தாள் வாழ்த்தி—அவர்க்கு வாட்போரிலே வருந்தினபடியாலே அவ்வருத்தத்தினுற் பின்பும் அதன்கட்பிறக்கின்ற முயற் சையெழுத்தி,

என்றது, வாட்போரின்கட்பெற்ற இனிமையைப் பின்னும்விரும்பி அதி லேமுயல்கின்றாரென வீரச்சிறப்புக்கூறிற்றாம்.

வழ்தென்னுஞ் செய்தெனெச்சம் காரணப்பொருட்டு. §"விழுப்புண் படாதா னெல்லாம் வழுக்கினுள், வைக்குந்தன் னூனெடுத்து." என்றா பிறரும்.

வழ்த தன்னைப் பெயரெச்சமாயின், தன்னென்னுமொருமை மேல் வருகின்ற மன்னர் (234) என்னும் பன்மைக்காகாமையுணர்க.

223 - 4. நான் ஈண்டிய கல் அகவர்க்கு ||தேரோடு மா தெறி—விடியற் காலத்தே வந்திரண்ட அரசன்விரும்பப்பட்ட சூதர்க்குத் தேருடனே குதிரை களையும் பலவாகக் கொடுத்து,

என்றது, ¶"தாவி னல்லிசை கருதிய டெர்தோர்க்குச் - சூத ரேத்திய தூயி லெடை நிலையும்" என்னும்விதியாற் சூதர் இருசுடர்தொடங்கி இன்றுகாறு

---

* தொல்காப்பியம், வினையியக்கம், சூ. 28.

† "அவ்வெயிற் கொண்ட செய்வுறு கன்கலம், பரிசின் மாக்கட்கு வரி சையி னல்கி" (புறநா. 6.)

‡ "கொள்ளே னென்ற லதனி னுயர்ந்தன்று" (புறநா. 204.)

§ திருக்குறள், 776.

|| "தோலீ யிருக்கை செடியோன்" (புறநா. 114), "மாதெ நிருக்கை" (பதிற். 70.)

¶ தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 56.

வருகின்ற தம்முனத்துள்ளோர்புகழை அரசர் கேட்டற்குவிரும்புவதொன்றாகுநி விடியற்காலத்தே பாசறைக்கண்வைத்து துயிலெடைபாடுவதொன்பது சண்டுக் கூறிற்றாம்.

அகன்சென்னூர், குலத்தோல்லாரையும் அழைத்துப் புகழ்வதொன்பது பற்றி; ஆருபெயர்; *"அகவல்" போல.

இனி வைகறைபாடும் பாணரென்பாருமுளர்.

வாழ்த்திற் நிரண்டடிகவரென்க.

225 - 8. [குடுற்ற சுடர்ப்பூவின், பாடுபுலர்த்த நறுஞ்சாந்தின், விழுமிய பெரியோர்க் சுற்றமாகக், கள்ளி னிரும்பைக் கலஞ்செல வுண்டு:] கள்ளின் இரு பைக்கலம செல உண்டு குடு உற்ற சுடர் பூவின் பாடு புலர்த்த நறு சாந்தின் விழுமிய பெரியோர் சுற்றம் ஆக — கள்ளினையுடைத்தாகிய பெருமையினை யுடைய குப்பிகள் வற்றும்படியாகக் †கள்ளினையுண்டு குடுதலுற்ற விளக்கத்தை யுடைத்தாகிய ‡வஞ்சியினையும் பூனைபடியே புலர்த்த நறிய சந்தனத்தினையு முடைய சிரியபடைத்தலைவரைத் தமக்குச் சுற்றத்தாராகக்கொண்டு,

உண்டென்னுஞ் செய்தெனைசம உடையவென்னும் வினைக்குறிப்போடு முடிந்தது.

229. பணிந்தோர் தேவம் தம் வழி நடப்ப தம்மைவழிபட்டோருடைய தேசங்கள் தம் ஏவலைக்கேட்டு நடக்கையினாலே,

230. பணியார் தேவம் பணித்து நிறை கொண்மார்—தம்மை வழிபடா தோருடைய தேசங்களைத் தம்மேவல் கேட்கும்படிபண்ணி அவர்களைத் நிறை வாகுதற்கு,

231. பருந்து பறக்கல்லா பார்வல் பாசறை—உயரப்பறக்கும் பருந்து களும் பறத்தலற்றுத உயர்ச்சியையுடைய அரண்களையுடைய பாசறைக் கண்ணே,

§பார்வல், ஆருபெயர்.

232. படு கண் முரசம் காலை இயம்ப—ஒலிக்கின்ற கண்ணையுடைய பள்ளியெழுச்சிமுரசம் காட்காலத்தே ஒலிப்பலிருத்து,

233. ‖வெடி பட நடந்து— பகைவர்படைக்குச் கேடுண்டாக வென்று,

வெடி - ஓசையுமம்.

‖வேண்டு புலத்து இறத்த—பின்னும் அழிக்கவேண்டுமென்ற நிலம் களிலே சென்றுவிட்ட,

---

* தொல்காப்பியம், செய்யுளியல், சூ. 81.

† கள்ளுணல் இக்கே வீரபானம்; (தீவத. 1874.)

‡ வஞ்சி - வஞ்சிப்பூ அல்லது வஞ்சிமரம்; இது பகைமேற்செல்வோர் அணிதற்கு வரியது.

§ பார்வல் - அரசர், தம்பகைவர் சேய்மைக்கண்வருதலைப் பார்த்திருத்தற் குரிய உயர்ச்சியையுடைய அரண்.

‖ "வான்தோய் நிலைப்பெயர வேண்டு புலத்திறத்த" (பதிற்றுப்பத்து, 15.)

234. பணை கெழு பெரு திறல் பல் வேல் மன்னர் — வெற்றிமுரசு பொருந்தின பெரியவலியினையும் பலவேற்படையினையுமுடைய அரசர்கள்,

235 - 6. [கரைபொரு திரங்குங் கனியிரு முந்நீர்த், திரையிடு மணலினும் பலரே:] கனி இரு முந்நீர் கரை பொருது இரங்குந் திரை இடு மணலினும் பலரே—செறிதலையுடைய கரிய கடலிற் கரையைப் பொருது ஒலிக்கும் திரைகுவிக்கின்ற மணலினும் பலரே.

ஏகாரம், பிரிநிலை.

236 - 7. உரை செல மலர் தலை உலகம் ஆண்டு கழிந்தோரே—புகழ் எங்கும்பரக்கும்படி அகன்ற இடத்தையுடைய உலகங்களைத் தமது ஏவல்களை நடத்தி மக்கட்குரிய மனவுணர்வின்மையிற் பிறப்பறமுயலாது பயனின்றி மாண்டோர்,

ஏகாரம், ஈற்றசை. *"மக்க டாமே யாறறி வுயிரே" என்றதனால், மன வுணர்வின்மையினென்றும்.

தீஇக் (219) கடைஇச் (220) சிதறிப் (221) பணிக்தோர்தேஎம் தம்வழி நடக்கையினாலே (229) பணியார்தேஎம் பணித்துத் திறைகொள்ளுதற்குப் (230) பெரியோர் சுற்றமாகக்கொண்டு (227) பாசறையிலே (231) மூசியம்ப இருந்து (232) கடந்து இறுத்த (233) மன்னர் (234) உலகமாண்டுகழிந்தோர் (237) திரையிடுமணலினும்பலர் (236) எனமுடிக்க.

இது †"மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமை" அன்றிப் பிறவியறமுய லாமையிற் கழிந்தமைகூறிற்று.

238. அதனால்—பயனின்மையாலே,

238 - 44. [குணகடல் கொண்டு குடகடன் முற்றி, யிரவு மெல்லையும் விளிவிட னறியா, தவலு மிசையு நீர்த்திரள் பீண்டிக், கவலையங் குழும்பி னருவி யொலிப்பக். கழைவளர் சாரற் களிற்றின நடுங்க, வரைமுத லிரங்கு மேரெழு வான்ஞெமிர்ந்து, சிதாற் பெரும்பெயல் சிதத்தலின்:]

வான் குணகடல் கொண்டு ‡குடகடல் வரைமுதல் முற்றி—மேகம் கீழ்ம் திசைக் கடலிடத்தே நீரைமுகந்து மேற்றிசைக் கடலருகின் மலையிடத்தே தங்கி,

இரவும் எல்லையும் விளிவு இடன் அறியாது—இரவும்பகலும் ஒழிந்தஇட த்தை அறியாது.

அவலும் மிசையும் நீர் நிரம்பு சுண்டி கவலை அம் குழும்பின் அருவி ஒலிப்ப—பள்ளமும் மேடுமாகிய பலநிலத்தண்டாகிய நீரிஞலே நிரண்டு சோர் குவித்து கவலைக்கிழங்கு கல்லின அழகியகுழியிலேமீழ்ந்து அருவியொலிக் கும்படி,

---

* தொல்காப்பியம், மரபியல், சூ. 33.
† ,, புறத்திணையியல், சூ. 24.
‡ "மேன்மலைமுற்றி" (பரி. 12.)

கழை வளர் சாரல் களிறு இனம் மடுக்க இரங்கும் எரிமுடு ஞெமிர்ந்து—மூங்கில்வளர்ந்த மலைப்பக்கத்திலே யானைத்திரள் மடுங்கும்படி ஒலிக்கும் உரு மேற்றோடே பரந்து,

தெரல் பெரு பெயல்—தெறுதலையுடைய பெருமழை,

நிறத்தலின்—மிகுகையினாலே,

வான் முற்றி ஞெமிர்ந்து அருவியொலிக்கும்படி பெரும்பெயல் விளிவிட னறியாது நிறத்தலினெனமுடிக்க.

244 - 6. [தாங்காது, குணகட்டற் றிவர்தருங் குரூஉப்புன லுந்தி, நிவர்து செ லீத்தங் குளங்கொளச் சாற்றி :] தாங்காது உந்தி நிவர்து செல் நீத்தம் குளம் கொள சாற்றி குணகடற்கு இவர்தரும் குரூஉ புனல்—யாறுகள் தாங்கா மல் யாற்றிடைக்குறையிலே ஓங்கிச்செல்கின்றபெருக்கைக் குளங்கள்கொள் ளும்படி நிறைத்துக் கீழ்த்திசைக் கடலுக்குப் பாய்ந்துசெல்லும் நிறத்தையுடைய நீராலே.

247. களிறு மாய்க்கும் கதிர் கழனி—யானைகள் கிழங்கு அவற்றை மறைக்கும்படிவிளைந்த கதிரையுடைய கழனியிலும்,

248. ஒளிறு இலஞ்சி—விளங்கும் மடுக்களிலும்,

248 - 9. அடை நிவந்த முன் தாள சுடர் தாமரை—இலைக்குமேலான முள்ளையுடைய தாள்களையுடையவாய ஒளியினையுடைய தாமரைப்பூவினையும்,

250. கள் கமழும் நறு நெய்தல்—தேனுறும் நறிய நெய்தற்பூவினையும்.

251. வள் இதழ் அவிழ் நீலம்—பெருமையையுடைய இதழ்விரிந்த நீலப் பூவினையும்.

252. மெல் இலை அரி ஆம்பலொடு—மெல்லிய இலையினையும் வண்டு களையுமுடைய ஆம்பற்பூவோடே.

அரி - மெண்மையுமாம்.

253. வண்டு இறை கொண்ட கமழ் பூ பொய்கை—வண்டுகள் தங்குதல் கொண்ட மணமாறாத பிறபூக்களையுமுடைய பொய்கைகளிலும்,

254 - 5. கம்புள் சேவல் இன் துயில் இரிய வள்ளை நீக்கி *வய மீன் முகந்து — †கம்புட்கோழி இனிய உறக்கங்கெடும்படி வள்ளைக்கொடிகளைத் தள்ளி வலியையுடையமீன்களை முகந்துகொண்டு,

256 ‡கொள்ளை சாற்றிய கொடி முடி வலைஞர்—விலைகூறிவிற்ற கொடிய முடிகளையுடைய வலையான்மீன்பிடிப்பார்,

கழனியிலும் (247) இலஞ்சியிலும் (248) பொய்கைகளிலும் (253) மீன் முகர்தசாற்றிய வலைஞரென்க.

---

* "வயவலியாரும்" (தொல். உரி. 68.)

† கம்புட்கோழி - சம்பங்கோழி.

‡ "பரதமாக்கள் ..... கொள்ளைசாற்றி" (அகநா. 30.)

257. வேழம் பழனத்து நுழிலாட்டு ஓதை (258)—*கொறுக்கைச்சியை யுடைய மருதநிலத்துமீனைக் கொன்றருவித்தலாற் பிறந்த ஓசை,

258. கரும்பின் எந்திரம் ஓதை—கரும்பிற்கு இட்ட ஆலையிடத்து ஓசை,

கட்பின் ஓதை—கனபரிப்பிடத்தோசை,

259 - 260 அன்னல் தங்கிய பகடு உறு விழுமம் கள் ஆர் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே—மூத்தலான் அன்னலிலே வலியற்றுத்தங்கிய ருதுற்றவருத்தத்தைக் கள்ளைப்புண்ணுங்களமர் பெயர்க்குமாரவாரம்,

261 - 2. ஒலிக்த பகன்றை வினைத்த கழனி வல் கை வினைஞர் அரி பறை—தழைத்த பகன்றையினையுடைய செல்லுமுற்றியகழனியில் அச்செல்லே வலியகையினாலே அறுப்பாருடைய அரித்தெழுகின்ற பறையோசை,

262 - 4. இன் குரல் தளி மழை பொழியும் தண் பரங்குன்றில் கலி கொள் சும்மை — இனியவோசையினையுடைய துளியினையுடைய மேகத்தக்குர் குளிர்ந்த திருப்பரங்குன்றில் விழாக்கொண்டாடுமாரவாரம்,

†"வயிரியர், முழவதிர்ந் தன்ன முழக்கத் தேரோடு" என்றுர்பிறரும்.

264 - 6. ஒலி கொள் ஆயம் தகைத்த கோதை தாெடு பொலிய புணர்ந்து உடன் ஆடும் இசையே—புதுநீர்பிழியின் ஆரவாரத்தைத் தம்மிடத்தே கொண்ட ‡மகளிர்திரள் தம்மிடத்து நெருங்கினகோதை தம்கணவர்மார்பின் மாலையுடனே அழகுபெறக் கூடி அவர்களுடனே நீராடுமோசை,

266 - 7. அனைத்தும் அகல் இரு வானத்து இமிழ்ந்து இனிது இசைப்ப—அவ்வோசைமுழுவதையும் தன்னொழித்தபூதங்கள் விரிதற்குக்காரணமாகிய பெருமையையுடைய ஆகாயத்தேசென்று முழங்கி ஆண்டுவாழ்வார்க்கு இனிதாக ஒலிப்ப,

268 - 9. குருகு கால மீன மரத்தான் மீன் சிவும் பாண் சேரியொடு—குருகெண்ணும்பறவைகள் கூப்பிடும்படி மீனையிடத்து மாங்கோறும் மீனைத் திருத்தும் பாணர்குடியிருப்பிற் பாடலாடலால் எழுத்த ஓசையோடே,

270. மருதம் சான்ற—ஊடலாகிய உரிப்பொருளமைத்த,

தண்பணை சுற்றி—மருதநிலஞ் சூழப்பட்டு,

ஒருசார்—ஒருபக்கம்,

ஒருசார் (270) சேரியிலோசையோடே (269) ஓதை (258) ஆர்ப்புப் (260) பறையோசை (262) சும்மை (264) இசையாகிய அவ்வோசைமுழுவதும் (266) இசைக்கும்படி (267) தண்பணை சுற்றப்பட்டு (270) என்க.

271. நெடு நினை கொய்ய—நெடியநினையையறுக்க,

---

* கொறுக்கைச்சி - கொறுக்காத்தட்டை

† அகநானூறு, 328; "முழவுகார்கொள" (பெரிய. திருக்குறிப்பு. 10)

‡ "மகளிர் கோதை மைந்தர் புனையவு, மைந்தர் தண்டார் மகளிர் பெய்யவும்" (பரி. 20.)

கையை கறுப்ப—எள்ளினைக்காய் முற்ற,

272. கரு கால் வரியின் இரு குரல் புலர—கரியதாளினையுடைய வரியினதுணிதாயையதிர் முற்ற,

273. ஆழ்ந்த குழும்பில் திரு மணி இளர—ஆழ்ந்தகுழியிலே திருவினையுடையமணிகிடந்தவிளங்க,

274 - 6. [எழுந்த கடற்றி னன்பொன் கொழிப்பப், பெருங்காவின் பெற்ற சிறுதலை னெவி, மடக்கட் பிணையொடு மறுகுவன வுகள:] பெருகவின் பெற்ற சிறு தலை னெவி எழுந்த கடற்றில் நல் பொன் கொழிப்ப மடம் கண் பிணையொடு மறுகுவன உகள—பெரிய அழகைப்பெற்ற ஒரியதலையினையுடைய னெவிமான் வயர்த்தகாட்டில் மாற்றற்றபொன் மேலேயாம்படி மடப்பத்தையுடைத்தாகிய கண்ணினையுடைய பிணையோடே சுழல்வனவாய்த் துள்ள,

277 சுடர் பூ கொன்றை தாஅய நீழல்—ஒளியினையுடையவாகிய பூக்களையுடைய கொன்றைபரந்த நிழலிடத்தே,

278. பாஅயன்ன பாறை அணிந்த—பரப்பினாலொத்த பாறை அழகு பெற்று,

279 - 81. [நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும். வெள்ளி யன்ன வெள்வீ புரிர்ந்து, சுரிமுழித் முசண்டையொடு முல்லே தாஅய்:] நீலத்தன்ன பைம்பயிர் மிசைதொறும் சுரி முழித் முசண்டையொடு முல்லே வெள்ளி அன்ன ஒள் வீ உதிர்ந்து தாய்—நீலமணியையொத்த பசியபயிர்களினிடங்கடோறும் முறுக்குண்ட அரும்புகளையுடைய முசண்டையுடனே முல்லையினுடையவெள்ளியினிதழ்தையொத்த ஒள்ளியபூக்கள் உதிர்ந்து பரந்து,

282 - 4. [மணிமரு ணெய்த லுறழக் காமர், தணிநீர் மெல்லவற் றெரு யிலொடு மலர, வல்லோன் றைஇய வெறிக்களங் கடுப்ப:] வல்லோன் தைஇய வெறி களம் கடுப்ப காமர் தணி நீர் மெல் அவல் மணி மருள் செய்தல் தொய்யிலொடு உறழ மலர—இழைத்தல்வல்லவன் இழைத்த கூத்தினையுடைய களத்தையொப்ப விருப்பத்தையுடைய தெளிந்த நீரையுடைத்தாகிய கெழிந்த பள்ளத்திலே நீலமணியென்றுமருளும் செய்தல் தொய்யிற்கொடியோடே மாறுபட மலர,

285. முல்லே சான்ற புறவு அணிந்து ஒருசார்—இருத்தலாகிய உரிப் பொருளமைத்த காடுருழ்ந்து ஒருபக்கம்,

ஒருசார் (285) அணிந்து (278) தாஅய்ச் (281) கொய்யக் கறுப்பப் (271) புலரச் (272) இளர (273) உகள (276) மலரப் (283) புறவுருழப்பட்டு (285) எனமுடிக்க.

*"பண்முறையானும்" என்பதனுற் பலவினையெச்சம் விராஅய் அடுக்கி அணிந்தென்னும்வினைகொண்டன.

* தொல்காப்பியம், வினையியல், சூ. 36.

286 - 7. *நறு காழ் கொன்ற கோட்டின் வித்திய குறு கதிர் தோரை— நறியஅலியையும் கர்தனத்தையும்வெட்டி மேட்டிலித்தேவிதைத்த குறியகதிர் களையுடைய தோரைசெல்லும்,*

287. *செடு கால் ஐயவி—செடியதாளினையுடைய வெண்சிறுகடுகும்,*

288. *ஐவனம் வெள் செல்லொடு அரில் கொள்பு கீடி—**ஐவனசெல் லென்னும் வெள்ளியசெல்லோடே பிணக்கங்கொண்டு வளரப்பட்டு,

289 - 90. *இஞ்சி மஞ்சள் பைங்கதி பிறவும் பல் வேறு தாரமொடு கல் அகத்த ஈண்டி —* இஞ்சியும் மஞ்சளும் பசுத்தமிளகுகொடியும் ஒழிந்த பல வாய் வேறுபட்டபண்டங்களும் கற்றரையிடத்தே குவியப்பட்டு,

291. *†தினை வினை சாரல் இளி கடி பூசல்—* தினையும்வினையப்படுகின்ற மலைப்பக்கத்திற் படியும் இளியைஓட்டும் ஆரவாரம்,

கீடி ஈண்டியென்னுஞ் செய்தெனெச்சங்கள் வினையுமென்னும் பிறவினை கொண்டன; ‡*'அம்முக் கினவி" என்னுஞ் சூத்திரவியல்.*

292 - 3. *மணி பூ அவரை §குரூஉ தளிர் மேயும் ஆமா கடியும் கானவர் பூசல்—* பன்மணிபோலும்பூவினையுடைய அவரையினது நிறமியதளிரைத் தினனும் ஆமாவையோட்டுங் கானவருடையஆரவாரம்,

294 - 5. *சேணோன் அகழ்ந்த மடி வாய் பயம்பின் ||வீழ் முகம் கேழல் அட்ட பூசல்—* மலைமிசையுறையுங்குறவன் எல்லப்பட்ட ஆடினவாயையுடைய பொய்க்குழியிலேவிழும்பக்குவத்தினையுடைய ஆண்பன்றியைக் கொன்றதனு லுண்டான ஆரவாரம்,

சேணோன் அகழ்ந்த பயம்பு, இழிகுலத்தோனுகியவன் அகழ்ந்தபயம பென்பாருமுளர்.

296 - 7. *கரு கால் வேங்கை ¶இரு னை பொங்கர் நறு பூ கொய்யும் கானவர் (293) பூசல்—* கரியதாளினையுடைய வேங்கையிடத்துப் பெரிய கவடு களிற் றேன்றிய நிறியகொம்புகளிற்பூத்த நறியபூவைப்பறிக்குமகளிர் புலிபுலி யென்றகூறுமாரவாரம்,

297 - 8. *இரு கேழ் ஏறு அடு வய புலி பூசலொடு—* கரியநிறத்தை யுடைய பன்றியைக்கொல்லுகின்ற வலியினையுடைய புலியினது ஆரவாரத் தோடே,

ஏறு $ - ஆனேறுமாம்.

298. *அனைத்தும்—முழுவதும்,*

299 - 301. [*இலங்குவெள் ளருவியொடு இலம்பகத் திரட்டச்,* **கருங் காற் குறிஞ்சி சான்ற வெற்பணிர். தருங்கடி மாமலை தழீஇ:]

---

* "வெண்ணெ லருந்திய வரிநுதல் யானை" (நற். 7.)
† பி - ம். தினைவளர். || பி - ம். விழுமுகக்.
‡ தொல்காப்பியம், வினையியல், சூ. 34. ¶ பி - ம். பெருஞ்னைப்.
§ பி - ம். குரூஉத்திரள். $ பி - ம். ஆனேயுமாம்.
** பி - ம். கருங்கோற்குறிஞ்சி.

*இலங்கு வெள் அருவியொடு கரு கால் வெற்ப அணிந்து—விளங்கு கின்ற வெள்ளிய அருவிவீழ்கின்றவாற்றலே கரிய நீரோடுங்கால்களையுடைய பக்கமலைகள்சூழ்ந்து,

இலம்பு அகத்து இரட்ட—மலையிடத்தே மாறிமாறியொலிப்ப,

குறிஞ்சி கான்ற—புணர்ச்சியாலிய உரிப்பொருளமைந்த,

அரு கடி மா மலை தழீஇ—பெறுதற்கரிய சிறப்பினையுடைய பெரியமலை தழுவப்பட்டு,

301. ஒருசார்—ஒருபக்கம்.

ஒருசார் (301), அருவியாற் (299) கருங்காலையுடையவெற்பணிதலாலே (300) கீடி (288) சண்டி (290) வினையுஞ் சாரலிற் இளிகடி பூசல் (291), கான வர்பூசல் (293), அட்டபூசல் (295), கொய்பும்பூசலாலிய (297) அனைத்துப்பூச லும் புலிப்பூசலோடே (298) இலம்பகத்து இரட்டச் (299) குறிஞ்சிசான்ற (300) அருங்கடியினையுடைய மலைதழுவப்பட்டு (301) எனமுடிக்க.

302. [இருவெதிர்ப் பைந்தூறு கூரெரி கைப்ப:] இரு வெதிர் கூர் எரி பைந்தூறு †கைப்ப—பெரியமூங்கிலிற்பிறந்த மிக்கநெருப்புப் பசியதூறுகளைச் சுடுகையினாலே,

303. நிழத்த யானை மேய் புலம் படர—ஓய்ந்தயானைகள் தமக்கு மேயலா மிடங்களிலே போக,

304. கலித்த இயவர் இயம் ‡தொட்டன்ன—மகிழ்ந்த வாச்சியக்காரர் தம்வாச்சியத்தை வாசித்தாலொத்த.

305. கண் வீடுபு உடைபு தட்டை கழிற் அழிந்து—மூங்கிலின் §கண் நிறக்கப்பட்டு உடைத்து ||இயந்தொட்டன்ன (304) ஓசையையுடைய தட்டை அழகழிகையினாலே,

தட்டப்படுதலிற் றட்டையென்னார்.

நெருப்பு கைக்கையினாலே (302) பயிரிற்றித் தட்டை கவினழிகையி னாலே (305) ஓய்ந்தயானை மேய்புலம் படரும்படி (303) அருவியான்ற மலை (306) யென்க.

கவினழியவெனத் திரித்துமுடித்தலுமாம்.

306. அருவி ஆன்ற அணி இல் மா மலை—அருவிகளில்லையான அழ கில்லாத பெரியமலையிடத்து விடரகம் (308.)

---

* "இலங்கு மருவித் திலங்கு மருவித்தே.....மலை" (கலி. 41.)

† "கோடெரிகைப்பவும்" (பொருந. 234.)

‡ பி - ம். தொட்டென்ன.

§ கண் - கணுக்கள்.

|| இயம் - வாத்தியம்.

307. வை கண்டன்ன புல் முளி அம் காட்டு—வைக்கோலைக் கண்டாற் போன்ற *ஊகம்புல்லுலர்ந்த அழகியகாட்டிடத்தில்,

308. கம சூழ் †கோடை வீடர் அகம் முகந்து—நிறைவினையுடைய ‡சூருவளியை முழைஞ்சிடங்கள் முகந்துகொள்கையினாலே,

309. கால் உறு கடலின் ஒலிக்கும் சும்மை—காற்றுமிகுந்த கடல்போல் ஒலிக்கும் ஆரவாரத்தையுடைய வேனிற்குன்றம் (313).

310 - 11. இலே வேய் குரம்பை உமை அதள் பள்ளி உவலே கண்ணி வல் சொல் §இனேளர்—குழையாலேவேய்ந்த குடிலிலிருக்கும் மான்றோலாகிய படுக்கையினையும், தழைபிரவினகண்ணியினையும். கடியசொல்லினையுமுடைய இனேயோர்,

312. சிலே உடை கையர் கவலே காப்ப—வில்லேயுடைய கையையுடையராய்ப் பலவழிகளில் ஆறலோன்வரைக் காக்கும்படி சாஞ்சேர்ந்து (314) என்க.

313. ‖நிழல் உரு இழந்த வேனில் குன்றத்து—‖நிழல் தன்வடிவையிழந்த தற்குக்காரணமான முதுவேனிற்காலத்தையுடைய மலேயிடத்துச் சுரம (314),

314. பாலே சான்ற—பிரிவாகிய உரிப்பொருளமைந்த.

சுரம் சேர்ந்து—அருகிலஞ் சேரப்பட்டு.

ஒருசார்—ஒருபக்கம்,

ஒருசார் (314). மலே (306) விடரகம் கோடையைமுகக்கையினாலே (308) கடலினெலிக்குஞ் சும்மையையுடைய (309) வேனிற்குன்றத்துப் (313) பாலே சான்ற சாஞ்சேரப்பட்டு (314) என்க.

பாலேக்கு ¶நடுவணதென்னும் பெயர்கூறியவதனால், அது தத்தம்பொருளானும் $"முல்லேயுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து, நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப். பாலே யென்பதோர் படிவங் சொன்னும்" என **முதற் பொருள்பற்றிப் பாலேநிகழ்தலானும் பாலேயையும் வேறோர்திலமாக்கினர்.

---

* "ஊகம் வேய்ந்த வுயர்நிலே" (பெரும்பாண். 122.)

† பி - ம். கொட்டை.

‡ சூருவளி - சுழல்காற்று.

§ பி - ம் இனேயர்.

‖ "முருகு சாறுபொன் னிதழியார் முண்டகப் பதத்தி, னெருவு மாருயி ரருவத்தின் மீளவுற் றிடல்போற், பருதி வானவ னுச்சமம் பதத்துமென மலர்ப்பூத், தருவி வீக்கிய நிழலெலார் தருவடி யடைந்த" (காஞ்சி, பன்னிரு காம. 340.)

¶ நடுவணதென்னும்பெயர் பாலேக்குணமையையும் அப்பெயர்க்காரணத்தையும் "அவற்றுள், நடுவணது" (தொல். அகத்திணை. 2) என்னும் சூத்திர உரையாலுணர்க.

$ சிலப்பதிகாரம், காடுகொண்காதை, 64 - 6.

** முதற்பொருளென்றது சுண்டு நிலமுதற்பொருள்களை.

315. மூழங்கு கடல் தந்த வினங்கு கதிர் முத்தம்—ஒலிக்குங்கடல்தந்த வினங்குகின்ற ஒளியினையுடையமுத்து,

316. *அரம் போழ்ந்த அறுத்த கண் சேர் இலங்கு வினை—வாளரம் தேயவறுத்த இடம் சேரிதாகிய விளங்கும்வினை,

சேர்த்தவினையுமம்.

317. பதர் தந்த பல் வேறு கூலம்—செட்டிகள் கொண்டுவருதலால் மிக்க பலவாய் வேறுபட்ட பண்டங்கள்,

தந்தென்றும் பாடம்.

318. [இருங்கழிச் செறுவிற் நீம்புளி வெள்ளுப்பு·]

இரு கழி செறுவின் வெள் உப்பு—கரிய கழிமிடத்துப் பாத்தியில்விளைத்த வெள்ளிய உப்பு,

நீ புளி— †கருப்புக்கட்டி கூட்டிப் பொரிததபுளி,

319. பரந்து ஒங்கு வரைப்பின் — மணற்குன்று பரந்தயரும் கான லிடத்தே,

319 - 20. வல் கை நிமிலர் ‡கொழு மீன் குறைஇய துடி கண் தணி யல்—வலியகையினையுடைய நிமிலர் கொழுவிய மீன்களையறுத்த §துடியின் கண்போலுருண்ட தணிகள்,

என்றது கருவாடுகளை.

நீம்புளியினையும், உப்பினையும், ‖கருவாட்டினையுமேற்றின காவா (321) யென்க.

321. விழுமிய காவாய்—சிரியமரக்கலம்.

பெருநீர் ஓச்சுவர்—மரக்கலமோகாமர்,

322. கன தலை தேஎத்து—அகன்ற இடத்தையுடைய யவனமுதலிய தேயத்தினின்றும்,

கல் கலன் உய்ம்மார்—இவ்விடத்துண்டாகிய பொன்னிகலங்களை ஆண்டுச் செலுத்துதற்கு,

323. புணர்ந்து பலருங்கூடி,

உடன் கொணர்ந்த புரவிபொடு—சேரக்கொண்டுவந்த குதிரைகளோடே,

அனைத்தும்—முழுவதும்,

---

* "அரம்போழ்வினை" (அகநா. 6, 125.)

† கருப்புக்கட்டி - கரும்பின்வெல்லம்.

‡ கொழுமீனென்றே ஒருவகை மீனுண்டென்பர்; "செய்த்தலைக் கொழு மீன்", "கொழுமீன் சுடுபுகை" (நற். 291, 311.); "நுளையர்கள் கொடுப்பன கொழுமீன்" (பெரிய. திருக்குறிப்பு. 35.)

§ "வரைத்துடிக்கட்கொழுங்குறை" (அகநா. 196.)

‖ கருவாடு - உலர்த்தமீன்.

324. வைகல் தோறும் *வழி வழி நெய்ப—நாடோறும் முறைமையே முறைமையே மிருகையினுலே வளம்பல பயின்று (325) என்க.

325. நெய்தல் சான்ற—இரங்கலாகிய உரிப்பொருளமைந்த.

வளம் பல பயின்று—பலசெல்வமும் நெருங்கப்பட்டு.

ஒருசார, பெருநீரோசசுரா (321) கலனும்மாரா தேஎத்துக் (322) கொண ர்ந்த புரவியோடே (323) முதலம் (315) வளை (316) கூலமானவை (317) அனைத்தும் (323) வழிவழிசிறப்ப (324) வளம்பல பயிலப்பட்டு (325) என்க

செய்தல்சானற (325) பரந்தோங்குவரைப்பின்கண்ணே (319) வளமபல பயிலப்பட்டு (325) எனமுடிக்க.

325 - 6 ஆங்கு ஈமபால் இனையும கலினி—அமமணடலத்தின்கண ணே ஐந்துகூற்றினையுடைய நிலங்களும அழகுபெற்று,

அமை வர - பொருந்துதல்சானற,

327 - 8 [முழலிமிழு மலாஙகண் †ழிழவுகின்ற வியனமறுகிற்]

முழவு இமிழும விழவு கினற வியல் மறுகின—முழவுமுழங்குந திருநாள கிலெபெற்ற அகற்சியையுடைய தெருவினையும்,

329. தணஙகை—தணங்கைக்கூத்தினையும,

அம தீழூஉவின—அழகினையுடைய குரவைக்கூத்தினையும,

மணம கமழ சேரி—மணநாறுகினற பரத்தையாசேரியினையும,

330. ‡இன கலி யானர—இனிய செருகினையுடைதாகிய புதுவருவா யினையுமுடைய,

327 அகல் ஆங்கண்—அகனற ஊரிடததே,

330 [குழூஉபபல பயினறு] பல குழூஉ பயினறு—பலகுடித்திரள நெருங்கி,

ஆங்கு—அநநாட்டில்

331. பாடல் சான்ற நல் நாட்டு நடுவண்—புலவராற் பாடுதல் முற்றுப பெற்ற நல்லநாட்டிற்கு நடுவணதாய,

ஒருசார் தண்பணை சுற்றப்பட்டு (270) ஒருசார் மலைதழுவப்பட்டு (301) ஒருசார் காடுதழுவப்பட்டு (285) ஒருசார சுரஞ்சேரப்பட்டு (314) ஒருசார் நெ தல்சான்ற (325) வரைப்பினகணணே (319) வளமபல பயிலப்பட்டு ஆங்கு (325) ஐப்பார்நினையுங்கவினி (326) அந்நாட்டிடத்து (330) அகலாஙகட (327) குழூஉப்பலபயினறு (330) அமைவரப் (326) பாடல்சான்ற னனுடை நடுவணதாய் (331) என்க

---

* வழிவழிசிறக்க: (மதுரை. 194.)

† (மதுரை. 98.) ‡ பி - ம். இன்கண்.

332 - 7. [*வேதாய வுயர்மைமைபத்து, மயிலையு மலிபொங்கர், மல்லியாட மாலிசம்புனத்து, மூழங்குகால் பொருத மரப்பயில் காவி, னியக்குபுனல் கொழித்த வெண்டலைக் குவவுமணற், கான்பொழில் :]

*வேதாய மலி பொங்கர் மல்லி ஆட மரம் பயில் கா—மூசக்கலேகன்தாவின மிக்கசொம்புகளிலே அவற்றின்மக்கிகள் வினையாடும்படி மரம்பொருந்தினசோலை,

மா லிசம்பு உகர்த்து—பெரிய ஆகாயத்தேசெல்ல உயர்கையினுலே,

மூழங்கு கால் பொருத மரம்—மூழங்குகின்ற பெருங்காற்றடித்த மரம்.

மயில் அகவும் காவின்—மயில் ஆரவாரிக்கும் காவோடே,

உயர் சிமையத்து இயங்கு புனல் கொழித்த வெள் தலை குவவு மணல் கான் பொழில்—உயர்ந்த மலையுச்சியிடத்தினின்றும் வீழ்ந்தோடுகின்ற நீர் கொழி கது ஏறட்ட வெள்ளிய தலையினையுடைத்தாகிய நிரட்சியையுடைய மணற்குன் றிடத்த மணத்தையுடைய பொழில்,

337. தழீஇய அடை கரை தோறும்—காவோடே பொழில்சூழ்ந்த நீரடையும் கரைகடோறும்,

338 - 42. [தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்க், கோதையி னெழுகும் *விரிதீர் கல்வர, லலிரறல் வையைத் துறைதுறை தோறும், பல்வேறு †பூக் கிரட் டண்டலை சுற்றி, யழுர்துபட் டிருந்த பெரும்பா ணிருக்கையும் :]

தாது சூழ் கோங்கின் பூ மலர் தாஅய் கோதையின் ஒழுகும் விரிதீர் கல் ரறல் வையை—தாதுக்கள்சூழ்ந்த கோங்கினுடைபபூவும் வேமலர்களும்பரந்து மலியொழுகினற்போல ஓடும் பெருநீர் ரண்ருவிருதலையுடைய வையை யிடத்து,

அலிர் அறல் துறை துறை தோறும் பல் வேறு பூ நிரள் தண்டலை சுற்றி அழந்து பட்டு இருந்த ‡பெரும்பாண் இருக்கையும்—விளங்குகின்ற அறலை யுடைய துறைகடோறும் துறைகடோறும் பலவாய்வேறுபட்ட பூத்திரளை யுடைய பூந்தோட்டங்கள் சூழப்பட்டு நெடுங்காலம் அழப்பட்டிருந்த பெரிய பாண்சாதியின் குடியிருப்பினையும்,

343 - 5. நிலனும் வானும் கண்டு அமைகல்லா விளங்கு பெரு நிருவின் மானவிறல்வேள் அழும்பில் அன்ன நாடு இழந்தனரும்—நிலத்தையும் அதிற் பிர்களையும் பார்த்தபார்வை மாறுதலமையாத விளங்கும் பெரியசெல்வத்தினை புடைய மானவிறல்வேளென்னுங் குறுநிலமன்னனுடைய அழும்பிலென்னும் ஊரையொத்த நாடுகளையிழந்தவர்களும்,

346. கொழு பல் பழிய குடி இழந்தனரும்—செல்வத்தினையுடைய பல ஊர்களிடத்தனவாகிய குடிகளையிழந்தவர்களும்,

---

* பி - ம். விரிதீர் ரவிரற னல்வரல் வையை.

† பி - ம். பூலின்றண்டலை

‡ பெரும்பாணச்சாதியினிலக்கணத்தை இப்புத்தகம் 129 - ஆம் பக்கத் தில் காண்க.

324. வைகல் தோறும் *வழி வழி சிறப்ப—நாடோறும் முறைமையே முறைமையே மிருகையினுலே வளம்பல பயின்று (325) என்க.

325. நெய்தல் சான்ற—இரங்கலாகிய உரிப்பொருளமைந்த,

வளம் பல பயின்று—பலசெல்வமும் நெருங்கப்பட்டு.

ஒருசார், பெருநீரோச்சுசர் (321) கலனுய்ம்மார் தேனத்துக் (322) கொண ர்ந்த புரவியோடே (323) முத்தம் (315) வளை (316) கூலமானவை (317) அளந்தும் (323) வழிவழிச்சிறப்ப (324) வளம்பல பயிலப்பட்டு (325) என்க.

நெய்தல்சான்ற (325) பரந்தோங்குவரைப்பின்கண்ணே (319) வளம்பல பயிலப்பட்டு (325) எனமுடிக்க.

325 - 6. ஆங்கு ஐம்பால் நிணையும் கலினி—அம்மண்டலத்தின்கண் ணே ஐந்துகூற்றினையுடைய நிலங்களும் அழகுபெற்று,

அமை வர—பொருந்துதல்தோன்ற,

327 - 8. [முழவிமிழு மகலாங்கண், †விழவுகின்ற வியன்மறுகிற்:]

முழவு இமிழும் விழவு நின்ற வியல் மறுகின்—முழவுமுழங்கும் திருநாள் நிலைபெற்ற அகற்சியையுடைய தெருவினையும்,

329. துணங்கை—துணங்கைக்கூத்தினையும்,

அம் தீழூஉவின்—அழகினையுடைய குரவைக்கூத்தினையும்,

மணம் கமழ் சேரி—மணநாறுகின்ற பரத்தையர்சேரியினையும்,

330. ‡இன் கலி யாணர்—இனிய செருக்கினையுடைத்தாகிய புதுவருவா யினையுமுடைய,

327. அகல் ஆங்கண்—அகன்ற ஊரிடத்தே,

330 [குழூஉப்பல பயின்று:] பல குழூஉ பயின்று—பலகூடித்திரள் நெருங்கி,

ஆங்கு—அந்நாட்டில்.

331. பாடல் சான்ற நல் நாட்டு நடுவண்—புலவராற் பாடுதல் முற்றுப் பெற்ற நல்லநாட்டிற்கு நடுவணதாய்,

ஒருசார் தண்பணை சுற்றப்பட்டு (270) ஒருசார் மலைதழுவப்பட்டு (301) ஒருசார் காடுதழுவப்பட்டு (285) ஒருசார் சுரஞ்சேரப்பட்டு (314) ஒருசார் நெய் தல்சான்ற (325) வரைப்பின்கண்ணே (319) வளம்பல பயிலப்பட்டு ஆங்கு (325) ஐம்பாற்றினையுங்கலினி (326) அங்நாட்டிடத்து (330) அகலாங்கட் (327) குழூஉப்பலபயின்று (330) அமைவரப் (326) பாடல்சான்ற நன்னுட்டு நடுவணதாய் (331) என்க.

---

* வழிவழிச்சிறக்க: (மதுரை. 194.)

† (மதுரை. 98.) ‡ பி - ம். இன்கண்.

333 - 7. [*கலேதாய வுயர்மைமரத்து, மயிலவ மலிபொங்கர், மஞ்ஞியாட மாலிகம்புகுந்து, முழங்குஞல் பொருத மரப்பலில் காவி, னியங்குபுனல் கொழித்த வெண்டலைக் குவவுமணற், கான்பொழில் :]

*கலே தாய மலி பொங்கர் மஞ்ஞி ஆட மரம் பயில் கா—மூசுக்கலேகன்தாவின மிக்கிகாம்புகளிலே அவற்றின்மஞ்ஞிகள் விளையாடும்படி மரம்செருங்கினசோலை,

மா லிகம்பு உகுத்த—பெரிய ஆகாயத்தேசெல்ல உயர்கையினுலே,

முழங்கு கால் பொருத மரம்—முழங்குகின்ற பெருங்காற்றடித்த மரம்.

மயில் அகவும் காவின்—மயில் ஆரவாரிக்கும் காவோடே,

உயர் கிமைத்து இயங்கு புனல் கொழித்த வெள் தலே குவவு மணல் கான் பொழில்—உயர்ந்த மலேயுச்சியிடத்தினின்றும் வீழ்ந்தோடுகின்ற நீர் கொழித்து ஏறட்ட வெள்ளிய மேலிலேயுடைத்தாகிய நிரட்சியையுடைய மணற்குன்றிடத்து மணத்தையுடைய பொழில்,

337. தழீஇய அடை கரை தோறும் — காவோடே பொழில்சூழ்ந்த நீரடையும் கரைகடோறும்,

338 - 42. [தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்த், கோதையி னெழுகும் *விரிநீர் நல்வர, லவிரறல் வையைத் துறைதுறை தோறும், பல்வேறு †பூத் தொட்ட வண்டலே சுற்றி, யழுர்துபட் டிருந்த பெரும்பா ணிருக்கையும் :]

தாது சூழ் கோங்கின் பூ மலர் தாஅய் கோதையின் ஒழுகும் விரிநீர் நல் வரல் வையை—தாதுக்கள்சூழ்ந்த கோங்கினுடையபூவும் மினமலர்களும்பரந்து மாலேயொழுகினதுபோல ஓடும் பெருநீர் நன்றுகிவருதலேயுடைய வையையிடத்து,

அவிர் அறல் துறை துறை தோறும் பல் வேறு பூ நிரள் தண்டலே சுற்றி அழுந்து பட்டு இருந்த ‡பெரும்பாண் இருக்கையும்—விளங்குகின்ற அறலேயுடைய துறைகடோறும் துறைகடோறும் பலவாய்வேறுபட்ட பூத்திரளேயுடைய பூந்தோட்டங்கள் சூழப்பட்டு நெடுங்காலம் அழுப்பட்டிருந்த பெரிய பாண்சாதியின் குடியிருப்பினேயும்,

343 - 5. நிலனும் வானும் கண்டு அமைகல்லா விளங்கு பெரு நிருவின் மானவிறல்வேள் அழும்பில் அன்ன நாடு இழந்தனரும்—நிலத்தையும் அதிற் பரிசினேயும் பார்த்தபார்வை மாறுதலமையாத விளங்கும் பெரியசெல்வத்தினேயுடைய மானவிறல்வேளென்னுங் குறுநிலமன்னனுடைய அழும்பிலென்னும் ஊரையொத்த நாடுகளேயிழந்தவர்களும்,

346. கொழு பல் பதிய குடி இழந்தனரும்—செல்வத்தினேயுடைய பல ஊர்களிடத்தனவாகிய குடிகளேயிழந்தவர்களும்,

---

* பி - ம். விரிநீ ரவிரற னல்வர் வையை.

† பி - ம். பூவின்றண்டலே

‡ பெரும்பாணச்சாதியினிலக்கணத்தை இப்புத்தகம் 129 - ஆம் பக்கத்திற் காண்க.

347. தொன்று கறுத்து உறையும் துப்பு தர வந்த—பழையதாய *செற்றங்கொண்டு தங்கும்வலி தம்மைக்கொண்டுவருகையினாலே எதிராய்வந்த,

348. அண்ணல் யானை அடு போர் வேந்தர்—தலைமையினையுடைய யானையினையும் பகைவரைக்கொல்லும் போர்த்தொழிலையுமுடைய வேந்தரை.

பல் மாறு ஒட்டி (350)—பலவாய் நெஞ்சிற்கிடந்த மாறுபாடுகளை முதற் போக்கிப் பின்னர்,

349 - 50. [இன்னிசை முரச மிடைப்புலத் தொழியப், பன்மா ரோட்டிப் பெயர்புறம் பெற்று:]

இன் இசை †முரசம் இடைப்புலத்து ஒழிய பெயர் புறம் பெற்று—இனிய ஓசையினையுடைய முரசம் ‡உழிஞைப்போர்க்கு இடையே கிடக்கும்படி மீளுகையினாலுண்டான முதுகைப்பெற்று,

என்றது: உழிஞைப்போர்செய்யவந்த அரசர் §குடுமிகொண்ட மண்ணு மங்கலமெய்தாது இடையேமீளும்படி காத்தகிடங்கு (351) என்றவாறு

351. ‖மண்ணுற ஆழ்ந்த மணி நீர் கிடங்கின்— ¶மண்ணுள்ளவளவுமாழ்ந்த நீலமணிபோலும் நீரையுடைய கிடங்கினையும்,

352. விண் உற ஓங்கிய பல் $படை புரிசை—தேவருலகிலே செல்லும் படியுயர்ந்த பல கற்படைகளையுடைய மதிலினையும்,

353. தொல் வலி நிலையிய வாயில் (356)—பழைதாகிய வலி நிலைபெற்ற வாயில்,

அணங்கு உடை நெடு நிலை—தெய்வத்தையுடைத்தாகிய நெடிய நிலையினையும்,

354. நெய் பட கனிந்த நிண போர் கதவின்—நெய் பலகாலுமிடுதலாற் கருகின நிண்ணிய செறிவினையுடைய கதவினையும்,

வாயிலில் தெய்வமுறையுமாகலின், அதற்கு அணியுநெய்யுமாம்; **"ஐயவியப்பிய நெய்யணி நெடுநிலை" என்பதனுணர்க.

---

* செற்றம் - பகைமை நெடுங்காலம் நிகழ்வது; (முருத. 132 - உரை)

† "இரங்கிசை முரச மொழியப் பரந்தவ, ரோடுபுறங் கண்ட ஞான்றை" (அகநா. 116.)

‡ உழிஞைப்போரென்றது இங்கே புறத்தழிஞைப்போரை; (தொல். புறத்தினை. சூ. 10.)

§ தொல். புறத்தினை. சூ. 13 - பார்க்க.

‖ பி - ம். மண்ணுறவீழ்ந்த.

¶ "நிலவரையிறந்தகுண்டுகண்ணகழி" (புறநா. 21.)

$ "படையார்புரிசைப்பட்டினம்" (பல்லவனீசகம், ஞான. தே), "படைமதில்" (பெருங்கதை, 3. மகதகாண்டம், 4: 3.)

** நெடுநல்வாடை, 86.

355. மழை ஆடும் *மலையின் நிவந்த மாடமொடு—மேகமுலாவுமலை போலே ஓங்கினமாடத்தோடே,

கோபுரமன்றி வாசலே மாடமாகவுஞ் சமமத்தலின், மாடமென்றார்.

356. வையை அன்ன வழக்கு உடை வாயில்—வையையாறு இடைவிடாது ஓடுமாறுபோன்ற மாந்தரும் மாவும் இடையறாமல் வழங்குதலேயுடைய வாயில்,

மாடத்தோடே (355) மலையினையும் (353) கதவினையும் (354) வழக்கினையுமுடைய வாயில் (356.)

பெரும்பாணிருக்கையினையும் (342) இடங்கினையும் (351) புரிசையினையும் (352) வாயிலினையு (356) முடைய மதுரை (69) என்க.

357 - 8. வகை பெற எழுந்து வானம் மூழ்கி நில் காற்று இசைக்கும் பல் புழை நல் இல்—கூறுபாடாகியபெயர்களைத் தாம்பெறும்படியுயர்ந்து தேவருலகிலேசென்று தென்றற்காற்று ஒலிக்கும் பலசாளரங்களேயுடைய நன்றுகிய அகங்களேயும்.

மண்டபம் கூடம் †தாய்க்கட்டு அடுக்களேயென்றாற்போலும் பெயர்களைப் பெறுதலின். வகைபெறவெழுந்தென்றார்.

359. யாறு கிடந்தன்ன அகல் நெடு தெருவில்—யாறுகிடந்தாற்போன்ற அகன்ற நெடிய தெருக்களிலே,

இருகரையும் யாறும்போன்றன, இரண்டுபக்கத்தின்மனைகளும் தெருவுகளும்.

360. பல் வேறு குழாஅத்து இசை எழுத்து ஒலிப்ப— ‡நாளங்காடியிற் பண்டங்களைக்கொள்ளும் பலசாதியாகிய பாடைவேறுபாட்டையுடைய மாக்கள் நிரளிடத்து ஓசைமிக்கொலிக்கும்படி இருத்தா (406) என்க.

361 - 2. மா கால் எடுத்த முன்நீர் போல முழங்கு இசை நல் பணை அறைவனர் நுவல—பெருமையையுடைய காற்றெடுத்த கடலொலிபோல முழங்கும் ஓசையையுடைய நன்றுகிய முரசைச் சாற்றினராய் விழவினை நாட்டியுள்ளார்க்குச் சொல்லுகையினாலே நாடார்த்தன்றே (428) என்க.

‘அறைவன நுவல’ என்றுபாடமாயின், அறையப்படுவனவாய் விழாவைச் சொல்லவென்க.

363 - 4. கயம் குடைந்தன்ன இயம் தொட்டு இமிழ் இசை மலிழ்தோர் ஆடும் கலி கொள் சும்மை—கயத்தைக் கையாற்குடைந்துவினையாடும் தன்மையாக வாச்சியங்களைச் சாற்றலான் முழங்கின ஓசையைக்கேட்டு மகிழ்ந்தவர்களாடுஞ் செருக்கினைக்கொண்ட ஆரவாரத்தினையுமுடைய தெரு (359) என்க.

---

* “மலையுரைமாடத்தி” (மதுரை. 406.)

† தாய்க்கட்டு - தாய்மனை.

‡ நாளங்காடி - காலைக்கடை. (மதுரை. 430.)

365. *ஓவு கண்டன்ன இரு பெரு வியமத்து—தெற்றிரந்தைத் தண்டாப் போன்ற வட்கு இனிமையையுடைய இரண்டாகிய பெரிய அங்காடித்தெருவில்,

ஈனல்காடி, †அல்லங்காடியாகிய இரண்டுகூற்றையுடைத்தென்னூர்.

366. சாறு அயர்ந்து எடுத்த உரூவம் பல் கொடி—கோயில்களுக்கு விழாச்செய்கடத்தில் கட்டின அழகினையுடைய பலகொடிகளும்.

இதனால் அறங்கூறினர்.

367 - 8. வேறு பல் பெயர ஆர் எயில் சொன கொள நாள் தோறு எடுத்த நலம் பெறு புனை கொடி—வேறுபட்ட பலபெயர்களையுடையவாகிய அழித்தற்கரிய அரணங்களைத் ‡தண்டத்தலைவர அரசனேவலாற்சென்று கைக்கொள்ளக் கைக்கொள்ள அவர்கள் அவ்வெற்றிக்கு ஏதுவாதோமெடுத்த நன்மையைப்பெற்ற சயக்கொடியும்,

இதனால் §புறத்தழிஞைப்போர்கூறினர்.

369 - 71. நீர் ஒலித்தன்ன நிலவு வேல் தானையொடு புலவு ட கொன்று மிடை தோல் ஓட்டி புகழ் செய்து எடுத்த விறல் சால் நல் கொடி—ட லொலிக்குந்தாற்போன்ற கிலேபெறுதலையுடைய வேற்படையோடே சென்று பகைவரைப் புலனுற்றமுண்டாகக்கொன்று பினனர் அணியாய்கின்ற யானைத்திரளையுங் கெடுத்துத் தமக்குப் புகழையுண்டாக்கி எடுத்த வெற்றியமைந்த நன்குயர்ந்த கொடியும்,

இது தும்பைப்போர்கூறிற்று.

372. கள்ளின் களி ||கலில் கொடியொடு கள்ளினது களிப்புமிகுதியைச் சாற்றுகின்ற கொடியும்,

372 - 3. நல் பல பல் வேறு குழூஉ கொடி- நன்றாகிய பலவற்றினுலே பலவாய் வேறுபட்ட நிரட்சியையுடைய கொடிகளும்,

நன்பலவென்னூர், கல்லி கொடை தவம் முதலியவற்றை.

373 - 4. பதாகை ¶கிலேயிற் பெரு வரை மருங்கின் அருவியின் தூங்க- பெருங்கொடிகளும் கிலேபெற்றுப் பெரிய மலையிடத்து அருவியசையுமாறு போல அசைய,

இக்கொடிகள் அருவியினுடங்குப்படி வகைபெறவெழுந்து (357) என முன்னேகூட்டுக.

---

* ஓவு - ஓவியம்; "ஓவுக்கண் டன்னவில்" (நற். 268), "ஓவுறழ் நெடுஞ்சுவர்" (பதிற். 68.)

† அல்லங்காடி - மாலைக்கடை. (மதுரை. 544.)

‡ தண்டத்தலைவர் - சேனைத்தலைவர்.

§ புறத்தழிஞைப்போர் - வேற்றவேந்தருடைய மதிலின்புறம் நெய்சூழ்ந்து அசெய்யும்போர்.

|| பி - ம். நுவல், துவல்.

¶ பி - ம். கிலேயிய.

375. பிணர்மீன் வழங்கும் கயல்மேய் புபரப்பின்—†பிணர்மீன்களுஞ் சாதியுமாகிய சங்குமேய்கின்ற கடலிடத்தே,

376 - 7. வீங்கு பிணி சோன் கயிற - அரிஇ இதை புடையூ கூம்பு முதல் முருங்க எற்றி—இதரும் பிணிப்பினையுடைய வலியினையுடைய பாய் கட்டினையிற்றையறத்துப் பாயையும்பீறிப் பாய்மரம் அடியிலேமுறியும்படி அடித்து,

377 - 8. [காய்ந்துடன், எடுக்காற் றெடுப்ப:] எடு காற்ற உடன் காய்ந்த எடுப்ப—கடியகாற்று நாற்றிசையினும் சேரக் கோபித்தெடுக்கையினாலே,

378. கல் பொருத உரை இ—கற்குக்கல் கயிற்றுடனேகின்று பொருத ஒலாவி,

379. நெடு சுழி பட்ட காவாய் போல - நெடியசுழியிலேயகப்பட்டுச் சுழலாகின்ற மாக்கலத்தையொக்க.

380 இருதலை பணிலம் ஆர்ப்ப - முன்னும்பின்னுஞ் சங்கொலிப்ப.

யானைமீண்டாற் பின்னின்றவன் ஊதுதற்குப் பின்னுஞ் சங்குசெல்லும்.

380 - 81. எனம் நெரிந்து ‡கோலோர் கொன்று மேலோர் வீசி—எனமிக்குப் §பரிக்கோர்காரரைக்கொன்ற பாகரைவீசிப் போட்டு,

382. மெல் பிணி வல் தொடர் பேணுது காழ் சாய்த்து—மெல்லிய பிணிப்பினையுடைய வலிய ?நீர்வாரியென்ற காலிற்கட்டுஞ் சங்கிலியை நமக்குக் காவலென்று பேணுதே அதகட்டின தறியையுமுறித்து,

383. கன்று நீத்து உழிதரும் கடாஅ யானையும் - கம்பத்தைக் கைவிட்டுசுழலும் கடாத்தையுடைய யானையும்,

நெய்து (380) கொன்று வீசெ (381) சாய்த்து (382) நீத்து (383) ஆர்ப்ப (380) உழிதருங்கடாமெனக் கடாத்தின்மேறுழிலாவுரைக்க.

சாத்திற்குக் கடாம் உவமிக்கப்படும்பொருள்.

384. ‖அமர் கண மால் விசும்பு புதைய வளி போழ்ந்து - அழகிய இடங்களைத் தன்னிடத்தேயுடைய பெரிய ஆகாயமறையக் காற்றைப்பிளந்து,

தேவருலகமுதலியவற்றைத் தன்னிடத்தேயுடைமையின், அக்கண்மால் விசும்பென்றார்.

385 - 6. ஒள் கதிர் ஞாயிறு ஊறு அனவா நிரிதரும் செ கால் அன்னத்து சேவல் அன்ன - ஒள்ளிய கிரணங்களையுடைய ஞாயிற்றைத் தாம்சேர்

---

* பி - ம். பரம்பின்.

† "உள்ளினர் தலைய தென்னை யொண்சுரப் பணைமீ னூரை, தென்விளித் திருக்கை தசிநி மிம்மில மிரிந்து பாய்ந்த" (கந்த. கடல்பாய். 11) இம்மீன், பணைய னென்றும் வழங்கும்: "பணையன்றேளி, யணையிருக்கப்பணி தியின்றுணை" (அருணைக்கலம்பகம், 45.)

‡ பி - ம். ஸ்லோர்.

§ பரிக்கோல் - குத்துக்கோல்.

‖ "அங்கண்விசும்பின்" (நாலடி. மேன்மக்கள், 1.)

தலை செஞ்சாலே கருதிக்கொண்டுபோதற்குஞ் வெற்றகாலையுடைய அன்னத்தினது சேவலொத்த,

387 - 8. குரூஉ மயிர் புரவி உராலின் பரி கிழிர்த்து கால் என கடுக்கும் கலின் பெறு தேரும்—நிறைய பலமயிர்களையுடைய குதிரைகளோடுதலிற் சென்றவிடத்துக் காற்றைக் கடுக ஓடும் அழகினைப்பெறுகின்றதேரும்,

389. கொண்ட கோலன் கொள்ளை கவிற்றலின்—கையிலேயெடுத்த மத்திகையையுடைய *வாசிவாரியன் †ஐத்துகதியையும் பதினெட்டுச்சாரியையும் பயிற்றுகையினாலே,

390. அடி படு மண்டிலத்த ஆதி போலை—குரங்களழுந்தின வட்டமான இடத்திலும் ‡ஆதியென்னுங் கதியிலும் ஓடின,

391. கொடி படு கவல இடு மயிர் புரவியும்—ஒழுங்குபடும் §கேசாரியையுடையனவாகிய இட்டவாசங்களையுடைய குதிரைகளும்.

392 - 3. [வேழத் தன்ன வெருவரு செலவின், கள்ளார் களம ரிருஞ் செரு மயக்கமும்;] வெரு வரு வேழத்து அன்ன செலவின் கள் ஆர் களமர் இரு செரு மயக்கமும்—அச்சந்தோன்றுகின்ற யானையையொத்த போக்கினையுடைய கள்ளினை யுண்ணும் வீரர் தம்மிற் பொரியபோரைச்செய்யும் கலக்கமும்.

களத்தேசேறலிற் களமரென்றார்.

394. அரியவும் பெரியவும்—சுண்டுப் பெறுதற்கரியனவுமாய் அவை தாஞ் சிறிதின்றி மிகவுள்ளனவுமாய்ப் பலவாய் வேறுபட்ட பண்ணியம் (405) என மேலேகூட்டுக.

வருவன பெயர்தலின்—யானையும் (383) தேரும் (388) புரவியும் (391) களமர் செருமயக்கமும் (393) பல்காலும் வருவனவாய் மீளுகையினாலே.

395 - 6. [நீர்புழல் வல்சிக் கழற்கான் மழவர், பூர்தலை முழவி னேண் றலை கடுப்ப:] ‖நீ புழல் வல்சி பூ தலை சழல் கால் மழவர் முழவின் தோன் தலை கடுப்ப—இனிய பண்ணியாரங்களாகிய உணவினையும் பொற்பூக்களையுடைய தலையினையும் வீரக்கழலணிந்த காலினையுமுடைய மழவர் மூன்கொட்டும் வீரமத்தளத்தினது வலியகண்ணையொக்க உருண்ட.

¶நீர்புழல் - இருப்பைப்பூவுமாம். பூர்தலை - வீகாரம். ஃமழவர் - சிலவீரர். **"உருவக் குதிரை மழவ ரோட்டிய" என்றார் பிறரும். கடுப்பவென்னுஞ் செயவெனெச்ச வுவமவுருபிற்கு உருண்டவென ஒருசொல்வருவிக்க.

---

* வாசிவாரியன் - குதிரையைத் தன்வயப்படுத்தி நடத்துவோன்.

† "ஐத்துகதியும்பதினெட்டுச்சாரியையும்"(பு-வெ. வெண்பிப்பெருக். 13.)

‡ ஆதி - நெடுஞ்செலவு; (கலி. 96.)

§ இப்பெயர் கேதாரியென்றும் வழங்கும்; (கலி. 96 - உ.)

‖ பி - ம். நீம்புலவல்லி.

¶ "இருப்பை, ... இழுதி னன்ன நீம்புழல்", "நீர்புழ லுணீஇய, கருங்கோட் டிருப்பை பூரும், பெருங்கை யெண்கு" (அகநா. 9, 171.)

ஃ (மதுரை. 687 - உரை.)

** அகநானூறு, 1.

397. *பிடகை பெய்த கமழ் நறு பூவினர்—பூத்தட்டிலே இட்டுவைத்த மிகவும்நாறுகின்ற நறிய பூவினையுடையாரும்,

398. பல் வகை †விரித்த எதிர் பூ கோதையர்—பலவகையாக விரித்து வைத்த ஒன்றற்கொன்றுமாறுபட்ட பூமாலைகளையுடையாரும்,

399. பலர் தொகுபு இடித்த நாது உகு சுண்ணத்தர்—இடிக்கவல்லார் பலரும் திரண்டு இடித்த பூந்தாதுக்கள்போலப் பரக்குஞ் சுண்ணத்தையுடையாரும்,

நாது - நீறுமாம். நவமணிகளும், பொன்னும், சந்தனமும், கருப்பூரமுதலியனவும் புழுகிலும் பனிநீரிலும் கலையவைத்திடித்தலின். இடிக்கவல்லவர் பலரும் வேண்டிற்று.

400 - 401. தகை செய் ‡தீ சேறு இன் நீர் பசு காய் நீடு கொடி இலை யினர்—உடம்பிற்கு அழகைக்கொடுக்கும் இனிய §கருங்காலிசீவிக்காய்ச்சினைகளிக்கலந்த இனிய நீரினையுடைய பசியபாக்குடனே வளர்ந்தகொடிமீன்ற வெற்றிலையினையுடையாரும்,

‖"அங்கருங் காலி சீவி பூறலை தமைக்கப் பட்ட, செங்களி விராய காயும்" என்றார். இளங்களியனம் நீராயிருத்தலின் இன்னீரென்றார்.

401. கோடு சுடு நூற்றினர் — சங்குசுடுதலாலுண்டான சுண்ணம்பையுடையாரும்.

402 - 4. [இருதலை ¶வர்த பகைமுனை கடுப்ப, வின்னுயி ரஞ்சி யின்ன வெய்துயிர்த், தேங்குவன நிருத்தவை நீங்கிய பின்றை:]

இரு தலை வர்த பகை முனை கடுப்ப இன் உயிர் அஞ்சி ஏங்குவனர் இருத்தை—இரண்டுபக்கத்தானும் படைவர்த்த பகைப்புலத்தையொக்கத் தம்மூடைய இனியவுயிருக்கு அஞ்சி ஏங்குவாராயிருத்தை,

அவை நீங்கிய பின்றை இன்ன வெய்துயிர்த்து — அக்காற்படையும் போனபின்னர் அவற்றுனெய்திய பொல்லாவெப்பத்தைப்போக்கி,

எனவே அச்சத்தால் நெஞ்சிற்பிறந்த வருத்தத்தைப்போக்கியென்றார்.

405. பல் வேறு பண்ணியம் $தழீஇ நிரி விலைஞர்—பலவாய்வேறுபட்ட பண்டங்களைத் தம்மிடத்தே சேர்த்துக்கொண்டு நிரிகின்ற விற்பாரும்,

கொள்ளக்கொள்ளக் குறையாமல் தரத்தர மிகாமல் (426) அரியவும் பெரியவுமாய் (394) பலவாய் வேறுபட்ட பண்ணியமெனக்கூட்டுக.

---

* நெடுநல், 39.

† பி - ம். விரிந்த வெதிர்ப்பூங்கோதையர்.

‡ பி - ம். நீஞ்சோற்று.

§ "பைங்கருங் காலிச் செங்களி யீனவு, நன்பகற் கமைந்த வந்துவர்க் காயும்" (பெருங்கதை, நலனுராய்ச்சி. 81 - 2.)

‖ சீவகசிந்தாமணி, 2473.

¶ பி - ம். வேந்தர்.

$ பி - ம். தரீஇயநிரிவினைஞர்.

406. மிக புரை மாடத்து கொழு மிழல் இருத்தை—மிலையெயிற்கும் மாடங்களிடத்துக் குளிர்ச்தநிழலிலே இருத்தலைச்செய்ய,

பூவினரும் (397) கோதையரும் (398) சண்ணத்தினரும் (399) இயை னரும் தூற்றினரும் (401) பண்ணியர்தழீஇத்திரிவிலரும் (405) யாவையும் (383) தேரும் (398) புரையும் (391) கனமர்மயக்கமும் (393) வருவனபெயர் தலிம் (394) படாமுனைகடுப்ப (402) அஞ்சி (403) எங்குவனிருந்து அவை நீங்கியின்றை (404) இன்னவெய்துயிர்த்த (403) மாடநிழலிலே (406) இசை யெழுதொலிப்ப (360) இருத்தை (406) எனக்கூட்டுக.

407. இரு கடல் வான் கோடு புரைய—கரியகடலில் வெள்ளிய சங்கை யொக்க,

407 - 9. [வாருற்றுப், பெரும்பின் னீட்ட வானரைச் கூர்தலர், கன் னர் கலத்தர் தொன்முது பெண்டிர்:]

வாருற்று பின்னிட்ட வால் பெரு நரை கூர்தலர் தொல் முது பெண் டிர்—கோதிப் பின்னேமுடித்துப்போகட்ட வெள்ளிய பெரிய நரைமயிரினை யுடையராகிய பழமைமூத்த பெண்டிர்,

கன்னர் கலத்தர்—கன்றுகிய வனப்பினையுடையராய்,

410 - 12. சே ரீர் பசு பொன் புனைத்தபாவை செல் சுடர் பசு வெயில் தோன்றியன்ன செய்யர்—வெந்த நீர்மையினையுடைய இளிச்சிறையென்னும் பொன்னுச்செய்த பாவை வீழ்ன்றநிரணங்களிடத்துப் பசியவெயிலிடத்தே தோன்றினுற்போன்ற வெந்தநிறத்தினையுடையராய்,

412. [செயிர்த்த நோக்கினர் மடக்கண்:] மட கண் செயிர்த்த நோக் கினர்—மடப்பத்தினையுடையகண்கள் ஆடவர்க்கு வருத்தத்தைச்செய்த பார் வையினையுடையராய்,

413. ஐயு கலுழும் மாமையர்—வியப்பினையுடையவாய் நோக்கினுர் கலங்குதற்குக் காரணமான *மாமைநிறத்தினையுடையராய்,

கலுழ்தல் - ஒழுகுதலுமாம்.

413 - 4 [வையெயிற்று, †வார்ந்த வாயர்:] ‡வார்ந்த வை யெயி வாயர்—கோதாகிய கூரிய எயிற்றினையுடைய வாயினையுடையராய்,

414 - 6. [வணங்கிறைப் பணைத்தோட், சோர்ந்துகு வன்ன வயக்குறு வர்கிலைத், தொய்யில் பொறித்த §சுணங்கெறி ரிளமுலை:]

வணங்கு இறை பணை தோள் வயக்குறு வர்கிலை—வளைந்த சந்தினை யுடைய மூங்கில்போலும்தோளினையும் ||கைவர்தியினையுர்,

---

* இப்புத்தகம் 201 - ஆம் பக்கத்தின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

† பி - ம். வாய்ந்த.

‡ "வார்தலங்குலையெயிற்றுச்சின்மொழியினை" (குறுந். 14.)

§ பி - ம். தொழிலெழுதினமுலை

|| கைவர்தி - கையில் தோளின்மேற் அணியப்படும் ஆபரணம்; இப்பெயர் வழக்கினுமுள்ளது.

தொய்யில் பொறித்த சேர்ந்து உருவன்ன சுணங்கு எதிர் இள முலை—தொய்யிலால் வல்லியாக எழுதின நெஞ்ச்ஞெரித்துமாறுபோன்ற சுணங்குதோற்றிய இளையமுலையினையும்.

தொய்யில் - எழுதுகுழம்பு.

417. மை உக்கன்ன *மொய் இரு கூந்தல் – மையொழுகினற்போன்ற செறிந்த கரியமயிரினையுமுடைய,

418. மயில் இயலோரும் மடமொழியோரும் – மயிலின்றன்மையையுடையோரும் மடப்பத்தையுடைய வார்த்தையினையுடையோரும்.

419. †கைஇ மெல்லிதின் ஒதுங்கி கைபெறித்து -தம்மைக்கோலஞ் செய்து மெத்தெனவடந்து கையைத்தட்டி,

420. கல்லா மார்த்தரொடு நகுவனர் நிலைப்ப—காமநூற்சிறியினையன்றி வேறெறுன்றையுங்கல்லாத இளையோருடனே மகிழ்ந்தனராய்ப் புணருமாறு.

421. [புடையமை பொலிந்த ‡வகையமை செப்பிற்:]

புடை அமை செப்பில்—புடைபடுதலமைந்த செப்பிடத்தில்.

பொலிந்த வகை அமை செப்பில் –பொலிவுபெற்ற கூறுபாடமைந்த செப்பிடத்திற் பண்ணியம் (422) என்க.

422. §காமர் உருவின் தாம் வேண்டும் பண்ணியம் -விருப்பமருவிய வடிவினையுடைய நுகர்வார்தாம்விரும்புந் நுகர்பொருள்களை,

423. கமழ் நறு பூவொடு மனை மனை மறுக – மிகுவதாறும் நறியபூவுடனேயேந்தி ||மனைதோறும் உலாவிற்க.

கலத்தாய்ச் (409) செய்யராய் நோக்கினராய் (412) மாமையராய் (413) வாயராய்த் தோளினையும் (414) வந்திகையினையும் (415) மூலையினையும் (416) கூந்தலினையுமுடைய (417) மயிலியலோரும் மடமொழியோரும் (418) கைஇ ஒதுங்கி எறிந்து (419) மார்த்தரொடு நிலைக்கும்படி (420) தொன்முதுபெண்டிர் (409) பண்ணியத்தைப் (422) பூவோடே ஏந்தி மனைமனைமறுக (423) எனக்கூட்டுக

424 -5. மழை கொள குறையாது புனல் புக ¶மிகாது கரை பொருது இரங்கும் முந்நீர் போல—மேகம் முகக்கக் குறைவுபடாமல் யாறுகள்பாய்தலின் மிகுதலேசெய்யாமற் கரையைப் பொருது ஒலிக்கும் கடல்போல,

---

* பி - ம். ஐம்பாற்கூந்தல்.

† பி - ம் தைஇ.

‡ பி - ம் மடையமைசெப்பிற்காமவுருலிற்.

§ காமர் மருவும் உருவென விரிக்க; "காமருநோக்கினே" (நெடி. 80) என்பதன் விசேடவுரையைப்பார்க்க; "காமரு குவளை" (சிலப 4: 41) என் புழி, 'காமம் வருமென்பது விகாரத்தாற் காமருவென நின்று கண்டார்க்கு விருப்பம்வருமென்பதாயிற்று' என்பர், அடியார்க்குநல்லார்.

|| பி - ம். மனைகடோறுமனைகடோறும்.

¶ பி - ம். நிறையாது.

426 - *கொள கொள குறையாது தா தா மிகாது—பலரும்வந்து கொள்ளக்கொள்ளக் குறையாமற் பலரும் மேன்மேலும் கொண்டுபோகக் கொண்டுவரமிகாமல்,

427 - 8. [கழுநீர் கொண்ட வெழுவா னர்தி, யாடுதலுண்டு வீழவி ஞார்த் தன்றே :]

கழுநீர் கொண்ட அர்தி - நீலியிணையைக் கழுவுதற்குக்காணமான நீர்த்தீவைத் தன்னிடத்தேகொண்ட அர்திக்காலம்,

ஆடு துவன்று விழவின் எழுவாள் அர்தி—வேரிரிடத்திலில்லாத வெற்றி செருக்குற் றிருவாளினைத் தன்னிடத்தேயுடைய ழோவாளர்தியில்,

†கால்கொள்ளத்தொடங்கிய ழோவாளர்தியிலே நீர்த்தமாடுதல் மரபு.

சாடு—அவ்விழவிலிற்குத்திரண்ட காட்டிலுள்ளார்,

ஆர்த்தன்றே—ஆர்த்தஆரவாரம்.

அற்றேயென்பது அன்றேயென மெலிர்ததாக்கி உவமவுருபாக்கலு மொன்று.

429. [மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்:] பிறங்கிய மாடம் மலி புகழ் கூடல்—பெரிய ‡கான்மாடத்தாலே மலிர்தபுகழைக் கூடுதலேயுடைய மதுரை (699) என மேலேகூட்டுக.

430. [காளங் காடி னன்றலே:] கன நீலே கான் அங்காடி—அகற்சியையுடைத்தாகிய இடத்தினையுடைய காட்காலத்துக் கடையில்,

கம்பலே—ஆரவாரம்,

---

* "மழைகொளக் குறையாது புனல்புக மிகாது", "கொளக்கொளக குறையாச்செல்வத்து" (பதிற். 45, 82), "கொளக்குறைபடாஅக் கோடுவளர் குட்டத்து" (அகநா. 162), "கொளக்கொளக் குறைபடாஅக் கூழுடை வியனகர்" (புறநா. 70.)

† எழுவாளிற் செய்யப்பெறுங் திருவிழா, 'கணம்' எனப்படும்; திருப பேருந்துறைப்புராணம் புரூரவன் திருவிழாச்செய்த படலம், 50 - ஆம் பாடல் பார்க்க; "ஆத்தமா மயனு மாலு மனறிமற் றெழிர்த தேவர், சோத்தமெம பெருமா னென்று தொழுதேரத் திரங்கள் சொல்லத், தீர்த்தமா மட்டமிழுன சிருடை யேழு காளுங், கூத்தராய் வீதி போந்தார் குறுக்கைவீ ரட்ட னீரே" (திருக்குறுக்கை. திருஞா. தே.) என்பதும் ஈண்டு ஆராயத்தக்கது.

‡ "கான் மாடச் சூடன் மகளிரு மைந்தரும" (கலி. 92) என்பதும், 'கான்குமாடம் கூடலின் நான்மாடக்கூடலென்றுமிற்று; அவை திருவாலவாய் திருஞாலாறு, திருமுடங்கை. திருஞடுஞர்; இனி, கன்னி, கரியமால், காளி, ஆலவாயென்றுமாம்' என்னும அதன் லீசேஷுரையும், "அம்புத நால்களா லீடுகூடல்" (திருஞாலாறும் திருவாலவாயும்; திருஞான. தே) என்னும் திருவாக்கும், "ஈசனூர் மலிர்ததானம்" (திருவால. நகர. 12) என்பது முதலிய திருவிருத்தக்கள காண்கும், "கன்னிநிரு மால் காளி யீசன் காக்குங் கடிமதில குழ் மாமதுரை" (ஷே பயன்மு லியன, 5) என்பதும் நான்மாடங்கள் இனன வென்பதைப் புலப்படுத்தும்,

உருவப்பன்கொடியும் (366) பூணைகொடியும் (368) நன்கொடியும் (371) களிகலிற்கொடியும் (372) குழூஉக்கொடியும் பதாகையும்*கிலிஇ (373) அருவி யினுடக்கும்படி (374) வகைபெறவெழுத்து மூழ்கி (357) இசைக்கும் பல் புழைஅயபுடைய கல்ல இல்லினையும் (378) சும்மையினையுமுடைய (364) தெருவுகளில் (353) பெருகியமித்து (365) காளங்காடியிலே (430) பூவினர் (397) மூதலியோர் இருத்தருகையினுல் (406) மறுகுதலினுல் (423) எழுந்த கம்பலே (430) நன்பணையறைவணர் நவலுகையினுலே (362) அதற்குத் நிரண்டாடி (428) அந்தியில் (427) ஆர்த்ததேயென வினைமுடிக்க.

'ஆர்த்தன்று' என்னுமுற்றுச்சொல் படுத்தலோசையாற் பெயர்த்தன்மை யாய்த் தேற்றேகாரம் பெற்றுநின்றது

431 - 2. வெயில் கதிர் *மழுங்கிய படர் கூர் ஞாயிறு செக்கர் அன்ன—வெயிலையுடைய கிரணங்கள் ஒளிமழுங்கிய செலவுமிக்க ஞாயிற்றையுடைய செகர்வானத்தையொத்த.

432 - 3. வெக்து நுணங்கு உருவின் கண் பொருபு †உகுபம் ஒள் சலிங் கம—சிவந்து நுண்ணிதாகும் வடிவாலே கண்களே ‡வெறியோடப்பண்ணிச் சிந்திவிழுமாறுபோன்ற ஒள்ளிய பூத்தொழிலையுடைய சேலைகளே,

434. பொன் புனை வாளொடு பொலிய கட்டி—பொன்னிட்ட உடைவா னோடே அழகுபெறக் கட்டி,

435 - 40. [§நிண்டேப் பிரம்பிற் புரளுக் தானைக் கச்சர் நின்ற கழ தயகரு நிருத்தடி, மொய்ம்பிறந்து நிரிதரு மொருபெருக் தெரியன், மணிதொ டாந தன்ன வொண்பூஉ கோதை, யணிஇளர் மார்பி னரமோ டனைஇக். காலியக் கனை கதழ்பரி கடைஇ :]

புரளும் தானை--தோளிலேயிடந்தையும் ||ஒலியலினையும்,

கச்சம் நிலை கழல் தயகரு நிருத்து அடி—கோத்துக்கட்டிய கச்சுக்கிடந்து தழும்பிருந்த வீரக்கழலசையும் ¶பிறக்கிடாத அடியினையும்,

மொய்ம்பு இறந்து நிரிதரும் ஒரு பெரு தெரியல் - உலகத்துள்ளார்வலி களேக்கடந்து புகழ்ச்சியால் எங்குந்திரியும் ஒன்றுகிய பெரிய வேப்பமாலே யினையுர்.

அணி இளர் மாபின ஆரமொடு அனைஇ மணி தொடர்ந்தன்ன ஒள் பூ கோதை—அழகுவினங்கும் மார்பிற்கிடக்கின்ற ஆரத்தோடேகலந்து மாணிக்க மொழுங்கினலொத்த ஒள்ளிய செங்கழுநீர்மாலையினையுமுடையராய்,

---

* பி - ம். மழுகிய.
† பி - ம். கூடும்.
‡ வெறியோட்பண்ணி - மயக்கி.
§ பி - ம். நிண்டேரப்பிற்.
|| ஒலியல் - இக்கே மேலாடை; "உடையு மொலியலுஞ் செய்யை" (பர. 19: 97.)
¶ பிறக்கு - பின்.

பிரம்பின் நிண் தேர் கால் இயக்கன்ன. கதழ் பரி கடைஇ—விளிம்பிலே வைத்த பிரம்பினையுடைய நிண்ணிய தேரிற்பூண்ட காற்றினுடைய செலவினை யொத்த விசைத்த குதிரைகளைச் செலுத்தி,

441. காலோர் காப்ப காலென கழியும்—காலாட்கள் சூழ்ந்துகாப்பக் காற்றென்னும்படி கடிதிற்செல்லும்,

442 - 3. [வான வண்கை வளங்கெழு செல்வர், நாண்மகி ழிருக்கை:] நாள் மகிழ் இருக்கை வானம் வள் கை வளம் செழு செல்வர்—நாட்காலத்து மகிழ்ந்திருக்கின்ற இருப்பிலே மேகம்போலே வரையாமற்கொடுக்கும் வளவிய கையினையுடையராகிய வளப்பம்பொருந்தின செல்வர்.

தானை (435) முதலியவற்றையுடையராய்க் கட்டிக் (434) கடைஇக (440) கழியும் (441) செல்வரென்க.

443 - 4. சாண்மார் பூணெடு தேள் அரி பொன் சிலம்பு ஒலிப்ப—விழா வைக்காண்டற்குப் பூண்களோடே தெள்ளிய உள்ளின்மணிகளையுடைய பொன் ஞற்செய்த சிலம்புகளொலிக்கும்படி மேனிலத்துள்ளின்றுமிழிதலால்,

சிலம்பொலிப்பவென்பதனால் இழிதல்பெற்றாம்.

444 - 6. [ஒள்ளழற். ருவற விளங்கிய வாய்பொ னவிரிழை, யணங்கு *வீழ் வன்ன பூந்தொடி மகளிர்·] அணங்கு வீழ்வு அன்ன ஒள் அழல் நா அற விளங்கிய ஆய் பொன் அவிர் இழை பூ தொடி மகளிர்—வானுறைதெய்வங் களின் வீழ்ச்சியையொத்த ஒள்ளியவெருப்பிலே வலியறவிளங்கிய அழகிய பொன்னாற்செய்த விளக்குப்பூண்களையும் பூத்தொழிலையுடைய தொடியினையு முடைய மகளிர்.

இவர் காயன்மார் கோயில்களிற் சேவிக்குமகளிர்.

447. மணம் கமழ் காற்றம் தெரு உடன் கமழ—புழுகுமுதலியன காறு கின்றநாற்றம் தெருவுகளெல்லாமணக்க,

மணம், ஆகுபெயர்.

448. ஒள் †குழை நிகழும் ஒளி கெழு திருமுகம்—ஒள்ளிய மகரக்குழை யை உள்ளடக்கிக்கொண்ட ஒளிபொருந்திய அழகினையுடையமுகம்,

449 - 50. [நிண்கா ழேற்ற வியலிரு விலோதர், தெண்டடற் றிரையி னைசைவளி புடைப்ப:] நிண் காழ் ஏற்ற வியல் இரு விலோதம் அசை வளி தெள் கடல் திரையின் புடைப்ப - நிணனிய கொடித்தண்டுகளிலேற்ற அகலத் தினையுடைய பெருங்கொடிகளே அசைகின்ற காற்றுத் தெளிந்த கடற்றிரை போல ஏழுந்துவிழும்படி அடிக்கையினாலே,

451. திரை நிலை மாடத்து அரமியம் தோறும்—ஒழுங்குபட்ட நிலைமை யினையுடைய மாடங்களின் நிலாமுற்றங்களோறும்,

---

* பி - ம். வீழ்பன்ன.

† பி - ம். குழையிருத்த.

452: மழை மாய் மதியின் தோன்றுபு மறைய—மஞ்சிலேமறையும் திங்களைப்போல ஒருகாற்றேன்றி ஒருகால்மறைய,

அரமியர்தோறுமிருத்து (451) விழாக்காணுமகளிர் முகம் (448) விலோதத்தை (449) வளிபுடைக்கையிஞலே (450) தோன்றுபுமறையவென்க.

நாயன்மார் எழுந்தருளுங்காற் கொடியெடுத்தல் இயல்பு.

453 - 5. [நீரு நிலனுந் தீயும் வளியு, மாக விசும்போ டைந்துட னியற்றிய, மழுவாணெடியோன் றலைவ ஞக:] மாகம் விசும்போடு வளியும் தீயும் நீரும் நிலனும் ஐந்து உடன் இயற்றிய *மழுவாள் நெடியோன் தலைவனுகை.—திக்குக்களையுடைய ஆகாயத்துடனே காற்றும் நெருப்பும் நீரும் நிலனுமாகிய ஐந்தினையும் சேரப்படைத்த மழுவாகிய வாளையுடைய பெரியோன் எனையோரின் முதல்வனுகக்கொண்டு.

456. †மாசு அற விளங்கிய யாக்கையர்—தீர்த்தமாடிய வடிவினையுடைய ராய்.

456 - 8. ‡சூழ் சுடர் §வாடா பூவின் இமையா நாட்டத்து ||காற்றம் உணவின் உரு கெழு பெரியோர்க்கு—தெய்வத்தன்மையாற்சூழ்ந்த ஒளியினையுடைய வாடாதபூக்களையும் இதழ்குவியாத கண்ணினையும் அமியாகிய உணவினையுமுடைய அச்சம்பொருந்திய மாயோன் முருகன்முதலாகிய தெய்வங்கட்கு,

459. மாற்றரு மரபின் உயர் பலி கொடுமார்—விலக்குதற்கரிய முறைமையினையுடைய உயர்ந்த பலிகளைக் கொடுத்தற்கு.

460. அந்தி விழவில்—அந்திக்காலத்துக்கு முன்னுக எடுத்த விழாவிலே.

தூரியம் கறங்க—வாச்சியங்கணொலிப்ப.

செல்வர் (442) மாசறவிளங்கிய யாக்கையராய்க் (456) கமழ (447) மறைய (452) நெடியோன் தலைவனுகப் (455) பெரியோர்க்குப் (458) பலி கொடுக்கைக்கு (459) அந்தியிற்கொண்ட விழவிலே தூரியங்கறங்கவென்க.

461 - 5. [திண்கதிர் மதாணி யொண்குறு மாக்கள், யோம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித், தாதணி காமரைப் போதுபிடித் தாங்குத், தாமு மவரு மோராங்கு விளங்கக், காமர் கவினிய பேரிளம் பெண்டிர்:]

திண் கதிர் மதாணி காமர் கவினிய பெரு இள பெண்டிர்—திண்ணிய ஒளியினையுடைய பேரணிகலங்களையுடையராய் விருப்பம் அழகுபெற்ற பெரிய இளமையினையுடைய பெண்டிர்,

---

* மழுவாணெடியோனென்றது சிவபிரானை; இக்கருத்தை, "எற்றுவல லுயரிய" (புறநா. 56) என்னும் செய்யுள் வலியுறுத்தும்.

† "மாசற விமைக்கு முருவினர்" (முருகு. 128.)

‡ பி - ம். தூசுடை.

§ "வாடாப் பூவி னிமையா நாட்டத்து, காற்ற வுணவி னெருமும்" (புறநா. 62.)

|| பி - ம். கொற்றவுணவின்.

தாம் முயங்கி புணர்ந்து ஒம்பினர் தழீஇ—தாம் முயங்குதலைச்செய்து கூடிப் பாதுகாக்கும் கணவரையும் கூட்டிக்கொண்டு,

*தாது அணி தாமரை போது பிடித்தாங்கு ஒன் குரு மாக்களை தழீஇ—தாதுசேர்ந்த செவ்வித்தாமரைப்பூவைப் பிடித்தாற்போல் ஒள்ளிய நெறியினை களையும் எடுத்துக்கொண்டு,

தாமும் அவரும் ஓராங்கு வினங்க—தாமும் கணவரும் பிள்ளைகளும் சேரச் சிலத்தாலேவிளங்கும்படியாக,

463 7. [பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச், சிறந்து :] பூவினர் புகையினர் தொழுவனர் சிறந்து பழிச்சி—பூசைக்குவேண்டும் பூவினையுடைய சாய்த் தூபங்களையுடையராய் வணங்கினராய் மிகுத்தத்துதித்து.

467. புறங்காக்கும் கடவுள் பள்ளியும்—பாதுகாத்தூடத்தும் பௌத்தப பள்ளியும்,

468. சிறந்த வேதம் விளங்க பாடி—அதர்வவேதமொழிந்த முதன்மைப் பட்ட வேதங்களைத தமக்குப் பொருடெரியும்படியோதி,

அதர்வம் தலையாயவோத்தன்மை †பொருளிற்கூறினும்.

469 விழு சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து—விழுமிய தலைமை யோடுபொருந்தின யாகங்கண்முதலிய தொழில்களோடே சிலகாலம்பொருந்தி,

470 நிலம் அமர் வையத்து—நால்வகைநிலங்களமர்ந்த உலகத்தே,

ஒரு தாம் ஆகி—ஒன்றுமியபிரமம் தாங்களேயாய்,

471. உயர் நிலை உலகம் இவண் நின்று எய்தும்—உயர்ந்த நிலைமையை யுடைய தேவருலகத்தை இவ்வுலகிலேநின்றுசேரும்,

472, அறம் நெறி பிழையா அன்பு உடை நெஞ்சின்—தருமத்தின்வழி ஒருசாலமுந்தப்பாத பல்லுயிர்கட்கும் அன்புடைத்தாகிய நெஞ்சாலே,

473. பெரியோர் மேஎய்—சிவன்முதற்றாயிருப்பாரிடத்தே சிலகாலம் பொருந்தின்று.

‡இனிதின் உறையும்—ஆண்டுப்பெற்ற வீட்டின்பத்தாலே இனிதாகத தங்கும் பள்ளி (474),

474. [குன்று குயின்றன்ன வர்தணர் பள்ளியும் :]

குன்று குயின்றன்ன பள்ளியும்—மலையை உள்வெளியாகவாங்கி இருப பிடமாக்கினற்போன்ற பிரமவித்துக்களிருப்பிடமும்,

§அந்தணர்—வேதாந்தத்தை எக்காலமும்மார்ப்பார்,

---

* பி - ம். தாதவிழ்.

† தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 20 - ஈ. உரைபார்க்க; பி - ம். பொருளியலில்.

‡ பி - ம் இனிதினிது.

§ "அந்தத்தை அணவுவார் அந்தணர்; என்றது வேதாந்தத்தையே பொருளென்றுமேற்கொண்டு பார்ப்பாரென்றவாறு" (குலி. கடவுள். ச.)

அந்தணர் (474) பாடி (466) அன்புடைநெஞ்சாலே (472) தேவருலகத்தையெய்தும் (471) ஒழுக்கத்தோடே லௌகிகன்று (469) பின்னர் வேதாந்தத்தையுணர்ந்து பெரியோரை மேவ (473) வையத்தே ஒருதாமாகி (470) உறையும் (473) பள்ளியும் (474) எனமுடிக்க.

475 - 6 வண்டு பட பழுகிய தேன் ஆர் தோற்றத்து பூவும் புகையும் *சாவகர் பழிச்ச — வண்டுதன்படியும்படி பருவமுதிர்ந்த தேனீருந்த தோற்றத்தையுடைய பூக்களையும் புகையினையுமேந்தி விரதங்கொண்டோர் தழுக்க,

477 - 83. [சென்ற காலமும் †வருஉம் நிமயமும் மின்றிவட் டோன்றிய வொழுக்கமொடு தன்குணர்ந்து, வானமு மிலனும் தாமுழு துணருஞ், சான்ற தொன்கைச் சாயா யாக்கை, யான்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார், கல் பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண்டைப், பல்புரிச் சிமிலி காற்றி னல்குவர்:]

சென்ற காலமும் வருஉம் அமயமும் இன்று இவண் தோன்றிய ஒழுக்கமொடு தன்கு உணர்ந்து நல்குவர்—சென்றகாலத்தையும் வருகின்றகாலத்தையும் இன்று இவ்வுலகில் தோன்றிடக்கின்ற ஒழுக்கத்தோடே மிகவுணர்ந்து உலகத்தார்க்குச் சொல்லுதல்வரும்படி,

வானமும் நிலனும் தாம் முழுது உணரும் அறிஞர்—தேவருலகையும் அதன்செய்கைகளையும் எல்லாநிலங்களின் செய்திகளையும் தாம் நெஞ்சாலறித்தற்குக்காரணமான அறிஞர்,

இஃது எதிர்காலங்கூறிற்று.

சான்ற தொன்கை—தமக்கமைந்த விரதங்களையும்.

சாயா யாக்கை—அவ்விரதங்களுக்கு இளையாத மெய்யினையுமுடைய அறிஞர் (481),

ஆன்று அடங்கு அறிஞர்—கல்விகளெல்லாநிறைந்து களிப்பின்றியடங்கின அறிவினையுடையார்,

‡செறிந்தனர்—நெருங்கினவருடைய சேக்கை (487) என்க.

நோன்மார்—நோற்கைக்கு,

கல் பொளிந்தன்ன இட்டு வாய் §கரண்டை பல் புரி சிமிலி காற்றி—கல்லைப்பொளிந்தாற்போன்ற ‖இட்டியவாய்பையுடைய குண்டிகையைப் பல வடங்களையுடைய நூலறியிலே தூக்கிச் செறிந்தன (481) ரென்.

484. கயம் கண்டன்ன—குளிர்ச்சியபாற் கயத்தைக் கண்டாற்போன்ற,

வயங்கு உடை நகரத்து—வினங்குதலையுடைய கோயிலிடத்துச் சேக்கை (487) என்க.

---

* சாவகர் - சைனரில் துறவாது விரதங்காக்கும் இல்லறத்தார்.
† பி - ம். வரூஉஞ்சமயமும்.
‡ பி - ம். செறிவர்.
§ "சிமிலிக்கரண்டையன்" (மணி. 3: 86.)
‖ இட்டிய - சிறிய.

485. செம்பு இயன்றன்ன செ இவர் புனைந்து —செம்பாற்செய்தாலொத்த செவ்விய கவர்களைச் சித்திரமெழுதி,

486. நோக்கு விசை தவிர்ப்ப மேக்கு உயர்ந்து —கண் பார்க்கும்விசையைத் தவிர்க்கும்படி மேல்நிலமுயர்ந்து,

486 - 8 [ஓங்கி, யிறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையும், குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற:]

குன்று பல குழீஇ பொலிவன தோன்ற ஓங்கி —மலைகள்பலவுந்திரண்டு பொலிவனபோலத் தோன்ற உயர்ந்து வயங்குடைநகரம் (484) என்க.

இறும்பூது சான்ற நறு பூ சேக்கையும் — அதிசயமமைந்த நறியபூக்களைச் சூழவுடைய அமணப்பள்ளியும்,

சேக்கப்படுமிடத்தைச் சேக்கையென்றார். இவர்கள் வருத்தமறப் பறித்து வழிபடுதற்குப் பலபூக்களைச சூழவாக்குதலின், நறும்பூஞ்சேக்கை யென்றார்.

புனைந்து (485) உயர்ந்து (486) தோன்ற (488) ஓங்கிச் (486) சாவகர் பழிச்ச (476), வயங்குதலையுடைய நகரத்திடத்துக் (484) கொள்கையினையும் யாக்கையினையுமுடைய (480) அறிஞர் (481) உணர்ந்து (478) கல்குவர (483) சோன்மார் (181) கிமிலியிலோற்றிச் (483) செறிந்தனருடைய (481) சேக்கையுமெனக்கூட்டுக.

489. அசதமும் —நடுவாகக்கூறுவதோ கூறாரோவென்று அஞ்சிவந்த அசத்தையும்,

அவலமும் — அவர்க்குத் தோல்வியால் நெஞ்சிற்றோன்றும் வருத்தத்தையும்.

ஆர்வமும் நீக்கி—அவர் தம்நெஞ்சகருதின பொருள்கண்மேற்றோன்றின பற்றுள்ளத்தினையும் போக்கி,

என்றது - அவர்கள் சொஞ்சுகொள்ள வினக்கியென்றவாறு.

490. செற்றமும் உவகையும் செய்யாது காத்து—ஒருகூற்றிற் செற்றஞ் செய்யாமல் ஒருகூற்றில் உவகைசெய்யாமல் நெஞ்சினைப்பாதுகாத்து,

491. ஞெலன் தோல் அன்ன செம்மைத்தாகி—துலாக்கோலையொத்த நடுவுநிலைமையையுடைத்தாய்.

492. நிறைந்த சொன்னை அறம் கூறு அவையமும்—இக்குணங்களாற் நிறைந்த வித்தங்களையுடைய தருமதானைச் சொல்லுந்திரளும்,

493. நறு சார்து ரிலிய சேழ் இளர் அகலத்த பெரியோர் (495) - நறிய சந்தனத்தைப்பூசிய நிறம் விளங்குமார்பினையுடைய பெரியோர்.

யாகத்திற்குச் சந்தனம்பூசுதல் மரபு.

494 - 8. [ஆவுதி மண்ணி யவிர்துகில் மூடித்த, மாலிசும்பு வழங்கும் பெரியோர்போல. நன்றுர் நீதுங் கண்டாய்ந் தடக்கி, யன்பு மறனு மொழியாதி காத்துப், பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த :]

*ஆழ்நி மண்ணி மா லிசும்பு வழங்கும் பெரியோர் போல – *யாகங்களைப் பண்ணிப் பெரிய சுவர்க்கத்து ஏறப்போம் அத்தணர் அரசனே அடக்குமாறு போல,*

கன்றும் நிதும் கண்டு ஆய்ந்து அடக்கி – அரசனிடத்துள்ள நன்மையும் தீமையும் நெஞ்சத்தாலேகண்டு அத்தீங்குகளையாராய்ந்து அவற்றிலே ஒழுகாமலடக்கி,

அன்பும் அறனும் ஒழியாது காத்து – சுற்றத்திடத்துச்செல்லுமன்பும் எவ்வுயிர்க்கண்ணும் நிகழுந்தருமமும் ஒருகாலமும்போகாமல் தம்மிடத்தே பரிகரித்து,

பழி ஓரிஇ உயர்ந்து – பழி தம்மிடத்துவாராமல் நீக்கி அதனினே னேயோரினும் உயர்ச்சியெய்தி,

பாய் புகழ் நிறைந்த – பரந்த புகழ்நிறைந்த,

அவிர் துகில் முடித்து – விளங்குகின்ற †மயிர்க்கட்டுக் கட்டி,

499. செம்மை சான்ற காவிதி மாக்களும் – நீலமையமைந்த காவிதிப் பட்டங்கட்டின அமைச்சரும்,

500. அறன் நெறி பிழையாது ஆற்றின் ஒழுகி – இல்லறத்திற்குக் கூறிய வழியைத்தப்பாமல் இல்லறத்திலேநடந்து,

501. குற பல் குழுவின் குன்று கண்டன்ன – அண்ணிய பல நிரட் கையுடையமலைகளைக் கண்டாற்போன்ற,

502. பருத்து இருந்த உகக்கும் பல் மாண் நல் இல் – பருத்து இனைப் பரிபூரித்து பின்பு உயரப்பறக்கும் பலதொழிலினமாட்சிமைப்பட்ட நல்ல இல்லில்,

503 பல் வேறு பண்டமோடு ஊண் மலிந்து கவினி – பலவாய்வேறு பட்ட பண்டங்களோடே பலவுணவுகளுமிக்கு அழகுபெற்று,

504. மலையும் கிலத்தவும் நீரவும் பிறவும் – மலையிடத்தனவும் நிலத் திடத்தனவும் நீரிடத்தனவும் பிற இடத்தனவுமாகிய பண்ணியம் (506).

505. பல் வேறு திரு மணி முத்தமொடு பொன் கொண்டு – பலவாய் வேறுபட்ட அழகினையுடைய மணிகளையும் முத்தினையும் பொன்னையும் வாங்கிக்கொண்டு,

506. நிறைந்த தேஎத்து – மணிகளும் முத்தும் பொன்னும் பிறதற்குச் நிறைந்த தேசத்தினின்றும்வந்த,

பண்ணியம் பகர்தரும் – பண்டங்களைவிற்கும் வணிகரும்.

ஊண்மலிந்து கவினிக் (503) குன்றகண்டன்ன (501) கல்லஇல்லிலே யிருந்து (502) ஆற்றினெழுகிச் (500) நிறைந்ததேஎத்துவந்த (506) திருமணி முத்தமொடு பொன்கொண்டு (505) பிறவுமாகிய (506) பண்டங்களை விற் பாருமென்க

---

* யாகஞ்செய்து சுவர்க்கமடைதல்: (பழ. 316; சிலப. 28: 137 - 8)

† முல்லை. 53.

507. [மழையொழுக் கருஅப் பிழையா வினையுள்:] அருஅ ஒழுக்கு மழை பிழையா வினையுள்—இடைவிடாமற் பெய்கின்ற மழையால் தவறுத வினைதலையுடையதாகிய மோகூர் (508),

508. பழையன் மோகூர் — பழையனென்னுங் குறுநிலமன்னனுடைய மோகூரிடத்து,

508 - 9. [அவையகம் விளங்க, நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன:] அவை அகம் விளங்க நாற்கோசர் மொழி தோன்றி அன்ன —நன்மக்கள் நிரளிடத்தே விளங்கும்படி அறியக்கூறிய நான்குவகையாகியகோசர் வஞ்சின மொழியாலே விளங்கினற்போன்ற,

510. தாம் மேஎந்தோன்றிய கால் பெரு குழுவும்—தமதுமொழியால் தாம் மேலாய்வினங்கிய நால்வகைப்பட்ட பெரியரிளரும்,

ஐம்பெருங்குழுவில் அமைச்சரைப்பிரித்து முற்கூறினமையின். ஈண்டு எனை நாற்பெருங்குழுவையுங்கூறினர். ஐம்பெருங்குழுவாவன: "அமைச்சர் புரோகிதர் சேனை பதியர், தூத ரொற்ற ரிவரென மொழிப." ; இளங்கோவடிகளும், *"ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமும்" என்றார்.

511. [கோடுபோழ் கடைநரும்:] போழ் கோடு கடைநரும்—அறுத்த சங்கை வளைமுதலியனவாகக் கடைவாரும்,

நிரு மணி குயினரும்—அழகிய மணிகளைத் துளையிடுவாரும்,

512. சூடு உறு நல் பொன் சுடர் இழை புனைநரும்—சுடுதலுற்ற நன்றாகிய பொன்னை விளங்கும்பணிகளாகப்பண்ணுந் தட்டாரும்,

513. பொன் உரை காண்மரும்—பொன்னையுரைத்தவுரையை அறுதியிடும் பொன்வாணிகரும்,

கலீங்கம் பகர்நரும்—புடைவைகளை விற்பாரும்,

514. செம்பு நிறை கொண்மரும்—செம்பு நிறுக்கப்பட்டதனை வாங்கிக் கொள்வோரும்,

வம்பு நிறை முடிநரும்—கச்சுக்களைத் தம் தொழின்முற்றுப்பட முடிவாரும்,

515. பூவும் புகையும் ஆயும் மாக்களும்--பூக்களையும் (?) சாந்தையும் நன்றாக ஆராய்ந்து விற்பாரும்,

516 - 7. [எவ்வகைச் செய்தியு முவமம் காட்டி. நுண்ணிதி னுணர்த்த:] எவகை நுண்ணிதின் உணர்த்த செய்தியும் உவமம் காட்டி – பலவகைப்பட்ட கூரிதாகவுணர்த்தற்றொழில்களையும் ஒப்புக்காட்டி,

தெற்றிரமெழுதுவார்க்கு வடிவின்றொழில்களோன்ற எழுதுதற்கரிதென பதுபற்றிச் செய்தியுமென்றார்.

517 - 8. †நுழைந்த நோக்கின் கண்ணுள் வினைஞரும்—கூரிய அறிவினையுடைய சித்திரகாரிகளும்,

---

* சிலபபதிகாரம், இந்திரவிழவூரெடுத்தகாதை, 157.

† "நுழைபுலம்" (திருக்குறள், 407.)

சோக்கினர்கண்ணிடத்தே தம் தொழிலேறுத்ததலிற் கண்ணுள்வினைஞ சென்னூர்.

பிறரும் கூடி—யான் கூறப்படாதோரும் திரண்டு.

519 - 20. *தென் திரை அவிர் அறல் கடுப்ப ஒள் பல் குறியவும் நெடிய வும் மடி தரூஉ விரித்து—தெளிந்த திரையில்வினங்குகின்ற அறலேயொப்ப ஒள்ளிய பலவாகிய சிறியனவும் நெடியனவுமாகிய மடிப்புடை வைகளைக் கொண் டுவந்து விரித்து,*

மடித்தது அறலுக்குவமை.

521. *சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ—சிறியோரும் பெரியோரு மாகிய செய்தற்றொழிலைச்செய்வார் திரண்டு,*

522. *நால் வேறு தெருவினும் கால் உற நிற்றர—நான்காய்வேறுபட்ட தெருவுகடோறும் ஒருவர்காலோடு ஒருவர்கால் தெருவுக நிற்றலைச்செய்ய,*

கம்மியர் (521) விரித்துக் (520) குழீஇ (521) நிற்றலைச்செய்ய.

இஃது அந்திக்கடையில் தெருவிற் புடைவைவிற்பாரைக் கூறிற்று.

கோயிலைச்சூழ்ந்த ஆடவர்தெரு நான்காதலின், *நால்வேறுதெருவென்னூர்.* இனிப் பொன்னும் மணியும் புடைவைகளும் *கருஞ்சரக்கும்விற்கும் நால் வகைப்பட்ட வாணிகர்தெருவென்றுமாம.*

523 - 5. *கொடு பறை கோடியர் கடும்பு உடன் வாழ்த்தும் தண் கடல் நாடன் ஒள் பூ கோதை பெரு நாள் இருக்கை—கண்கள்வினைந்த பறையினை யுடைய கூத்தருடையசுற்றம் சேரவாழ்த்தும் குளிர்ந்த கடல்சேர்ந்த நாட்டை யுடையவனுடைய ஒள்ளிய பனந்தாரையுடைய சோனுடைய பெரிய நாளோலக்க இருப்பிலே,*

525 - 6. *†விழுமியோர் குழீஇ விழைவு கொள் கபிலை கடுப்ப கல் லென (538)—எல்லாக்கலைகளையுமுணர்ந்த சீரியோர் திரண்டு அவனகேட்பத் தருக்கங்களைக்கூறி விருப்புதல்கொண்ட ஆரவாரத்தையொப்பக் கல்லென்ற ஓசை நடக்க,*

பலசமயத்தோரும் தம்மிற்றம மாறுபட்டுக்கூறுந் தருக்கத்தைச் சேரக் கூறக் கேட்டிருக்கின்ற கம்பலேபோலவென்னூர்.

526. *பலவுடன்—கூறுதன பலவற்றுடனே,*

527. *சேறும் நாற்றமும் பலவின் சுளையும்—தேனும் நாற்றமும் உடைய வாகிய பலாப்பழத்தின் சுளையும்,*

சேறென்னூர், சுளையிலிருக்கின்ற தேனை.

528. *வேறுபட கனிந்த தேம் மா கனியும்—வடிவுவேறுபட அழகு பெற்ற இனிய மாவிற்பழங்களையும்.*

---

* கருஞ்சரக்கு - செல்முதலியகூலங்கள்; (சிலப். 5: 23 - அரும்பத)

† சோனவையும் தருக்கமும்: (மணி. 26: 63 - 4.)

"சேறு சாத்தலும் வேறுபடக் கவினிய, பலவின் னினையுங் தேமாங் கனி யும்" என்னும் பாடம்.

529. பல் வேறு உருவிற் காயும்—பலவாய் வேறுபட்ட வடிவினையுடைய பாகற்காய் வாழைக்காய் *கவழுதணங்காய் முதலியகாய்களையும்,

பழனும்—வாழைப்பழம் மூன்றிரைப்பழமுதலிய பழங்களையும்,

530 - 31. கொண்டல் வளர்ப்ப கொடி விடுபு கவினி மெல் பிணி அவிழ்ந்த குறு முறி அடரும்—மழை பருவத்தேபெய்துவளர்க்கையினாலே கொடி கன்விட்டு அழகுபெற்று மெல்லிய சுருள்விரிந்த சிறிய இலைகளையுடைய இலைகறிகளையும்,

கொடியென்ப, ஒழுங்குபட விடுகின்ற கீரைகளை.

532. [அமிர்தியன் றன்ன தீஞ்சேற்றுக் கடிகையும்:] தீ சேறு அமிர்து இயன்றன்ன கடிகையும்—இனிய பாலினுற்கட்டின அமிர்தம் தேறுகலீண்டார்போன்ற †கண்டசருக்கரைத்தேற்றையும்.

533. புகழ் பட பண்ணிய பெரு ஊன் சோறும்—புகழ்ச்சிகள் உண்டாகச்சமைத்த பெரிய இறைச்சிகளையுடைய சோற்றையும்,

534. கீழ் செல வீழ்ந்த இழங்கொடு—பாளவாகவீழ்ந்த இழங்குடனே,

534 - 5. [பிறவு, மின்சோறு தருநர் பல்வயி னுகர:] பல் வயின் நுகர இன் சோறு பிறவும் தருநர்—பலவிடங்களினும் அநுபவிக்க இனிய பாற்சோறு பால் முதலியவற்றையுங் கொண்டுவந்து இடுவாரிடத்து எழுந்த ஓசையும்,

என்றது, சோறிடுஞ்சாலைகளை.

536 - 44. [வாலிதை யெடுத்த வளிதரு வங்கம், பல்வேறு பண்ட மிழி தரும் பட்டினத், தொல்லெ னிமிழிசை மானக் கல்லென, னனர்தலை வினைஞர் கலங்கொண்டு மறுகப், பெருங்கடம் குட்டத்துப் புலவுத்திரை யோத, மிருங்கழி மருவிப் பாயப் பெரிகெழுஞ், திருகெழு பாரூன் வருவன பெயர்தலிற், பல்வேறு புள்ளி னிசையெழுந் தற்றே, யல்லல் காடி யழிதரு கம்பலை:]

நன தலை வினைஞர் கலம் கொண்டு மறுக—அகன்ற இடத்தையுடைய தேசங்களின்வாணிகர் ஈண்டுச்செய்த பேரணிகலங்களைக் கொண்டுபோதல் காரணமாக,

வால் இதை எடுத்த வளி தரு வங்கம்—வன்மையுடைய பாய்மரித்த காற்றைக் கொண்டு வருகின்ற மரக்கலம்,

பெரு கடல் குட்டத்து புலவு திரை ஓதம் இரு கழி மருவி பாய பெரிது எழுந்து உரு கெழு பால்கள் வருவன—பெரிய கடல்சூழ்ந்த இடத்தினின்றும் புலாலுநர் திரையையுடையஓதம் சரியகழியிற் புகார்முகத்தேயேறிப் பாக்கினர் அளவிலே மிக்கெழுந்து அச்சம்பொருந்திய கடுவியாமத்தே வருகின்றவற்றின் பண்டம் (537) என்க.

---

* கத்தரிக்காய். † கற்கண்டு.

பெரிதெழுந்தென்னூர், பாயும்வாய்ச் சரக்கும்பறியாமல் வருகின்றனை தோன்ற, ஒதமருலிப்பாயவென்னூர், அவ்வோதம் எற்றத்திலே கழியிலேவரு மென்பதனைர்த்தற்கு.

பல் வேறு பண்டம் இழிதருஞ் பட்டினத்து ஒல்லென் இமிழ் இசை மான—வங்கம்வருகின்றவற்றிற் பலவாய் வேறுபட்ட சரக்கு இறங்குதலைச் செய்யும் பட்டினத்து ஒல்லெனமுழங்குகின்ற ஓசையையொக்க,

மறுகுதற்குவந்த வங்கம் குட்டத்தினின்றும் வருவனவற்றிற் பண்டமிழி யும் பட்டினத்து ஓசைமானவென்க.

பெயர்தலின் பல் வேறு புள்ளின் இசை எழுந்தற்று—இரையை விறைய மேய்ந்து பார்ப்பிற்கு இரைகொண்டு அந்திக்காலத்துமீளுதலிற் பலசாதியாய் வேறுபட்ட பறவைகளினோசை எழுந்த வண்மைத்து;

அல் அங்காடி அழி தரு கம்பலை—அந்திக்காலத்துக் கடையில் மிகுதி யைத்தருகின்ற ஓசை,

கடவுட்பள்ளியிடத்தும் (467) அந்தணர்பள்ளியிடத்தும் (474) சேக்கை யிடத்தும் (487) அவையத்திடத்தும் (492) காலிற்மாக்களிடத்தும் எழுகின்ற வோசை (499) கோதை (524) யிருக்கையில் (525) வினைவுகொள்கம்பலைகடுப் பச் (526) கல்லென (538) வெனமுடிக்க.

பண்ணியப்பகார்ரிடத்தோசையும் (506) நாற்பெருங்குழுவிடத்தோசை யும் (510) பல்வியினுசை இன்சோறு (535) பிறவும் (534) தருநரிடத்தெழுந்த வோசையும் (535) கோடுபோழ்கடைநர் (511) முதலாகக் கண்ணுள்வினைஞ ரீருகவுள்ளாரும் பிறருங்கூடிக் (518) கம்மியருஞருழீஇ (521) நிர்மா (522) எழுந்தவோசையும் பட்டினத்து (537) ஒல்லெனிமிழிசைமானக்கல்லென (538) எனமுடிக்க.

இங்ஙனமுடித்தபின், நியமத்து (365) அல்லங்காடியில் அழிதருகம்பலை (544) தூரியங்கறங்குகையினுலும் (460) கம்பலைகடுப்பக் (526) கல்லென கையினுலும் (538) ஒல்லெனிமிழிசைமானக்கல்லென்கையினுலும (538) பல் வேறுபுள்ளின்இசையெழுந்தற்றே (543) எனச்சேரவினைமுடிக்க

கல்லெனவென்பதனை இரண்டிடத்திற்குங்கூட்டுக.

*இவ்வோசைகளின் வேறுபாடுகளைநோக்கிப் பல்வேறுபுள்ளோசைகளை உவமங்கூறினர்.

545 - 6. [ஒண்சுட ருருப்பொளி மழுங்கச் ஞெர்தணிந்து சென்ற ஞாயிறு:] ஒள் சுடர் உருப்பு ஒளி ஞெம் தணிந்து மழுங்க சென்ற ஞாயிறு—ஒள்ளிய ஞெண்கதிரையுடைய வெப்பத்தையுடைய ஒளி ஞெமாறிக் குறையும் படி ஒழுகப்போன ஞாயிறு.

546 - 7. கல் பகல் கொண்டு குடமுதல் குன்றம் சேர பின்னர் கண் முகிய பகற்பொழுதைச் சேரக்கொண்டு மேற்றிசையிடத்து அத்தகிரியைச் சேருகையினுலே,

* தீவகு. 93, 828; மணி. 14: 24 - 7.

547 - 9. குணமுதல் நாள் முதிர் மதியம் தோன்றி நிலா வீரிபு பகல் உரு உற்ற இரவு வர—நிழத்திலையிடத்தே பதினறுநாட்சென்றமுதிர்ந்த நிறைமதி எழுந்து நிலாப்பரக்கையினலே பகலின்வடிவையொத்த இராக்காலம் வரும்படி,

549. நயந்தோர்—கணவர்பிரிதலிற் கூட்டத்தை விரும்பியிருந்தார்க்கு,

550. காதல் இன் துணை புணர்மார்—தம்மேற் காதலையுடைய தமக்கு இனிய கணவரைக்கூடுதற்கு.

550 - 51. ஆய் இதழ் தண் நறு கூழிர் துணைப்ப -- ஆராய்ந்த இதழ் களையுடைய குளிர்ந்த நறிய செங்கழுநீர்களே மாலைகட்டுர்படியாக

551. இழை புனையூஉ— ணிகளே யணிந்து,

552. நல் நெடு கூர் நல் நறு விரை குடைய—நன்றகிய நெடிய மயிரிற பூசின நறிய மயிர்ச்சந்தனத்தை அலைத்து நீக்குர்படியாக,

553. நரந்தம் அரைப்ப--கத்தூரியை அரைக்கும்படியாக.

நறு சாந்து மறுக—நறியசந்தனம் அரைக்கும்படியாக,

554. *மெல் நூல் கலிங்கம் கமழ புகை மடுப்ப—மெல்லிய நூலாற்செய்த கலிங்கங்களுக்கு மணக்கின்ற அகிற்புகையை ஊட்டும்படியாக.

555 - 6. பெண் மதிழ்வு உற்ற பிணை நோக்கு மகளிர் நெடு சுடர் விளக்கம் கொளீஇ--குணச்சிறப்பால் †உலகத்துப்பெண்சாதி விருப்பமுற்ற மான்பிணை போலும் நோக்கினையுடையமகளிர் நெடியஒளியினையுடைய விளக்கினையேற்றி,

556 - 8. [நெடுநக. செல்லே யெல்லா கோயொடு புகுந்து, கல்லென் மாலே நீங்க :]

நெடு நகர் எல்லே எல்லாம்—பெரிய ஊரினெல்லையாகிய இடமெல்லாம்,

கல்லென் மாலே நோயொடு புகுந்து நீங்க—கல்லென்னுமோசையையுடைய மாலை நயந்தோர்க்கு (549) நோயைச்செய்தலோடே புகுந்தபோசையினலே மூத்தையாமஞ்சென்றபின்றை (620) என்க.

நெடுநக (556) செல்லேயெல்லாம் (557) மகளிர் (555) விளக்கங்கொளீஇக் (556) காதலின்துணைபுணர் தர்க்குப் (550) புனையூஉத் துணைப்பக் (551) குடைய (552) அரைப்ப மறுக (553) மடுப்ப (554) இரவுவருர்படி (549) ஞாயிறு (546) குன்றஞ்சேருகையினலே (547) மாலை (558) நயந்தோர்க்கு (549) நோயொடு புகுர்து (557) பின்னர் நீங்க (558) மூந்தையாமஞ்சென்றபின்றை (620) எனக்கூட்டுக

558 நாணு ‡கொள—புணர்ச்சிநீங்கிற்றுச்சத் தமக்கு §உயிரினுஞ்சிறந்த நாணைத் தம்மிடத்தே தடுத்துக்கொள்ள,

559 - 61. [ஏழ்புணர் சிறப்பி னின்றெடைச் சிறியாழ், தாழ்பெயர்க் கினேகுரல் கடுப்பப் பண்ணுப்பெயர்த்து, வீழ்துணை தமீஇ :]

---

* நீவக. 71. † நீவக. 587. 2417; பர். 21 : 22 - உரை.

‡ பி - ம். கொளீஇ.

§ "உயிரினுஞ்சிறந்தன்றுநாணே" (தொல். களவி. 22.)

ஏழ் புணர் சிறப்பின் இன் தொடை நெடு யாழ் பண்ணு பெயர்த்து – இசை யேழும் தன்னிடத்தேகூடின தலைமையினையுடைய இனிய ஈரம்பினையுடைய நெடிய யாழைப் பண்களே மாறிவாசித்து,

வீழ் துணை தழீஇ — தம்மைவிரும்பின கணவரைப் புணர்ந்து ஈணுக் கொள (568),

பாட்டுக் காமத்தையிளைவித்தலின், யாழைவாசித்து வீழ்துணைதழீஇ யென்றார்.

561 - 2. [*வியல்விசும்பு கமழ, நீர்நிரண் டன்ன கோதை பிறக்கிட்டு:*] நீர் நிரண்டன்ன கோதை வியல் விசும்பு கமழ பிறக்கிட்டு — நீர்நெருண்டாற் போன்ற வெள்ளியபூக்களாற்செய்த மாலைகளே அகற்சியையுடைய விசும்பிலே சென்றுகாறும்படி கொண்டையிலே முடித்து,

563. *ஆய் கோல் அவிர் தொடி விளங்க மீஇ* — அழகிய திரட்சியை யுடைய விளங்குகின்ற தொடி மிகவிளங்கும்படி கையை மீஇ மேனதொறுஞ் சென்று பொய்தலைய (589) என்க.

564. போது அவிழ் புது மலர் தெரு உடன் கமழ – அலரும்பருவமாக மலர்ந்த புதிய விடுபூக்கள் தெருவுகளெங்கும் நாற.

565. *மே தகு தகைய மிகு கலம் ஏய்தி* — முற்படப் பலருடன் புணர்ந்த புணர்ச்சியாற்குலைந்த ஒப்பனைகளைப் பினனும் பெருமைதருகின்ற அழகினை யுடைய மிகுகின்ற நண்மையுண்டாக ஒப்பித்து.

566 - 7. [*பெரும்பல் குவளைச் சுரும்புபடு பன்மலர், நிறந்துமோர் தன்ன நிறந்துகமழ் நாற்றத்து:*]

நிறந்து மோர்தன்ன நிறந்து கமழ் நாற்றத்து — அலர்கின்றபருவத்தே கை யாலலர்த்தி மோந்துபார்த்தாலொத்த மிக்குநாறுகின்ற நாற்றத்தினையுடைய,

பெரு பல் குவளை சுரும்பு படு பல் மலர் — பெரிய பலவாகிய செங்கழுநீரிற் சுரும்புகளுக்கு அலர்கின்ற பலபூக்களையுமே,

568. [*கொண்டன் மலர்ப்புதன் மானப் பூவேய்ந்து;*]

கொண்டல் மலர் புதல் மான வேய்ந்து – மழைக்குமலர்க்க மலரையுடைய சிறுதூற்றையொக்கச் சூடி,

பூ — னெனப்பூக்களேயும,

பலநிறத்துப்பூக்களே நெருங்கப்புனைதல்பற்றிச் *சிறுதூற்றை உவமை கூறினர்,

569 - 72. [*நுண்பூ ணுகம் வடுக்கொள முயங்கி, மாயப் பொய்பல கூட்டிச் †கவவுக் கரந்து, சேயரு ணெரியரு ணலனபந்து வந்த வினம்பல் செல்வர் வளர்த்த வாங்கி:*]

---

* சிறுதூறு மெய்காப்பாளர்க்கு உவமை கூறப்பெற்றது; (முல்லை. 51 - 4.)

† பி - ம். கவவுக்கவர்ந்து.

சேயரும் கணியரும் கலன் நயந்து வந்த இள பல் செல்வர்—புறமண்டலத் தாரும் உண்ணாநிலுள்ளாருமாய்த் தம்மூடைய வடிவழகைவிரும்பிவந்த இனையா யிய பலசெல்வத்தையுடையாரை,

பல மாயம் பொய் கூட்டி நுண் பூண் ஆகம் வடு கொள முயங்கி—பல வஞ் சனைகளையுடைய பொய்வார்த்தைகளாலே முதற்கூட்டிக்கொண்டு அவருடைய நுண்ணிய பூண்களையுடைய மார்பைத் தம்மார்பிலே வடுப்படும்படியாக முயங் கிப் பின்னர்,

கவவு கரந்து வளர் தப வாங்கி—அங்ஙனம் அன்புடையார்போலே முயங் கினமுயக்கத்தை அவர் பொருள்தருமளவுமறைத்து அவருடைய செல்வமெல் லாம் கெடும்படியாக வாங்கிக்கொண்டு,

573 - 4. நுண் தாது உண்டு வறு பூ துறக்கும் மெல் இறை வண்டு இனம் மான—பூ அலருங்காலமறிந்து அதன் நுண்ணிய தாதையுண்டு தாதற்ற வறுவியபூவைப் பின்னர் நினையாமல் துறந்துபோம் மெல்லிய சிறகையுடைய வண்டின்றிரளையொப்ப,

இது, தொழிலுவமம்.

574 - 5. புணர்ந்தோர் நெஞ்சு ஏமாப்ப இன் துயில் துறந்து—தம்மை நுகர்ந்தோருடைய நெஞ்சு கலக்கமுறும்படி அவரிடத்து இனியகூட்டத்தை நோகக்கைவிட்டு,

576. பழம் தேர் வாழ்க்கை பறவை போல—பரமரமுள்ள இடந்தேடிச் சென்று, அவற்றின் பழத்தையே ஆராய்ந்து வாங்கி நுகர்தலைத் தமக்குத் தொழி லாகவுடைய புள்ளினம்போல,

தம்மூயிரைப் பாதுகாக்கின்ற வாழ்க்கைத்தொழிலே வாழ்க்கையென்னும்.

577 - 8. [கொழுங்குடிச் செல்வரும் பிறரு மேஎய, மணம்புணர்ந் தோங் கிய வணங்குடை கல்லில்:]

சொழு குடி செல்வரும் பிறரும் மேஎய அணங்கு உடை கல் இல்—வள வியகுடியிற்பிறந்த செல்வரும் அவர்களாற்றோன்றிய பிறசெல்வரும் மேவப பட்ட இல்லுறை தெய்வங்களையுடைய நன்றாகிய அசங்களில்,

*குடிச்செல்வரென்றார், தான்குவருணத்தை; பிறரென்றார், அவர்களாற் றோன்றிய ஏனைச்சாதிகளை.

578 - 9. மணம் புணர்ந்து ஒங்கிய ஐப் பொன் அவிர் தொடி பசு இழை மகளிர்—வதுவைகொள்ளப்பட்டு உயர்ச்சிபெற்ற ஒடவைத்தபொன்னற்செய்த வினங்குகின்ற தொடியினையும் பசியபூணினையுமுடைய மகளிர்,

580. ஒள் சுடர் விளக்கத்து—ஒள்ளிய விளக்கினுடைய ஒளியிலே,

பலர் உடன் துவன்றி - பலருஞ் சேரவருங்கி.

581 - 2. நீல் நிற விசும்பில் அமர்தனர் ஆடும் †வானவமகளிர் மான நீலநிறத்தையுடைய ஆகாயத்தே நெஞ்சமர்ந்துவினையாடும் தெய்வமகளிர் வருத் தமா றுபோல,

---

* திருவிளை. திருமுகாய்கண்ட. 45 - பார்க்க. † பி - ம். வானமகளிர்.

582 - 3. கண்டோர் *நெஞ்சு கடுக்குறூஉ கொண்டி மகளிர்—தம்மைக் கண்டோருடைய நெஞ்சை வருத்தமுறுவித்துப் பொருள்வாங்குதலையுடைய பரத்தையர்,

584 - 5. [யாம கல்யாழ் நாப்ப ணின்ற, முழவின் மகிழ்ந்தன ராடி:] யாமம் கல் யாழ் நாப்பண் தாழ்பு அயல் மீனே குரல் கடுப்ப நின்ற முழவின் மகிழ்ந்தனர் ஆடி—முதற்சாமத்தில் வாசித்தற்குரிய, கன்றுகிய யாழ்களுக்குரடுவே அவற்றிரீர்கேற்பத்தாழ்ந்த தம்வயிற்செறிந்த ஓசையையொக்கின்ற முழவாலே மனமகிழ்ந்தாடி,

தாழ்பெயற் மீனேகுரல் கடுப்ப (560) என்று முன்னர்வந்ததனை இவ்விடத்துக்கூட்டுக.

585 - 6. குண்டு நீர் பனி துறை குவவு மணல்—ஆழ்ந்த நீரினையுடைய குளிர்ந்த துறையிடத்துக் குவிந்த மணலிலே,

மூனை—வெறுத்து.

586 - 7. [மென்றளிர்க், கொழுங்கொம்பு கொழுதி:] கொழு கொம்பு மெல் தளிர் கொழுதி—கொழுவிய கொம்புகளினின்ற மெல்லிய தளிர்களைப் பறித்து,

587 - 8. [நீர்னை மேவர, நெடுந்தொடர்க் குவளை வடம்புற வடைச்சி:] குவளை நீர் ரனை மேவர நெடு தொடர் வடம்பு உற அடைச்சி—குவளையை நீர்க் கீழரும்புகளோடே பொருந்துதல்வரக் கட்டின நெடியதொடர்ச்சியை வடம்பி லேவிழும்படி உடுத்து.

589. மணம் கமழ் மனை தொறும் பொய்தல் அயர—மணமாறுகின்ற மனைதோறும் சென்று பொருடருதற்குரிய இளையரோடு விளையாடுதலைச்செய்ய,

அங்ஙனம் விளையாடிவருகிறித்து உறவுகொண்டு பொருள்வாங்குதல் அவர்க்கு இயல்பு.

வானவமகளிர்மான (582) நெஞ்சுகடுக்குறூஉக் கொண்டிமகளிர் (583) பல ருடன்றுவன்றிப் (580) குவவுமணலிலே (586) முழவின் மகிழ்ந்தனராடி (585) அதினைமுனைஇக் (586) குவளையையடைச்சிக் (588) கோதையை (562) விசும்புகமழப் (561) பிறக்கிட்டு (562) இளம்பல்செல்வரைக் (572) கூட்டி (570) முயங்கிப் (569) பின்னர்க் கவவுக்கரந்து (570) வளர்தபவாங்கித் (572) தாதுண்டுதறக்கும் (573) வண்டினமான (574) இன்றுயில்துறந்து (575) பின் னரும் மிகுகலமெய்திச் (565) சுரும்புபடுபன்மலரையும் (566) · எனைப்பூக்களை யும் புதன்மானவேய்ந்து (568) புதுமலர் தெருவுடன் கமழத் (564) தொடியை வீசி (563) மணங்கமழ் மனைதொறும் (589) பறவைபோலச் (576) சென்று பொய்தலயர (589) எனக்கூட்டுக.

செல்வரும் பிறரும் மேவப்பட்ட (577) அணங்குடைநல்ல இல்லிலே மணம்புணர்ந்தோங்கிய (578) பாசிழைமகளிர் (579) ஒண்சுடர்விளக்கத்தே

* பி - ம். நெஞ்சு நடுக்குறூஉங் கொண்டி மகளிர்.

(580) சிரியாழைப் (559) பண்ணுப்பெயர்த்து (560) வீழ்துணைதழீஇ (561) காணுங்கொன (558) எனக்கூட்டுக.

590 - 91. கணம் கொள் அவுணர் கடந்த பொலம் தார் மாயோன் மேய ஓண மல் லான்—நிரட்சியைக்கொண்ட அவுணரைவென்ற பொன்னுஞ்செய்த மாலையினையுடைய மாலையையுடையோன் பிறந்த ஓணமாயினான்ஞாளில் ஊரி நுள்ளாரெடுத்த விழவிடத்தே,

592 - 5. [கோணர் நின்ற வடுவாழ் முகத்த, சாணர் நின்ற சமந்தாங்கு தடக்கை, மறங்கொள் சேரி மாறுபொரு செருவின், மாரு றந்ற வடுப்படு நெற்றி:]

மறம் கொள் சேரி மாறு பொரு செருவில் மாரு றுற்ற வடு படு நெற்றி—இற்றைநாட் போர்செய்துமென்றருகு மறத்தைக்கொண்டிருக்கின்ற தெருவுகளில் தம்மிற்றாம் மாறுய்ப்பொருகின்ற போரின்கண்ணே கின்ற அடிமாறுமை யாற்பட்ட வடுவழுந்தின நெற்றியினையும்,

596. சுரும்பு ஆர் கண்ணி பெரு புகல் மறவர்—சுரும்புகள்கிறைந்த *போர்ப்பூவினையும் பெரியகிருப்பத்தினையுமுடைய மறவர்,

அத்திருளாவிற்பொரும் †சேரிப்போர்கூறினர், அவ்வூர்க்கு இயல்பென்ற.

597. [கடுங்களிறூட்டலின்:] கோணம் நின்ற வடு ழுந் முகத்த (592) சாணம் நின்ற சமம் தாங்கு தட கை (593) கடு களிறு ஓட்டலின்—தோட்டி வெட்டின வடு அமுந்தின முகத்தையுடையவாய்க் கொலைபழக்கும் போர்யானை பலகாலுமெடுத்தலால் தழும்பிருந்த போரைத்தாங்கும் பெரியகையினையுடைய கடியகளிற்றை ஓட்டுகையினலே,

597 - 8. [காணுங ரிட்ட, நெடுங்கரைக் காழக நிலம்பர லுறுப்ப:] காணுநர் நெடு கரை காழகம் இட்ட பால் நிலம் உறுப்ப—அவ்வியானைக்குமுன னேயோடி அதன்விசையைக்காணும் பரிக்காரர் அவ்வியானை பிடித்துத்தொன் ஞங்காலத்து மேல்வாராமல் அஞ்சி மீளுதற்குச் சமைப்பித்து நெடிய கரையையுடைய நீலநிறத்தையுடையபுடைவைகளிலே வைத்துச் செ்தினகப்பணம் நிலத தேயிடத்து கால்களைப் ‡பொதுக்கும்படி,

நெருஞ்முள்ளுப்போல மூனைபட இரும்பால் நிரைச்சமைத்துத் தூவற்கு யானையஞ்சுமென்று அவர்மடியிலேவைத்த கப்பணத்தைப் பால்போறலிற் பரலென்றார்; §"வேழங், காய்ந்தனன் கடவுஞ்சி கப்பணஞ் தெறிஞனே" என்றார்பிறரும்.

---

* போர்ப்பூ - தும்பைப்பூ; (பு - வெ. பொதுவியற். 2.)

† "கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனிற், கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தா, னிலைதாளான் காணுதே போதியோ பூம்பாவாய்" (திரு மயிலை. திருஞான. தே. 4.)

‡ பொதித்தல் - தூனீர்தல்; "அண்டத் தைப்பொதித் தப்புறத் தப்பினு லாடும்" (கம்ப. இரணியன். 4); இது பொதிர்த்தலெனவும் வழங்கும்; "மழைபொதிர்ப்பத் தேன்சொரிந்து" (பெரிய. 2778.)

§ சீவகசிந்தாமணி, 285.

599. கடு கள் நேறல் மிழ் நெய்த நிரிதர—கடியகட்டெளிவையுண்டு மிழ்ச்சியிக்குத் நிரிதலெய்ய,

ஓணகாளிற் (591) பொருது வடுப்படும் நெற்றி (595) முதலியவற்றை யுடைய மறவர் (596) மிழ்நெறந்த (599) பாலுறுப்பத் (598) நிரிதர (599) எனக்கூட்டுக.

600. கணவர் உவப்ப புதல்வர் பயந்த—தம்கணவர் இம்மைமறுமையிற் பெறும்பயன்பெற்றேமென்று மகிழும்படி பின்னேனோப்பெற்ற,

601. பனைத்து வந்து இன மூலி அமுதம் ஊற—பாலால்இடங்கொண் டேற்றிய இனியமூலி பால்சுரக்கும்படி,

602-3. [புலவுப்புனிறு நீர்ந்து பொலிந்த சுற்றமொடு, வளமனை மகளிர் குனகீ ரயர :]

புலவு புனிறு நீர்ந்து குனம் நீர் அயர—புலனுற்றத்தையுடைய சன்றணி மைநீங்கித் தெய்வத்தினருளால் ஓரிடக்கணமற்றக் குளத்துநீரிலே குளிக்கையி னலே,

கடு சூல் மகளிர் பேணி (603)—முதற்சூல்கொண்டமகளிர் இவ்வாறே இடுக்கணின்றிப் புதல்வர்ப்பயத்தல்வேண்டுமென்று தெய்வத்தைப்பரவிக் குறை நீர்ந்தபின்,

பொலிந்த சுற்றமொடு—மிக்க சுற்றத்தாருடனே,

வளம் மனை மகளிர்—செல்வத்தையுடைய மனைமகளிர்,

இல்லிருக்குங் குடிப்பிறந்த மகளிர்.

604. திவவு மெய் நிறுத்து செவ்வழி பண்ணி—வலிக்கட்டினை யாழிற் றண்டிலேகட்டிச் செவ்வழியென்னும் பண்ணைவாசித்து,

திவவுக் கூறவே அதினரம்பும் கூறினர்.

605. குரல் புணர் நல் யாழ் முழவோடு ஒன்றி — குரலென்னுநாம்பு கூடின வன்னம் நன்றுகிய யாழுடனே முழவும்பொருந்தி,

606 தண் நீர் ஆருளி இரட்ட—மெல்லியநீர்மையினையுடைய நிறுபறை யொலிப்ப,

பலவுடன்—பூசைக்குவேண்டும் பொருள்கள் பலவற்றுடனே,

607. ஒண் சுடர் விளக்கம் முன்தர—ஒள்ளிய சுடர்விளக்கம் முற்பட,

மடையொடு—பாற்போனகமுதலிய சோறுகளை,

608. நல் மா மயிலின் மென்மெல இயலி—நன்றுகிய பெருமையை யுடைய மயில்போலே மெத்தென மெத்தென நடந்து,

609. [டெடுத்ருன் மகளிர் பேணிக் கைதொழுது :]

கை தொழுது—கையாற்றொழுதி,

610. [பெருந்தோட் சாலினி மடுப்ப வொருசார்:]

பெரு தோள் சாலினி மடுப்ப—பெரிய தோளினையுடைய *தேவராட்டியோடே மடுப்ப,

வளமனைமகளிர் சிலர் (603) புதல்வர்ப்பயந்து (600) புனிறுநீர்ந்து (602) குளநீராடுதலாலே (603) அதுகண்டு கடுஞ்சூன்மகளிர் பேணிக் (609) குறை நீர்ந்தபின் பொலிந்தசுற்றத்தோடே (602) பலவுடன் (606) சாலினியோடே (610) பண்ணி (604) ஒன்றி (605) இரட்ட (606) இயலிச்சென்று (608) கைதொழுது (609) மடையை (607) மடுப்ப (610) எனக்கூட்டுக.

610. ஒருசார்—ஒருபக்கம்,

611. அரு கடி வேலன் முருகொடு வளைஇ—அரிய அச்சத்தைச்செய்யும் வேலன் இவ்விடுக்கண் முருகனல்வந்ததெனத் தான்கூறிய சொல்லின்கண்ணே கேட்டோரை வளைத்துக்கொண்டு,

†பின்னேயார்வேலெடுத்தலின், வேலனென்றார். என்றது - ‡கழங்கு வைத்துப் பின்னேயாரால்வந்ததென முற்கூறிப் பின் வெறியாடுவனென்று ஆடு முறைமை கூறிற்று.

611. அரி கூடு இன் இயம் கறங்க — அரித்தெழும்ஓசையையுடைய சல்லி காடிமுதலியவற்றோடேகூடின இனிய ஊதுவாச்சியங்கள் ஒலியாநிற்க,

612 - 4. [நோய்நிறுத்துக், கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின், சீர்மிகு நெடுவேட் பேணி:]

கார் மலர் குறிஞ்சி சூடி—கார்காலத்தான் மலராயுடையவாகிய §குறிஞ்சியைச்சூடி,

கடம்பின் சீர் மிகு நெடுவேள் நோய் நிறுத்து பேணி—கடம்புசூடுதலால் அழகுமிகுகின்ற முருகனைச் செவ்விதாகத் தன்மெய்க்கண்ணேநிறுத்தி வழிபடுகையினாலே,

‖தழூஉ பிணையூஉ—மகளிர் தம்முட்டழுவிக் கைகோத்து,

---

* தேவராட்டி - தெய்வமேறப்பெற்றவள்; "காடுபலி மஞ்ழ லூட்டத், தலை மரபின் வழிவந்த தேவ ராட்டி தினையழைமின்" (பெரிய. கண்ணப்ப. 47.)

† பின்னேயாரொன்றது, முருகக்கடவுளே; இப்புத்தகம் 39 - ஆம் பக்கம் பார்க்க.

‡ கழங்குவைத்து - கழற்கொடிக்காயைவைத்து; வேலன் கழங்குவைத்துப்பார்த்தலே, "கட்டினும் கழங்கினும்" (தொல். களவு. சூ. 24) என்பதனுரையாலும், "பெய்ம்மணன் முற்றம்" (ஐங்குறு. 248) என்பதனாலுமுணர்க.

§ குறிஞ்சி - குறிஞ்சிப்பூ.

‖ "மாதர் மகளிரு மைந்தரு மைந்தற்றந், தாதெரு மன்றத் தயர்வர் தழூஉ" (கலி. 103.)

615. *மன்றுதொறும் நின்ற குரவை—மன்றுதோறும்நின்ற குரவைக் கூத்தும்,

சேரிதொறும்—சேரிதோறுநின்ற,

616. உரையும்—புனைந்துரைகளும்,

பாட்டும்—பாட்டுக்களும்,

ஆட்டும்—பலவகைப்பட்ட கூத்துக்களும்,

விரைஇ—தம்மிற் கலக்கையினாலே

617. வேறு வேறு கற்பலி—வேறுவேறுகிய ஆரவாரம்,

வெறி கொள்பு மயங்கி—ஒழுங்குகொண்டு மயங்கப்பட்டு,

618. பேர் இசை †நன்னன் பெறும் பெயர் நன்னூள்—பெரியபுகழை யுடைய நன்னன்கொண்டாடுகின்ற பிறந்தநாளிடத்து,

அவன்பெயரை அங்காள் பெறுதலின், பெயரைப்பெற்ற நன்னூளென்றார்.

619. சேரி விழவின் ஆர்ப்பு எழுந்தாங்கு—சேரிகளிலுள்ளார் கொண் டாடுகின்ற விழாவாலே ஆரவாரமெழுந்தாற்போல.

620. முந்தை யாமம் சென்ற பின்றை—முற்பட்டசாமம் கடந்தபின்பு,

ச † (583) பொய்தலயரப் (589) பாசிழைமகளிர் (579) வீழ் துணைதழுவு (591) நாணுக்கொன (578) மறவர் (596) மிழ்திறந்துதிரிதரக் (599) கடுஞ்சூன்மகளிர் கைதொழுது (609) மடுப்ப ஒருசார் (610) நெடுவேட் பேணுகையினாலே (614) மன்றுதொறுநின்ற குரவையும் சேரிதொறுநின்ற (615) உரையும் பாட்டும் ஆட்டும் விரவுகையினாலே (616) வேறுவேறுபட்ட கம்பலி (617) சேரிவிழவின் ஆர்ப்பெழுந்தாங்கு (619) வெறிகொள்புமயங்கப் பட்டு (617) முந்தைபாமஞ்சென்றபின்றை (620) எனக்கூட்டுக.

ஒருசார் (610) விரைஇ (616) என்க.

621. பனிலம் கலி அவிந்து அடங்க—சங்குகள் ஆரவாரமொழிந்து அடங்கிக்கிடக்க,

621 - 2. காழ் சாய்த்து நொடை நவில் நெடு கடை அடைத்து—சட்டக் காலைவாங்கிப் பண்டங்களுக்கு விலைகூறும் நெடியகடையையடைத்து.

622 - 3. மட மதர் ஒள் இழை மகளிர் பள்ளி அயர—மடப்பத்தினையும் செருக்கினையும் ஒள்ளிய அணிகலங்களையுமுடைய மகளிர் துயிலுதலைச்செய்ய,

624 - 6. [நல்வரி யிருஅல் புரையு மெல்லடை, யயிருருப் புற்ற வாடமை விசயங், கவ்வொடு பிடித்த வகையமை மோதகம்:]

விசயம் ஆடு அமை நல் வரி இருஅல் புரையும் மெல் அடை—பாலிலே சமைத்தலமைத்த நல்லவரிகளையுடைய தேனிருலியொக்கும் மெல்லிய அடை யினையும்,

* "எருமன்றத்து, மாயவனுடன் நம்முளுடிய, பாலசரிதை நாடகங்களில், வேனெடுங்கட் பிஞ்ஞையொடாடிய, குரவையாடுதும்" (சிலப். 17); "இனியா சொடுமன்றிற் குரவைபிணைந்தமால்" (பெரியதிருமொழி, 11. 2. 1.)

† நன்னன் - ஒரு குறுநிலமன்னன்.

கவலோடு அயிர் பிடித்த வகை அமை உருப்பு உற்ற மோதகம்—பருப்பும் தேங்காயுமாகிய *உள்ளீடுகளோடே †கண்டசருக்கரைகூட்டிப்பிடித்த .வகுப் பமைந்த வெம்மைபொருந்தின அப்பங்களையும்,

627. நீ சேறு கூவியர் தூங்குவனர் உறங்க—இனிய பாகோடு சேர்த் தக்கரைத்த மாவினையுமுடைய அப்பவாணிகரும் அவற்றேடையிருந்து தூங்கு வனாயுறங்க,

628. விழவின் ஆடும் வயிரியர் மடிய—திருநாளின்கண்ணே கூத்தாடிய கூத்தர் அதனையொழித்து துயில்கொள்ள,

629. பாடு ஆன்று அவிந்த பனி கடல் புரைய—ஒலிகிறைந்தடங்கின குளிர்ந்த கடலையொக்க,

630. பாயல் வளர்வோர் கண் இனிது மடுப்ப—படுக்கையிலே துயில் கொள்ளுவோர் கண் இனிதாகத் துயில்கொள்ள,

631. [பாளுட் கொண்ட கங்கு லிடையது:]

பால் நாள் கொண்ட கங்குல்—பதினேந்தாநாழிகையை முடிவாகக்கொண்ட கங்குல்.

632-3 [பேயு மணங்கு முருவுகொண் டாய்கோற், கூற்றக் கொஃ தேர் கழுதொடு கொட்ப·]

பேயும் அணங்கும் உருவுகொண்டு கழுதொடு கொட்ப—பேய்களும் வருத துந்தெய்வங்களும வடிவுகொண்டு கழுதுடனே சுழன்றுதிரிய,

கழுது, பேயில் ஒருசாதி.

ஆய் கோல் கூற்றம் கொல் தேர் அச்சம் அறியாது எமமாகிய (652) மதுரை (699) யெனக்கூட்டி, யாக்கைநிலையாதென்றறிந்து மறுமைக்குவேண்டு வன செய்துகொண்டமையின, அழகிய கோலையுடைய கூற்றத்தின் கொலைக்கு அஞ்சாமற் காவலுண்டாயிருக்கின்ற மதுரையென்க

‡"கரும்பாட்டிக் கட்டி நெறகாலைக் சொண்டார், தருமம்பெழுந்து வேங காற் முயாண் டுழவர், வருந்தி யுடற்பின் பயன்கொண்டார் கூற்றம், வருங காற் பரிவ நிலர்" என்றார் பிறரும். கொஃதேர் - காலசக்கரம்.

634. இரு பிடி மேஎந்தோல் அன்ன இருள் சேர்பு—காரியபிடியின்கண் ணேமேலின தோலையொத்த கருமை தமக்கு இயல்பாகச்சேரப்பட்டு,

இருள் - கருஞ்சட்டையுமாம்.

635. கல்லும் மரனும் தணிக்கும் கூர்மை நிலன் அகழ் உளியர் (641)—கல்லையும் மரத்தையுமறுக்கும் கூர்மையையுடைய நிலத்தையகழும் உளியை புடையராய்,

---

* உள்ளீடு - உள்ளேஇட்பெற்றபொருள்கள்.

† கண்டசருக்கரை - கற்கண்டு; ஒருவகைச்சருக்கரையுமாம்.

‡ நாலடியார், அறன்வலியுறுத்தல், 5.

மிக்க அழகுள்ள காலத்து இடைப்பட்ட கற்களுக்கும் மாங்களுக்கும் வாய் மடியாதென்றார்.

636. தொடலே வாளர்—தூக்கிட்ட வாளினையுடையராய்,

தொடுதோல் அடியர்—செருப்புக்கோத்த அடியினையுடையராய்

637 - 41. [குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச், சிறக்க கருமை நுண்வினை நுணங்கற, னிறங்கவர்ப் புனைந்த நீலக் கச்சினர், மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர், கிலனக ழுளியர் :]

சிறந்த கருமை நுண் வினை நுணங்கு அறல்—மிக்கருமையினையுடைய நுண்ணிய தொழில்களையுடைய நுண்மை தன்னிடத்தே பற்றுதலையுடையது,

என்றது இறைமுழுத்த சேலையென்றவாறு ; ஆருபெயர்.

*குறங்கிடை பதித்த கூர் நுனை குறு பிடி—அச்சேலைகட்டின மருங்கிற் குறங்கிடைத் தெரியாமற் கிடக்கும்படியழுத்தின கூரிய முனையினையுடைய *சிலசொட்டை,*

நிறம் கவர்பு புனைந்த நீலம் கச்சினர்—பலநிறங்களைத் தன்னிடத்தே கைக் கொண்டு கைசெய்யப்பட்ட நீலநிறத்தையுடைய கச்சினையுடையராய்,

என்றது :—சட்டின சேலையிடத்தே செருகித் துடையுடனேசேர்த்து கிடக்குஞ் சொட்டையின்மேலே கட்டின நீலக்கச்சினென்றவாறு. அதுதெரியாமல் தடையுடனே சேர்த்துகிடத்தலிற் குறங்கிடைப்பதித்தவென்றார்.

மெல் நூல் வணி பல் மாண் சுற்றினர்—மெல்லிய நூலாற்செய்த வணியை அரையிலே பலவாய் மாட்சிமைப்படச்சுற்றிய சுற்றினையுடையராய்,

மதிற்றலையிலே உள்ளேவிழவெறிந்தாற் கைபோல மதிலேப்பிடித்துக்கொள்ளும்படி இரும்பாற்சமைத்தனைத் தலையிலேயுடைய நூற்கயிற்றை உள்ளே விழவெறிந்து அதனைப் புறம்பேநின்று பிடித்துக்கொண்டு அம்மதிலே ஏறுவராகலின், வணியென்றார்.

641. *கலன் ரசைஇ கொட்கும்—பேரணிகலங்களை கச்சுதலாலே அவற்றை எடுத்தற்கு இடம்பார்த்துச் சுழன்றுநிரியும்,*

642. *கண் மாறு ஆடவர் ஒடுக்கம் ஒற்றி—விழித்தகண்இமைக்குமளவிலே மறைகின்ற கள்வர் ஒதுங்கியிருக்கின்ற இடத்தை †வேய்த்து.*

செருப்பைத்தொட்டுக் கச்சைக்கட்டி நூலேணியைச்சுற்றி உளியையெடுத்து வானேப்பிடித்துக்கொட்குங்கள்வரென வினையேச்சவினைக்குறிப்புமுற்று வினையெச்சமாய் நிற்குமாறு, ‡"முன்னத்தி னுணருங் களவியமுளவே" என் றஞ்சூத்திரத்தானுணர்க.

---

* சிலசொட்டை - ஒருவகைவளைவுக்கத்தி; உடைவாளுமாம் ; "சொட்டைவாள் பரிசை" (வி - பாரதம். திருப்பன. 101)

† வேய்த்து - பிறர்தெரிந்து கொள்ளாதபடி அறிந்து.

‡ நோல்காப்பியம், எச்சவியல், 63.

643. வய களிறு பார்க்கும் வய புலி போல ஒற்றி (642) —வலியகளிற்றை இரையாகப்பார்க்கும் வலியபுலியைப்போலே வேய்க்கையிலுலே,

644. துஞ்சா கண்ணர்—துயில்கொள்ளாத கண்ணேயுடைவராய்,

அஞ்சா கொள்கையர்—பேய்முதலியவற்றிற்கு அஞ்சாத கோட்பாட்டையுடையராய்.

645. அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர்—களவிற்றொழிலேயறிந்தவர்களாலே புகழப்பட்ட களவிற்றொழிலே ஆளுந்தன்மையையுடையராய்,

645 - 7. [*செறிந்த, நூல்வழிப் பிழையா நுணங்குநண் டோர்ச்சி, பூர் காப் பாளர் :] நுணங்கு செறிந்த நூல் வழி பிழையா நுண் தோர்ச்சி ஊர் காப் பாளர் – நுண்மைசெறிந்த நூலின்வழியைத்தப்பாத நுண்ணிய ஆராய்ச்சியையுடைய ஊரைக் காத்தற்றொழிலே ஆளுதலேயுடையராய்.

†களவுகாண்டற்கும் காத்தற்குங்கூறிய நூல்கண்போவாரென்றார்.

நூல்வழிப்பிழையா வூரெனக்கூட்டி நூலிற்சொன்னபடி சமைந்தவூரென்றுமாம்.

ஊக்க அரு கணையினர்—தப்பக்கருதிமுயல்வார்க்குத் தப்புதற்கரிய அம்பினையுடையராய்.

648 - 9. தேர் வழங்கு தெருவில் நீர் நிரண்டு ஒழுக மழை அமைந் தூற்ற அரை நாள் அமயமும்—தேரோடுந்தெருவின்கண்ணே நீர்நிரண்டொழுகும்படி மழைமிகப்பெய்த நடுநாளாகிய பொழுதிலும்,

650. அசைவிலர் எழுத்து நயம்வந்து வழங்கலின்—காவலில் தப்பிலராய்ப்போந்து விருப்பந்தோன்றி உலாவுகையிலுலே,

651. [கடவுள் வழங்குங் கை று கங்குலும் :] இடையது (631) கடவுள் வழங்கும் கை அறு கங்குல் – இரண்டாஞ் சாமத்திற்கும் நான்காஞ் சாமத்திற்கும் நடுவிடத்ததாகிய தெய்வங்களுலாவுஞ்செயலற்றகங்குல்,

உம்மையை யாமமுமெனப் பின்னேகூட்டுக.

652 - 3. [அச்ச மறியா தேம மாகிய, மற்றை யாமம் பகலுறக் கழிப்பி :] மற்றையென்பதனே மூன்றையாமஞ் சென்றபின்றை யென்பதன்பின்னும் மூன்றுஞ்சாமத்தினேடுங் கூட்டுக.

அச்சமறியாதேமமாகிய என்றும், மற்றையென்றும் யாமமென்றும் பிரித்து முன்னே கூட்டுக.

பகல் உற கழிப்பி – இங்ஙனம் பகுத்தலுறும்படி போக்கி,

---

* பி - ம். செறிந்த.

† களவுநூல்-தமிழ்நூல் - காமவுடனூலெனவழங்கும்; இதனேக்கூறுநூல் ஸ்தேயசாஸ்திரமெனப் பெயர்பெறுமென்றும், அந்நூலேச்செய்தவர் சுகரென்பவரின் ஆசிரியராகிய கரீஸரென்பவரென்றும் வடமொழியாளர் கூறுவர்.

மூன்றை யாமஞ் சென்ற பின்றை (620) மற்றைப் (633) பானட்கொண்ட கங்குல் (631) யாமத்தையும் மற்றை (653) இடையதனிய (631) கடவுள்வழங் குங் கங்குல் (651) யாமத்தையும் (653) கலிபவிர்தடங்கப் (621) பள்ளியபர (623) உறங்க (627) வயிரியர்மடியப் (628) பேயும் அணங்கும் உருவுகொண்டு (632) கழுதாடுகொட்ப (633) ஊர்காப்பாளர் (647) புலிபோலக் (643) கண் மாருடவர் ஒடுக்கம் ஒற்றுகையினேலை (642) கண்ணாரய்க் கொள்ளைபராய் (644) ஆண்மையாரய்க் (645) கணையராய் (647) அரைநாளமயமும் (649) எழுத்து ரயம்வந்தவழங்கலிற் (650) பனிக்கடல்புரையப் (629) பாயலில்வளர் வோ கண்இனிதுமடிப்பப் (630) பகலுறக்கழிப்பி (653) எனமுடிக்க

இங்ஙனம் கழிக்கின்றது, இரப்பொழுதென்றுணர்க.

654. [போதுபிணி விட்ட கமழ்நறும் பொய்கை:] பிணி விட்ட போது கமழ் நறு பொய்கை—கனையவிழ்ந்த பூக்கள்நாறும் நறிய *பொய்கைகளிலே,

655. [தாதண் டும்பி போதுமுரன் ருங்கு:] போது தாது உண் தும்பி முரன்றுங்கு—அப்பூக்களில் தாதையுண்ணுந்தும்பிகள் பாடினுற்போல,

656. [ஓத லர்த்தணர் வேதம் பாட:] †வேதம் ஓதல் அந்தணர் பாட—வேதத்தை முற்ற ஒதுதலேயுடைய அந்தணர் வேதத்தில் தெய்வங்களைத் துதித்தவற்றைச் சொல்ல,

657 - 8. [நீரினிதுகொண்டு நரம்பினி தியக்கி. யாழோர் மருதம் பண்ண:] யாழோர் நீர் இனிது கொண்டு நரம்பு இனிது இயக்கி மருதம் பண்ண—யாழோர் தானவறுநிலை இனிதாக உட்கொண்டு நரம்பை இனிதாகத்தெறித்து மருதத்தைவாசிக்க,

658 - 9. காழோர் கடு களிறு ‡கவளம் கைப்ப—பரிக்காரர் கடியகளிற் றைக் கவளத்தைத்§தீற்ற,

659 - 60. நெடு தேர் பீணை ||நிலை புரவி புல் உண ||தெவிட்ட—நெடிய தேரிலேபூணும் பர்தியில் நிற்றலேயுடைய குதிரைகள் புல்லாகிய உணவைக் ¶குதட்ட,

661. பல் வேறு பண்ணியம் கடை மெழுக்கு உறுப்ப—பண்டம்விற்பார் பலவாய் வேறுபட்ட பண்டங்களேயுடைய கடைகளே மெழுகுதலேச்செய்ய,

---

* பொய்கை - மானிடராக்காத நீர்நிலே.

† மதுரையிற் பண்டைக்காலத்திலேவிடியலில் அந்தணர் வேதமோதிவரு தலென்பதைப் பின்னுள்ள பரிபாடலுறுப்பும் வலியுறுத்தும்: "பூவினுட் பிறந் தோ னுவினுட் பிறந்த நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப, வேம வின்றுயி லெழுத லல்லதை, வாழிய வஞ்சியும் கோழியும் போலக், கோழியி னெழாதெம் பேரூர் துயிலே." பரிபாடல், பக்கம், 174 - 5.

‡ பி - ம். கவழமகைப்ப.

§ தீற்ற - உண்பிக்க; "தீற்றுதோ நாய்சட்டா னல்ல மூயல்" (பழ. 128.)

|| பி - ம். தெவிட்டி. ¶ குதட்ட - மெல்ல.

662. கள்ளோர் *களி சொடை தூவல்—கள்ளெவித்போர் களிப்பினை யுடைய கள்ளிற்கு விலைசொல்ல,

களி, ஆகுபெயர்.

662 - 3. †இல்லோர் நயந்த காதலர் கவவு பிணி தஞ்சி—கற்புடை மகளிர் தாங்கள் விரும்பின கணவருடைய முயக்கத்திற் பிணிப்பாலே தூயில் கொண்டு,

664. புலர்ந்து யிரி விடியல் எய்த விரும்பி—இருள்மாய்ந்து கதிர்விரி கின்ற விடியற்காலத்தைப் பெறுகையினாலே அக்காலத்து இல்லத்திற்செய்யத் தகுவனவற்றைச் செய்தற்குவிரும்பி,

665. ‡கண் பொரா எறிக்கும் மின்னு கொடி புரைய—கண்ணே வெறி யோடப்பண்ணினிலங்கும் மின்னெனுங்கை யொப்ப,

666. §ஒள் பொன் அவிர் இழை தெழிப்ப இயலி—ஒள்ளிய பொன்னை செய்தலிளங்குஞ் சிலம்புமுதலியன ஒலிப்பப் புறம்போதுகையினாலே,

667. திண் சுவர் நல் இல் கதவம் கரைய—திண்ணியசுவர்களையுடைய நல்ல அகங்களிற் கதவுகளொலிப்ப,

668 - 9. உண்டு மிழ் தட்ட மழலை காரில் பழ செருக்காளர் தழங்கு குரல் தோன்ற—கள்ளையுண்டு களிப்பினைத் தம்மிடத்தேதடுத்துக்கொண்ட மழ லையார்த்தையையுடைய காவினையுடைய பழையகளிப்பினையுடையாருடைய முழங்குகின்ற குரல்கள் தோன்ற,

670. சூதர் வாழ்த்த மாகதர் நுவல—நின்றேத்துவார்வாழ்த்த இருந்தேத் துவார் புகழைச்சொல்ல,

671. வேதாளிகரொடு காழிகை இசைப்ப—வைதாளிகர் சுத்தம் துறைக ளியனவற்றையிசைப்ப காழிகைசொல்லுவார் காழிகைசொல்ல,

காழிகை, ஆகுபெயர்.

672. இமிழ் முரசு இரங்க—ஒலிக்கின்ற பள்ளியெழுச்சிமுரசு ஒலிப்ப,

ஏறு மாறு சிலைப்ப—ஏறுகள் தம்முள்மாறுபட்டு முழங்க,

673. பொறி மயிர் வாரணம் வைகறை இயம்ப—பொறியினையுடைய மயிரினையுடைய கோழிசேவல் விடியற்காலத்தை அறிந்துகூவ,

674 - 5. யானையங்குருவின் சேவலொடு சாமர் அண்ணம் கரைய—வண டாழ்ங்குருகினுடைய சேவல்களோடே விருப்பத்தையுடைய அன்னச்சேவல களும் தமக்குரிய பேடைகளே யழைக்க,

அணி மயில் அகவ—அழகியமயில்கள் பேடைகளையழைக்க,

676. பிடி புணர் பெரு களிறு முழங்க—பிடியோடேகூடின பெரிய யானைகள் முழங்க,

---

* பி - ம். கள்கொடை
† பி - ம். நல்லோர்நயந்த.
‡ பி - ம். கண்பொருபெறிக்கும்.
§ பி - ம். ஒண்ப லவிரிழை.

676 -7. [முழுவலிக், கூட்டுறை வயமாப் புலியொடு குழும:] வய மா கூடு உறை முழு வலி புலியொடு குழும—காடிமுதலிய வலியவிலங்குகள் கூட்டிலேயுறைகின்ற மிக்கவலியையுடைய புலியுடனே முழங்க,

678. வானம் நீங்கிய நீல் நிறம் விசும்பின்—ஆகாயத்தைக்குவடிவின் றென்னும் தன்மைநீங்குதற்கு மேகபடலத்தால் நீலநிறத்தையுடைய ஆகாயத் தின்கண்ணே,

இனிச் செக்கர்வானம்போன விசும்பென்பாருமுளர்.

679. மின்னு நிமிர்ந்தனையர் ஆகி — மின்னுநடங்கின தன்மையினை யுடையராய்,

உறவு மகிழ்ந்து—மதுவையுண்டு,

680 - 81. மாண் இழை மகளிர் புலர்ந்தனர் பரிந்த பரூஉ காழ் ஆரம் சொரிந்த முத்தமொடு—மாட்சிமைப்பட்ட பேரணிகலங்களையுடைய மகளிர் கணவரோடேபுலர்ந்தனராயறுத்த பருத்தலையுடைய வடமாகிய ஆரஞ்சொரிந்த முத்தத்தோடே,

மகளிர் மகிழ்ந்து புலர்ந்தனராய்ப் பரிந்த முத்தமென்க.

682. [பொன்சுடு நெருப்பி *னிலமுக் கென்ன:] பொன் சுடு நெருப்பு உக்க நிலம் என்ன—பொன்னையுருக்குகின்ற நெருப்புச்சிந்தின நிலம்போல.

என்றது - கரியும் தழலும் பொன்னுஞ் சிந்திக்கிடந்தாற்போல வென்ற தாம்.

683. [அம்மென் †குரும்பைக் காய்படு பிறவும்:]

பிறவும்—முத்தொழிந்த மாணிக்கமும் மரகதமும் பொன்னும் மணிகளும்.

அம் மென் குரும்பை காய்—அழகிய மெத்தென்ற இளநீராகிய பச்சைப் பாக்கும்.

படு—விழுந்து,

684. தரு மணல் முற்றத்து—கொண்டுவந்திட்ட மணலையுடைய முற் றத்தே,

அரி ஞிமிறு ஆர்ப்ப—வண்டுகளும் மிஞிறுகளும் ஆரவாரிப்ப.

685. மெல் பூ செம்மலொடு நல் கலம் சிப்ப—மெல்லிய பூவாடல்களுட னே நல்ல பூண்களையும் பெருக்கிப்போகடும்படி.

முத்தத்தோடே பிறவும் காயும் முற்றத்தேவிழுகையினலே அவற்றையும் செம்மலோடே கலங்களையும் அரிமிஞிறார்ப்பச் சிப்பவென்க.

686. இரவு தலை பெயரும் ஏமம் வைகறை—இராக்காலம் தன்னிடத் தில்நின்றும்போகின்ற எல்லாவுயிர்க்கும் பாதுகாவலாகிய விடியற்காலத்திலே,

* பி - ம். நிலம்படுபுக்க. † பி - ம். குருப்பைக்காயும்.

பாடப் (656) பண்ணைக் (658) கைப்பத் (659) தெவிட்ட (660) உறப்ப (661) முலைக் (662) கரைபத் (667) தோன்ற (669) வாழ்த்த நுவல (670) இசைப்ப (671) இரங்கச் சிலைப்ப (672) இயம்பக் (673) கரைய அலை (675) முழங்கக் (676) குழுமச் (677) சிப்பத் (685) தலைப்பெயருமெனமுடிக்க.

687 - 8. மை படு பெரு தோள் மழவர் ஓட்டி இடைப்புலத்து ஒழிந்த ஏற்று கோடு யானை — பிறர்தோள் குற்றப்படுதற்குக்காரணமான பெரிய தோளையுடைய மழவரைக்கெடுத்து அவர்விட்டுப்போகையிலுலே போர்க்களத் தேகின்ற ஏற்றினகொம்பினையுடைய யானைகளும்,

*மழவர் - சிலவீரர்.

689. பகை புலம் கவர்ந்த பாய் பரி புரவி—பகைவர்நாட்டிலே கைக் கொண்டுவந்த பாய்ந்துசெல்லும் செலவினையுடைய குதிரைகளும்.

690 - 92. [வேல்கோ லாக வாள்செல நூறிக், சாய்னெ முன்பீற் கடுஉ ஆட் கூளிய, ரூர்சுடு வினக்கிற் றந்த வாயமும்:] காய் சினம் முன்பின் கடுஉ கண் கூளியர் ஊர் சுடு வினக்கின் ஆள் செல நூறி வேல் கோல் ஆக தந்த ஆய மும் — எரிகின்ற சினத்தையுடைத்தாகிய வலியினையும் தறுகண்மையினையு முடையவாயக்கரையிலிருந்த வேட்டுவர் பகைவரூரைச்சுடுகின்ற வினக்கிலே நிரைகாத்திருந்தவீரரை மாளவெட்டி வேல்கோலாக அடித்துக்கொண்டுவந்த பசுத்திரளும்,

693. நாடு உடை நல் எயில் அணங்கு உடை தோட்டி— அகநாட்டைச் சூழவுடைத்தாகிய †முழுவரண்களிலிட்ட வருத்தத்தையுடைய கதவுகளும்,

694 - 5. நாள் தொறும் விளங்க கைதொழூஉ பழிச்சி நாள் தர வந்த லிழு தலம்—நாடொறும் தமக்குச்செல்வமிகுப்படியாகக் கையாற்றொழுதுவாழ் த்தி நாட்காலத்தே நிறையாகக்கொண்டுவர வந்த சிரியதலங்களும்,

அனைத்தும்—அத்தன்மையனபிறவும்,

696 - 7. கங்கை அம் பெரு யாறு கடல் படர்ந்தாங்கு அளந்து கடை அறியா மதுரை (699)—கங்கையாகிய அழகிய பெரியயாறு ‡ஆயிரமுகமாகக கடலிலேசென்றாற்போல அளந்து முடிவறியாத மதுரை.

வனம் கெழு தாரமொடு—வளப்பம்பொருந்தின அரும்பண்டங்களோடே,

698. [புத்தே ளுலகங் கவினிக் காண்வர:] புத்தேள் உலகம் காணவர் கவினி—தேவருலகம்வந்து காணுதலுண்டாகத் தான் அழகைப்பெற்று,

கூற்றக் கொக்கோர் (633) அச்சமறியாதேமாகிய (652) மிக்குப்புகழெய நிய மதுரையென்க.

---

* மதுரை. 395 - உரை.

† முழுவரண் - முழுமுதலரணம்; தொல். புறத்திணை. 10 - சூ. விசே வுரையைப்பார்க்க.

‡ "கங்கை, தலைகொ ளாயிர முகமுஞ் சுழல" (குல். "உழையின றீரும்")

பாடல்சான்ற சின்னுட்டு நடுவணதாய் (331) இருபெருவியமத்து (365) நாளங்காடிக்கம்பலே (430) காடார்த்தன்றேயாய் (428) அல்லங்காடி அழிதருநம் பலே (544) புன்னினிஞையெழுத்தற்றேயாய் (543) ஞாயிறு (546) குன்றஞ் சேருமையினுலே (547) மாலே (558) புகுந்து (557) பின்னர்நீக்க (558) மூன் றையாமஞ்சென்றபின்றை (620) மற்றைப் (653) பாஞுட்கொண்டகங்குல் (631) யாமத்தையும் மற்றை (653) யிடையதாகிய (631) கடவுள் வழங்குங்கங் குல் (651) யாமத்தையும் பகலுறக்கழிப்பிச் (653) சிப்பை (685) இராக்காலக் தன்னிடத்தினின்றும் போகின்றவைகறையிலே (686) வளங்கெழுதாரத்தோ டே (697) யானேயும் (688) புரவியும் (689) ஆயமும் (692) தோட்டியும் (693) கலமும் அணேத்திங் (695) சங்கையாறுகடம்படர்ந்தாற்போல (696) அளந்து முடிவறியாத (697) மதுரை (699) என்க

கலினிப் (698) புகழெய்திய (699) பெரும்பாணிருக்கை (342) முதலிய வற்றையுடைய மதுரை (699) என்க.

699. மிக்கு புகழ் எய்திய பெரு பெயர் மதுரை—மிகுத்துப் புகழைப் பெற்ற பெரும்பொருளையுடைய மதுரை,

பெரும்பொருளென்றது, வீட்டினே: *"பெற்ற பெரும்பெயர் பலர்கை யிரீஇய" என்றுர் பிறரும்.

700 - 701. [சினேதலே மணந்த சுரும்புபடு செந்தீ, யொண்பூம் பிண்டி யலிழ்ந்த காவில்·] சினே தலே மணந்த பிண்டி சுரும்பு படு செ நீ ஒன் பூ அலிழ்ந்த காவில்—கொம்புகள் தம்மிற்றலேகூடின அசோகினுடைய சுரும்புக ளுண்டாஞ் செந்தீப்போலும் ஒள்ளியபூவினிரிந்த பொழிலிடத்தே,

702 - 3. சுடர் பொழிந்து எறிய விளங்கு கதிர் ஞாயிறு இலங்கு கதிர் இள வெயில் தோன்றி அன்ன—ஒளியைச்சொரிந்து அத்தகிரியிலே போக விளங்குகின்ற கிரணங்களேயுடைய ஞாயிற்றினுடைய விளங்குங்கிரண்களின் இளவெயில் தோன்றினலொத்த மகளிர் (712),

என்றது, பூத்த அசோகம்பொழிலிடத்தே இளவெயில் எறித்தாற்போலப் †புணர்ச்சியாற்பெற்ற நிறத்தையுடைய மகளிரென்க.

704. [தமனியம் வனேஇய தாவில் விளக்கினே:] தாவு இல் தமனியம் வனேஇய விளக்கு இழை—ஓட்டற்ற பொன் நடுஅழுத்தினமணிகளேச்சூழ்ந்த விளக்குகின்ற பேரணிகலங்களேயும்,

705. கிலம் விளக்கு உறுப்ப மேதக பொலிந்து—நிலத்தையெல்லாம் விளக்குமுறத்தும்படி கற்புமேம்படப் பொலிவுபெற்று,

706. மயில் ஓர் அன்ன சாயல்—மயிலோடு ஒருதன்மைத்தாகிய மென் மையினேயும்,

---

* பத்துப்பாட்டு, 90.

† "தேன மொளியுந் திகழ சோக்கி" (பரி. 12: 21) என்பதன் உரை யைப் பார்க்க.

706 - 7. *மாவின் தளிர் வர் அன்ன மேனி—மாவின் தளிரினது அழகை யொத்த நிறத்தினையும்,*

707 - 8. *தளிர் புறத்து ஈர்க்கின் அருப்பிய நிதலையர்—தளிரினது புறத்தில் ஈர்க்குப்போலத் தோன்றிய நிதலையையுடையராய்,*

கூர் எயிறு—கூரிய எயிற்றினையும்,

709. *ஒள் குழை புணரிய வள் தாழ் காதின்—ஒள்ளிய மகரக்குழை பொருந்திய வளவிய தாழ்ந்த காதினையும்,*

710 - 11. [*கடவுட்கயத் தமன்ற சுடரிதழ்த் தாமரைத், தாதுபடு பெரும்போது புரையும்வாண் முகத்து:*] *கயத்து அமன்ற கடவுள் *சுடர் இதழ் தாமரை தாது படும் பெரு போது புரையும் வாள் முகத்து—குளத்திலே நெருங்கின †தெய்வங்கட்குரிய நெருப்புப்போலுமிதழ்களையுடைய தாமரையினது தாது தண்டாம்பெரியபூவை ஒக்கும் ஒளியினையுடைய முகத்தினையும்,*

712. *ஆய் தொடி மகளிர்—நன்குக ஆராய்ந்த தொடியினையுமுடைய மகளிருடைய,*

பொலிந்து (705) *நிதலையாய்* (708) *இழையினையும்* (704) *சாயலினையும்* (706) *மேனியினையும்* (707) *எயிற்றினையும்* (708) *காதினையும்* (709) *முகத்தினையும்* (711) *தொடியினையுமுடைய மகளிர்* (712) *என்க.*

712. *நறு தோள் புணர்ந்து—நறிய தோளைமுயங்கி,*

713. *கோதையின் பொலிந்த சேக்கை துஞ்சி—தூக்குமாலைகளா பொலிவுபெற்றபடுக்கையிலே துயில்கொண்டு.*

புணர்ந்து பின்னைத் துயிலுங்காலத்துத் தனியேதுயிலுதல் இயல்பென பதுதோன்றப் புணர்ந்து துஞ்சியென்றார்.

‡"*ஐத்துமூன் றடுத்த செல்வத் தமளியி னியற்றி*" *என்றார் பிறரும்.*

714. *திருந்து துயில் எடுப்ப இனிதின் எழுந்து—செல்வத்தைவினைந்து இன்புறுகின்ற பற்றுள்ளம், உறக்கத்தையுணர்த்துகையிலுலே அதுவினைத்த இனிதாகப் பின் எழுந்து,*

என்றது. தன்செல்வம் இடையறுதொழுகுதற்கு வேண்டுங் காரியங்களே விடியற்காலத்தே மனத்தானுராயவேண்டுதலின், துயிலெடுப்புக்கு இது காரண மாயிற்று: §"*வைகறை யாமம் துயிலெழுந்து தான்செய்யு, நல்லறனு மொண் பொருளுஞ் சிந்தித்து*" *என்றார் ஆசாரக்கோவையில்.*

இனி நன்றாகிய துயிலென்றுமாம்.

715 - 24. [*திண்கா ழார மீவிக் ||கதிர்விடு, மொண்கா ழாரங் கவைஇய மார்பின், வரிக்கடைப் பிரச மூசுவன மொய்ப்ப, வெருத்தந் தாழ்ந்த விரவுப்பூ*

---

* "சுடர்த்தாமரை" (மதுரை, 249.)
† "கடவு னொண்பூ" (பெரும்பாண். 290.)
‡ சிலகசிந்தாமணி, 838.
§ ஆசாரக்கோவை, 5. || பி - ம். கதிர்விடுபொண் காழ்.

தெரியற், பொலஞ்செயப் பொலிந்த லம்பெறு விளக்கம், வலிகெழு தடக்கைத் தொடியொடு *சுடர்வரச், சோறமை வற்ற நீருடைக் கலிங்க, முடையணி பொலியக் குறைவின்று கவைஇ, வல்லோன் றைஇய வரிப்புனை பாவை, முருகியன் றன்ன வுருவினை யாகி:]

வல்லோன் தைஇய வரி புனை பாவை முருகு இயன்றன்ன உருவினை ஆகி—சித்திரகாரி பண்ணப்பட்ட எழுதிக்கைசெய்த பாவையிடத்தே தெய்வத் தன்மை நிகழ்ந்தாற்போன்ற வடிவினையுடையையாய்,

என்றதனால், நாட்காலையில் அரசர்க்குரிய கடன்கள்கழித்துத் தெய்வவழி பாட்டோடிருந்தமை கூறினார்.

திண் காழ் ஆரம் நீவி கதிர் விடும் ஒள் காழ் ஆரம் கவைஇய மார்பின்—திண்ணிய வயிரத்தையுடைய சர்த்னத்தைப்பூசி ஒளிவிடும் ஒள்ளியவடமாகிய முத்துச்சூழ்ந்த மார்பிலே,

நீவியென்னுஞ் செய்தெனைச்சம் பிறவினைகொண்டது.

வரி கடை பிரசம் மூசுவன மொய்ப்ப—வரியையுடைத்தாகிய பின்னை யுடைய தேனினமும் மற்றும் மொய்க்கப்படுவனவாகிய வண்டுமுதலியனவும் மொய்ப்ப,

எருத்தம் தாழ்ந்த விரவு பூ தெரியல்—கழுத்திடத்தினின்றுந்தாழ்ந்த விர வுதலையுடைய பூமாலையையுடைத்தாகிய மார்பென (716) முன்னேகூட்டுக,

பொலம் செய பொலிந்த லம் பெறு விளக்கம் வலி கெழு தட கை தொடி யொடு சுடர் வர—பொன்னாற்செய்கையிலே பொலிவுபெற்ற மணிகளழுத் தின மோதிரம் வலிபொருந்தின பெரியகையில் மீரவளையோடு விளக்கம்பெற,

சோறு அமைவு உற்ற நீர் உடை கலிங்கம்—சோறு தன்னிடத்தே பொருந்துதலுற்ற நீரையுடைய துகில்,

என்றது †கஞ்சியிட்டதுகில்.

உடை அணி பொலிய குறைவு இன்று கவைஇ—உடைக்குமேலணியும் அணிகலங்களாலே அதுபொலிவுபெறும்படி தாழ்வின்றுகவுத்து,

புணர்ந்து துஞ்சி எழுந்து உருவினையாகி மார்பிலே பிரசமும் மூசுவனவும் மொய்ப்ப விளக்கம் தொடியொடுசுடர்வரக் கலிங்கத்தைக் கவைஇயெனமுடிக்க

725-6 ‡வரு புனல் கல் சிறை கடுப்ப இடை அறுத்து ஒன்னார் ஓட்டிய செரு புகல் மறவர்—மிக்குவருகின்ற யாற்றுநீரிடத்துக் கல்லணைகின்று தாங்ஙனற்போலத் தம்படையைக்கெடுத்து மிக்குவருகின்ற பகைவர்படையை நடுவேதடுத்து அவரைக்கெடுத்த போரைவிரும்பும் படைத்தலைவர்,

* பி-ம். சுடர வுறையமைவுற்ற சோறுடைக்கலிங்கம.

† "காடி கொண்ட கழுவுறு கலிங்கத்து" (நெடுநல். 134); "காடி யுண்ட பூந்துகில்" (சீவக. 71); "காடி கலந்த கோடிச் கலிங்கம்" (பெருங் கதை, வயந்தகனன்றது. 9.)

‡ பு-வெ. வஞ்சி. 19.

"கருவிசைப்புனலே கறிவளை போல, வொருவன் குறிய வேருமை யாளும்" என்னும் வஞ்சித்துறை கூறினர். இதுகூறலே முன்னர் †மாசாயம் பெற்றவர்களே இம்போசச்செய்வரென்பது ஆண்டுப் பெற்றுமாகலின், இவர்கள் எருதிப்பட்டமுதலிய நெய்புப்பெற்ற படைத்தலைவரென்பது பெறற்கும்.

727. ‡வான் வலம் புணர்ந்த மின் தாள் வலம் வாழ்த்த—வான்வெற்றியைப் பொருந்தின தனது முயற்சியின்வெற்றியை வாழ்த்த.

728 - 9. வில்லே கவைஇ கணை தொடுக்கும் மார்பின் மா தாங்கு எறுழ்த் தோள் மறவர் தம்மின்—வில்லே நிரம்பவளைக்கையினலே தன்னுள்ளேயடக்கிக் கொண்ட அம்பின் நிசையைத்தாங்கும் மார்பினையும் குதிரையைச்செலுத்தி வேண்டுமளவிலேபிடிக்கும் வலியையுடைய தோளினையுமுடைய வீரரைக்கொணர்மின்;

தம்மின், முன்னிலை முற்றுவினைத்திரிசொல். இது தும்பையிற் §குதிரைலேகூறிற்று. கணைதாக்குமார்பு கூறவே ‖கணை தினையுறமொய்த்தலுங் கூறிற்று.

730 - 31. கல் இடிதத்து இயற்றிய இட்டு வாய் கிடங்கின் நல் எயில் உழந்த செல்வர் தம்மின்— ¶கற்றரையைப் பொளிர்த்துபண்ணின இட்டிதாகிய நீர்வரும்வாய யுடைய கிடங்கினையுடைய முழுமுதலரணத்தேன்று வருந்தின வீரச்செல்வத்தையுடையாரைக் கொணர்மின்;

இஃது **"ஊர்ச்சென்ரு வீழ்க்க மற்றதன் மறனும்" என்னும் புறத்துறை நைத்துறை கூறிற்று.

732 - 3. கொல் ஏறு பைந்தோல் வோது போர்த்த **மா கண் முரசம் ஓவு இல கறங்க—மாறுபாட்டையேற்றுக் கோறற்றொழிலேயுடைய ஏற்றினது செவ்வித்தோலே மயிர் வோமற்போர்த்த பெரிய கண்ணேயுடையமுரசம் மோதுமினின்று ஒலியாகிற்க.

734 - 6. எரி மிமிர்ந்தன்ன தானை நாப்பண் பெரு நல் யானை போர்க்களத்து ஒழிய விழுமிய வீழ்ந்த குரிசிலர் தம்மின் - நெருப்புநடத்தற்போன்ற பகைவர்படைக்குருடுசென்று பெரிய நல்ல யானையைப் போர்க்களத்தே படவெட்டிச் சீரிய புண்ணினல்வீழ்ந்த தலைவரைக் கொணர்மின்;

---

* தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 8.

† மாசாயம் - அரசனுற்செய்யப்படும் நிறப்பு.

‡ வான்வெற்றியைவாழ்த்துதற்கு வீரரே உரியரென்பது, சிறுபாணுப்படை 210 - 12 ஆம் அடிகளாலும் அறியப்படும்.

§ தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 17.

‖ " " " 16.

¶ "தோட்பத னமைத்த கருங்கை யாடவர், கணிபொறி பிறப்ப நூறி வினையடர்த்து, கல்லுதற் றியற்றிய வல்லுவர்ப் படுவின்" (அகநா. 79.)

** தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 18.

** பி - ம். மயிர்க்கண் முரச மோவாது மேலேப்ப.

இது *"களிறெதிர்ந் தெறிந்தோர் பாடு" என்னும் தும்பைத்துறை கூறிற்று. பாடு, பெருமையாகலின் அதுதோன்ற ஈண்டுக் குரிசிலென்றார்.

முறைகருதுபு (738)—முன்னுளோர் காத்தமுறைமையை நாளும் உட் கொண்டு,

737. புரையோர்க்கு—நட்பிற் குற்றந்தீர்ந்தோர்பொருட்டு,

737-8. [தொடுத்த பொலம்பூந் தும்பை, சீர்யா றென்ஞது முறைகரு துபு சூட்டி :]

தொடுத்த பொலம் பூ தும்பை சூட்டி—கட்டப்பட்ட பொன்ஞர்செய்த பூவினையுடைய தும்பையைச்சூட்டி எவுகையினாலே,

நான்காமுருபு ஈண்டு †அகத்பொருட்டு.

739. காழ் மண்டு எல்கமொடு கனை அலை கலஙகி—காம்பு குழைச்சி னுள்ளே செருகின வேல்களுடனே அம்புகளுஞ்சென்று நிலைகுலைத்தலின் நிலைகலங்கி.

740-43. [பிரிபிணை யரிந்த நிறஞ்சிதை கவயத்து, வானத் தன்ன ‡வளாகர் பொற்ப, கோணகுறட் டன்ன வூன்சாய் மார்பி, னுயர்ந்த வுதவி யூக்கலர்த் தம்மின் :]

பிரிபு இணை அரிந்த நிறம் சிதை கவயத்து ஊன் சாய்—பலவாய்ப் பிரிந்து இணைந்த சந்துவாய்களற்ற பழையநிறங்கெட்ட §கவயதேரிடே ஊன்கெட்ட.

கோன் ||குறடு அன்ன மார்பின்—வலிய சுக்டையிற்குறட்டையொத்த மார்பினையுடையராகிய ஊசுகல (713) சென்க.

வேலும்அம்பும்பட்டு எங்கும் உருவிகிற்றலிற் குறடும் அதிற்றைத்த ¶ஆர் களும் போன்றன மார்புகள்; குறடு பட்டடைமரமுமாம

வானத்து அன்ன வளம் நகா பொற்ப உயர்ந்த உதவி ஊக்கலர் தம்மின்—தேவருலகையொத்த செல்வத்தையுடைய உறவுகள் முனபுபோலே நட்புக்கொ ண்ட அகத்துழிளையோராளும்படி உயர்ந்த உதவியைச்செய்த முயற்சியை யுடையாரைக் கொணர்மின்;

என்றது, தமக்குநட்பாய் முற்றகப்பட்டோரை முற்றுவிடுவித்தற்குத் தாமே உதவலின், மைந்துபொருளாகச்சென்று அம்முறாறுவிடுவித்த அவ்வூரை அவர்க்கு மீட்டுக்கொடுத்தமை கூறிற்று. இதனானே உழிஞைப்புறத்துத்

* தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 17.

† ,, வேற்றுமையியல், 15-ஆம் சூத்திரம்பார்க்க.

‡ பா. வளங்கெழுஙகாஙோன்.

§ கவயம் கவசம்.

|| வேலும் அம்பும் உருவிகிற்கும் வீரர்மார்பிற்குக் குறடு உவமையாதலைப் புறநானூறு, 283, 290-ஆம் பாடல்களாலுமுணர்க.

¶ பி-ம். உருவிகளும்.

தும்பைகூறினர்; வஞ்சினம்?-"மூழ் கினையும் வேலுங் குடையுந் தலிற, சென்ற வுயிரி னின்ற யாக்கை" கூறுதலானும் வஞ்சினம் பெரும்படி உயர்ந்த உத்திசெய்தமை கூறுதலானும்.

744 - 6. [வெந்த யானை கணம் மிரை கவர்ந்த புலர்ந்த சாந்தின் விரவு பூ தெரியல் பெரு செம் மூடவர் தம்மின்—உயர்ந்த யானைத்திரளினெழுங்களிறை கைக்கொண்ட பூசிப்புலர்ந்த சாந்தினையும், விரவுதலையுடைய வியன்பூமாலையினையும், பெரியசெய்கைகளையுமுடைய மண்டலங்களையாள்கின்றவரைக் கொணர்மின்

74 - 8. [பிறரும், யாவரும் வருக வேளெருக் தம்மென, வரையா வாயிற் செரு அது :]

ஏனோரும் தம்மென வரையா—மண்டபத்தாரையும், அறங்கூறவையத்தாரையுங் கொணர்மினென வரைந்தகூறி,

வாயில் செரு அது பிறரும் யாவரும் வருக என—வாயிலிடத்துத் தகையாமல இவர்களைப்போல்வாரும் படையாளர்முதலியோரும் வருவாராகவெனக்கூறி,

748. இருந்து—இலக்கணம் எளியையாயிருந்து.

749 - 50. [பாணர் வருக பாட்டியர் வருக, யாணர்ப் புலவரொடு வயிரியர் வருகென] யாணர் புலவரொடு பாணர் வருக பாட்டியர் வருக வயிரியர் வருக என—கவியாகிய பதுவரு வாயினையுடைய புலவரோடே பாணர் வருவாராக, பாணிச்சியர் வருவாராக, கூத்தர் வருவாராகவென அழைத்து,

751 - 2. [இருஞ்சினை புரக்கு மிரவலர்க் கெல்லாங், கொடிஞ்சி நெடுந் தோ களிற்றொடும் ஈகி]

இரு சினை புரக்கும் இரவலர்க்கு எல்லாம் நீர் யார் என்னது (738) கொடிஞ்சி நெடு தேர் களிற்றொடும் ஈகி—அவர்கள் சுற்றத்தாராய் அவர்கள்பாதுகாக்கும் பெரிய இரவலர்க்கெல்லாம் நீர்யாவரென்று அவர்களைக்கேளாதே அவர்கள காட்டின அளவைக்கொண்டு கொடிஞ்சியையுடைய நெடியதேர்களை யானைகளோடுங் கொடுத்து,

கொடிஞ்சி - தாமரைப்பூவாகப்பண்ணித் தேர்த்தட்டின்முன்னே நடுவது

753. கனம் தோறும் கள் அரிப்ப—இடந்தோறுங் கள்ளையரிப்ப,

754. மரம் தோறும் மை வீழ்ப்ப — மரத்தடிகள்தோறும் செம்மறிக் கிடாய்படுப்ப,

755. கிணம் ஊன சூட்டு உருக்கு அமைய—கிணத்தையுடைய நெய்ச்சட்டுதலாலே அக்கிணம் உருகுதல்பொருந்த,

756. செய் கனிந்து வறை ஆர்ப்ப—செய் நிறையப்பெற்றுப் பொரிக்கறிகளாரவாரிப்ப,

* தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 16.

757. தீ குரூஉ ஒப் புகை மழை மங்குலின் பரந்த *தோன்ற—நிறத்தையுடைய தூளிப்பிழிலெழுந்த புகை மழையையுடைய திசைகள்போலே பரந்து தோன்றப்பட்டு,

758. †வியல் நகரால் — அகற்சியையுடைய வீடுகளாலே ‡மிக்குப்புகழெய்திய மதுரை (699) என முன்னேகூட்டுக.

நகர் - வீடுகள்.

அரிப்ப வீழ்ப்ப அமைய ஆர்ப்பத் தோன்றப்பட்டு அகற்சியையுடைய என உடைமையொடு முடிக்க.

759 - 62. [பல்சாலே §முதுகுடுமியி, னல்வேள்வித் துறைபோகிய, தொல்லாணே னல்லாசிரியர், புணர்கூட் டுண்ட புகழ்சால் நெற்பின் :]

நல் வேள்வி துறை போகிய—நல்ல யாகங்கட்குக்கூறிய துறைகளெல்லாம் முன்னர் மூற்றமுடித்துவிட்ட,

தொல் ஆணே நல் ஆசிரியர் புணர் கூட்டு உண்ட—பழைய ஆணைகளையுடைய நல்ல ஆசிரியர் தாங்கள் பின்புகுடின கற்றழியாகிய கொள்ளையை அவரிடத்தே பெற்று அனுபவித்த,

புகழ் சால் நெற்பின் பல்சாலேமுதுகுடுமியின்—புகழ்ச்சியமைந்த தலைமையினையுடைய ||பல்யாகசாலே முதுகுடுமிப்பெருவழுதியைப்போலே நீயும் நல்லாசிரியரிடத்தே கேட்டிகின் (408) என முன்னேகூட்டுக.

என்றது, அந்தணர்க்குக்கூறியமுறையே முன்னுள்ள கருமங்களேமுடித்துப் பின்னர்த் தத்துவங்களேயாராய்ந்து மெய்ப்பொருளுணர்ந்து வீட்டின்ப மெய்திய ஆசிரியரிடத்தே தானும் அம்முறையேசென்று வீட்டின்பத்தைப் பெற்ற குடுமியென்றவாறு.

763. நிலம் தரு திருவின் நெடியோன் போல—எல்லாவிலங்களேயும் தன்னிடத்தே காட்டின பெருஞ்செல்வத்தையுடைய மாயோனைப்போலத் தொல்லாணையையுடைய நல்லாசிரியர் (761) என முன்னேகூட்டுக.

என்றது, கண்ணன் எப்பொருளும் தானுயிருக்கின்றபடியைக் காட்டி ஸ்ரீ கீதையருளிச்செய்து எல்லாரையும் போதித்தாற்போல எல்லாரையும் போதிக்கவல்லராகிய ஆசிரியரென்றவாறு.

ஆணே - ஆக்ஞே.

764 - 5. [வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர், பல்லாய்ப் புகாறு நெற்பிற் றோன்றி :]

---

* பா. தோன்றிய. † பா. வியன்சாலில்.

‡ "நின்று நிலேஇய் புகழ்பூத்த லல்லது, குன்றத் தணேடோ மதுரை" (பரிபாடல், பக்கம், 175.)

§ பா. முதுகுருடுமில்.

|| இப்பண்டியன் பலயாகங்களேச்செய்து முடித்தவனென்பது, "கடுங் தோர்குழித்த" (15) என்னும் புறப்பாட்டால் அறியலாகும்.

வியப்பும்—நீ அவ்வாசிரியனிடத்துப்பெற்ற கற்றலினின் அதிசயமும்,

சால்பும்—பின்பு பெற்றமைந்த அமைதியும்,

புகர் அறு நிறப்பின் செம்மை சான்றோர் பலர் வாய் தோன்றி—குற்றமற்ற நிறப்புக்களையுடைய தலைமக்களெல்லாம் அமைந்தோர்பலரும் தம்மிலிருந்து சொல்லப்பட்டு,

பலர்வாயென்பதனோடும் பின்வரும் புகரறுநிறப்பைக் கூட்டுக. புகரறு நிறப்பிற் செம்மையாவன :— "நாலிரு வழக்கிற் றுபத பக்கமும்" என்புழிக் கூறப்பட்டவை.

766. அரிய தந்து—இவ்விடத்திற்கு அரியவாய் வேற்றுப்புலத்திலுள்ள பொருள்களைக்கொணர்ந்து எல்லார்க்குங்கொடுத்து,

குடி அகற்றி—நின்னூட்டில்வாழுங் குடிமக்களைப் பெருக்கி,

என்றது, செல்வமுண்டாக்கியென்றதாம்.

767. பெரிய கற்று—நற்பொருள்களை விளங்கக்கூறிய நூல்களைக் கற்று.

இசை விளக்கி—நினபுகழே எவ்வுலகத்தும் நிறுத்தி,

768. மூன்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்—கடனடுவேதோன்றுகின்ற ஞாயிற்றையொக்கவும்.

769. பல் மீன் நடுவண் திங்கள் போலவும்—பலமீன்களுக்குநடுவே தோன்றுகின்ற நிறைமதியைப்போலவும்,

770. பூத்த சுற்றமொடு பொலிந்து இனிது விளங்கி—நீ பொலிவுபெற்ற சுற்றத்தாருடனே பொலிவுபெற்று இனிதாகவிளங்கி,

மண்டிலமாக்கள் தண்டலையார் முதலிய சுற்றத்தோர்க்குநடுவே ஞாயிறு போலவிளங்கி, பலகலைகளைக் கற்றோரிடத்தே மதிபோலவிளங்கியென்க.

771 - 2. பொய்யா நல் இசை நிறுத்த புனை தார் பெரு பெயர் மாறன தலைவனுக—உண்மையான நல்லபுகழை உலகிலேநிறுத்தின கைசெய்த மாலையினையும் பெரிய பெயரினையுமுடைய மாறன்முதலாக,

மாறன் - இவன்குடியிலுள்ளபாண்டியன்; அன்றி ஒரு குறுநிலமனனனென்றலுமொன்று.

773. கடந்து அடு வாய் வாள் இள பல் கோசர்—பகைவரை வென்று கொல்லும் தப்பாதவாளினையுடைய இளைய பலராகிய கோசரும்,

774 - 7. [இயனெறி மரபினின் வாய்மொழி கேட்பப், பொலம்பூ ணினவ ருட்பபடப் புகழ்ந்த, மதமிகு நிறப்பிற் குறுநில மன்ன, ரவரும் பிறரும்:]

புகழ்ந்த பொலம் பூண் ஐவர் உட்பட—எல்லாராலும் புகழப்பட்ட பொன் ஞற்செய்த போணிகலங்களையுடைய ஐம்பெருங்கேளிருமுட்பட.

மதம் மிகு நிறப்பின் குறுநிலமன்னர் அவரும்—மதமிக்க நிலைமையினையுடைய குறுநிலமன்னராகிய அவரும்,

---

* தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 20.

பிறரும்—கூறுதொழிற்றோரும்,

இயல் நெறி மரபின் நின் வாய் மொழி கேட்ப—நடக்கின்ற நெறிமுறை மையினலே நின்னுடைய உண்மையானமொழியைக் கேட்டு அதன்வழியே நடக்க,

777 - 8. [*துவன்றிப், பொற்பு விளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த:*] *பொற்பு விளங்கு புகழ் அவை துவன்றி நின் புகழ்ந்து ஏத்த — பொலிவு விளங்குகின்ற புகழினையுடைய அறங்கூறவையத்தார் நெருங்கி நின்னுடைய அறத்தின்தன்மையைப் ழ்த்த,*

779 - 81. [*இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய, மணங்கமழ் தேறல் மடுப்ப காளு, மகிழ்ந்து:*]

இலங்கு இழை மகளிர் பொலம் கலத்து ஏந்திய மணம் கமழ் தேறல் மடுப்ப மகிழ்ந்து—விளங்குகின்ற பூணினையுடையமகளிர் பொன்னுர்செய்த வட்டில்களிலேயெடுத்த மணகாறுகின்ற காமபான முதைத்தா அதனேயுண்டு மகிழ்ச்சியெய்தி மகளிர்தோன்புணர்ந்து (712) என முனனேகூட்டுக.

காளுமென்பதனேப் பின்னேகூட்டுக.

மணங்கமழ்தேறலென்றதனுற் காமபானமாயிற்று.

781 - 2. [*இனிதுறைமதி பெரும, வரைந்துநீ பெற்ற கல்லூ முியை யே:*] *பெரும நல் ஊழியை வரைந்து நீ பெற்ற காளும் இனிது உறைமதி பெருமனே! நன்முகிய ஊழிக்காலத்தை இத்தனேக்காலமிருந்தியெனப பால் வரைதெய்வத்தாலே வரையப்பட்டு நீ அறுதியாகப்பெற்ற கான்முழுதும் இனி தாக இருப்பாயென்க.*

**நல்லூழியென்றார், கலியழியல்லாத ஊழியை.*

உம்மை, முற்றும்மை.

உயர்ந்தோர் மருகனே (23) நெடியோனும்பலே (61) பொருகனே (42) தொற்றவனே (88) வெல்கோவே (105) புகழ்வேந்தே (130) கைப்பொரு னே (138) போரேறே (144) குருசிலே (151) நீகொற்றவர்தங்கோனுகுவை (74) வாய்கட்பினே (198) பணிந்தொழுகலே (201) பழிநமக்கொழுகவென்னும் (204) இசைவேட்குவை (205) அன்னும் (206) நின்கொற்றம் (194) பிறை யிற் (193) நிறக்க (194) நின்தெவ்வராக்கம் (196) மதியிற் (195) கெடுக (196) நின்னல்லிசை கெடாதுநிலேயிமர் (209) இனி நீ பாடல்சான்ற நன்னுட்ட நடுவணதாய் (331) இருபெருயியமத்து (365) காளங்காடிக்கம்பலே (430) காடார்த்தன்றேயாய் (428) அல்லங்காடி அழிதருகம்பலே (514) புள்ளினிசை யெழுத்தற்றேயாய் (543) ஞாயிறு (546) குனறஞ்சேருகையினுலே (547) மாலே (558) புகுந்து (557) பின்னர்நீங்க (558) மூன்றையாமஞ் சென்றபின்றை (620) மற்றைப் (653) பாணுட்கொண்டகங்குல் (631) யாமத்தையும் மற்றை (653) இடையதாகிய (631) கடவுள்வழங்குங்கங்குல் (651) யாமத்தையும் பகலுமக்கழிப்பி (653) பாடப் (656) பண்ணைச் (658) கைப்பத் (659) தெளிட்ட (660) உறப்ப (661) நவலச் (662) கரையத் (667) தோன்ற (669) வாழ்

த்த நுவல (670) இலைப்ப (671) இருங்கள் சிலைப்ப (672) இயங்கல் (673) கையது நுவல (675) முழங்கல் (676) குழுமல் (677) சிப்பை (685) இளங்காலம் நள்ளிடத்தினின்றுமப்போகின்ற வைகலையிலே (686) வலங்கெழு தாரத் தோடே (697) யானையும் (688) புரவியும் (689) ஆயமும் (692) தோட்டியும் (693) கலமுமனைத்தும் (695) கற்கையாதுடம்படாதார்க்கு (696) அனர்த கடையதியாத (697) கவினிப் (698) புகழெய்திய (699) பெரும்பாணிருக்கை யினையும் (342) இடக்கினையும் (351) புலிசையினையும் (352) வாயிலினையு (356) முடைய கான்மாடத்தான் மலிதுபுகழைக்கூடதலையுடைய (429) மது லையிலே (699) மகளிர் தேறன்மடுப்ப (780) மகிழ்ந்து (781) மகளிர்கறுக் தோளோப்புணர்ந்து (712) சேக்கைத்துஞ்சி (713) எழுந்து (714) உருவினை யாகி (724) மார்பிலே (716) பிரசமும் மூசுவனவுமொப்ப (717) வினைச்சம (719) தொடியொடுசுட்டுவரச் (720) கலிங்கத்தைக் (721) கவைஇ (722) மற வர் (726) தான்வலம் வாழ்த்த (727) மாறன்மூதலாகக் (772) கோசரும் (773) ஐவருமுட்படச் (775) குறுநிலமன்னராகிய (776) அவரும்பிறரும் (777) இன வாய்மொழிகேட்ப (774) கிற்புகழ்ந்தேத்த (778) மறவர்த்தம்மின் (729), செல் வர்த்தம்மின் (731), ஞரிலர்த்தம்மின் (736). ஊக்கலர்த்தம்மின் (743), பெருஞ்செயாடவர்த்தம்மின் (746), ஏஞ்ஞர் தம்மெனச் சிலரை வரைந திகூறி (747) வாயிலிடத்துத் தகையாமற் (748) பிறரும் (746) யாவரும வருவெனப் பொதுப்படக்கூறி (747) காளோலக்கமிருக்குமண்டபத்தேயிரு த்து (748) புலவரொடு (750) பாணர்வருக, பாட்டியர்வருக (749), வயிரியர வருகவெனவழைத்து (750) அவர்காட்டின இரவலர்க்கெல்லாம் (751) சீர்யா செல்லுதே (738) தேரைக் களிற்றெடும்வீசி (752) அரியதந்து குடியகற்றிப (766) பெரியகற்று இசைவினக்கி (767) ஞாயிறுபோலவும் (768) திங்கள்போல வும் (769) சுற்றமொடு பொலிந்து வினங்கி (770) வாழி (208); அங்ஙனம வாழ்ந்து பிறப்பற முயலாது பயனின்றிக்கழிந்தோர் (237) நிரையிமுணலி னுட் பலரோகொண் (236), அப்பயனின்மையாலே (238) அண்ணலே (207) நீயும் அவ்வாதகழியலாகாதென்று இவ்வாழ்விற்பெரிதாயிருப்பதொரு பொருளை யான்கூறுவேன் (207); அஃது என்னற்காட்டுதலரிது; அதனை நெடியோன போலத் (763) தொல்லாணையினையுடைய கல்லாசிரியர் (761) புணர்கூட்டுனை செறப்பினையுடைய (762) பல்யாகசாலைமுதுகுடுமியைப்போல (759) கல்லாசி ரியரிடத்தே கேட்டிசின் (208); கேட்டு அதனைகேண்டலியப்பும சால்பும் (764) புரைதிறப்பிற் (765) செம்மைசான்றோர் (764) பலர் தம்மிலிருந்து சொல்லி பட்டுப் (763) பெருமானே (781), கன்றுகிய ஊழிக்காலத்தை இத்துணைக்க மிருத்தியெனப் பல்வளைதெய்வத்தாலே வரையப்பட்டு நீஅறநியாகப்பெற் (782) காண்முழுதும் (780) இனிதாகப் பேரின்பத்தை துகர்ந்திருப்ப (781); அதனைதகாது ஐம்பொறிட்டும் முன்னிற்கப்படுவனவாகிய இந்த பொருள்களுக்கு நின்னெடு என்ன உறவுண்டு (206); இனி நின்னிடத்துண்ட யிய மாயைகெடுவதாக (208) என மாட்டுறப்பாணும் எச்சவுறப்பாணும் வி முடிக்க.

*"முன்னம்பொருள் விடப்பிறி தாயினும், மியன்றொருள் முடியத் தன்னு ணுணர்த்தன், மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்", †"சொன்னோன் குறிப்பொடு முடிவுகொ ளியற்கை, புல்லிய னெனி யெச்ச மாகும்." ‡"என்னுஞ்சூத்திரங்களாற் கூறிய இலக்கணம் §"கல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பு" எனத் தொல்காப்பியனார் கூறினமையின், இவரும் கல்லிசைப்புலவராகலின், இங்ஙனம் செய்யுள்செய்தாரென்றுணர்க.

§தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனே மாங்குடிமருதனாரிபாடிய மதுரைக்காஞ்சிக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

வெண்பா.

1 பைங்க ணிளம்||பகட்டின் மேலாணைப் பான்மதிபோற்
நிங்க ணெடுங்குடையின் கீழாண—¶யங்கிரக்து
$நாம்வேண்ட நன்னெஞ்சே நாடுதிபோய் நானிலத்தோர்
தாம்வேண்டுங் கூடற் றமிழ்

2 சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னு
நல்லிருந் தீந்தா தறுதலான்—மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலியாத
தண்டாரான் கூடற் றமிழ்.

---

* தொல்காப்பியம், செய்யுளியல், சூ. 211.
† ,, ,, ,, 207.
‡ ,, ,, ,, 1
§ பி - ம். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன்.
|| பி - ம். பகட்டுமேலானை.
¶ பி - ம். நக்காதை.
$ பி - ம். நாம்வேண்டு.

ஏழாவது

நெடுநல்வாடை.



வைபகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்பா வானம் புதுப்பெயல் பொழிந்தென
வார்கலி முந்நீர் இயங்கொடுங் கோற் கோவல
ரேறுடை யினநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோட
னீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயன் மறப்ப மன்றி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்றுசூழ்ந் தன்ன கூதிர்ப் பாணாட்
புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புனற்புதன் மலரப்
பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி
யிருங்கனி பரந்த வீர வெண்மணற்
செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக்
கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்ப்ப
பெயலுலந் தெழுந்த பொங்கல் வெண்மழை

---

1. வலனேர்பு: (முல்லை. 4.)

5. பி - ம். புலம்பிற்கலங்கி.

9. சீவக. 1158 - ஆ. மேற்கோள்.

14. "சொன்னுஞ்சொல் அம்முச்சாரியை பெற்றுவருவதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். புள்ளிமயங். சூ. 70. உ.)

18. "சாயென்பது நுணுக்கமாகிய குறிப்பை உணர்த்துமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். உரி. சூ. 34 - சே. ஈ; இ - வி. சூ. 281); இவ்வடி பெயரின்பின் உரிச்சொல் நின்றதற்கு முதாரணம்; (இ - வி. சூ - 280.)

19. "எதிர்செல் வெண்மழை பொழிபுற் றிவ்வன்" (முல்லை. 100); "பெய்து புறந்தந்த பொங்கு லடி, விண்டுச் சேர்ந்த வெண்மழை" (பதிற். 55: 14 - 5); "பெய்துபுறந் தந்த பொங்கல் வெண்மழை" (அகநா. 217). பா. பெயலுழந்து.

பகலிரு விசும்பிற் றுவலை கற்ப
வங்க ணகல்வய லார்பெயற் கலித்த
வண்டோட்டு நெல்லின் வருகதிர் வணங்க
முழுமுதற் கமுகின் மணியுற ழெருத்திற்
சொழுமட லலிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை
தண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு
தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற
நளிகொள் சிமைய விரவுமலர் வியஞ்காக்
குளிர்கொள் சினைய குரூஉத்துளி தூங்க
மாட மோங்கிய மல்லன் மூதூர்
ராறுகிடந் தன்ன வகனெடுந் தெருவிற்
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோண்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டுமூசு கேறன் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்டுளி பேணுர் பகலிறங்
திருகோட் டறுவைபர் வேண்டுவயிற் றிரிதர
வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோண்
மெத்தென் சாயன் முத்துறழ் முறுவற்
பூங்குழைக் கமர்ந்த வேல்தெழின் மழைக்கண்
மடவரன் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி யரும்பின் பைங்காற் பிரதிரத்
தவ்வித முவிழ்பதங் கமழப் பொழுதறிந்
திரும்புசெப் விளக்கி னீர்ந்திரிக் கொளீஇ
நெல்லு மலரும் தூஉய்க்கை தொழுது
மல்ல லாவண மாலை யயர

---

20. "மாரி கற்பான் றுவலைகாட் செய்வ தேபோல்" (சீவக. 2070.)

30. மதுரை. 359 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

31 - 2. மு. பெரும்பாண். 60 - 61.

36. "வெள்ளிவள்ளியின் விளங்குதோள்" (சீவக. 420.)

36 - 7. வழிமோனைக்கு இவ்வடிகள் மேற்கோள்; (தொல். செய். சூ. 94 - பேர்.)

39. மதுரை. 397.

39 - 40. செந்தொடையாவதன்றி மோனைத்தொடைப்பாடின்றென்பதற்கு இவ்வடிகள் மேற்கோள்; (தொல். செய். சூ. 94 - பேர்.)

43 - 4. "அகலை செல்லா மரும்பவிழ் முல்லை, நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் - புகன்மாய்ந்த மாலை" (சிலப். 9 : 1 - 2 அடியார். மேற்.)

மணியுறை புறவின் செங்காற் சேவல்
பின்புறு பெடையொடு மன்றுதோ ரிருந்து
திரவும் பகலு மயங்கிக் கையற்று
மதலைப் பள்ளி மாறுவன விருப்பக்
கடியுடை வியனகர்ச் சிறுகுறும் பொழுவர்
கொள்ளுறழ் நறுங்கற் பலகூட்டு மறுக
வடவர் தந்த வான்கேழ் வட்டர்
தென்புல மருங்கிற் சான்றொடு துறப்பக்
கூந்தன் மகளிர் கோதை பூணியர்
பல்விரங் கூந்தற் சின்மலர் பெய்ம்மார்
தண்ணறுங் ககர முளரி நெருப்பமைத்
திருங்கா ழகிலொடு வெள்ளெயிர் புகைப்பக்
கைவல் கம்மியன் கவின்பெறப் பூண்ந்த
செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச்
சிலம்பி வாளூல் வலந்தன தூங்க
வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளித் தென்வளி தருஉம்
நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலைப்
போர்வாய் கதவந் தாழொடு துறப்பக்
கல்லென் றுவலி தூவலின் யாவருந்
தொகுவாய்க் கன்னற் றண்ணீ ருண்ணூர்
பகுவாய்த் தடவிற் செந்நெருப் பார
வாடன் மகளிர் பாடல்கொளப் புணர்மார்
தண்மையிற் றிரிந்த வின்சுரற் றீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்

---

49. "கடியுடை வியனகரவ்வே" (புறநா. 95.)

51. "வடவர் தந்த வான்கேழ் வட்டம்" (அகநா. 340), "வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துப், தென்மலைப் பிறந்த சந்தன மறுக" (சிலப். 4: 37 - 8.)

56. "குடதிசை மருங்கின் வெள்ளெயிர் தன்னெடு. குணதிசை மருங்கிற் காரகி றறந்து" (சிலப். 4: 35 - 6)

57. "கைவல் கம்மியன்" (நெடுநல். 85.)

66. "வடபான் முனிவன் றடவினுட் டோன்றி" (புறநா. 201.) "தட்டோர் முழங்கு செந்தீ" (சீவக. 2373.)

68. பா. தண்மையிற் றிரிந்த. 69. சிலப். 23: 16.

70 கருங்கோட்டுச் சிறியாழ் பண்ணுமுறை நிறுப்பக்
காதலர்ப் பிரிந்தோர் புலம்பப் பெயல்கண்ணோக்கு
கூதிர்வின் றன்ரூற் போதே மாதிரம்
விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டில
மிருகோற் குறிஇல வழுக்காது குடக்கேர்
75 பொருதிறஞ் சாரா வரைநா ளமயத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேவங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மணிவகுத்
தொருங்குடன் வளை இ யோங்குஇல வரைப்பிற்
80 பருவிரும்பு பிணிதலுச் செவ்வாக் குரீஇத
தூணமாண் கதவம் பொருத்தி யியைமாண்டு
நாளொடு பெயரிய கோளமை விழுமரதத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்
தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற்
85 கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்
தையவி யப்பிய நெய்பணி நெடுநிலை
வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுகக்
குன்றுகுயின் றன்ன வோ ஙகுநிலை வாயிற்
றிருநிலை பெற்ற நீதுதீர் நெறப்பிற்
90 றருமணன் ஞெமிரிய திருநகர் மூற்றது
நெடுமயி ரெகினத தூநிற வேற்றை
சூறுங்கா லன்னமோ கெனை மூன்கடைப்
பனிஇல மூண்இய பல்லுளைப் புரவி
புல்லுணை தெவிட்டும் புலம்புவிடு குரலொடு
95 நிலவுப்பயன் கொள்ளு நெடுவெண் ணற்றத்துக்

---

70. கருங்கோட்டுச்சிறியாழ் : (புறநா. 127, 145.)

82. "நாளொடு பெயரிய கவையி லாமரம்" (வாயு. பார்ப்பதி திரு மணம். 9.)

86. முருகு. 228 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

88. குன்றுகுயின்றன்ன : (மதுரை. 474.)

90. ஞெமிர்தலென்பதற்குப்பொருள் பரத்தலெனக்கூறி இவ்வடியை மேற்கோளாகக் காட்டினர்; (தொல் உரி. சூ. 65 - சே. ஈ; இ - வி. சூ. 281) பா. ஞெமிய.

95. "வெண்ணிலவின் பயன்றுய்த்தும்" (பட். 114); "பொங்கிணர்க் காவு தோறும் புதுமணற் குன்று தோறும், பங்கயச் செங்க ணெம்மான் பாணி வாப் பயன்கொண்டு" (பாகவத. 10: கோபியரை. 22.)

இம்புரிப் பகுவா யம்பண நிறையக்
கறுஞ்சுரி முரலிப் பாடுவிறற் றகல
வொலிநெடும் பீலி யொல்க மெல்லியற்
கலிமயி லகவும் வயிர்மரு ளின்னிசை
நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்
யவன ரியற்றிய வினைமாண் பாவை
கையேக் தையக னிறையநெய் சொரிந்து
பரூஉத்திரி கொளீஇய சுரூஉத்தலை நிமிரெரி
யறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிரு ணீங்கப்
பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை யல்ல
தாடவர் சூதுகா வுருங்கடி வரைப்பின்
வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு
வில்கிடந் தன்ன கொடிய பல்யின்
வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவ
ருருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பி னல்லிற்
றசநான் கெய்திய பண்மரு ணேன்ரு
ளிகன்மீக் கூறு மேம்தெழில் வரிதுதற்
பொருதொழி னாக மொழியெயி றருகெறிந்து
சிருஞ் செம்மைய மொப்ப வல்லோன்
கூருளிக் குயின்ற வீரிலை யிடையிடுபு
தூங்கியன் மகளிர் வீங்குமுலை கடுப்பப்
புடைதிரண் டிருந்த சுடத்த விடைதிரண்

---

99. பா. களிமயில்.

101 - 3. முல்லை. 85 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

107. "சூழைமுகப்புரிசை" (சீவக. 275) என்பதற்கு இவ்வடி மேற்கோள்; 'ஆடவர்சூதா அருங்கடிவரைப்பினுள்ளேவைத்தால்' (சீவக. 1713 - உரை.)

109. பா. வில்கிடந்தன்ன ..... பலவயின்.

112. மதுரைக்காஞ்சி, 485 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க; செப்புவொண் டன்ன விஞ்சித் திருநகர்" (சீவக. 439.)

115. (தொல். எச்ச சூ. 6 - சே. உ; இ - வி. சூ - 175, 635; தக்க. 628 - மேற்.)

துள்ளி நோன்முதல் பொருத்தி யடியமைத்துப்
பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்
மடைமா ணுண்ணிழை பொலியத் தொடைமாண்டு
முத்துடைச் சாலேக நாற்றிக் குத்துறுத்துப்
புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்
தகடுகண் புதையக் கொளீஇத் தகடூர்ந்
தூட்டுறு பண்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்த வியன்கட் கானத்து
முல்லைப் பல்போ தறைழப் பூரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்
தூணிபுண ரன்னத் தூநிறத் தூவி
யிணையணை மேம்படப் பாயணை யிட்டுக்
காடி கொண்ட கமழ்வுறு கலிங்கத்துத
தோடமை தூமடி விரித்த சேக்கை
யாரந் தாங்கிய வலர்மூலை யாகத்துப்
பின்னமை நெடுவீழ்த் தாழத் தூணிதுறந்து
நன்னுத லுலறிய சின்மெல் லோதி
நெடுநீர் வார்குழை களைந்தெளக் குறுங்கண்
வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதிற்
பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்த
வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுதகுச்
செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கதகுப்
பூந்துகின் மரீஇய வேந்துகோட் டல்கு
லம்மா சூர்ந்த வவிர்நூற் கலிங்கமொடு
புனையா வோவிய்ங் கடுப்பப் புனைவி
றளிரேர் மேனித தாய சுணங்கி
னம்பணைத் தடைஇய மென்றோண் முகிழ்முலை
வம்புவிரித் தியாத்த வாங்குசாய் நுசுப்பின்
மெல்லியன் மகளிர் நல்லடி வருட

134. மதுரை. 721 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க; பக். 311 'பனிச்விரற் புலைத்தி நெடிதுபிசைந் தட்டிய, பூந்துகில்" (அகநா 387.)

140. பா. வாயுறை.

147. "புனையா வோவியம் போல நிற்றலும்", "புனையா வோவிய புறம்போச் தென்ன" (மணி. 16: 131; 22: 88.)

நரைவிர வுற்ற நறுமென் கூந்தற்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவு நெடியவு முரைபல பயிற்றி
யின்னே வருகுவ ரின்றுணை யோரென
வுகத்தவை மொழியவு மொல்லாண் மிகக்கலுழ்ந்து
தண்சேறு வழித்த நோனிலைத் திரள்கா
லூரு வறுமுலை கொளீஇய காதிருத்திப்
புதுவ தியன்ற மெழுகுசெப் படமிசைத்
திண்ணிலை மருப்பி னுடுஞ்சில் யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனெடு நிலைஇய
வுரோகிணி நினைவன வேங்கி நெடிதுயிரா
மாயித மேந்திய மலிந்துவீ முரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாட்
புலம்பொடு வதியு நலங்கிள ரரிவைக்
கின்னு வரும்படர் தீர விறைறக்
கின்னே முடிகதில் லம்ம மின்னவி
ரோடைபொடு பொலிந்த வினைகவில் யானை
நீடிர டடக்கை நிலமிசைப் புரளக்
களிறுகளப் படுத்த பெருஞ்செய் யாடவ
ரொளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
வடந்தைத் தண்வளி யெறிதொறு நடுங்கித்
தெற்கோர் பிறைஞ்சிய தலைய நற்பல்
பாண்டில் விளக்கிற் பருவச்சுட ரமுல
வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு

---

152. பா. நறைவிரவுற்ற.

155. "இன்னே வருகுவர்" (முல்லை. 16.)

156. "காட்டவுங் காட்டவுங் காணுள் கழுஞ் சிறந்து" (முல்லை. 22.) பா. முகைத்தவை.

169. "தாரொடு பொலிந்த வினைகவில் யானை" (மலைபடு. 227), "செல்சமந் தொலைத்த வினைகவில் யானை" (பதிற். 82.)

175. முல்லைப்பாட்டு, 85 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

பருமம் ஈயாப் பரியரிக் கலிமா
180. விரைஞ்சேற்றுத் தெருவி னெறிதுளி விதிர்ப்பப்
புடைவீ ழுந்துகி லிடவயிற் றழீஇ
வரிடோட் கோத்த வன்கட் காணே
சுவன்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
185 தவ்வென் றனைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்*
பலரொடு மூணிய பாசறைத் தொழிலே.

இதன்பொருள்.

இப்பாட்டிற்கு நெடுநல்வாடையென்ற பெயர் கூறினர், இப்பெயர் நெடிதாகிய நல்ல வாடையெனவிரிதலிற் பண்புத்தொகையாயிற்று. வாடையென, வாடைக்காற்றிற் றோன்றின கூதிர்ப்பாசறையை யுணர்த்தலிற் பிறந்தவழிக் கூறலென்னும் ஆகுபெயராய் நின்றது. இப்பாட்டினுட் "கூதிர்கின் றன்ரூற் போதே" (72) எனவும், "கூதிர்ப் பானாள்" (12) எனவும் கூறுகின்றமை லின், இது *"வாகை தானே பாலெய தும்புனே" எனப் பாலைக்குப்புறனைக் கூறிய வாகைத்திணையாய் அதனுள், †"கூதிர் வேனி லென்றிரு பாசறைக், காதலி னென்றிக் கண்ணிய மரபினும்" எனக்கூறிய கூதிர்ப்பாசறையே யாயிற்று. தலைவனைப் பிரிந்திருந்து வருந்துந்தலைவிக்கு ஒருபொழுது ஒருழி போல நெடிதாகியவாடையாய்ப் பாலையாகிய உரிப்பொருளுணர்த்திற்று. அகத் தொடுங்கிப் போகம்நுகர்வார்க்குச் சிறந்தகாலமாயினும் அரசன் ‡போகம்வேண்டிப் பொதுச்சொற்பொருளைப் அப் போகத்தின்மனமற்று வேற்றுப்புலத்துப்

185. "ஊதையுங் தாதுளர் கானம் தவ்வென் றன்றே" (நற். 319), "தவ்வெனக் குடித்தி" (குறுந். 356); தவ்வென்பது குறிப்புமொழியென்ற கூறி, இவ்வடிகளை மேற்கோளாகக்காட்டினர்; (குறள். 1144 - பரி.) பா. பரம புதுளி.

186. "ஒலியவிர் தடங்கி யாம நள்ளென" (நற். 303.) "நள்ளென் றன்றேயாமம்" (குறுந். 6); பா. யாமத்துப்பள்ளி.

186 - 8. தொல். கற். சூ 34. ந. மேற்.

176 - 88. "அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ" என்ப தற்கு இவ்வடிகள் மேற்கோள்; (தொல். புறத். சூ. 8 - ந.)

* தொல்காப்பியம், புறத்திணையியல், சூ 18.

† " " " 21.

‡ "போகம் வேண்டிப் பொதுச்சொற் பொருளன்" (புறநா. 8); "பொது மொழி பிறர்க்கின்றி முழுதாளுஞ் செல்வர்க்கு" (தஞ்சை. 68.)

போந்திருக்கின்ற இருப்பாகலின், அவற்கு நல்லதாகிய வாடையாயிற்று. என வே காமத்திடத்து வெற்றியெய்தலின், வாகைத்திணையாயிற்று; இப்பாட்டுச் சுட்டி ஒருவர்பெயர்கொள்ளாமையின் அகப்பொருளாமேனும் "வேம்புதலை யாத்த சோன்கா ழெல்லகம்" (176) என அடையாளப்பூக்கூறினமையின், அக மாகாதாயிற்று.

1 - 2. [வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇ, பொய்யா வானம் புதுப் பெயல் பொழிந்தென:] பொய்யா வானம் வையகம் பனிப்ப வலன் வளைஇ ஏர்பு புது பெயல் பொழிந்தென—பருவம்பொய்யாதமேகம் உலகெல்லாங்குளிர் ரும்படியாகத் தான்னிடந்தமலையை வலமாகவளைந்து எழுந்திருந்து கார்காலத்து மழையைப் பெய்ததாக,

3. ஆர்கலி முனைஇய கொடு கோல் கோவலர்—வெள்ளத்தைவெறுத்த கொடிய கோலினையுடைய இடையர்,

4. ஏறு உடை இனம் நிரை வேறு புலம் பரப்பி—எற்றையுடைய இனங் ளையும் பசுக்களையும் மேட்டுநிலமாகிய முல்லைநிலத்தே மேயவிட்டு,

*எருமையையும் ஆட்டையும் இனமென்றார்.

5. புலம் பெயர் புலம்பொடு கலங்கி—தாம் பயின்ற நிலத்தைக் கைவிட் டுப்போம் தனிமையினுலே வருத்தமெய்தி,

ஊர்க்கு அண்ணியவிடத்தேமேய்த்து ஊரிற்றங்காமையிற் புலம்பெயர் புலம்பென்றார்.

5 - 6. கோடல் நீடு இதழ் கண்ணி நீர் அலை கலாவ—கார்தளினது நீண்ட இதழ்களாற்கட்டினகண்ணி நீரலைத்தலாலே கலக்கமெய்த,

7 - 8. மெய் கொள் பெரு பனி கலிய பலருடன் கை கொள் கொள்ளி யர் சுவுள் புடையூ டடுங்க—தம் உடற்பிடித்தேகொண்ட பெரியகுளிர்ச்சி வரு தலையினுலே பலருங்கூடிக் கையிடத்திலேகொண்ட நெருப்பினையுடைய ராய்ப் பற்றைகொட்டி நடுங்க,

கையை நெருப்பிலேகாய்த்தி அதிற்கொண்ட வெம்மையைக் கவுளிலே அடித்தலிற் கைக்கொள்கொள்ளியென்றார்.

கோவலர் (3) பலருடன் (7) பரப்பி (4) கலங்கிக் (5) கலாவக் (6) கொள் ளியராய்க் கவுள்புடையூ டடுங்க (8) என்க

9. மர மேமல் மறப்ப—விலங்குகள் மேற்நிறைமுழிலே மறந்தொடுங்க,

மன்றி கூர—குரங்கு குளிர்ச்சிமிக.

குன்னுக்கவென்பாருமுளர்.

10. [பறவை படிவன வீழ:] படிவன பறவை வீழ—மரங்களிலே தங் குவனவாகிய புள்ளுக்கள் காற்றுமிகுதியால் நிலத்தேவீழ,

* பகற்திரள், எருமைத்திரள், ஆட்டின்திரள் இவை முன்கிரையெனவழங் கும்; "முன்கிரையு முடையேன் முழுவிங் கெனக்கில்லே" (பெரிய. சிறுத்தொ ண்டர். 49.)

10 - 11. [கறவை, கன்றுகோ ளொழியக் கடிய வீசி:] கறவை கடிய வீசி கன்று கோள் ஒழிய—பசுக்கள் குளிரின் மிகுதியாற் கடியவாய் உதைத்துக் கன்றை எற்றுக்கோடலைத் தவிர,

12. குன்று குளிர்ப்பன்ன கூதிர் பால் நாள்—மலையைக் குளிர்ச்சிசெய்யுமாறுபோன்ற கூதிர்க்காலத்து நடுயாமத்தே புலம்பொடுவெதிரியுமரிவைக்கு (166) என மேலே கூட்டுக.

13 - 4. புல் கொடி முசுண்டை பொறி புறம் வால் பூ பொன் போல் பீர மொடு ட ;ந்புதல் மலர—புல்லிய கொடியினையுடைய முசுட்டையில் திரண்ட புறத்தையுடைய வெள்ளிய பூப் பொன்போன்ற நிறத்தையுடைய பீர்க்குடனே தொடுக்கோடும் விரிய,

15 - 9. [பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி, யிருங்களி பரந்த வீர வெண்மணற், செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக், கயலறலெதிர்க் கடும்புனற் சாஅய்ப், பெயலுலந் தெழுந்த:]

கடு புனல் சாஅய் கயல் அறல் எதிர - கடிதாயோடினநீரினின்றும் ஒரு கால் பற்றிக் கயல்கள் அற்றறீர்க்கு எதிரேவருகையிலே,

பெயல் உலந்து எழுந்த பைங்கால் கொக்கின் மெல் பறை தொழுதி—மழையாலேவருந்தி அதனிறுதலிட்டவளவிலே எழுந்த பசியகாலையுடைய கொக்கினது மெல்லிய சிறகையுடைய திரள்,

செவ் வரி நாரையோடு இரு களி பரந்த ஈரம் வெள் மணல் எவ்வாயும் கவர—சிவந்த வரியினையுடைய நாரைகளோடே கரியவண்டலிட்ட சேறுபரந்த ஈரத்தினையுடைய வெள்ளிய மணலாகிய எவ்விடங்களிலுமிருந்து அக்கயலைத்தின்ன,

19 - 20. பொங்கல் வெள் மழை அகல் இரு விசும்பில் துவலை கற்ப—பொங்குதலையுடைய வெள்ளியமேகம் அகன்ற பெரியவாகாயத்தே தெறுதலையாகத்தூவ மேற் கற்கும்படியாகக் கூதிர் ஈண்டுகின்றது (72) எனமேலே கூட்டுக.

கற்பவென்னுஞ் செயவெனெச்சம் ஈண்டு எதிர்காலமுணர்த்திற்று.

துவலைகற்பவென்றார், மிகப்பெய்தலே தனக்கு இயல்பென்பது தோன்ற

21 - 2. அம் கண் அகல் வயல் பூ பெயல் கலித்த வள் தோடு செல் லின் வரு கதிர் வணங்க—அழகியஇடத்தையுடைய அகன்ற வயனிறைந்த நீரோலே மிக்கெழுந்த வளைய இலையினையுடைய செல்லினின்றும் புறப்பட்ட கதிர் முற்றிவளைய,

புல்லாதலின் தோடென்றார்.

23 - 4. முழு முதல் கழுவின் மணி உறழ் எருத்தின் கொழு மடல் அவிழ்ந்த குழூஉ கொள் பெரு குலை—பெரிய அடியினையுடைய கமுகினது நீலமணியையொத்த கழுத்திற் கொழுவிய மடலிடத்துப் பாணிவிரிந்த திரட்சியைக்கொண்ட தாதுகளில்,

25 - 6. [தண்ணீர் தெவின வீங்கிப் புடைதிரண்டு, தெண்ணீர்ப் பகுங் காய் சேறுகொள முற்ற:] தென் நீர் *பக காய் நுண் நீர் தெவின வீங்கி புடை திரண்டு சேறு கொள முற்ற—தெளிர்த்தரை உள்ளேயுடைய பசுகாய் நுண்ணிய நீரான் நிரம்படியாகவீங்கிப் பக்கந்திரண்டு இனிமைகொள்ளும்படி முற்ற,

27. [களிகொள் மெய்ய விரவுமலர் வியன்கா:] விரவு மலர் களி கொள் மெய்யம் வியல் கா—முன்புவிரவினபூக்கள்செறிதலைத் தன்னிடத்தேகொண்ட உச்சியினையுடையவாகிய அகன்றபொழில்கள்,

28. குளிர் கொள் ஐனைய குரூஉ துளி தூங்க—குளிர்ச்சியைத் தம்மிடத் தேகொண்ட கொம்புகளையுடையவாகி அவற்றில் ஏற்றுகின்ற நிறத்தையுடைய மழைத்துளி மாறுமல்வீழ,

29 - 30. மாடம் ஓங்கிய மல்லல் மூதூர் ஆறு கிடந்தன்ன அகல் நெடு தெருவில்—மாடங்களுயர்ந்த வளப்பத்தையுடைய பழையவூரில் யாறுகிடந்தாற் போன்ற அகன்றநெடியதெருவிலே நிரந்த (35) என்க.

31 - 2. படலை கண்ணி பரு எர் எறுழ் இணை தோள் முடலை யாக்கை முழு வலி மாக்கள்—தழைவிரவின மாலையினையும் பருத்த அழகினையுடைய வாகிய வலியினையுடைய இறுகினதோளினையும் முறுக்குண்ட உடம்பினையும் நிரம்பின மெய்வலியினையுமுடைய மிலேச்சர்,

33. வண்டு மூசு தேறல் மாந்தி மகிழ் சிறந்து—வண்டுகள்மொய்க்கும் கள்ளையுண்டு மகிழ்ச்சிமிக்கு,

34 - 5. [துவலைத் தண்டுளி பேணர் பகலிறந், திருகோட் டறுவையர் வேண்டுவயிற் றிரிதர:]

துவலை தண் துளி பேணர் இரு கோடு அறுவையர் வேண்டு வயின் திரிதர—சிறுதுவலையாகிய தண்ணியதுளியை அஞ்சாராய் முன்னும்பின்னுந் தொங்கலாக நாலலிட்ட தலினையுடையராய்த் தமக்கு வேண்டின இடத்தே திரிதலைச்செய்ய,

'பகலிறந்து' என்பதனை மேலேகூட்டுக.

36 - 7. [வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோள், மெத்தென:] வெள்ளி வள்ளி வீங்கு இறை மெத்தென் பணை தோள்—வெளுக்கப்பட்டதாகிய சங்குவளை இறுகின இறையினையுடைய மெத்தென்ற பணைபோலுந் தோளினையும்,

37. மெத்தென் சாயல்—மெய்ம்முழுதும் கட்புலனுய்த்தோன்றுகின்ற மெத்தென்ற சாயலினையும்,

முத்து உறழ் முறுவல்—முத்தையொத்த பல்லினையும்,

* (மதுரை. 400.)

38. பூ குழைக்கு அமர்ந்த எந்து எழில் மழை கண்—பொலிவினை புடைய மகரக்குழையிட்ட அழகிற்குப் பொருந்தின உயர்ந்து தோன்றுகின்ற அழகினையுடைய குளிர்ச்சியையுடைய கண்ணினையும்,

இனி உருபுமயக்கமாக்கிக் குழையிடத்தேசென்றமர்ந்த கண்ணென்று மூரைப்ப.

39. எந்து (38) மடவரல் மகளிர்—உயர்ந்துதோன்றுகின்ற மடப்பத தினையுடையமகளிர்,

தோள்முதலியவற்றையுடைய மகளிரென்க.

39 - 41. [பிடகைப் பெய்த, செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத தவ்வித ழவிழ்பதங்கமழ :] பிடகை பெய்த, பைங்கால் பித்திகத்து செவ்வி அரு ம்பின் அ இதழ் பசல் இறத்து (31) அவிழ் பதம் கமழ – பூத்தட்டிலேயிட்டு வைத்த பசிய காலினையுடைய பிச்சியினுடைய அலருஞ்செவ்வியையுடைய அரும்பினது அழகிய இதழ்கள் பசற்பொழுதைக்கடந்து விரியுஞ் செவ்வி மணக்கையினுலே,

செவ்வியரும்பு பாடமாயிற் சிவந்த வரியினையுடைய அரும்பென்க.

41. பொழுது அறிந்து – அந்திக்காலமென்றறிந்து,

எனததனைக் கூறினால் இரவும்பகலுங் தெரியாவென்றார்.

42. இரும்பு செய் விளக்கின் சுர்ந்தரி கொளீஇ—இரும்பாற்செய்த தக ளியிலே நெய்தோய்ந்த திரியைக்கொளுத்தி,

விளக்கு, ஆகுபெயர்.

43. செல்லும் மலரும் தூஉய் கைதொழுது—செல்லியமலரையுஞ்சிதறி இல்லுறை தெய்வத்தைவணங்கி,

44. மல்லல் ஆவணம் மாலை அயர—வளப்பத்தையுடைய *அங்காடித் தெருவெல்லாம் மாலைக்காலத்தைக்கொண்டாட,

மகளிர் (39) கமழுகையினுலே பொழுதறிந்து (41) திரிக்கொளீஇத் (42) தூவித்தொழுது (43) அயரவென்க.

45 - 8. [மனையுறை புறவின் செங்காற் சேவல், வின்புறு பெடையொடு மன்றுதோர்த்துண்ணு, திரவும் பகலு மயங்கிக் கையற்று, மதலைப் பள்ளி மாறு வன விருப்ப :]

இரவும் பகலும் மயங்கி—இராக்காலமும் பகற்காலமும் தெரியாமல் மயங் குகையினுலே,

மனை உறை புறவின் செங்கால் சேவல் இன்பு உறு பெடையொடு மன்று தோர்த்து உண்ணுது — மனையின்கண்ணேயிருக்கும் புறவினுடைய சிவந்த காலினையுடைய சேவல் தான் இன்பமுகரும் பெடையோடு மன்றிலேசென்று இரைதேடியுண்ணுமல்,

* அங்காடித்தெரு - கடைத்தெரு.

கை அற்று மதலை பள்ளி மாறுவன இருப்ப—செயலற்றுக் கொடுக்கையைத் தாங்குதலுடைய பலகைகளிலே பறவாதிருத்தி கடுத்தகால் ஆறும்படி மாறிமாறி இருக்க,

இனித் தலைமாறியிருப்பவென்பாருமுளர். மதலைப்பள்ளி-*களோகத்தலை.

இறையுறைபுறவும் பாடர்.

49 - 50. சடி உடை வியல் நகர் சிறு குறு தொழுவர் கொள் உறழ் நறு கல் பல கூட்டு மறுக— காவலையுடைய அகன்ற மனைகளில் நெறியாகிய குற்றே வல்வினைஞர் †கருங்கொள்ளின் நிறத்தையொத்த நரிய ‡சாத்தம்மியிலே கத் தூரிமுதலிய பசுங்கூட்டரைக்க,

51 - 2. வடவர் கந்த வான் கேழ் வட்டம் தென்புலம் மருங்கில் சார் தொடு திறப்ப—வடநாட்டிலுள்ளார் கொண்டுவந்த வெள்ளியநிறத்தையுடைய §சிலாவட்டம் தென்திசையிடத்திற் சந்தனத்தோடே பயன்படாமற்கிடப்ப,

53. [கூந்தன் மகளிர் கோதை புனையார்:] மகளிர் கூந்தல் கோதை புனையார்—மகளிர் குளிர்ச்சிமிகுதியால் தம்மயிரிடத்து மாலையிட்டு முடியாராய்,

54. பல் இரு கூந்தல் சில்மலர் பெய்மார்—தம் பலவாகிய கரிய மயிரிடத்தே ||மங்கலமாகச் சிலமலரிட்டு மூடித்தலைவேண்டி,

55 - 6. தண் நறு தகரம் மூளரி நெருப்பு அமைத்து இரு காழ் அகிலொடு வெள் அயிர் புகைப்ப—குணனிய நறிய மயிர்ச்சந்தனமாகிய விறகிலே நெருப்பையுண்டாக்கி அதிலே கரிதாகிய வயிரத்தையுடைய அகிலோடே வெள்ளிய ¶கண்டசருக்கரையையுங் கூட்டிப்புகைப்ப,

57 - 8. கை வல் கம்மியன் கவின் பெற புனைந்த செழு வட்டம் சுருக்கி—கையாற்புனைதல்வல்ல உருக்குத்துகின்றவனுலே அழகுபெறப்பண்ணின வெந்நிறத்தையுடைய $ஆலவட்டம் உறையிடப்பட்டு,

58 - 9. [கொடுந்தறிச். சிலம்பி வானூல் வலந்தன தூங்க:] சிலம்பி வால் நூல் வலந்தன கொடு தறி தூங்க—கிலந்தியினது வெள்ளிய நூலாற் சூழப்பட்டனவாய் வளைந்த முளைக்கோல்லேதூங்க,

60 வான் உற நிவந்த மேல் நிலை மருங்கின்—தேவரூரைத் தீண்டும்படி உயர்ந்த மேலாம்நிலத்திடத்து,

---

* களோகத்தலை - வீட்டின் ஒருபுறப்பு

† கருங்கொள் : (நாலடி. கற்புடை. 7.)

‡ சாத்தம்மி=சாத்து அம்மி.

§ சிலாவட்டம் - சந்தனக்கல்.

|| "மங்கலமாகி ..... பூவே" (நன். பொது. 30.)

¶ பி - ம். கண்டசருக்கரை.

$ ஆலவட்டம் - விசிறி.

61 - 2. வேனில் பள்ளி தென் வளி தரூஉம் சேர் வாய் கட்டினை நிரியாத—இளவேனிற்காலத்தைத் தழுவும் படுக்கைக்குத் தென்றற்காற்றைத் தரும் சாலேத்திலேயின்ற உலாவாதே,

சேர்வாய்க்கட்டினையென்றது மாடத்தின்கட்சாலேகத்தை; கட்டினைதெரியாதென்று பாடமாயின், நிறவாதென்க,

62 - 3. நிண் நிலை போர் வாய் கதவம் தாழொடு துறப்ப—செக்கென்ற நிலையினையுடைய இரண்டதேவும் தம்முட்பொருதல்வாய்த்ததவது தாழிட்டுக் கிடக்க,

64 - 6. கல்லென தவலை தூவலின் யாவரும் தொகு வாய் கன்னல் தண்ணீர் உண்ணர் பகு வாய் தடவில் செ நெருப்பு ஆர—கல்லென்கின்ற ஓசையினையுடைய நிறுதவலையை வாடைக்காற்று எங்கும் பரப்புகையினாலே இளையோரும் மூதியோரும் குவித்தவாயையுடைய *கரகத்திற்றண்ணீரைக் குடியாராய்ப் பருத்தாற்போன்ற வாயையுடைய †இத்தனத்திலிட்ட ஒவ்வாத நெருப்பினை வெம்மையை நுகர,

67. ஆடல் மகளிர் பாடல் கொள புணர்மார்—ஆடற்றொழிலையுடைய மகளிர் தாப்பாடுகின்றபாட்டினை யாழ் தண்ணிடத்தேகொள்ளும்படி நரம்பைக் கூட்டுதற்கு,

68 - 9. தண்மையின் நிரிந்த இன் குரல் நீ தொடை கொம்மை வரு முலை வெம்மையில் தடை இ—குளிர்ச்சியாலே தன் நிலைகுலைந்த இனியகுரலாகிய நரம்பைப் பெரிய எழுகின்ற முலையின்வெப்பத்தே தடவி,

நீத்தொடை, ஆகுபெயர்.

70. கரு கோடு நிறை யாழ் பண்ணு முறை நிறுப்ப—கரியதண்டினையுடைய நிறையாழைப் பண் நிற்குமுறையிலே நிறுத்த,

71. காதலர் பிரிந்தோர் புலம்ப—கணவரைப்பிரிந்தமகளிர் வருந்த

71 - 2. பெயல் கனைத்து கூதிர் கின்றன்றால் — காலமழைசெறிந்து கூதிர்க்காலமாய்நிலைபெற்றது; அவ்விடத்தி,

72 போது—பின்னர் மிகழ்ந்தபொழுது,

வானம் கார்காலத்து மழையைப் பெய்ததாகப் (2) பின்னர் மிகழ்ந்த பொழுது (72) கோவலர் (3) நடுங்க (8) மதப்பக் கூர (9) வீழ (10) ஒழிய (11) மலரச் (14) கவரச் (17) கற்ப (20) வணங்க (22) முற்றத் (26) தூங்கத் (28) நிரைதர (35) அயர (44) இருப்ப (48) மறுகத் (50) துறப்பப் (52) புகைப்பத (56) தூங்கத் (59) துறப்ப (63) ஆர (66) நிறுப்பப் (70) புலம்பப் பெயல செறிந்து (71) கூதிர்க்காலமாய்நிலைபெற்றது; அவ்விடத்தினைமுடிக்க.

* "வரிசுடர் நெருப்பைநீ சென்ன வேட்டனர், தருகுளிர் நீரினைத் தழலினஞ்ஞெர்" (நீகானத்நீ, பொன்முகரி. 45.)

† இத்தனம் - ஸ்தனமுட்டி.

75 - 5. [மாதிரம், விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டில, மிருகோற் குறிஞ்சில வழுக்காது குடக்கோ, பொருதிறஞ் சாரா வரசரா னமயத்து :]

மாதிரம் விரி கதிர் பரப்பிய வியல் வாய் மண்டிலம் குடக்கு ஏர்பு—திசை களிலெஞ்சியிர்ந்திரண்டசைப்பரப்பின அகன்ற இடத்தையுடைய ஞாயிறு மேற்றிசைக்கட் சேறற்கெழுச்சி,

இரு கோல் குறிஞ்சில வழுக்காது ஒரு திறம் சாரா அமயத்து அரசான்—இரண்டிடத்துநாட்டின இரண்டுகோலிடத்துஞ் சாயாதிழலால் தாரைபோக ஓடு கின்றவிலையைக் குறித்துக்கொள்ளுந்தன்மை தப்பாதபடி தான் ஒருபக்கத்தைச் சாய்போகாத செந்திரைத்திங்களின் நடுநிற் பத்தினின்ற யாதோர்காளிற் பதி னேந்தாமாழிகையிலே அங்குராப்பணம்பண்ணி,

76. தூல் அறி புலவர் துணர்நிற் கயிறு இட்டு—சிற்பதூலையறிந்த தச்சர் கூரிதாக தூலே சேரேபிடித்து,

77. தேவம் கொண்டு தெய்வம் நோக்கி—திசைகளைக்குறித்துக்கொ ண்டு அத்திசைகளில் நிற்குர் தெய்வகளையும் குறைவறப்பார்த்து,

78 - 9. [பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து, ஒருங்கு :] பெரு பெயர் மன்னர்கு ஒப்ப ஒருங்கு மனை வகுத்து—பெரிய பெயரினை யுடைய அரசர்க்கொப்ப மனைகளையும் வாயில்களையும் மண்டபங்கள் முதலிய வற்றையும் கூறுபடுத்தி.

79. உடன் வலீஇ ஓங்கு நிலை வரைப்பின்—இவ்விடங்களையெல்லாம் சேரவளைத்து உயர்ந்த மதிலின் வாயி (88) லென்க.

80. பரு இரும்பு பிணித்து—ஆணிகளும் பட்டங்களுமாகிய பரிய இரும் பாலேகட்டி,

செவ்வரக்கு ஊறீஇ—சாதிலிங்கம்வழித்து,

81 - 5. [துணைமாண் கதவம் பொருத்தி யிணைமாண்டு, காளொடும் பெயரிய கோளமை விழுமரத்துப், போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத் தந், தாழொடு குயினற போமை புணர்ப்பிற், கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்த்து :]

தாழொடு குயின்ற துணை மாண் கதவம் பொருத்தி—தாழோடே சேரப் பண்ணின இரண்டாய் மாட்டிசைப்பட்ட கதவைச்சேர்த்தி,

இணை மாண்டு புது போது அவிழ் குவளை பிடி கால் அமைத்து—இணை தல் மாட்டிசைபபட்டுப் புதியபோதாய் அவிழ்ந்த குவளைப்பூவோடே பிடிகளையும் தன்னிடத்தேபண்ணி,

என்றது, *நடுவேநிருவும் இரண்டுபுறதும் இரண்டுசெங்குமீர்ப்பூவும் இரண்டு பிடியுமாகவகுத்த உத்தரக்கற்களி.

* இரண்டு யானைகளின் இடையே நிருமகன் வீற்றிருத்தல், இக்காலுத் தில் காணப்படும் சித்தங்களாலும், கலித்தொகை, 44 - ஆம் செய்யுளாலும் அறியலாகும்.

காளோடும் பெயரிய விழுமரத்து கோள் அமை நெடுநிலை (86)—*உத்தர மென்னும் நாளின்பெயர்பெற்ற உத்தரக்கற்கவியிலே செருகுதல் பொருந்தின நெடுநிலையென்க.*

அமைத்தென்னுமெச்சம் பெயரியவென்பதனோடு முடிந்தது.

கை வல் கம்மியன் முடுக்கலின் புரை தீர்ந்து போர் அமை புணர்ப்பின் நெடுநிலை (86)—*கைத்தொழில்வல்லதச்சன் கடாவுகையினாலே வெளியற்றுப் பலமரங்களும் தம்மிற்கிட்டு கலமைந்து கூட்டத்தினையுடைய நெடுநிலையென்க.*

86. *ஐயவி அப்பிய செய் அணி செழு நிலை* — *வெண்சிறுகடுகு அப்பி வைத்த செய்யணிந்த நெடியநிலையினையுடைய,*

அதிற்றெய்வத்திற்கு வெண்சிறுகடுகும் செய்யுமணிந்தது.

87. *வென்று எழு கொடியொடு வேழம் சென்று புக—வென்றிகொண்டெழும் கொடிகளோடே யானைகள் சென்றுபுகுதும்படி யுயர்ந்த,*

88. *குன்று குயின்றன்ன ஓங்கு நிலை வாயில்—மலையை குடைவே வெளியாகத்திறந்தாற்போன்ற கோபுரவாயில்களையும்,*

ஓங்கின நிலையையுடைய கோபுரத்தை ஓங்குநிலையென்றார்; ஆகுபெயர்.

வரைப்பின் (79) *வாயிலென்க.*

கதவுபொருத்திக் கோளமைத்த புணர்ப்பினையுடைய நெடுநிலையினையுடைய வாயிலென்க.

89 - 92. [*திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பிற்,' தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து, நெடுமயி ரெனைத் தாகிய வேற்றை, குறுங்கா லன்னமோ டுளரு முன்கடை:*]

நெடுமயிர் எனைய தூறிறம் எற்றை குறுகால் அன்னமொடு உகளும் முன்கடை—நெடிய மயிரினையுடைய கவரிமாவில் தூபநிறத்தையுடைய ஏற்றை குறியகாலினையுடைய அன்னத்தோடே தாவித்திரியும் வாசல்முன்பினையும்.

கடைமுன், முன்கடையென மருஉமுடிபு. அன்னமும் தாவிப்பறத்தலின், உகளுமென்று கவரிமாவோடே ஒருவினைகூறினார்.

* *தரு மணல் ஞெமிரிய திரு நகர் முற்றத்து.*

†*திரு நிலைபெற்ற, தீது தீர் சிறப்பின*—*திருமகள் நிலைபெற்ற குற்றமற்ற தலைமையினையும்,*

வாயிலினையும் முன்கடையினையும் முற்றத்தினையும் சிறப்பினையுமுடைய கோயிலென முடிக்க,

93 - 4. *பனை நிலை முனை இய பல் உளை புரவி புல் உணை செவிட்டு‡ புலம்பு விடு குரலொடு—பந்தியிலேநிற்றலேவெறுத்த பலவாகிய ‡கோசரியையுடைய குதிரைகள் புல்லாகிய உணவைக் குதட்டுந் தனிமைதோற்று விக்கின்ற குரலோடே.*

---

* *இத்தப்பகுதிக்கு உரைகிடைத்திலது; கொண்டுவந்திட்ட மணல் பரந்த அழகிய வீட்டின் முன்னிடத்தையுமென்க.*

† *முருகு.* 70. ‡ *சோரி - குதிரையின் பிடரி மயிர்.*

ஏர் - 7. நீலவு பயன்கொள்ளும் நெடு வெள் முற்றத்து இம்புரி பருவாய் அம்பணம் நிலையை கழுந்த வீழ் அருவி பாடு விறந்த—நிலாவின்பயனே அரசன் நகரும் செடிய வெள்ளிய நிலாமுற்றத்திலுள்ள நீர்வந்தவீழும் மகரவாயாகப் பகுத்த வாயினையுடைய பத்தலிறைகையிலுலே கலங்கிவிழுகின்ற அருவியினை சைதெறித்து,

97 - 9. அயல ஒலி நெடு பீலி ஒல்க மெல் இயல் கலி மயில் அகவும் *வயிர் மருள் இன் இசை—அதற்கு அயலிடத்தனவாகிய தழைத்த செடிய பீலி ஒதுங்க மெல்லிய இயல்பினையுடைய செருக்கின மயில் ஆரவாரிக்கும் கோம் பென்று மருளும் இனியவோசை,

100. களி மலி நெம்பின் நெம்புந் கோயில்—செறிந்தமலையின் ஆரவாரம் போல ஆரவாரிக்கும் கோயில்,

புலம்புவிடுகுரலோடே அருவிப்பாடும் வயிர்மருளின்னிசையும் விறந்து மலைச்சென்பிற் நெம்புங்கோயிலென முடிக்க.

அருவியும் மயிலும் மலைக்கும் உள்ளனவாகலின், உவமைகொண்டார். புலம்புவிடுகுரல் மழை மெத்தெனமுழங்கினுற் போன்றிருத்தலின், உவமை கொண்டார்.

இனி அவற்றின் எதிரொலியெழுகின்ற கோயிலென்றுமாம்.

101 - 2. யவனர் இயற்றிய வினை மாண் பாவை கை எந்து ஐ அகல் நிறைய நெய் சொரிந்து- சோனகர்பண்ணின தொழில்மாட்சிமைப்பட்டபாவை தன்கையிலே எந்தியிருக்கின்ற வியப்பையுடைய தகளிநிறையும்படி நெய்வார்க் கப்பட்டு,

103. பரூஉ திரி கொளீஇய குரூஉ தலை நிமிர் எரி—பருத்திரிகளைப் பந்தங்களிலே கொளுத்திவைத்த நிறத்தையுடைத்தாகிய தலையினையுடைய மேலேஎரியெரிகின்ற விளக்கை.

104. அறு அறு காலை தோறு அமைவு பண்ணி—நெய்வற்றினகாலந் தோறும் ஒளிமழுங்கின காலந்தோறும் நெய்வார்த்துத் தூண்டி,

105. பல் வேறு பள்ளி தொறும் பாய் இருள் நீங்க - பலவாய்வேறுபட்ட இடங்கடோறும் பாய்த இருள் நீங்கும்படி,

106 - 7. பீடு கெழு நிறப்பின் பெருந்தகை அல்லது ஆடவர் குறுகா அரு கடி வரைப்பின்—பெருமைபொருந்தின தலைமையினையுடைய பாண்டிய னல்லது சிறருந்தொழில்செய்யும் ஆண்மக்களும் அணுகவாராத அரியகாவலை யுடைய கட்டுக்களின்,

108. வான நெண்டண்ண நோனதல — மலைகளைக் கண்டார்போன்ற உயர்ச்சியையுடையவாய்,

108 - 9. வரை சேர்பு வில் இடந்தன்ன கொடிய—மலைகளைச்சேர்ந்து இந் திரவிற்கிடந்தாற்போன்ற பலநிறமாய் வீழ்ந்துகிடந்த கொடிகளையுடையவாய்.

இது மேலேகட்டினகொடி.

109. பல் வயின்—பலவிடங்கடோறும்,

---

* வயிரிசை அன்றிலினுசைக்கும் உவமைகூறப்படும்; (குறிஞ்சி. 219.)

110. வெள்ளி அன்ன விளங்கும் சுடை உரீஇ—வெள்ளியையொத்த விளங்குகின்ற சாந்தை வாரி,

111. மணி கண்டன்ன மா நிரள் நிண் காழ்—நீலமணியைக்கண்டாற் போன்ற கருமையினையும் நிரட்சியினையுமுடைய நிண்ணிய தாண்களையுடைய வாய்.

112. செம்பு இயன்றன்ன செய்வு உறு நெடு சுவர்—செம்பிலுலே பண ணினுலொத்த தொழில்கள்செய்தலுற்ற நெடியசுவரிலே,

113. உருவம் பல் பூ ஒரு கொடி வளீஇ—வடிவழகினையுடைத்தாகிய பலபூக்களையுடைய வல்லிசாதியாகிய ஒப்பில்லாத கொடியையெழுதி,

114. சருவொடு பெயரிய காண்பு இன் நல் இல்—புதைத்தகருவோடே பெயர்பெற்ற காட்சிக்கினிய கன்முகில இல்,

என்றது - கருப்பக்கிருகமென்றவாறு.

நிண்காழையுடையவாய்ச் (111) செய்வுறுகெடுஞ்சுவரிலே (112) விளங் குஞ் சுதையுரீஇப் (110) பல்வயின் (103) ஒருகொடிவளீஇ (113) வரைகண் டன்ன தோன்றலவாய்க் (108) கொடியவாய்ப் (109) பாயிருணீங்க (105) எரி (103) அனலரப்பண்ணிக் (104) காட்சிக்கினியவாகிய கல்லில் (114) என முடிக்க.

கோயில் (100) வரைப்பின் (107) காண்பினல்லி (114) லெனமுடிக்க.

115. [*தசகான் கெய்கிய :*] கான்கு தசம் எய்கிய—காற்பதிற்றியாண்டு சென்ற,

பீணை மருள் நோன் தாள்—முரசென்றுமருளும் வலியகால்களையும்,

116. [*இகன்மீக் கூறு மேற்செழில் வரிநுதல் :*]

எந்து எழில் வரி நுதல்—உயர்ந்த அழகினையும் புகர்நிறைந்த மத்தகத் தினையுமுடைய நாகம் (117),

இகல் மீ கூறும் நாகம் (117)—போரில் மேலாகச்சொல்லும் நாகம்,

117. பொருது ஒழி நாகம்—பொருதுபட்ட யானையினுடைய,

117 - 8. [*ஒழியெயி றருகெறிந்து, சீருஞ் செம்மையு மொப்ப :*] ஒழி யெயிறு சீரும் செம்மையும் ஒப்ப அருகு எறிந்து—தானேவீழ்ந்தகொம்பைக் கண மும் செம்மையுமொப்ப இரண்டுபுறத்தையுஞ்செத்தி,

118 - 9. வல்லோன் கூர் உளி குயின்ற—தச்சன் கூரிய கெற்றுளியாலே பண்ணின,

119. ஈரிலை இடை இடுபு—பெரிய இலைத்தொழிலே இடையேயிட்டு,

120 - 30. [*தூங்கியன மகளிர் வீங்குமுலே கடுப்பப், புடைதிரண் டிருந்த் குடத்த விடைதிரண், டுள்ளி நோன்முதல் பொருத்தி யடியமைத்துப், பேர் வெம்பிய பெரும்பெயர்ப் பாண்டின், மடைமா ணுண்ணிழை பொலியத் தொ டைமாண்டு, முத்துடைச் சாலேக நாற்றிக் குத்துறுத்துப், புலிப்பொறிக் கொ ண்ட பூங்கேழ்த் தட்டத்துத், தகடெண் புதையக் கொளீஇத் துகடீர்ந், தூட்டு பன்மயிர் விசைஇ வயமான், வேட்டம் பொறித்த வியன்மட் கானத்து, முள் ளேப் பல்போ துறழப் பூசைத்து :*]

ஊட்டுறு பல் மயிர் விரைஇ—பலநிறம்பிடித்த மயிர்களை உள்ளேவைத்து அதன்மேலே,

வயமான் வேட்டம் பொறித்து—ஒங்கமுகலியவற்றைவேட்டையாடுகின்ற தொழில்களைப் பொறித்த தகடுகளைவைத்து,

புலிமுதலியவற்றின் வரிகள்தோன்ற உள்ளே மயிர் விரவின.

வியல் கண் காணத்து மூல்லே போது உறழ பல் பூ நிரைத்து—அகற்சியை இடத்தேயுடைய காட்டிடத்து மூல்லேப்போதுடனே மாறுபடும்படி வேனேப் பல பூக்களையும் நிரைத்து,

சாலேகம் தகடு குத்துறுத்து—சாளரங்களாகத்திறந்த தகடுகளே ஆணிகளாலே தைத்து,

மடை மாண் பாண்டில்—மூட்டுவாய் மாட்சிமைப்பட்ட வட்டக்கட்டில்,

கொம்பைச்செத்தி உளியாற்குயின்ற இலேயை இடையிட்டுப் பொறித்து ங்கத்துச் சாலேகத்தகடுகளைக் குத்துறுத்த மடைமாண்பாண்டிலெனமூடிக்க.

முத்து உடை நுண் இழை பொலிய ஈற்றி தொடை மாண்டி பெரு அளவு எய்திய பாண்டில்—முத்தைத் தன்னிடத்தேயுடைய மெல்லியநூல் அழகு பெறும்படி சட்டிலின்கீழே ழி ாலுபுறமும்ஈற்றி அதனைத் தன்னிடத்தேசட்டுல்மாட்சிமைப்பட்டுப் பெரிய எல்லேயைப்பெற்ற பாண்டிலெனக்கூட்டுக

என்றதனுல், தந்தத்தாற்சமைத்த சுட்டிலேச்சூழ முத்துவடஞாற்றியென்றார்

புலி பொறி கொண்ட பூ கேழ் திட்டத்து கண் புதைய கொளீஇ துகள் தீர்ந்து பெரு பெயர் பாண்டில்—புலியினதுவரியையத் தன்னிடத்தேகொண்டு பொலிவுபெற்ற நிறத்தையுடைய கச்சாலே கடுவுவெளியான இடமுழையும்படி கோக்கப்பட்டுக் குற்றமற்றுக் கச்சுக்கட்டிலென்னும் பெரிய பெயரையுடைய பாண்டிலெனக்கூட்டுக.

தாக்கு இயல் மகளிர் வீங்கு முலே கடுப்ப புடை திரண்டு இருந்த குடத்த அடி—சூல்முற்றி அசைந்த இயல்பினேயுடையராகிய மகளிரது பால்சுட்டிங்கின முலேயையொப்பப் பக்கமுருண்டிருந்த குடத்தையுடையவாயடி,

இஃது உருட்டிக்கு உவமைகூறிற்று.

இடை திரண்டு உள்ளிமுதல் நோன் அடி பொருத்தி அமைத்து—குடத்திற்கும் கட்டிற்குமடுவாகியஇடம் ஒழுகுமெல்லிதாய்த்திரண்டு உள்ளிமுதல்போலும் வலியினேயுடையகால்களேத் தன்னிடத்தேதைத்துச்சமைத்துப் பேரள வெய்தியபாண்டிலென்க.

உள்ளிப்புட்டில்போல்வதனே உள்ளிமுதலென்றார்.

131 - 3. [மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத், துணைபுண ரன்னத் தூநிறத் தூவி, யிணை யணை மேம்படப் பாயணை யிட்டு:]

மெல்லிதின் விரிந்த இணை அணை சேக்கை—மெல்லிதாகவிரிந்த இணைத்தலணைந்த படுக்கையென்க.

மேம்பட இணை புணர் அன்னம் தூ நிறம் தூவி பாய்—அச்சேக்கைக்கு மேலாகத் தம்பேட்டைப்புணர்ந்த அன்னச்சேவலின் தூயநிறத்தையுடைய குட்டாயமயிர் பரக்கப்பட்டு,

"தெய்வ மெம்பஞ்ச வெண்பஞ்ச சேனை, முற்றுறழ் செக்கையோ ரைந்து." என்ற ஒத்தினையும்படித்ததென்பதுதோன்ற இனையரினையென்றார். என்புருவி மிக்க அன்போடுபுணர்தலிற் சூட்டிற்கு மெண்மைபிதக்குமெண்பது தோன்றத் தினைபுண ரன்னத் தூநிறத் தூவி யென்றார். பிறரும், இக்கருத்தே பற்றி *"ஆதரம் பெருகுகின்ற வன்பினு லன்ன மொத்தும்" என்றார்.

134 - 5. [காடி கொண்ட கழுவுறு கலிங்கத்தும், தோடமை தூமடி விரித்த சேக்கை·] மேம்பட அனையிட்டு (133) காடி கொண்ட கழுவுறு கலிங கத்து தூ மடி விரித்த தோடு அமை சேக்கை—அத்தூவிக்குமேலாக அனைகளு மிட்டுவைத்துக் களுவையத் தன்னிடத்தேகொண்ட கழுவுகலுற்றதுகிலின தூய மடித்ததுவிரித்த செங்கழுநீர்முதலியவற்றின் இதழ்கள்பொருந்தின படு க்கை,

இனையரினை சேக்கை மேம்படத் தூவிபாய் அத்தூவிக்கு மேம்பட அனை யிட்டுத் தூமடிவிரித்த சேக்கையென்க.

136 - 7. ஆரம் தாங்கிய அலர் மூலை ஆகத்து பின் அமை நெடு ழீஇ தாழ—முன்பு முத்தாற்செய்த கச்சுக்கமைந்த பருத்தமுலையினையுடைய மார்பிடத் தே இப்பொழுது குத்துதலமைந்த நெடிய தாலிநாணினையுமே தூங்க,

வீழ்ந்திடைத்தலின் வீழென்றார் இனிப் பின்னுதலமைந்த நெடியவீழ், மயிரென்பாருமுளர்.

137. தினை துறந்த—அரசன் பிரிகையினலே,

138 நல் நுதல் †உலறிய நில் மெல் ஒதி—நன்றாகிய நுதலிடத்தே கை செய்யாமல் உலறிக்கிடந்த நிலவாகிய மெத்தென்ற மயிரினையும்

இனித் தினைதுறந்தலறிய ஒதியெனக்கூட்டிக் கூடிக்கிடந்த தன்மைநீங்கி உலறிய ஒதியென்றுரைப்பாருமுளர்.

139 - 40. [நெடுநீர் வார்குழை கனைதெனக் குறுங்கண், வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதின் :]

நெடு நீர் வார் குழை கனைதென வறிது வீழ் காதின்—பெரிய ஒளி யொழுகின மகரக்குழையைவாங்கிற்றுச் சிறிதேதாழ்ந்த காதினையும்,

நீர்மை, ஒளி.

குற வண் வாயுறை அழுத்திய காது—சிறிய இடத்தையுடைய தளரும் அழுத்தியகாது,

வாயுறவென்றுபாடமாயின், கடுக்கனைவாயுறும்படியழுத்தினகாதென்க.

141 - 2. பொலம் தொடி ஞெரை மயிர் வார் மூண்டை வலப்புரி வளை யொடு ‡கடிகைதுஞ் யாத்த—முன்பு பொன்னுச்செய்த தொடிகிடந்து தழும பிருந்த மயிர் ஒழுங்குபட்டுக்கிடந்த முன்கையிலே வலம்புரியையறுத்துப்பண் ணின வினையிட்டுக் காப்புரானேக்கட்டி,

ஒடு, வேறுவினையொடு.

143 - 4. §வானே பகு வாய் கடுப்ப வணக்குறுத்து செ விரல் கொளீஇய செ கேழ் விளக்கத்து—வானியனது பகுத்தவாயையொக்க மூடக்கத்தையுண்

* சீவகசிந்தாமணி, 189. † உலறிய: தெறுபண். 18. ‡ தூறுந். 218.
§ "வானேப்பகுவாய் வணக்குறுமோதிரம்" (சிலப். 6: 95.)

பாதிரிப் பிவந்த விரலிடத்தியிட்ட வெந்நிறத்தையுடைய முகிழ்க்கொண்டு மோதிரத்தையும்,

145 - 6. பூ தூலில் மரிய வத்து கோடு அல்குல் அ மாக ஊர்ந்த அவிர் நூல் கலிங்கமொடு—முன்பு பூத்தொழிலையுடைய *தூலில்கிடந்த உயர்ந்த வினையுடையவல்குலில் இக்காலத்துடுத்த அழகிய மாசேறிய விளங்குகின்ற நூலாற்செய்த புடைவையுடனே,

147. [புனையா வோவியங் கடுப்பப் புனைவில்:]

புனையா ஓவியம் கடுப்ப – வண்ணங்களைக்கொண்டெழுதாத வடிவைக் கோட்டினை ஒத்திரத்தையொப்ப.

புனைவில் நல்லடி (151) எனை மேல்வருவதனைக்கூட்டி, கழுவிச்செப் பஞ் செய்து பூண்களணியாத நன்றாகிய அடியென்க.

148. தளிர் ஏர் மேனி—மார்தளிரையொத்த நிறத்தினையும்.

தாய சுணங்கின்— பரந்த சுணங்கினையும்,

149. அம் பணை தடைஇய மெல் தோள் – அழகினையுடைய மூங்கில் போலத்திரண்ட மெல்லியதோளினையும்.

149 - 50. [முழித்முலை, வடுபடுதி ரியாத்த] வடுப்படுத்து யாத்த முழித் முலை—உச்சை வலித்துக்கட்டின தாமரைமுகைபோலும் முலையினையும்,

150. வாங்கு சாய் நுசுப்பின் வளையும் நடங்குமிடையினையும்,

151. மெல் இயல் மகளிர் – மெத்தென்ற தன்மையினையுமுடைய சேடியர்,

கல் அடி வருட— துயிலுண்டாகுமோவென்று அடியைத் தடவ,

மேனி (148) முதலியவற்றையுடையமகளிர் (151) புனைவில் (147) கல்லடி வருடவென்க.

152 - 3. கரை விரவுற்ற நறு மெல் கூந்தல் செ முக செலிலியர் கை மிக ருழீஇ—கரை கலத்தலுற்ற நறிய மெல்லியமபிரினையுடைய சிவந்தமுகத் தையுடைய செலிலித்தாயர் இவளாற்றா வாழுக்கமிகுகையினுலே நிரண்டு,

154. குறியவும் நெடியவும் உரை பல பயிற்றி—பொருளொடுபுணராப் பொய்ம்மொழியும் மெய்ம்மொழியுமாகிய உரைகள் பலவற்றையும் பலகாற் சொல்லி,

†"ஒன்றே மற்றுஞ் செலிலிக் குரித்தே" என்பது இலக்கணம்.

155 - 6. இன்னே வருகுவர் இன் துணையோர் என உரைத்தவை மொழி யவும் ஒல்லாள் மிக கலுழ்ந்து—இப்பொழுதே வருகுவர் நினைக்கினிய தினையாள் தன்மையையுடையோரெனது அவள்மனத்துக்கு இனியவார்த்தைகளைக்கூறவும் அதற்குப்பொருந்தாளாய் மிகக்கலங்கி,

157 - 8. [நுண்சேறு வழித்த சோனிலைத் திரள்கா. லூரு வறுமுலை கொளீஇய:] ஊரு வறுமுலை கொளீஇய நுண் சேறு வழித்த சோன் நிலை

* தூலில் - ஆடைவகையுள் உயர்ந்தது; "புடைதூழ்தூலில்" (181) என் பர் பின்னும்; "வாழ்வாரே, பட்டுந்தூலுமுடுத்து" (நாலடி. நன்றியில். 4.)

† தொல்காப்பியம், செய்யுளியல், 176.

நிரன் கால்—குடங்களைக் கடைத்துதைத்த சாதிலிங்கம்பூனை வலியினிலையினை யுடைய மேற்கட்டியிற் நிரண்டகால்களை,

158. கால் திருத்தி — கட்டிற்கால்களுக்கு அருகாகநிற்குப்படிபண்ணி அதனிடத்தேகட்டி,

ஊருவதுமுலே, குடத்திற்கு வெளிப்படை; முலேபோதலின் முலேயென்றார்.

159. [புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசை:] மெழுகு செய் படமிசை புதுவது இயன்ற — மெழுகுவழித்த பேற்கட்டியின்மேலே புதிதாக எழுதின,

160 - 61. [நிண்ணிலே மருப்பிலுதலேயாக, விண்ணூர்பு நிரிதரும்:] விண் — ஆகாயத்திடத்தே.

நிண் நிலே மருப்பின் ஆடு தலேயாக ஊர்பு நிரிதரும்—நிண்ணியநிலேயினே யுடைய கொம்பினையுடைய மேடராசிமுதலாக எனே இராகெளிற் சென்று நிரியும்.

161 - 2. வீங்கு செலல் மண்டிலத்து முரண் மிகு சிறப்பின் செல்வ னெடு நிலேய - மிக்க செலவினேயுடைய ஞாயிற்றேடே மாறுபாடுமிகுந்த தலேமையினேயுடைய நிங்களோடு *நிரியாமனின்ற,

163. உரோணி நினேவனள் சோ்ந்தி - உரோணியைப்போல யாமும பிரிவின்றியிருத்தலேப் பெற்றிலேமேயென்று நினேத்த அவற்றைப்பார்த்து.

ஞாயிறு, ஈண்டெழுநிய தன்று; நிங்களிற்கு அடைகூறிற்று.

நெடிது உயிரா—நெட்டுயிர்ப்புக்கொண்டு,

164 - 5. [மாயித ழேந்திய மலிந்துவி ழரிப்பனி, செவ்விரல் கடைக்கண் சேர்த்நிய நிலதெறியா:] மா இதழ் வீழ் கண் கடை மலிந்து எந்திய அரி பனி நில செவ் விரல் சேர்த்தி தெறியா—நீலப்பூவிரும்பினகண் தன்கடைக்கண்ணி டத்தேவர மிக்குச்சுமந்த ஐதாகிய நீர்நிலவழைச் வெந்த விரலேச்சேர்த்தித் தெறித்து.

என்றது - மிடவுமழாமல் மல்கினநீரைத் தெறித்தென்றார்.

166. புலமபொடு வதியும் லகம் இளா அரிவைக்கு — தனிமையோடு கிடக்கும் அன்பு மிகுகின்ற அரிவைகரு,

அரசன் பிரிகையிலுலே, நெடுவீழ்தாழ (137) நூல்யாதது (142) மாருர்ந்த கலிங்கத்தோடே (146) ஓதியினேயும் (138) காதினேயும் (140) விளக்கத்தினே யும் உடையளாய் (144) மிக்கலங்கி (156) உரோணி நினேவனளேஞ்சி நெடிதுயிர்த்துத் (163) தெறித்து (165) மகளிர் கல்லடிவருட (151) ஓயிய கடுப்ப (147) வதியுமரிவைக்கு (166) என வினேமுடிக்க.

166 - 7. அரிவைக்கு இன்ன அரு படர் நீர — அரிவைக்குத் தீதாயிருக கின்ற ஆற்றுதற்கரிய நினேவு நீரும்படி,

பாசறைத் தொழில் (188) விறல் தந்து (167) இன்னே முடிக தில் (168) - வேந்தன் பாசறையிடத்திருந்து பொருகின்ற போர்த்தொழில் அவனுக்கு வெற் றியகொடுத்து இப்பொழுதே முடிவதாக, இஃது எனக்குவிருப்பம் என முடிக்க.

---

* பி - ம். நிரியாமனின்ற.

168. அம்ம கேட்பாயாக;

இஃது, இவன்வருத்தமிகுதி தீரவேண்டிக் கொற்றவையைநோக்கிப்பரவு தின்றவள் கூற்றாயிற்று. கேட்பாயாகவென்றது கொற்றவையைநோக்கி. முடிக வென்ற வியங்கோள், வேண்டுகோட்பொருண்மைக்கண் வந்தது. நில், விழையின்கண் வந்தது

168 - 71. மின் அவிர் ஒடையொடு பொலிந்த வினை நவில் *யானை நீள் நிரை தட கை நிலமிசை புரள களிறு களம் படுத்த பெரு செய் ஆடவர்—ஒளி விளங்குகின்ற பட்டத்தோடே பொலிவுபெற்ற போர்த்தொழிலைப்பயின்ற யானையினுடைய நீண்டகிரண்ட பெருமையினையுடையகை அற்று நிலத்தே புரளும்படி யானையை முன்னர்க்கொன்ற பெரியசெயலையுடைய வீரருடைய,

செய்லென்னும் வினைப்பெயர் செய்யென முதனிலையாய் நின்றது.

172. ஒளிறு வாள் விழு பண் ணனிய புறம் போந்து—விளங்கும் வாளி னும் போழ்ந்த கிரியபுண்ணைக் கண்டுபரிகரித்தற்கு தானிருக்கின்ற இடத்திற் குப் புறம்பேபோந்து திரிதரும்வேந்தன் (187) என்க.

173. †வடந்தை தண் வளி—வடதிசைக்கணணதாகிய குளிர்ந்தகாற்று, என்றது வாடையை

173 - 5. [தணவரி யெறிதொறு துடங்கிய, தெற்கேர் பிறைஞ்சிய தலைய ‘ற்பல், பாண்டில் விளக்கிற் பருஉச்சுட ராழல] நல் பல்பாண்டில் விளக்கில் பருஉ சுடர் தண் வளி எறிதொறும நடங்கி தெற்கு ஏர்பு இறைஞ் சிய தலைய அழல—நன்றாகிய பலகால்விளக்கினிலெரிகின்ற பருத்தகொழுத்த வாடைக்காற்று அடிக்குந்தோறும் அசைந்து தெற்குநோக்கியெழுந்து சாய்ந்த தலையினையுடையவாய் எரிய.

விளக்கு ஆகுபெயர்.

176 - 7. வேர்பு தலை யாத்த நோன்காழ் எஃகமொடு முன்னேன் முறைமுறை காட்ட—வேப்பந்தாரைத் தலையிலேகட்டின வலிய காம்பினை யுடைய வேலோடே முன்செல்கின்றன சேனைபதி புண்பட்டவீரரை அடைவே அடைவேகாட்ட,

177 - 80. பின்னர் மணி புறத்து இட்ட மா தாள் பிடியொடு பருமம் கொயா பாய் பரி கலி மா இரு சேறு தெருவின எறி துளி விசிர்ப்ப—பின்னுக மணிகளைத் தன்னிடத்தேயிட்ட பெருமையையுடைய தாளினையுடைய குசை யோடே பக்கரைவாங்காத பாய்ந்துசெல்லுஞ் செலவினையுடைய செருக்கின குதிரைகள் கரிய சேற்றையுடைய தெருவிலே தம்மேலெவீசும் துளிகளையுத்த, தாளென்றது வாய்க்கருவியிற் கோத்துமுடியும குசையிற்றலையை.

181 புடை வீழ் அம் தூகில் இடவயின் தழீஇ—இடத்தோளினினறும் முலிவீழ்ந்த அழகினையுடைய ‡ஒலியலை இடப்பக்கத்தேயணைத்துக்கொண்டு,

182 - 3. வாள் தோள் கோத்த வன்கண் காளை சுவல் மிசை அமைத்த கையன்—வாளைத்தோளிலேகோத்த நறுகணமையையுடைய வாளெடுப் பான்றோளிலே வைத்த வலக்கையையுடையனும்,

---

* புறநா. 19 : 9 - 11.

† இப்பாட்டிற்கு ‘வடந்தைத்தண்வளி” என்னும் இத்தப்பகுதி உயிர் போன்றது. ‡ ஒலியல் - உத்தரீயம்.

183. *முகன் அமர்ந்து—புண்பட்டவீரர்க்கு அகமலர்ச்சிதோன்ற முகம் பொருந்தி,

184. தூல் சரல்யாத்த மாலை வெண்குடை—தூலாலே சுட்டத்தைக்கட்டின முத்தமாலையினையுடைய கொற்றக்குடை,

185. தவ்வென்ற அசைஇ தா துளி மறைப்ப—தவ்வென்னுமோசை பட்டு அசைந்து பரக்கின்ற துளியைக் காக்க,

தாழ்துளியும்பாடம்.

186 - 7. நன்னென் யாமத்தும் பள்ளிகொள்ளான் சிலரொடு திரிதரும் வேந்தன்—நன்னென்னுமோசையையுடைய நடுயியாமத்தும் பள்ளிகொள்ளானாய்ச் சிலவீரரோடே புண்பட்டோரைப் பரிசரித்துத் திரிதலைச்செய்யுமரசன்,

188. பலசொடு முரணிய பாசறை தொழில்—சேரன் செம்பியன்முதலிய †எழுவரோடே மாறுபட்டுப் பொருகின்ற பாசறையிடத்துப் போர்த்தொழில்.

புண்காணிய புறம்போந்து (172) சுடரழலகல் (175) காட்ட (177) விதிர்ப்பத் (180) தழீஇக் (181) கையுஞ் அமர்ந்து (183) மறைப்பப் (185) பள்ளி கொள்ளாஞய்த் (186) திரியும்வேந்தன் (187) என்க.

அம்ம (168) வானம் சார்காலத்து மழையைப்பெய்ததாகப் (2) பின்னாகிழக்குதிபொழுது கூதிர்க்காலமாய் நிலைபெற்றது (72); அக்கூதிர்க்காலத்து நடுயியாமத்தே (12) வாயிலினையும் (88) முனகடையினையும் (92) முற்றத்தினையும் (90) நெற்பினையுமுடைய (89) கோயில் (100) வரைப்புக்களிற் (107) காண்பினல்லிலிற் (114) பாண்டிலிற் (123) சேக்கையிலே (135) வதியுமரிவைக்குப் (166) படர்தீரும்படி (167) வேந்தன் (187) பலசொடுமுரணிய பாசறைத்தொழில் (188) விதறுந்து (167) இன்னேமுடிவதாக; இஃது எனக்கு விருப்பம் (168) எனக் கொற்றவையைப்பரவிற்குக வினைமுடிக்க.

இப்பாட்டுத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மண்ணையாச்சென்று பொருதலின், இப்போர் வஞ்சியாகலின், ‡வஞ்சிக்குக்கொற்றவைவியேண்மையின், கொற்றவையை வெற்றிப்பொருட்டுப் பரவுதல் கூறினர்; அது பாலைத்தினைக்கேற்றலின்.

பாண்டியன் நெடுஞ்செழியனை மதுரைக்கணக்காயனர்மகனர் நக்கீரனர்பாடிய நெடுநல்வாடைக்கு மதுரைஆசிரியர் பாரத்துவாசி நச்சினர்க்கினியர் செய்த உரை முற்றிற்று.

வெண்பா.

வாடை நலிய வடிக்கண்ணு டோணசைஇ
யோடை மழகளிற்ற னுள்ளான்கொல்—கோடன்
மூகையோ டலமர முற்றெரிபோற் பொங்கிப்
பகையோடு பாசறையு ளான்.

---


* தி.நக்.தூல், 84.

† எழுவர்பெயரையும் இப்புத்தகத்தின் 213 - ஆம் பக்கங்களின் கீழ்க் குறிப்புக்களாலுணர்க.

‡ பு - வெ. வஞ்சி. 5.

எட்டாவது

*குறிஞ்சிப்பாட்டு.



அன்னைப் வாழிவேண் டன்னை யொண்ணுத
லொலிமென் கூந்தலென் றேழி மேனி
விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோ
யகலு ளாங்க ணறியுநர் வினையும்
பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் லுருவிற் கடவுட் பேணி
நறையும் விரையு மோச்சியு மலவுற்
றெய்யா மையலே நீயும் வருந்துதி
நற்கவின் றொலையவு நறுந்தோ ணெகிழவும்
புட்பிற ரறிபவும் புலம்புவக் கலிப்பவு
முட்கரக் துறையு மூப்பா வருப்படர்
செப்பல் வன்மையிற் செறித்திபான் கடவலின்
முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை
நோவருங் குரைய கலங்கெடிற் புணருஞ்
சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்த
லாசறு காட்சி யையர்க்கு மங்கலே
யெளிய வென்னர் தொன்மருங் கறிஞர்
மாதரு மடனு மோராங்குத் தணப்ப
நெடுங்கே ரெந்தை யருங்கடி வீவி

* இது பெருங்குறிஞ்சியெனவும் வழங்கும்; "எருவையென்பது. 'எருவை ..... கருவிளை' எனக் கபிலர்பாடிய பெருங்குறிஞ்சியினும் வந்தது" (பரிபாடல். 19: 77 - பரி. உரை); "கபிலர்பாடிய பெருங்குறிஞ்சியில் வரையின்றிப் பூவையங்கியவாறு காண்க" — (தொல். அகத். சூ - 19 - க. உரை)

1. அன்னைவாழிவேண்டன்னை: ஐங்குறு. 201 - 10; அகநா. 48.

6. வேறுபல்லுருவிற்கடவுள்: (முருகு. 282); பல்வேறுருவின்: (குறிஞ்சி. 103); "மனக்கோ னினக்கென வடிவுவே றிலையே" (பரி. 4: 56.)

8. எய்யாமையென்னுமுரிச்சொல் அறியாமையென்னுங் குறிப்புணர்த்துமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். உரி. சூ. 44. இள. சேனா. உ; இ - வி. சூ - 290.)

13 - 4. "பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகும்" (முதுமை, 18.)

பிருவே மாய்ந்த மன்ற லிதுவென
ஈமமறி வுருலிற் பதிவு மூன்றோர்
வாற்றின் வாரா சாயினு மாற்றீ
வேனியுல கத்து மிமையவ ரன்மென
மானமர் நோக்கங் கல்லினிக் கையற்
றருளுச் சிறுமைய னிவனுஞ் தேம்பு
மிகன்மீக் கடவு மிருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல
விருபே ரச்சமோ டியானு மாற்றலேன்
கொடுப்பினன் குடைமையுங் குடிநிர வுடைமையும்
வண்ணமுக் தணையும் பொரீ இ பெண்ணை
தெமியேந் துனிந்த வேமஞ்சா ருருவினை
நிகழ்ந்த வண்ண நீநனி யுணரச்
செப்ப லான்றிசிற் சினவா தீமோ
நெற்கொ ணெடுவெதிர்க் கணந்த யானை
முத்தார் மருப்பி னிறங்குகை கடுப்பத்
துய்த்தலே வாய்ந்திய புனிறுதீர் பெருங்குர
னற்கோட் சிறுதினைப் படுபு லோப்பி
பெற்பட வருதிய ரெனநீ விடுத்தலிற்
கலிகெழு மாமிசைச் சேணெ னிழைத்த
புலியஞ் சிதண மேறி யவண
சாரற் சூரற் றகைபெற வலந்த
தழலுங் தட்டையுங் குளிரும் பிறவுங்
இனிகடி மாபின வூழுழ் வாங்கி

---

23. பா. வாரா தாயினும்.

31. வண்ணமென்பது இயற்சொ லென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். புறத். சூ - 27. ச. உரை). பா. வண்ணமுக் தொடையும்.

35 - 7. முத்தார் மருப்பு: (முருகு. 305; மலைபடு, 518.) நினைக்கதிர்க்கு யானைக்கை: "செங்கினை, மடப்பிடித் தடக்கை யன்ன ..... குரல்", "பிடிக்கை யன்ன பெருங்குர லேனல்" (குறுந். 198, 360); "ஒருத்த லெய்துகை கடுப்பத், தோடுதலே வாய்ந்திய நிதிருமற் பைங்கினை" (நற். 317.)

40. பா. மீமிசை.

43 - 4. "வெதிர்புனை தட்டையேன்" (நற். 147); "தழலுஞ் தட்டையு முறியுச் தர்து", "படுகினி தடியுஞ் கொடிச்சிகைக் குளிரே" (குறுந். 223. 291;) "தழலே வாங்கியுச் தட்டை யோச்சியும்" (அகநா. 188); குளிரும் குளிரியு மொக்குமெனக் கூறி இவற்றை மேற்கோள் காட்டுவர்: (கந்தை. 73 - உரை)

யாவுக்கதிர் தொடை முருப்பவி ரமயத்து
விசும்பாடு பறவை வீழ்பதிப் படர
நிறைபிரும் பௌவம் குறைபட முகந்துகொண்
டகலிரு வானத்து வீசுவளி கலாவலின்
மூசதிர்க் தன்ன வின்குர லேற்றெடு
நிரைசெல னிவப்பிற் கொண்மூ மயங்கி
மின்னிசை முரசிற் சுடர்ப்பூட் சேள
யொன்னார்க் கேந்திய விலங்கிலே யெஃகின்
மின்மயங்கு கருவிய கன்மிசைப் பொழிற்றென
வண்ண னெடுங்கோட் டிழிதரு தெண்ணீர்
ரவிர்துகில் புரையு மவ்வெள் ளருவித்
தவிர்வில் வேட்கையேற் தண்டா தாடிப்
பனிக்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி
நனிபடு சிலம்பிற் பரயம் பாடிப்
பொன்னெறி மணியிற் சிறுபுறந் தாழ்ந்தவெம்
பின்னிருங் கூர்தல் பிழிவனங் துவரி
யுள்ளகஞ் சிவந்த கண்ணோம் வள்ளித
ழொண்செங் காந்த ளாம்ப லனிச்சந்
தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடு வேரி தேமா மணிச்சிதை
யுரிதுகா றவிழ்தொத் துக்தாழ் கூவிள
மெரிபுரை யெறுழஞ் கள்ளி கூவிரம்
வடவனம் வாகை வான்பூங் குடசம்
மெருவை செருவிளை மணிப்பூங் கருவிளை
பயினி வானி பல்லிணர்க் குரவம்

---

49. "மூசதிர் பலவபோன் முழங்கிடி பயிற்றி" (பரி. 22).

51 - 3. "செல்வக் கடம்பமர்க்தான் வேண்மின்னி" (ஐந். 50: 1.) "கண்ணெனி செக்கிற் கடிய மின்னி" (பரி. 22: 7.)

57. "சூழ்ந்த பேரொளி தளும்பிய நிலனீர் சென்னெத், தாழ்ந்த வந்தி லிடைவயிற் றழீஇயினன் பளிக்கு, போழ்ந்தி யற்றிய நிலனெனப் பூம்புன லிடைப்போய், வீழ்ந்த னன்பெரு வேத்தவை முகிழ்முகை வினைப்ப" (பாக வதம், 10: தெப்பலினேச்சொன்ற. 118)

68. இவ்வடி, வருவை, மலர்விசேடமென்பதற்கு மேற்கோள்; (பரி 19: 77 - பரி.)

விரிமல ராவிரை வேரல் சூரல்
குரீஇப் பூளை குறுகறுங் கண்ணி
குருகிலை மருதம் விரிபூங் கோங்கம்
போங்கந் திலகந் தேங்கமழ் பாதிரி
செருந்தி யதிரல் பெருந்தண் சண்பகங்
காந்தை குளவி கடிகமழ் கலிமாத்
தில்லை பாலை கல்லிவர் முல்லை
குல்லை பிடவஞ் சிறுமா ரோடம்
வாழை வள்ளி நீணறு நெய்த
றழை தளவ மூட்டாட் டாமரை
ஞாழன் மௌவ னறுந்தண் கொகுடி
சேடல் செம்மல் சிறுசெங் குரலி
கோடல் கைதை கொங்குமுதிர் நறுவழை
காஞ்சி மணிக்குலைக் கட்கமழ் நெய்தல்
பாங்கர் மராஅம் பல்பூங் தணக்க
மீங்கை யிலவந் தூங்கினர்க் கொன்றை
யடும்பம ராத்தி நெடுங்கொடி யவரை
பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி
வஞ்சி பித்திகஞ் ஙிந்து வாரர்
தும்பை தழாஅப் சுடர்ப்பூங் தோன்றி
ஙந்தி நறவ நறும்புன் ஞகம்
பாரம் பீரம் பைங்குருக் கத்தி
யாரங் காழ்வை கடியிரும் புன்னை
ஙரந்த ஙாக நள்ளிரு ஞாறி
மாயிருங் குருந்தும் வேங்கையும் பிறவு
மரக்குவிரித் தன்ன பரேரம் புழகுடன்
மாலங் குடைய மலிவன மறுஙி
வான்கண் கழீஇய வகலறைக் குவைஇப்

---

84. "கட்கமழ் நெய்தலுரி" (முருகு. 74.)

87. 'அடும்பு' என்னும்பாடம் கோ; (கலி. 132; பதிற். 30; திணைமா. 51) பா. அடம்பமர்.

62 - 96. இவ்வடிகளிற் குறிஞ்சிநிலத்திற்கும் கூதிர்க்காலத்திற்கும் யாமத்திற்குமுரியபூக்களேயன்றி வேறுநிலத்திற்கும் வேறுகாலத்திற்குமுரியபூக்கள் மயங்கிவந்தமை "எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்" (தொல். அகத். 14) என்னும் சூத்திரத்தாலமையும்.

புள்ளா ரியத்த விலங்குமலைச் சிலம்பின்
வள்ளுயிர்த் தெள்விளி யிடையிடைப் பயிற்றிக்
கின்னோ போப்பியுங் கிளையிதழ் பறியாப்
பைவிரி யல்குற் கொய்தழை தைஇப்
பல்வே றுருவின் வனப்பமை கோதையெம்
மெல்லிரு முச்சிக் கவின்பெறக் கட்டி
யெரியவி ருருவி னங்குழைச் செயலைத்
தாதுபடு தண்ணிழ லிருந்த னாக
வெண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்த்
தண்ணறுந் தகரங் கமழ மண்ணி
யீரம் புலர விரலுளர்ப் பவிழாக்
காழகி லம்புகை கொளீஇ யாழிசை
யணிமிகு வரிமிஞி றூர்ப்பத தேங்கலக்து
மணிகிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின்
மலையவு நிலத்தவுஞ் சினையவுஞ் சுனையவும்
வண்ண வண்ணத்த மலராம்பு விரைஇய
தண்ணறுந் தொடையல் வெண்போழ்க் கண்ணி
நலம்பெறு சென்னி நாமுற மிலைச்சிப்
பைங்காற் பிதஹிகத் தாயித மூலரி
யந்தொடை யொருகாழ் வளைஇச் செருதீ
யொண்பூம் பிண்டி யொருகாது செரீஇ
யந்தளிர்க் குலவுமொய்ம் பலைப்பச் சாந்தருந்தி
மைந்திறை கொண்ட மலர்ந்தேந் தகலகதத்
தொன்றுபடு நறுந்தார் பூணொடு பொலியச்
செம்பொறிக் கேற்ற வீங்கிறைத் தடக்கையின்
வண்ண வரிவில் லேந்தி யம்புதெரிந்து
தண்வீணைக் கச்சைத் தபக்கறக் கட்டி
யியலணிப் பொலிந்தவீகை வான்கழ
றுயல்வருந் தோறுந் திருந்தடிக் கலாவ
மூணிபாழ் படுக்குந் துன்னருந் துப்பிற்

---

101. பா. பரியா.

118 - 9. அசோகம்பூவிற்கு நெருப்பு. (மதுரை. 700 - 701.) அசோகச் தளிரைச் காதிற்செருகல்; முருகு. 31 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

128. மூ. மலைபடு. 59.

பகைபுறம் கண்ட பல்வேல் தானை
ஞாவற்கொழு நிழற்றி அவற்குமொழி பிழையாது
மூவா வெண்கோ வள்ளுகிர் ஞமலி
இனையாக் கண்ண வினமுடு நெடுதர
நடுங்குவன மெழுந்து கல்லடி தகர்ந்தியா
மிடும்பைகூர் மனத்தே மருண்டுபுலம் படர
மாறுபொரு தோட்டிய புகல்வின் வேறுபுலத்
தாகாண் விடையி னணிபெற வந்தெதிர்
மலமா லாயிடை வெருவுத லஞ்சி
மெல்லிய வினிய மேவாக் கிளக்குதெம்
மைம்பா லாய்கவி னேத்தி யொண்டொடி
யசைமென் சாய லவ்வாங் குக்கி
மடமதர் மழைக்க ணினீயீ நிறந்த
கெடுதியு முடையே னென்றன னதனெதிர்
சொல்லே மாதலி னல்லாந்து கலங்கித்
கெடுதியும் விடுஇ ராயி னெம்மொடு
சொல்லலும் பழியோ மெல்லிய லீரென
கைவளம் பழுநிய பாலி வல்லோன்
கைகவர் நரம்பி னிமமென விமிரு
மாதர் வண்டொடு சுரும்புநயந் திறுத்த
தாதவி முலரித் தாதின் பிளந்து
தாறடு களிற்றின் வீறுபெற வோச்சித்
கல்லென் சுற்றக் கடுங்குர லலித்தெஞ்
சொல்லற் பாணி னின்றன ஞக
விருவி லேய்ந்த குறுங்கால் குரம்பைப்
பிணையோர் நோக்கின் மணையுறண் மடுப்பத்
தேம்பிழி தேறல் மாந்தி மகிழ்சிறந்து
சேம மடிந்த பொழுதின் வாய்மடுத்

---

132. பா னினையாக்.

138. "மெல்லிய வினிய மேவரு தகுதெ, னினைமொழி யுரைமெனச் சொல்லினும்" (குறுந். 306); "செவ்விய நினியசொல்லி" (கலி. 19.)

130 - 42 இவ்வடிகள், தலைவன் காய்காத்தலாற்றிற்கு மேற்கோள், (தொல். பொருளியல், சூ. 18. உ.)

146 சிறுபாண். 36.

152. இவ்வடி, ஆகெனெதிர்கூ பிரிவிலைநிலையாயிற்கற்கு மேற்கோள், (தொல். இடை. சூ. 32 - உ.)

நிரும்புன நிமித்தலிற் செய்ம்ம கோஞ்
சாவுற முஞ்சிலை கொளீஇ நோய்மிக்
குரவுச்சின முன்பா துடல்சினஞ் செருக்கிக்
கணைவிடு புடையூக் காணங் கல்லென
மடிவிடு வீரியர் வெடிபடுத் தெதிரக்
கார்ப்பெய நுருமிற் பிளிறிச் சிர்த்தக
விரும்பிணர்த் தடக்கை யிருளிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மான்கொல்பு
மையல் வேழ மடங்கலி னெதிர்தர
வுய்விட மறியே மாகி யொய்யென
திருந்துகோ லெல்வளை தெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்துவற் பொருந்திச்
சூருறு மஞ்ஞையி னடுங்க வார்கோ
ஓடுவுறும் பகழி வாங்கிக் கடிவிசை
யண்ணல் யானை யணிமுகத தழுத்தலிற்
புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப்
புள்ளி வரிதுதல் நிதைய நில்லா
தயர்ந்து புறங்கொடுத்த பின்னர் நெடுவே
ணணங்குறு மகளி ராடுகளங் கடிப்பத்
தினிநிலைக் கடம்பின் றிரளரை வளை இய
தணையறை மாலியிற் கைபிணி விடே
துரையுடைக் கலுழி பாய்தலி னுவத்திரை
யருங்கரை வாழையி னடுங்கப் பெருந்தகை
யஞ்சி லோதி யசைபல் யாவது
மஞ்ச லோம்புகின் னணிநல துகர்கென
மாசறு சுடர்துத னீவி நீடுநினைந்
தென்முக நோக்கி நக்கன னன்றிலே

---

161. பெரும்பாண். 166 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

162 - 5. யானைமுழக்கிற்கு இடி : பரிபாடல். 8 : 17 - 8.

167. பா. வணிதெளிர்ப்ப.

170 - 71. "செஞ்தொடைப் பகழி வாங்கிச் சினஞ்திறந்து, சருங்கைக் காளவன் களிற்றுயிரத் தழுத்தலின்" (தொல். செய். சூ. 95 - பேர். மேற்)

172. பாய்தல், பரத்தலென்னுங் குறிப்புப்பொருண்மையை யுணர்த்து மென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். உரிச். சூ. 63. ந; இ - வி. சூ. 281 - உரை.)

176 - 7. "கடம்பு சூடிய கண்ணி மாலைபோற், றொடர்ந்த கைவிடாத் தோழி மாரொடும்" (பேரு. 990)

180 - 88. இவ்வடிகள், தலைவன் களிறுகாத்தவாற்றிற்கும் புனலின் எதிரேறுதலுக்கும் மேற்கோள்; (தொல். பொருளியல். சூ. 13 - ச. உரை.)

நாணு மூட்கு நண்ணுவழி யடைதர
வொய்யெனப் பிரியவும் விடாஅன் கவைஇ
யாக மடைய முயங்கலி னவ்வழிப்
பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் றீங்கனி யுதிர்ந்தெனப்
புள்ளெறி பிரசமொ டுண்டிப் பலவின்
னெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேற
னீர்செத் தியின்ற தோகை வியலூர்ச்
சாறுகொ ளாங்கண் விழவுக்கள நந்தி
யரிக்கூட் டின்னியங் கறங்க வாடுமகள்
கயிறார் பாணியிற் றளருஞ் சாரல்
வரையர மகளிரிற் சாஅய் விழைதக
விண்பொருஞ் சென்னிக் கிளை இய காந்தட்
டண்கம ழலரி தாஅய் நன்பல
வம்புவிரி களத்திற் கவின்பெறப் பொலிந்த
குன்றுகெழு நாடனெம் விழைதகு பெருவிற
னுள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு
சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளனகர் பொம்ப
மலரத் திறந்த வாயில் பலருணப்
பைங்ணை மொழுகிய நெய்ம்மலி யடிசில்
வசையில் வான்றிணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்றே டுண்டலும் புரைவ தென்றுங்
கறம்புனை யாகத் தேற்றிப் பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழு
தேமுறு வஞ்சினம் வாய்மையிற் றேற்றி
யந்தீந் தெண்ணீர் குடிக்தலி னெஞ்சமர்ந்
தருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி
வானுரி யுறைபுள் வயங்கியோ ரவாவும்
பூமலி சோலை யப்பகல் கழிப்பி
யெல்லீ செல்ல வேழூர் பிறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலல் கல்சேர்பு மறைய

184. குறிஞ்சி. 21 - ஆம் அடியின் உரையைப்பார்க்க.
193 - 4. நளவெண். சுயம், 148.

மான்கண மரமுதற் றெவிட்ட வான்கணங்
கன்றுபயிர் குரல மன்றுறை புகுதர
வேங்குவயி ரிசைய கொடுவா யன்றி
லோங்கிரும் பெண்ணை யகமட லகவப்
பாம்புமணி யுமிழப் பல்வயிற் கோவல
ராம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற
வாம்ப லாயிதழ் கூம்புவிட வளமணைப்
பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி
யந்தி யந்தண ரயரக் காணவர்
விண்டோய் பணைவை மிசைஞெகிழி பொத்த
வான மாமலை வாய்சூழ்பு கறுப்பக் காணங்
கல்லென் றிரட்டப் புள்ளின மொலிப்பச்
சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத்
தினைஇய மாலை துன்னுதல் காணூஉ
நேரிறை முன்கை பற்றி நமர்தர
நாடறி நன்மண மயர்கஞ் சின்னுட்
கலங்க லோம்புமி னிலங்கிழை யீரென
வீர நன்மொழி தீரக் கூறித்
தினைபுண ரேற்றி னெம்மொடு வந்து
தஞ்சா முழவின் மூதூர் வாயி
லுண்டுறை நிறுத்துப் பெயர்ந்தன னதற்கொண்
டன்றை யன்ன விருப்போ டென்று

219. வயிரிசை மயிலுக்கு; (நெடுநல். 99.)

221. "நாம நல்லராக் கதிர்பட வுமிழ்ந்த, வாய்மணி விளக்கின்" (அகநா. 72.)

217 - 22. "அன்னுய் வாழிவேண் டன்னை யென்னுங் குறிஞ்சிப்பாட்டி னுள், 'மான்கண மரமுதற் றெவிட்ட ..... தெள்விளி பயிற்ற' என்புழி முல்லைக்குரிய கருப்பொருளாகிய ஆன்கணமும் பாம்பும் கோவலரும் ஆம்பற் குழலும் அதற்குரிய முதற்பொருளாகிய மாலையும் செய்தற்குரிய கருப்பொரு ளாகிய அந்திவிளக்கும் பிணையும் வந்தவாறுகண்டுகொள்க" — (நாற். ஒழிபு. சூ. 42 - உரை.)

215 - 30. மாலைவருணனை.

235. "மடநா குடைஞரச் செல்லு மழவிடைபோற் செம்மாந்து" (நன்னூல் விருத்தி. சுயம். 156.)

238. "தலைநா ளன்ன பேணலன்" (நற். 332), "இன்றை யன்ன கட்பின்", "பெருவரை யடுக்கத்துக் கிழவ னென்று. மன்றை யன்ன கட்பினன்" (குறுந். 199, 385), "தண்டாக் காதலுந் தலைநாட் போன்மே" (அகநா. 332), "இன்றே போல்கதும் புணர்ச்சி" (புறநா. 58.)

மிரவரன் மாலை னேவரு தோறுங்
காவலர் கடுஞினுங் கதகாப் குரைப்பினு
நீதியி னெழிலு நிலவுவெளிப் படினும்
வேப்புரை மென்றே ளின்றுயி லென்றும்
பெருஅன் பெயரினு முனிய துருஅ
னிளமையி னிகந்தன்று மிலனே வளமையிற்
றண்ணில நீர்த்தன்று மிலனே கொன்னூர்
மாய வரவி னியல்புணினித் தேற்றி
நீரெறி மலரிற் சாஅ யிதழ்சோரா
வீரிய கலுழுமிவள் பெருமதர் மழைக்க
ணுைதத் தரிப்பனி யுறைப்ப நாளும்
வலிப்படு மஞ்ஞையி னலஞ்செலச் சாஅய்
நினைத்தொறுங் கலுழுமா லிவளே கண்கு
லினைச்செறி யுழுவையு மாளியு முளியமும்
புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும்
வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினக்
திருமுஞ் சூரு மிரைதே ராவமு
மொடுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்குங்
கொடுந்தாண் முதலைபு மிடங்கருங் கராமு
நூழிலு மிழுக்கு மூழடி முட்டமும்
பழுவும் பாந்தளு முளப்படப் பிறவும்
வழுவின் வழாஅ விழுமமவர்
குழுமலி விடரக முடையவா லெனவே.

---

239. மாலை, இயல்பென்னுங்குறிப்பையுணர்த்துமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். உரி. சூ. 16 - இளம். சே. ந. உரை; இ - வி. சூ. 290 - உரை.)

231 - 44. உண்மைசெப்பற்கு இவ்வடிகள் மேற்கோள்; (தொல். பொருளியல், சூ. 13 - ச. உரை.)

245. பா. நிரிச்தன்றுமிலன்.

251 - 61. இவ்வடிகளுடன், "தலைமகன் இரவுக்குறி நீடுணர்ந்த நிலைமைக்கண், எம்பெருமான் வரும்வழி, எண்ணும் வெண்கோட்டியானையும் அரவும் உருமும் புலியும் வலையுமகளிருமுடைத்து; மற்றும் தெய்வங்கள் வெளவ வண்ணத்தன; ஏதம் விளைவது கொல்லோவென வேறுபடும்' (இறை. சூ. 29 - உரை) என்பது ஒப்பிடற்பாலது.

இதன்பொருள்.

இத்தற்குக் குறிஞ்சியென்ற பெயர்கூறினர்; இயற்கைப்புணர்ச்சியும் பின்னர் நிகழும் புணர்ச்சிகளுக்குமிடத்தக்கதும் கூறுதலின். அன்றியும் முதலானும் கருவானும் குறிஞ்சிக்குரியனவே கூறுதலானும் அப்பெயர் கூறினர். *"அறத்தொடு நிற்கும் காலத் தன்றி. யறத்தியன் மரபில தோழி யென்ப." என்பதனுள், தோழி அறத்தொடு நிற்குங்காலம்வந்து செவிலிக்கு அறத்தொடு நின்றவழி அதற்கிலக்கணங்கூறிய †" எளித்த லேத்தல் வேட்கை யுரைத்தல், கூறுத லுசாத லேநீடு தலேப்பா, டுண்மை செப்புங் கினவியொடு தொகைஇ, யன்னேழ வகைய தென்மனார் புலவர். " என்னுஞ் சூத்திரத்தேழனுள், கூறுத லுசாதலொழிந்த ஆறனுள்கூறி அறத்தொடுநிற்கின்றாளென்றுணர்க.

1. அன்னாய் வாழி—தாயே வாழ்வாயாக

[வேண் டன்னே :] அன்னே வேண்டு—தாயே யான்கூறுகின்றவார்த்தையை விரும்புவாயாக ;

1 - 12. [ஒண்ணுதல், லொலிமென் கூந்தலென றோழி மேனி, விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோ, யகலு ளாங்க ணறியுநர் வினும், பரவியுச்தொழுதும் விரவுமலர் தூஉம், வேறுபல் லுருவிற் கடவுட் பேணி, நறையும் விரையு மோச்சியு மலவும், நெய்யாமையேல நீயும் வருத்துநி, நற்கவின் றொலேயவு நறுந்தோ ணெகிழவும்,புட்பிற நறியவும் புலப்புவர் தலேப்பவு, முட்கார் துறையு முய்யா வரும்படர், செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின் :]

ஒன் றுதல் ஒலி மெல் கூந்தல் ‡விறல் மேனி என் தோழி உள் கார்து உறையும் உய்யா அரு படர்—ஒள்ளிய நுதலினேயும் தழைக்கும் மெல்லிய மயிரினேயும் பிறர் நிறத்தினேவென்ற வெற்றியினேயுடைய நிறத்தினேயுமுடைய என்னுடைய தோழி தன்மனத்துள்ளே மறைத்திருக்கும் தன்னுயிரைத் தான் தாங்கியிராமைக்குக் காரணமாகிய ஆற்றதற்கரிய நினேவு,

இழை நெகிழ்த்த வீவு அரு கடு நோய் செப்பல் வன்மையின் யான் செறித்து—தானணிர்தகலன்களே நெகிழப்பண்ணின மருந்துகளாற் கெடுத்தற்கரிய கடிய நோய் நினக்குச்சொல்லுதற்கு எளிதன்றி வலியதன்மையையுடைமையினுலே யான் அதனே என்னுள்ளேயடக்கி,

கல் கனின் தொலேயவும் நறு ஞதோள் நெகிழவும் புள் பிறர் அறியவும் புலப்பு வந்து அலேப்பவும் கடவலின்—அவளுடைய நன்றாகிய அழகுகெடவும் நறியதோள் மெலியவும் வினைகழலுதலேப் பிறரறியவும் தனிமை மேன்மேலே வந்து வருத்தவும் நினக்கு அறிவுறுமற் செலுத்துகையினுலே,

---

* தொல்காப்பியம், பொருளியல், சூ. 12.

† " " " 13.

‡ " நிறனென்ன " (கலி. 3) என்பதன் உரையைப்பார்க்க.

நீயும் அலவுற்று அகல் உள் ஆங்கண் அறியுநர் வினுய்—நீயும் அலம்வந்து அகன்றிடத்தையுடைய ஊரிடத்துக் *கட்டினுலும் †கழங்கினுலும் எண்ணியறிவாரைவினுலி அவர் தெய்வத்தான்வந்த வருத்தமென்றலின்,

வினுயுமென்றவிடத்தும்மையைப் பேணியென்பதன் பின்னே கூட்டுக.

வேறு உருவின் பல் கடவுள் நிறையும் விரையும் ஒச்சியும் பரவியும் தொழுதும் விரவு மலர் தூயும் பேணியும்—வேறுபட்ட வடிவினையுடைய பலதெய்வங்களேத் தாட்களும் சந்தனமுதலியனவுங்கொடுத்தும் பரவியும் வணங்கியும் கலந்தபூக்களேச்சிதறியும் வழிபட்டும் அதனுல் நீராமையின்,

பேணியுமென்னுமும்மை சிறப்பு ; எனைய எண்ணும்மை.

எய்யா மையலே வருந்துதி—இங்ஙோயையறியாத மயக்கத்தையுடையையாய் வருந்தாகின்றுய் ;

என் தோழி படர்இழைகெழித்ததோய் நினக்குச் செப்பல்வன்மையின் யான் செறித்துத் தொலேயவும் கெழுவும் அறியவும் அரிலப்பவும் கடவுளின் நீயும் அலவுற்று விறுய்க் கடவுளேப்பேணியும் எய்யாமையலேயாய் வருந்துதி யெனமுடிக்க.

13 - 4. [முத்தினு மணியினும் பொன்னினு மத்தினே, சோவருங் குரைய கலங்கெடிற் புணரும் :] அத்தினே முத்தினும் மணியினும் பொன்னினும் சோ வரும் கலம் கெடின் புணரும்—அவ்வளவாகிய முத்தாலும் மாணிக்கத்தாலும் பொன்னலும் பொருந்துதல்வரும் பூண் கெட்டதாயிற் பின்னும் வந்துகூடும் ; அதுபோலன்றி,

முத்தமுதலியவற்றிற்குக்கூறிய இலக்கணங்களே அத்தினேயென்றுர்.

குரைய அசை.

15 - 8. [சால்பும் வியப்பு மியல்புங் குன்றின், மாசறக் கழீஇ வயங்கு புகழ் நிறுத்த, லாசறு காட்சி யையர்க்கு மந்நிலே, யெளிய வென்னர் தொன் மரும் கதிஞர் :]

சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின் மாசு அற கழீஇ வயங்கு புகழ் அந்நிலே நிறுத்தல் — தத்தங்குலத்திற்கேற்ற குணங்களினமைதியும் மேம்பாடும் ஒழுக்கமும் பழையதன்மைகெட்டாற் பிறர்தஅழுக்கைப் போம்படிகழுவி வினகும்புகழை முன்புபோலே நிற்கும்படி நிறுத்தல்,

---

* கட்டு - தெருமுறத்திற் பரப்பிய செல்லிற்பார்க்கும் ஒருவகைக்குறி ; இங்ஙனம் குறிபார்ப்பவள், கட்டுவித்தியெனப் படுவாள் ; இதனேத் தீநுக்கா வையார், 285 - ஆம் செய்யுளாலும் அதனுரையாலும், " கட்டுவிச்சி கட்டோதிச சோர் சனிதற் செல்சல் பிடித்தெறியா, வோ விதிர்விதிரா மெய்சிலிராக் கை ஸோவாப், போ யிரமுடையா னென்குள் " (20 - 22) என்னுஞ் சிறியதிருமடலாலும் உணர்க.

† கழங்கு - கழற்கொடிக்காய்.

தொல் மரபுக்கு அறிஞர் ஆசு அறு காட்சி ஐயர்க்கும் எளிய என்னர்—பழைதாகிய நூலையறிவார் குற்றமற்ற அறிவினையுடைய தெய்வ இருடிகளுக்கும் எளியகாரிய மென்னீர்;

*"ஐயர் பாங்கினு மமரர்ச் சுட்டியும்" என்புராகலின் ஐயர் தேவராகார்.

19 - 20. [மாதரு மடனு மோராங்குத் தணப்ப, நெடுந்தே ரெந்தை யருங்கடி நீவி:]

நெடு தேர் எந்தை அரு கடி நீவி—நெடியதேரையுடைய என் தந்தையது அரிய காவலைக் கடந்து,

மாதரும் மடனும் ஓராங்கு தணப்ப—†இருமுதுகுரவரும் தமக்கு இயைந்தோர்க்குக் கொடுப்பேமென்றிருக்கின்றகாதலும் எனதுமடனும் சேரப்போக,

21. [இருவே மாய்ந்த மன்ற லிதுவென:] இது இருவேம் ஆய்ந்த மன்றல் என—இத்தமணம் தலைவனும் யானும் ‡பெருமையும் உரனும் அச்சமும் நாணும் நுணுகியகிலேபோற்பிறந்த §கர்தருவமணமென்று,

22. நாம் அறிவுருவின் பழியும் உண்டோ—நாம் யாய்க்கு அறிவுறுத்தலான் நமக்குப் புகழேயன்றி வருவதோர்பழியுமுண்டோ? அஃதில்லை;

உம்மை எச்சவும்மை. ஓகாரம் எதிர்மறை; §இது மறைநூல் விதித்த தாகலின்.

23. ஆற்றின் வாரார் ஆயினும்—இவ்வனம் அறத்தொடுநின்றபின் தலைவர்க்கே நம்மை அடை கோர்த்திலராயினும்.

ஆற்ற—நாம் உயிர்போன்றினையுங் இவ்வருத்தத்தைப் பொறுத்திருக்க,

24. [ஏனை யுலகத்து மியைவதா னமக்கென:] நமக்கு ஏனை உலகத்தும் இயைவதால் என—நமக்கு மறுபிறப்பினும் இக்கூட்டம் கூடுவதொன்றுமிருந்ததெனக்கூறி,

25 - 6. [மானமர் நோக்கங் கலங்கிக் கையற், றூஞ்சி னெமைய ளிவளுந் தேம்பும்:] ஆனு நெடுமையன் மான் அமர் நோக்கங்கலங்கி கையற்று இவளும் தேம்பும் — ஆற்றுந்தன்மைத்தல்லாத நோயினையுடையளாய் மான்நோக்கமமர்ந்த நோக்கமின்றி மையனெஞ்சுகொண்டு வினையொழிந்து அயர்ந்து இவளும் மெலியும்;

---

* தோல்காப்பியம், கற்பியல் சூ. 5.

† இருமுதுகுரவர் - தாய்தந்தையர்.

‡ பெருமையும் உரனும் தலைவன் குணங்கள்; அச்சமும் நாணும் தலைவியின் குணங்கள்; (தொல். களவு. சூ. 7, 8.)

§ இது வென்றது கர்தருவ மணத்தை; அது மறைநூல்விதியென்றதை, "மறையோர் தேவத்து மன்ற லெட்டனுட், டுறையமை நல்யாழ்த் திணைமையோ ரியல்பே" (தொல். களவு. 1), "அருமறை மன்ற லெட்டினுட், கர்தருவ் வழக்கம்" (இறை. 1.) "காந்தர்ப்ப மென்பதுணர்டாற் காதலிற்கலக்த சின்தை, மாந்தர்க்கு மடந்தை மார்க்கு மறைகளே வகுத்த கூட்டம்" (கம்ப. சூர்ப்பகை. 54.) என்பவற்றாலுணர்க.

இவரும் (26), வல்லிக் (25) கெடிதடி புணரும் (14); அதுபோன்றிச் சால்பு முதலியனருன்றின் (15) கிழத்தம் (16) எளியவென்னும் (18) ஆகலின், இகந்த இருவோர்ப்தமன்றலென (21) அறிவுருவிற் பழியுமின்மை (22)ஆம் றின்வாராமையும் ஆற்ற (23) வினையுடைத்தும் இயைவதாலெனக்கூறி (24) மெலியும் (26) எனமுடிக்க.

*"வகைவிடை வைத்த காலத்து வருந்தினும், வளையா ளாவிவ்வூர் தோள் முட்டினு. முரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணும், தானேகூறுங் காலமு முளவே" என்பதனுள், 'தானே கூறுங் காலமு முளவே' என்றதனுல் உடையளாயெனத் தலைவிகூற்றினைக் கொண்டுகூறினுளென்றுணர்க. †"செறிவு கிறையுஞ் செம்மையுஞ் செப்பு, மறிவு மருமையும் பெண்பா லான" என்பதனுல் மறை புலப்படுத்தலாகாதென்றாயினும், ‡"உற்றுழி யல்லது சொல்ல வின்மையி, னப்பொருள் வேட்கை யிழவியி னுணர்ப" என்பதனுல் மறைபுலப்படுத்தலுமாமென வழுவமைத்தலின் இங்ஙனம் தலைவிகூறினுள்.

இதனுல் தோழி §தலைப்பாடுகூறினுள்.

27 - 8. இகல் மீ கடவும் இரு பெரு வேந்தர் வினை இடை கின்ற சான்றோர் போல—மாறுபாட்டின்மிகுதியைச்செலுத்தும் இருவராகிய பெரிய அரசரைச் ||சந்திசெய்விக்குந் தொழிலிடத்தேகின்ற அறிவுடையோரைப்போல,

29. இரு பெரு அச்சமோடு யானும் ஆற்றலேன்—எனக்கும் இவன் வருத்தத்திற்குமஞ்சும் இரண்டு பெரிய அச்சத்தாலே யானும் வருந்தினேன்;

30. கொடுப்பின் நன்கு உடைமையும்—கொடுத்தபின்பு எல்லாவற்றினும் நன்றுமிழுதலையும்,

குடி நிரல் உடைமையும்—ஒருகுடியாகாமல் இரண்டுகுடியும் ஒத்தலுடைமையையும்,

31. வண்ணமும்—குணத்தையும்,

தினையும்—சுற்றத்து உதவினையும்,

பொரிஇ என்னுது—ஒப்பித்துப்பார்த்துப் பின்னரும் பலருடன் உசாவாதே,

¶"செந்தூறை, வண்ணப் பருதி வரையின் றுங்கே" என்பதனுல் வண்ணம் குணமென்றுணர்க.

---

* தொல்காப்பியம், களவியல், சூ. 21.

† ,, பொருளியல், சூ. 15.

‡ ,, ,, 14.

§ தலைப்பாடு கூறல் - தலைவனும தலையும் தாமே எதிர்ப்பட்டார், யான் அறிந்திலேனெனக்கூறல்.

|| சந்துசெய்வித்தல் - சந்திசெய்வித்தல்.

¶ தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 27.

32. எறியேம் தணிந்த ஏமம் சால் அரு வினை—நம்மையின்றித் தமியே மரீஇ யுள்ளே தணிந்த உயிர்க்குப் பாதுகாவலமைந்த செய்தற்கரிய இக்கந்தரு வரணம்பூ,

நாணும் புணர்ச்சிக்குப்பின் உடம்படுதலின், எறியேந்தணிந்தவென்றான்.

33. கிழக்ந்த வண்ணம்—முன்புபாடந்தபடியை,

33 - 4. நீ ஈனி உணர செப்பல் ஆன்றிசின்—நீ மிகவுமறியும்படி சொல்லுதலியைமன்றேன்,

34. எனவாறோ—அதுகேட்டுச்சினவாதிருப்பாயாக,

35. செல் கொன் செடு வெதிர்க்கு அணர்ந்த யானை—செல்லைத் தன்னிடத்தேகொண்ட செடிய மூங்கிலைத்தின்றற்கு மேலேக்கிின்றுவருந்தின யானை அவ்வருத்தந்தீரும்படி,

36. முத்தி ஆர் மருப்பின் இறங்கு கை கடுப்ப—முத்துநிறைந்த கொம்பிலே எறட்டுதான்ற கையையொப்ப,

37 - 8. துய் தலை வாங்கிய புனிறு தீர் பெரு குரல் நல் கோள் சிறு தினை பழ புள் ஒப்பி—துய்யையுடைய தலைவளைந்த ஈன்றணிமைதீர்ந்த பெரிய கதிர் தினை கன்முகத் தன்னிடத்தேகொள்ளுதலையுடைய சிறிய தினையிலேவீழ்கின்ற ஒளிகினையோட்டி,

துய்—இனைதாணைருவத்துப் பஞ்சுநினைபோன்றிருப்பது.

கடுப்ப வினைந்த வென்க.

39. எல் பட வருதியர் என நீ விடுத்தலின்—பகற்பொழுதுகழியாதிற்க நீர்வருவீராகவென்றுகூறி நீ போகவிடுகையினலே யாங்களும்போய்,

வருதியர், வியங்கோண்முற்று.

40 - 41. கலி கெழு மரம் மிசை சேணோன் இழைத்த புலி அஞ்சு இதணம்—ஆரவாரம் பொருந்தின மரத்தினுச்சியிலே இராக்காலம் ஆகாயத்திருப் போன்பண்ணின புலி அஞ்சுகைக்குக்காரணமான பரண்,

*" சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி " என்றுர்பிறரும்.

41 - 2. [எறி யவண, சாரற் சூரற் றகைபெற வலர்த:] அவண சாரல் சூரல் தகை பெற வலர்ந்த இதணம் (41) எறி—அவ்விடத்தனவாகிய மலைப்பக்கத்துப்பிரம்பாலே அழகுபெறத் †தெற்றின இதணத்தேயேறி,

இனிச் சூரலாலேபிணித்த தழலென்றுமாம் சூரல் - சூரற்கொடியுமாம்.

43. தழலும்—தழலும்,

தழலாவது கையாற்சுற்றினகாலத்துத் தன்னிடத்துப் பிறக்குமோசையாற் கிளிமுதலியவற்றை ஓட்டுங்கருவி; கவணென்பாருமுளர்.

தட்டையும்—தட்டையும்,

---

* குறுந்தொகை, 150. † தெற்றின - பின்னின.

தட்டையாவது மூங்கிலைக் கண்ணுக்கண் உள்ளாகறுத்திப் பலவாகப் பிளத்து ஓசையுண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவி.

குளிரும்—குளிரும்,

குளிராவது இலைபோல்வதோ இளிகடி *கருவி,

பிறவும்—வேனயவும,

பிறவென்றது கவண்முதலியவற்றை.

44. இளி கடி மரபின ஊழ் ஊழ் வாங்கி—தழலும் தட்டையும் குளிரும பிறவுமாகிய இளியோட்டுமுறைமையினையுடையவற்றை முறையேமுறையே கையிலேவாங்கி ஓட்டி,

45. உரவு கதிர் தெறூஉம் உருப்பு அவிர அமயத்து—மிகுதலேயுடைய ஞாயிற்றின்கிரணஙகள்சுடும் வெமமைவிளஙகுகின்ற பொழுதிலே ஊழ்வாஙகி (44) எனக.

46. விசும்பு ஆடு பறவை வீழ் பதி படர—ஆகாயத்தேபறக்கும் பறவைக ளெல்லாம் தாமவிருமபுஞ் †சேக்கைகளிலே செல்லுமபடியாக,

47 - 53. [நிறையிரும பௌவஙு குறைபட முகந்துகொண், டகலிரு வானத்து வீசுவளி கலாவலின, முரசதிர்ந் தன்ன வினகுர லேற்றெடு, வினர செல னிவப்பிற் கொணமூ மயஙகி, யினனிசை முரசிற் சுடர்ப்பூட் சேவ, யொன்ஞர்க் கேந்திய விலஙகிலே யெஃகின், மின்மயங்கு கருவிய :]

நிறை இரு பௌவம குறைபட முகந்துகொணடு முரசு அதிர்தனன இன் குரல் எற்றெடு நிரை செலல் நிவப்பின் கொண்மூ—நிறைதத கரியகடலேக குறையுண்டாம்படிமுகந்துகொண்டு முரசு சிறிதமுழஙகினற்போன்ற இனிய குரலேயுடைய உருமேற்றோடே நிரைதது செல்லுதலேயுடைய ஓக்கத்தினே யுடையமேகம,

இன இசை முரசின சுடர் பூண் சேய ஒன்ஞர்க்கு ஏந்திய இலஙகு இலே எஃகின மின் மயஙகு கருவிய—இனிய ஓசையையுடைததாகிய முரசினே யும், ஒளியினேயுடைததாகிய அணிகலஙகளேயுமுடையமுருகன அசுரரைக கொல்லுதற்கெடுத்த வினஙகுகின்ற இலைததொழிலேயுடைய வேல்போல மின னுமயங்குகின்ற தொகுதிகளேயுடையவாய்

அகல் இரு வானத்து வீசு வளி கலாவலின மயஙகி—எனப்பூதஙகள விரிதற்குக்காரணமான காரியஆகாயத்திடததே வீசுகின்ற காற்றுத் தனனிடத தே சுழுகையினுலே நிறைதத நிரைபோய்க் கலஙகி,

53. கல் மிசை பொழிந்தென—மலேமேலே பெய்தவாக,

---

* இனைப்புனதநிற் இளியோப்புவோர் மூஙகிலே வீணைபோற் கட்டித தெறிக்குங கருவியென்பர்.

† சேக்கை - கூடு; "சேக்கை மரஞெழியச் சேணீஙகு புள்" (நாலடி. யாக்கை. 10.)

செல்வி (50) கருகியவாய் (53) மயங்கிப் (50) பறவை பதிப்படைப் (46) பொழிற்றென (53) என்க.

54 - 8. அண்ணல் நெடு கோடு இழிதரு தென் நீர் அலர் தலில் புரையும் அ வென் அருவி தவிர்வு இல் வேட்டையேம் தண்டாத ஆடி—தலைவனுடைய செடிய மலைச்சிகரத்தினின்றும் குதிக்கின்ற தெளிந்த நீரையுடைய வெள்ளருவின்ற வெள்ளிய தலிலையொக்கும் அழகிய வெள்ளிதாகிய அருவியிலே நீங்குதலில்லாத விருப்பையுடையேமாய் அமையாமல் விளையாடி,

அண்ணல் மலையில் அருவியென்வே நிலமென்றெண்ணுள்.

57 - 8. [பளிங்குசொரி வன்ன பாய்சினை குடைவுழி, களிபடு இலம்பில்:] களி படு இலம்பில் பளிங்கு சொரிவு அன்ன பாய் சினை குடைவுழி—செறிவுண்டானமலையிடத்துப் பளிங்கைக்கரைத்துச் சொரிந்துவைத்தாற்போன்ற பரந்த சுனையைக் குடைந்துவிளையாடுகின்றவிடத்தே

58. *பாயம் பாடி—எங்கள்மனத்துக்கு விருப்பமானவர்தைப் பாடி,

59 - 60. பொன் எறி மணியின் சிறு புறம் தாழ்ந்த எம் பின் இரு கூந்தல் பிழிவனம் †தவரி - பொன்னிலேபழுத்தின நிலமணிபோலே சிறிய முதுகிடத்தே தாழ்ந்திடந்த எம்முடைய பின்னுதலையுடைய கரியகூந்தலே நீரைப் பிழிந்து சாத்தைப்புலர்த்தி,

61. உள் அகம் சிவந்த கண்ணேம் – உள்ளாகிய இடமெல்லாஞ் சிவந்த கண்ணேமாய்,

61 - 2. வள் இதழ் ஒள் செங்காந்தள்—பெரிய இதழையுடைய ஒள்ளிய சிவந்த கோடற்பூ,

62. ஆம்பல் அனிச்சம் – ஆம்பற்பூ அனிசப்பூ,

63. தண் கயம் குவளை—குளிர்ந்த குளத்திற்பூத்த செங்கழுநீர்ப்பூ,

குறிஞ்சி – குறிஞ்சிப்பூ,

வெட்சி—வெட்சிப்பூ.

64. செங்கொடுவேரி— செங்கொடுவேரிப்பூ,

‡தேமா - தேமாம்பூ,

மணிச்சிகை—செம்மணிப்பூ,

65. உரிதாக நறு அவிழ் தொத்து உந்தூழ் – தனக்கு உரித்தாக நாறும் விரிந்த கொத்தினையுடைய பெருமூங்கிற்பூ,

கூவிளம்—§வில்லப்பூ,

---

* பாயம் - மனவிருப்பம் (பெரும்பாண். 342.)

† தவர்தல் - உலர்தல்; "கண்ணுள்வாயுந் துவர்ந்து" (திருவாய். 8 5: 2.)

‡ 'தேமா' என்பதுமுதல் 'பெருமூங்கிற்பூ' என்பதிறுதியாகவுள்ளவை களெல்லாம் தருமபுரஸ்வாமிமடத்திலிருந்துகிடைத்த ஒரு பழைய எட்டுப்புத்தகத்தில் மட்டும் இருந்தன.

§ வில்லம் - வில்வம்.

66. எரி புரை எறுழம்—செருப்பையொத்த எறுழம்பூ,
சுள்ளி—மராமரப்பூ,
கூவிரம்—கூவிரப்பூ,
67. வடவனம்—வடவனப்பூ,
வாகை—வாகைப்பூ,
வால் பூ குடசம்—வெள்ளிய பூவினையுடைய வெட்பாலைப்பூ,
68. ஏருவை—பஞ்சாய்க்கோரை,
கொறுக்கச்சியுமம்.
செருவிளை—வெண்காக்கணம்பூ,
மணி பூ கருவிளை—நீலமணிபோலும் பூக்களையுடைய கருவிளம்பூ.
69. பயினி பயினிப்பூ,
வானி—வானிப்பூ,
பல் இணர் குரவம்—பல இதழ்களையுடைய குரவம்பூ,
70. *பகன்றிப்பிடி—பச்சிலைப்பூ,
வகுளம்—மகிழம்பூ,
பல் இணர் காயா—பல கொத்துக்களையுடைய காயாம்பூ,
71. விரி மலர் ஆவிரை—விரிந்த பூக்களையுடைய ஆவிரம்பூ,
வேல்—திறமூக்கிற்பூ,
சூரல்—சூரைப்பூ.
72. சூரிஇப்பூவை—சிறுபூவை,
குறுநறுங்கண்ணி—குன்றிப்பூ,
73. சுருகிலை—முருக்கிலை,
மருதம்—மருதப்பூ,
விரி பூ கோங்கம்—விரிந்த பூக்களையுடைய கோங்கம்பூ,
74. போங்கம்—மஞ்சாடிப்பூ,
நிலகம்—மஞ்சாடிமரத்தின்பூ,
தேன் கமழ் பாதிரி—தேனுறும் பாதிரிப்பூ,
75. செருந்தி—செருந்திப்பூ,
அதிரல்—புனலிப்பூ,
பெரு தண் சண்பகம்—பெரிய குளிர்ந்த சண்பகப்பூ,
76. கரந்தை—நாறுகரந்தை.
குளவி—காட்டுமல்லிகைப்பூ,
கடி கமழ் கலி மா—விரைகமழும் தழைத்த மாம்பூ,
77. நிலவை—நில்லைப்பூ,
பாலை—பாலைப்பூ,
கல் இவர் முல்லை—கல்லிலேபடர்ந்த முல்லைப்பூ,

* பரிபாடல், 19 : 75.

78. ஞெலி—தஞ்சங்குலிலப்பூ,
பிடவம்—பிடவம்பூ,
பெருமாரோடம்—செங்கருங்காலிப்பூ,
79. வாழை—வாழைப்பூ,
வள்ளி—வள்ளிப்பூ,
நீள் கறு செய்தல்—நீண்ட நறிய செய்தற்பூ.
80. தாழை—தெங்கிற்பா ள,
†தளவம்—செம்முல்லைப்பூ,
முள் தாள் தாமரை—முள்ளையுடைத்தாகிய தாளையுடைய தாமரைப்பூ,
81. ‡ஞாழல்—ஞாழற்பூ,
மௌவல்—மௌவற்பூ.
நறு தண் - §கொகுடி—நறிய குளிர்ந்த கொகுடிப்பூ.
82. சேடல்—பவழக்கான் மல்லிகைப்பூ.
செம்மல்—சாதிப்பூ.
பெருசெங்குரலி—கருந்தாமக்கொடிப்பூ,
83. கோடல்—வெண்கோடற்பூ,
கைதை—தாழம்பூ,
கொங்கு முதிர் கறு வழை—தாதுமுதிர்ந்த நறிய சுரபுன்னைப்பூ.
84. காஞ்சி—ஞாஞ்சிப்பூ,
மணி ஞலை கள் கமழ் செய்தல்—நீலமணிபோலுங் கொத்துக்களையுடைய தேனுமும் கருங்குவளை,
85. பாங்கர்—‖ஓமை.
மராஅம்—மரவம்பூ,
பல் பூ தணக்கம்—பல பூக்களையுடைய தணக்கம்பூ.
86. சுரும்பை—இண்டம்பூ.
இலவம்—இலவம்பூ,
தூங்கு இணர் கொன்றை—தூங்குகின்ற பூங்கொத்தினையுடைய கொன்றைப்பூ,
87. அடும்பு—அடும்பம்பூ.
அமர் ஆத்தி—பொருந்தின ஆத்திப்பூ,
கொடு கொடி அவரை—கொடிய கொடியினையுடைய அவரைப்பூ,
88. பகன்றை—பகன்றைப்பூ,

---

* கஞ்சங்குலலி - கஞ்சா.
† ஐங்குறு. 447; அகநா. 23.
‡ ஞாழல் - புலிகக்கொன்றை.
§ கொகுடி - ஒருவகைமுல்லை; "கொகுடி முல்லை" (வட்டுராங்கோடு துறை, ஞான. தே. 1.)
‖ ஓமை - ஒருவகைமரம்

இது வெண்டை; *"பன்றைப்பூ அறிவிடை பாவைத் தினை" என்பதனி வெள்ளிவீட்டில் உலைமைகோடலின், இது தினைத்தாள்களைத்து.

பலாசம்—பலாசப்பூ,
பல் பூ பிண்டி—பலவாகிய பூக்களையுடைய அசோகம்பூ,
89. வஞ்சி—வஞ்சிப்பூ,
பித்திகம்—பிச்சிப்பூ,
சித்துவாரம்—கருநொச்சிப்பூ,
90. தும்பை—தும்பைப்பூ,
தழாஅய்—திருத தழாய்ப்பூ,
கூடர் பூ தோன்றி—விளக்குப்போலும் பூவினையுடைய தோன்றிப்பூ.
91. கந்தி—கந்தியாவட்டப்பூ,
கறவம்—கறைக்கொடி,
கறு புன்னகம்—இது புன்னையின்விசேடம்,
92. பாரம்—பருத்திப்பூ,
பீரம்—பீர்க்கம்பூ.
பைங்குருக்கத்தி—பசிய குருக்கத்திப்பூ,
93. வூரம்—சந்தனப்பூ,
காழ்வை—அகில்பூ,
கடி இரு புனை—மணத்தையுடைய பெரிய புனைபூ.
94. காந்தம்—காந்தம்பூ,
காகம்—காகப்பூ,
கள்ளிருணறி—†இருவாட்சிப்பூ,
95. மா இரு குருந்தம்—கரிய பெரிய குருந்தம்பூவும
வேங்கையும்—வேங்கைப்பூவும்,

95-7. [பிறவு, மாகருவிரித தன்ன பரேசம் ‡புழகுடன், மாலவ குடைய:] அங்கு மால் உடைய அரசுக் விரிததனன பிறவும் பரேமபுழ குடன—அச்சாலிடத்துத் தம்மில் மயக்கமுடையவாய்ச் சாதிலிங்கததைப் பரப பினுற்போன்ற பிறபூக்களையும் பருத்த அழகினையுடைய மலியெருக்கமபூவு டனே,

பரேம்புழகு - §செம்பூவுமாம; புனமுருங்கையுமென்பர்.

97. மலிவனம் மறுகி—பூக்களிடதே மனவேட்கையிக்குப் பலகாலும நிரித்தபறித்து,

98. வான் கண் கழீஇய அகல் அறை குவைஇ—மழை பெய்து தன னிடத்தைக்கழுவித் தூய்தாக்கின அகன்ற பாறையிலே குவித்து,

---

* கலித்தொகை, 73.

† இருவாளியென்பது இருவாட்சியென்ற வழங்குகின்றதுபோலும்.

‡ "அழகமென்றிப்புழக" (திருவாலவ. 36: 12.)

§ "செறிவினைப் பொலிந்த செம்பூங் கண்ணிய" (பரிபாடல், 22: 21.)

எண்ணெய் (61), மலிவுமதமும் (97) *பரோம்புழுகுடனே* (96) *ஒண் செங்காந்தள்* (62) *முதலியவற்றையும் பிறவற்றையும்* (95) *பாதையிலேகுவித்து* (98) *வரவேற்க.*

செங்காந்தள் (62) *முதலியவற்றிற்கெல்லாம் இரண்டாமுருபும் உம்மையும் விரிக்க, குருத்தும் வேங்கையும் பிறவும்* (95) *என்ற மூன்றற்குப் உருபுவிரிக்க.*

QD, *புள் ஓர் இயத்த—பறவைகளின் ஓசையாகிய நிறைந்த வாச்சியங் களையுடையன,*

மீன்கு மலே நிலம்பின—ஒன்றற்கொன்று குறுகுகிடந்திடங்கினை மலைப் பக்கத்திற்புனத்தே

100 - 101 *வன் உயிர் தெள விளி இடையிடை பயிறறி னிளனே ஓப்பி யும—பெரிய ஓசையினையுடைய தெளிந்தசொறகளே கடுவோடுவேசொல்லித் தினையை ஓட்டுதலைசெய்தும் தழை தைஇ* (102) *யெனக*

*சொல் - *தினையையொட்டுஞ்சொல்*

தினையையுமோப்பியெனச நெறபுமமை

101 *னினை இதழ பறியா—புறவிதழகளே வாங்கிப்போகட்டு,*

102. *பை விரி அல்குல் கொய தழை தைஇ—பாம்பினபடத்தைப் போலே பரந்த அல்குலுக்குத தழையைகட்டியுடுத்து,*

கொய்தழை - மிக்கவிடங்களே நறுகினதழை

103 - 4. *பல் வேறு உருவின வனபபு அமை கோதை எம் மெல் இரு முசி கவின் பெற கட்டி—†பலவாய வேறபட்ட நிறதையுடைய அழகமைந்த மாலைனை-எம்முடைய மெல்லிய கரியமுடியிலே அழகுபெறசுற்றி,*

105 - 6. *எரி அவிர் உருவின அம குழை செவிலை தாது படி கண் நிழல் இருந்தனமாக- நெருப்புப்போலவிளங்கும நிறதையுடைய அழகிய தளிரை யுடைய அசோனைது தாதுவிழுனை குளிர்ந்த நிழலிலே இருந்த அனவிலே,*

107. [*எண்ணெய் நீவிய சுரிவளர நறுங்காழ*]

சுரிவளர்நறுங்காழ், பினனேகூட்டுதம்

எண்ணெய் நீவிய கலம பெறு சென்னி (110)—*பலகாலும எண்ணெய் வார்த்த கண்மையைப்பெற்ற தலையிற குஞ்சி* (112) *எனக.*

108. *தண் நறு தகரம் கமழ மணணி—குளிர்ந்த நறிய மயிர்ச்சச் தனதை நாறும்படியாகப்பூசி,*

---

* இஃது *ஆயோவென்பது*; "*ஆயோவெனவு மணஞுமலையாரை*" (ஞான. தே.), "*ஆயோவெனப்போகா*" (*நந்தபாநபபதம், சுந்தர*), *கினியுமென்கு மாயோவதுச்சொண்டையோ*" (*திவ் திருவிருத்தா*, 16); *புனகாவல்கொண், டாயோ வெனமொழியு மம்மழலே யினனிசையால்*" (*தூனா. சுயப*, 104.)

† *பலவகைப்பட்ட மாலைகளினியல்பைப் பினபுகுறிக்கத இடங்களிலுள்ள செய்புட்களைநோக்குக*: — *பரிபாடல்*, 19: 80 - 82, 20 29 - 30; *கலை.* 2656, 2919; *பெரிய மூருக.* 9.

109. *சரம் புலர வீசல் உளர்ப்பு அவிழா—அந்த சரம்புலரும்படி விரலா லெறித்துப் புலர்த்துதற்றொழிலாலே பிணிப்பையவிழ்த்து,*

110. *கறு காழ்* (107) *காழ் அகில் அம் புகை கொளீஇ—அதினே கறிய கரிய வயிரத்தினேயுடைய அகிலினது அழகிய புகையூட்டுகையினுலே,*

இதில் கறுங்காழ் கூட்டிற்று.

110 - 11. *யாழ் இசை அணி மிகு வரி மிஞிறு ஆர்ப்ப தேங்கலர்த்து—யாழோசையினது அழகுமிகுகின்ற பாட்டினேயுடைய மிஞிறுகள் ஆரவாரிக்கும் படி அகிலினது நெய்கலர்த்து.*

112. [மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின :]

மணி நிறம் கொண்ட சுரி வளர் (107) மா இரு குஞ்சியின்—*நீலமணியினதுநிறத்தைத் தன்னிடத்தேகொண்ட கடைகுழன்றுவளர்ந்த கரிய பெரிய மயிரின்கண்ணே,*

இதிற் சுரிவளர் கூட்டிற்று.

மண்ணி (108) அவிழாப் (109) புகைகொளுவுகையினுலே (110) தேங்கலர்த்து (111) ஒருகாழ்வனேஇ (118) மணிநிறங்கொண்ட குஞ்சி (112) என்க.

113. மலையவும் நிலத்தவும் கானவும் சுனையவும் - மலையிடத்தனவும் நிலத்திடத்தனவும் கொம்புகளிற் பூத்தனவும் சுனைகளிற்பூத்தனவுமாகிய,

114. வண்ணம் வண்ணக்க மலர்—பலநிறங்களேயுமுடையமலர்,

பல சாதிகளேயுமுடையமலர்,

என ஒன்று நிறமும் ஒன்று சாதிவேறுபாடும் கூறினர்.

114 - 5. *ஆய்பு விரைஇய தண் நறு தொடையல் வெள் போழ் கண்ணி—அம்மலரை ஆராய்ந்துதொடுத்த தண்ணிய நறிய தொடையலினேயும் வெள்ளிய தாழைமடலிலேயுடைத்தாகிய கண்ணியினேயும்,*

116. [நலம்பெறு சென்னி நாமுற மிலேச்சி :]

நாம் உற மிலேச்சி முருகனென்றச்சமுறும்படி சூடி,

குஞ்சியின் சென்னி (112) மிலேச்சியென்க.

நலம்பெறுசென்னி, முன்னேகூட்டிற்று.

117 - 8. *பைங்கால் பித்திகத்து ஆயிதழ் அலரி அம் தொடை ஒருகாழ வனேஇ — பசியகாம்பினேயுடைய பிச்சியினுடைய அழகியஇதழ்களேயுடைய பூவைத்தொடுத்த அழகினேயுடைய தொடையாகிய ஒருவடத்தைச் சுற்றி,*

இஃது அந்திக்காலத்துமலரும் பூவாதலின், அதனைத் தேங்கலர்த்து (111) ஒருகாழ்வனேஇ (118) மணிநிறங்கொண்டகுஞ்சி (112) எனக் குஞ்சிக்கு இயல்பாகி முன்னேகூட்டுக.

118 - 20. [செந்தீ, யொண்பூம் பிண்டி யொருகாது சேரீஇ, யந்தளிர்க் குவவுமொய்ம் பலேப்ப :] குவவு மொய்ம்பு அலேப்ப செந்தீ ஒண் பூ பிண்டி அம்

* "இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்" (சூடா. மிழலை. 56.)

தனிர் ஒருகாது சேரிஇ—நிரைஞாலேயுடைய தோளிலேவீழ்ந்து அலைக்கும்படி வெற்ற பொருப்புப்போலும் ஒள்ளிய பூக்களையுடைய அசோகினது அழகிய தனிமை ஒருகாதிலே செருகி,

120 - 22. சாந்து அருந்தி மைத்து இறைகொண்ட மலர்ந்து ஏந்து அகலத்து தொன்று படு பூணெடு நறு தார் பொலிய—சந்தனத்தை உள்ளடக்கி வலிதங்குதல்கொண்ட அகன்றுயர்ந்த மார்பிடத்தே தொன்றுபட்டுவருகின்ற பேரணிகலங்களோடே நறியமாலே பொலிவுபெற,

123. செம்பொறிக்கு ஏற்ற — *மூன்றுவரியாகிய உத்தமவிலக்கணத் திற்குப் பொருந்தின மார்பு (121) என்க.

123 - 4. வீங்கு இறை தட கையின் வண்ணம் வரி நிலை வந்தி அம்பு தெரித்து—பூண் இறுகின முன்கையையுடைய பெரியகையிலே வண்ணத்தை யுடைய வரிந்த வில்லேயெடுத்து அம்புகளைத்தெரிந்துபிடித்து,

125. நுண் வினை கச்சை தயக்கு அற கட்டி—நுண்ணிய தொழில்களை யுடைய கச்சைக் கட்டினசேலைதளர்ச்சியறக்கட்டி,

126 - 7. [இயலணிப் பொலிந்த வினை வான் கழ, துயல்வரும் தோறும் திருந்துடிக் கலாவ:] ஈகை இயல் அணி பொலிந்த வான் சுழல் துயல்வரும் தோறும் திருந்து அடி கலாவ—பொன்னுற்செய்யப்பட்ட பூண்களிற்பொலிவு பெற்ற ஈன்றருகிய வீரக்கழல் பெயரும்பொழுதெல்லாம் பிறக்கிடாத அடியிலே எற்றிழிவுசெய்ய,

128 - 9. மூனே பாழ் படுக்கும் துன் அரு தப்பின் பகை புலம் கண்ட பல் வேல் இளைஞரின்—பகைப்புலத்தைப் பாழாக்கும் கிட்டுதற்கரிய வலியை யுடைய பகைகளை முதுகுகண்ட பலவேலினையுடைய வீரரைப்போலே,

130 - 31. உரவு சினம் செருக்கி தன்னுதொறும் வெகுளும் மூளா வான் எயிற்ற வள் உகிர் ஞமலி—பரக்கின்ற சினத்தாலே செருக்கித் தம்மே லொன்று செருக்குந்தோறும் கோபிக்கும் மூங்கில்மூளைபோலும் ஒளியையுடைத் தாகிய பல்லினையுடையவாகிய பெரிய உகிரையுடைய நாய்,

132. இனையா கண்ண வினைகுபு நெரிதர—இமையாக்கண்களையுடைய வாய் எம்மை வினைத்துக்கொண்டு மேலேமேலே வருகையினாலே,

133 - 4. [நடுங்குவன மெழுந்து நல்லடி தளர்கியா, மிடும்பைகூர் மனத்தே மருண்டு புலம் படர:] யாம் நடுங்குவனம் எழுந்து நல் அடி தளர்ந்து இடும்பை கூர் மனத்தேம் மருண்டு புலம் படர—யாங்களஞ்சி அவ்விருப்புக் குலைந்து கடிதிற்செல்லுதலாற்றாது வருத்தமிக்க மனத்தையுடையேமாய் மய ங்கி வேற்றுப் புலத்து ஏறச்செல்லாநிற்க,

135 - 6. மாறு பொருது ஒட்டிய புகலின் வேறு புலத்து ஆ சாண் விடையின் அணி பெற வந்து—தனக்குமாறுகியவிடைகளெல்லாம் பொருது கெடுத்த மனச்செருக்கினையுடைய தானறியாதநிலத்திற் புதிய ஆவைக்காணும் ஏறபோலே அழகுபெற வர்து,

---

* ழநூது. 104 - 6 ஆம் அடிகளின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

வேட்கைமிகுதிகூறுதற்கு வேற்புலத்து ஆவென்றல்.
இத்தினையும் பற்றல் கூறினர்.

136 - 8. [எம், மலமர லாயிடை வெரூஉத லஞ்சி, மெல்லிய லினிய மேவர வினைத்து :—யாங்கள்போன்றபொழுது எம்மனத்திற் கழற்சியாலே வெரு வுதற்குத் தானஞ்சி மெல்லியவாய் இனியவாயிருக்கின்ற சொற்களை எமக்குப் பொருந்துதல்வாச் சொல்லி,

இதனுல் *எதிடுகூறினன்.

138 - 9. எம் ஐம்பால் ஆய் கவின் எத்தி—எம் †ஐவகைப்பட்ட மயி ரினையுடைய பலரும் ஆராய்ந்த அழகைப்பகழ்ந்து அசைகின்ற (140) இளையீ (141) ரென்க.

139. ஒள் தொடி – ஒள்ளிய தொடியினையும்,

140. அசை, வேறுகூட்டிற்று.

மெல் சாயல்—மெல்லிய மென்மையினையும்,

அ வாங்கு உந்தி—அழகிய வளைந்த கொப்பூழினையும்,

141. மடம் மதர் மழை கண் இளையீர்—மடப்பத்தையுடைய மதர்த்த குளிர்ந்த கண்ணினையுமுடைய இளையீரே,

141 - 2. இறந்த நெடுநெறியும் உடையேம் என்றனன்—இவ்விடத்தே போந்த நெடுநெறிகள் பலவுமுடையேமென்றுகூறினனுர் ;

என்றது, அவை யானே கலே பன்றிமுதலியன நெடுத்தனஞக வினையினன

குஞ்சியின்கண்ணே (112) மிலைச்சிச் (116) சென்றிப் (119) பொலியக் (122) கலாவக் (127) கட்டி (125) எச்சித் தெரிந்த (124) விடையின் அணி பெறவந்து (136) தான்கொண்டவந்த ஞமலி (131) நெரிதருகையினலே (132) எழுந்து தளர்ந்து (133) மருண்டு வேறுபுலம்படராகிர்க (134) ஆயிடை (137) எம் (136) அலமரல் வெரூஉதலஞ்சிக் (137) கினைத்து (138) எத்தி (13) இளையீர், இறந்த (141) நெடுநெறியுமுடையேமென்றன (142) னெனக் கூட்டுக.

142 - 3. [அதனைநிர், சொல்லே மாதலி னல்லாத்து கலங்கி :] அல் லாத்து அதன் எதிர் சொல்லேமாதலின் கலங்கி – அவன்கூற்றிற்கு யாங்கள மிழ்ந்து அதற்கு மறுமொழி கொடேமாகையினலே சொஞ்சழித்து,

144 - 5. [நெடுநெறியும் விடஇ ராயி னெம்மொடு, சொல்லலும் பழியோ மெல்லிய லீரென :] மெல் இயலீர் நெடுநெறியும் விடஇராயின் எம்மொடு சொல்ல லும் பழியோ எனை—மெல்லிய இயல்பினையுடையீர், கெட்டனவும் காட்டித் தாரீராயின் எம்முடன் ஒருவார்த்தை சொல்லுதலும் நிமக்குப் பழியாமோ வெனச் சொல்லி,

---

* எதிடு - காரணமிட்டுரைத்தல்.

† "செய்யிடை நீலி மணியொளிவிட் டன்ன, வையகை பாராட்டி னுய் மற்றெற் கூர்தற், செய்யினை பாராட்டினையோவையு" (கலி: 22.)

146 - 8. [கைவளம் பழுகிய பாலை வல்லோன, கைகவா ரரம்பினீம் மென விமிரு, மாதா வண்டொடு சுருமபுரையச் இறுத்த] கைவளம பழுகிய பாலே வல்லோன கை கவா ரமபின இம்மென இமிரும மாதா வணடொடு மையத்து இறுத்த சுரும்பு—*கட்டாகம முறறுப்பெறற பாலையாழை வாசிக்க வல்லவன தண்கையாலே வாசிதத்தாரமபுபோலே இமமெனனும ஓசைபட ஒலிக்கும காதலையுடைய வணடினததோடே தனனிடதது மணகதைவிருமபிததங் கின சுரும்பினஙகளே,

149. தாது அவிழ் அலரி தா கினை பிளந்து—தாதுவிரிகத பூக்களினுடைய தழைபராகததோர்கொமபை முறிதது,

150 தாறு அடு களிறறின வீறு பெற ஓசசி—தனனைச செலுததுகினற பரிக்கோலக கைகடக்க மதகக்களிறுபோலே வெறறியுணடாக ஓடி,

தனகருக்காவலாகிய †பெருமையினையு ; உரினையும கைகடாது வேட்கை மீதூராது நிற்றலால தாறடுகளிறறை உவமைகூறினார மதகக்களிறறிறகு அவ ஙனம ஓசசிநிற்றல் இயல்பு

151 கலலென சுறறம கடு குரல அவிதது—கல்லெனனும ஓசைபடக கத்தும வேட்டைநாயகளுடைய கடிய குரல்களே அடிதது மாறறி,

151 - 2 எம சொல்லல் பாணி கினறனனுக—யாங்கள வாததைசொல லுதலையுடையதோ காலததைப பாதது கினறருளாத

கெடுகியுமுடைபேனெனறனன, அதனெதி (112) யாங்கள சொலலே மாதலிற கலஙகி (143) மெலலியலீர, கொலலலுமபழியோவெனசசொலலி (145) ஓசசி (150) அவிததுச (151) சொலலா பாணி கினறனனுக (152) எனக கூட்டுக

இததனையும வேடகை கூறினள

153 - 4 இருவி வேயநத குறு கால குரமபை பிணை வா சோகின மணியோள மடுப்ப—இனையரிகத தாளாலேவேயநத குறியகாலினையுடைய குடிலிலிருககும மானபிணையையொதத பாவையினையுடைய மனனி எடுதது ஊக் கொடுப்ப

155 - 6 தேன பிழி தேறல மாந்தி மகிழ சிறகது சேமம மடிநத பொழுதின—தேனுறசமைதத கடடெளிவையுணடு மகிழசசியிகுக காவறபெருழிலே மறாதகாவததே,

156 - 8 [வாயமடுத, திருமபுன நிழததலிற சிறுமை நோனு, தாவுற ழஞ்சிலே கொளீஇ நேயமிகுகு :]

இரு புனம வாயமடுதது நிழததலின சிறுமை நோனது நோய மிகுகு— பெரியபுனததை வேழஙகினறு கொகிவிடுகையிலுலே தபபினறது வினையும சிறுமையைப்பொறுதே வருததமிகுகு,

---

* கட்டாகம - பகற்பண்களுள ஒனறு

† இப்புததகம, 357 - ஆம பகுதம (‡) பாருக

சல

159. [உவுப் னெம்.]

உவு னெம் அவு உறழ் அம் ஙெ கொளீஇ—பாலின்ற னெத்தை யுடைய பாம்பையொத்த அழகினையுடைய வில்லைசேர்த்தி,

உவுச்சின (159) அவுற ழஞ்ஙெ கொளீஇ (158) ளவப் பின்னே கூட்டுக. பாம்பு வடிவிற்கும் கொலைத்தொழிலுக்குமுவமை.

159 - 60. முன்பால் உடல் னெம் செருக்கி ணீ விடு—மெய்வலி யோடே கோபித்தலாற்பிறந்த னெத்தாலே மயங்கி அம்பையெய்து,

விடு, விகாரம்.

புடையூ—தட்டையைப் புடைத்து,

160 - 61. கானம் கல்லென மடி விடு வீனியர் வெடி படுத்து னிர—காடெல்லாம் கல்லென்னும் ஓசைபிறக்கும்படி வாயை மடித்துவிடுகின்ற *ஏழ்க்கையராய் மிக்க ஓசையையுண்டாக்கி அக்களிற்றைப் புனத்தினின்றும் ஓட்டு கையிலே,

வெடிபடுத்தார்த்தெனவும் பாடம்.

162 - 5. [கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சித்தக, விரும்பிணர்த் தடக் கை யிருலெஞ் சேர்த்திச், னெஞ்சிகழ் கடாஅஞ் செருக்கி மாங்கொல்ப, மையல் வேழ மடக்கலி னெதிர்தர :]

னெம் திகழ் கடாம் செருக்கி மையல் வேழம்—னெம் விளங்குதற்குக் காரணமாகிய மதத்தாலே மனஞ்செருக்கி மயக்கத்தையுடைத்தாகிய யானை,

மரம் கொல்ப—மரங்களை முறித்து,

கார் பெயல் உருமின் பிளிறி—கார்காலத்துமழையின் உருமேறுபோல முழக்கத்தையுண்டாக்கி,

குறவர் (203) மறிக் கைபுடையூஉத் (204) தளர்க்குங்கல் (206) கூற்றத் தன்ன (209); அவை இரியத் (208) தத்தி (207) விசைதவிராதுவரும்; அதற்கு மரமறையாக் கழிமின் (210) என்க.

211-2. உரவு களிறு கரக்கும் இடங்கர் நடுங்கி இரவிலா அஞ்ச இருள் நடுங்கு வரைப்பின்—வலியயானையை விழுங்குமுதலைகள் தங்கப் பட்டு இராக்காலத்தை யொத்த இருள்செறிவு † மிஞைகளையும்,

213. குமிழி சுழலும் குண்டு கயம் முடுக்கர்—குமிழிகள் சுழலவு வரும் ஆழ்ந்தநீரையுத மடுக்களையுடைய முடுக்கரையுமுடைய,

முடுக்கர்-நீர்குதத்தல இடங்கள், முடுக்கரையுடையயாறு (214).

214. அகழ் இழிதன்ன காண்யாறு நடவல—ஏறுதற்கும் இறங்கு தற்கும் அரியவாகையினுலே அகழிலே இழிந்தார் போன்ற காட்டாற்றுவழி,

215. ‡ வழூஉம் மருங்கு உடைய—காலோடுமிடங்களையுடைய, அவ் விடத்திற்கு,

215-8. [வழாஅ லோம்பிப், பருஉக்கொடி வலைத மதலை பற்றித், திருவி னன்ன புன்தலை மகாரோ, டொருவி னொருவி ரோம்பினிர் கழிமின்:]

திருவின் அன்ன புன்தலை மகாரோடு—செம்மறியாட்டினை யொத்த § புற்கென்ற தலையினையுடைய பிள்ளைகளோடே,

---

* பாரப்பு - இவ்விடை குரங்குக்குட்டி (தொல். மரபு. சூ. 4-5. பேரா.)

† மிஞை - காவற்காடு. ‡ வழூஉம் - வழுக்கும். § புற்கென்ற - சிவந்த.

வலத்த பருஉ கொடி மதலை பத்தி வழாஅல் ஓம்பி—மரங்களிற் சுற்றிக் கிடக்கின்ற பரிய கொடியாகிய பெரிய பற்றுக்கோட்டைப் பிடித்துக் காலோடு தலைப் புரிகரித்து,

ஒருவிர் ஒருவிர், ஒம்பினிர் கழிமின்—ஒருவரை யொருவர் பாதுகாத்துப் போவீராக;

219. அழுந்து பட்டி அமைரும் * புழகு அமல சாரல்—இடங்கு தாழ வீழ்ந்து அசையும் மலையெருக்குகெருங்கிய பக்கமலையில்,

220 - 21. [விழுக்கோர் மாய்க்குங் குண்டுகயத் தருகா, வழும்புகண் புலைத்தத் துண்ணீர்ப் பாசி:] விழுக்கோர் மாய்க்கும் குண்டு கயத்து அருகா கண் புலைத்த நுண் நீர் பாசி வழும்பு—வீழ்ந்தோரை மதைக்கும் ஆழத்தையுடைய குளங்களுக்கு அருகாக இடமதைதற்குக்காரணமாகிய நுண்ணிய நீர்மையையுடைய பாசியினது குற்றம்,

† "வழும்பறுக்க இல்லாவாக் தேரை - வழும்பில்லீர்" என்றார் பிறரும்.

222. அடி நிலை தளர்க்கும் அருப்பமும் உடைய - அடி வன்றியிட்ட நிலையை ஓடப்பண்ணும்; அதுவுமன்றி அவ்விடம் போதற்கு அருமையையு முடைய; அதற்குப் பரிகாரமாக,

223 - 4. முழுநெறி அலங்கிய நுண் கோல வேரலோடு எருவை மெல் கோல கொண்டனிர் கழிமின்—வழிமுழுதும் பின்னிவளர்ந்த நுண்ணிய கோல்களையுடைய ஈறுதடங்கிலேடே வேழத்தினது மெல்லிய கோலகளையும் பற்றுக்கோடாகப் பிடித்துப் போவிர்;

இத்துணையும் ஆற்றினது தன்மையினளவு (67) கூறினார்.

225 - 8. [உயர்நிலை மாக்கற புகாமுகம் புலைய, மாரியி னிகுதரு வலனுமிழ கடுவகணைத், தாவரா பொலிந்த வியன்கலை யாணை முழியிற் பொலிக:]

புகர் முகம் புலைய முழியின் பொலிந்த உயர் நிலை மா கல் வினை நவில் யானை—புகரையுடைய முகமதையும்படி முகபடாதத்தாற் பொலிவுபெற்ற உயர்ந்த நிலையினையுடைய பெருமையையுடைய மல்லபோரும் போர்த்தொழிலிலே பயின்ற யானையினையும்,

மாரியின் ‡ இகுதரு வல உமிழ் கமி கணை—மழைபோலத் தாழ்ந்து விழும் விலங்குகான்றகடிய அம்பினையுமுடைய,

---

* புழகு : குறிஞ்சி. 96; "பகன்றையும் பலாசு மகன்றலோப் புழகும்" (பெருங்கதை, மாசனமகிழ்ந்தது, 27.)

† நாலடியார், கயமை, 2.

‡ இகுத்தல் - சொரிதல்; "இகுத்த கண்ணீர்" (புறநா. 148.)

தாரோடு பொலிந்த மூத்த புரிசை (229) தூசிப்படையோடே பொலிவுபெற்ற டழைய மதில்,

மதில் - ஆருபெயராய்த் திருப்பதியையுணர்த்திற்று. என்றது காரியுண்டிக்கடவுளுடைய படைமிகுதிகூறிற்று. அன்றிப் பகைப்புலத்தை அழித்தற்கும் அங்கிலத்தைக் காத்தற்கும் கன்னன்வைத்த படையுமாம்.

228 - 9. [சுடர்ப்பூ விலஞ்சி, யோரியாற் றியவின் மூத்த புரிசை:] சுடர் பூ இலஞ்சி யாறு ஓர் இயவின் மூத்தபுரிசை—ஒளியையுடைய பூக கனியுடைய மரமினையுடைய யாற்றுக்கரையில் ஒருவழியினையுடையவூர்.

'ஓராற்றியவு' பாடமாயின் ஒருப்பட்ட வழியெனக.

இனி அம்பையுடைய தூசிப்படையோடுபொலிந்த யானையென்று யானைக்கு அடையாக்கி அவ்வியானையினுடைய பூக்களெழுதின முகடாம் போலே உயர்நிலைமாக்களுத புகர்முகம் புலதையப் பொலிந்த சுடர்ப்பூவையுடைய புரிசை யென்றுமாம்; இன்னும் யானையின் மத்தகம் போலே பொலிந்த சுடர்ப்பூ வையுடைய புரிசை யென்றுமாம்; இன்னும் யானையின் மத்தகம்போலே பொலிந்த சுடர்ப்பூ விலஞ்சியையுடைய உயர்நிலைமாக்கல்லியுடைய புரிசை யென்பாருமுளர். அவர் சுனையிடத்து மேலெழுந்த குவளைமுதலியவதனி னரும்புகள் தலைசாய்ந்து கறபுதையக இடந்ததற்கு யானையின் மத்தகத துப் புதரை உவமையென்று கொள்வர்.

230. [பராஅரு மரபிற் கடவுட் காணின்:] புரிசை (229) பராஅ அரு மரபின் கடவுள் காணின்—கோயிலிற் பராவுதற்கரிய முறைமையினை யுடைய கடவுளைக்கண்டீராயின்,

231. [தொழாநிர் கழியி னலது:] நீர் தொழா கழியின் அலது—நீர் வணங்கிப்போம் அத்தன்மையல்லது,

நீரென்பது குறுகிநின்றது. இனித், தொழாநிரென்பது * மறையன் றித் தொழுதென்று பொருடருமேனுமுணர்க.

231 - 2 வறிது தும் இயம் தொடுதல ஓம்புமின்—சிறிது தும்மு டைய வாச்சியங்களைத் தீண்டுதலைக் காப்பீராக; அதற்குக் காரணமென்னை யெனின்,

232 - 3. [மயங்குதுளி, மாரி தலையுமவன் மல்லல் வெற்பே:] அவன் மல்லல் வெற்பு மயங்கு துளி மாரி தலையும்—அவனது வளவிய கலிர மென்னுமலை மயங்கின துளியையுடைய மழையை இடைவிடாமற்பெய்யா நிற்கும்;

---

* மறை - எதிர்மறை.

என்றதனுற்பயன்: வாச்சியங்களும் கீனைந்து முழக்கும் போதலினதென் பதாம்.

234 - 5. [அலகை யன்ன வெள்வேர்ப் பீலிக், கலவ மஞ்ஞை கட்சி பித் தளரினும் :]

*அலகை அன்ன வெள் வேர் பீலி மஞ்ஞை—பலகறையையொத்த வெள்ளிய வேரினையுடைய பீலியையுடைய மயில்,

கட்சியில் கலவம் தளரினும்—அக்காட்டிடத்தே ஆடுதற்குவிரித்த கலாபத்தினது பாரத்தாலே ஆடியினைத்து நிற்பினும்,

236 - 7. [கடும்பறைக் கோடியர் மகாஅர் மண்ண, நெடுங்கழைக் கொம் பர்க் கடுவ னுகளினும்:]

நெடு கழை கொம்பர்—நெடிய மூங்கிலின் கவர்களிலே,

கடு பறை கோடியர் மகாஅர் அண்ண—விசை உக நிறும்—கடிய பறை யினையுடைய கூத்தருடைய பிள்ளைகள் [த்த கடுவன்பாயினும்,

238 - 9. [நேர்கொ ணெடுவரை நேமியிற் றொடுத்த, சூர்புக லறிக் கத்துப் பிரசங் காணினும்:]

† நேர் கொள் நெடு வரை நேர் புகல் அடுக்கத்து—செவ்வையைத் தன் னிடத்தேகொண்ட நெடியமலையின் தெய்வம் விரும்பி வசிக்கமலையிலே,

நேமியின் தொடுத்த பிரசம் காணினும்—தேருருள்போல்வைத்த தேனிறைலைக் காணினும்,

240 - 41. [ஞெரேரெ னோக்க லோம்புமி னூரித்தன் றும், நிரை செலன் மெல்லடி நெறிமாறு படுகுவிர்:]

ஞெரேரென நோக்க லோம்புமின் ஊரித்தன்று—கடுகப்பார்த்தல் தமக்குரிய தொழிலன்று ; அதற்குக் காரணமென்னையெனில்

மெல்ல அடி நிரை செலல நெறி மாறுபடுகுவிர்—மெல்லிய அடியாலே நிரைத்துச் செல்லுதலையுடைய வழிதப்புவிர்,

ஓம்புமின்—ஆதலால அங்ஙனம் நோக்குதற்குப் பாதுகாப்பீர்;

இதுவும் ஆற்றினது அருமை கூறிற்று.

242. வரை சேர் வகுந்தின் காடாது படுமே—மலையைச் சேர்ந்த வழியினையுடைய காட்டிடத்தேசெல்லின்,

---

* அலகு - பலகறை ; சோழி ; பறையலகென்பது பலகறையெனமருவித்தென்பர்.

† நேர்கொள் நெடுவரை - செங்குத்தானமலை.

248.—9. [கழுதிற் சேணோ னெவொடு யோடி யியழுதி னான்ற யாணி ணஞ் செருக்கி; கிறப்புன் கூர்த்த நிலத்தின் மருப்பி னெறிக்கெடக் கிடந்த விரும்பிண ரெருத்தி. விரும்பிணிக் தன்ன வேனற் காணின், முளிகடை பிழைத்த காடுபடு தீயி, னளிபுகை கமழா திறுபினிர் மிசைக்கு :]

† கழுதில் சேணோன் நிறம் புண் கூர்த்த வொடொடு போகி நெறி கெட கிடத்த ஏனம்—பரணின்மேலிருந்த யானைமுதலியவற்றிற்கு எட்டாதவஞ் எய்த மருமத்திற்புண்மிகுதற்குக்காரணமான அம்போடேபோகி நெறிகெட கிடத்த பன்றி.

நிலம் தின் மருப்பின் இழுதின் அன்ன வால் நிணம் செருக்கி, இரு பிணர் எருத்தின் இருள் தினிந்தன்ன ஏனம்—நிழங்குகளை அகழ்ந்து தின் தையினுலே மண் தின் றுதேய்ந்த கொம்பினையும் செய்யிழுதையொத்ததவெள ளியநிணம் செருக்கும்படி கரிய சருச்சரையையுடைத்தாகிய கழுத்தினையு முடைய இருள் அற்றக்கிடந்தாற்போன்ற ஏனம்,

செருக்கவெனத் திரிக்க.

ஏனம் காணின் முளிகழை இழைத்த காடு படு தீயின் நளி புகை கமழாது ‡ இறுபினிர் மிசைகுது—டம்பியைசகண்டீராயின் உலர்ந்தமூங்கி தம்மில இழைத்ததனற் பிறந்த காடெங்குமுண்டாகிய தீயினுலே செறிந்த புகைநாறுமல § வக்கி மயிர்போகச்சீவித் தின்று,

250 - 51. [தகளதத் தினிந்த மணிமரு டெண்ணீர்க், குவளையம பைஞ்சுனை யசைவிடப் பருகி:]குவளை அம் பைஞ்சுனை தகள் அற தினிந்த மணி மருள் தெள் நீர் அசைவு விட பருகி—குவளையால அழகிய பசியநீரதத் வாகிய சுனையில் கலக்கமறத்தெளிந்த பளிக்கென்றுமருளுக தெளிந்தநீரை வழியின் இளைப்புதநீரும்படி குடிதது,

அசைவு, விகாரம்.

252. [மிகுத்துப் பதங்கொண்ட பருஉக்குட் பொதியினிர்:]பருஉ கண டதம் மிகுத்து கொண்ட பொதியினிர்—பருதித இடதததையுடைய தசை யாகிய உணவை முழுதுகதின்னுமல மிகுதது வலைதது கடி கொண்ட பொதியின் சுமையினையுடையிராய்,

---

பி - ம். இசைக்த, பிசைகத.

† குறிஞ்சி. 40-41 பார்க்க, பன்றியைபபிடிப்போர் அதுவரும் வழியில குழியை வெட்டிவைத்து அதனை மறைத்துவிட்டுத தாம் பாணின் மேலிருப்பார்; (மதுரை. 294 - 5.)

‡ இறுவுதல - நெருபபிலவாட்டி மயிர்போகச்சீவுதல்

§ வக்குதல்-வாட்டுதல், "வன்பெரும் பன்றிதன்னை யெரியினில வக்கி", "கொழுபபரித்து, வந்தனகொண் டெழுத்தழலில வக்குவன் வக்து வித்து" (பெரிய. கண்ணப்ப. 117, 145.)

253. புள் கை போகிய புன்றலை மகாரோடு—வேள் கையினின்றும் போதற்குக் காரணமான சிவந்த தலையினையுடைய பின்னேடனோடே,

*பின்னையைப்பெற்றால் வேளிடாராகலின், வேளைபோதற்குப் பின்னைகள் காரணமாயினர்.

254 - 5. [அற்கிடை கழிந்த லோம்பி யார்தரு, மில்புக் கன்ன கல்லளை வதிமின்:] இடை கழிந்தில் ஓம்பி ஆர்தரும் இல் புக்கன்ன கல அளை அற்கு வதிமின்—அங்ஙிடத்துப் போதலிட்பரிசரித்து வழியிடத்தனவாகிய தம் மில்லிலே புக்காலொத்த கன்மூழைஞ்சுகளிலே இராக்காலத்துத் தங்குவிர்;

இஃது அசையுகத்புலமும் வல்சியும் சேரக்கூறிற்று.

கானத்துப்படின் (242) மிசைந்து (249) பருகிப் (251) பொதியினிராய் (252) மகாரோடே (253) கழிதலோம்பி அற்கு (254) வதிமின் (255) என்க.

256. அல் சேர்ந்து அல்கி அசைதல் ஓம்பி—இராக்காலத்தற்கு எல்லாருஞ்சூடித்தத்தங் இனிப்பாறி,

257. வான் †கண் விரிந்த விடியல் ஏற்றெழுந்து—வானிடத்தே ஞாயிற்றின்கதிர் விரிந்த விடியற்காலத்தே துயிலுணர்ந்தெழுந்து,

258. கான் அகப்பட்ட செந்தெறி கொளுமின்—காட்டிடத்தே கிடந்த செவ்விய தெறியைப் போவீராக;

259 - 65. [சயங்கண் டன்ன வகன்பை பசுங்கை, மைந்நுலி னினைத்த களிறுமதனழிக்குந், துஞ்சுமரங் கடுக்கு மாசுணம் விலங்கி, யிகந்தசேண் கமழும் பூவு முண்டோர், மதர்த்தமை கலாப்பழன நுழைந்து, பெரும்பயங் கழியினு மாந்தர் தண்ணு, நிரங்கால் வீயும் பெருமரக குமுமுப்:]

அகல்பை அம்கண் மைத்து மலி சினத்த களிறு மதன் அழிக்கும் ‡துஞ்சு மரம் கடுக்கும் மாசுணம் விலக்கி—அகன்ற படத்தினையும் அழகிய கண்ணினையுமுடைய வலிமிகுகின்ற சினத்தவாகிய யானை வலையைக் கெடித்து விழுங்கும் விழுத்துடைக்கின்ற பெருமரங்களைபொக்கும் பெரும் பாம்பு கிடக்கின்ற வழியைவிலங்கி,

பெரு பயம் கழியினும் ஊழ் இதம்தர இகந்த சேண் கமழும் பூவும் உண்டோர் மதந்தர அமைகல்லா பழனும் மாந்தர் தண்ணுர்—அவற்றுற்கொள்ளும் பெரியபயன் கொள்ளாமற்போதலும் முற்காலம் அடிப்பட்டுப் போந்த

---

* பா. பிள்ளோர்பெற்றால.

† உலகிற்குக் கண்ணுதலின், சூரியனைக் கண்ணென்றார்; "வான்கண் விழியா வைகறை யாமத்து" (சிலப். 10 : 1); "எண்ணுக வரும்புவனம் யாவினுக்குங் கண்ணுவா னினனே யன்றே" (வி. பாரதம். அருச்சுனன். 43.)

‡ துஞ்சுதல் தங்குதலாதலின், அஃது இங்கே விழுத்துடைத்தலாயிற்று.

மூங்கைமையக்கடந்து தாம் நின்ற இடத்தைக்கடந்து* தூரியஞ்சுத்தே சென்றகாலும் பூவையும் நுகர்ந்தவர் மறந்து உயிர்வாழ்தலரிதற்றால் பழங் கனியும் தெய்வங்கள்றி மானிடர் அணுகாராகையினாலே,

ஊழிமுதல்வன் மன்னுலகென்க.

இரு காலவியும் பழனும் கையற்கண்டன்ன பெரு மரம் குழாமும்— நீளுங்காம்பையுடைய அப்பூக்கனியும் பழத்தையும் குளத்தைக்கண்டாற போலும் குளிர்ச்சியையுடைய பெரியமரக்குழாத்தினையும்,

266 - 7. [இடவும் வலனு நினையினிர் நோக்கிக், குறியறிந் தவை யவை குறுகாது கழிமின்:] நினையினிர் குறி அறிந்து இடனும் வலனும் நோக்கி அவை அவை குறுகாது கழிமின்—யான்கூறியதனை நினைத்து அவற் றின்ஞுநினையறிந்து இடத்தினும் வலத்தினும் பாராத்து † அவையிற்றை அவையிற்றை அணுகாமற போவீர்;

விலங்கி நோகவிக் குறுகாது கழிமினென்க.

இது சோலை (69) கூறிற்று.

268 - 9. கோடு பல முரஞ்சிய கோளி ஆலத்து கூடு இயத்தன்ன குரல் புணர் புள்ளினம்—கொம்புகள்பலவுமுற்றிய பழமரத்தைத் தன்னிடத்தே கொண்டதாகிய ‡ ஆலமரத்திடத்தேகூடிய பலவாசசியங்களையொத்த பல ஓசையுங்கூடின பறவைத்திரளையுடைய,

பறவைத்திரளையுடைய காடுகாணலாகுதலேயென்க.

270. காடு காண நீ்ன தலே மெலமெல அகன்மின்—நாடுகளே யெல லாம் காணலாயிருக்கின்ற அகன்ற இடத்தையுடைய மலையை மெலலமெல லப் போவீர்;

கனம்—மலே, ஆகுபெயர்.

271. மா நிழல பட்ட மரம் பயில் இறும்பின்—பெரியநிழலுண்டான மரம் நெருங்கின குறுங்காட்டாலே,

272. [ஞாயிறு தெறுஅ மாகானனத்தலே:] மரகம் ஞாயிறு தெறுஅ கன தலே—ஆகாயத்தில நிரியும் ஞாயிறுறற் சுடப்படாத அகன்ற இடத்தை யுடைய குன்றம் (271),

---

* பக்கம் 282 - 3. † அவையிற்றை - அவற்றை.

‡ ஆலமரத்திற்கூடின பறவைகளின் பலவகை ஒலியைப் பிறரும், இப்படியே பாராட்டிக் கூறினர்; (சீவக. 93, 828; திருவிளை. நகர. 67.)

§ கன் அகரவீற்றுரிச்சொல்; (தொல். உரி. சூ. 78.)

273 - 5. தேஎம் மருளும் அமையமாயினும் *இரு வன் சிலையர் மா தேர்பு கொட்கும் குறவரும் மருளும் குன்றத்து படிவே—திசைதெரி யாமலமயங்கும் இராக்காலமாயினும் முறியாத வலியலில்லையுடையராய் விலங்குதேர்ந்துநின்று சுழன்றுதிரியும் குறவருமுட்படியமயங்குங் குன் றத்தே நீங்கள்செலவின்,

276 - 7. [அகன்கட் டாறைத் தலன்றிக கலனென, வியாகலோம்பி தும் மியங்க டொடுமின் :] இயங்கலஞ்சும்பி அலகண பாலதுதன்றிகல லென தும் இயங்கர் தொடுமின்—அவ்வழியைப போதலேம்பி பரிகரித்து அகன்ற இடத்தையுடைய பாலையிலே குவிந்து கல்லென்னும் ஓசைபட நும்மூடைய வார்சியகனே வாங்கிப்பீராக ;

278 - 9. பாடு இன் அருவி பயம் கெழு நீலிசை காடு காத்து உறையும் கானவர் உளரே—ஓசையினிதாகிய அருவியின்பயன் பொருந்திய உசிமலையிலே காட்டைக காதிருக்குங் கானவர் பலருமுளர் ;

ஏகாரம், ஈற்றசை.

280 - 81. கிலே துகந்த வரிஇய மதலை அழி மாக்க ள புனலை படு பூசலின்—நிலையாய்படாம்துணையாத்தப பி ஆடுதகிலைபுக வலியழிந்த † மாக்கள் புனலிலே யழுந்துகின்ற வருத்தக கண்ணி லைரிதெடுப்பாரைப் போல,

281 - 6. [விரைத்துவல லெய்தி, யுலைதலறியிய பழனங் கண்டோர், மலைதற் கினிய பூவுட காடடி, யுறு சிர பயிய வாதவா முகதுற, நும்மி லொஞ் சத் தவலம்வீட, லிம்மெ ன கடும்போ டினியி ராகுவிர்:]

கெஞ்சத்து அவலம வீட விரைத்து வ ளையுடை—நசை பயக்கத்தாற் கலங்கி அறிவழிந்த நெஞ்சிற கேடி போம்படி ஓடிக கடுக வகதுசேறற்கு,

‡ உணடற்கு இனிய பழனும் கண் டோர மலைதற்கு இனிய பூவும் காடடி—எலலாரும் உணடறகு இனியவாகிய பழங்களையும் கலைவலர்களு டுதற்கு இனியவாகிய பூக்களையும் நுகக்குகாடடி,

கீர் அவற்றை நுகாகத பின்பு,

அவர் ஊறு இரம்பிய ஆறு முகதுற—அகானவர் இடையூறு மிக்கவழி யை நமக்குமுற்படப போகையினுலே,

---

"பூட்டுசில்லை யிறவினுடு" (சீவக. 1788) என்பதில இறுமீறனுக்கு விலகல உவமைகூறியிருததலால, இங்கே இறுவன்சிலையெனபுதற்கு இறுமீறைப்போன்ற வலியவில்லையுடையவனென்று பொருள் கூறியும் பொருக்கும்.

† மாக்கள் - இயற்றினையுடையார். ‡ உணடற்கினிய : மலைபடு. 353.

நும்மின் *இம்மென் கடும்போடு இனியிராகுவிர்—நும்முடைய இம் மென்னும் ஓசையையுடைய சுற்றத்தோடே மனமகிழ்வீர்;

287. அறிஞர் கூறிய மாநிரம் கைக்கொள்பு—நிசைமயக்கம் கடி யறிவார் கூறிய நிசையைப்புட் கொண்டு,

288 - 9. [குறியவு நெடியவு மூழிழிபு புதுவோர்; நோக்கினும் பனி க்கு நோய்கூ றடுக்கத்து:] †புதுவோர் நோக்கினும் பனிக்கும் நோய் கூர் அடுக்கத்து—புதிய மாந்தர் கண்ணை நோக்கினும் தலைநடுக்கும் நோய்மிக்க பக்கமலையிடத்து,

குறியவும் நெடியவும் ஊழ் இழிபு—குறியனவும் நெடியனவுமாகிய குவடுகளை முறைமைப்பட இழிந்து,

290. அலர் தாய ‡ வரி நிழல் அசையினிர் இருப்பின்—பூப்பரந்த பல வரிகளையுடையவாகிய நிழலிலே இளைத்திருப்பின்,

291. பல நிறம் பெயர்வை கேட்குவிர்—பலகூறுபாடுகளையுடைய வாய் எழுகின்ற ஓசைகளைக் கேட்பீர்;

மாதோ, அசை.

292. கலை §தொடு பெரு பழம் புண் கூர்த்து ||தலில்— மூசுக்கலை தோண்டின பெரிய பலாப்பழம் புண்மிக்குத் தேனிறாலையிலே,

293. மலைமுழுதும் கமழும் மாநிரம்தோறும்—மலைமுழுதும் அக தேன் காறும் நிசைகடோறும்,

294 - 6. [அருவி நுகரும வானர மகளிர், வருவிசை தவிராது வாங் குபு குடைதொறுக, தெரிமிழ் கொண்டதும் மியம்போ லின்விசை:] வாங்குபு வரு விசை தவிராது இமிழ் கொண்ட அருவி நுகரும் வானர மகளிர் குடைதொறும் நும் இயம் போல் தெரி இன் இசை—உள்ளபண் டங்களே வாங்கிக்கொணடு வருகின்ற விசைதவிராது ஒலித்தலைக்கொண்ட ||அருவியை ஆடும் தெய்வமகளிர் அதனைக் ¶கைபாற்குடையுந்தோறும் நும்முடைய வாச்சியங்களைப்போல் தாளத்தெரிவின்ற இனியவோசையும்,

297 - 9. [இலங்கேற்து மருப்பி னினம்பிரி யொருத்தல், லிலங்கள் மீமிசைட் டணைகை காணவர், புலம்புக் குணணும் புரிவளைப் பூசல்:].

---

* சுற்றத்தார் இசைப்புலவராதலால், இம்மென்கடும்பென்றார்.

† மலைபடு. 398.

‡ இலையிடையே வெய்யிலும் கலக்கிருத்தலின் தாயவரிநிழலென்றார்.

§ முசு - குரங்கின்சாதியிலொன்று; கலை - அதன்ஆண்.

|| "தண்டா ழருவி யரமகளி ராடுவே" (கலி. 40.)

¶ நீராடுவோர் அதிற்கையாற் பலவகையான வாச்சிய ஓசையைப்பிறப் பிப்பர்; (மதுரை : 363 ஆம் அடியின்கீழ்க்குறிப்பைப்பார்க்க.)

மிலக்கல் மீமிசை பணவை கானவர் புலம் புக்கு உண்ணும்—மலையின் மேலிட்டபரணில் கானவர் தினைப்புனத்தைப் புகுந்து தின்னும்,

இலங்கு ஏக்கு மருப்பின் இனம் பிரி ஒருத்தல் புரி வண பூசல்—விளங்கு கின்ற ஏக்கினை கொம்பையுடைய தன்னினத்தைப்பிரிந்த *யானைத்தலை வகிர்ப் பிடித்தற்குவிரும்பின வகிர்த்தலையுடைய ஆவாரமும்,

300 - 301. [சேயகோப் ளள்ளி யெஃகுமு முள்ளி, னெய்தெற விழுக் கிய கானவ ரழுகை:] சேய் அகி பள்ளி எய் எஃகு உறு முள்ளின் தெற இழுக்கிய கானவர் அழுகை—கெடிய முழையாகிய இருப்பிடத்தில் தங்கும் எய்ப்பன் றி தனது கூர்மையுறுகின்ற முள்ளால் எய்துகொலலுகையினலே பட்ட கானவர் அழுகின்ற அழுகையும்,

302 - 4. [கொடுவரி பாய்கதெனக கொழுகர் மார்பி, னெடுவழி விழுப் புண் ணணிமார் காப்பெனு, மதலைவாழ் கூந்தற கொடிசசியர் பாடல்:] கொழு கர் மார்பில் கொடுவரி பாய்ந்தென மிகு வலி †விழு புண் தனிமார் காப்பெ னு அதல் வாழ் கூந்தல் கொடிச்சியர் பாடல்—தம் கண வர்மார்பிலே புலி பாய்ந்த தாகப் பட்ட கெடிய பிளத்தலையுடைய நிரிய ‡ புண்ணை ஆற்றுதற்கு காவ லென்றுகருதி அதலலீற்றிருந்த மயிரிணையுடைய கொடிசசியர்பாடும் பாட் டாலெழுந்த ஓசையும்,

305 - 6. தலை காள் பூத்த பொன் இணர் வேங்கை மலைமார் இடுமம் மூமம் பூசல்— § மூதல் காளிலேபூத்த பொன்போலுங்கொத்தினையுடைய வேங்கைப்பூவைச்சூடுதற்கு மகளிர் புலிபுலியென் றுகூப்பிடும் ஏமத்தை யுடைய ஆவாரமும்,

வேங்கைவனோர்து பூவைக்கொடித்தலிம், அச்சகற்றிர்த பூச லென்குர்.

307. கன்று அரை பட்ட ॥ கய தலை மட பிடி—கன்று வயிற்றிலே யுண்டான மெல்லிய தலையினையுடைய மடப்பத்தையுடையபிடியை.

தலைமையாய்ந்த ஆண்யானையை யானைத்தலைவனென்கூறுதல் மரபு; "ஊத்த, தலைவனோயாத்துப் பொலிந்த சுகிர சைலம்" (கம்ப. வரைக்காட்சி. 7.)

† விழுப்புண் - முகத்திலும் மார்பிலும்பட்ட புண்ணென்குர்; (குறள். 776 - பரி.)

‡ புண்ணை ஆற்றுதற்கு இசைபாடுதல் பாதுகாபபென்பதை "ஆம் பலூதி, யிசைமணியெதிரது காஞ்சிபாடி.....காக்கம் வம்மோ.....,கெடுத் தகைபுண்ணே" (புறநா. 281) என்பதனலுமறிக.

§ பழமொழி, 120.

॥ கய மென்மையபுணர்த்தும் உரிசசொல்; (தொல். உரி. சூ. 34.)

308. வலிக்கு வரம்பாகிய *கணைவலுந் இப்புலின்—வலிக்கு ஓரெல்லை யாகிய களிறு தவழக்தேடிக்கொடுத்துப் பாதுகாத்துப் போலகபினுலே,

309. ஒள் கேழ் வயம் புலி பாய்ந்தென—அப்போக்கினைக்குறித்து ஒளித்திருந்து ஒள்ளிய நிறத்தையுடைய வலியபுலி பாய்ந்ததாக,

309 - 10. ஐயொடு நெடு வரை இயம்பும் இடி உமிழ் திழங்கு குரல்—அப்படி தன்சுற்றத்தோடே நெடியமலையிடத்தேகூப்பிடும் இடி யோசைபோலும் முழங்குங்குரலும்,

இடியுமிழ்ந்த ஓசையை ஆகுபெயரான் உமிழ் என்றார்.

311. கை கோள் மறந்த கரு விரல் மந்தி—பார்ப்பைத் தன்கையால தழுவிக்கோடலை மறந்த கரியவிரலையுடையமந்தி,

312. அரு விடர் வீழ்ந்த தன் கலலா †பார்ப்பிற்கு—எளிதற்கு அரிய ஆழ்ந்த மூழையிலேவீழ்ந்திறந்த தன்குட்டிக்கு,

கல்லாமை - ‡தனக்குரியதொழிலைக் கல்லாமை.

313 - 4 முறி மேய் யாக்கை இனையொடு துவன்றி சிறுமை உற்ற கோயா பூசல்—தன்னிரைமேய்ந்துவளர்ந்த வடிவினையுடைய சுற்றத்தோடே கெருங்கி நோய்மிக்க விலக்கப்படாத அரவாரமும்,

மந்தி பார்ப்பிற்குத் துவன்றிச் சிறுமையுற்ற பூசலென்க.

315 - 6. கலை கை ஆற்ற காண்பு இன் கெடி வரை நிலை பெய்து இட்ட மால்பு நெறியாக— §மூசுக்கலை ஏறமுடியாதென்று செயலற்ற காட்சியினிய உயர்ந்தவரையிலே நிலைபேறுண்டாகக் கூட்டிஇட்ட ||கண்ணேணியே வழியாகச்சென்று,

---

கணவலென்பது அஃறிணையாண்பாற்பொருளிலும்வழங்கும் ; "மாயா வேட்டம் போகிய கணவன், பொய்யா மரபிற் பிணவு நின்றிரங்கும்" (நற். 103); "வங்காக் கிடந்த செங்காற் பேடை, யெழாலூறு வீழ்ந்த தெனக் கணவற் காணுது" (குறுந் 151.)

† குரங்கின்குட்டியைப்பார்ப்பென்றல், "பார்ப்புடை மந்திய மலை யிறைதோறே" (குறுந். 278) என்பதனுலும் விளங்கும்.

‡ தனக்குரியதொழிலைக்கல்லாமையாவது தாயின்மார்பை இறுகப்பற்றிக்கொள்ள அறியாமை.

§ முருகு. 42 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

|| கண்ணேணியாவது கணுக்களிலேயே அடிவைத்து ஏறிச்செல்லும்படி அமைத்துள்ள மூங்கில்; உச்சியிலுள்ள தேனிறுலை அழிக்கும்பொருட்டுச் சென்குத்தான மலையிலேறிச்செல்வதற்கு அதன் அயலில் இவ்விரண்டு மூங்கில்களைக்கூட்டியமைப்பது வழக்கம் ; "மால்புடை நெடுவரைக் கோடு" (புறநா. 105.)

317. பெரும்பயன் தொகுத்த தேம் கொள் சொல்லோ—பெரியபயனுண்டாகத் தேனீத் திரட்டிவைத்ததேனையழித்துக்கொண்ட கொள்ளைபோலுள்ள ஆவாரமும்,

318 - 9. [அருங்குறும்பெறிந்த கானவ ருவகை, நிருத்துவே லண்ணற்கு விருந்திறை சான்மென:]

நிருத்து வேல் அண்ணற்கு விருந்து இறை சான்மென—திருத்தும் வேலினையுடைய மன்னனுக்குப் புதிதாகக்கொடித்தற்கு *இவற்றிற் கைக்கொண்டபொருள்கள் அமையுமெனக் கருதிச்சென்று,

அரு குறும்பு எறிந்த கானவர் உவகை—அழித்தற்கு அரிய !குறும்பு களை யழித்த கானவர் மகிழ்ச்சியுண்டான ஆவாரமும்,

320 - 22. கறவு காட்செய்த குறவர் தம் பெண்டிரொடு மான் தோல் சிறுபறை கலிலென கறங்க வான் தோய் மீமிசை அயரும் †குரவை—கறவை காட்காலத்தேகுடித்த குறவர் தம்பெண்டிரோடுகூடி மான்றோலாற் போர்த்த சிறுபறை கலலென்னும் ஓசைபடவெறிந்து வானளாவிய நீண்ட உச்சி மலையிலே ஆடுங் குரவைக்கூத்தின் ஆவாரமும்,

323 - 4. [கல்லெழி னெடுந்தே ரியவுவந் தன்ன, கல்யா றெறிக்கும் விடர்முழங் கிரங்கிசை:] கல் எழில் நெடு தேர் இயவு வந்தன்ன ஒலிகளும் கல் யாறு விடர் முழங்கு இரங்கு இசை—நல்ல அழகினையுடைய நெடிய தேர்கள் வழியிலே ஓடிவருதல்போலவாக ஒலிக்கும் கல்லின்மேலேவரும் யாறுகள் மூழைஞ்சுகளிலேவீழ்ந்து மாறுதொலிக்கும் ஓசையும்,

325 - 7. நெடு சுழி பட்ட கடுங்கண வேழத்து உரவு சினம் தணிதது பெரு வெளிய பிணமார் விரவு மொழி பயிற்றும் பாகர் ஓதை—காட்டாற்றின் நெடியசுழியிலே வீழ்ந்து அகப்பட்ட நறுகண்மையையுடைய யானையினது வலிய சினத்தைத் தணியப்பண்ணிப் பெரியகம்பத்திலே சேர்த்தற்குத் தமதேவத்தொழிலைச்செய்தற்குக்காரணமான §பேச்சுக்களைப்பேசி அவற்றிலே பயிலப்பண்ணும் பாகருடைய ஆவாரமும்,

---

* இவற்றில் - இச்சித்தராண்களில்.

† குறும்பு - பகைவர்தங்கும் சித்தராண.

‡ குரவை, இருபாலாரும் விரவி ஆடப்படுவதாதலின், குறவர் தம் பெண்டிரொடு அயருங்குரவையென்றார்; "மாயவன் தன் மூன்னிஞ்ஞெடும் வரிவஞ்சுக்கைப் பின்னைபொடும்.....ஆடுங்குரவையோ தகவுடைத்தே" (சிலப். ஆய்ச்சியர்); "மாமணி வண்ணனும் தம்முனும் பிஞ்ஞையு, மாடிய குரவையிற்" (மணி. 19: 65 - 6.)

§ இப்பேச்சுக்கள் இன்னவென்பதை இப்புத்தகம் 203 - ஆம் பக்கத்தின் கீழ்க் (‡) குறிப்பாதுணர்க.

தவன்றுகையினுலே (346) மலைகளாகிய யானைக்குண்டாகின்றவொலி (348) பலதிறம்பெயர்பவை (291) மாறிரத்தியம்ப (348) அவற்றைக் கேட்குலிர் (291) என முடிக்க.

இருப்பிற் (290) கேட்குலிர் (291) என்க.

மலைக்கு யானையையுவமித்து அதன்கட்பிறந்த ஓசையைக் கடா மெனச்சிறப்பித்தவதனுல், இப்பாட்டிற்கு மலைபடுகடாமென்று பெயர்கூறினர்.

349 - 51. [குரூஉக்கட் பிணையற் கோதை மகளிர், *முழவுத்துயி லறியா வியலு ளாங்கண், விழவி னற்றவன் வியன்கண் வெற்பே:]

அவன் வியன் கண் வெற்பு—அக்கன்னனுடைய அகன்ற இடத்தை யுடையமலை,

குரூஉ கண் பிணையல் கோதை மகளிர்—பலநிறம் பொருந்தின இடத் தையுடையதாகிய பிணைத்தலையுடைய மாலையினையுடையமகளிர் ஆடற்கு ஏற்ற,

முழவு துயில் அறியா வியலுள் ஆங்கண் விழவின் அற்று—முழவு கண்ணுறக்கமறியாத அகன்ற வீரிடத்துக்கொண்ட திருநாளையொத்துச் சிறந்திருக்கும் ;

352 - 3. கண் தண்ணென கண்டும் கேட்டும் உண்டற்கு இனிய பல பாராட்டியும்—காண்டற்கு இனியவற்றைக் கண்குளிரக்கண்டும் கேட்கப் படுவனவற்றைச் செவிகுளிரக்கேட்டும் உண்டற்கு இனிய பல உணவுகளைக் கொண்டாடியுண்டும்,

354 - 5. [இன்னும் வருவ தாக மைக்கென், தொன்முறை மரபினி ராகி:] நமக்கு இன்னும் வருவதாக என தொல் முறை மரபினிராகி—நமக்கு மேலும் இத்தகைச்சி உண்டாவதாகவென்று விரும்பிப் பழைய உறவான மக்களைப்போலும் முறைமையினையுடையோராய்ச் சிலகாலந் தங்கி,

355 - 6. பல் மாண் நெரு மிக்கு புகலும் திரு ஆர் மார்பன்—பலவாய் மாட்சிமைப்பட்ட †வஞ்சிமூதலியபோர்த்தொழில் மிக்குகடத் தலாலே உலகம்புகழும் திருமகள் நிலைத்திருந்த மார்பினையுடைய கன்ன னுடைய,

357. உரும் உரறு கருவிய பெரு மலை பிற்பட - உருமேறுமுழங்குந் தொகுதியையுடைய பெரியமலை தமக்குப்பின்னும்படி,

358 - 9. இரும்பூதி களுலிய இன் குரல் விறலியர் கறு கார் அடுக் கத்தி குதிஞ்ஞி பாடி—அதிசயம்தெருங்கின இனிய யாழையுடைய விறல்பட ஆடுமகளிர் கறிய கரிய பக்கமலையிலே குறிஞ்சியென்னும் பண்ணைப்பாட,

---

* மதுரை, 327.

† வஞ்சி - போர்செய்தற்குப் படைவர்மேற் செல்லுதல்.

குரல், ஆகுபெயர். பாடி, பாடவென்க.

360. கை தொழூஉ பரவி பழிச்சினிர் கழிமின்—நீரும் ஆண்டுள்ளீரும் தெய்வங்களைக் கையாலேதொழுது எம் குறை முடித்தால் நமக்கு இவை தருதுமென்று பரவுக்கடன் பூண்டு வாழ்த்திப் போவீர்;

மரபினராகிய (355) பாடிப் (359) பழிச்சி (360) மலை பிற்படச் (357) கழிமின் (360) என்க.

361. [மைபடு மாமலைப் பனுவலிற் பொலிவு:] பனுவலின் பொலிவு மை படி மா மலை—சூல் முதிர்வதற்குமுன்பு *எஃகுறு பஞ்சிபோலப் பொலிவு பெற்றுச் சென்று கார்காலம்வருமளவும் மேகம்படிக்கும் பெரிய மலையிடத்தில்,

362. கை தோய்வு அன்ன கார் மழை தொழுந—கை சென்றுபிடிக்கும் தன்மையையொத்த அணுகுதலையுடைய கரிய மேகத்தினர்,

363. தூஉய் அன்ன துவலை துவற்றலின்—வலியத் தூவினாலொத்த துவலைகளைத் தூவுகையினாலே,

364. தேம் தேறு கடு பரி கம்பொடு—தேனைக்கனத்த தணிந்த கொள்ளமாட்டாத கடிய செலவினையுடைய சுற்றத்தோடே,

365. காஅய் கொண்ட நும் இயம் தொயபடாமல—காலிக்கொண்ட நும்மூரையுடைய வாச்சியங்கள் நலியாதபடி,

366. கூவல் அன்ன விடாகம் புகுமின்—கிணறுகளைபோன்ற †முழை ஞ்சுகளிடத்தே புகுவீர்,

367. இரு கல் இகுபத்து இறு வரை சேராது—பெரிய கல்லினது நிரட்சியினிடத்து முறிந்துகின்ற மலைகளைச்சேராதே,

368 - 72. [குன்றிடம் பட்ட வாரிடரழுவத்து, நின்று கோக்கினும் கண்வாள் வெளவு, மண்கனை முழவின் நலிகதோல கொண்டு, தண்கோலாகத் தளர்த்த லோம்பி, பூண் நினிர் கழிமி னூறுதவப் பலவே:]

நின்று கண் நோக்கினும் வாள் வெளவும் இடம் பட்ட தன்று—நின்று கண்ணுற்பார்க்கினும் கண்ணினெளிலையைத் தன் அழகாலே வாங்கிக்கொள்ளும் இடமுண்டாகிய மலையில,

உம்மை, அவற்றைநோக்க மனத்தாற்கருதின் அம்மனத்தையும் வாங்கிக் கொள்ளுமென எச்சவும்மை.

அரு இடர் அழுவத்து ஊழ தவ பல—பொறுத்தற்கு அரிய வருத்தத்தைச்செய்யும் குழிகளிடத்துப் பிறகும் இடையூறுகள் மிகப்பல; அவற்றை,

மண் கனை முழவின் நலி தண்டு காலாக கொண்டு—மார்ச்சனைசெறித்த முழவிடத்திற் காமரத்தை நமக்குக் காலாக வாங்கிக்கொண்டு,

---

* எஃகுறுபஞ்சி – பன்னியபஞ்சு. † முழைஞ்சு – குகை.

தளர்தல் ஓம்பி கோல் ஊன்றினீர் கழிமின்—அடி உள்ளேயிழுதலைப் பரிகரித்து அத்தண்டாகிய கோலை ஊன்றுப்போனீர்;

373. அயில் காய்த்தன்ன கூர் கல் பரதை—வேல்காய்த்தாற்போலும் குமிக்கூர்ங் கற்களையுடைய பாதையில்,

374. வெயில் புறந்தருஉம் இன்னல் இயகத்து—குளிர்ச்சிவாராமல் வெயில் பாதுகாக்கும் இன்னுமைசெய்யும் வழியிடத்திற் போம்பொழுது,

375. கதிர் ஞெலம் தணிந்த அமயத்து கழிமின்—ஞாயிறு சினம் மாறின அந்திப்பொழுதிலே போவீர்;

376 . 8. [உரைசெல வெறுத்தவ னீங்காச் சுற்றமொடு, புரைதீர் வுயரிய மழைமருள் பஃறோல், லரசுநிலை தளர்க்கு மருப்பமு முடையர்:]

*உரை செல வெறுத்த அவன் நீங்கா சுற்றமொடு புரை தவ வுயரிய †மழை மருள் பல் தோல் அருப்பமும் உடைய—புகழ் பரக்கும்படி செறித்த கன்னலுடைய நீங்காத படைத்தலைவரோடே உயர்ச்சி மிகவுயர்ந்த மேக மென் றுமருளும் பல யானைத்திரளையுடைய அரண்களையும் அவ்வழி யுடைய;

அரசு நிலை தளர்க்கும் அருப்பம்—பொரவந்த அரசர் நிலையுடைமை யைக் கெடுக்கும் அரண்,

379. பின்னி அன்ன பிணங்கு அரில் தூழை தோறும்—அவ்வரண் களிற் பின்னிவைத்தாலொத்த கொடிபிணங்கின சிறுகாட்டையுடைய சிறிய வழிகடோறும்,

380 - 83. முன்னோன் வாங்கிய கடு விசை கணை கோல் இன் இசை கல் யாழ் பத்தரும் விசி பிணி மண் ஆர் முழவின் கண்ணும் ஓம்பி கை பிணி விடாது பையப கழிமின்—முன்போகின் றவன் முகத்திலடியாமல் வாங்கி விட்ட கடியவிசையையுடைய திரண்டகோல இனிய இசையைத் தின்னி டத்தே கொண்ட கல்ல யாழின் பத்தரையும் வலித்துக்கட்டின மார்ச்சனை செறித்த முழவின்கண்ணையும் கெடாதபடி காத்து அவனைக் கரம்பிடித் தக் கோடலே விடாதே மெல்லமெல்லப் போவீர்;

காடுகாணகத்தில் (270) முதல் இத்தனையும் மலை(69) கூறிற்று. இவ் விடத்து யாத்தின் நன்மையும் சேரக்கூறினர்.

384. களிறு மலைத்தன்ன கவ கூடு திறுகல்—யானைகள் தம்மிற் சேர்த்து பொருதாலொத்த ஒன்றினிடத்தே ஒன்று கூடிநெருங்கின கல் லிடத்தே,

385. தளி பொழி கானம் தலை தவ பலவே—மழைபெய்கின்ற காடு கள் அவ்விடத்து மிகப்பல;

* மலைபடு. 93. † "மழைதோற்பழையன்" (அகநா. 186.)

388 - 7. ஒன்னு தெவ்வர் உலவு இடத்து அர்த்தென கல் வழி கொடுத்த நாண் உடை மறவர்—ஏலவுபொருத்தாத பகைவர் முதுகிட்ட வழியிலே தமது வெற்றிதோன்ற ஆரவாரித்தாராக, அதுபொறுமல் இவ்விடம் உயிர்கொடுத்தற்கு சல்லகாலமென்று மீண்டு உயிரைக்கொடுத்த நாணத்தையுடைய மறவருடைய,

388 - 9. செல்லா கல இசை டெயரொடு கூட கல் ஏசு கல்லெ எண்ணு மிக பலவே—கெடாத கல்ல புகழினையுடைய பெயர்களே எழுதி கட்டகத்கள் முதுகிட்டப்போனவரை இகழும் பலவழிகள் எண்ணுதல் மிகும்படி பலவாயிருக்கும்;

390 - 91. இன்பு உறு மூரற்கை நும் பாட்டி விருப்பாக தொன்று ஒழுகும் மரபின் நும் மருப்பு இருத்து நுனைமின—இன்பமிருகின்ற தானத்தினையுடைய நும்முடைய பாட்டி அருகுகலலில தெய்வத்திற்கு விருப்பமாகப் பழமைகடக்கின்ற முறைமையினையுடைய நும்முடைய யாழையை தித்து விரையப் போவிர்;

மருப்பு, ஆகுபெயர்.

392 - 3. பண்டு நற்கு அறியா புலம் பெயர் புதுவிர் சகது கீவி புல் முடிந்து இடுமின்—முற்காலம் நன்மையறியாத நீயகிலதகை வழியதியா மற்போய் மீண்டுவகத புதியவர்கள் பின்வருகின்றவர்களும் அவ்வாறு போய் மீளாதபடி பலவழிகளுங்கூடின சந்தியைக கையாலேதடைத்து அடையாளமாக ஊகம்புலலே முடிதிட்டு வைப்பீர்,

நற்கு, கன்னின்லிகாரம்.

காணம் பல (385); ஆண்டுக கல (389) கட்ட (388) கலலே பல (389); அக்கல்லிற்கு மருபபுகத்தத நுனைமின (391); அபபொழுது புதுவிர் (392), புலமுடிநடுமின் (393) எனகூட்டுக.

394. செலலும தேஎதது—நீங்கள போம் தேசதநிலே,

394 - 6. [பெயர்மருவு கதிமார், கலலெறிந தெழுதிய கல்லரை மராஅத்த, கடவு னோகிய காடேசு கலலே:]

கல் எறிதது மருக்கு பெயா அதமார் எழுதிய கடவுள்—கல்லே *இடதுகொணடு அதனிடத்தே இவ்வாறேபொருபபட்ட இனனுனென்று அவன் பெயரை உலகமறிவதற்கு எழுதிய கடவுள்,

†கல் அரை மராத்த கடவுள்—கல்ல அரையினையுடைய மராத்திடத் தனவாகிய கடவுள்,

என்றது, மராமரத்தினிழலில்லே கட்ட கல்லென்றவாறு.

---

* இடதது - பெயர்தது.

† "மன்ற மராஅத்த பேரமுதிர் கடவுள்" (குறுந். 87.)

கடலுள் ஒல்லிய காடு ஏசு கவலை—அக்கடலுளின் தெய்வத்தின்மை மிக்க தன்கொடுமையாற் பிதாகடுகினையிகழும் பலவழிகளில்,

397 - 8. [ஒட்டா தகன்ற வொன்னுத் தெவ்வர், சுட்டிணும் பனிக்குஞ் சுரத்தவப் பலவே:]

ஒட்டாது அகன்ற ஒன்னு தெவ்வர் சுரம் தவ பல்வே—நன்னனைப் பொருத்தாதே நீங்கின அவன் ஏவற்குப் பொருத்தாத பகைவரிருக்கும் அரு நிலங்கள் மிகப்பல;

இதனுல் இகழுகர்ப்பிணிக்கும் ஆற்றல் (73) கூறினர்.

சுட்டினும் பனிக்கும் சுரம்—தத்தமூர்களிலேயிருந்து நினைப்பினும் தலைகடுக்குவிக்குஞ் சுரம்,

399 - 400. தேம் பாய் கண்ணி தேர் வீசு கலி கை ஓம்பா வள்ளல் படர்ந்திகுமெனினே—தேன் சொரிகின்ற கண்ணியினையும் தேரைச்சிதறும் கொடித்துக்கவிந்த கையினையுமுடைய தனக்கென்று ஒருபொருளும் பேணுத நன்னனினைத்துச் செலகின்றிருமென்று கூறுவீராயின்,

401 - 2. [மேம்பட வெறுத்தவனன் றெஃறிணை மூதூர், ஆங்கன மற்றே நம்ம னோர்க்கே:] நம்மனோர்க்கு ஆங்கனம் மேம்பட வெறுத்த அவன் தொல் திணை மூதூர் அற்று—கம்மையொக்கும் பரிசிலர்க்கு அப்பகைப்புலம் எல்லாவூர்களினும் மேலாம்படி செலவுமுணடான நன்னனுடைய பழைதா கிய உயர்ந்த ஒழுக்கத் திணையுடைய பழையவூர்களொக்கும்

403. அசைவுழி அசைஇ அஞ்சாது கழியின்—இனைத்தவிடத்தே யினைப்பாறி அஞ்சாமற் போவீர்;

404 - 5. [புலியுற வெறுத்ததன் வீழ்பிணை யுள்ளிக், கலிகின்று விளிக்குங் கான மூழிறதுஞ்:] புலி உற வீழ் தன் பிணை உள்ளி வெறுத்த கலை நின்று விளிக்கும் காணம் ஊழ் இறந்து—புலி பாய்கையினுலேபட்ட தன் பிணையை நினைந்து வெறுத்த கலைகின்றுகூப்பிடும் அக்காட்டை மூறை மைப்படப்போய்,

406. சிலை ஒலி வெரீஇய செகண் மரைவிடை—வில்லின் ஓசைக்கு வெரூவின சிவந்தகண்ணையுடைய மரையேறு,

407. தலை இறும்பு கதழும் காறு கொடி புதவின்—மூத்தபட்ட குறுங் காட்டிலே விரைந்தோடும் காறுகின்ற கொடிகளையுடைய காட்டிடத்து,

408 - 9. வேறு புலம் படர்ந்த ஏறு உடை இனத்த வளை ஆன் நீ பால்—வேற்றுப்புலக்களிலே சென்று மேய்ந்த ஏற்றையுடைய நிரையிடத் தனவாகிய சங்குபோல் வெள்ளிய டசுக்களின் இனிய பாலை,

409 - 10. மினை சூழ் கோவலர் வினையோ உவப்ப தருவனர் சொரி தலின்—நிரையைக் காவல சூழ்கின்ற இடையர் வினையினையுடைய மகளிர் மனமகிழும்படி கொண்டுவந்து சொரிகையினுலே,

411 - 2. [பலம்பெறு வையொடு பதியிற் றீர்த்தமும், புலம் புசே ணகலப் புதுவி ராகுவிர்;] பலம் பெறு வையொடு தம் பதியின் நீர்த்த புலம்பு சேண் அகல புதுவிர் ஆகுவிர்—பலத்தைப்பெறவேண்டுமென் றும் ஆசையுடனே தும்முடைய ஊரின்றும் போந்தவருத்தம் விட்டு சீக்குகையினாலே விருத்தாத்தன்மையையுடையிராகுவிர்;

413 - 6. [பகர்விரவு செல்லின் பலவரி யன்ன, தகர்விரவு திருவை வெள்ளையொடு விரைஇக், கல்லென் கடத்திடைக் கடலி னிரைக்கும், பல் யாட் டினநிரை:] பகர் பல வீரவு செல்லின் அரி அன்ன தகர் விரவு திருவை வெள்ளையொடு விரைஇ கல்லென் கடத்திடை கடலின் இரைக்கும் பல் யாட்டு இனம் நிரை—பண்டம்விற்ற பலவுங்கூடுகெல்லின் அரிசியையொத் தனவாகக் கிடாய்விரவுகின்ற செம்மறித்திரள் வெள்யாட்டுடனேகலந்து கல்லென்கின்ற ஓசையையுடைய காட்டிடத்தே கடல்போலேயொலிக்கும் பலயாட்டினங்களையுடைய திரள்களிலே,

பகர்செல், விளைத்தொகை.

416. எல்லினிர் புகினே—இராக்காலத்தையுடையிராய்ச் செல்லின்,

மனத்தே அக்காலத்தைக் கருதுதலின், உடைமையாயிற்று.

417. பாலும் மிதவையும் பண்ணுது பெறுகுவிர்—பாலும் பாத் சோறும் நுமக்கென்று சமையாமல் தமக்குச் சமைத்திருந்தவற்றைப் பெறுகுவிர்;

418. தூய் மயிர் அடக்கிய சேக்கை அன்ன—மெல்லிய தகிலமயிரினை யுடைய சேணமிட்ட படுக்கையையொத்த,

419. மெய் உரித்து இயற்றிய மிதி அதள் பள்ளி—ஆடுகளின் மெய் யையுரித்து ஒன்றாகத்தைத்த வார்பிணித்த தோற்படுக்கையிலே

420. நீ துணையாக சேந்தனிர் கழிமின்—கொடியவிலங்குகள் வாராத படி இடையர் ஒளித்த தெருப்புத் துணையாகத் தங்கிப் போமிர்;

421 - 2. கூப்பிடு கடகரும் கூர் கல் அம்பின் தொடி லில் கூளியர் கூவை காணின்—கூப்பிடாத அவ்வெல்லையைக் *கடவாகிற்கும் கூரிய கல்ல அம்பினையும் கொடியவில்லினையுமுடைய காடுகாக்கும் வேடருடைய திர ளைக்கண்டீராயின், அவர்களுக்கு,

423 - 4. படியோர் தேய்த்த பணிவு இல் ஆண்மை கொடியோள் கணவன் படர்க்கிரும் எனினே—தன்னை வணக்காதாரை அழித்த தாழ்ச்சி யில்லாத பகைவரையாளுந்தன்மையினையுடைய கன்னனைக்கிட்டப் போ இன்றேமென்று கூறின்,

* பி - ம். கூவாகிற்கும்.

தொடியோள்கணவன் - சேரிடியிலேயுடையோன்; கணவன்; இதனால் அவனதேவி தற்புமிருதி கூறினார், இது வன்னனென்னும். பெருட்டாய தின்றதில்.

125 - 6. தடியும் மிகலும் தண்டினர் தாஇ ஓம்புநர் அல்லது ஒடிற் றுநர் இல்லை—தசைகளையும் மிகலுகளையும் நம்மை வலித்து நின்னப்பண் ணிப் பாதுகாப்பாரல்லது வருத்துவார்களில்லை; அவற்றை நுகர்த்து.

127. ஆங்கு *லியம் தொண்மின்—அவ்விடத்து அவர் போகச்சொல் னவழியை நமக்கு வழியாகக் கொண்டுபோமின்;

அது அதன் பண்பே—அக்காட்டின் தன்மை அத்தன்மைத்தாயிருக்கும்;

128. தேன் பட மலர்ந்த மராஅ மெல் இணரும்—தேனுண்டாக மலர்ந்த மராவினது மெல்லிய பூக்கொத்தும்.

129. உம்பல் அகைத்த ஒள் முறி யாவும்—யானைமுறித்த ஒள்ளிய தளிர்களையுடைய †யாம் பூவும்,

130 - 31. [தளிரொடு நிடைந்த காமர் கணவி, இரங்கு முரனரித் யொலியச் சூடி:] இரங்கு மரல் நாரில் தளிரொடு பிடைந்த காமர் கண்ணி பொலிய சூடி—உலர்ந்த மரல் நாரிலே தளிர்களோடே நெருக்கக்கட்டின திருப்பம் மருவின கண்ணியை அழகுபெறச் சூடி,

132. முரம்பு கண் உடைந்த நடவை தண்ணென—பருக்கையையுடைய மேட்டிநிலத்திடம் விண்ட சிறுவழி மழைபெய்து குளிர்ந்தையினாலே,

133. உண்டனிர் ஆடி கொண்டனிர் கழிமின்—அகநீரைக்குடித்துக் குளித்து வழிக்குமுகதுகொண்டு போமின்,

134 - 6. [செவ்வீ வேங்கைப் பூவி னன்ன, வேய்கொளரிசி மிதலை சொரிந்த, சுவலவின் கெலி ளவரையம் புளிங்கூழ்:]

செ வீ வேங்கை பூவின, அன்ன அவரை—சிவந்த பூக்களையுடைய வேங்கைப்பூவினையொத்த நிறத்தையுடைய அவரைவிதை,

வேய் தொ ரிசி—மூங்கில் தன்னிடத்தே கொண்ட அரிசி,

ஞெலி கெல்லின் அரிசி—மேட்டுநிலத்தேவிளைந்த கெல்லின் அரிசி,

சொரிந்த மிதலை புளியங்கூழ்—இவற்றைப் புளிக்கரைத்த உலையிலே சொரிந்து ஆக்கின குழைந்த புளியங்கூழை,

137. அற்கு இடை உழந்த நும் வருத்தம் வீட—இராக்காலத்துக் காட்டிடத்துப் பகற்போழுதுவந்த நம்வருத்தம் போம்படி,

---

* லியம் - ஏலல். † பி - ம். ஆச்சாவித்பூவும்.

428 - 9. [அகலு ளாக்கட் கழிமிடைத் தியற்றிய, புல்வேய் குரம்பைப் குடிதொறும் பெறுகுவிர்:] அங்கண் அகலுள் கழி மிடைந்து இயற்றிய புல் வேய் குரம்பை குடிதொறும் பெறுகுவிர்—அவ்விடத்து அன்ற வளிடத் தக் கழிகளால் தெற்றிப்பண்ணின புல்லான் வேய்ந்த குடில்களிலிருக்கும் குடிகளிடம்தோறும் பெறுகுவிர்;

கூழை அற்குப் பெறுகுவிரென்க.

440-43. [பொன்னறைந் தன்ன நுண்ணே ரரிசி, வெண்ணெய்த் தியற்றிய மாக்கணமலே, தண்ணெ லுண்ணிழு தள்ளி டாக, வசையினிர் சேப்பி னல்கலும் பெறுகுவிர்:]

அசையினிர் சேப்பின்—இளைப்பாறி அவ்விடத்தே சிலைான் தங்குவீ ராயின்,

பொன் அறைந்தன்ன நுண் நேர் அரிசி வெண்ணெய்த்து இயற்றிய மா கண அமலே—பொன்னே நறுங்கிலுலொத்த நுண்ணிய ஒத்த அரிசியை வெள்ளெயெறித்தாக்கின கரிய இடத்தையுடைய சோற்றுத்தடியை,

தண்ணெண் * நுண் இழுது உள்ளீடாக அல்கலும் பெறுகுவிர்—தண் ணென்ற நுண்ணிய நெய்யிழுதை உள்ளேயிட்டுண்ணும்படி காடோறும் பெறுகுவிர்;

444. விசயம் கொழித்த பூழி அன்ன— கருப்புக் கட்டியைக் கொழித்த பொடியையொத்த,

445. உண்ணுநர் திறத்த இடி நுண் நுவணை—தன்னே நுகர்வாரை வேறென்றை நுகராமற் றடுத்த இடித்தலால் நுண்ணிதாகிய இனைப †பிண் டியோடு,

சேப்பின் நுவணையோடே அமலேயை இழுதுள்ளீடாக அல்கலும்பெற குவிரென்க.

நுவணையோடென ழகரம் விரிக்க.

446 - 7. கொய் மரம் விதலின் ஞெகிழி மாட்டி பலி ‡ சேண் நீங்க இனிது உடன் துஞ்சி—கொய்ய மரமாகிய விதகாலாக்கின கடைக்கொள் ளியை எரித்துப் பலி விட்டுநீங்கும்படி இனிதாகச் சேரத் துஞ்சி,

448. புலரி விடியல் புள் ஓர்த்து கழிபின்—இராக்காலகீங்குதலே யுடைய விடியற்காலத்தே நிமித்தம்பார்த்துப் போவிர்;

புள்ளோர்த்தென்றதற்குப் § புட்களின் குரல்கேட்டுப் போவிரென் றுமாம்.

---

* "நீரிலு நுண்ணிது நெய்யென்பர்" (நாலடி. இன்மை. 2.)

† பிண்டி - மா. ‡ மதுரைக்காஞ்சி, 198. § பெரும்பாண். 155.

இத்திணையும் கானமும் கானத்து ஆற்றினது நன்மையும் அசையுநடைப் புலமும் வல்லியும் சேரக்கூறினர்.

449. புல் அரை காஞ்சி—புற்கென்ற அரையினையுடைய காஞ்சிமரத் தினையும்,

புனல் பொரு புதவின்—நீர்வந்துபொருகின்ற *அறுகுகளையும்,

450. மெல் அவல்—மெல்லிய வினைநிலங்களையும்,

450-53. [இருந்த வூர்தொறு கல்லியாழ்ப், பண்ணுப்பெயர்த் தன்ன காவும் பள்ளியும், பன்னு ணிதிபிணுஞ் சேந்தனிர் செலினு, நன்பல வுடைத்த வன் றண்பணை நாடே:]

காவும்—பொழில்களையும்,

பள்ளியும்—இடைச்சேரிகளையுமுடைய,

அவன் தண் பணை நாடே—நன்னனுடைய குளிர்ந்த மருதநிலத்தை யுடைய நாடு,

பல் நாள் நிற்பினும் சேந்தனிர் செலினும் இருந்த வூர்தொறும்—பல நாள்நிற்பினும் ஒருநாள் தங்கிப்போகினும் நீர் நுகர்தற்குச் சூடிநீங்கா திருந்த வூர்களிதோறும்,

நல் யாழ் பண்ணு பெயர்த்தன்ன நல்ல பல உடைத்து—நல்ல யாழின் பண்ணை மாறிவாசித்ததன்மையவாக நன்றாகிய பலபொருள்களையுடைத்து,

காஞ்சிமுதலியவற்றை உடையநாடு வூர்தோறும் நன்பலவுடைத் தென்க.

பண் ஒன்றையொன்றெவ்வாறு இனிதாயிருக்குமாறுபோல நுகரும் பொருள்களும் ஒன்றையொன்றெவ்வா இனிமையுடையவென்றார்.

454-5. கண்பு அமல் பழனம் கமழ தழைஇ வலியோர் தந்த இரு சுவல வானா—கண்புநெருங்கின மருதநிலத்தைப் பூக்கள்நாற வனைத்து ஆராய்ந்து வலியையுடையவர் கொண்டுவந்த பெரிய கழுத்தினையுடைய வானைத்தடியை,

456-8. நிலையோர் இட்ட நெடு நாண் தூண்டில் பிடி கை அன்ன செ கண் வரால் துடி கண் அன்ன குறையொடு விரை இ—ஓரிடத்தில் நிலை பெற நிற்கலையுடையோரிட்ட நெடிய கயிற்றையுடைய தூண்டிலிற்பட்ட பிடியின் கையையொத்த சிவந்த கண்ணையுடைய வராலினது துடியின் கண்ணை யொத்த நடியோடேகலஃதி,

459. பகன்றை கண்ணி பழையர் மகளிர்—பகன்றைப்பூவால் செய்த கண்ணியையுடைய கள்விற்கும் வலையருடைய மகளிர்,

---

* அறுகு - அறுகம்புல்.

460-62. ஞெண்டு ஆடு செறுவில் தாய்க்கண் வைத்த விலங்கல் அன்ன போர் முதல் தொலே இவளம் செய் வினைஞர் வல்சி கல்க—ஞெண்டுகள் ஆடித்திரியும் செய்க்கு அருகில் மேட்டுநிலத்தேயிட்ட மகிலையொத்த போர்கண் அடியிலேவிழ அழித்துக் கடாலிட்டு வளப்பத்தையுண்டாக்கும் உழவர் கெல்லே முக்குதாராகிற்க,

463. நளகு தசும்பு வாக்கிய பசு பொதி தேறல்—களிப்புமிகு தியால் அசையும் மிடாலினின்றும் வார்ந்த பசிய முளையாலாக்கின கட் டெளிவை,

464. [இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர்:] ஞாயிறு இள கதிர் களங்கள் தொறும் பெறுகுவிர் - ஞாயிற்றினது இளைய கதிர்களெறிக்கும்காலத்திலே களங்கடோறும் பெறுகுவிர் ;

வினைஞர் வல்சிகல்காகிற்கப் பழையர்மகளிர் விரைஇத் தேறல் கல்காகிற்கப் பெறுகுவிர் என்க.

465 - 8. [முள்ளரித் தியற்றிய வெள்ளரி வெண் சோறு, வண்டு படக் கமழும் தேம்பாய் கண்ணித், திண்டேர் கன்னற்கு மயினி சான்மென, கண்டோர் மருள:]

வண்டு பட கமழும் தேன் பாய் கண்ணி திண் தேர் கன்னற்கும் அயினி சான்மென கண்டோர் மருள—வண்டுபடியும்படி நாறும் தேன்சொரிந்த கண்ணியினையும் திண்ணிய தேரினையுமுடைய கன்னனுக்கும் உணவாதற்கு அமையுமென்று கண்டோர்கள் மருளும்படி,

முள் அரித்து இயற்றிய வெள் அரி வெள சோறு—முள்ளைக் கழித்து ஆக்கின கொழுப்பால் வெள்ளிய நிறத்தையுடைய தடிகளையிட்ட வெளளிய சோற்றை,

வெள்ளிய நிறத்தையுடைய தடிகளை வெள்ளரி யென்றார் ; ஆருபெயராக்கி.

மருள இயற்றிய வென்க.

468. கடும்புடன் அருந்தி—நும் சுற்றத்துடனேயுண்டு,

469 - 70. எருது எறி களமர் ஓதையொடு கல் யாழ் மருதம் பண்ணி அசையினிர் கழிமின்—எருத்தையடிக்கின்ற உழவரோசையோடே கூடும்படி கல்லையாழை மருதத்தை வாசித்து இளைப்பாறிப் போவீர் ;

இத்துணையும் நாடுபடவல்லியும் அசையுந்புலமும் சேரக்கூறினர்.

471 - 3. வெள் கெல அரிகர் தண்ணுமை வெரீஇ செ கண் ஈருணம இனம் பிரி ஒருத்தல் கணை செலல மூன்றொடு கதழுமது வரல் போற்றி—

---

* "தசும்புதுளங்கிருக்கை" என்பதும், 'தன்களிப்பு மிகுதியால் தன்னேயுண்டார் உடல்போல அத்தசும்பு இருந்து ஆடும்படியான இருப்பு' என்னும் அதனுரையும் இங்கே அறியற்பாலன ; (பதிற். 42.

வெள்ளிய செல்லையுறப்பார் கொட்டின பறையோசைக்கு வெருவிச் இவந்த கண்ணையுடைய எருமைத்திரளைப் பிரிக்கதடா ஆரவாரிக்குஞ் செலவினை புடைய வலியோடே நும்மேல விரைக்து வருதலிடப் பேணி,

474 - 5. வனை கலம் திரிரியின் குமிழி சுழலும் துனை செலல் தீ வாய் ஒவு இதந்து வரிக்கும்—குயவன் வனைகின்ற மட்கலத்திற் சக்கரம் போலக் குமிழி சுழன்று தோன்றும் விரைந்த செலவினையுடைய வாய்த்தலை யின் ஒழிலின்றி ஓடும் யாறு (476),

476 - 7. காணுநர் வயாஅம் கட்கு இன் சேயாற்றின் யாணர் ஒரு கரை கொண்டனிர் கழியின்—காண்பார் விரும்பும் கட்கு இனிய சேயாற்றினது புதுவருவாயையுடைய ஒருகரையை வழியாகக் கொண்டு போவிர் ;

வயாம், ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங் கெட்டது. சேயாறு, அவ்வியாற்றின் பெயர்.

478 - 87. [* நிதியக்துஞ்சு நிவக்தோங்கு வரைப்பின், பதியெழு வதியாப் பழங்குடி கெழீஇ, வியலிடம் பெறுஅ விழுப்பெரு நியமத், நியா தனைக் கிடந்த தெருவிற் சாறென, விகழுநர் வெருஉங் கவலை மறுஇத், கடலெனக் காரென வொலிக்குஞ் சும்மையொடு, மலையென மழையென மாட மோங்கித், துனிதீர் காதலி னினிதமர்ந் துறையும், பனிவார் கரவிற் பல்வண் டிமிரு, கனிசேயத் தன்றவன் பழவிறன் மூதூர்;]

பல் வண்டு இமிரும் பனி வார் காவின்—பலவண்டுக ளொலிக்கும் குளிர்ந்த கெடிய பொழில்களையும்,

இகழுநர் வெருவும் நிவக்து ஓங்கு வரைப்பின்—நன்னனை இகழ்ந்திருப் பார் அஞ்சும் மிகவோங்குமதிலையும்,

சாறு என கெழீஇ கடல் என கார் என ஒலிக்கும் சும்மையொடு வியல் இடம் பெறு விழு பெரு நியமத்து—திருநாளென்னும்படி மாந்தர் பொருகதிக் கடலெனக் காரென ஒலிக்கும் ஆரவாரத்தோடே நிரிதரற்கு அகன்ற இடம்பெறுத சீரியபெரிய அங்காடித் தெருவினையும்,

கவலை மறுஇன்—பல கவர்த்தன்மையையுடைய குறுக்தெருக்களையும்.

பதி எழவு அறியா பழ குடி தனி நீர் காதலின் இனிது அமர்ந்து உறை யும் மாடம் மலை என மழை என ஓங்கி—ஊரினின்றும் பேர்க்கலையறியாத பழையகுடி வெறுப்பில்லாத விருப்பத்தோடே நன்றுதல் பொருந்தியிருக் கும் மாடங்கள் மலையென மழையென ஓங்குகையினாலே,

யாறு எனை கிடந்த தெருவின்—யாறெனலும்படி கிடந்த பெரும் தெரு வினையும்,

---

* ஓ - னி. சூ. 63ரி. மேற்.

இரண்டுமருங்கின் மாடமும் தெருவும் யாறும் கரையும் போன்ற வென்றார்.

நிதியம் அஞ்சும் அவன் பழ விதிமுது ஊர் கனி சேய்த்து அன்று—காலினையும் மதிலினையும் நியமத்தினையும் மறுகினையும் தெருவினையு முடைய பொருட்டிரள் தங்கும் அவன் பழைய வெற்றியையுடைய மூதூர் மிகவும் தூரிதன்றென்க.

இது மூதூர்மாலை (93) கூறிற்று.

488 - 9. பொருத்தா தெவ்வர் இரு தலை துமிய பருத்து பட கடக்கும் ஒள் வாள் மறவர் - நன்னனைப் பொருந்தாத பகைவருடைய கரிய தலைகள் தணியப் பருந்துகள் படியப் போரைவெல்லும் ஒள்ளிய வாளையுடைய மறவர்,

490 - 91. கரு கடை எஃகம் சாதிய புதலின் அரு கடி வாயில அயிராது புகுமின் - தம்முடைய கரிய கூர்மையுடைய வேலைச் சாத்தினைவைத்துக் காத்திருக்கின்ற டல தெற்றுவாசல்களையுமுடைய அரிய கோபுரவாயிலை ஐயுறுமற் புகுவிர்;

492 - 5. [மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர், வெல்போர்ச் சேஎய்ப் பெருவிறலுள்ளி, வந்தோர் மன்ற வளியர் தாமெனக்கண்டோ ரெல்லாமமர்ந்தினி ரெனவே:]

மன்றில் வதியுநர் சேண் புலம் பரிசிலர் கண்டோர் எல்லாம்—அம் பலங்களிலே தங்குவாராகிய தூரிய நிலங்களினின்றும் வந்த கூத்தர் முதலியோராய நும்மைக் கண்டோரெல்லாம்,

அளியர் தாஅம் வெல் போர் சேஎய் பெருவிறல மன்ற உள்ளி வந்தோர் என அமர்ந்து இனிதின் நோக்கி—இவ்வளிக்குத் தக்கவர்தாம் வெலலும் போரைவலல முருகனைப்போலும் நன்னனைப் பரிசிலர்க்குக் கொற்றமாக நினைத்து வந்தோரென்றுகருதி முகம்பொருந்தி இனிதாகப்பார்த்து,

496 - 7. [விருந்திறை யவரவ ரெதிர்கொளக் குறுகிப், பரிபுலம் பலைத்தலும் வருத்தம்வீட:] பரிபுலம்பு அலைத்த வருத்தம் வீட அவர் விருந்து நும் இறை எதிர்கொள அவர் குறுகி—தரித்தலாலுண்டான தன்மை வருத்தினவருத்தம் போம்படி அவ்விடத்தோர் விருந்தாய் நீங்கள் தங்கு தலை எதிரேற்றுக் கொள்ளையாலே அவர்களைச் சேர்ந்திருந்து,

498 - 500. [எரிகான் றன்ன சூஞ்சினை மராஅத்து, தொழுநி பேர்க வலித்தகப் பட்ட, மடநடை யாமான் கயமுளிக் குழலி:]

எரி கான் றன்ன சூ சினை மராஅத்து தொழுநி போக வலித்து அகப் பட்ட மடம் நடை ஆமான் குழலி—நெருப்பைக் கான்றுலாவுந்த சூக்கொம்புக் கினையுடைய மராமரத்திடத்தே கிடந்த இனமெலலாங் கெட்டுப்போப் போக

மாட்டாது அகப்பட்ட மடப்பத்தையுடைய டையையுடைய ஆமானின தது குழலி,

கயம் முனி குழலி—யாகைக்கன்றினையது,

501. [ஊமை யெண்ணின் குடாவடிக் 'குருஎ:] எண்ணின் குடாவடி ஊமை குருஎ—கரடியின் வளைந்த அடியினையுடைய வாய்திறவாத குட்டி,

502 - 3. மீமிசை கொண்ட கவர் பரி கொடு தாள் *வரை வாழ் வருடை வல தலை மா தகர்—மூதிடத்தே கொண்ட நிலத்தைக்கைக்கொள ளும் செலவினையுடைய வளைந்தகாலையுடைய வரையிடத்தேவாழும் † என கால்வருடையில் வலிய தலையினையுடைய பெரியகிடாய்,

இனி வருடையும் தகருமென வேறுகக் கூறலுமாம்,

504. அரவு குறும்பு எறிந்த சிறு கண் தீர்வை—பாம்பினது வலிகெ யழிதத சிறிய கண்ணினையுடைய கீரி,

505 - 6. அணை செறி உழுவை கோள் உற வெறுத்த மடம் கண் மரை யான பெரு செவி குழலி—முழையிலே செறிதிருக்தபுலி பாய்தலுறுகையி ஞலே தன் உடலிலெறுத்த மடப்பத்தையுடையகண்ணினையுடைய மரை யானினது பெரிய செவியினையுடைய குழவி,

507 - 8. அரக்கு விரித்தன்ன செ நிலம் மருங்கின் பரல தவழ் உடும் பின் கொடு தாள் ஏற்றை—அரகைகைப் பரப்பினலொத்த சிவந்தநிலத்திடத் திற சுக்கான்கல்லிலேதவழும் உடும்பினது வளைதகாலையுடைய ஏறு,

509. வரை பொலிதது இயலும் மடம் கண் மஞ்ஞை—மலையிடத்தே அழகுபெற்று ஆடும் மடப்பத்தையுடைய கண்ணினையுடைய மயில,

510. கானம் கோழி கவர் குரல சேவல்—கானத்திடத்துக் கோழி யினது பெடையை யழைக்கின்ற குரலையுடைய சேவல்,

511. ‡ கானம் பலவின் முழவு மருள் பெரு பழம்—காட்டிடத்துப் பலாவினுடைய முழவென்றுமருளும் பெரியபழம்.

512 - 3. [இடிக்கலப் பன்ன கறுவடி மாலின், வடிச்சேறு விளைத நீம்பழத் தாரம்:] கறு வடி மாலின் இடி கலப்பன்ன வடி சேறு விளைத நீ பழம் தாரம்—கறிய வடுக்களையுடைய மாலினது பொடிச்செய்த § கண்டின் கலப்பையொத்த பிழியப்படும் சாறு முற்றின இனிய பழமாகிய பண்டம்,

---

'வரைவாழ வருடைக் கோடுமுற் றினைதகர்" (அகநா: 378. 6-7.)

† எண் கால் வருடை - ஒருவகை விலங்கு; "மாவுமாக்களும்" (தொல். மர. சூ. 32, பேர்.)' என்பதன் விசேடவுரையைப் பார்க்க

‡ மலைபடு. 143 - 4. § கண்டு - கற்கண்டு.

514. நவல் கலித்த இவர் ஈணை வளர் கொடி—மழையாற்செருக்கின பிரகீனம் அரும்புகளையுடைய மணம்வளருகின்ற *நறைக்கொடி,

515. †காஅப் கொண்ட நுகம் மருள் நறை—காவிக்கொண்டுவேந்த நுகமென்றுமருளும் ‡நாலறைக்கிழங்கு,

நறை - §மலங்கென்பாருமுளர்.

516. [பருஉப்பளிங் குதிர்த்த:] உதிர்த்த பருவ பளிங்கு—மரத்தினின்றும் சிதறியுதிர்த்த பருத்த நிகரமாகிய ‖ கருப்பூரம்,

பல உறு திரு மணி - பலவிலைபெற்ற அழகிய மாணிக்கம்,

517 - 8. [குருஉப்புலி பொருத புண்கூர் யானை,முத்தடை மருப்பின் முழுவலி மிகுதிரள்:] குருவு புலி பொருதபுண் கூர் முழு வலி ¶ யானை முத்தடை மருப்பின் மிகு திரள்—நிறத்தையுடைய புலிபொரப்பட்ட புண்மிக்க குறைவில்லா வலியையுடைய யானைகளினுடைய முத்தடைய கொம்புகளினுடைய மிக்கதிரள்,

519. **வனை உடைத்தின்ன வள் இதழ் காந்தள்—வனையுடைத்தாற் போன்ற வளவிய இதழையுடைய காந்தட்பூ,

520. ஈகம்—புன்னைப்பூ,

திலகம்—திலகப்பூ,

கறை காழ் ஆரம்—நிறைய வயிரத்தையுடைய சந்தனம்,

521. [கருங்கொடி மிளகின் காய்த்தணர்ப் பசுங்கறி:] மிளகின் கரு கொடி காய் தணர் பசு கறி—மிளகினதகரிய கொடிகள் காய்த்த கொத்தித் பசியமிளகு.

மூன்னர் மிளகென்றது முதலே; கறி, ஈண்.

522. திருத்து அமை வினைத்த தேன் கள் தேறல்—நன்றுகிய மூங்கிற் குழாயிலே முற்றிய தேனைச்செய்த கட்டெளிவு,

---

*நறைக்கொடி-ஒருவகைக்கொடி;"தண்கமழ் நறைக்கோடி கொண்டு" (ஐங்குறு. 276.) † காஅப், காவி - தோளிற்சுமந்தி.

‡ பி - ம். நாற்றைக்கிழங்கு. §மலங்கு - ஒருவகைமீன்.

‖ கருப்பூரம் - ஒருவகைமரம்; "இமயச்சாரற் கருப்புரக்கன்று" (சீவக. 1267.)

¶ யானைக்கொம்புளில் முத்திருத்தல்: (முருகு. 304 - 5; குறிஞ்சி 35 - 6.)

** "அலங்கிதழ்க் கோடல் வீயுகு பவையோ, லிலங்கே ரெல்வனை யிறைபூ ரும்மே" (கலித். 7.) ; "உடைவனை கடுப்ப மலர்ந்த காந்தள்" (புறநா. 90.)

523. கான் நிலே எருமை கழை பெய் நீ தயிர்—காட்டிடத்து நீலமை மினேயுடைய எருமையின து மூங்கிற்குழாயிலேதோய்த்த இனிய தயிர்,

524. நீல் நிறம் ஒரி பாய்ந்தென—மூற்துகையினுலே நீலநிறத்தை யுடைய ஒளிநிரம்பாந்ததாக,

524 - 5. நெடு வரை மேமியின் செல்லும் நெய் கண் இறுல்—நெடிய வரையில் இறுலிடத்தை விட்டுப்பாயுக் தேனேத் தன்னிடத்தேயுடைய இறுல் கள்,

526 - 9. [உடம்புணர்பு தழீஇய வாலினி யணேத்துங், குடமலேப் பிறந்த தண்பெருங் காவிரி, கடன்மண் டமூவத்துக் கயவாய் கடுப்ப,கோனுச் செருவி னெடுங்கடைத் துவன்றி:]

தழீஇய ஆலினி—நன்றென்று கூட்டிக்கொண்ட ஆலினிப்பலா,

குடமலே பிறந்த தண் பெரு காவிரி கடல் மண்டு அழுவத்து கயவாய் கடுப்ப—குடகமலேயிற்பிறந்த குளிர்ந்த பெரியகாவிரி கடலிலே மிக்குச்செல கின்ற ஆழத்தையுடைய புகார்முகத்தையொப்ப,

கோனு செருவின் நெடு கடை—பகைவர் பொறுத்தலாற்றுத போரினே யுடைய தலேவாசலிலே,

*அணேத்தும் உடம்புணர்பு துவன்றி,

530 - 31. *[வானத் தன்ன வளமலி யாணைத், தாதெருத் ததைந்த முற்ற முன்னி:]

532. மழை எதிர் படு கண் முழவு கண் இகுப்ப— †மழைமுழக்கத் திற்கு எதிராகமுழங்கும் கண்ணேயுடைய முழவின் கண்கள் ஒலியாரிக்க,

533. கழை வளர் நூம்பின் கண் இடம் இமிர—மூங்கிலாகிய இசை வளரும் பெருவங்கியத்தினது நிறைந்தகண்ணிடம் ஒலியாரிக்க,

534 - 6. [மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ், நரம்புமீ நிறவா துடன்புணர்ந் தொன்றிக், கடவ தறிந்த வின்சுரல் விறலியர்:]

மருதம் பண்ணிய கரு கோடு சிறு யாழ் நரம்பு மீது இறவாது உடன் புணர்ந்து ஒன்றி இன் சுரல் விறலியர்—மருதத்தை வாசித்த கரிய தனே டிகேயுடைய சிறிய யாழினரம்பிஞேசைக்கு மேற்போகாது அவ்வோசை யுடனேகூடி ஒரோசையாய் இனிதாகிய பாட்டினேயுடைய விறலைபட ஆடி மகளிர்,

கடவது அறிந்த விறலியர்—தலேவனேக் கண்டாற் செய்யக்கடவ தொழிலே யறிந்த விறலியர்,

---

* இவற்றிற்கு உரைகிடைத்திலது.

† மலேபடு. 2 - 3.

537. தொன்று ஒழுகு மரபின் தம் இயல்பு வழாதவாறு—பழந்தாய் நடந்து ஒழுகும் முறைமையினையுடைய தம் இல்லத்தின் தலைமகன்,

538. அரு நிதல் கடவுள் பழிச்சிய பின்றை - * பொறுத்தற்கு அரிய வலியையுடைய கடவுளை முதலில் வாழ்த்தின பின்பு,

முற்றத்தையினுகி (531) இருப்ப (532) விதியர் (536) தேவபாணி பெரி பாடினபின்பு (538) என்க.

539. விருந்தின் பாணி கழிப்பி—சென்றுற் புதிதாகப்பரிசிலர் பாடுதற்கண்ணப் பாடி,

539 - 40. நீண்மொழி குன்ற கல் இசை சென்றோர் உம்பல்—மேல் சிழற் புலவோர்க்குக் (88) கொடுத்தவற்றை வாங்காதபடி தாம் கூறிய வஞ் சினங்களிற் குறையாத கல்ல புகழிலே கடந்தோருடைய வழியில்வந்தவன்,

இதனுற் கொடைக்கடனிறுத்த அவன் தொலலோர்வாவு (89) கூறினர்.

541 - 3. [இன்றிவட் செலலா அலகமொடு நிற்ப, விடைத்தெரிந் தணரும் பெரியோர் மாய்க்தெனக், கொடைக்கட னிறுத்த செம்ம லோயெனர்:]

இடைதெரிந்த உணரும் பெரியோர் மாய்ந்தென—என்று இது நீ இம்மென்ற ஆராயும் பெரிய உபகாரிகள் இறந்தார்களாக,

இன்று இவண் செலலாது உலகமொடு நிற்ப கொடை கடன் இறுத்த செம்மலோய் என—நின்போ இக்காலத்து இவ்வுலகிலே கடந்துவிடாதே உலகமுள்ளளவும் நிற்கும்படி கொடையாகிய கடனை முடித்த தலைமையை புடையோயென் றுகூறி,

544. † வென்றி பல புகழ் விதலோடு ஏத்தி—வெற்றியாலுண்டா கிய பலபுகழ்களை ஐம்பொறிகளைத் தன்வசமாக்கின வெற்றியோடே புகழ் கூறி,

545. சென்றது கொடியவும் விடாஅன் - தும்மனத்திற்சென்ற ஏனைப் புகழ்களை முற்றுகூறவும் அமையானுய்,

545 . 6. நசை தர வந்தது சாலும் வருத்தமும் பெரிது என—என் மேலுள்ள நசை கொண்டுவருகையினுலே என்னிடத்துவந்தமை யும் வழிவந்த வருத்தமும் பெரிதென முகமன்கூறி,

---

* "நலம் பொறுக்கலாத் பிண்டி நான்முகன்" (சீவக. 402.)

† "அயன்றலே தொண்டுசென் றாடல பாடி யருக்க னெயிறு பதித் தல் பாடித், கயத்தனைக் கொன்றரி போர்த்தல பாடிக் காலனைக் காலுறை தூதைத்தல் பாடி, யியைதன மூப்புர மெய்தல பாடி யேழை யடியேற் மை பாண்டு கொண்ட, கயத்தனைப் பாடினின் றுடி யாடி யிந்திரனும் சுண்ண மிடித்து நாமே." (நீலகேசி, திருப்பெரன்ண்ணம், 35.)

547 - 8. பொரு மூரண் எதிரிய வயவரொடு பொலிக்த நிகர் முற்றம் அணுகல் வேண்டி—பொருகின்ற மாறுபாட்டினை எதிர்கொண்டிருக் கும் படைத்திலேயரோடே பொலிவுபெற்றுச் செல்வத்தையுடைய தன்மனை பின்முற்றத்தை நீங்கள் செல்லுதலே விரும்பி,

பொலிக்தென்னுமெச்சத்தை உடையவென்பதனையே முடிக்க.

549. கல்லென் ஒக்கல் கல் வலத்து இரீஇ—கல்லென்னும் ஆரவாரத் தையுடைய சான்றோரிருக்கின்ற கன்றிய * சமயத்திருக்கு மண்டபத் தேயிருத்தி,

வலம் - இடம்.

இதனுல் கல்வி தினியக்குமவன் சுற்றத்தொழுக்கமும்(80) அவன் காண் மதிழிருக்கையும் (76) கூறினர்.

550 - 52. உயர்ந்த கட்டில் உரும்பு இல் சுற்றத்து அகன்ற தாயத்தி அஃகிய நுட்பத்து இலம் என மலர்ந்த கையர் ஆகி—உயர்ந்த அரசவுரிமை யினையும், கொடுமையில்லாத அமைச்சர் மூதலியோரையும், அகன்ற நாட்டினை யும், சுருங்கின அறிவினையுமுடையராய் இரக்குவக்தோர்க்கு யாம் இல்லே மென்று கூறி இல்லையென்று மறித்த கையினையுமுடையராய்,

கட்டில் - சிங்காதனமுமாம். தாயம் - உரிமைகளெல்லாவற்றையும் கூறித்தாமாம்.

553. தம் பெயர் தம்மொடு கொண்டனர் மாய்கதோர்—தம்பெயரை உலகில் நிறுத்தாமல் தம்முடனேகொண்டு பொன் றக் கெட்டுப்போன அரசர்.

554 - 6. நெடு வரை இழிதரு நீத்தம் சால் அருவி கடு வரல் கலுழி கட்சு இன் † சேயாறு வடு வாழ் எக்கர் மணலினும் பலரே—நெடிய மலை யினின்றும்வந்திக்கும் பெருக்கு நிறைந்த அருவியினது கடியவரத்தினை யுடைத்தாகிய பெருக்கினையுடைய கண்ணுக்கு இனிய சேயாற்றின் அறல் வீற்றிருந்த இடமணலாகிய மணலினும்பலர் ;

557. [அதனுல், புகழொடு கழிகலம் வரைந்த காளென :] அதனுல் கம் வரைத்தகாள் புகழொடும் கழிக என—ஆகையினுலே கமக்குத் தெய்வம் இத்தனைக்காலமிருவென எல்லையிட்டுவிட்டகாள் புகழோடே கழிக்தபோவ தாகவென்றுகருதி,

558. [பரந்திடல் கொடுக்கும் விசும்புதோய் புள்ளமொடு:]

பரந்த இடம் கொடுக்கும் உள்ளமொடு—கொடுத்தற் றொழிலிலே விரிந்து அதற்கே இடங்கொடுக்கும் நெஞ்சுடனே,

---

* சமயத்திருக்குமண்டபம் - 'யாவரும் காணுதற்கு எளியனுகி வீற் றிருக்குமண்டபம் ; "சமயமண்ட பறைந்திருந்தநின் சங்குமைத்தன்" (அரிச்சந்தி. வேட்டஞ்செய். 16.) சீவக. 2370 - உரை.

† பன்மைக்கு ஆற்றுமணல் : (புறநா. 9, 43 ; சிலப். 28 : 126.)

